அகதா கிறிஸ்டி

ரகசிய எதிரி



THE SECRET ADVERSARY

Agatha Christie

கண்ணதாசன் பதிப்பகம்

மொழி பெயர்ப்பாசிரியரின் உரை

அகதா கிறிஸ்டியின் நாவல்கள் ஒவ்வொன்றும் அதியற்புத த்ரில்லர்களே ஆயினும் அவற்றில் 'துப்பறியும் கதைகளில் வாசக உள்ளங்களைக் கொள்ளை கொண்ட...' எனும் முத்தாய்ப்போடு பல கதைகள் முதலிடத்தைப் பெற்றுள்ளன. அவற்றை தொகுத்தெடுத்து தமிழில் நான் மொழிபெயர்த்து நிலையான பதிவுகளாகக் கொண்டு வரவேண்டும் என்பது எனது வருடக் கணக்கான ஆசை. இந்த ரீ-மேக் முயற்சியில், நான் மொழிபெயர்ப்பாசிரிய ராக இயக்குனர் இடத்திலிருக்க பதிப்பகத் தயாரிப்பாளராக செல்வனே உதவிவரும் திரு. காந்தி கண்ணதாசனின் கூட்டணியோடு, என் மொழிபெயர்ப்பில் ஐந்தாவதாக வெளிவந்துள்ள அகதா நாவல்தான் நேயர்கள் கரங்களில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் **ரகசிய எதிரி...!**

வேலையில்லாமல் வெட்டியாய் திரியும் பரிதாப இளைஞர்களுக்கு எந்நாட்டிலும் பஞ்சமிருக்காது போல. லண்டனிலும் அப்படியே. வேலையற்ற டாமி எனும் விடலையும் அவனுடைய காதலி டூபென்ஸூம் வயிற்றுப் பாட்டுக்காக வேலை தேடிக் கொள்கிறார்கள். அவர்கள் வசிக்கும் பதவியின் பெயர்: *எந்தக் கிரிமினல் செயலையும் செய்ய நாங்கள் தயார்.*

இப்படியொரு எதிர்பார்ப்பு கலந்த விறுவிறுப்பான துவக்கத்தோடு கிளம்பும் **ரகசிய எதிரி,** கொலையாளியை நம் கண்களின் முன்னமேயே கதை நெடுகிலும் ஓடவிட்டு, ஆனால் அது இன்னார் தான் என காரணம் சொல்லி நாம் கண்டுபிடிக்க முடியாதபடி ஆக்கி, வென்று விடுகின்றது.

நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஆவணத்தை சுற்றி பின்னப்பட்டுள்ள கதையிது. அது என்ன ஆவணம் என ஏங்கித் தவிக்கும் வாசகனுக்கு, அவனுடைய தவிப்பை மேலும் ஏற்றும் வகையில் முதலில் ஒரு முன்னுரையை வேறு தந்துவிட்டு, ஆனால் அந்த ஆவண ரகசியத்தைக் கடைசி அத்தியாயம் வரை உடைக்காமல் பாதுகாத்து விடும் அகதாவின் கதையமைப்பு - ஒரு துப்பறியும் இலக்கியப் பாடம்.

கதையின் நாயக நாயகியர் இருவருமே 16 வயதினிலே! ஆகவே துள்ளலான குறும்புக் காட்சிகள் இயற்கையாகவே கதையில் அமைந்து வலுகூட்டுகின்றன. காராக்ரகம் போன்ற சிறைக்காட்சிகள், கதாநாயகர்களின் வீரதீர சாகசங்கள், இளங்கன்று பயமறியாது என்பதின்படி நாட்டையே

குறையாடவுள்ள கூட்டத்துக்கு எதிராக இரு இளையவர்களும் மேற்கொள்ளும் ஆபத்தான துப்பறிதல்கள் ஆகியனவெல்லாம் நம்மையும் பாத்திரங்களோடு பாத்திரங்களாய் ஐக்கியப்படுத்தி விடுகின்றன.

அதோ, அதோ... முன்னுரையிலேயே ஆவணம் கை மாறிவிடுகின்றது. அது பிறகு எங்கெல்லாம் எப்படியெல்லாம் சீரழிகின்றது என கண்டுபிடித்து விடுவீர்களா - பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்பன்,

முனைவர். கொரட்டூர் கே.என்.ஸ்ரீனிவாஸ்,

மனை எண் 252, இரண்டாவது தெரு,
கொரட்டூர், சென்னை - 80.
போன்: 044-2635 8948
மின்னஞ்சல்: srinivaskns@yahoo.co.in

கதாபாத்திரங்கள்

டாமி	: வேலையற்ற பிரிட்டிஷ் இளைஞன்
ரூபென்ஸ்	: வேலையற்ற பிரிட்டிஷ் காரிகை
இளஞ்சிங்கங்கள் லிமிடெட்	இருவரும் சேர்ந்து ஆரம்பிக்கும் துப்பறியும் அலுவலகம்
ஜானே ஃபின்	: நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் முக்கியமான ஆவணத்தைப் பாதுகாக்கும் அமெரிக்கப் பெண்
ஜூலியஸ்	: ஜானே ஃபின்னின் மாமன் முறை - அமெரிக்கர் - மில்லியனர்
கார்ட்டர்	பிரிட்டனில், அமெரிக்கத் தூதரக அதிகாரி
மிஸ்டர் ப்ரௌன்	ஆணவத்தைக் குறி வைத்துள்ள 'பாஸ்'
திருமதி வாண்டே-மேயர்	: ப்ரௌனின் கூட்டாளி
ஆனெட்	'பாஸின்' சிறையில் பணியாற்றிய பெண்
டாக்டர் ஹால்	மனநலக் காப்பக மருத்துவர்
சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்	: முதல் தர வக்கீல் - நாட்டின் பிரதமராகப் பரிந்துரைக்கப்பட்டவர்.

அத்தியாயம் 1

இளஞ்சிங்கங்கள் லிமிடெட்

"டாமி... கிழப் பிசாசே...!"

"டூபென்ஸ்... கிழ ராட்சஸியே!"

இளமைத் ததும்பும் இரண்டு வாலிப மலர்களும் ஆவலோடு ஒருவரையொருவர் வாழ்த்திக் கொண்டனர். இப்படிச் செய்ததில் சில நொடிகள் ரயிலின் வழியை மறித்துக் கொண்டு நிற்க நேர்ந்தது. 'கிழ' என்ற அடைமொழியைக் கேட்ட நேயர்கள், இருவரையும் வயோதிகர்கள் என தப்பாக எடைபோட்டு விட வேண்டாம். இருவரது வயதையும் சேர்த்துப் போட்டுக் கூட்டினால் வரும் கூட்டுத் தொகையே கூட நாற்பத்தைந்தைத் தாண்டாது!

"ஏய் கிழ ராட்சஸி...! சில நூற்றாண்டுகளா உன்னைக் காணவேயில்லையே...!" புன்னகைத்தபடி தொடரலானான் இளைஞன்: "கண் காணாம எங்கே போனே? ம்... இப்படி வா. வந்து, பன் சாப்பிட எனக்கும் கம்பெனி குடு - ஓஹ்... எல்லாரும் நம்மளையே வெறிக்கிறாங்கப்பா - ரயிலோட வழிய மறிச்சுக்கிட்டு நிக்கறோம்! முதல்ல இடத்தைக் காலி செய்வோம்."

அவனைத் தொடர்ந்து இளையவளும் திரும்ப, நடக்கலானார்கள்.

"ம்... அப்புறம்?" என்றான் டாமி. "எங்கே போறது?"

கேட்ட அவனுடைய குரலின் அடியில் கிடந்த படபடப்பும் பதைபதைப்பும் புத்திநுட்பம் மிகுந்த செல்வி ப்ரூடன்ஸ் காதுகளிலிருந்து தப்பவில்லை. தனது மிக நெருக்கமான உயிர்த் தோழர்களிடம், 'டூபென்ஸ்' என்று விளக்கவொண்ணா ஏதோ ஒரு மர்மக் காரணத்தால் அறியப்படும் செல்வி ப்ரூடன்ஸ் கவ்லி, டாமியின் மீது அதிரடியாய் பாய்ந்தாள்: "டாமி... நீ ஒரு கல்லுடா...!"

ஒப்புக் கொள்ள மறுப்பவனாய், "அப்படியெல்லாம் துளியும் கிடையாது" என உடனடியாய் எதிர்த்தான் அவன்.

''அலற அடிக்கும் பொய்களின் சொந்தக்காரன் நீ - எப்பவுமே'' என்றாள் டூபென்ஸ் தீவிரமாய். ''உனக்கு மருத்துவம் பார்த்தா ஒரு சிஸ்டர்... நினைவிருக்கா? 'டாக்டர் குறிப்பெழுத மறுந்துட்டார்... ஆனா என்கிட்டே அடிச்சு சொன்னார்... இப்ப உடம்பு இருக்கிற நிலைக்கு நான் எடுத்துக்க வேண்டிய அதி முக்கியமான டானிக்கே - பீர்தான்' - இப்படி சொன்னே நீ, அவ கிட்டே! ஏய், கல்லே... நினைவிருக்கா...?!''

ஆடு மாடு மேய்ப்பது போல ஒலியெழுப்பினான் டாமி. ''ம்! செஞ்சேன்! அப்பப்பா... உண்மை தெரிஞ்சதும் என்னமா கத்தினா அவ! பாவம் அவ... டாக்டர் நல்லா விட்டிருப்பார்...! பழசுதான்... ஆனாலும் அற்புதமான ஆஸ்பிட்டல் அது...! ராணுவ மருத்துவமனை. ம்...! எல்லாத்தையும் ராணுவம் கலைச்சதுல, இதையும் கலைச்சுட்டாங்க போல!''

இதற்கு ''ஆமாம்'' என்று விட்டு பெருமூச்செறிந்த டூபென்ஸ், ''அப்ப உன் வேலை?'' என்றாள் உடனே.

டாமி ஒப்புதலான தலையசைப்பைப் பதிலாக்கினான். ''ரெண்டு மாசத்துக்கு முன்னாடி.''

''ராணுவம் கொடுத்த காசு?'' - கொக்கிப் போட்டாள் டூபென்ஸ்.

''செலவழிச்சாச்சு.''

''ஓ, டாமி!''

''ஏய் கிழம்...! என்ன, ஓ டாமி...?! மிதமிஞ்சிய பணமா கொட்டித் தந்தாங்க? சும்மா... இதோ... இவ்ளுண்டு...! அதிர்ஷ்டக்கட்டை! இப்பல்லாம் வாழுவதற்கு... அதுவும் எப்படி... வெறும் இரண்டு வேளை மட்டும் சாப்பிட்டு ஒரு சின்ன இடத்துல ஒண்டிக்க... இதுக்கே எவ்ளோ செலவழிக்க வேண்டியிருக்குனு உனக்குத் தெரியுமா...?!''

''குழந்தாய்...!'' என்று இடைமறித்தாள் டூபென்ஸ். ''ஒரு சாதாரண வாழ்க்கைக்கு தினசரி எத்தனை செலவாகும்னு *எனக்குத் தெரியாம* ஒண்ணும் கிடையாது - புரியுதா?!ம்... விடுதி வந்தாச்சு. சாப்பிடுவோம், ஆகிற செலவை அவங்கவங்களே தனித்தனியா கொடுத்துக்கிட்டு! ஓகே...!'' என்றபடி மாடிக்கு வழி செய்துக் கொண்டு ஏறினாள்.

இடம் நிரம்பி வழிந்தது. அங்கிருந்தவர்கள் பேசிய உரையாடல்கள் கலவையாய் காதில் விழ, தலையும் புரியாத வாலும் புரியாத அவற்றைக் கேட்டபடி இவர்கள் அமர ஒரு டேபிளைத் தேடினார்கள். ''இப்படிக் காதுல விழும் புரியாத எல்லாமே கோமாளித்தனமாத்தனிருக்கு!'' என்றாள் டாமி. ''இதே போலத்தான்... தெருவுல இன்னிக்கு ரெண்டு பேர், ஜானே ஃபின் அப்படினு யாரோ ஒருத்தியைப் பற்றி படுஈடுபாடா பேசிக்கிட்டுப்

போறதைக் கேட்டேன்... அப்படி ஒரு பேரை நீ எப்பவாவது கேட்டிருக்கியா? ஜானே ஃபின்...! வித்தியாசமான பேராத் தெரியலே...!''

அப்போது இரண்டு முதிய பெண்மணிகள் அவர்களுக்கான பார்ஸலை வாங்கிக் கொண்டு எழுந்திருக்க, அப்பகுதியை லாகவமாக வளைத்து தன்னகப்படுத்திக் கொண்ட டூபென்ஸ், ஒரு காலியிருக்கையில் அமர்ந்து கொண்டாள். அவளெதிரே, டாமி!

டாமி, சூடான டீயும் பன்னும் சொன்னான். டீக்கும் வெண்ணெய் போட்டு வறுக்கப்பட்ட ரொட்டிக்கும் கட்டளையிட்டாள் டூபென்ஸ்.

கலைந்து போய் குதறிய நிலையிலிருந்தாலும், டாமியுடைய கவர்ந்திழுக்கும் அடர்த்தியான தகதக சிகப்புக் கேசத்தின் வழுவழுவெனும் அபரிமித சில்க் தன்மை, காண்போர் கண்களைக் கணப்பொழுது நிறுத்தித்தான் வைத்தது. அவனது முகம் - அலங்காரமில்லாததால், அழகிய அசிங்கமாயிருந்தது - ஆனாலும் ஜென்டில்மேன் என்பதும் பக்கா விளையாட்டு வீரன் என்பதும் பிசகின்றி விளங்கின! அவன் ஆண்மை தேகத்துக்கு வலுசேர்க்கும் வகையில் தைக்கப்பட்டிருந்த காபி நிற சூட், இப்போதோ அப்போதோ விண்டு விடலாம் எனும் நிலையில் அத்தனை இறுக்கமாயிருந்தது. இது மேலும் அவனுடைய இளமைக்கு மெருகூட்டியது!

உட்கார்ந்திருக்கும் இருவரும் நவீன நாகரீகம் மிளிரும் தம்பதிகளாய்த் தோன்றினார்கள். டூபென்ஸ் அப்படியொன்றும் புல்லரிக்க வைக்கும் அழகெல்லாம் கிடையாது; ஆனால் உயிர்ப்புள்ள, எதற்கும் அஞ்சாது துணிந்து நிமிர்ந்த அந்த சின்ன முகத்திலும் - வில்லென நீண்டு அடர்ந்த புருவங்களுக்குக் கீழே, பனி படர்ந்த பாவனையில், எப்போதும் ஏதோ சிந்தனையோடு எதிரே குறிவைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் அந்த அகன்ற சக்திமிகு சாம்பல் நிற கண்களிலும் - குறுகுறுப்பும் நன்னடத்தையும் ஒன்று சேர்ந்துத் தெறிந்தன; ஈர்த்தன! குலுங்கிக் கொட்டும் அவளுடைய கூந்தலை அடக்கி அமுக்கி... பளீரென அடிக்கும் பச்சை நிறத்தில் ஒரு குரங்குக் குல்லாய் போட்டிருந்தாள். அதிகபட்சமாய் உயரம் குறைந்து மிகக் குட்டையாய் அமைந்திருந்த அவளுடைய பாவாடையின் தயவால் வெளிப்பட்ட கணுக்காலிலும் கெண்டைக் காலிலும் மேல் தொடையிலும் அசாதாரண கவர்ச்சி பொங்கிக் கொண்டேயிருந்தது. அவளுடைய முழுத்தோற்றமும் துணிகரம் நிறைந்த சாதுர்யத்தை வெளிக்காட்டுவதிலேயே இருந்தது.

ஒரு கூஜாவில் நிரப்பப்பட்டு டீ வந்து சேர்ந்தது. ஆழ்ந்த யோசனையின் ஆதிக்கத்திலிருந்த டூபென்ஸ் அதிலிருந்து விடுவித்துக் கொண்டு, எழுந்து, வந்திருந்த தேநீரை இரண்டுக் கோப்பைகளில் ஊற்றினாள்.

''இப்போ''... என்றபடி, கையிலிருந்த பன்னை ஒரு பெரிய கடி கடித்த டாமி, ''இன்னி வரைக்கும் என்னென்ன நடந்தன என்பதைப் பேசுவோம். ஆஸ்பத்திரியில 1916ல உன்னைப் பார்த்ததுக்கு அப்புறமா, நாம இருவரும் சந்திக்கவேயில்லை... இல்லையா?'' என உரையாடலைத் துவங்கினான்.

''ரொம்பச் சரி...'' என்று, டாமியின் துவக்கத்தை மனமொப்பி அங்கீகரித்தாள் டூபென்ஸ், தனக்கு வந்திருந்த வறுத்த ரொட்டியை வாயகலக் கடித்தபடி. ''சுருக்கப்பட்ட வாழ்க்கைக் குறிப்பு... டூபென்ஸ் என்று பெருவாரியாய் அறியப்படும் செல்வி ப்ரூடன்ஸுடையது...'' என்று நாடகத்தனமாய் அறிமுகம் தந்து ஆரம்பித்தாள்! ''பரம்பரைப் பெயர் கவ்லி - இதுக்கு அர்த்தமெல்லாம் கேட்கக் கூடாது! தரமான பாதிரியாரான அப்பாவுக்குப் பிறந்த ஐந்தாவது பொண்ணு. வீட்டோட இருக்கிற குதூகலங்களை மட்டுமில்லே... பெரிய குடும்பம் அதனால அதை வாழ வைக்க தலையில் விழுந்த கடின வேலைகளையும் தூக்கி எறிந்துவிட்டு லண்டன் வந்தாள் டூபென்ஸ்! வந்து, ஆஸ்பத்திரி ஒண்ணுல வேலைக்குச் சேர்ந்தாள். முதல் மாதம்: அறுநூற்று நாற்பத்தியெட்டு தட்டுகளைக் கழுவினாள் - ஒவ்வொரு நாளும். ரெண்டாவது மாதம்: பதவி உயர்வு... மேற்சொன்ன கழுவியத் தட்டுகளைக் காய வைக்கும் பகுதிக்கு மாற்றம். மூன்றாவது மாதம்: டூபென்ஸின் அசகாய வேலைத் திறமையைப் பாராட்டி (!!) மீண்டும் பதவி உயர்வு... உருளைக் கிழங்கின் தோலுரிக்கும் அடுக்களைப் பகுதிக்கு. நான்காவது மாதம்: ரொட்டி மற்றும் வெண்ணெய் ஆகியவற்றைத் துண்டு போடும் பகுதிக்கு மாற்றம். ஐந்தாவது மாதம்: முதல் தளத்துக்கு பதவி உயர்வு... கையில் ஒரு வாளியுடனும் மாப்'புடனும்! ஆறாவது மாதம்: வேலை சற்றே கம்மியான பணிக்கு பதவி உயர்வு... வெயிட்டர்! ஏழாவது மாதம்: ஓஹ்... எத்தனை அழகு நான்! எத்தனை பதவிசு நான்! இதற்கு பதவி உயர்வு? வந்தது! மருத்துவமனையின் தாதிகளுக்கு உதவியாளாக! எட்டாவது மாதம்: அழகாக ஏறுமுகத்திலிருந்த முன்னேற்றத்தில் ஒரு தடை. ஒரு முதிய சிஸ்டருக்காக வைக்கப்பட்டிருந்த முட்டையை பயிற்சிக்கு வந்திருந்த புது சிஸ்டர் எடுத்து சாப்பிட்டு விட்டாளாம். ரெண்டுத்துக்கும் அப்படி ஒரு குடுமி பிடி சண்டை. வயசான சிஸ்டரைத்தான் உதைக்க வேண்டும். எத்தனை முக்கியமான சமாச்சாரம் - முட்டை...! அதில் போயா கவனக் குறைவாயிருப்பது...?! இந்த அமளிக்குக் காரணம், தாதியருக்கு உதவியாளா இருந்த - சின்ஸியர் டூபென்ஸ்! அவளை இறக்கு! மறுபடியும் வாளியும் மாப்'பும்! ஒன்பாதவது மாதம்: சின்ன ப்ரமோஷன் - மெழுக வேண்டாம்... பெருக்கினால் போதும்! வாவ்... அங்கே தான், என்னுடைய பால்ய சிநேகிதனான திருமிகு தாமஸ் ஃபோர்டு எனும் சுந்தரனை... கிட்டத்தட்ட

ஐந்து வருடங்ளுக்கும் மேலாக நான் சந்தித்திராத டாமிக் குட்டியை... மறுபடியும் சந்தித்தேன். (டாமி அலட்டலாய் குனிந்து வணக்கம் காட்டினான்!) அந்தச் சந்திப்பு - என்னைக் கொஞ்சம் உலுக்கித் தான் பார்த்தது! பத்தாவது மாதம்: மருத்துவமனைக்கு வந்திருந்த தாமஸ் ஃபோர்டு எனும் நோயாளியுடன் உட்கார்ந்து அரட்டையடித்ததற்காக, இதனை கவனித்துவிட்ட தலைமைச் செவிலியால் ஈவிரக்கமின்றி வேலையிலிருந்து தூக்கப்படுகிறாள், டூபென்ஸ்! அப்புறமா, திறமைமிகு டூபென்ஸ், வண்டியோட்டிப் பிழைக்க ஆரம்பித்தாள்... ஒரு வியாபார லாரி, ஒரு கார், இப்படி! கடைசியாய் கார் ஓட்டிய முதலாளி, வாவ் சூப்பர். அமைதியான, இளைய, பட்டாளத்தான்.''

''அவனுங்களை நம்பாதே'' - இடைமறித்தான் டாமி. ''அலுமினியத் தொப்பிக்காரனுங்க. வேணும்னா பட்டாளத்துல இருப்பானுங்க. இல்லே, கிளம்பி ஊருக்கு வந்துடுவானுங்க. கேட்டா - இவனுங்களால தான் நாடே வாழுதும்பாங்க.''

''விடுப்பா அவனை. அவன் பேரைக் கூட நான் மறந்தாச்சு'' என்ற டூபென்ஸ், ''அது தான் என் தொழில் வரிசையின் உச்சகட்டம்'' என்று, விட்டதைத் தொடர்ந்தாள்: ''பிறகு ஓர் அரசாங்க அலுவலகத்தில் நுழைஞ்சேன். செம ஜாலியான பார்ட்டிகள். ம்... எத்தனை விதவிதமான தொழில்கள்...! நான், ஆஸ்பத்திரியில தலைமைக் காரியதரிசியா ஆகியிருக்கலாம்... இல்லே, கண்டக்டராவோ டிரைவராவோ கூட பணி நிரந்தரமாகியிருக்கலாம்...! எதுவும் நடக்கலியே...! அதுக்குள்ளே போர் நிறுத்தம் வந்தது. எல்லா அரசு நிறுவனங்களிலும் மாற்றங்கள்... மாறுதல்கள்... மூடல்கள்...! சீவப்பட்டுத் தூக்கியெறியப்பட்டேன். இப்ப தெருவுல, வேலை தேடிக்கிட்டே இருக்கேன்! இனி - உன் கதை.''

வருத்தமான தொனியில், ''ப்ரமோஷனெல்லாம் எனக்கு வரிசையா வந்து குவியலே, தாயீ'' என்றான். ''விதவிதமான பணிகளும் அமையலே. பிரான்ஸ் வரைக்கும் நான் திரும்பிப் போன கதைதான் உனக்குத் தெரியுமே! ராணுவ மாற்றல்கள். அங்கிருந்து மெஸபடோமியா வரைக்கும் மாத்தினாங்க. அங்கேயும் பலமான காயம் ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில கிடத்திட்டாங்க. பிறகு கிளம்பி எகிப்துக்குப் போய் அங்கேயே மாட்டிக்கிட்டேன் - போர் நிறுத்தம் வரைக்கும். ராணுவம் கலைஞ்சது... உன்கிட்டே சொன்ன மாதிரி என் வேலையும் கலைஞ்சது. பிறகு பத்து, கொடூரமான மாதங்களா, வேலை தேடி மாங்கு மாங்குனு அலைஞ்சுக்கிட்டு இருக்கேன்... ஒரு வேலை கிடைக்கலே! அப்படி ஏதாவது வேலை இருந்துட்டா எனக்கு மட்டும் தந்துட

மாட்டாங்க. எனக்கு என்ன தெரியும்? பிஸினஸ்னா அட்சரமாவது எனக்குத் தெரியுமா? ம்ம்! பூஜ்யம்...!''

உற்சாகமற்றுத் தலையசைத்தாள் டூபென்ஸ். ''உங்க நாட்டு அகதிங்க இடம்? அதுல?'' என்று கேட்டாள்.

டாமி மறுத்துத் தலையசைத்தான்.

''எனக்கு அதுங்களைப் பிடிக்காது - அதுங்களுக்கும் என்னைப் பிடிக்கவே பிடிக்காது என்பதும் - நிச்சயம்!''

''பணக்கார உறவுகள்?''

மறுபடியும் டாமி மறுத்துத் தலையசைத்தான்.

''ஓ, டாமி. ஒரு வயசான தனிக்கட்டை கூடவா இல்லே?''

''ஒரு மாமன் இருக்கான். இழுத்துக்கிட்டு. ஆனா அவனால பிரயோஜனம் இல்லே.''

''ஏன் அப்படி சொல்றே?''

''என்னை தத்தெடுத்துக்க முயற்சி செய்தான். நான் மறுத்துட்டேன். அதுல அவனுக்குக் கோவம்.''

''ஆங்... ஆங்... இதுபற்றி கேள்விப்பட்டதா ஞாபகம் இருக்கு...'' என்றாள் டூபென்ஸ் மெதுவாய். ''உன் அம்மாவால தான் நீ அதை மறுத்தேனு...''

டாமி மேற்கொண்டு அவள் பேசுவதைப் புறக்கணித்தான். ''ஆமாம். இந்த விஷயத்துல நான் நடந்து கொண்ட விதம் முரட்டுத்தனமா கூட தோணியிருக்கலாம். உனக்கே தெரியும்... அவளுக்கு இருந்த எல்லாம் - நான் மட்டும் தான். இதனால மாமாவுக்கு அம்மா மேல அப்படி ஒரு வெறுப்பு ஏற்பட்டது. அவ மறுப்பதற்காகவாவது வீம்புக்கு என்னைப் பிரிச்சு தத்தெடுத்துக்க முயன்றான். துவேஷம் - அம்மாவைத் துன்புறுத்தியாகணும்.''

மிருதுவாய் டூபென்ஸ் கேட்டாள்: ''உன் அம்மா இறந்துட்டாங்க, இல்லே?''

டாமி ஒப்புதலாய் தலையசைத்தான். சொன்னான்: ''இதுதான் என் நிலை. யாராவது தோள் தர மாட்டாங்களானு தெருவுல நிக்கறேன்.''

''அப்படியே தான் நானும்! முடிஞ்ச வரைக்கும் சுத்தியாச்சு. வேலைத் தேடித்தரும் ஒரு தரகனை விடலே. வேலை காலினு வரும் எல்லா விளம்பரங்களுக்கும் பதில் போட்டிருக்கேன். எந்த வேலையாயிருந்தாலும். ஒவ்வொரு அலுவலகப் படியா ஏறியிறங்கியாச்சு. தனிப்பட்ட முறையில கூட போய் கெஞ்சியாச்சு. எதுக்கும் பலனில்லை. ஓஹ்... நான் திரும்பி வீட்டுக்கேப் போயாகணும் போல!''

''உனக்குப் போக விருப்பமில்லே?''

''அய்யய்யோ! வேணவே வேணாம்! குடும்பம் பாசம்னு விழுந்துக் கிடந்து என்னத்தை வாரிக்கட்டியிருக்கேன், சொல்லு? அப்பா - புடம் போட்ட தங்கம் - அவர் மேல நான் வெச்சிருக்கிற பாசம், வெறும் அன்பு இல்லே... அது வெறி - அப்படியிருந்தும் அவருக்கு எந்த அளவுக்கு நான் மனக்கஷ்டம் உண்டுபண்ணித் தரேன்னு உன்னால கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாது! மாதா கோயிலே அவருக்குக் கதி. அதனால - அவர் ஒரு பழைய பஞ்சாங்கம். தொடை தெரிய உடுக்கும் ஸ்கர்ட்டும் சிகரெட் பிடிப்பதும் - அறம் வழுவிய செயல்கள் - அவருக்கு! எனக்குத் தொடைக்குக் கீழே பாவாடை போனாலே ஆகாது! அவருக்கு நான்... உள்ளங்கால்ல குத்திய முள் போலனு இப்ப புரியணுமே...! போர் நிமித்தமா வேலை கிடைச்சு நான் வீட்டை விட்டு அகன்றதுதான், அவருக்கு அவருடைய வாழ்நாட்களிலேயே கிடைத்த மாபெரும் சுதந்திரம்! ஒண்ணாயிருந்தா... ரெண்டு பேருக்குமே வீடு ஒரு நரகம். அவருக்கு அப்படி ஒரு சவால் நான்! நான் அங்கே திரும்பிப் போக மாட்டேன்... ஆனா, ஓ, டாமி, வேற வழி என்ன தான் இருக்கு...?''

டாமி, வருத்தமாய்த் தலையசைத்து ஆமோதித்தான். அங்கு கொஞ்சம் அமைதி... பிறகு டூபென்ஸ் வெடிப்பாய் பொருமினாள்: ''பணம், பணம், *பணம்!* எனக்கு எப்பவும் பண நினைப்புதான். காலைல. மத்தியானம். ராத்திரி. எப்பவும். ஆமாம். என்னைப் பணத்தாசைப் பிடிச்சு ஆட்டுது. பணத்துக்காக என்ன வேணும்னாலும் செய்வேன். இதுதான் உண்மை. ஒத்துக்கறேன். *மறுக்கலே.''*

இந்த ஒப்புதலை உணர்ந்தவனாய், ''நானும் அப்படியே'' என்றான் ஆழ்ந்து.

''பணத்தை எப்படியெல்லாம் அடைய முடியும்னு அத்தனை ஆழமா நான் கற்பனைகள் பண்ணியிருக்கேன், தெரியுமா...?! ஒரு வழிவிடாம'' எனத் தொடரலானாள் டூபென்ஸ்: ''இதுக்கு மூணே மூணு வழிகள் தான் இருக்கு. அவை: பணம் - நமக்கு விடப்படணும். இல்லே, அதை நாம மணக்கணும். என் மேல சொத்தை எழுதி வைக்கும்படி வயசான மண்டையைப் போடும் உறவு எதுவும் எனக்குக் கிடையாது. பணமில்லாத அழுகிய கிழங்கள் தான் என் உறவுகள்! தெருவைக் கடக்கத் தத்தளிக்கும் கிழங்களுக்கு ஓடியோடி உதவுவேன்... வெயிட்டைத் தூக்க முடியாம அல்லாடும் தாத்தாக்களுக்கு உடனே ஓடிப்போய் ஒத்தாசையா நிப்பேன்... இதுகள்ல ஏதாவது ஒண்ணு. இந்த உதவிகளுக்காக எனக்கு ஒரு பெருந்தொகையைத் தரும் முட்டாள் கோடீஸ்வரனா இருக்கக் கூடாதாங்கிற நப்பாசையில! நாய்ங்க... இதுல ஒண்ணு கூட, என் பேர் என்னனு கூட கேட்டது கிடையாது. பல பேர் ஒரு 'தேங்க் யூ' கூட சொன்னது கிடையாது, டாமி.''

ஒரு சிறு இடைவேளை உருவாயிற்று.

''இந்த மூணுல'' எனத் தொடர்ந்த டூபென்ஸ், ''பணத்தை மணப்பது - அதாவது கலியாணம் தான் எனக்கிருக்கிற சிறப்பான ஒரே வழி. வாய்ப்பு. பணத்தைக் கலியாணம் பண்ணிக்கலாம்னு என் சின்ன வயசுலயே நான் முடிவு செஞ்சேன். வாழ்க்கையை சிந்திச்சு திட்டமிடுகிற எந்தப் பெண்ணும் எடுக்கவல்ல முடிவு. ஆசாபாசமெல்லாம் எனக்கு இரண்டாம்பட்சமே!'' என்றாள்.

இதற்கு புன்னகைத்த டாமி, ''உன்னையும் குடும்ப பாசத்தையும் சேர்த்து வெச்சு எந்த மடையனும் நினைக்க மாட்டான்'' என்றான்.

''இது டூ மச் டாமி'' என்று அவனது குத்தலை விமர்சித்த டூபென்ஸ், ''இருந்தாலும், இதுதான் என் நிலை. உண்மையான நிலை. பணக்காரன் தான் வேணும். நான் தயாராயிருந்தேன் - சம்மதம் சொல்ல. கிடைக்கலியே! ஒருத்தன்? ம்ம்! எனக்குத் தெரிஞ்ச எல்லா கழுதைகளும் என்னைப் போலவே அன்றாடக் கஞ்சிகள்!'' என்றாள்.

''அந்த ஜெனரல்?''

''ம்ம். வேஸ்ட். போரில்லாதப் போது பிழைப்பு நடத்த சின்னதா ஒரு சைக்கிள் கடை வெச்சிருந்தான் அவன். பிரயோஜனப்படாது. ஆங்... உனக்கு என்ன குறைச்சல், டாமி? நீ நல்ல பசையுள்ள பெண்ணா பார்த்து மணக்கலாமே?''

''இதுலயும், என் நிலை உன்னுடையது போலத்தான். அப்படி யாரையும் எனக்குத் தெரியாது.''

''அதனால என்ன இப்ப? அப்படி ஒண்ணை நீ சுலபமா பிடிக்கலாமே! இதோ பாரு... நல்ல பணக்கார ஓட்டலிலிருந்து கோட்டும் சூட்டும் போட்ட ஒரு பணக்காரன் வெளியேறி படகு போன்ற கார்ல ஏறுவதைப் பார்த்தா... நான் ஓட்டமும் நடையுமா அவனை நெருங்கி... 'ஏய், ஏய்... நீ செமத்தியான பணக்காரன்... உன்னைப் பற்றி தெரிஞ்சுக்க விரும்பறேன்'னு சொல்ல முடியாது. காரணம்: நான் ஒரு பெண்.''

''கிண்டலா! அது போல வரும் ஒரு பொண்ணைப் பார்த்து நான் மட்டும் இதே கேள்வியைக் கேட்க முடியுமா என்ன?''

''முட்டாள் மாதிரி பேசாதே! அவிழ்ந்திருக்குனு சொல்லி தொங்கிக்கிட்டிருக்கிற அவளுடைய ஷூ வோட கயிறை இறுக்கி, நீ நெருங்கலாம். இல்லே, நீயே ஒரு கைக்குட்டையைக் கீழே போட்டுட்டு... அது உங்களுதானு அவளை நெருங்கி கிறக்கமா கேட்கலாம். அவளை வளைச்சுப் போடத்தான்

நீ இப்படியெல்லாம் செய்யறேனு மட்டும் அவளுக்குப் புரிஞ்சுடுச்சுனா, உன் அழகுக்கு முன்னாடி, அவ முழுக்க சாஞ்சுடுவாப்பா.''

''என் ஆண்மையின் பூரிப்பை நீ அதிகமா எடை போடறே!'' - முணுமுணுத்தான் டாமி.

சிறு புன்னகையைப் பதிலாக்கிய டூபென்ஸ், ''வயசான ஒரு கிழத்தை நான் கட்டிக்கிட்டா - அது மூச்சுக்கு இழுத்துக்கிட்டு இருக்கும். என்ன சொல்றே...! உனக்கும் இது பொருந்தும்...! உடனடியா அது மண்டையைப் போட்டா... போலீஸ் கீலீஸ்னு, நம்ம கதி அவ்ளோ தான்...! ம்ம் - இதை விட்டுடலாம்ப்பா. பல அபாய சிக்கல்கள் பின்னிப் பிணைந்தது - திருமணம் மூலம் பெரும் பணத்தை அடையும் வழி'' என்றாள். ''மீதியிருப்பது, ஒரே ஒரு வழிதான் - பணத்தைப் *பண்ணுவது.''*

''அதை நாம பலமுறை முயற்சி பண்ணியிருக்கோம் டூபென்ஸ். தனித்தனியா. எல்லாம் வீண். தோத்துட்டோம்.''

''ரொம்ப நல்ல நல்ல வழிகளா... சரியான தப்பற்ற வழிகளா நாம முயற்சி பண்ணியிருக்கோம், டாமி. ஒத்துக்கறேன். ஆனா, நாம தப்பான வழியில இறங்கினா...! டாமி, நாம சாகசக்காரங்களா மாறுவோம்டா.''

''நோ ப்ராப்ளம். இதையும் பார்த்துடுவோம்'' என்று ஆர்வமான டாமி, ''எங்கே எப்படி தொடங்குவது?'' என்று கேட்டான்.

''அதானே கஷ்டம்! நாமே நம்மைத் தெரியப்படுத்தணும் வெளி உலகத்துக்கு. அப்போ, ஜனங்க நம்மை நாடி வந்து வாடகைக்கு எடுத்துப்பாங்க - *குற்றங்கள் பண்ண!''*

''வாவ்... நாக்கு ஊறுது'' என விவரித்த டாமி, கேலி மிளிரச் சொன்னான்: ''சொல்வது - ஆசார அனுஷ்டான குடும்பத்து வாரிசு!''

''இருக்கட்டுமே! இந்த விஷயத்துல புதைந்துள்ள அதர்மமும் நெறி தவறிய அணுகுமுறையும்'' என்ற டூபென்ஸ், ''அவங்களுடையது - நம்முடைய தாகாது'' என்றாள் முழக்கமாய். ''ஒரு வைர அட்டிகையையோ அல்லது விலையுயர்ந்த நெக்-லேஸையோ நமக்காக நாம திருடுவதற்கும், அதைத் திருட நாம வாடகைக்கு எடுக்கப்பட்டு ஒரு கருவியாக்கப்படு வதற்கும் வித்தியாசமிருக்கு என்பதை நீயே ஒத்துப்பே.''

''அகப்பட்டா - ரெண்டுத்துக்கும் மயிரிழை கூட வித்தியாசமிருக்காது - தெரியுமில்லே!''

''அப்படியே இருக்கலாம். ஆனா - நான் அகப்பட மாட்டேன். நான் புத்திசாலி.''

''நெனப்பு தான், கழுத்தை நெறிச்சு நெருக்கிப் பொழப்பைக் கெடுக்கும்.''

''கிண்டல் வேண்டாம். கவனி டாமி. நிஜமா துவங்கலாமா? ரெண்டு பேரும் பார்ட்னராகி இந்தத் *தொழிலைத்* தொடங்கலாமா?''

''ஹே, ஹே, ஹே! நிஜமாத் தான் பேசறியா! விளையாடலே...! ஒஹ்... வைர மாலையைத் திருட, ஒரு கம்பெனி? வாவ்...!''

''கிண்டல் வேண்டாம்னேன்! அது ஓர் உதாரணம். நம்ம கம்பெனி - அதாவது - எப்படி சொல்றது - ஆங்... ஆங்...''

''வார்த்தை வரலியா?''

''ஆமாம். அதாவது - ஆங், அது! அது! நம்ம கம்பெனி ஒரு ஜாயின்ட் வெஞ்சர். உன்னையும் என்னையும் சேர்த்து. புரியுதா! கூட்டு பரிவர்த்தனை!''

''அடிப்பாவி!''

''பேர் கூட தயார். **இளஞ்சிங்கங்கள் லிமிடெட்.''**

''பேரை வெச்சுக்கிட்டு என்ன பண்ண? கஸ்டமர்ஸ்? வாடிக்கையாளர் களுக்கு எங்கே போவே? உலகத்துல குற்றம் பண்ண ஆள் தேடிக்கிட்டு அத்தனை பேரா இருக்காங்க...?''

''விளம்பரம் மூலமா'' என்று தயாராயிருந்தாள் அவள்! ''உன்கிட்டே சின்ன பேப்பரும் பென்சிலும் இருக்கா? ஆம்பிளைங்க கிட்டே நிச்சயம் இது ரெண்டும் இருக்கும் - நாங்க கொண்டை ஊசியும் பவுடர் பஞ்சும் தவறாம வெச்சிருப்பது மாதிரி.''

ஒரு சிறு பச்சை நிற அழுக்கு நோட்டுப் புத்தகத்தை அவளிடம் டாமி நீட்ட, அதில் ஈடுபாடாய் டூபென்ஸ் எழுதத் தொடங்கினாள். ''ஆரம்பிக்கலாமா: **இரண்டு ராணுவ வீரர்கள். இருமுறை பெரிய கலவங்களோடு ராணுவத்திலிருந்து...''**

''சத்தியமா இப்படி வேண்டாம்.''

''ஓ. கொஞ்சமும் தப்பில்லே. கிழப் பிசாசே! இப்படி ஏதாவது ஸ்டண்ட் அடிச்சா, அது ஆதரவற்றுத் தனிமையில கிடக்கிற ஏதாவது ஒரு கிழப் பெண்மணியின் நெஞ்சைப் போய் உலுக்கி விடும்... நிச்சயமா... சொன்னா கேளு. உடனே உன் மீது கரிசனை கொண்டு ஓடி வந்து அப்படியே உன்னைத் தத்தெடுத்துக்கிட்டுத் தன் பிள்ளையாக்கிப்பா. பிறகு இந்த சாகச வேலையையெல்லாம் விட்டுட்டு நீ நிம்மதியா பணத்தோடும் சொத்து பத்தோடும் இருக்கலாம்!''

''நான் யாருக்கும் தத்தாப் போக மாட்டேன்.''

''ஓஓஓ... உனக்கு அதுல நம்பிக்கை கிடையாதுங்கறதை மறந்துட்டேன். விடு. இப்பல்லாம் இதுபோல நிறைய விளம்பரங்கள் பேப்பர் பொங்கி வழிய வருது. தெரியுமா? இதைக் கேளு. எப்படியிருக்கு பாரு! **இரு இளைய**

சாகசக்காரர்கள், வாடகைக்கு. எதைச் செய்யவும்... எங்கு போகவும் தயார். சம்பளம் செமத்தியாக இருக்க வேண்டும்.''

''கடைசியில எதுக்கு அது?''

''ஆரம்பத்திலிருந்து அதுல நாம வெளிப்படையா இருந்துடணும் டாமி! இன்னும் ஒண்ணு சேர்க்கணும்: **கூட என்ன கொடுத்தாலும் மறுக்கப் படாது... தங்க இடம்... வசிக்க சாமான்கள்...''**

''இப்படிப்பட்ட ஒரு விளம்பரத்துக்கு வரும் எந்த பதிலும் நியாயமற்ற - தகாத ஒன்றாகத்தானிருக்கும்... எனக்கு அப்படித்தான் தோணுது.''

''அப்படியா! அப்போ இப்படி மாத்திட்டா என்ன: **எந்தத் தகாத காரியத்துக்கும் தயார் - கொடுக்கப்படும் பணம் மட்டும் தாராளமாக யிருக்கும் பட்சத்தில்!''**

''மூட்றீ. அதுல பணம் பணம்னு ரொம்பப் புலம்பாதே. அலையறோம் கறது துல்லியமா தெரிஞ்சுடும்.''

''நான் அந்த அளவுக்குத் தவிச்சுக்கிட்டு இருக்கேன்யா - *பணத்துக்கு!* ஆனாலும் நீ சொல்றது ஒரு வகையில சரிதான். இப்பப் பாரு: **இரு இளைய சாகசக்காரர்கள், வாடகைக்கு. எதைச் செய்யவும்... எங்கு போகவும் தயார். சம்பளம் செமத்தியாக இருக்க வேண்டும். காரிய காரணமற்ற எந்த வேலையும் நிராகரிக்கப்படாது!** எப்படி? இதை நீ படிச்சா உனக்கு எப்படி படும்?''

''இதை நான் படிச்சா - ஒண்ணு, ஏதோ ஆள் மாறாட்டக் கும்பல் நடத்தற தில்லுமுல்லா படும்; இல்லே, ஏதோ ஒரு கிறுக்கன் கொடுத்த விளம்பரமா படும்.''

''இதோ... இன்னிக்குப் பேப்பர்ல 'நல்ல சேவகன்' என்கிற பெயரில் வந்திருக்கிற ஒரு கசமுசா விளம்பரத்தை விட இது எனக்கு மோசமானதாப் படலே'' என்ற டூபென்ஸ், எழுதியிருந்த காகிதத்தைக் கிழித்து டாமியிடம் நீட்டினாள். ''சொல்றதை செய். டைம்ஸ்ல தரலாமா?! அதான் சரி. ஒரு பாக்ஸ் நம்பர் தந்துடு. அஞ்சு தம்புடி ஆகலாம். இந்தா ரெண்டரை - என் பங்கு!''

டாமி, கையில் தரப்பட்டத் தாளை சிந்தனையோடு பிடித்துக் கொண்டிருந்தான். அவன் சிவந்த முகம், மேலும் நெருப்பாய் வண்ணங் கொண்டது. இறுதியாய், ''இதை நாம முயற்சி செய்துதான் ஆகணுமா?'' என்றான். ''சொல்லு டூபென்ஸ்? விளையாட்டா கூட இது மாதிரியெல்லாம் பண்ணலாமா?''

''டாமி! கிளம்பு. நீ ஒரு விளையாட்டு வீரன்! பிறகென்ன விளையாட...?! வெற்றியைக் கைப்பற்றுவோம்'' - சில்லிட்டுப் போயிருந்த தேநீரை இரு

கோப்பைகளுக்குள் ஊற்றினாள் அவள். ஒன்றை அவனிடம் தந்து விட்டு தானெடுத்துக் கொண்ட கோப்பையை அதில் இடித்து, ''நமது கூட்டு பரிவர்த்தனைத் - தொடங்கட்டும். கம் ஆன். அது அப்படியே வளர்ந்துக் கொழிக்கட்டம். ம்'', என்று உசுப்பேற்றினாள்.

''இளஞ்சிங்கங்கள் லிமிடெட்!'' - டூபென்ஸுக்கு ஏற்றாற் போல பதில் தந்தான் டாமி.

இதற்கு இருவரும் கோப்பையைக் கீழே வைத்து விட்டு காரணமின்றி கலகலவென சிரித்துக் கொண்டனர். பிறகு டூபென்ஸ் எழுந்து கொண்டாள். ''கிழவா! நான் என்னுடைய அரண்மனையின் அந்தப்புர அறைக்குத் திரும்பும் நேரம் வந்துவிட்டது!''

''ம்... எனக்கும் தான். நான் என்னுடைய ஐந்து நட்சத்திர ஆடம்பர அறைக்குத் திரும்பியாக வேண்டும்.''

இவ்விரு கற்பனை வசனங்களுக்கும் இருவரிடமிருந்தும் வெடிச் சிரிப்புப் புறப்பட்டது. ''டூபென்ஸ். அடுத்து எங்கு சந்திப்பது? எப்போது?''

''நாளைக்குப் பனிரெண்டு மணிக்கு. பிக்கா - டில்லி ரயிலடியில். சிரமமில்லையே?''

''என் நேரம் - எனக்கு கட்டுப்பட்டது'' - அதிகாரமாய்ச் சொன்னான், தாமஸ் ஃபோர்டு.

''அப்ப சரி.''

''குட் பை - கிழ ராட்சஸி.''

இரு இளைஞர்களும் எதிரெதிர் பக்கங்களில் பயணப்பட்டனர். கருணை உள்ளம் கொண்டவர்கள் நடத்தும் ஓர் இல்லத்தில் இருக்கிறது டூபென்ஸின் சிறிய அறை. காசு பற்றாக்குறை காரணமாக அவள் இப்போது பஸ்ஸில் ஏறவில்லை; கால்நடைப் பயணத்தையேத் தேர்ந்தெடுத்தாள்.

போக வேண்டிய தூரத்தில் பாதியைக் கடந்திருக்க மாட்டாள்... அப்போது அவளுக்குப் பின்னாலிருந்து மிக அருகாமையில் ஒலித்த ஓர் ஆண் குரல் அவளைத் திடுக்கிட்டுத் துணுக்குற வைத்தது.

''எக்ஸ்க்யூஸ் மீ, மேடம்'' என்றது அக்குரல். ''கொஞ்சம் அவகாசம் கிடைக்குமா - உங்களோடு பேச?''

அத்தியாயம் - 2

திரு. எட்வர்ட் விட்டிங்டனின் அழைப்பு

டூபென்ஸ் சட்டென்று திரும்பினாள்; ஆனால், பதில் சொல்ல உதடு வரை வந்த சில வார்த்தைகளை அப்படியே கட்டிப் போட்டு நிறுத்தி விட்டாள்! அழைத்த மனிதனின் தோற்றமும் விதமும், முதல் பார்வையிலேயே நல் அபிப்ராயத்தை உண்டு பண்ணும்படி இவளுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய் அமையாததால், தயங்கினாள். டூபென்ஸின் இந்நிலைமையைப் படித்து விட்டவராய், அந்த மனிதன் உடனே பேசினார்: ''எவ்விதமான தரக் குறைவும் என் அணுகுமுறையில கிடையாது என்பதை சொல்லிக்க விரும்பறேன்.''

டூபென்ஸ் அவரை நம்பினாள். அவர் மீது மரியாதையும் நம்பிக்கையும் இவளின் உள்ளுணர்வுக்குள் உடனடியாய் ஏற்படவில்லை... ஆனாலும், சில நொடிகள் முன் அவரை எதிர்கொண்ட முதல் பார்வையில், அவர் மீது பொருத்திப் பார்த்து இவள் தனக்குள் உருவாக்கியிருந்த எதிர்மறைக் கருத்தினை ஒதுக்கிவிட விரும்பினாள். அவரை மேலும் கீழுமாய்ப் பார்த்தாள். பெரிதாய் தோன்றிய ஆஜானுபாகுவான ஆள் அவர். மழுங்க சரைத்திருந்தார். கழுத்துக்குக் கீழான ஆடு சதை ஒரு சிறு பை போல விசால மாயிருந்தது. சின்னதாயும் அதேசமயம் நரித்தனம் நிறைந்திருந்துமிருந்த அவரது கண்கள், டூபென்ஸின் நேரடி நோட்டத்தைத் தவிர்த்து அங்குமிங்குமாய் அலைந்த வண்ணமிருந்தன.

''என்ன விஷயம்?'' - கேட்டாள் இவள்.

அந்த மனிதன் புன்னகைத்தார். ''அந்த இளைஞனோட நீங்க பேசிய சம்பாஷணையின் சில பகுதிகளை நான் கேட்கும்படி நேர்ந்தது.''

''ஓஹ். அதுக்கென்ன இப்போ?''

''பெரிசா ஒண்ணுமில்லே - அந்த விஷயமா நான் உங்களுக்கு சிறு உதவிகரமா இருப்பேன் என்பதைத் தவிர...!''

இன்னோர் அனுமானம் டூபென்ஸின் மூளைக்குள் ஓட, கேட்டாள்: ''என்னைப் பின்தொடர்ந்துக்கிட்டே வந்தீங்களா?''

''நான் அந்த உரிமையை எடுத்துக்கிட்டேன்.''

''ப்ச்...'' என்று அவர் சொன்னதைத் தேவையற்றதாக்கியவள், கேட்டாள்: ''எந்த வகையில நீங்க எனக்கு உபயோகமா இருப்பீங்கனு நினைக்கிறீங்க?''

தனது சட்டைப் பையிலிருந்த ஓர் அடையாள அட்டையை வெளியிலெடுத்த அந்த மனிதன், மரியாதை கலந்த பவ்யமான பணிவினை வெளிப்படுத்தி, அதனை இவளுடைய கைகளுக்கு மாற்றினான்.

அதைப் பெற்றுக் கொண்டு, கருத்து சிதையாது அதனைப் படித்தாள். அதில் பிரதானமாக 'திரு எட்வர்ட் விட்டிங்டன்' என்ற பெயர் பொறிக்கப் பட்டிருந்தது. அதற்குக் கீழே 'எஸ்தோனியா கண்ணாடி கம்பெனி' என்றும் அது நகரத்தில் எங்கிருக்கிறது என்ற முகவரியும் இருந்தன. திரு விட்டிங்டன் மறுபடியும் பேச்சினை ஆரம்பித்தார்:

''நாளைக்குக் காலையில பதினோரு மணிக்கு என்னை நீங்க வந்து சந்திச்சீங்கன்னா, உங்களை நான் அழைச்ச விஷயத்தைப் பற்றிய முழு விவரத்தையும் உங்க முன்னாடி வைக்கிறேன்.''

''பதினோரு மணிக்கா?'' என்று சிறு சந்தேகம் தொனிக்கக் கேட்டாள் டூபென்ஸ்.

''பதினோரு மணிக்கே.''

டூபென்ஸ் தீர்க்கமாய் முடிவெடுத்தாள். ''சரி. நான் அங்கே இருப்பேன்.''

''நல்லது. குட் ஈவினிங்.''

விடைபெறும் நோக்கோடு தனது தொப்பியைக் கழற்றி உணர்த்திய அவர், நடந்து கடந்தார். அவர் பின்னாலேயே வெறித்தபடி சில நிமிடங்கள் அப்படியே நின்று கொண்டிருந்தாள் டூபென்ஸ். பிறகு, வேட்டைக்குத் தயாரான வேட்டை நாயின் சட்டென நிமிர்ந்த காதுகளைப் போல, தனக்குத் தானே சிறு ஆர்வம் பொங்கும் தோள் குலுக்கலை வெளியிட்டுக் கொண்டாள்.

'சாகச விளையாட்டுத் துவங்கிவிட்டது' - தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். 'அப்படி என்ன தான் நான் பண்ண வேண்டும் என்று அவர் எண்ணியிருப்பார் - வியக்கிறேன்...?! ஹேய், விட்டிங்டன்... உன் கிட்டே ஏதோவொன்னு வில்லங்கமா இருக்கு, மேன்... அது எனக்குப் பிடிக்கலே... சத்தமா. அதுக்காக உன்னைக் கண்டு பயப்படறேன்னு மட்டும் கணக்குப் போட்டுடாதே. கடுகத்தனை பயம் கிடையாது எனக்கு. நான் ஏற்கனவே பல தடவை சொல்லி வருவதையே, இப்ப மறுபடியும் சந்தேகத்துக்கிடமின்றி சொல்றேன்... குட்டி டூபென்ஸுக்கு அவளைப் பாதுகாத்துக்கத் தெரியும்.'

சின்னதாயும் கூர்மையாயும் வெற்றி மிளிர தலையசைத்துக் கொண்டு சுறுசுறுப்பாய் முன்னேறி நடக்கலானாள் டூபென்ஸ். உருவான மாற்றங்களின் காரணமாக நேராகப் போக வேண்டிய பயணத்தை சற்று நிறுத்திக் கொண்டு அருகில் தென்பட்ட தபால் அலுவலகத்துக்குள் நுழைந்தாள். அங்கு சில நொடிகள் சிந்தனையில் கிடந்தாள் - கையிலொரு தந்தித் தாளுடன். டாமியின் பென்சில் அவனிடம் திரும்பத் தரப்படாமல் இன்னும் இவள் கையில் தானிருந்தது. எழுதினாள்: 'விளம்பரம் செய்யாதே. நாளை விளக்குகிறேன்'. இத்தந்தியை, டாமி தங்கியிருந்த விடுதிக்கு அனுப்பினாள். இவ்விடுதியில் அடுத்த மாதம் வரை தங்கியிருக்கத்தான் டாமிக்கு அனுமதி உள்ளது. அதற்குள் ஏதாவது அதிர்ஷ்டம் அடித்து அவனுக்கு சம்பாதியத் துக்கு வழிபண்ணித் தராவிட்டால், பிறகு அங்கு டாமி நீடிப்பது சந்தேகமே!

'இது அவனுக்கு கிடைச்சா தான் கிடைக்கும்' - முணுமுணுத்துக் கொண்டாள் இவள். 'முயற்சி பண்றதுல என்ன குறைஞ்சுடப் போகுது?'

தந்தி அலுவலரிடம் இதனை ஒப்படைத்துவிட்டு பழைய துறுதுறுப்புடன் வீடு நோக்கிப் பயணமானவள், வழியில் ஒரு பேக்கரியில் நின்று சாப்பிட சில பன்களை வாங்கிக் கொண்டாள்.

பிறகு, எலிப் பொறி போலயிருந்த அவளுடைய அறையில் ஓரிரு பன்களை வேண்டாவெறுப்போடு சுவைத்துவிட்டு எதிர்கால நினைவுகளுக்குள் மூழ்கிப் போனாள். எஸ்தோனியா கண்ணாடி கம்பெனி என்பதுதான் என்ன? அதற்கு டூபென்ஸுடைய சேவை வேண்டுமளவுக்கு என்ன தேவை இருக்கக் கூடும்? குதூகலம் கலந்த கிளுகிளுப்பு டூபென்ஸைச் சிலமுறை சத்தமாய்ச் சப்புக் கொட்ட வைத்தது.

ஒரே கோணத்திலான இந்நினைவுகள் ஏற்படுத்தித் தந்த விதவிதமான கற்பனைகளினால் தூக்கம் வர இவளுக்கு நேரம் பிடித்தது. அது வந்த போது, எஸ்தோனியா கண்ணாடிக் கம்பெனியில் தயாரிக்கப்படும் கண்ணாடிகளைக் கழுவி ஜாக்கிரதையாய் அடுக்கும் வேலையை எட்வர்ட் இவளுக்குத் தந்தது போலவும், அக்கண்ணாடிகள், அச்சு அசலாக அப்படியே இவள் ஆஸ்பத்திரியில் கழுவிய தட்டுக்கள் போலவே இருப்பதையும் கண்டாள் டூபென்ஸ் - கனவில்...!

அடுக்குமாடிக் கட்டிடம் ஒன்றில் எஸ்தோனியா கண்ணாடிக் கம்பெனி அமைந்திருந்த வளாகத்தை டூபென்ஸ் அடையும் போது மணி பதினொன்றுக்கு ஐந்து நிமிடம். சொன்ன நேரத்துக்கு சீக்கிரமாகவே போய் விட்டால் இதற்கென்றே அலைவது போல காட்டிவிடும். ஆகவே அத்தெரு முனை வரை ஒருமுறை நடந்துப் போய் திரும்ப முடிவெடுத்தாள் டூபென்ஸ். அப்படியே செய்தாள். பதினொன்று என கடிகாரம் அடித்த போது

வளாகத்துக்குள் போய் விழுந்தாள். கண்ணாடி கம்பெனி கடைசி மாடியிலிருந்தது. லிஃப்ட் ஒன்று இருந்தது, ஆனால், நடந்து அடைவதையே டூபென்ஸ் தெரிந்தெடுத்தாள்.

சிறு மூச்சிரைச்சலுக்கிடையே, 'எஸ்தோனியா கண்ணாடி கம்பெனி லிமிடெட்' என்று பெரிய செம்பு எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்த ஒரு கண்ணாடி கதவின் முன் வந்து நின்றாள் டூபென்ஸ். அதனைத் தட்டினாள். உள்ளே வரச் சொல்லி அனுமதித்த குரலுக்கு பதிலாய், சின்னதாயும் தூசுகள் அதிகம் நிறைந்ததாயும் காணப்பட்ட ஓர் அலுவலக அறைக்குள் நுழைந்தாள் அவள். ஜன்னல் பக்கத்தில், அங்கிருந்த மேஜைக்கருகில் போடப்பட்டிருந்த உயரமான ஸ்டூலில் அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்த காரியதரிசி இவளை விசாரிக்கும் தொனியில் நெருங்கி நின்றான். அவனிடம், ''திரு விட்டிங்டனைச் சந்திக்க எனக்கு முன் பதிவு இருக்கு'' என்றாள்.

''என் கூட வாங்க'' என்று அழைத்த அவன், 'தனி அறை' யென கதவில் பொறிக்கப்பட்டிருந்த ஓர் அறைக்கு முன்னால் டூபென்ஸை அழைத்துப் போய் நிறுத்தினான். பிறகு அந்தக் கதவை முழுவதுமாகத் திறந்து உள்ளே நுழைந்து, இவளும் நுழைய வழிகாட்டி நின்றான்.

தாள்களாலும் ஆவணங்களாலும் நிறைந்திருந்த ஒரு பெரிய மேஜைக்கு அந்தப்புறமாய் அமர்ந்திருந்தார் எட்வர்ட். தனக்குள் எட்வர்ட் விட்டிங்டன் பற்றி உருவாகியிருந்த முடிவு சரியே என்று இப்போது ஊர்ஜிதமானாள் டூபென்ஸ். இந்த மனிதனிடம் ஏதோ தப்பு இருக்கின்றது... தவறு இருக்கின்றது. எதையோ தேடி அலைந்துக் கொண்டேயிருக்கும் அவருடைய கண்கள்... நன்றாய் வளர்ந்துள்ள இவருடைய தொழில் செழுமை... ம்ம்... இவையிரண்டும் சரியான - பொருத்தமான ஒரு கலவை கிடையாது!

எட்வர்ட் நிமிர்ந்து பார்த்தார்.

''ஆக, சொன்னா மாதிரி நீங்க வந்துட்டீங்க? நல்லது. உட்காருங்க, ப்ளீஸ்.''

அவரைப் பார்த்துப் போடப்பட்டிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்தாள் டூபென்ஸ். இப்போது... கொஞ்ச நேரமாய்... ஏனோ ஒரு வித சிறு தயக்கத் தோடும், குறுகியும் இருக்கிறாள் இவள். பயந்து சாதுவாகிப் போன ஒரு நபரைப் போல கீழ்ப்பார்வை பார்த்தபடி டூபென்ஸ் உட்கார்ந்திருக்க தனக்கு முன்னிருந்த தாள்களை அடுக்கியும் களைந்தும் கொண்டிருந்தார் விட்டிங்டன்... இறுதியாய் அத்தனை தாள்களையும் ஒரு பக்கமாய் ஒதுக்கி வைத்துவிட்டு மேஜை வரை வளைந்து வந்தார்.

''இப்போ.. டியர் மிஸ்... நம்முடைய பிஸினஸுக்குள் நுழைவோம்'' - சொன்ன அவருடைய அகலமான முகம் சிறு புன்னகையால் இன்னும்

அகன்றது. ''உங்களுக்கு வேலை வேணும்? ஓகே... உங்களுக்குத் தர என்னிடம் ஒரு வேலையிருக்கு. 100 பவுண்டு கையில கொடுத்து செலவுக்கு ஆகிற அத்தனையையும் நானே ஏத்துக்கறேன்னு முன் வந்தா... என்ன சொல்வீங்க?'' - சொன்ன விட்டிங்டன் தனது நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தார். தன்னுடைய கோட்டின் பக்கவாட்டுப் பைகளுக்குள் தத்தம் கைகளின் கட்டை விரல்களை நுழைத்துக் கொண்டார்.

டூபென்ஸ் அவரை எச்சரிக்கையாய் பார்த்தாள். ''அந்த வேலையின் இயல்பு?'' - அழுத்தமாய்க் கேட்டாள்.

''சின்ன வேலை - சும்மா சின்ன வேலை - ஒரு சந்தோஷமான பிரயாணம். அவ்ளோ தான்.''

''எங்கே?''

விட்டிங்டன் மறுபடியும் புன்னகைத்தார். ''பாரீஸுக்கு.''

''ஓஹ்...!'' சிறு சிந்தனையோடு சொன்னாள் டூபென்ஸ். அவளுக்குள் சொல்லிக் கொண்டாள்: 'ஓஃப்... இதை மட்டும் அப்பா கேட்டால்... நான் வர்ற விஷயம் தெரிஞ்சா... மனுஷனுக்கு வலிப்பு வந்துடும். ஆனால், இந்த விட்டிங்டனைப் பார்த்தால், உல்லாசமாய் அனுப்பி வைத்து ஏமாற்றிக் கழுத்தறுக்கும் மாபாதகனைப் போலவும் தெரியவில்லை...'

''ஆமாம்...'' என்றபடி, தான் சொன்னதைத் தொடர்ந்துக் கொண்டிருந்தார் விட்டிங்டன்: ''இதை விட எது தான் அதிகம் சந்தோஷமளிப்பதா இருக்க முடியும்? கடியார முட்களைச் சில வருடங்களுக்குப் பின்னுக்குத் தள்ளி வைத்து... மறுபடியும், அந்த அழகியப் பெண்கள் தங்கியிருக்கும் உணவக விடுதிக்குள் நுழையணும். பாரீஸின் பெருவாரியான கூட்டமே, இந்த சாப்பாட்டு விடுதிக் கூட்டம் தானே...''

இடைமறித்தாள் டூபென்ஸ். ''ஹோட்டல்...?''

''அப்படியே, மேடம் கொலம்பியருடையது... நியூ லில்லி அவின்யூ...''

இந்தப் பெயர் டூபென்ஸுக்கு நன்கு தெரிந்த ஒன்றே. அங்கு இவளுக்கு அதிக அமெரிக்க நண்பர்கள் இருந்தார்கள். எப்போதையும் விட இப்போது அதிகம் புதிர்ப் போடப்பட்டவளானாள் இவள்.

''அங்கே நான் போகணுமா? ம்... எவ்ளோ நாளைக்கு?''

''நிலைமையைப் பொறுத்தது. மூன்று மாதங்கள்னு சொல்லலாம்.''

''அவ்ளோ தானா? மேலே வேறெந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாதா?''

''எதுவும் கிடையாது. என்னுடைய ஆள் எனும் பாத்திரம் தாங்கித்தான் நீங்க அங்கே போறீங்க... உங்க நண்பர்கள் வேற யார் கூடவும் நீங்க தொடர்பு வெச்சுக்கக் கூடாது. தற்போதைக்கு முழு ரகசியம் காக்கப்படணும் என்பது.

நான் உங்கள் முன் வைக்கும் என் வேண்டுகோள். ஆங்... நீங்க ஓர் ஆங்கிலேயன்... இல்லையா?''

''ம்...''

''அப்படியிருந்தாலும் நீங்க அமெரிக்க சாயல் அதிகம் அடிக்கும் ஆங்கிலத்தைத் தான் பேசறீங்க...!''

''எனக்கு உற்ற துணையா ஆஸ்பத்திரியில இருந்த பெண் ஓர் அமெரிக்கன். அவகிட்டேயிருந்து என்கிட்டே ஒட்டிக்கிட்ட மொழி சாயல். சீக்கிரத்திலே இதிலிருந்து பழையபடி நான் மீண்டுடுவேன்.''

''மாறாக - ஓர் அமெரிக்கனா நீங்க நுழையறது படு சுலபமாயிருக்கும்! உங்களுடைய கடந்தக்கால இங்கிலாந்து வாழ்க்கை முறை பற்றிய சாயல்களை தினசரி நடவடிக்கைகளில் காட்டிக்காம நீங்க அமுக்கி வைப்பது ரொம்பக் கஷ்டமானதுதான்... இருந்தாலும், அது நல்லதாயிருக்கும் என்பது என் கருத்து. அப்புறம்...''

''ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம், மிஸ்டர் விட்டிங்டன். ஏதோ நான் இதுக்கு ஒத்துக்கிட்டது மாதிரியே நீங்க முடிவெடுத்துட்டதாப்படுது.''

விட்டிங்டன் ஆச்சரியப்பட்டவராய்த் தோன்றினார். ''இதை மறுக்க எண்ணமிருக்கா என்ன? மேடம் கொலம்பிரியரின் பிஸினஸ், உயர்ரக மற்றும் பாரம்பரியம் மிக்க ஒன்று என்று நான் சான்றிதழ் தரேன், ஓகே. மேலும் இதுல இருக்கிற கட்டுப்பாடுகள் மிகக் கம்மி. ஆபத்து ஏதும் கிடையாது. அள்ளி அள்ளி வேற தரேன்.''

''இதே தான்'' என்றாள் ரூபென்ஸ். ''இதே தான் காரணம். எனக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் மிகக் மிகக் குறைச்சல். ஏனப்படி, மிஸ்டர் எட்வர்ட் விட்டிங்டன்? தவிர, இத்தனை தொகையை நீங்க எனக்கு அள்ளித் தர எந்தத் தகுதியும் என்கிட்டே எனக்கே தெரியலே...!''

''தெரியலே?'' என மிருதுவாய் கேட்டார் எட்வர்ட். ''சரி... அப்ப நானே சொல்றேன். ரொம்ப ரொம்பக் கம்மியான கூலியில இந்த வேலையை செய்து முடிக்க எனக்கு ஆள் கிடைப்பாங்க தான்... இதுல எனக்கு சந்தேகமேயில்லை. ஆனா நான் தேடுவது: நல்ல புத்திசாலித்தனத்தோட, நான் கொடுக்கிற வேலையைத் தாங்கிப் பிடித்து வெற்றிகரமா எனக்கு நிறைவேற்றித் தரவல்ல - ஓர் இளைய பெண்ணை! இதுல முக்கியமானது: என்கிட்டே ஓடி வந்து ஓடி வந்து கேள்விகளெல்லாம் கேட்டுத் துளைக்காம, அவளா சுயமா இயங்கும், சாதுர்யம்!''

ரூபென்ஸ் புன்முறுவினாள். எட்வர்ட் தன்னை வென்று விட்டதாய் முடிவெடுத்தாள். சட்டென சொன்னாள்: ''ஆங்... ஆங்... இதுல இன்னொரு விஷயமும் இருக்கு. இது வரைக்கும் நாம பேசினதுல தாமஸ் ஃபோர்டு பற்றிய பேச்சே எழலே.''

''தாமஸ்?''

''என் பிஸினஸ் பார்ட்னர்'' - மேட்டுமையாய்க் குறிப்பிட்டாள் டூபென்ஸ். ''எங்க ரெண்டு பேரையும் சேர்த்து நீங்க நேத்து பார்த்தீங்க.''

''ஆஹ்... ஆமாம். ஆனா அவரோட உதவி நமக்கு இதுல தேவைப் படலையே, மிஸ்!''

''அப்போ இதை எடுத்து நடத்தவே முடியாது'' - சொல்லியபடி எழுந்தே விட்டாள் டூபென்ஸ். ''ரெண்டு பேரும் சேர்ந்து ஏத்துக்கணும்... இல்லே கூடாது. மன்னிக்கணும் திரு எட்வர்ட், இதுதான் எங்களோட கோட்பாடு. தாமஸ் ஃபோர்டு இல்லேனா... பை!''

''பொறுமை, ஏதாவது வழி இருக்கான்னு பார்ப்போம். உட்காருங்க, மிஸ்...'' இவள் பெயர் தெரியாமல் கேள்விக்குறியாய்ப் பார்த்தபடி கேட்டார் எட்வர்ட் விட்டிங்டன்.

தான் பிறந்து வளர்ந்த சர்ச் சூழலை நினைக்கும் போது டூபென்ஸின் மனசாட்சிக்குள், ஒரு கடும்வலி தடவிக் கடந்தது. பிறந்தது - புனிதப் பாதிரி வயிற்றில். செய்யத் துணிவது - பணம் வாங்கிக் குற்றம்! இதனால் இவளுக் குள் சட்டென தோன்றிய முதல் பெயரை அவசரமாய் பற்றிக் கொண்டாள்.

''... ஜானே... ஜானே ஃபின்'' என்றாள் அவசரமாய். உடனேயே இந்த இரு சின்ன பொய் வார்த்தைகள் ஏற்படுத்திய விளைவால் திறந்த வாயையும் கண்களையும் மூட மறந்துக் கிடந்தாள். 'ஜானே ஃபின்!'

விட்டிங்டனின் முகத்திலிருந்த அத்தனை மகிழ்ச்சியும் உவப்பும் நிறம் மங்கிப் போயின. கடுங்கோபம் கொண்டு அவருடைய முகம் சிவந்தது. நெற்றியில், புடைத்துக் கொண்ட புது நரம்புகள் முளைத்தன. இவற்றையெல்லாம் கடந்த அவரிடம் ஒருவித சந்தேகம் நிறைந்த திகைப்பும் அது உண்டுபண்ணிய அச்சமும் விறுவிறுவெனப் படர்ந்தன. முன்னால் வளைந்து நுனி வரை வந்து, ''ஓ... இதுதான் நீ திட்டமிட்ட விளையாட்டா? ஆங்?'' என்றார் அதிகாரமும் பயமும் கலந்து.

என்ன பேசுகிறார் என்ற விளக்கமேயன்றி டூபென்ஸ் தடுமாறிப் போனாலும் இத்தகைய தடம்புரளலை இவள் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. எட்வர்ட் கூறிய மேற்கூறிய விமர்சனத்தின் அர்த்தத்தைக் கடுகளவு கூட இவள் அறியாவிட்டாலும், டூபென்ஸுக்கே உரிய சாதுர்ய வீச்சினால், நிலைமையின் தீவிரத்தில் தொய்ந்து போகாது நிமிர்ந்தே இருந்தாக வேண்டும் என்பதை மட்டும் நிச்சயப்படுத்திக் கொண்டாள்.

விட்டிங்டன் தொடர்ந்த வணணமிருந்தார்: ''ஆரம்பத்திலிருந்தே, என்னோட நீ கண்ணாமூச்சி விளையாடிக்கிட்டே இருந்திருக்கே, இல்லை...?! எலியும் பூனையும் மாதிரி...! எதுக்காக நான் உன்னைத் தேடி வரேன்னு

உனக்கு ஆரம்பத்திலிருந்தே தெரிஞ்சிருக்கு... ஆனாலும் கதையை ஓட விட்டே...! அப்படித்தானே...?'' தற்போது விட்டிங்டன் சற்று தணிய ஆரம்பித்தார். முகச் சிவப்புக் கொஞ்சமாய் உள்வாங்கத் துவங்கியது. டூபென்ஸை மிக நுணுக்கமாக பார்த்துக் கொண்டிருந்தார். ''எனில், ரகசியங்களை வெளியிட்டது யார்? ரீட்டா?''

மறுத்துத் தலையசைத்தாள் டூபென்ஸ். இந்தக் கற்பனைக் கானல் சூழலை எத்தனை நேரத்துக்குத் தூக்கிப் பிடிக்க முடியும் என்பதில் இவளுக்குப் பெருத்த சந்தேகம் உண்டானது. ஆனாலும் முகந்தெரியா ரீட்டாவை பிரச்சினைக்குள் இழுக்காமல் விடுவதே சரி என்பதையும் உணர முடிந்தது.

அப்பழுக்கற்ற உண்மையைப் பேசும் தொனியில், ''கிடையாது'' என்றாள். ''ரீட்டாவுக்கு என்னைப் பற்றிய எதுவும் தெரியாது.''

துளையிடும் உபகரணம் போல, எட்வர்டின் பார்வை, டூபென்ஸைத் துளைத்தெடுத்தது. ''சரி... உனக்கு எந்த அளவுக்குத் தெரியும்?'' - கேள்வியைச் சுட்டார்.

''ரொம்ப ரொம்பக் கம்மியா'' - இந்தப் பதில், எட்வர்டிடம் நிலவிய இருப்புக் கொள்ளாமையின் விறுவிறுப்பைக் குறைப்பதற்கு பதிலாக கூட்டி விட்டதில், டூபென்ஸுக்கு சிறு திருப்தி விளைந்தது. எட்வர்டின் மூளைக்குள் விதவிதமான சந்தேகங்களை உண்டுபண்ணி விடலாம் என்ற நோக்கத்தில் தான் இப்படி ஜம்பமடித்துக் கொண்டாள் இவள்!

''எப்படியோ!'' என்று பற்கள் வெளியே துருத்த உறுமிய விட்டிங்டன், ''இங்கே இவ்வளவு தூரம் வந்து அந்தப் பேரைத் துப்ப உனக்கு தைரியமிருந்திருக்கே...!'' என்றார்.

''அது என் பேருன்னேன், இல்லே?!'' என்று குறிப்புத் தந்தாள் டூபென்ஸ்.

''ஓ... ரெண்டு பெண்கள் அதே பேர்ல இருப்பது கூட சாத்தியம் தான், இல்லே?''

''சரி அப்போ, அந்தப் பேரை நான் சும்மா ஒரு வாய்ப்பின் அடிப்படையில் சொன்னேன்'னு வெச்சுக்குங்க. ஓ கே?'' - யதார்த்தமாய் பேசிக் கொண்டிருப்பது தந்த மயக்கத்தில் தொடர்ந்துக் கொண்டிருந்தாள் இவள்.

விட்டிங்டன் முதல் முறையாக தனது கையை ஒரு பேரிடியாய் மேஜையில் இறக்கினார். ''முட்டாளக்குவதை நிறுத்து! உனக்கு எவ்வளவு *தெரியும்?* அப்புறம் - உனக்கு எவ்வளவு *வேணும்?''*

கடைசி மூன்று வார்த்தைகள் இவளை அதிக அளவு உற்சாகத்துக்குள் இட்டுச் சென்றது - அதுவும், காலையில் ஒன்றும் சாப்பிடாத நிலையில்... இரவு விருந்தாக ஓரிரு பன்கள் மட்டுமே சாப்பிட்ட பசியில்...! உள்ளுக்குள்

தைரியமிருக்கிறதோ உதறல் இருக்கிறதோ அதனைப் பொருட்படுத்தாமல், இப்போது, ஒரு சாகச வீராங்கனைப் போலக் காட்டிக் கொள்ள வேண்டியதன் அத்தியாவசியம், டூபென்ஸுக்குப் புரிந்தது. நிலைமையை முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்ட ஒருத்தனின் அசாத்திய தைரியத்தை வெளியிட்டபடி, நேர்கொண்ட பார்வையோடு நிமிர்ந்தாள்!

''டியர், திரு எட்வர்ட் விட்டிங்டன்'' என்றவள், ''இருவருடைய நிலைமைகளையும் மறைவின்றி இப்போ மேஜையில் பரப்புவோம். இரண்டு பேருக்கும் அதான் நல்லது. அப்புறம் இன்னொரு விஷயம்... உங்களுக்கு இத்தனை கோபம் ஆகாது! என்னோட விவேகத்தாலும் புத்தி சாதுர்யத்தாலும் மட்டுமே நான் வாழ விரும்புவேன்னு நேற்று சொன்னேன்... அதை நீங்களே கேட்டீங்க. அப்படிப்பட்ட கூர்மை எனக்குள் இருக்குனு சற்று முன் நான் நிரூபிச்சுட்டேன்! எனக்கு சில பெயர்கள் குறித்த அறிதல் இருக்கு. ஆனா, எனக்குத் தெரிஞ்சதெல்லாம், *அந்த அளவுக்குத்தான்...!*" என்று முடித்தாள்.

''கிடையாது'' - உறுமினார் விட்டிங்டன்.

''நீங்க என்னைத் தவறா எடை போடுவதிலேயே குறியா இருக்கீங்க'' என்ற டூபென்ஸ் இதற்காக மெலிதாய் பெருமூச்செறிந்தாள்.

''ஏய் ஏய் ஏய்... நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கேன்'' என கோபமான விட்டிங்டன், ''முட்டாளாக்காதே! ரொம்ப ஊத்தாதே! விஷயத்துக்கு வா. ஒண்ணும் தெரியாத பாப்பா மாதிரி ரொம்ப நேரம் நீ என்கிட்டே வேஷம் கட்ட முடியாது. நீ வெளியே சொல்வதை விட ஜாஸ்தியா உனக்கு விஷயங்கள் தெரியும். நிறைய... நிறைய... நிறைய". என்றார்.

தன்னுடைய 'திறமையை'த்தானே பாராட்டிக் கொள்ள சில நொடிகள் இடைவேளை எடுத்துக் கொண்ட டூபென்ஸ், ''உங்க கருத்தை எதிர்க்க நான் விரும்பலே'' என்றாள் மிருதுவாய். வில்லத்தன முலாம் பூசி.

''ஆக, மறுபடியும் நாம நம்முடைய வழக்கமான கேள்விக்கே வரோம் - எவ்ளோ?''

டூபென்ஸுக்குள் தடுமாற்றம் விளைந்தது. இதுவரை விட்டிங்டனை அப்பழுக்கற்ற வெற்றியோடு ஏமாற்றியிருக்கிறாள் இவள். ஆனால் பட்டவர்த்தனமாய்க் காட்டிக் கொடுத்து விடும்படியான ஒரு அசாதாரணத் தொகையை இப்போது கேட்டால், அவருக்குள் மறைந்துக் கிடக்கும் சந்தேகத்தை அது தட்டியெழுப்பி விடும். ஒரு சின்ன ஐடியா இவளுடைய மூளைக்குள் வெட்டியது.

''இந்த விஷயத்துல கலந்துப் பேச வேண்டிய அத்தனையையும் பிறகு சாவகாசமா பேச ஒதுக்கிட்டு... ஒரு சிறு தொகையை மட்டும் இப்போ தருவதாக வெச்சுக்கிட்டா...''

அருவெறுப்பான பார்வையை இவள் மீது வீசினார் விட்டிங்டன். ''ப்ளாக்-மெயில், ஆங்...?''

டூபென்ஸ் இனிப்பாய்ப் புன்னகைத்தாள்! ''அப்படியெதுக்கு சொல்லணும்? நான் பண்ணப் போகும் சேவைக்கான முன்பணம்னு சொல்லலாமே!''

பற்களைக் கடித்தார் விட்டிங்டன்.

''ஒண்ணு தெரிஞ்சுக்குங்க...'' என நிதானமாய் விளக்கினாள்: ''நான் பணம் மேல அதிகம் பற்றில்லாதவ!''

'அது தான் தெரியுமே' என்பது போல ஒருவித மனமொப்பாத பாராட்டுதலைக் கிண்டலாய் உணர்த்தினார் விட்டிங்டன். ''நீ என்னைக் கையகப்படுத்தியிருக்கே. ஒழி. பயந்த சாது போல காட்டிக்கிட்டே. ஆனா நீ அப்படியில்லே. என் தேவைக்குப் பிரயோஜனப்படும் சகல மூளையும் உன்கிட்ட இருக்கு... ஆமாம்.''

''வாழ்க்கை இருக்கு இல்லே... அது'' - என்று தத்துவமாய்ச் சொன்னாள்: ''பல ஆச்சரியங்களை உள்ளடக்கியது.''

''தத்துவமா?'' என்று உறுமலும் புகைச்சலுமாய் சொன்ன விட்டிங்டன், ''ரகசியத்தை யாரோ எப்படியோ எங்கேயோ பேசிட்டாங்க. அது ரீட்டா கிடையாதுனு நீ சொன்னே'' என்று மேற்கொண்டு பேச எத்தனித்துவிட்டு, ''அப்படினா அது....'' எனத் தொடரத் துவங்க, அது முடியாமல் ஏற்பட்ட இடையூறுக்கு, ''ஓஓ... யாரது? உள்ளே வாங்க'' என்று எரிச்சலானார்.

கதவு தட்டப்படுவது நிறுத்தப்பட காரியதரிசி உள்ளே வந்தார். தனது எஜமானனின் கைக்கெட்டும் தூரத்தில் ஒரு காகிதத்தை வைத்தார். ''உங்களுக்காக இப்போது வந்த டெலிபோன் சமாச்சாரம், ஸார்'' என்றார்.

விட்டிங்டன் அதை உரித்துப் படித்தார். கோபத்தால் பார்வை கடுமையாக, புருவங்கள் குறுக அவரிடம் ஒரு முகச்சுளிப்பு உண்டானது.

''சரி, ப்ரௌன். நீ போ.''

காரியதரிசி கட்டுப்பட்டார். விட்டிங்டன், டூபென்ஸ் பக்கமாய் திரும்பிக் கொண்டார். ''நீ நாளைக்கு இதே நேரத்துக்கு வா. எனக்கு மேற்கொண்டு அவகாசம் இல்லை. தலைக்கு மேல வேலை வந்திருக்கு. இப்போதைக்கு இந்தா பிடி - அம்பது.''

விறுவிறுவென கரன்ஸிகளை அள்ளினார். அவற்றை டூபென்ஸை நோக்கி மேஜைக்குக் குறுக்காகத் தள்ளினார். நீ உடனடியாக கிளம்பியாக வேண்டும் என்ற உணர்த்தலோடு எழுந்து நின்று கொண்டார்.

ஒரு கை தேர்ந்த பிஸினஸ் பெண்மணி போல கொடுக்கப்பட்ட கரன்ஸி நோட்டுகளை எண்ணியவள், தன்னுடைய கைப்பைக்குள் அவற்றை பத்திரப்படுத்திக் கொண்டு எழுந்தாள். ''குட்டே, மிஸ்டர் விட்டிங்டன்.''

பூனையாய் படிகளில் இறங்க ஆரம்பித்தாள் டூபென்ஸ். புது குதூகலம் இவளை ஆட்கொண்டது. அருகில் தெரிந்த ஒரு கடியாரம் மணி பணிரெண்டாகப் போகிறது என்று காட்டியது. 'அந்த டாமிக்கு செமத்தியமான ஓர் ஆச்சரியம் தரணும்' என முணுமுணுத்துக் கொண்டவள், கை அசைத்து, அந்த வழியே போன ஒரு வாடகைக் காரைப் பிடித்தாள்.

கார், ரயிலடிக்கு வெளியே போய் வாகாக நின்றது. நுழைவாயிலேயே டாமி இருந்தான். டூபென்ஸ் வாடகை காரிலிருந்து இறங்க உதவ ஓடிவந்த அவனது இரு கண்களும் வியப்பின் ஆதிக்கத்தால் பிரம்மாண்டமாய் விரிந்திருந்தன. அவனைக் கண்டு நெருக்கமாய் புன்னகை புரிந்தாள் இவள். ஆனாலும் சற்றே உலுக்கப்பட்ட குரலில் சொன்னாள்: ''கிழப்பிசாசே...! டாக்ஸிக்குப் பணத்தைக் குடு! அஞ்சு பவுண்டு நோட்டுக்கு மேல என்கிட்டே சல்லி கிடையாது.''

அத்தியாயம் - 3

ஒரு பின்னடைவு

ஓர் இளைஞன், உதவி கேட்கும் அழகிய இளையவளுக்காக வாரிச் சுருட்டிக் கொண்டு செலவழித்து பந்தா காட்ட வேண்டிய அற்புதக் கட்டமிது. ஆனால், இந்தக் கணம், அந்த அளவுக்குப் பெருமிதமாய் அமையாமல் போயிற்று! டாமியுடைய பர்ஸின் சக்தி மிகக் குறைந்த ஒன்று. இருந்த சில்லறையையெல்லாம் அள்ளித் திரட்டி கொடுத்த பிறகும் டாக்ஸியை நகர்த்தாமல் கையில் கொட்டப்பட்ட காசுகளை எண்ணிக் கொண்டே நின்றான் டிரைவர். ''நோட்டா இல்லே, உன்கிட்டே?'' என்று உறுமியபடி எண்ணினான் அவன்.

டாமியைப் பார்த்து, ''நிறைய கொடுத்துட்டியோ?'' என்றாள் டூபென்ஸ். ''பார்... அதிகமா கொடுத்ததைத் திருப்பிக் கொடுக்கத்தான் அவன் மறுபடி எண்ணிக்கிட்டிருக்கான்!''

டூபென்ஸின் இந்தக் குறிப்பே 'நல்ல கிராக்கிங்க...' என கறுவியபடி டிரைவரைக் கிளப்பி விட்டது!

தான் கொடுத்த தொகை நிச்சயம் சில நாணயங்கள் கம்மியாய் தானிருந்திருக்க வேண்டும் என்று அறிந்திருந்த டாமி, தன்னுடைய இக்கட்டான நிலைமையைத் தணித்துக் கொள்ளும் வகையில், ''சாம்பிராணி! யார் உன்னை டாக்ஸி வெச்சுக்கிட்டு வரச் சொன்னது?'' எனப் பாய்ந்தான்.

''நான் வர லேட்டாகி நீ காத்திருக்க வேண்டி வந்துடுமோனு தான், டாமி'' என்றாள் இவள், மிருதுவாய்.

''லேட்டா - வருவேனு - பயந்து - நீ - பொறுப்பா - டாக்ஸியில - வந்தீயாக்கும்...! நம்பறேன்மா, நம்பறேன்.''

கண்களை அகலமாய் விரித்தபடி, ''நிஜமாப்பா! உண்மையா!'' என்றபடி தொடர்ந்த டூபென்ஸ், ''அஞ்சு பவுண்ட் நோட்டைத் தவிர என்கிட்டே தம்புடி கிடையாதுப்பா!'' என்றாள்.

''நீ உன்னோட பழியை செமத்தியா தீர்த்துக்கிட்டே, கிழ ராட்சஸி! நானா கூடுதல் சில்லறையை அவன்கிட்டே கொடுத்திருப்பேன்! அந்த ஆள் துளி

கூட... துளினா துளிகூட நம்பியிருக்க மாட்டான்! அதான்... ஓடிட்டான்! ஒரு டிரைவர் கிட்டே மானத்தை வாங்கிட்டேடீ!''

''அவன் நம்பலே'' என்றாள் டூபென்ஸ் சிந்தனை பொதிந்து. ''பணம் நம்மகிட்டே இல்லே என்பது நிஜம். ஆனா அவன் நம்பலே. உண்மையை அப்பழுக்கின்றி பேசுவதன் பிரதிபலன் இது - நம்மை யாரும் நம்பாதது! இதைக் காலைல நான் புரிஞ்சுக்கிட்டேன். இப்ப நாம லஞ்சுக்குக் கிளம்பறோம், ஸவ்வாய் போலாமா?''

அசட்டுச் சிரிப்புச் சிரித்த டாமி, ''ஸவ்வாய்...?! விளையாட்டா? ஏன், அதைவிடப் பெரிசா ரிட்ஸுக்குப் போலாமா?'' என்றான்.

''ம்ம். எனக்கென்னவோ இப்போ பிக்கா - டில்லி போகலாம் போல இருக்கு. பக்கத்துலேயே இருக்கு அது. உன்னைப் பயமுறுத்த இன்னொரு டாக்ஸியெல்லாம் வேணாம். கிளம்புப்பா.''

''ஹல்லோ... நிஜமா, ஸவ்வாய்க்கா? அது நட்சத்திர ஓட்டல், தெரியுமில்லே! ஜோக்கா? இல்லே, உனக்கு கிறுக்கு பிடிச்சிடுச்சா...?''

''நீ கடைசியா சொன்னதுதான் ரொம்பச் சரியான கணிப்பு. பணத்துக்குள்ளே குளிச்சுக்கிட்டு இருக்கேன்டா கிழவா! இந்தப் பண அதிர்வினை என்னால தாங்கவே முடியலே! இப்படிப் புத்தி பேதலிச்சுக் கிறுக்குப் பிடிச்சுப் போகும் மன நோயாளிக்கு, புத்திசாலி மருத்துவன் ஒருவன் சொல்லியிருக்கும் மருத்துவம் என்ன தெரியுமா? ஒரு சிக்கன் பெர்க், அளவற்ற பன் - ஜாம் மற்றும் சூடான வாத்து வறுவல்! சீக்கிரம்... உடனே போய் சாப்பிட்டுடுவோம்...! கிறுக்கு முத்திடப் போகுது...!''

''ஏய் கிழட்டு ராட்சஸியே! என்னதான் நடந்து தொலைச்சது...?''

''ஓஹ்...! அது நம்பகத்தன்மைக்கெல்லாம் அப்பாற்பட்டது'' டூபென்ஸ் தனது கைப்பையைத் திறந்தாள். எடுத்தாள். ''பார்... இங்கே பார்... இப்படிப் பார்... இதோடா இங்கேயும் பார்... ம்... பார்...!''

''அடிப்பாவி சிறுக்கி! பணக்கத்தையை இப்படி எடுத்து விளம்பரம் போல எல்லாரும் பார்க்கக் காத்துல வீசாதேடீ, என் செல்வம்...!''

''இது வெறும் பவுண்ட் நோட்டில்லே... இதைத் தெரிஞ்சுக்க முதல்ல. இந்த நோட்டு சாதாரண பவுண்ட் போல அஞ்சு மடங்கு மதிப்பு கொண்டது. இதோ, இதுக்கு பத்து மடங்கு உண்டு...''

சந்தோஷ உறுமல் செய்தான் டாமி. ''இது நினைவே இல்லே... கனவு, என் நிலை கழன்றுவிட்ட கனவு. கனவில தான் நான் இருக்கேன். சொல்லுடீ கிழவி, இது கற்பனையா, இல்லே நிஜமாவே என் முன்னாடி கத்தைக் கத்தையா நோட்டெடுத்து ஒரு கிழவி ஆட்டிக்கிட்டு இருக்காளா...?''

''நிஜம், அரசே நிஜம்!'' என்றாள் டூபென்ஸ் நாடகப்பாணியில். ''கிளம்புங்கள். ஒரு நல்ல மதிய உணவு சாப்பிடுவோம்'' என்றும் விடாது தொடர்ந்தாள்!

''நீ எங்கே வேணும்னாலும் கூப்பிடு... வரேன். ஆனா, நீ என்ன சாகசம் செஞ்சே? ஏதாவது வங்கியைக் கையகப்படுத்திட்டியா?''

''எல்லாம் நல்ல நேரம் தான். பிக்கா - டில்லி பகுதி தான் எத்தனை ரம்யமான பகுதியா இருக்கு.''

நடைபாதையில் சென்று கொண்டிருக்கும் போது, ''எங்கே போவது?'' என்றான் கண்ணில் பட்ட ஓட்டல்களைப் பார்த்தபடி.

சுட்டு விரல் நீட்டி ஓட்டல் ஒன்றினைக் காட்டிய டூபென்ஸ், ''நான் போட்ட லிஸ்ட் - அங்கே கிடைக்குமில்லே?'' என்றாள்.

''ஏய், ஏய். உண்மையாவா அத்தனையையும் வாங்கிச் சாப்பிடப் போறே?'' என்றான் டாமி.

''அத்தனையும் வாங்கப் போறேன். ரெண்டு பேருக்காகவும். மேலும் வேணும்னாலும் வாங்கிக்க.''

ஓட்டலை நோக்கி நடக்கும் போது, ''இப்ப சொல்லு'' என, ரகசியத்தை இனியும் மேற்கொண்டு தாங்கயியலாது என்ற தொனியில் டாமி பேசலானான்.

நடந்தவற்றை அப்படியேச் சொன்னாள். ''இதுல விசித்திரமான பகுதி என்னனா...'' என்று முடித்தாள்: ''...ஜானே ஃபின் எனும் அந்தப் பெயர், நானே சடுதியில உருவாக்கின பெயர். என் சொந்தப் பெயரைத் தர நான் விரும்பலே. துணியலே. ஒரு வேளை ஏதாவது நிழல் உலகமா இருந்துட்டா... பாவம், சர்ச்ல தெய்வமே என்று இருக்கும் அப்பா இல்லே வீணா நடுத்தெருவுக்கு இழுக்கப்படுவார்...?''

''அதுவும் சரி தான்'' என்றான் டாமி மெதுவாய். ''ஆனா, நீ அந்தப் பெயரை - உருவாக்கலே.''

''என்ன?''

''நீயா உண்டு பண்ணலே. *நான்* அந்தப் பெயரை உன்கிட்டே சொல்லியிருந்தேன். ஜானே ஃபின் என்ற பெயர் கொண்ட ஒருத்தியைப் பற்றி, ரெண்டு பேர் பேசிக்கிட்டிருந்ததை நான் கேட்க நேர்ந்ததா... நேற்று உன்னிடம் நான் சொல்லலை...? அதுதான், அந்தப் பெயரை, அத்தனை சீக்கிரமா உன் நினைவுக்குள் கொண்டு வந்து போட்டிருக்கு.''

''ஆமாமாம். நீ சொன்னே. இப்ப நினைவுக்கு வருது. எத்தனை அசாதாரணம்...'' என்று டூபென்ஸ் அமைதிக்குள் விழுந்தாள். திடுமென அவளாகவே எழுந்தாள். அழைத்தாள்: ''டாமி!''

''ம்?''

''அந்த ரெண்டு பேரும் எப்படியிருந்தாங்க - நீ கடந்து போன அந்த ரெண்டு ஆண்கள்?''

ஞாகப்படுத்தும் முயற்சியில் தீவிரமானான் டாமி. ''ஒருத்தன் நல்ல குண்டான பய. நல்ல மழுங்க வழிச்சிருந்தான். கொஞ்சம் கறுப்புனு நினைப்பு.''

''அதுதான் - அவன்'' - கத்தி விட்டாள் டூபென்ஸ். ''அதுதான் விட்டிங்டன். இன்னொருத்தன்? அவன் எப்படியிருந்தான்?''

''நினைவில்லே, டூபென்ஸ். அவனை நான் குறிப்பிட்டு பார்க்கலே. வித்தியாசமான பெயரா இருந்ததால் தான் அது என்னை ஈர்த்தது.''

''யதேச்சையாக இதுபோல ஒத்த நிகழ்வுகள் நடக்காதுனு சொல்றாங்க. இப்ப நடந்திருக்கே'' - டூபென்ஸ் தன் தொடையைத் தட்டிக் கொண்டாள்.

ஆனால் இந்தப் பக்கத்தில் டாமி அலட்சியங்கள் கடந்து மிக முக்கியமானான். ''ஏய் கிழ டூபென்ஸ். விளையாட்டு போதும். கவனி. இது நம்மை எங்கே கொண்டு போகுது? எங்கே கொண்டு போய் நிறுத்தப் போகுது?''

''அதிகபட்ச பணத்தில்!'' என்றாள், தோழி.

''அதான் தெரிஞ்சதாச்சே. உன் அழுகிய மூளையில இருப்பதெல்லாம் ஒண்ணுதான். அது - *பணம்.* நான் அதைக் கேட்கலே. அடுத்த அடி? அது என்ன? இந்த விளையாட்டு சிதைஞ்சு போகாம நீ எப்படி கொண்டு போகப் போறே?''

''ஓஹ்...'' - தூக்கிய ஸ்பூனை அப்படியே கீழே இறக்கிக் கொண்டாள் இவள். ''நீ சொல்றதும் சரிதான் டாமி. இது கொஞ்சம் கடினமான வினா.''

''அவனை நீ ரொம்ப நாட்களுக்கு முட்டாளாவே வெச்சுக்கிட்டிருக்க முடியாது. ஓகே? சீக்கிரமாவோ... இல்லே சற்று காலங்கடந்த பிறகோ... நீ வழுக்கி விடலாம். இந்த ப்ளாக் மெயிலை ரொம்ப நாளைக்குக் கொண்டு போக முடியும்னு எனக்குப் படலே.''

''மூடு வாயை. மூளையில்லாம பேசாதே. பணம் கைக்குக் கிடைக்கிற வரைக்கும் தான் ப்ளாக்-மெயில், ப்ளாக் மெயில்னு ராகம் பாடிக்கிட்டிருப்பேன். இந்த விஷயத்துல நான் எதையும் எப்பவும் சொல்லப் போவது கிடையாது; எனக்கு தான் ஒரு மண்ணும் தெரியாதே! அப்புறம் எங்கே மாட்டிக்கிறது?''

''ஹூம்... புத்திசாலித்தனமா பேசறதா நினைப்பு...? ம்...?'' சந்தேகம் மேலோங்கக் கேட்ட டாமி தொடர்ந்தான்: ''சரி... அவன் கண் விழிச்சுக்கிட்டு, அப்போ நாம அகப்படறதைப் பற்றி பிறகு பேசுவோம். இப்போ சொல்லு -

அடுத்து *நாம* என்ன பண்ணப் போறோம்? இன்னிக்குக் காலைல வேணும்னா அந்த விட்டிங்டன் உன்கிட்டேயிருந்து விடுபடுவதில் கொஞ்சம் அவசரமா இருந்திருக்கலாம். ஆனா, அடுத்தமுறை, அவன் பணம் உன் கைக்கு மாறுவதற்கு முன்னால், இன்னும் அதிகமா விஷயங்களைத் தெரிஞ்சுக்க முயல்வான். உனக்கு எந்த அளவுக்கு சமாச்சாரங்கள் தெரியும்... இன்னும் என்னவெல்லாம் தெரியும்... இந்த தகவல்களையெல்லாம் நீ எங்கே யார் கிட்டேயிருந்து பிடுங்கினே... இப்படி, நீ வாய் திறந்து பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டுக்கிட்டே போவான். அப்ப நிலைமையை எப்படி சந்திக்கிறதா உத்தேசம்?''

அதிகபட்ச குழப்பத்துக்குள்ளானாள் டூபென்ஸ். ''இதுக்கு - யோசிக் கணும். நல்ல ஸ்ட்ராங் காபிக்கு சொல்லு டாமி. மூளையை உசுப்பிவிட! அடக்கடவுளே... இத்தனையா நான் சாப்பிட்டிருக்கேன்...! ஊப்...!''

''பல நாள் பட்டினி கிடந்த பிச்சைக்காரன் போல பண்ணியிருக்கே! நானும் அப்படித்தான்... ஆனா உன்னைப் போலவா...?! வ்வே...! உன் வாயைப் பார்...! சாப்பிட்ட அத்தனையும் அப்பிக் கிடக்கு! நாட்டுப்புறம் போல இருக்குடீ உன்னைப் பார்த்தா! ரெண்டு காபிப்பா (இது வெயிட்டருக்கு)... ஒண்ணு ஸ்ட்ராங்கா ஒண்ணு மத்தியமமா.''

சுற்றியிருக்கும் காற்றையெல்லாம் ரசித்துக் கொண்டு காபியை ஆழ்ந்து ருசித்தாள், டூபென்ஸ். இடையில் டாமி பேசப் புகுந்த போது, ''அமைதியா இரு. நான் யோசிக்கிட்டு இருக்கேன்'' என்று அமுக்கினாள்.

அப்படியே அமைதிக்குள் டாமி மூழ்கிக் கிடந்த போது, ''அதோ... ! அதோ...!'' என்று ஏதோ வழியைக் கண்டுபிடித்து விட்டவள் போல விழித்துக் கொண்டாள் இவள். ''எனக்குள் ஒரு திட்டம்'' என்றவள் இறுதியாய் சொன்னாள்: ''வெளிப்படையா நாம இனி மேற்கொண்டு செய்ய வேண்டியது என்னன்னா... இன்னும் இன்னும் இந்த சங்கதி குறித்து ஆழமா போய், எல்லாத்தையும் தோண்டிக் கிளறி வெளியிலெடுத்து, முழுக்கவும் தெரிந்து கொள்வதுதான்.''

கைதட்டி, கலகலவெனப் பரிகாசமாய் சிரித்தே விட்டான் டாமி.

''கேலி வேண்டாம் கிழம்...!'' என கடுப்பானாள் டூபென்ஸ். ''நாம எது செஞ்சாலும் அதை விட்டிங்டன் மூலமாத்தான் செய்ய முடியும்... புரிஞ்சுக்கோ. ஆக, இப்போ, அவன் எங்கே வாழ்ந்துக்கிட்டிருக்கான்னு நாம துப்பறியணும் - என்ன பண்றான்னு தேடணும் - சொல்லப் போனா சி ஐ டி வேலை செஞ்சாகணும். ஆனா, நீயும் நானும் பேசியதை ஒட்டுக் கேட்ட அவன் அந்த சமயத்துல உன்னை ஒரு நிமிஷமோ ரெண்டு நிமிஷமோ தான்

பார்த்திருப்பான். ஸோ, நோ ப்ராப்ளம்! உன்னை அவன் அடையாளம் காண்பது அரிது. ஒரே மாதிரியான ரெண்டு வாலிபப் பசங்களுக்கு மத்தியில பெரிய வித்தியாசங்கள் இருப்பதில்லை.''

''இந்த விமர்சனத்தை நான் வன்மையாக மறுத்துத் தள்ளுகிறேன்! என்னுடைய சுண்டியிழுக்கும் அமைப்பும் கட்டழகும் தனிப்பட்ட ஆண்மை தோற்றமும் - எத்தனை பெரிய கும்பலிலும் என்னை... என்னை மட்டும்... தனித்துக் கிரீடமிட்டுக் காட்டும்...! ஓகே!''

''ப்ச்'' என்ற டூபென்ஸ், ''என் திட்டம் இதுதான்'' என்று சுலபமாகத் தொடர்ந்தாள்: ''நாளைக்கு நான் மட்டும் தனியா போறேன். இன்னிக்குப் பண்ணின மாதிரியே அவனை அரண்டுப் போக வெச்சு ஆட்டிடறேன். மறுபடியும் காசு கிடைக்காமப் போனா பாதகமில்லே. அம்பது பவுண்டு இன்னும் சில நாட்களுக்கு நமக்குப் போதும்.''

''ஒரு வாரத்துக்கே கூட போதும்.''

''நீ கட்டிடத்துக்கு வெளியேவே எங்கேயாவது இரு. நான் வெளியே வந்த பிறகும் கூட அவன் என்னைக் கவனிச்சுக்கிட்டே இருந்தான்னா உன்னை நான் நெருங்க மாட்டேன்... உன் கூட பேச மாட்டேன். ஓர் ஓரமா போய் நின்னுப்பேன். அவன் வளாகத்தை விட்டு வெளியே வரும் போது கைக்குட்டையைக் கீழே போட்டுட்டு அதை எடுக்கிற மாதிரி பண்ணுவேன். நீ பின்னாடியே போ.''

''பின்னாடியே எங்கே போறது?''

''அவனைத் தொடர்ந்துடா, முண்டம்! இந்தத் திட்டம் பற்றி நீ என்ன நினைக்கிறே?''

''கதைகள்ல இடம் பெற வேண்டிய நல்ல காட்சி. நிஜ வாழ்க்கையில, நடுத் தெருவுல மணிக்கணக்கா ஒருத்தன் ஒண்ணுமே பண்ணாம வெறுமனே பராக்கு பார்த்துக்கிட்டு நின்னுக்கிட்டிருந்தா, அவனை முழுமுதல் முட்டாள்னு தான் நினைப்பாங்க. எனக்கு என்ன ஆயிடுச்சுனு மக்கள் பரிதாபமா என்னைப் பார்ப்பாங்க.''

''நகரத்துல அப்படி கிடையாதுப்பா. ஒவ்வொருத்தரும் கால்ல கஞ்சியை ஊத்திக்கிட்டு அப்படிப் பறப்பாங்க. நீ தெருவுல நிற்பதைக் கூட அவங்க கவனிக்க மாட்டாங்கன்னு தான் சொல்லணும்!''

''ரெண்டாவது முறையா என் ஆணழகை நீ மட்டம் தட்டறே, டூபென்ஸ்! ஒழிஞ்சு போ. மன்னிச்சு விட்டுடறேன்! சரி... இன்னிக்கு மத்தியானம் என்ன பண்ணப் போறே?''

''தொப்பி *வாங்கலாம்னு* நினைச்சிருந்தேன். இல்லே சில பட்டு கையுறைகள்... அப்படியில்லைனா...''

''உதை, உதை'' - சற்று கடிந்து கொண்டு எச்சரித்தான் டாமி. ''அம்பது பவுண்டுக்கு எல்லைகள் இருக்கு கிழவி...!'' என்றவன், ''எது எப்படி ஆனாலும்... இன்னிக்கு ராத்திரி ஒரு சூப்பர் டின்னரும் படமும் தவிர்க்கக் கூடாதவை'' என்றான்.

டூபென்ஸும் ஏற்றுக் கொண்டாள்.

அன்றைய தினம் இனிமையாய் கழிந்தது. குறிப்பாய் மாலைப்பொழுது. இரண்டு, ஐந்து பவுண்டு நோட்டுகள், மீட்கயிலாதபடி கரைந்துப் போயின!

சொல்லிக் கொண்டபடி காலையில் இருவரும் சந்தித்துக் கொண்டு நகரம் நோக்கிப் பயணமாயினர். சாலையின் மறுபக்கத்திலேயே டாமி நின்று விட, டூபென்ஸ் குதித்தோடிக் கட்டிடத்துக்குள் நுழைந்தாள்.

சாலையின் கடைக்கோடி வரை மெதுவாய் நடந்து போன டாமி, மறுபடியும் வந்திறங்கிய இடத்துக்கே திரும்பினான். சரியாக வளாகத்தின் எதிரே அவன் மீண்டும் வந்து நின்ற போது, டூபென்ஸ் தெருவின் எதிர்ப்புறத்தில் தென்பட்டாள். படபடப்பாய் ஓடியும் வந்தாள்.

''டாமி!''

''ம். என்ன ஆச்சு?''

''அந்த இடம் மூடியிருக்கு. என்ன ஆச்சுனு கேட்கக் கூட அங்கே ஒரு நாதியில்லை.''

''ஆச்சரியமாயிருக்கு.''

''இல்லியா, பின்னே...?! என் கூட மேலே வாயேன். மறுபடியும் முயற்சி பண்ணுவோம்.''

''என்னத்தை?''

''டாமி!''

அவன் பேசாது தொடர்ந்தான். அவர்கள் மூன்றாவது தளத்தைக் கடக்கும் போது அங்கிருந்த ஏதோ ஓர் அலுவலகத்தின் ஓர் இளைய காரியதரிசி இவர்களை நாடி வந்தான். சில நொடிகள் தயங்கிய அவன், பின் தானாக முன் வந்து டூபென்ஸிடம் பேசினான்: ''எஸ்தோனியா கண்ணாடி கம்பெனிக்காகக் காத்திருக்கீங்களா?''

''ஆமாம், ஸார்.''

''அதை மூடிட்டாங்க. நேத்து மதியத்திலிருந்து. கம்பெனி சுருண்டுடிச்சுனு காரணம் சொல்றாங்க. அப்படி எதுவும் என் காதுபட நிரூபணமாத் தெரியலே. எப்படியோ... இனி இந்த அலுவலகப் பகுதி - வாடகைக்கு.''

''தே... தே... தேங்க் யூ'' - நிச்சயமற்றுப் போனாள் டூபென்ஸ். ''உங்களுக்கு திரு விட்டிங்டனுடைய முகவரி தெரிய வாய்ப்பிருக்கா?''

''மன்னிக்கணும். சட்டு புட்டுனு தூக்கிக்கிட்டுக் கிளம்பிட்டாங்க.''

''ரொம்ப நன்றி'' என்றான் டாமி. ''கிளம்பு டூபென்ஸ்.''

சாலை வரை இறங்கிய இருவரும் அங்கு ஒருவரையொருவர் வெற்றிடப் பார்வைப் பார்த்தபடி நின்றனர். ''எல்லாம்... முடிஞ்சு... போச்சு'' என்று நீளமாய் சொன்னான் டாமி.

''இப்படி ஆகும்னு நான் சந்தேகப்படவேயில்லை'' என்று குன்றிப் போனாள் தோழி.

''விடு, என் இனிய தோழி! இது - நம்ம கையில இல்லே.''

''ம்ம். இருக்கு'' என்று சட்டென தலை நிமிர்ந்து சுறுசுறுப்பானவள், ''நம்ம கையில இருக்கு, இனியவனே'' என்றாள் தீர்மானமாய். பிரத்யேகமாய் அவளுக்கே உரிய புத்தி சாதுர்யம் விழித்தெழுந்தது. ''முடிஞ்சு போச்சுனா சொன்னே...?! ம்ம். நீ தப்பு. முடிவல்ல இது - *ஆரம்பம்.*''

''ஆரம்பம்? எதன் ஆரம்பம்?''

''நம் சாகசத்தின்! நம் சாகசத் தேடலின்! டாமி... உன் கண்களுக்குத் தென்படலே...?! இந்த அளவுக்கு பயந்து தலைதெறிக்க ஓடும்படி அவங்க நடுநடுங்கிப் போயிருக்காங்கன்னா, இந்த ஜானே ஃபின் சமாச்சாரத்துக் குள்ளே என்னவெல்லாமோ இருக்கணும்...! ஆரம்பிப்போம். கமான், ஸ்டார்ட்... இதன் அடி ஆழம் வரை போய் பார்த்துடுவோம். ஓட ஓட விரட்டி அவங்களை வீழ்த்துவோம்...! நிஜமான உழைப்பைப் போட்டு அவங்களைத் துப்பறிவோம்...!''

''இதெல்லாம் சரி தான் - வீர வசனங்கள். ஆனா நாம துப்பறிய இங்கே ஒருத்தரும் விட்டு வைக்கப்படவில்லையே...!''

''ஆமாம். அதனால் தான் இந்த முழு சமாச்சாரத்தையும் நாம மறுபடியும் ஆரம்பத்திலிருந்து துவங்கணும். எனக்கு அந்த பென்சிலைக் கொடு. தேங்க்ஸ். ஒரு நிமிடம் காத்திரு. குறுக்கிடாதே. அப்படி!''

பென்சிலை டூபென்ஸ் திருப்பிக் கொடுத்து விட்டு, துண்டுத் தாளில் தான் எழுதியிருந்ததைத் திருப்தியாய் ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

''என்னதுடீ அது?''

''விளம்பரம்.''

''அந்த விளம்பரத்தை நீ விடப் போறதே இல்லியா...?''

''கிடையாது. இது அது இல்லே. *வேற.*''

அந்தத் துண்டுக் காகிதத்தை அவனிடம் தந்தாள் இவள்.

அதிலிருந்த வாசகத்தை வாய் விட்டுப் படித்தான் டாமி:

''தேவை: ஜானே ஃபின் என்பவரைப் பற்றிய எந்தத் தகவலும். தொடர்புக்கு: Y.A''

அத்தியாயம் - 4

ஜானே ஃபின் என்பது யார்?

அடுத்த நாள், பாறங்கல்லாய் தான் நகர்ந்தது. செலவுகளைக் கத்திரிப்பது தவிர்க்கயியலாததாய் ஆனது. ஜாக்கிரதையாய் கையாண்டால்தான் கையிலிருக்கும் நாற்பது பவுண்டுகள் நிறைய நாட்களுக்கு உயிர் வாழும். அதிர்ஷ்டவசமாய் சீதோஷ்ணம் சாதகமாய் இருந்தபடியால், 'நடபபதே செலவற்றது' என டூபென்ஸ் அறிவித்த சட்டம் அமலானது. ஒரு திறந்தவெளி திரையரங்கம் மாலைப் பொழுதுக்கான பொழுதுபோக்கினை இரு இளைஞர்களுக்கும் வழங்கிற்று.

கண்ணாடி கம்பெனி பற்றிய ஜீரணிக்கயிலாத உண்மை அறிவிக்கப்பட்ட தினம் ஒரு புதன் கிழமை. வியாழனன்று விளம்பரம் சரியாக பிரசுரமாயிருந்தது. இதற்கான கடிதங்கள் வெள்ளிக்கிழமையன்று டாமியின் முகவரியில் எதிர்பார்க்கப்பட்டன.

அப்படியேதாவது கடிதங்கள் வந்தால் அவற்றை டாமி தனியாய் பிரித்துவிடக் கூடாது என்ற மரியாதைக்குரிய சத்தியத்தால் கட்டப் பட்டிருந்தான் அவன். அவற்றை எடுத்துக் கொண்டு, தேசிய கலாரங்கத்துக்கு, அங்கு அவனுடைய பார்ட்னர் காத்துக் கொண்டிருக்கும் இடத்துக்குப் பத்து மணிக்குப் போக வேண்டும் என்பது ஏற்பாடு.

சந்திப்புக்கான இந்த முன்னேற்பாட்டில் முதலில் வந்திருந்தது டூபென்ஸ். சிகப்பு வெல்வெட் இருக்கையொன்றில் அமர்ந்து கொண்டு டாமி முகம் தென்படுகிறதா என பார்த்தபடி காத்திருந்தாள்.

''அப்புறம்?'' - வந்தவனைக் கேட்டாள்.

''அப்புறம்?'' என்று அதையே திருப்பினான் தாமஸ் ஃபோர்டு, என்ன எதிர்பார்க்கிறாய் என்ற உட்பொருளோடு. ''இங்கிருப்பவற்றில், உனக்கு ரொம்ப பிடிச்ச ஓவியம்?''

''வெறுப்பேத்தாதே. எந்த பதிலும் வரலியா?''

ஆழ்ந்து, சற்றே மிகைப்படுத்தப்பட்ட வகையில், மறுப்பாய் தலையசைத்தான் டாமி.''நேரடியா சொல்லி உன்னை ஏமாற்றத்துக்குள் தள்ள நான் விரும்பலே, கிழ ராட்சஸி! ஆனா... அது தான் உண்மை. கஷ்டம் தான், என்ன பண்றது...?! பொக்கிஷமாயிருந்த பணம், வீணா போயாச்சு'', என்று பெருமூச்செறிந்தான். பிறகு, ''நம்ம விஷயத்துக்கு வருவோம் - விளம்பரம் வெளியாயிடுச்சு - அதுக்கு ரெண்டே ரெண்டு மறுபதில்கள் வேற வந்துள்ளன...!'' என்றான், சலிப்பாய்.

''டாமி! கிழப் பிசாசே!'' - ஏறத்தாழ கதறினாள் டூபென்ஸ். ''அவற்றை என்னிடம் குடு. குடுடா! எத்தனை ஈனத்தனமானவன் நீ...!''

''உன் லக்கேஜ், டூபென்ஸ், உன் லக்கேஜ்!'' என்றான் நமுட்டுச் சிரிப்போடு, ''நுழையும் போது அதுக்குக் காசு கொடுத்தே ஆகணும்னாங்க. தேசிய அருங்காட்சியாம், இன்னிக்கு. நீ ஒரு சிறந்த பாதிரி குடும்பத்தைச் சேர்ந்தவள்னு சொல்லியும் பார்த்தேன். ம்ம்...''

''டாமி!''

''சரி, சரி! ஒரு காசு செலவில்லாம, நேற்றிலிருந்து உனக்குள் இருந்த மன இறுக்கத்தைக் களைய நான் கொடுத்த ஹாஸ்ய மருந்து எப்படி...? இப்ப, நீ சொன்ன மாதிரி, கடிதங்களுக்குள்...''

அவன் கைகளிலிருந்த பெருமதிப்பிற்குரிய அக்கடிதங்களை, மட்டு மரியாதையின்றி படக்கென்று பிடுங்கிப் பறித்தாள் இவள். முக்கியத்துவம் தந்து அவற்றைப் பரீட்சித்தாள்.

''இது - கனமாயிருக்கு. நிறைய விஷயம் இருக்கும் போல. இதைக் கடைசியா வெச்சுப்போம். அடுத்ததை முதல்ல பிரிப்போம்.''

''சரியா சொன்னே. ஒன் டூ த்ரீ - திற...!''

டூபென்ஸின் வெண்டரி விரல்கள் நுழைந்து உறையைக் கிழிக்க, உள்ளிருந்த விஷயத்தை உருவி எடுத்தாள்

அன்பு நிறை நண்பரே,

இன்றைய காலை நாளிதழில் வெளியான உங்களுடைய விளம்பரத்தைப் பார்த்தேன். நான் உங்களுக்குக் கொஞ்சம் உதவியாக இருப்பேன் என்று தோன்றுகின்றது. நாளை காலை பதினோரு மணிக்கு மேற்கூறிய முகவரியில் நீங்கள் என்னை வந்து சந்தித்த பின் முடிவெடுக்கலாம்.

உங்கள் உண்மையான,

ஏ கார்ட்டர்.

"27, ஷெல்ட்டான் தளம்" என்று, முகவரியைப் பார்த்துப் படித்தாள் டுபென்ஸ். "இது, ட்ரையின்ல போனாலே ரொம்ப தூரம்லே?" என்றும் குறிப்புத் தந்தாள்.

"அதற்கு..." என்று ஆரம்பித்த டாமி, "... இதுதான் ஏற்பாடு" என தொடர்ந்தான்: "இந்தத் தாக்குதலை நானே நேருக்கு நேராய் சந்தித்து எதிர்கொள்ள வேண்டிய நேரமிது. திரு கார்ட்டரைச் சந்திக்க அனுமதி கிடைக்கின்றது. இருவரும் 'குட் மார்னிங்' சொல்லிக் கொள்கிறோம் - அது தானே முறை! பிறகு அவர்: 'உட்காருங்கள், திரு...'. இதற்கு, சரியாகவும் அழுத்தமாகவும் நான் பதில் தருகிறேன்: 'எட்வர்ட் விட்டிங்டன்!'. இந்த பதிலுக்காக முகம் சிவந்து களையிழந்துப் போகும் கார்ட்டர், மூச்சுக் காற்றை உள்ளிழுக்க மறந்து, 'எ... எ... எத்தனை வேணும்' அப்படினு கேட்கிறார். என்னை. கிடைக்கும் அம்பதை அள்ளி பாக்கெட்டில் போட்டுக் கொள்ளும் நான் வெளியில வந்து உன் கூட சேர்ந்துக்கறேன். ரெண்டு பேரும் வெற்றிகரமா கிளம்பி அடுத்த முகவரிக்குப் போறோம். இதே நாடகத்தைத் தொடர்கிறோம்."

"போதுமே டாமி! அம்பது கிடைக்கும்னியே... அது என்ன? பவுண்டா? இல்லே..." என்று விட்டு, உதை விழுவது போல சைகை காட்டிய டுபென்ஸ், "இப்போ அடுத்த கடிதம். ஓ... இது ரிட்ஸ் பகுதியிலிருந்து" என்றாள்.

"பணக்காரப் பகுதி. அம்பதுக்கு பதில் நூறு!"

"உதை?" என்றபடி, படிக்க ஆரம்பித்தாள்:

அன்பு நிறை நண்பரே,

உங்கள் விளம்பரத்துக்கான பதில்.

லஞ்ச நேரத்தை ஒட்டி நீங்கள் என்னைக் காண வந்தீர்களென்றால் மகிழ்வேன்.

உங்கள் உண்மையான,

ஜூலியஸ்.

"ஹாஹா..." என்றான் டாமி ஈடுபாட்டோடு. "லஞ்சுக்குப் போயிடு வோம், கிழவி! அதான் நல்ல நேரம்... ஆஹ்... ரெண்டு இலவச சாப்பாடு கிடைக்கும்."

சம்மதமாய் தலையசைத்தாள் டுபென்ஸ்.

"முதல்ல கார்ட்டர். நாம பறக்கணும்."

வரிசையாய் வீடுகளைக் கொண்ட ஒரு பகுதியாக ஷெல்ட்டான் தளப்பகுதி காட்சி தந்தது. இருவரும், 27ஆம் எண் வீட்டின் அழைப்பு

மணியை அலற விட்டார்கள். மறுநொடியே சுத்தமாய் இருந்த ஒரு வேலைக்காரி கதவருகில் வந்தாள். அவளிடமிருந்து வெளியான அத்தனை பதவிசான தோற்றம் டூபென்ஸை மூழ்கடித்தது. கார்ட்டரைப் பார்க்க வேண்டும் என்ற டாமியின் வேண்டுகோளுக்கு கீழ்த்தளத்திலிருந்த ஒரு சிறு வரவேற்பறைக்கு இவர்கள் அழைத்துப் போகப்பட்டார்கள். அருகிலிருந்த அறைக்கதவு திறக்க சில நொடிகள் தான் பிடித்திருக்க வேண்டும்... உயரமான ஒரு மனிதன், பேரவா கொண்ட முக 'பாவத்துடனும்' அதே சமயம் அயர்வும் தளர்ச்சியும் வெளிப்படும் நடையுடனும் வெளிப்பட்டார்.

"Y.A - வா?'' என்று கேட்டு விட்டு சிரித்தார். தனிப்பட்ட ஈர்ப்பு கொண்டிருந்தது அவருடைய சிரிப்பு. ''உட்காருங்கப்பா. ரெண்டு பேரும்.''

கட்டுப்பட்டனர். அவர் தனக்கான நாற்காலியை இழுத்து டூபென்ஸுக்கு நேராய் வரும்படி போட்டுக் கொண்டு ஊக்கப்படுவது போல் சிரித்தபடி அதில் அமர்ந்தார். அவரது சிரிப்பில் இருந்த ஏதோவொரு தரம், வழக்கமாய் இவளிடம் இருக்கும் தயார் நிலையைக் காணாமல் போகச் செய்தது.

உரையாடலைத் துவக்கும் ஆர்வத்தை அவர் காட்டாததால், டூபென்ஸ், தானாக பேச்சை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

''நாங்க தெரிஞ்சுக்க விரும்பறோம் - அதாவது, எப்படின்னா - ஆங்... ஜானே ஃபின் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரிஞ்சிருந்தா, அதை தயவுகூர்ந்து எங்க கூட பரிமாறிக்க முடியுமா?''

''ஜானே ஃபின்? ஆஹ்...!'' - கார்ட்டர், அவர் கேட்டதையே பிரதிபலிப்ப தாய் தோன்றியது. ''ஓஹ்... இப்ப கேள்வி என்ன தெரியுமா...? *உங்களுக்கு* அவளைப் பற்றி என்ன தெரியும் என்பதுதான்!''

டூபென்ஸ் அப்படியே முன்னுக்கு வளைந்து வந்தாள். ''அது, நாம பேசவுள்ள இந்த விஷயத்துல எவ்வகையிலும் சம்பந்தப்படாதது'னு நினைக்கிறேன்.''

''இல்லே? ஆனா, சம்பந்தமிருக்கு, தெரியுமா...?! உண்மையா இருக்கு..!'' - அவருக்கே உரிய தளர்ந்த முகத்தில் மீண்டும் சிரிப்பினைப் பரவ விட்டு விட்டு, தொடர்ந்தார்: ''மறுபடியும் அதே துவக்க நிலைமைக்குத் தான் நாம வந்திருக்கோம். *உங்களுக்கு ஜானே ஃபின் பற்றி என்ன தெரியும்?''*

டூபென்ஸ் தொடர்ந்து அமைதியாகவே இருப்பதைக் கவனித்த அவர், ''ம்...'' என வற்புறுத்தினார். ''விளம்பரம் செய்திருக்கீங்கன்னா, உங்களுக்கு அவளைப் பற்றி ஏதாவது தெரிஞ்சிருக்கணும்'' - சொல்லி விட்டுக் கொஞ்சமாய் வளைந்து முன்னுக்கு வந்தார். அவரது களைத்திருந்த குரலில்,

தன் வயம் இழுத்து வசியம் பண்ணக் கூடிய வன்மை இப்போது சற்று மிகுந்து தெரிந்தது. ''நீங்க அதை என்கிட்டே சொல்றீங்கன்னு வெச்சுக்குவோம்...''

கார்ட்டரின் குணாதிசயத்தில், அப்படியே எதிரிலிருப்பவரைத் தன்னகப்படுத்தி விடும் ஒரு வகையான வலுவான ஈர்ப்பு தெரிந்தது. அந்தப் படியிலிருந்து பிரயத்தனப்பட்டு தன்னை விடுவித்துக் கொள்ள டூபென்ஸ் முயல்வது, இவள் பின்வரும் வசனத்தைப் பேசிய முறையில் நன்கு புலப்பட்டது; ''எங்களால அது முடியாது... முடியாது தானே, டாமி?''

ஆனால், இவளை ஆச்சரியத்தில் முக்கும்படி, இவளுடைய நண்பன் இவளுக்கு ஆதரவாய் பதில் தரவில்லை. அவனுடைய கண்கள் கார்ட்டரின் மீதே முழுக்கவும் பதிந்திருக்க, அவன் பேசிய வார்த்தைகளின் ஒலியில், வழக்கத்திற்கு மாறான மதிப்பும் மரியாதையும் குறிக்கப்பட்டிருந்தது: ''இந்த விஷயத்துல எங்களுக்குத் தெரிஞ்சிருக்கிற மிகக் கம்மியான தகவல்கள் உங்களுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை, ஸார். இதை நான் அடிச்சு சொல்வேன். இதுதான் நிலைமை. இருந்தாலும், ஸார் - அது என்னனு நீங்க தெரிஞ்சுக்க விரும்பினா, வரவேற்கிறேன்! ஆட்சேபணையில்லை!''

ஆச்சரியம் தாளாது, ''டாமி'' என்று அலறியே விட்டாள் டூபென்ஸ்.

உட்கார்ந்தபடியே தனது நாற்காலியில் ஒரு சுற்று சுற்றினார் கார்ட்டர். இப்போது அவர் கண்கள் கேள்வியைத் தாங்கியிருந்தன. டாமி ஆமோதித்துத் தலையசைத்தான். ''யெஸ், ஸார். உங்களை உடனேயே நான் அடையாளம் கண்டுக்கிட்டேன். பிரான்ஸில் ஒற்றர் இலாகாவில் நானிருந்த போது உங்களைப் பார்த்திருக்கிறேன். நீங்க இந்த அறைக்குள்ளே நுழைஞ்ச வுடனேயே எனக்குத் தெரிஞ்சு போச்சு...''

கார்ட்டர் தன் கைகளைத் தூக்கி, நிறுத்தி விடும்படி அமுக்கினார்.

''எந்தப் பெயரும் வேண்டாம், ப்ளீஸ். நான் இங்கே திரு கார்ட்டர்'னு அறியப்படுகிறேன். இது என் உறவுக்காரனுடைய வீடு. தனிப்பட்ட முறையில், அலுவலகம் சாராத வேல செய்யறதாயிருந்தா வெச்சுக்கோனு என்கிட்டே கொடுத்திருக்கான்... கொஞ்ச காலத்துக்கு. அதிருக்கட்டும். இப்போ'' என்று ஒருவர் மாற்றி மற்றவரைப் பார்த்த அவர், ''கதையை என்னிடம் சொல்லப் போவது யாரு?'' என்று கேட்டார்.

''சுட்டுத் தள்ளு'' என்று டூபென்ஸுக்கு வழிவிட்ட டாமி, ''இது நீ சரடு விடும் நேரம்'' என்றான் சிறு புன்னகையோடு.

பதிலுக்கு புன்னகைத்த கார்ட்டர், ''ம்... ஆரம்பிக்கலாம் பெண்ணே... கொட்டு'' என்றார்.

இருவரது கட்டளைக்கும் மதிப்பு கொடுத்து, முழுக் கதையையும் கொட்ட ஆரம்பித்தாள் டூபென்ஸ், இளஞ்சிங்கங்கள் லிமிடெட் ஆரம்பித்த கட்டத்திலிருந்து.

அவருடைய அயர்ந்து போன தொனி மாறாமல் அமைதியாய் கேட்டபடியிருந்தார் ஏ கார்ட்டர். அவ்வப்போது தனது விரல் நுனியால், பொத்துக் கொண்டு வரும் புன்னகையைத் தடுத்து மறுக்க முயல்வது போல, உதடுகளைப் பிரியாமல் மூடிய வண்ணமிருந்தார் அவர். இவள் முடித்த போது, ஆழ்ந்த முக்கியத்துவத்தோடு ஆமோதித்துத் தலையசைத்துக் கொண்டார்.

''இதுல முக்கியமா எதுவுமில்லே. ஆனா, இது - நிறைய விளக்குது. குறிப்பிட்டுப் பல விஷயங்களை உங்க கதை விளக்குது. இளஞ்சிங்கங்கள்...! மற்றவங்க எங்கெல்லாம் தோல்வியுற்றாங்களோ அதிலெல்லாம், சின்னப் பசங்க நீங்க, வெற்றி காணலாம்...! எனக்கு அதிர்ஷ்டத்துல நம்பிக்கை உண்டு... நிறைய...! அது எப்பவும் வெல்லும்...!''

இப்படிச் சொல்லிவிட்டு சற்றே இடைவேளை தந்தவர், பிறகு தொடர்ந்தார்: ''நல்லது. சொல்வது பிடிக்குதா பாருங்க. நீங்க சாகசம் புரியணும்னு வெறியா கிளம்பியிருக்கீங்க. எந்த வகையில எனக்காக உழைக்க விரும்பறீங்க? எல்லாமே தனிப்பட்ட முறையில இருக்கணும், நினைவிருக் கட்டும். செலவுகள் ஏற்றுக் கொள்ளப்படும், சராசரியான சம்பளம் உண்டு.''

உதடுகள் திறந்துப் போக, கண்களிரண்டும் அப்படியே விரிந்து கொண்டே அகன்றபடியிருக்க, விட்ட மூச்சுக் காற்றை உள்ளுக்கிழுக்க மறந்து அவரைப் பார்த்தபடியே கிடந்தாள் டூபென்ஸ். மீண்டு சுவாசிக்கத் துவங்கிய போது, ''நாங்க என்ன பண்ணனும்?'' என்றாள் நேரடியாய்.

கார்ட்டர் புன்னகைத்தார். சொன்னார்: ''இப்போ என்ன பண்ணிக்கிட்டி ருக் கீங்களோ... ஜஸ்ட் அதை அப்படியே தொடருங்க. *ஜானே ஃபின்னைக் கண்டுபிடிங்க...''*

''இருக்கலாம். ஆனா - ஜானே ஃபின் யாரு?''

ஆழ்ந்த சிந்தனையோடு தலையசைத்துக் காட்டிய கார்ட்டர், ''ம். இதைப் பற்றி நீங்க தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் வந்துடுச்சுனு நினைக்கிறேன்'' என்றார்.

அமர்ந்திருந்த நாற்காலியில் அப்படியே சாய்ந்துக் கொண்டார். தொங்கிய கால்களைப் பெருக்கலாக்கி இணைத்துக் கொண்டார். கைகளின் விரல் நுனிகளை கோர்த்துக் கொண்டு, தனி ஆவர்த்தனம் தொடங்கினார்:

''ரகசிய இலாக்கா பற்றி நீங்க ரொம்ப அறிந்திருக்க மாட்டீங்க. 1915ன் ஆரம்ப நாட்களில் ஒரு வகையான ஆவணத்துக்கு உயிர் கொடுக்கப்பட்டது

என்ற அளவு தெரிஞ்சுக்கிட்டா போதும்; இதுல ஆரம்பிப்போம். அது ஒரு ரகசிய ஒப்பந்தம் - உடன்படிக்கை, எப்படி வேணும்னாலும் நீங்க சொல்லிக்கலாம் - அதன் முன் வடிவம்... அதாவது நகல். அது முடிவு செய்யப்பட்டு பல்வேறு பிரதிநிதிகளும் கையொப்பமிட தயாரானது. அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட ஆவணமிது - இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையே போர் நீடித்துக் கொண்டிருந்த அக்காலத்தில் நடுநிலைமையான நாடா இதுதான் இருந்தது. இதைக் கொண்டு போய் இங்கிலாந்தில் சேர்ப்பதற்காக, ஜாக்கிரதையா தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஸ்பெஷல் தூதுவன் மூலமா இது அனுப்பி வைக்கப்பட்டது. அந்த இளைஞனின் பெயர் டேன்வர்ஸ். இந்த முழு சமாச்சாரமும் அப்பழுக்கற்ற ரகசியமாய் பாதுகாக்கப்பட்டது என்றும் அணுகளவு கூட கசிந்திருக்காது என்றும் தான் நம்பப்பட்டது. இப்படிப்பட்ட நம்பிக்கைகள் வழக்கமா ஏமாற்றப்பட்டுடுது. யாரோ ஒருத்தன் பேசிடறான் - *ரகசியத்தை!*

''டேன்வர்ஸ், இங்கிலாந்துக்கு, *லூசிடானியாவில* பயணமானான். விலைமதிப்பற்ற அந்த ஆவணத்தாள்களை ஒரு வழுவழு பாலிதீன் உறைக்குள் பத்திரப்படுத்திக்கிட்டு, அதை தன்னுடைய உடல் தோலுக்கு அடுத்தபடியா அணிந்துக் கொண்டு போனான். அந்தக் கடல் பிரயாணத்தின் போது தான், கப்பல்களைத் தகர்க்க பதிக்கப்படும் கண்ணி வெடியிலே சிக்கி, வெடித்து நொறுங்கி, லூசிடானியா முழுகிப் போனது. இந்த வன்முறையில காணாமல் போனவங்க பட்டியல்ல ஒரு பெயரா டேன்வர்ஸ் பெயரும் அறிவிக்கப்பட்டது. இதுக்கு சாட்சியா, அவனுடைய உடலும் கடற்கரைக்கு அடித்து வரப்பட்டு... சந்தேகத்துக்கு இடமின்றி அது அவன் தான்னு ஊர்ஜிதப்படுத்தி... ஒதுங்கியது. ஆனால் அந்த வழுவழு பாலிதீன் உறை - *காணவில்லை!*

''அப்போ விளைந்த கேள்விகள்: அது அவன்கிட்டேயிருந்து பறிக்கப்பட்டு விட்டதா? இல்லே, அவனே, அதை, இன்னொருத்தர் கையிருப்புக்கு மாற்றிட்டானா? இரண்டாவது அனுமானம் நடந்திருக்க லாம்னு வது சேர்க்கும் விதமா சில நிகழ்வுகள் இருக்கு. கண்ணி வெடியில கப்பல் பாதிக்கப்பட்ட பிறகு, படகுகளை வரிசையா கப்பலைச் சுற்றி நிறுத்தி பிரயாணிகளைக் காப்பாற்றும் அந்த அவசர நேரத்துல, ஓர் இளைய அமெரிக்க யுவதியாடு டேன்வர்ஸ் பேசிக்கிட்டிருந்தது கவனிக்கப் பட்டிருக்கு. அவகிட்டே டேன்வர்ஸ் எதையும் திணிச்சதை யாரும் பார்க்கலே. ஆனா, அவன் அப்படி செஞ்சிருக்கலாம். அவ - எதையும் பத்திரப்படுத்தும் குணம் இயற்கையாவே அதிகம் உள்ள - ஒரு பெண். அதனால, ஆவணத்தைப் பத்திரமா கடற்கரை வரை கொண்டு போய்

சேர்க்கும் சாத்தியக்கூறு அவ கிட்டே தான் அதிகம்னு டேன்வர்ஸ் நம்பி, அவகிட்டேயே அந்த உறையைத் தந்திருக்கும் சாத்தியங்கள், அதிகமா இருப்பதா தான் எனக்குப்படுது.

''அப்படி தான்னா - அந்தப் பெண் *எங்கே?* அந்தத் தாள்களை வெச்சுக்கிட்டு அவ செஞ்சது *என்ன?* அமெரிக்காவின் அறிவுறுத்தலின் பேரில், பிரயாணம் நெடுங்கிலும், டேன்வர்ஸ், மிக நெருக்கமாக... பிரியாத நிழல் போல கண்காணிக்கப்பட்டிருக்கலாம்னு தெரியுது. அந்தப் பெண், எதிரிகளுக்கு உடந்தையா? இல்லே, அந்தப் பெண்ணும் தீவிரமா பின் தொடரப்பட்டு, அவசியமான அந்த உறை பலவந்தமா பிடுங்கப் பட்டிருக்குமா? பல கேள்விகள்!

''அவளின் சுவடுகளை கண்டுபிடிக்க வேலைகளை முடுக்கிவிட்டோம். இது எதிர்பாராத அளவுக்கு கடினமான ஒன்று என்பது நிரூபணமாச்சு. அவ பேர் ஜானே ஃபின். இந்த பேர் தப்பித்தவர்கள் பட்டியல்ல துல்லியமா இடம்பெற்றது. ஆனா, அந்தப் பொண்ணே, காற்றோடு காற்றா கரைஞ்சுட்ட மாதிரி காணாமப் போயிட்டா. அவளுடைய பரம்பரை போன்ற பூர்வ சரித்திரத்தின் மீதான அத்தனை விசாரணைகளும் துளியும் பிரயோஜனப் படலே. அவ ஓர் அனாதை. குழந்தைகளைப் பராமரிக்கும் ஏதோ ஒரு வேலையில நாட்டின் மேற்கு பகுதியில் இருந்திருக்கா. அவளுடைய பாஸ்போர்ட் பாரீஸ் நகரத்துக்கான பிரயாணத்துக்காக எடுக்கப்பட்டிருக்கு - அங்கே ஒரு மருத்துவமனையில பணியில சேர்வதா ஏற்பாடு. அங்கே வந்து பணியாற்ற விரும்புவதா இவளே முன்வந்து கேட்டிருக்கா... பிறகு சில பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு தேர்வாகியிருக்கா. *லூசிடானியா* விபத்துல இவ தப்பித்து விட்டதா கிடைத்த தகவலால், இந்தப் பொண்ணு ஏன் பணி உத்தரவை ஏற்றுக்கிட்டு வேலைல சேர வரலேனு ஆஸ்பத்திரியில எல்லாரும் ஆச்சரியமாகியிருக்காங்க.

''ஆக, அந்த இளையவளைக் கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன - ஒன்றிலும் பலனில்லை. அவ அயர்லாண்டில் இருக்கும் போது தகவல் கிடைச்சது... ஆனா இங்கிலாந்துக்குள்ளே அவ வந்துட்ட பிறகு, இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது! அந்த நகல் உடன்படிக்கையை வெச்சுக்கிட்டு எவ்வித பலனையும் யாரும் அடைஞ்சுடலே - அப்படி அடைவது படு சுலபம் என்ற போதிலும்! அதனால, அந்த உடன்படிக்கையை, இக்கட்டான விபத்துக் கட்டத்துல, டேன்வர்ஸே சிதைச்சுட்டான் என்கிற முடிவுக்கு வந்தோம். போர் அடுத்த கட்டத்துக்குப் போனது... அரசாங்க மற்றும் தளவாட அதிகாரிகளின் மாற்றம் இடம் பெற்றது... இதுல, உடன்படிக்கை மறக்கப்பட்டது. அது மாற்றியெல்லாம்

எழுதப்படவுமில்லை. அந்த உடன்படிக்கை எங்காவது உயிர்ப்போடு இருக்கலாம் என்று வந்த அத்தனை புரளிகளும் அழுத்தமாய் மறுக்கப்பட்டன. ஜானே ஃபின் கண் காணாம போனது மறக்கப்பட... இந்த முழு சமாச்சாரமும், விடை கண்டுபிடிக்க முடியாத ஆழத்துக்குக் காணாமல் போனது.''

கார்ட்டர் இப்போது நிறுத்த, பொறுமையற்று டூபென்ஸ் கேட்டாள்: ''ஆனா இப்பப் போய் ஏன் அத்தனையும் மறுபடியும் தோண்டப்படணும்? போர் கூட முடிஞ்சாச்சு.''

''ஏன்னா - அந்த ஆவணத் தாள்கள் இன்னும் சிதைக்கப்படலேனு தெரியுது. அதுக்கு, இன்று, முழுக்க முழுக்க புது மற்றும் மிக ஆபத்தான முக்கியத்துவத்தோடு, மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு விடுமோ என்ற பயம் துளிர்த்துள்ளது.''

டூபென்ஸ் முழித்தாள். கார்ட்டர் அப்படித்தான் என தலையசைத்து ஆமோதித்தார்.

''ஐந்து வருடங்களுக்கு முன்னால், அந்த உடன்படிக்கையின் நகல், நம் கையிலிருந்த ஓர் அற்புதமான ஆயுதம்; இன்னிக்கு நமக்கு எதிரான ஆயுதம் அது. நடந்திருப்பது, ராட்சஸ அளவிலான ஒரு முட்டாள் தனம். ஆவணத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகள் மட்டும் பப்ளிக்கா அறிவிக்கப்பட்டா... ஊஃப்... அதுதான் பிரளயம் என்பதற்கான சரியான பொருள்! நான் சொல்வது ஓர் அதிகபட்ச சாத்தியக்கூறு தான்... உடனடியா அப்படி ஒரு போர் வெடித்து விடும்னு நானே கூட நினைக்கலே... ஆனாலும், தற்போதைய நாட்டு நிலைமையில, எந்த ஆட்சியாளரையெல்லாம் நாம தப்பானவங்கனு முத்திரை குத்தி ஓரங்கட்ட முடியாதோ, அவங்களை யெல்லாம், அந்த ஆவண நகல், சுட்டு விரல் நீட்டி, சந்தேகத்துக்கு அப்பாற்பட்டுக் குற்றஞ்சாற்றும். லேபர் கட்சி... அதாவது உழைப்பாளர் கட்சி... இக்கட்சிக்கு 'வாழ்க... வாழ்க'னு கோஷம் போட்டுக்கிட்டு அலையற லட்சக்கணக்கான தொண்டர்களுக்கு, சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பொறுத்துக் கொள்ளவே முடியாத ஒரு விஷயமாக அமையும். இன்னிக்குத் தேதியில, நமது பிரிட்டிஷ் பொருளாதாரம், வியாபாரம் என எல்லாத்துக்கும் இந்த உழைப்பாளர் கட்சி துளியும் ஒப்போறாத ஒரு சாபம் தான்... திறனற்ற ஓர் ஊனமுற்ற அரசாங்கம் இது என்பதே நிஜம்... ஆனாலும், இதெல்லாம், நிஜமாய் காத்திருக்கும் ஆபத்துக்கு முன்னால் ஒன்றும் கிடையாது.''

சற்று நிறுத்தி விட்டு நிதானமாய் சொன்னார்: ''நாட்டின் தற்போதைய அமைதியற்ற போக்குக்குப் பின்னால கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கம்

இருக்குனு நீங்க படிச்சிருக்கணும்... இல்லே கேள்விப்பட்டிருக்கணும்...! உண்டா...?!''

ரூபென்ஸ் ஆமோதிப்பாய்த் தலையசைத்தாள்.

''அதுதான் உண்மை. ஒரு புரட்சியை உண்டுபண்ணி நிலைநிறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கோடு, கம்யூனிஸ்டுகளின் தங்கங்கள் நாட்டுக்குள் கொட்டிக் கொண்டிருக்கு. ஒரு மனிதன்... இவன் நிஜம் என்ன, நிஜப் பெயர் என்ன போன்ற எதுவும் நமக்குத் தெரியாத ஓர் ஆள்... இருட்டுலகத்துல நின்னுக்கிட்டு 'புரட்சி' எனும் இந்த இலக்கை அடைய அயராது உழைச்சுக்கிட்டிருக்கான். கம்யூனிஸ்ட்டுகள், நாட்டின் அமைதியற்ற நடுக்கத்துக்குப் பின்னால் இயங்கிட்டிருக்காங்கன்னா - இவன், அந்த *கம்யூனிஸ்டுகளுக்குப் பின்னால் வலுவா நிக்கறான்.* யார் இவன்? நமக்குத் தெரியாது. ரொம்ப அடக்கமானவன் போல ஒரு பட்டம் தரப்பட்டு அந்தப் பேர்ல தான் இவன் எப்பவுமே பேசப்படறான் - அந்தப் பட்டம் - *'மிஸ்டர் ப்ரௌன்'.* ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் - இன்றைய தேதியில், அதி பயங்கரக் குற்றங்களின் முடிசூடா மகாராஜா - *இவன் தான்.* இதற்காக இயங்கும் கூட்டம் ஒன்றினை அதிசயத்தக்க வகையில் கட்டுப்படுத்தி இயக்கி வருகிறான் இவன். போர்க் காலங்களில் எழுச்சி ஊட்டும் துண்டுப் பிரசுரங்கள் பிரசுரித்து நாட்டுக்குள் விட தேவைப்பட்ட பல கோடி பணம் இவனால் தரப்பட்டது தான். இவனுடைய உளவாளிகள் எங்கும் இருக்கிறார்கள்.

''ஜெர்மானியன் தான் அப்போ?'' என்றான் டாமி, எதிரி நாடான ஜெர்மனியை மனதில் வைத்து,

''மாறாக, அவன் ஓர் ஆங்கிலேயன் - ஆங்கிலேயர் தான்னு நம்ப என்கிட்டே பல காரணங்கள் உண்டு. இவன் ஒரு ஜெர்மன் எதிரி, தெரிஞ்சுக்கோங்க. இவன் எதை அடைய இப்படி உலகின் முக்கிய நாடான நம் நாட்டையே பகடைக் காயாக்குகிறான்னு நமக்குத் தெரியாது - வரலாற்றில் தனியிடம் பிடித்துள்ள ஹிட்லர் போன்றோரை மாதிரி தனியொரு மகா சக்தியாக எழுந்திருக்க விரும்புகிறானோ என்னவோ. இவனுடைய நிஜ குணாதிசயங்கள் பற்றி நம்மிடம் துளி குறிப்பு கிடையாது. இவனுடைய உண்மையான விசுவாசிகளுக்கும் தொண்டர்களுக்கும் கூட இவனுடைய 'நிஜம்' தெரியாது என்பது நமக்குக் கிடைத்துள்ள முக்கிய தகவல். 'மிஸ்டர் ப்ரௌன்' எங்கெல்லாம் தன் கைவரிசையைக் காட்டியுள்ளான்னு நமக்கு செய்தி கிடைச்சு ஒரு நாளோ... அங்கெல்லாம் இவன் ஓர் இரண்டாந்தர மனிதனாய் தான் இயங்கியிருப்பான் - கை ஆள் போலனு வெச்சுக்கோங்களேன். அங்கு நடந்த குற்றங்களுக்குத் தலைமை

Purchased under PPRP
Kolkatta Financial Assistance.
SERIAL No. 423783
District Central Library
Cuddalore - 607 001

பொறுப்பை ஏற்று, வேறு ஏதோ பேரும் முகமும் தெரியாதவன் அப்புறமா அறிக்கை விடுவான். இப்படிப்பட்ட குற்றங்கள்ல, ஒருவன், துளியும் முக்கி[illegible]ன ஒருவன் - ஒரு வேலைக்காரன் அல்லது க்ளார்க் போல[illegible]ங்களேன் - திட்டம் நிறைவேறுகிற வரைக்கும் கவனிக்கப்படாமலே முழுக்க முழுக்கப் பின்னணியில இயங்கியிருக்கிறான் என்பதையும், கழுவும் மீனில் நழுவும் மீனான மிஸ்டர் ப்ரௌன் மற்றொரு முறை அகப்படாமல் தப்பித்து விட்டான் என்பதையும் - பிறகு நாங்க கண்டறிவோம்.''

இப்போது டூபென்ஸ் துள்ளியெழுந்து ''ஓஹ்...'' என்றாள், ''அப்படினா...''

''என்ன, அப்படினா...?''

''திரு விட்டிங்டன் ஆபீஸ் எனக்கு இப்போ ஞாபகத்துக்கு வருது. அந்த காரியதரிசி - அவன் தன்னை ப்ரௌன் அப்படினு சொல்லிக்கிட்டான். அப்படினா... உங்களுக்குத் தோணலே...?''

இதற்கு, கார்ட்டர் சிந்தனை பொதித்து தலையசைத்துக் கொண்டிருந்தார்.

''இருக்கலாம். வாய்ப்பிருக்கு. இதுல நம் ஆவலைத் தூண்டிவிடும் விஷயம் என்னன்னா... எப்போதுமே, இந்தப் பெயர், சம்பவம் நடைபெறும் போது உதிர்க்கப்படுகின்றது என்பது தான்! மகா சாதுர்யம் நிறைந்த ஒருவனின் விநோத இயல்பு! *'கண்டுபிடிக்க முடிகிறதா பார்'* என்று வெளிப்படையாய் விடப்படும் சவால்! ஆங்... நீங்க பார்த்த அவனை விவரிக்க முடியுமா?''

''ப்ச்... நான் அவனைக் கவனிக்கலியே. அசாதாரணமா இல்லே அவன்... ரொம்ப சாதாரணமா இருந்தான்... எல்லோரையும் போல.''

ஏ கார்ட்டர், அவருக்கே உரிய அசதியோடு பிணைந்து மெலிதாய் சிரித்தார். ''இதுதான் வித்தியாசமில்லாம எல்லாரும் ஒரே மாதிரி சொல்லும் மிஸ்டர் ப்ரௌனின் விளக்கம்! அந்த விட்டிங்டன் மனுஷனுக்கு ஒரு தொலைபேசி சங்கதி வந்ததா சொல்லிக்கிட்டு நுழைஞ்சிருப்பானே, அப்படித்தானே? அலுவலகத்துக்கு வெளியில ஏதாவது தொலைபேசியைக் கவனிச்சீங்களா?''

டூபென்ஸ் நினைத்துப் பார்த்தாள். ''ம்ம். நான் கவனிச்சதா தோணலே.''

''இருந்திருக்காது. இதுதான், திருவாளர் ப்ரௌன் தன்னுடைய ஆளுக்கு 'கட்டளை' இடும் விதம். அவன் அங்கு நடந்த முழு உரையாடலையும் நிச்சயமா ஒட்டுக் கேட்டிருக்கான். சொல்லுங்க... இது எப்போ நடந்தது...? விட்டிங்டன் உங்ககிட்டே பணம் கொடுத்து விட்டு மறுநாள் வரும்படி சொன்ன பிறகா?''

டூபென்ஸ் ஒப்புக் கொண்டாள்.

''ஆமாம்... துளி சந்தேகத்துக்கு இடமின்றி ப்ரௌனின் கை தான் இயங்கியிருக்கு!'' சொன்ன கார்ட்டர் சற்று நிறுத்தினார். ''இதுதான்...! புரியுதா...?! நீங்க எதுக்கு எதிரா பள்ளம் நோண்டிக்கிட்டு இருக்கீங்கன்னு விளங்குதா? இன்றைய தேதியின்... மிக நுணுக்கமான திட்டமிடல் நிறைந்த ஒரு சர்வதேச குற்றவாளிக்கு எதிரா!'' என்று விட்டு அனுபவித்து குறிப்பிட்டார்: ''எனக்கென்னவோ இது பிடிக்கலேம்மா! ரெண்டு பேரையும் சொல்றேன்... நீங்க சின்னவங்க. வாழ வேண்டியவங்க. உங்களுக்கு எதுவும் விபரீதமா நடப்பதை நான் பார்க்க விரும்பலே.''

''அப்படி எதுவும் நடக்காது'' - நிமிர்ந்த பார்வையோடு நம்பிக்கை தந்தாள் டூபென்ஸ்.

''நான் இவளைக் கவனிச்சுக்கிறேன், ஸார்'' என்றான் டாமி.

''நானும் உன்னைக் கவனிச்சுப்பேன்டா'' என்று ஆண்மை தைரியம் மிகுந்து பதில் தந்தாள் டூபென்ஸ்.

''அப்போ ஒருத்தருக்கொருத்தர் பார்த்துக்குங்க'' என்ற கார்ட்டர் புன்னகைத்தபடி. தொடர்ந்தார்:

''பேசிக்கிட்டிருந்த விஷயத்துக்குத் திரும்புவோம். நாம இதுவரை ஆழமா தோண்டி கண்டெடுக்காத புதையலான அந்த ஆவண நகல்ல, ஏதோ மர்மமிருக்கு. விளக்கறேன், கவனியுங்க. அதைக் காரணம் காட்டி நாம மிரட்டப்பட்டிருக்கோம் - நேரடியாகவும், நிபந்தனைகள் போட்டும்...! புரட்சிக்காரக் கும்பல், அவங்க கையில தான் அது இருக்குனு மேடை போட்டு அறிவிக்காம நமக்குப் புரிய வெச்சுட்டாங்க. சரியான சமயம் வாய்க்கும் போது அதை அப்படியே பொதுப்படையா வெளியிடுவோம் என்பதையும் வெளிப்படையாக்கிட்டாங்க. இது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்துல, அந்த உடன்படிக்கை சொல்லும் நிபந்தனைகளையும் அது விட்டுத்தரும் பலாபலன்களில் பலவற்றையும் அவங்க தப்புத் தப்பா அர்த்தப்படுத்திக்கிட்டு இருக்காங்க - இதை நாம முக்கியமா கவனிக்கணும்! அரசாங்கம், அவனுங்க சும்மா வீறாப்பு காட்டாறாங்க எனும் நிலைப்பாட்டை எடுத்திருக்கு. சரியோ தப்போ நமக்குத் தெரியாது... எல்லா மிரட்டலையும் மறுதலித்து மறுப்பதையே தன் கொள்கையா கொண்டிருக்கு, அரசாங்கம். இளைஞர் களே...! வரும் பயமுறுத்தல்கள் நிஜம்னு நாம நம்ப - சூசகத் தகவல்கள் இருக்கு... சங்கேதக் குறிப்புகளும் இருக்கு...! பல ஜாம்பவான்களைக் குற்றம் சுமத்தி சுட்டிக் காட்டும் ஏதோ ஒரு தஸ்தாவேஜுவை அவங்க கையப்படுத்தி விட்டது போலத்தான் நிலைமை போகுது. இதன் நம்பகத்தன்மை பற்றி எனக்கு நிச்சயமா விளங்கலே,

இருந்தாலும், அதை அவங்களால படிக்க முடியலே... ஏன்னா, அது சங்கேத, ரகசிய, புரியாத பாஷையில வடிவமைக்கப்பட்டிருக்கு. ஸீக்ரட் கோட். நாம தேடிக்கிட்டிருக்கிற ஆவணம் எந்த ரகசிய மொழியிலும் அமைக்கப்படலே என்பது நமக்கே நல்லா தெரியும். ஆக, இது அபாயம். நான் சொல்றேன் பசங்களா - இதுல என்னவோ இருக்கு! ஆமாம்...! நமக்குத் தெரிஞ்ச வரைக்கும், ஜானே ஃபின் இறந்துகூடப் போயிருக்கலாம் - ஆனா எனக்கு அப்படிப்படலே. இப்ப விசித்திரமான விஷயம் என்னன்னா... *அவங்க அந்தப் பெண்ணைப் பற்றிய தகவல்களை நம் மூலமா பெற முயற்சிக்கிறாங்க!* இதுதான்!''

''என்ன?''

''ஆமாம். ஓரிரு சமாச்சாரங்கள் திடுதிடுப்புனு முளைச்சிருக்கு. நீங்க சொன்ன அந்தக் குட்டிக்கதை, டூபென்ஸ், என் இந்த ஊகத்தை ஊர்ஜிதமாக்குது. அவங்களுக்கு, நாம ஜானே ஃபின்னைத் தேடிக் குறி வெச்சிருப்பது தெரிஞ்சாச்சு. இப்ப என்ன செய்வாங்க - அவங்களே ஒரு ஜானே ஃபின்னைக் கொண்டு போய் நிறுத்துவாங்க... பாரீஸ்ல ஓர் உணவகத்துலனு வெச்சுக்கங்களே...!''

மூச்சடைத்துப் போனது டூபென்ஸுக்கு. மெலிதான புன்னகையோடு தொடர்ந்தார் கார்ட்டர்: ''ஜானே என்ன மாதிரி அமைப்பு என்பது இங்கே யாருக்கும் ஒரு துளிகூட தெரியாது. ரொம்ப வசதி! இந்த இறந்தகாலக் கதையை நல்லா அலங்கரிச்சு ஒரு துருப்புச் சீட்டாக் கையிலெடுத்துக்கிட்டு கிளம்பிடுவா அவ. நம்ம கிட்டேயிருந்து எத்தனை சமாச்சாரங்களைக் கடைய முடியுமோ அத்தனையையும் கடைஞ்சுப் பிழிந்தெடுத்துக் கொள்ள வேண்டியது தான் அவ வேலையே. புரியுதா, திட்டம்?''

''அப்படினா - நீங்க - என்ன - சொல்ல - வரீங்க?'' என்று மூச்சுக் காற்றுக்கு அல்லாடியபடி, ''ஜானே ஃபின்னாகத்தான் என்னை அவங்க பாரீஸுக்கு அனுப்ப இருந்தாங்களா?'' என்றாள், நடப்பது என்ன என்று உள்ளவாங்கிக் கொள்ள முடியாதவளாய்!

இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்ச களைப்போடு சிரித்தார் கார்ட்டர்:

''எதிர்பாராம இருவருக்குள் ஏற்படும் ஒரே மாதிரியான சிந்தனைகளை - நம்பறவன் நான்...!''

அத்தியாயம் - 5

திரு ஜூலியஸ்

தன் நிலையை மீட்டுக் கொண்டு ஸ்திரமான டூபென்ஸ், ''ஓஹ்... அப்படினா, என்னைக் குறிவெச்சு அவனுங்க ஏற்கனவே போட்டிருந்த திட்டம் போல தோணுதே'' என்றாள்.

கார்ட்டர் ஒப்புதலாய் தலையசைத்தார். ''நான் மூடநம்பிக்கைகளில், நம்பிக்கையுள்ளவன் - அதிர்ஷ்டம் இத்யாதி இத்யாதி! இந்த விஷயத்தோட உங்களைக் கலந்துப் போடணும்னு விதி முடிவு செஞ்சா - யார் வெல்வது?''

கேலியாய், ''ப்ச்... அது கிடக்கட்டும்'' என்று இடைபுகுந்தான் டாமி. ''அந்தப் பெயரை சொன்ன கணத்திலேயே விட்டிங்டன் தலைதெறிக்க ஆயிட்டார் என்பதுல எனக்கு சந்தேகமே கிடையாது. நானே அவர் நிலைமையில இருந்திருந்தாலும் அப்படித்தான் ஆகியிருப்பேன். ஓ.கே. ஸார்... உங்களுடைய பொன்னான நேரத்துல அதிகபட்ச பகுதியை நாங்க எடுத்துட்டோம். நாங்க கிளம்புவதுக்கு முன்னாடி ஏதாவது டிப்ஸ் தர நீங்க விரும்பறீங்களா?''

''அப்படி எதுவும் இருப்பதா படலே. புது துப்பறியும் நிபுணர்களே... வழக்கப்பட்ட முறையில துப்புத் தேட முயன்றதெல்லாம் தோல்வியைத் தழுவியிருக்கு. நல்ல திறந்த மனதுடனும் புது உத்திகளோடும் இவ் விஷயத்தை எதிர்கொள்ளுங்க. அதுவும் தோல்வியாயிட்டா மனமுடைஞ் சுடாதீங்க.''

விளங்காததால், டூபென்ஸின் முகம் கடுகடுப்பானது.

கார்ட்டர் சற்று விரிவாக விளக்கினார்: ''விட்டிங்டனை நீங்க சந்திச்சுப் பேசிய போது அவங்களுக்கு முன்னாடி கால அவகாசம் இருந்தது. புது வருடத்தை ஒட்டி பெரும் இராணுவப் புரட்சியே வெடிச்சிருக்கும் என்கிற அளவுக்கு என்னிடம் தகவல்கள் இருக்கு. ஆனா அரசாங்கமும் தூங்கலே... புரட்சி ஸ்டிரைக் போன்ற பயமுறுத்தல்களையெல்லாம் பிரமாதமா எதிர்கொள்ள, ஆழ்ந்து சிந்தித்து, சட்டமன்றத்துல சட்டம் இயற்றி, அதன்

மூலமா ஒரு கை பார்க்கலாம்னு இருக்கு. இதுவரைக்கும் நடைமுறை படுத்தலைனாலும்... இப்போ உடனடியா இயங்கி, நிலைமையைத் துல்லியமா தன் கட்டுக்குள்ளே கொண்டு வந்துடும். இதான் நடக்கப் போகுது... பாருங்க. அவனுங்க போட்ட திட்டம் கனிவதற்கான கால அவகாசம் குறையக் குறைய, இவங்க இங்கே சீரிய முறையில திட்டமிட்டு வெற்றிபெற வழி கிடைச்சுடுது. ஆனா, அப்படிப்பட்ட கால அவகாசம் உங்க முன்னாடி இல்லை என்று மட்டும் எச்சரிக்க விரும்பறேன். அப்படியே தோத்துட்டாலும், கை விட்டுடாதீங்க. கையிலிருப்பது அத்தனை சுலபமான பிரச்னையும் கிடையாது. அவ்ளோதான்.''

டூபென்ஸ் எழுந்து கொண்டாள். ''நம்முடைய கூட்டணியைப் பொறுத்த வரைக்கும், மிஸ்டர் கார்ட்டர், உங்ககிட்டேயிருந்து நாங்க எதையெல்லாம் எதிர்பார்க்கலாம்?''

''நியாயமாய் கேட்கப்படும் முன் பணம், எந்த நேரத்திலும் தரவல்ல விளாவாரியான விவரங்கள்... அப்புறம், முக்கியமா, வெளியே அடையாளம் தெரிந்துவிடக் கூடாத தேவை.''

''???''

''என்ன சொல்ல வரேன்னா, நீங்க போலீஸ்கிட்டே மாட்டிக் கொள்ளும் நிலமை ஏற்பட்டா, அதிலிருந்து மீள என்னால அதிகாரப்பூர்வமா உதவவே முடியாது. அது முழுக்கவும் நீங்க மட்டுமே சார்ந்த பிரச்னையா தானிருக்கணும்.''

உணர்ந்தவளாய் தலையசைத்தாள் டூபென்ஸ். ''எனக்கு நல்லா விளங்குது. யோசிக்க நேரம் கிடைக்கும் போது என்னவெல்லாம் எனக்கு உங்களிடமிருந்து தேவை என்பது பற்றிய பட்டியலைத் தயார் பண்ணிடறேன். அடுத்து - பணம் பற்றி -''

''சொல்லுங்க டூபென்ஸ். எவ்ளோ வேணும்னு நீங்களே கேட்க விரும்பறீங்களா?''

''குறிப்பிட்டு கேட்கத் தெரியலே. மேற்கொண்டு நகர எங்ககிட்டே இப்போதைக்கு ஏகமா இருக்கு... அதையும் மீறி தேவைப்பட்டா...''

''அது உங்களுக்காகக் காத்திருக்கும்.''

''நீங்க அரசாங்கம் சார்ந்தவரானு எனக்குத் தெரியலே. ஆனா இப்ப நான் சொல்வது கொஞ்சம் கரடுமுரடாத் தோணினாலும், தப்பா எடுத்துக்காதீங்க. ஒரு நீல நிறப்பை. அதைக் கொண்டு போய் கவுண்ட்டர்ல கொடுத்து, காத்திருந்து, பிறகு ஏதாவது வேறு நிற தாளை நிரப்பச் சொன்னா அதையும் செஞ்சு, அதை இன்னொரு கவுண்ட்டர்ல தந்து... எல்லாம் இந்த அரசாங்கம்

வங்கிகளுக்கு இட்டுள்ள முறைகள்! நீங்க கொடுக்கிற காசோலையை இத்தனை சிரமங்கள் பட்டு வங்கியில் போட்டாலும்... அது பணமாக ஒரு வாரம்! பணம் அவசரமாத் தேவைப்பட்டு உங்க முன்னாடி வந்து நிற்கும் போது, இத்தனை கால விரயம் தகுமா?''

ஏ கார்ட்டர் கலகலவென ஓசையெழவே சிரித்து விட்டார். ''அந்தக் கவலையே வேண்டாம், மிஸ். பணம் வேணும்னு தனிப்பட்ட முறையில தெரிவியுங்க... பணம், அடுத்த தபால்ல உங்க முகவரியில இருக்கும், நோட்டு களா! ஆங்... சம்பளமாக, வருடத்துக்கு முன்னூறுனு முடிச்சுக்கலாமா? அதே அளவு பணம், திரு தாமஸ் ஃபோர்டுக்கும்.''

டூபென்ஸ் அப்படியே அவர் மீது கட்டிக் கொண்டு விழுந்து விடுபவள் போல ஆனாள். ''எத்தனை அழகு! நீங்க தயாளர்'ங்க. எனக்கும் பணத்து மேல அவா உண்டு! செலவுக்கணக்கெல்லாம் அத்தனை அழகா எழுதுவேன். என்ன செலவு... எத்தனை வரவு... வலது கோடியில மிச்சம்... கீழே சிகப்புக் கோடு போட்டு முழு கணக்கின் கதை.''

''நல்ல வழக்கம். சரி. இருவருக்கும் நல்வாழ்த்துக்கள்... மற்றும், குட் பை.''

வெளியே போய்க் கொண்டிருக்கும் போது, ''ஏய் கிழவா!'' என டாமியை அழைத்த டூபென்ஸ், ''அவரை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. உனக்கு?'' என்று கேட்டாள். ''அவரைப் பார்த்தா ஏகமா களைச்சு அயர்ந்து தொங்கிப் போனவரா தெரிஞ்சாலும், அவருக்குள்ளே, இரும்பான குணாதிசயம் இருக்கு - விடாம கவனிப்பது... கண் பொத்தி பாம்பாக சட்சட்டென குறி வைத்துப் பாய்வது...'' இப்படிச் சொல்லிவிட்டு, 'ஒஹ், டாமி'' என்றவள், சொன்னாள்: ''கிள்ளு. என்னை, கிள்ளு கிழவா கிள்ளு. நடந்தது நிஜமானு நம்ப முடியலேடா!''

இதுதான் வாய்ப்பு என்று நறுக்கென்று கிள்ளினான் அவன்.

''ஓவ்...! போதும்டா, டாக்...! ஆமாம். நாம கனவு காணலே. நமக்கு ஒரு வேலை கிடைச்சிடுச்சு...!''

''அதுவும் எப்படியாப்பட்ட வேலை இது! ஏய் டூபென்ஸ்... நம்முடைய கூட்டு உடன்படிக்கை வேலை செய்ய ஆரம்பிச்சுடுச்சு.''

சிறு சிந்தனையோடு, ''நான் நினைச்சதை விட ரொம்பவும் மரியாதைக்குரிய வேலையா கிடைச்சிருக்கு'' என்றாள் டூபென்ஸ்.

''அதிர்ஷ்டவசமா, உன்னைப் போல துப்பறியும் பைத்தியமெல்லாம் எனக்குக் கிடையாது. அதனால - பசிக்குதுப்பா! மணி என்ன? லஞ்சுக்குப் போகலாம். ஆனா ஒஹ்...''

இப்போது ஒரே கருத்து இவருடைய மூளைக்குள்ளும் மணி அடித்தது. பேசிக் கொண்டிருந்த டாமி தான் முதலில் அதைச் சொன்னது: ''ஜூலியஸ்...!''

''யெஸ்'' என்றாள் டூபென்ஸ். ''இந்த ஆள் கிட்டேயிருந்தும் கடிதம் வந்திருப்பதைப் பற்றி நாம கார்ட்டர் கிட்டே சொல்லவேயில்லையே...''

''அதுல அதிகம் சொல்ல ஒண்ணும் கிடையாது. இவரை நேர்ல பார்க்கிற வரைக்கும் என்னத்தை சொல்வே? ம், கிளம்பு. ஒரு டாக்ஸியைப் பிடிப்போம்.''

''விட்டேன்னா தெரியுமா! இப்ப யாருப்பா ஊதாரியா செலவழிப்பது...?!''

''இப்ப தடையே கிடையாது கிழவி! அனைத்து செலவுகளும் நம் மதிப்புக்குரிய வாடிக்கையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்!''

ஜூலியஸ் பற்றி விசாரித்ததுமே உடனடியாய் அவருடைய ஜாகைக்கு இருவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். காவக்காரப் பையனின் அனுமதி குரலுக்கு ''ம்... வரலாம்'' என்று உள்ளிருந்து ஒரு குரல் சப்தமாய் வர, இருவருக்கும் வழி விட்டு ஒதுங்கிக் கொண்டு நின்றான், பையன்.

டாமியும் டூபென்ஸும், ஜூலியஸ் பற்றி படம் பிடித்து வைத்திருந்த ஊகத்துக்கு மிகவும் அப்பாற்பட்டு இருந்தார் அவர். முப்பத்தைந்து வயதிருக்கலாம் என முடிவெடுத்தாள் இவள். சராசரி உயரம்... அவருடைய அகன்ற முகவாய்க்கு இடம் தரும் வகையில் சதுரமாய் அமைந்திருந்த முகம்... சண்டைக்குத் தயார் என அறிவித்தபடி இருந்தாலும் மனோஹரத்தைப் பிரதிபலித்த முகபாவம். நுனி நாக்கு அமெரிக்க ஆங்கிலம் அல்லாது, ஆங்கிலேய மண்ணான இங்கிலாந்தின் சரியான ஆங்கிலமே பேசினாலும், இவரை முதலில் பார்க்கும் எவரும், தவறாது இவரை ஓர் அமெரிக்கர் என்று எடைபோட்டு விடலாம்...!

''என் கடுதாசி கிடைச்சுதா?'' என்று கேட்டவர், ''உட்காருங்க. உட்கார்ந்து, என் அத்தைப் பொண்ணு பற்றி உங்களுக்கு என்னவெல்லாம் தகவல்கள் தெரியுமோ அத்தனையையும் ஒண்ணு விடாம உடனடியா கொட்டுங்க'' என்றார்!

''அத்தைப் பொண்ணா?''

''நிச்சயமா. ஜானே ஃபின்!''

''அவங்க உங்க சொந்தமா?''

''என் அப்பாவும் அவ அம்மாவும் அண்ணன் தங்கை'' என்று தீவிர கவனம் வைத்து விளக்கினார் திரு ஜூலியஸ்!

''ஓஹ்...'' என ஓர் அலறலாய் குறிப்பிட்ட டூபென்ஸ், ''அப்போ, அவங்க எங்கேயிருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியும்...?'' என்று கேட்டாள்.

''தெரியாது'' என்ற ஜூலியஸ் தன்னுடைய முஷ்டியை மேஜையில் வேகமாய் இறக்கி அடித்துப் பெரும் ஓசையை உண்டு பண்ணினார். ''அவளைப் பற்றி தகவல் வேணும்.''

''நாங்க விளம்பரப்படுத்தியதே, தகவல்களைப் பெற. கொடுக்க அல்ல'' என்றாள் டூபென்ஸ், கறாராய்.

''அது புரிஞ்சுது. ஆனா, அவளுடைய கடந்த கால வரலாற்றைப் பற்றி தான் நீங்க தேடிக்கிட்டு இருப்பதாகவும், அவளுடைய தற்போதைய இருப்பு உங்களுக்குத் தெரியும்'னும் - நான் நினைச்சேன்.''

''இருக்கலாம்...'' என பாதுகாப்பாய் பேசிய டூபென்ஸ், ''இருந்தாலும், அவங்களுடைய கடந்தக் காலத்தைப் பற்றி உங்க மூலமா தெரிஞ்சுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை'' என்று ஒரு போடும் போட்டாள்!

ஆனால், ஜூலியஸ், திடீரென்று சந்தேகங்கொள்வதாய்ப் பட்டது. ''இதோ பாருங்க'' என்று அறிவிப்பது போல பேசினார்: ''இது மற்ற நாடு கிடையாது. ஓகே...?! இத்தனை பணம் தந்தா தான் விடுவிடுப்பேன்னு மிரட்றது... மறுத்தா காலையோ கையையோ வெட்டுவேன்னு கத்தறது... இதெல்லாம் ஒண்ணும் நடக்காது! இது இங்லாண்ட்... சரியா! இதுபோன்ற கோமாளி எண்ணமிருந்தா அதையெல்லாம் தூர வையுங்க...! இல்லே, ஒரே ஒரு விசில்... பக்கத்துலே பிக்கா - டில்லியில் தான் தலைமைக் காவல் அலுவலகம இருக்கு. ஓடி வந்துடும்.''

டாமி விளக்க முனைந்தான்: ''நாங்க உங்க அத்தைப் பொண்ணைக் கடத்தலைய்யா...! மாறாக, அவளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில இறங்கியிருக்கோம். இதை செய்ய நியமிக்கப்பட்டவங்க நாங்க.''

குழப்பத்தில் சூழ்ந்திருந்த ஜூலியஸ், தனது நாற்காலியில் வாகாக சாய்ந்து அமர்ந்து கொண்டு, ''புரியும்படியா வெளிச்சம் போட்டு காட்டுங்க...!'' என்றார். ''விளக்குங்க.''

இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட டாமி, ஜானே ஃபின் காணாமல் போயுள்ளார் எனும் விஷயத்தை விளாவாரியாய் இல்லாமல் ஜாக்கிரதை யாய் சொல்லிவிட்டு, அவளுக்கே தெரியாமல் அரசியல் சதுரங்கத்துக்குள் விழுந்திருக்கும் வாய்ப்புகள் உள்ளதாய் முடித்தான். டூபென்ஸ் பக்கம் சுட்டிக்காட்டியபடி, தாங்களிவரும் 'தனியார் துப்பறியும் அதிகாரிகள்'' என்று அழைத்துக் கொண்ட டாமி, காணாமல் போயுள்ள ஜானேயை அடைய அமைக்கப்பட்டிருக்கும் சிறு படை என்றும் வர்ணித்துக் கொண்டான்! ஆகையால் இது சம்பந்தமாய் எந்த ஒரு விவரத்தையும் ஜூலியஸ் தரும் பட்சத்தில் அது குறித்து அதிக சந்தோஷம் கொள்வோம் என்று வேறு கூட்டிக் கொண்டான்.

இதற்கு அந்த மனுஷன் ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டான்! ''அப்படிச் செய்வது என் கடமையும் கூட!'' என்றான்! ''அவசரப்பட்டு விட்டேன். ஆனா லண்டன் எனக்கு பிரசித்தி கிடையாது. நியூயார்க் தான்

எனக்கு அத்துப்படி. உங்க கேள்விகளைக் கணையாக்குங்க... நான் பதில் தரேன்!''

இது, சில கணங்களுக்கு 'இளஞ்சிங்கங்கள் லிமிடெட்' எனும் படையினை உணர்வற்று ஆக்கியது. ஆனாலும், டூபென்ஸ், உடனே மீண்டு எழுந்து, கற்பனைத் துப்பறியும் கதைகள் தந்த தைரியத்தின் அடிப்படையில், தைரியமாய் விசாரணைக்குள் நுழைந்தாள்!

''ஏமாற்றப்பட்ட அவரை - அதாவது உங்களுடைய அத்தைப் பெண்ணை - நீங்க கடைசியா பார்த்தது எப்போது?''

''அவளை நான் பார்த்ததே கிடையாது'' என்றார் ஜூலியஸ்.

இருப்பதாய் காட்டிக் கொண்ட அத்தனை தைரியமும் பொடிப் பொடியாக, ''என்னது?'' என்று அடித்துக் கேட்டாள் டூபென்ஸ். கூடவே, டாமியும்!

டாமி பக்கம் திரும்பிய ஜூலியஸ், ''பார்த்தது கிடையாது, ஸார்'' என்றார் தீவிரமாய்! தொடர்ந்தார்: ''நான் முதல்லயே சொன்னது மாதிரி, என் அப்பாவும் அவ அம்மாவும் அண்ணன் தங்கைங்க - உங்களை மாதிரி'' - இவர்கள் பற்றி இப்படி ஓர் உறவுமுறை அவருக்குள் முடிவாகியிருப்பதை டாமி திருத்தவில்லை! - ''ஆனா அவங்க ரெண்டு பேரும் எப்போதும் ஒத்துப்போனது கிடையாது. என் அத்தை ஆமோஸ் ஃபின்னைக் கலியாணம் பண்ணிக்க ஸ்திரமான போது அப்பா கோபத்தின் உச்சிக்கே போனார். ஆமோஸ் ஓர் ஏழை ஸ்கூல் டீச்சர் - எங்கேயோ நாட்டின் மேற்கு திசை மூலையிலே வேலை. தன் இறுதிக் காலத்தில் சொத்து பற்றி முடிவெடுக்கும் போது, ஒரு நயாபைசா விட்டு வைக்க மாட்டேன்னு எகிறினார் அப்பா. அத்தனையும் செலவழிச்சே தீர்த்துடுவேன்னு கத்தினார்... அப்படியே செஞ்சிடுவார் போலவும் இருந்தது. இதன் முடிவு... அத்தைப் புறப்பட்டு மேற்கு திசைக்குப் பயணமானாங்க... பிறகு அவங்களைப் பற்றி எதுவுமே நாங்கக் கேள்விப்படலே.

''சொன்னபடியே, அத்தனையையும், வயசான என்னோட அப்பா செலவழிச்சே *தீர்த்தார்.* என்னெய் பிஸினஸ், ஸ்டீல் வியாபாரம், சாலை மற்றும் தண்டவாளம் போடும் வேலையில முதலீடு, இப்படி!'' என்று சற்று அமைதியான ஜூலியஸ் பின் தொடரலானார்: ''அப்புறம் இறந்துப் போனார் - போன வருஷம் - இதனால அத்தனை டாலர்களும் எனக்கு வந்தன. என் மனசாட்சி சுறுசுறுப்பானது. என்னைத் தூங்க விடாம தட்டித் தட்டிக் கேட்டது: 'மேற்கு எல்லைக்கு ஓடிப் போன உன் அத்தை நிலை என்ன?' இந்தக் கேள்வி என்னைத் துளைக்க ஆரம்பிச்சது. ஆமோஸ் ஃபின் ஒரு வீண். அவனால

எதுவும் பண்ண முடியாது... சொத்து சேர்க்க முடியாது. திறமையற்ற ஏழை. இதற்கு ஒரு தீர்வு காண ஒருத்தனை நியமிச்சு அத்தையைத் தேடி வேட்டையாட அனுப்பினேன். விடை: அத்தை இறந்துட்டாங்க - இங்கே ஆமோஸூம் மரணம் - ஆனா அவங்களுக்குப் பிறந்த ஒரு பெண் தனியா விடப்பட்டிருக்கா... அவ, ஜானே... அவளும் பாரீஸ் போகும் கடல் பிரயாணத்தின் போது, *லூஸிடானியா* கப்பல் கண்ணி வெடிக்குள் சிக்கியதில் அகப்பட்டுக் கொண்டாள். இந்த விபத்திலிருந்து அவ காப்பாற்றப் பட்டிருக்கா... ஆனா பிறகு அவளைப் பற்றி எந்தத் தகவலும் இங்கே இருப்பவங்களுக்குக் கிடைக்கலே. இத்தனை சமாச்சாரங்க தெரிய வந்தன. இவனுங்களும் இங்கே விஷயத்தைக் கையிலெடுத்துக்கிட்டு விறுவிறுனு முன்னேறலே. ஸ்காட்லாண்டு போலீசுக்குப் போனேன்... அனுகூலமா உதவினாங்க... விசாரணைகளை உடனே துரிதப்படுத்தறோம்னு சொன்னாங்க... இன்னிக்குக் காலையில ஓர் ஆளை அனுப்பி ஜானேவுடைய போட்டோவை வாங்கிக் கொள்கிற அளவுக்கு வேகமாக இயங்கறாங்க. நாளைக்கு பாரீஸ் போறேன்... அரசும் போலீஸ் அதிகாரிகளும் எது வரைக்கும் முன்னேறியிருக்காங்கன்னு தெரிஞ்சுக்க. திரும்பத் திரும்ப போய் நச்சரிச்சா தான் அவங்களும் சுறுசுறுப்பா இயங்குவாங்க என்பது என் ஊகம்!''

இதுகுறித்து இயங்கியுள்ள ஜூலியஸின் அசராத சக்திக்கு, ஒரு நமஸ்காரம் வைத்தனர் 'இளஞ்சிங்கங்கள்'.

''ஆனா, இப்போ சொல்லுங்க'' என்று முடிவுரையில் இறங்கினார் அவர்: ''எதையாவது எதிர்பார்த்தா அவளை நீங்க தேடறீங்க...ம்? கோர்ட்டின் ஆணை... இப்படி ஏதாவது? உண்மைக்கும் நேர்மைக்கும் போராடும் சுதந்திரமான ஓர் அமெரிக்கப் பெண்ணுக்குப் போர்க் காலத்தில் உங்க பிரிட்டிஷ் அரசாங்கம் போடும் கெடுபிடிகள் - வெறுப்பூட்டும்! இவற்றி லிருந்து வெளியேறி இயங்கவே அவள் நினைப்பாள்! கெடுபிடிகள் உங்க நாட்டுல அதிகம் நடைமுறையில இருந்து, அதனால தான் அவ தலைகாட்டாம இயங்கறாள்'னா... என்னால தனியாளா அவளை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? ஊஃப்...!''

டூபென்ஸ் மறுபடியும் அவருக்கு உத்தரவாதம் தந்தாள்: ''அதுதான் சரி. அப்போ நாம இணைந்தே செயல்படுவோம். லஞ்ச் எடுத்தாச்சா? இங்கேயே சாப்பிடலாமா... இல்லே ரெஸ்டாரண்ட்...?''

கேட்ட டூபென்ஸ், இரண்டாவதையே விரும்ப, அதற்கு சம்மதித்தார் ஜூலியஸ்.

இப்போது, காவக்காரப் பையனால், ஒரு முகவரி அட்டை கொண்டு வந்து ஜூலியஸிடம் நீட்டப்பட்டது. அதை அவர் படித்தார்:

''இன்ஸ்பெக்டர் ஜேப், ஸி ஐ டி, ஸ்காட்லாண்ட் காவல்துறை. ஒஹ்...! இப்ப வேறோர் ஆள். முதல்ல வந்த போலீஸ் கிட்டே சொல்லாத எதை இவன் கிட்டே நான் சொல்லிடப் போறேன்...?! அந்தப் புகைப்படத்தை அதுக்குள்ளே தொலைச்சிருக்க மாட்டாங்கன்னு நினைக்கிறேன். நான் கொடுத்தப் புகைப்படத்தை எடுத்தவனுடைய ஸ்டுடியோவில குண்டு போட்டாச்சு... அத்தனையும் தூள்... ஒரு நெகடிவ் கூட கிடைக்காது... இது ஒண்ணு தான் சாட்சிக்குக் கையிலிருந்த ஒரே ஒரு பிரதி. இதைக்கூட, அங்கிருந்தக் கல்லூரியின் பிரின்ஸிபால் கிட்டேயிருந்து தேடித் துருவி வாங்கி வந்தேன்.''

ஒரு விளக்கயியலா அச்சம், டூபென்ஸை அலையாய் அடித்தது.

''உ...ஃ.... உங்களுக்கு இன்னிக்குக் காலையில வந்து போட்டோவை வாங்கிப் போனவனுடைய பெயர், நி... நி... நினைவில்லே?'' என்று கதறியே விட்டாள்.

''ம். நினைவிருக்கு. அடடா! உடனே நினைவுக்கு வராது போலிருக்கே! ஒரு நொடி, ஒரு நொடி! அவன் கொடுத்த முகவரி அட்டையில இருந்ததே! அதெங்கே போச்சு! ஆங்... எனக்குத் தெரியும்! *இன்ஸ்பெக்டர் ப்ரௌன்!* புரிஞ்சுக்க முடியாத பயலாத் தெரிஞ்சான், அவன்!''

அத்தியாயம் - 6

ஒரு திட்டம் உருவானது

இப்போது ஸ்காட்லாண்ட் காவல்துறையில் இன்ஸ்பெக்டர் ப்ரௌன் என்ற பெயர் தாங்கி ஒருவரும் கிடையாது என்று மட்டும் சொன்னாலே போதும். வேறு விளக்கங்கள் ஏன்? ஜானே ஃபின்னைத் துப்புத் துலக்க அதிமுக்கிய உதவிகரமாய் இருந்திருக்கக் கூடிய அவரின் புகைப்படம், திரும்பக் கிடைக்கவே கிடைக்காத அளவுக்குக் காணாமல் போய் விட்டது. இன்னொரு முறையும், திரு.ப்ரௌன், முழுக்கமாய் வென்றுள்ளான்.

இந்தப் பின்னடைவின் உடனடி விளைவாய், ஜூலியஸூக்கும் 'உளவுத்துறை ஜாம்பவான்கள்' போன்ற நடிப்பில் அவரது கண்களைக் கட்டி ஆடி வந்த இளஞ்சிங்கங்கள் லிமிடெட்டுக்கும் இடையே நிலவியிருந்த பாதுகாப்புத் தடுப்புச் சுவர் தவிடு பொடியாய் நொறுங்கிச் சாய்ந்தது! அந்த இளைய அமெரிக்கனுக்கு, தங்களுடைய முழு ஜாதகமும் தெரிந்துப் போயிருக்கும் என்று டாமியும் டூபென்ஸூம் புரிந்து கொண்டனர். புத்திசாலித்தனம் என்று எண்ணிக் கொண்டு இவர்களிருவரும் பொத்திப் பாதுகாத்து வந்த 'தனியார் துப்பறியும் அதிகாரிகள்' எனும் வெற்று வேட்டினை ஒதுக்கி விட்டு, இருவரும் சேர்ந்துத் துவங்கியுள்ளக் கூட்டு உடன்படிக்கை பற்றி முழுக்கவும் ஒப்பித்தனர். 'எப்படி என்னை ஏமாற்றி விட்டீர்கள்...?' என உணர்த்தியபடி டூபென்ஸ் பக்கமாய் திரும்பிய ஜூலியஸ், "இந்த ஆங்கிலேயப் பெண்களை நான் எப்பவுமே ஒரு பூச்சியைப் போலத் தான் பாவிச்சிருக்கேன், தெரியுமா...! இனிமையானவங்கத் தான்... ஆனா, பத்தாம்பசலிங்க; அதனால பயந்தாங்கொள்ளிங்க; பின்னாடியே துணைக்கு வரும் ஒரு காவலனோ இல்லே பணிப்பெண்ணோ இல்லாம படியிறங்காதவங்க. இப்படி! ம்... காலத்தில் நான் இன்னும் ரொம்பப் பின்னோக்கியே இருக்கேன் போல...!" என்றார்.

இவ்வாறு ரகசியமாய் மூவருக்குள்ளும் உருவான உறவு முறையின் நிகர லாபமாய், பணக்காரப் பகுதியான ரிட்ஸில், டாமியும் டூபென்ஸூம் தங்களது ஜாகையை அமைத்துக் கொள்வதில் போய் முடிந்தது. ஜானே ஃபின்னுடைய

ஒரே ஓர் உறவுடன் விட்டுப் படாமல் தொடர்பினைத் தக்க வைத்துக் கொள்ள இது அவசியம் என்றாள் ரூபென்ஸ். எனவே, ஜூலியஸ் செலவைப் பார்த்துக் கொள்வதாய் முன் வந்தார்!

மறுநாள் காலையில், ''இனி...'' என்று தீர்மானமாய்த் துவங்கிய இளையவள், ''வேலையைத் தொடங்க வேண்டியதுதான்'' என்றாள்.

சக்தியையெல்லாம் திரட்டி தேவையேயில்லாத ஒரு நேரத்தில் கைதட்டுபவனைப் போல, படித்துக் கொண்டிருந்த மெயில் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, படபடவென்று கை தட்டினான் டாமி. இதற்கு, ஒரு புத்தியற்றக் கழுதையைப் போல நடந்து கொள்ள வேண்டாம் என்று, அவனுடன் ஜாகையைப் பகிர்ந்து வரும் இளையவளால் மிருதுவாகக் கேட்டுக் கொள்ளப்பட்டான் அவன்!

''மூடு, பைத்தியக்கார டாமி. கையிருப்புல பணம் சேர நாம ஏதாவது பண்ணியே ஆக வேண்டும்டா, பிசாசே!''

டாமி நீண்டப் பெருமூச்சு விட்டான். ''ஆமாம்'யா. நீ சொல்றதும் சரி தான். வெறுமனே ரிட்ஸூல உட்கார்ந்து நேரத்தை ஓட்டினா, கவர்ண்மெண்ட்டா வந்து சோறு போடும்?'' என்றான்!

''புரியதுல்லே! அதனால, நான் இப்ப சொன்னது மாதிரி, நாம ஏதாவது பண்ணியே ஆகணும்.''

''அப்போ...'' என்று, கீழே போட்டிருந்த மெயில் செய்தித்தாளை மறுபடியும் கையிலெடுத்துக் கொண்ட டாமி, ''செய்'' என்றான்! ''நான் தடுத்து நிறுத்த மாட்டேன்.''

''அதாவது டாமி...'' என்ற ரூபென்ஸ், ''நான் என்ன நினைச்சுக்கிட்டிருந் தேன்னா...''

அவள் சொல்ல வந்தது, மறுபடியும் அதிரடியாய் விளைந்தக் கைதட்டுதலால் தடையானது!

''இப்படி குத்துக் கல்லா ஒரே இடத்துல உட்கார்ந்துக்கிட்டு கோமாளி வேலை பண்றதுல சிரமமே இல்லே, டாமி. பண்ணு. தடுக்கலே. ஆனா புண்ணியமாப் போகும்... அப்படியே உன் மூளைக்கும் கொஞ்சம் வேலைக் கொடு. கரைஞ்சுடாது.''

''என்னோட குணம், ரூபென்ஸ், குணம். என்ன செய்யறது? அது, காலைல பதினோரு மணிக்கு முன்னாடி வேலை பண்ண மாட்டேன்னு சண்டித்தனம் செய்யுதே...!''

''டாமி! கல்லோ கம்போ... உன் மேல ஒண்ணு வந்து வேகமா விழணும்னு நினைக்கறியா...?! துளியும் தாமதமின்றி நாம அடுத்து செய்ய வேண்டிய ஒரு முக்கியமான திட்டத்துக்கான வடிவமைப்புத் தர வேண்டிய அவசரக் கட்டமிது, டாமி!''

''கேட்கறேன், கேட்கறேன்.''

''அப்போ, நாம தீட்டுவோம்.''

டாமி, ஒருவழியாய் தன் கையிலிருந்த பேப்பரை மடித்து தூர வைத்தான். ''உன் உண்மையான உழைப்பிலும் புத்திசாலித்தனத்திலும், பகட்டற்ற ஓர் எளிமையிருக்கு, கண்ணே டூபென்ஸ்! சுடு! நான் கவனிக்கிறேன்.''

''டயலாக்கா...? உனக்கு நேரம் சரியில்லேடா'' என்ற டூபென்ஸ், ''முதல்ல...'' என்றவள், கேட்டாள்: ''எப்படி மேற்கொண்டு போவது?''

''அப்படி கேளு'' என்று குதூகலமான டாமி, ''எங்கேயும் போக வேண்டாம்'' என்றான்!

''டாமி...!'' என்று அவனை நோக்கி எச்சரிக்கை விரல் தூக்கியவள், ''கவனி'' என்றாள். ''நம்மிடம் இரு வேறு வித்தியாசமான குறிப்புகள் - க்ளூஸ் - இருக்கு.''

''அவை என்னென்ன?''

''முதல் க்ளூ. நமக்கு அந்தக் கூட்டத்திலிருக்கும் ஒருத்தனைத் தெரியும்.''

''விட்டிங்டன்?''

''ஆமாம். என்னால அவனை எங்கே வேணும்னாலும் அடையாளம் காட்ட முடியும்.''

''ஹூம்...'' என்றான் டாமி, சந்தேகமாய். ''இதை நான் ஒரு முக்கிய குறிப்பா சொல்ல மாட்டேன். அந்த ஆளை எந்தப் பிரதேசத்துல போய் தேடுவதுனு உனக்குத் தெரியாது... மேலும், விட்டிங்டனை விபத்தா எங்கேயாவது பார்த்துடலாம்னு நினைச்சா, அது, ஆயிரத்துல ஒரு பங்கு தான் சாத்தியம்.''

''உன் கருத்துல எனக்கு உடன்பாடு கிடையாது'' என்றாள் டூபென்ஸ் சிறு சிந்தனையோடு. ''நான் கவனிச்சிருக்கேன்... ஒருமுறை நாம நினைச்சது அப்படியே நடந்ததுனா, அது, மிகவும் அசாதாரண முறையில, அதே மாதிரி தொடர்ந்து நடந்துக்கிட்டே இருக்கும்! அடிச்சு சொல்வேன் - இது ஏதோ ஓர் இயற்கை விதி - நாம் இதுவரை கண்டறியாத இயற்கை நியதி. இதுதான் அனுபவ நிஜம், ஆனாலும், நீ சொல்றா மாதிரி, அப்படித்தான் எப்பவும் நடக்கும்னு முழுக்க முழுக்க அசட்டுத்தனமான நம்பிக்கையிலும் இருந்துட முடியாது. இருந்தாலும் டாமி... பொது மக்கள் தவறாம கூடுகிற விமரிசையான பகுதிகளும் இங்கே லண்டன்ல இருக்கத் தான் செய்யுது... உதாரணத்துக்கு, பிக்கா-டில்லி சதுக்கம். இன்னிக்கோ நாளைக்கோ... எப்படியும் இதுபோன்ற பகுதிகளுக்கு ஒருத்தர் வந்தே தீரணும். ஆக, இச்சதுக்கத்துல, கொடிகள் கொண்ட ஒரு தட்டைக் கையில வெச்சுக்கிட்டு (அங்கே வருபவர்கள் ஒரு கொடி வாங்கிக் குத்திப்பது வழக்கமாமே!) தினமும் கொஞ்ச நேரம் நின்னுடப் போறேன் - அவனைப் பிடிச்சுடலாம்.''

''சாப்பாட்டுக்கு என்னப் பண்ணுவே?'' என்றான், நடைமுறை வாழ்க்கையின் முழு அனுபவஸ்தான, டாமி!

''ஆம்பிளை, குணம், ம்?! ஒரு வேளை சாப்பிடாட்டா என்ன ஆயிடுமாம்?''

''தத்துவமெல்லாம் இருக்கட்டும், பெண்ணே. நீ இப்பத் தான் வயிறு முட்ட சாப்பிட்டிருக்கே... அதனால பேசறே. டிபன் நேரத்துல பசிக்குமே... அப்ப? கொடி, பின், இதையெல்லாம் திம்பியோ...?! ஏய், உன் நல்லதுக்காக என் மனசுல படற ஓர் உண்மையைச் சொல்றேன்... கவனி. இந்த விஷயத்துல என் மண்டையைப் போட்டு ரொம்பக் குழப்பிக்கப் போவது கிடையாது. லண்டன்லே விட்டிங்டன் இருக்க மாட்டான்.''

''சரி. அதை விடு. ரெண்டாவது குறிப்பு நமக்கு ரொம்ப நம்பிக்கை ஊட்டுவதா இருக்கு.''

''ஓ...!''

''ரொம்பப் பெரிசா ஒண்ணும் கிடையாது. ஒரு கிருத்துவப் பெயர் - *ரீட்டா.* இதை விட்டிங்டன் அன்னிக்கு உபயோகிச்சான்.''

''என்ன, மூன்றாவது விளம்பரத்துக்குத் தளம் போடறியா? ரீட்டா எனும் பெயர் கொண்டவர் தேடப்படுகிறார்?''

''அப்படி கிடையாது. தர்க்க ரீதியா நிலைமையைப் படிக்க முயற்சி செய்யறேன் - லாஜிக்கல் அனுகுமுறை! அந்த ஆள், டேன்வர்ஸ், ஏதோ ஓர் நிழல் உருவத்தால் பின் தொடரப்பட்டிருக்கான், இல்லையா? அது, ஓர் ஆணைவிட, பெண்ணாய் இருந்திருக்க நிறைய வாய்ப்புகள் இருக்கு...''

''அப்படி எந்த வாய்ப்பும் என் கண்ல படலே.''

''அது ஒரு பெண் தான் என்பதுல என்னிடம் ரெண்டாவது கருத்து கிடையாது. மேலும், நல்ல அழகானவள்'' என்றாள் டூபென்ஸ் சாந்தமாய்.

''இந்தத் துப்பறியும் ஊகங்கள்லாம் எனக்கு அதிகம் கிடையாது. உனக்கு அந்தத் திறமைகள் இருந்தால் - என் வந்தனங்கள்!'' - முணுமுணுத்தான், தாமஸ் ∴போர்டு.

''கவனி. அந்தப் பெண்... அவ யாரோ, அவ, காப்பாற்றப்பட்டிருக்கா. படு நிச்சயமா.''

''இத்தனை நிச்சயமா எப்படி முடிவெடுக்கறே?''

''அப்படி அவ காப்பாற்றப்படலேனா, அவங்களுக்கு எப்படி ஜானே ∴பின்கிட்டே தான் அந்த முக்கிய ஆவணத் தாள்கள் இருக்கு என்பது தெரிய வந்திருக்கும்?''

''அப்படிப் போடு. சரி. தொடர். ஓ, ஷெர்லாக் ஹோம்ஸ்!''

''இதுல ஒரு வாய்ப்பு இருக்கு... வெறும் வாய்ப்பு தான் என்பதை நானும் உணர்ந்து தான் சொல்றேன்... அந்தப் பெண் 'ரீட்டா'வாக இருக்கலாம்...!''

''இருந்துட்டா?''

''இருந்துட்டா, *லூஸிடானியா*வில் தப்பிச்சவங்க துணை கொண்டு, அவளைத் தேடி நாம துரிதமா வேட்டையை முடுக்கணும்.''

''அப்படினா, முதல் வேலையா, அந்தக் கப்பல் விபத்துல தப்பிச்சவங்களோட முழுப் பட்டியலையும் நாம உடனடியா பெற்றாகணும்.''

''பெற்றாச்சு! நான் தெரிஞ்சுக்க விரும்பும் விஷயங்களைப் பட்டியலிட்டு திரு ஏ கார்ட்டருக்கு அனுப்பியிருந்தேன். அதுக்கான பதிலை இன்னிக்குக் காலையில கிடைக்கப் பெற்றேன். இன்னபிற சாமான்களோட *லூஸிடானியா* கப்பல்ல உயிர் பிழைச்சவங்களோட அதிகாரப்பூர்வப் பட்டியலும் இருந்தது. எப்படி... மாபுத்திசாலியான குட்டி டூபென்ஸின் சாதுர்யம்?''

''ஒரு கைதேர்ந்த அணுகுமுறைக்கு நூறு பாயிண்ட். அதைச் சொல்லும் போது தெறிக்கும் தலைக்கனத்துக்கு பூஜ்யம் பாயிண்ட்! ஆனா, ஒரு முக்கியமான பாயிண்ட்... 'ரீட்டா' அப்படினு யாராவது அந்தப் பட்டியல்ல இருக்காங்களா?''

''அது தான் எனக்குத் தெரியலே'' என்று ஒப்புக் கொண்டாள் டூபென்ஸ்.

''தெரியலியா?''

''ம், இதப்பாரு'' - இருவரும் ஒன்றாக அந்தக் காகிதத்தை நோக்கிக் குனிந்தனர். ''இதுல ஒரு சில கிருத்துவப் பெயர்கள் தானிருக்கு. எல்லாமே செல்வி அல்லது திருமதி.''

டாமி ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டிருந்தான். ''இது விஷயத்தைச் சிக்கலாக்குது.''

தன் குதிரை வால் முடி நன்றாய் ஆடும்படி ஏற்றுக் கொண்டு தலையசைத்த டூபென்ஸ், ''எதெப்படியோ...'' என்று சிறு அவசரம் காட்டிச் சொன்னாள்: ''சமாச்சாரத்துக்குள்ளே மளமளனு நாம இறங்கிட வேண்டியது தான்... வேற வழியில்லே. லண்டன் பகுதியிலிருந்து ஆரம்பிப்போம். என் அலங்காரம் முடியறதுக்குள்ளே, லண்டன் அல்லது லண்டனைச் சுற்றிய அருகாமைப் பகுதிகளில் வாழும் பெண்களின் முகவரிகளை மட்டும் தனியா எழுது.''

ஐந்து நிமிட அவகாசத்துக்குப் பிறகு, இளைய ஜோடி, பிக்கா - டில்லி பகுதிக்குள் இறங்கியிருந்தனர். பிறகு வந்த சில நொடிகளில், ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு, டாமியின் சட்டைப் பையிலிருந்த சிறு குறிப்பு நோட்டு ஒன்றில் முதல் பெயராய் பட்டியலிடப்பட்டிருந்த, எண் 7, லாரல்ஸ் வளாகத்தில் வசிக்கும் திருமதி கீத்'தின் வீட்டுக்குப் பயணப்பட்டனர்.

சாலைக்கு முதுகு காட்டிக் கொண்டு அமைந்திருந்த இல்லமான லாரல்ஸ், அடித்து அழிக்கப்பட்ட தினுசில் நாசமாய்க் கிடந்தது. தோட்டம் என்று ஒன்று இங்கு இருக்கிறது என அறிவிக்க அடர்த்தியான சில புதர்கள் வீட்டின் முன்பக்கத்தில் இருந்தன. டாக்ஸிக்கு காசு கொடுத்து அனுப்பிய டாமி, டூபென்ஸுடன், வீட்டின் நிலைக்கதவு வரை வந்து சேர்ந்தான். அழைப்பு மணியை ஒலிக்க இவள் தூக்கியக் கையை அப்படியே அழுத்திப் பிடித்து பின்னுக்கு இழுத்தான் டாமி. கேட்டான்: ''என்ன சொல்லப் போறே?''

''நான் என்ன சொல்லப் போறேன்? ஏன், சொல்ல முடியாதா என்ன? அதாவது - என்ன சொல்வேன்னா... அதாவது... ஓ, டியர்! என்னத்தை சொல்லுவேன்? எனக்குத் தெரியலே! ஓஹ்... தர்மசங்கடமா இருக்கு!''

''இதைத் தான் எதிர்பார்த்தேன்'' என்றான் டாமி, ஒருவித திருப்தியோடு! ''பொம்பிளை குணம், ம்? பெண் புத்தி பின் புத்தி! திட்டமிடலே கிடையாது! இப்போ ஒதுங்கி ஒரு பக்கமா நில்லு. இந்த சின்ன 'ஆம்பிளை குணம்' நிலைமையை என்னமா கையாளுதுனு பார்...!'' அழைப்பு மணியை அடித்தான் அவன். டூபென்ஸ் அருகிலேயே வாட்டமான ஒரு பகுதிக்கு ஒதுங்கிக் கொண்டாள்.

அலங்கோலமாய் ஆடையுடுத்தியிருந்த ஒரு பெண், அடித்த மணிக்கு பதிலாய் வந்தாள். முகத்திலும் கூட அழுக்கு அப்பிக் கிடக்க, அவளது முகத்துக்குப் பொருந்தாத பெரும் கண்களோடு வாசலில் நின்றாள்.

டாமி ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டான்! உற்சாகமாயும் சுறுசுறுப்பாயும் ''குட் மார்னிங்'' என்றான் அவன். ''இப்பகுதி கவுன்ஸிலர் அலுவலகத்திலிருந்து வரோம். வாக்காளர்கள் பட்டியல் தயாரிப்புப் பணி. திருமதி கீத் இங்கே தானே வசிக்கிறாங்க... இல்லையா?''

''ம்'' என்றாள் அந்தப் பணிப்பெண்.

''இருபத்தியொரு வயதைக் கடந்த மகன்கள்? மகள்கள்?''

''ம்ம்.''

''நன்றி'' - பட்'பென்ற ஓசை வரும்படி நோட்டுப் புத்தகத்தை மூடினான் டாமி. ''குட் மார்னிங்.''

இப்போது, பணிப்பெண், தானாய் முன்வந்து ஒரு குறிப்பு தந்தாள்: ''நீங்க புது காஸ் சிலிண்டர் கொண்டு வந்த ஆளோனு நினைச்சேன்'' என்றாள் ஏமாற்றமாய். கதவை சாற்றி மூடினாள்.

டாமி, தன் துணையோடு போய்ச் சேர்ந்துக் கொண்டான். ''ஏய், டூபென்ஸ்...'' என்றழைத்தவன், ''இதெல்லாம் எனக்குத் தூசு'' என்றான்! ''என் திறமைக்கு முன்னால - இது, யானைப் பசிக்குச் சோளப்பொறி.''

''இந்த நிமிஷத்துல, ஒட்டுமொத்த மதிப்பெண்களையும் நீ வாங்கிட்டேனு நான் ஒத்துக்கறேன்ப்பா. ஓஹ்... இப்படி நான் திட்டமிட்டிருக்கவே மாட்டேன்.''

''நல்ல தமாஷ், இல்லே, அது! திருப்பித் திருப்பி இதையே நாம பண்ணலாம்.''

மதிய உணவு நேரத்தில், மங்கிய ஒளியில் இயங்கிக் கொண்டிருந்த ஒரு விடுதியில் இறைச்சியும் சிப்ஸூம் சாப்பிட்டார்கள். க்ளாடிஸ் மேரி மற்றும் மர்ஜோரி ஆகியவர்களைப் பற்றி விவரம் அறிந்தார்கள். இதில் இவர்கள் எதிர்கொண்ட முகவரி மாற்றம் இருவரையும் சற்று அலைய விட்டது. குதூகலமாயும் ஆர்வம் பொங்கவும் தோன்றிய அமெரிக்கப் பெண்மணியான ஸேட்டி என்பவரிடம், உலகளாவிய வாக்குரிமை பற்றி நீளநீளமான விரிவுரை ஒன்றைக் கேட்க வேண்டியதாயிற்று.

''ஆஹ்...'' என ரசித்தான் டாமி - ஒரு பெரிய மடக்கு பீரினை உள்ளுக்கு உறிஞ்சி சுவைத்ததற்கு! ''இப்போ தேவலை. என்ன அலைச்சல். அடுத்த அடி - எங்கு?''

சிறு நோட்டுப் புத்தகம் இருவரின் முன்னாலும் கிடந்தது. டூபென்ஸ் அதனை எடுத்தாள். ''திருமதி வாண்டே - மேயர்'' எனப் படித்தாள். ''எண் 20, தெற்குக் குடியிருப்பு. அப்புறம், மிஸ் வீலர். எண் 43. இவ ஒரு வீட்டு முதலாளிக்கான பணிப் பெண். இப்ப இருப்பாளா என்பது சந்தேகமே. இருந்தாலும், இவளை நாம சந்தேகப்படாம ஒதுக்கலாம். நாம தேடும் வாய்ப்பு - இவ கிட்டே இல்லே.''

''அப்போ, முதல்ல, அந்தத் திருமதி மேயரைத் தான் அணுகணும் என்பது தெளிவாகுது.''

''டாமி...'' என்று சிறு ஒட்டுதல் பொதித்து அழைத்த டூபென்ஸ், ''டேய்... எனக்கு ரொம்ப அதைரியமா ஆகுதுடா'' என்றாள்.

''எழுந்திரு, கிழ ராட்சஸியே'' என்று துறுதுறுவானான் டாமி. ''நம்மக் கையில இருக்கிற விஷயம்... நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பது நமக்கு ஆரம்பத்துலேயே தெரியும். இருந்தாலும் ஆரம்பிச்சிருக்கோம். லண்டன்ல ஒண்ணும் கை கூடாம போச்சுன்னா, இங்கிலாந்துக்கு ஒரு குப்பரான சுற்றுலா இருக்கு. அப்புறம் அயர்லாண்ட், ஸ்காட்லாண்ட்...''

''நிஜம் தான்'' என்றாள் டூபென்ஸ், அவளுடைய நெஞ்சின் அக்னிக்குஞ்சு மறுபடியும் உயிர்த்தெழ...! ''அதுவும் எப்படி... எல்லா செலவுகளும் இன்னொருத்தன் தலையில...! இருந்தாலும், ஓஹ், டாமி, எல்லாம் சட்டு புட்டுனு நடந்து முடியணும்னு நான் விரும்பறேன். இதுவரைக்கும் அப்படித் தான் இருந்திருக்கு... எல்லா சாகசங்களும் உடனுக்குடன் வெற்றி

பெற்றுக்கிட்டு! ஆனா - இன்னிக்குக் காலையிலிருந்து, எல்லாமே தொய்வு தான்!''

''இந்த ஒப்பேறாத ஏக்க உணர்வுகளை நீ அடக்கணும், டூபென்ஸ். ஒண்ணு நினைவில வெச்சுக்க... உலகமே பயந்து வர்ணிக்கிற மாதிரியானவன் தான் இந்த ப்ரௌன் அப்படினா, அவன் இன்னும் நம்மை மரணத்தின் வாயில் கொண்டு போய் திணிக்காம விட்டு வெச்சிருப்பது ஒரு பேராச்சரியம்.''

''ஆமாம், ப்ரௌன் நம் மீது பழி தீர்த்துக் கொள்ளாமல் இதுவரை பேசாமல் இருப்பது - விளக்க முடியாததா தான் இருக்கு. எந்தத் தடங்கலும் இல்லாமல் நம் பாதையில பிரயாணச்சுக்கிட்டு இருக்கோம்.''

''ஒரு வேளை, நாம, ரொம்ப முக்கியத்துவம் தந்து கவலைப்பட வேண்டிய எதிரிகள் இல்லேனு ப்ரௌன் நினைச்சிருக்கலாம்'' என்றான் டாமி, தெளிவாய்!

''நீ ரொம்பக் கொடூரமானவன், டாமி'' என்றாள் டூபென்ஸ். இந்த விமர்சனத்தைச் சுவையற்ற கடுகடுப்பாய் எடுத்துக் கொண்டாள் அவள். ''ஏதோ நாம ஒண்ணுக்குமே லாயக்கில்லாதவர்கள் மாதிரி நீ பேசறே.''

''மன்னிச்சிடு, டூபென்ஸ். நாம இருட்டுல நின்னுக்கிட்டு இயங்கிகிட்டு இருப்பதாகவும், அதனால அவனுக்கு நம்முடைய புத்திசாலித்தனமான இயக்கம் இன்னும் தெரிய வரலே எனும் அர்த்தத்தில் தான் நான் சொன்னேன். ஹா! ஹா!''

பதிலுக்குக் கிண்டலாய் இவளும் ''ஹா! ஹா!'' என எதிரொலித்தபடி எழுந்தாள்.

தெற்குக் குடியிருப்பு, கம்பீரமாய் எழுந்து நிற்கும் அடுக்கங்களின் கவர்ச்சிகர தோற்றத்தில் நிறைந்திருந்தது. எண் 20 இருந்தது, இரண்டாவது தளம்.

உண்மையும் உருக்கமும் துளியும் இல்லாமல் ஆனால் வளவளவென்று பேசித் தள்ளி தன்னைகப்படுத்தவல்ல டாமியின் பிறவிக் குணம் எழுந்தது! தனது சலசலவென்ற சரள குணத்தை, இவன் கதவைத் தட்டியதற்குப் பதிலாய் வேலைக்காரிப் போல தோன்றாமல் வீட்டைக் கவனித்துக் கொள்பவர் போல வந்து நின்ற முதிய பெண்மணியின் மீது, விட்டெறிந்தான் டாமி!

''பெயர்?''

''மார்குரெட்.''

இதை டாமியும் ''மார்கரெட்'' என உச்சரிக்க, கதவைத் திறந்த பெண்மணி இடைமறித்தாள்.

''க, கிடையாது. கு. கு. குரெட். *மார்குரெட்.*''

இந்த குரெட்டுக்கு, ''கரெக்ட்'' என்றான் டாமி! ''ப்ரெஞ்சு வழியில சொல்ல வேண்டியிருக்கு. குரேட்!'' - இப்படிச் சொல்லிவிட்டு கொஞ்சமாய்

இடைவெளி தந்தவன், விஷயத்துக்குள் குபுக்கென்று குதித்தான். ''எங்க கிட்டே அவங்க பேரு ரீட்டா வாண்டே-மேயர்'னு இருக்கு. இதுவும் சரினே நினைக்கிறேன்... அப்படித்தானே?''

''இந்தப் பெயரில் தாங்க அவங்க அதிகமா அழைக்கப்படறாங்க. இருந்தாலும், மார்குரெட் தான், அவங்க பெயர்.''

''நன்றி. அவ்ளோ தான் குட் மார்னிங்.''

அவனுக்குள் விளைந்த கிளர்ச்சியைத் துளிக்கூட கட்டுப்படுத்தத் தெரியாதவனாய் படிகளிறங்கி ஓடி வந்தான், டாமி. டூபென்ஸ் கீழேயிருந்த திருப்பத்தில் காத்துக் கொண்டிருந்தாள்.

''கேள்விப்பட்டியா?''

''ஆமா. ஓ டாமி!''

கருணை மிகுந்து தெரிய, அவளுடைய கையைப் பிடித்துப் பிழிந்து விடுவது போல இறுக்கினான் டாமி.

''புரியுது, ராட்சஸி! நானும் அதே அதிர்வில் தான் இருக்கேன்.''

''ஒரு விஷயம் இப்படித்தான் நடக்கணும்னு நாம நினைக்கிறதும்... அந்த விஷயம், அப்படியே, அதே போலவே, நினைச்சது போலவே நடந்து விடுவதும் - நினைக்க நினைக்கப் பூரிக்க வைக்கும் சங்கதிடா!'' - உற்சாகம் கரை புரளக் கத்தினாள் டூபென்ஸ்.

இவளுடைய கைகள் இன்னமும் டாமியின் உள்ளங்கைகளுக்குள். இருவரும் அடுக்கக்கத்தின் வரவேற்புப் பகுதியை அடைந்திருந்தனர். அருகில், மேலே இட்டுச் செல்லும் படிக்கட்டுகளும், அப்பகுதியில் கலவையாய் குரல்களும் இருந்தன.

திடீரென்று, டாமியை ஆச்சரியத்தின் உச்சத்துக்குத் தூக்கிப் போடும் வகையில், பிடித்திருந்த அவன் கைகளை இறுக்கித் தரதரவென்று இழுத்துக் கொண்டு, படிக்கட்டுகளுக்கு அடியில் இருந்த அதிக இருளான பகுதிக்குள் நுழைந்தே விட்டாள் டூபென்ஸ்.

''என்ன... என்னாச்சுடீ...?''

''உஷ்!''

படிகளிறங்கி இரு ஆடவர்கள் தளம் வந்தனர். நுழைவின் வழியாக அவர்கள் வெளியேறினர். இக்காட்சியைப் பார்த்த போது, டூபென்ஸின் இறுக்கம், டாமியின் கைகளையே முறித்துவிடும் அளவுக்கு மேலும் கூடியது.

''சீக்கிரம் - அவர்களைத் தொடர். ம். போ. சொல்றேனில்லே...?! அவன் என்னை அடையாளம் கண்டுபிடிச்சுடலாம். அந்த இன்னொரு மனுஷன் யார்னு எனக்குத் தெரியலே. ஆனா, ரெண்டுல பெருசா இருக்கிறவன் தான் - விட்டிங்டன்.''

அத்தியாயம் - 7

ஸோ-ஹோ பகுதியிலிருந்த வீடு

விட்டிங்டனும் அவருடைய நண்பரும் நல்ல வேகத்தில் நடந்து போய் கொண்டிருந்தனர். தெருக்கோடியில் அவர்கள் திரும்பிய திசையை விட்டு விடாமல் பிடித்துவிடும் அளவுக்கு, விறுவிறுவென பின்தொடரும் வேலையை ஆரம்பித்தான் டாமி. இவனுடைய தீவிரமான நடை, விரைவிலேயே அவர்களிருவரின் அருகாமைக்குக் கொண்டு போனது. டாமியும் தெருக்கோடித் திருப்பத்தைத் தொட்ட போது, போய்க் கொண்டிருந்த இருவருக்கும் இவனுக்கும் இடையேயான தூரம் கணிசமாய் குறைந்திருந்தது. இப்பகுதியிலிருந்த தெருக்களெல்லாம் ஏறத்தாழ வெறிச்சோடிக் கிடக்க, அவர்களைக் கண் பார்வையிலிருந்து தவற விட்டு விடுதல் ஆகாது என்ற புத்திசாலித்தனமான முடிவைத் தீர்மானமாக்கிக் கொண்டான் டாமி.

இவ்விளையாட்டு, டாமிக்குப் புதுசு! துப்பறியும் நாவல்களை விடாமல் படித்த ஞானத்தால் இதுபோன்ற சூழ்நிலையில் நிச்சயமாய் நடக்கவல்லவை பற்றிய அறிதல் டாமிக்கு இருந்தாலும், நிஜமாகவே ஒருவரைப் பின்தொடர்ந்தபடி வேகமாய்ச் செல்வதை இவன் இதுவரை செய்ததில்லை. செய்யும் போது, இது, மாபெரும் அபாயங்களையும் கஷ்டங்களையும் உள்ளடக்கியது என்பது, உடனே இவனுக்குப் புரிந்துப் போயிற்று. ஒரு பேச்சுக்கு... திடீரென்று அவர்களிருவரும் ஒரு வாடகைக் காரை அழைத்து ஏறி விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். புத்தகமாயிருந்தால், உடனே பின்தொடர்பவனும் இன்னொரு காரை அழைத்து குதித்தேறி - டிரைவரிடம் ரெண்டு மடங்கு கூலி தருவதாய் சொல்லி காரை விரட்டப் பணித்து - இறுதியில் கையும் களவுமாய் பிடித்து...! ஆனால் நிஜத்தில்...? அதுவும் இந்த ஆளரவமற்ற பிரதேசத்தில்? இங்கு இன்னொரு டாக்ஸி உடனடியாய் கிடைக்கவே கிடைக்காது என்பதை உணர்ந்தான் டாமி. ஆக,

காரின் பின்னாடியே ஓடியாக வேண்டும். ஓர் இளைய வாலிபன் தலைதெறிக்க விடாமல் லண்டன் தெருக்களில் ஓட்டமாய் ஓடினால், இங்கு என்ன நடக்கும்? மெயின் ரோடாயிருந்தால் ஏதோ ஒரு பேருந்ததைப் பிடிப்பதற்காக ஓடுவது போல ஒரு கானல் சூழலை இவனால் உண்டுபண்ணி விடமுடியும். ஆனால் தீவுத் தீவாய் பெரிய வீடுகள் மட்டும் நிற்கும் இதுபோன்ற அமைதிப் பிரதேசத்தில் தடுத்து நிறுத்தி என்ன காரணத்திற்காக இப்படி ஓடுகிறாய் என அதட்டும் போலீஸ்காரனுக்கு பதில் சொல்ல வராமல் மூச்சு வாங்கும் நிலை தான் உருவாகும்...!

இந்த நினைவுகள் டாமியின் சிந்தனைக்குள் ஓடிக் கொண்டிருக்கும் போதே, 'வாடகைக்கு' என்ற கொடி தாங்கிய ஒரு டாக்ஸி, முன்னாலிருந்த தெருக்கோடித் திருப்பத்தில் திரும்பிக் கொண்டிருந்தது. டாமிக்கு மூச்சு நின்றுப் போனது. அதை அவர்களிருவரும் அமர்த்திக் கொண்டு விடுவார்களோ...?

அப்படி ஏதும் செய்யாமல் அந்த டாக்ஸியை முன்னால் போய்க் கொண்டிருக்கும் இருவரும் விட்டு விட்டதும் தான், போன மூச்சே இவனுக்குத் திரும்பி வந்தது. அவர்களுடைய நடை கோணல் மாணலாக எப்படியெல்லாமோ திரும்பி, அருகிலிருக்கும் ஆக்ஸ்ஃபோர்டு சாலைக்குள் எத்தனை சீக்கிரம் போய்விட முடியுமோ, அத்தனை சீக்கிரம் போய்ச் சேர்ந்து விடும்படி அமைந்திருந்தது. சற்றே பெரிய அடிகள் வைத்து சாலைக்குள் நுழைந்து கிழக்கு திசையில் அவர்கள் போக ஆரம்பித்த போது, டாமியும் இவனுடைய நடை வேகத்தைக் கூட்டும்படி ஆனது. கொஞ்சங்கொஞ்சமாக இவன் அவர்களை நெருங்கி விட்டிருந்தான். இங்கு நடைபாதையில் மக்கள் நடமாட்டம் இருந்தது. இந்த அரவத்தில் அவர்களுடைய கவனிப்பை இவன் ஈர்க்க வாய்ப்புகள் கம்மியே, ஆகையால், அவர்களுடைய உரையாடலி லிருந்து ஓரிரு வார்த்தைகளை எப்படியாவது பிடித்துவிடக் கூடாதா எனும் பரபரப்பிலிருந்தான் டாமி. இந்த முயற்சி முழுக்க முறியடிக்கப்பட்டது; மிகத் தாழ்ந்தக் குரலில் அவர்கள் பேசியதால், விழுந்துக் கொண்டிருந்த போக்குவரத்து ஓசைகள் அவர்களுடைய குரல்களை வசதியாகக் கரைத்தன.

அங்கிருந்த பாண்ட் சாலை ரயிலடிக்கு சற்று முன்பு, அவர்கள் ஒரு தெருக்குள் நுழைந்தார்கள். அயராத டாமியும் அவர்களது நடை வீச்சுக்கு ஈடு கொடுத்து முன்னேறி அவர்களைப் பார்வையிலிருந்து நழுவாமல் பார்த்துக் கொண்டான். சிறு உணவகம். இருவரும் முதல் தளத்திற்குச் சென்று அங்கு ஜன்னலோரமிருந்த இருக்கையில் அமர்ந்துக் கொண்டனர். லஞ்ச் நேரம் கடந்திருக்க, ஆகவே அங்கே கூட்டமும் வெகுவாய் குறையத் தொடங்கியிருந்தது. அவர்களுக்கு அடுத்த மேஜையில், தன்னை விட்டிங்டன்

அடையாளம் கண்டுவிடக் கூடாது என்பதற்காக அவருக்குப் பின்னால் வரும்படி அமர்ந்து கொண்டான் டாமி. இன்னொருவரின் முகம் தெளிவாய் தெரியும்படி அமர்ந்தவன் அவரை ஆழ்ந்து படிக்கலானான். நல்ல வெள்ளை நிறம். அயர்ந்து தளர்ந்து சந்தோஷமற்றிருந்த முகம். ரஷ்யனாயிருக்க வேண்டும் என்று மனதில் போட்டுக் கொண்டான் டாமி. ஐம்பது வயதுக்குக் கொஞ்சம் மேலிருக்க வேண்டும். பேசும்போதெல்லாம் அவருடைய தோள்கள் கொஞ்சமாய்க் கெஞ்சிக் குவிந்தன. சின்னதாயும் தந்திர சூதும் நிறைந்திருந்த அவரின் கண்மணிகள் ஓயாமல் நகர்ந்த வண்ணமிருந்தன.

வயிறு புடைக்க சாப்பிட்டிருந்தபடியால் சில பிஸ்கெட்டுகளுக்கும் ஒரு கோப்பை காபிக்கும் மட்டும் சொன்னான் டாமி. விட்டிங்டன், தனக்கும் தன்னுடன் வந்தவருக்கும் சேர்த்து தடபுடலாக இரண்டு லஞ்சுகள் சொன்னார்; எழுதிக் கொண்ட பட்லர் நகர்ந்ததும் தன்னுடைய நாற்காலியை மேஜைக்கு இன்னும் நெருக்கமாய் வருமாறு இழுத்துப் போட்டுக் கொண்டு கீழ் ஸ்தாயியில் மனமொப்பிப் பேச ஆரம்பித்தார். அந்த இன்னொருவனும் அப்படியே நெருக்கமாய் நகர்ந்து விட்டிங்டனுடன் பங்கேற்றான். முடிந்த அளவு காதுகளைத் தீட்டிக் கொண்டு கவனித்த டாமியால் இங்கொன்றும் அங்கொன்றுமாய் ஒரு சில வார்த்தைகளைத்தான் அடைய முடிந்தது. இருவரில் 'பெருசாய்' இருந்தவர், தன்னுடனிருந்த மற்றவனுக்கு, ஏதோ சில கட்டளைகளையோ அல்லது செய்ய வேண்டிய வழிமுறையையோ திணித்துக் கொண்டிருந்தார் என்ற சாராம்சம் மட்டும் தட்டுப்பட்டது. இவற்றுக்கு அந்த இரண்டாமவன் அவ்வப்போது ஒத்துப் போகாமல் பேசியதும் விளங்கியது. இந்த உரையாடலில், விட்டிங்டன், அடுத்த நபரை, போரீஸ்' என்று அழைத்தார்.

அயர்லாண்டு எனும் வார்த்தையைப் பலமுறை காற்றில் பிடித்தான் டாமி, மற்றும் 'பரப்பு... பரவச் செய்' எனும் ரீதியில் உரையாடல் சென்றதையும் அதிக முறை கேட்டான். ஆனால், ஜானோ ஃபின் பற்றி எவ்வித குறிப்பும் இல்லை. சட்டென்று, சாந்தமாய் இருக்கும் ஓர் அறையில் கலீர் கலீர் என்று ஓசையெழுந்தால் எப்படியிருக்குமோ, அப்படி, ஸ்பஷ்டமாய் ஒரு முழு வாக்கியத்தையே கேட்கும்படி நேர்ந்தது. பேசியது விட்டிங்டன். ''ஆஹ்... உனக்கு அந்த ஃப்ளாஸி பற்றித் தெரியாது. அவள் ஓர் அற்புதம். ஒரு தலைமைப் பாதிரியார், 'மாதா'வென்றால் அது அவள்தான் என்று கழுத்தைப் பிடித்துக் கொண்டு சத்தியம் செய்வான். அவள் சொல்வதே எப்போதும் எடுபடுகின்றது .. இதுதான் அடிப்படையாய் கவனிக்க வேண்டியது.''

போரீஸ் சொன்ன மறுபதிலை டாமி கேட்கவில்லை. ஆனால் அதற்கு பேசிய விட்டிங்டன், ''இருந்தாலும்... ஓர் எமர்ஜென்ஸி, அதாவது அத்தியாவசிய அவசரம் ஏதாவது ஏற்பட்டால் மட்டுமே...'' என்பது போல என்னவோ சொன்னார். ம்ம். இவனால் பிடிக்க முடியவில்லை.

மறுபடியும், பிடித்துக் கொண்டிருந்த நூலிழையின் இணைப்பை இவன் விட்டு விட்டான். இருப்பினும் தற்சமயம் அவர்கள் பேசிக் கொண்டிருப்ப தெல்லாம் தீர்க்கமாய் கேட்க ஆரம்பித்தன. தங்களை அறியாமலே அவர்களிருவரும் தத்தம் குரல்களை உயர்த்த ஆரம்பித்ததாலோ அல்லது டாமியின் காதுகள் ரகசிய உரையாடலைப் புரியும்படிக் கேட்பதற்கு பழகிவிட்டதாலா... தெரியவில்லை. ஆனால் ஒலித்த இரண்டு வார்த்தைகள் கேட்டுக் கொண்டிருந்த நேயருக்குள் நிச்சயமாய் ஒரு சுழலையே உண்டுபண்ணின. அவ்விரு வார்த்தைகளும் போரீஸால் சொல்லப்பட்டன. அவை: *''திரு ப்ரௌன்''*

அப்போதெல்லாம், விட்டிங்டன், ஏதோ காரணத்தோடு எச்சரித்து ஆட்சேபிப்பதாய் தோன்றினாலும், மற்றவன் வெறுமனே சிரிக்கத்தான் செய்தான். ''ஏன் இருக்கக் கூடாது, ஸார். இந்தப் பெயர் ரொம்பவும் மரியாதை மிகுந்தது - பொதுவா ஜனங்கள் உபயோகப்படுத்தப்படும் பெயரும் கூட. இந்தக் காரணங்களுக்காக இதை அவர் தெரிந்தெடுத்திருக்கக் கூடாதா என்ன? ஆஹ்... எனக்கு அவரைச் சந்தித்தாக வேண்டும் - மிஸ்டர் பிரௌன்.''

பிறகு திரும்பவும் இதையே விட்டிங்டன் ஒருமுறை சொன்ன போது, சொன்ன அழுத்தத்தில் இரும்பு வளையம் இருந்தது. ''ஆங்... யாருக்குத் தெரியும்? நீங்களே கூட அவரை முன்னமேயே சந்தித்திருக்கலாம்.''

''பாஹ்...'' மூச்சுத் திணற மறுத்தான் மற்றவன். ''மாட்டிக்கிட்ட ஒருத்தனை ஆட்டிப் பார்க்க, போலீஸ் தூவிப் பார்க்கும் கட்டுக்கதை போல, நீங்க சொல்வது ஒரு குழந்தைத்தனமான கற்பனை விட்டிங்டன்! சில சமயங்கள்ல எனக்கு நானே என்ன சொல்லிப்பேன்னு உங்களுக்குத் தெரியுமா? இது - அவருடைய நெருக்கமான 'உள்வட்டம்' அவிழ்த்து விட்டிருக்கும் கட்டுக்கதை - நம்மைப் பயமுறுத்த பயன்படுத்தப்படும் ஒரு சுத்தப் பொய். ஆமாம்... அப்படித்தான் இருக்கணும்.''

''அப்படியில்லாமலும் இருக்கலாம்.''

''இன்னோர் ஆச்சரியமும் எனக்குள்ளே இருக்கு... ஒரு வேளை அவர் நம்முடனேயே இருப்பவர் என்பது தான் நிஜமோ...?! நம்மோட, நமக்குள்ளேயே, ஒருவருக்குக் கூட யாரென்று தெரியாமல், ஆனால் தெரிந்தெடுத்த மிகச் சிலருக்கு மட்டும் 'அவரின்' உண்மை தெரிந்தபடி...!

இது உண்மைனா, அவர் குறித்த ரகசியத்தை வெகு அற்புதமா அவர் காத்துக்கிட்டு வரார்...! ஆமாம்...! நான் இப்படிச் சொல்லும் ஊகமும் ரொம்பவும் நம்பகத்தன்மையானது தான். அவர் யார்னே நமக்குத் தெரியாது. ஒருத்தருக்கு ஒருத்தர் தினமும் பார்த்துக்கறோம்... பேசிக்கறோம். *நம்மில் ஒருவர் தான் அந்த ப்ரௌன்.* யார்? அவர் தான் கட்டளைகளைப் பிறப்பிக்கிறார் - ஆனால் அவரே பணிவிடையும் செய்யறார் - நமக்கு நடுவில்...! ஆனால் ஒருத்தருக்கும் தெரியலே, அவர் யார்னு...?!''

தன்னுடைய புத்தியைக் குழப்பித் தடுமாறச் செய்யும் இக்கற்பனையைக் கொஞ்சம் பாடுபட்டுத் தான் அந்த ரஷ்யனால் ஒதுக்கி வைக்க முடிந்தது - அந்த அளவுக்கு இதனை அவன் நம்புகிறான். அவன் மணிக்கட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

''சரிதான்'' என்றார் விட்டிங்டன், அதைக் கவனித்து. ''நாம கிளம்ப வேண்டியதுதான்.''

பட்லரைக் கூப்பிட்டுச் செலுத்த வேண்டிய தொகையைக் கேட்டார். இதையே செய்த டாமி, சில நொடிகளுக்குப் பிறகு, இருவரையும் படிக்கட்டுகளில் தொடர்ந்துக் கொண்டிருந்தான்.

வெளியே ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்ட விட்டிங்டன் அதனை வாட்டர்-லூ பகுதிக்குப் பணித்தார். சந்தடி அதிகமாயிருந்த இப்பகுதியில் டாக்ஸிகளும் இழைந்துக் கொண்டிருந்தன. விட்டிங்டன் குழு உள்ளே நுழைந்து அது புறப்படுவதற்குள்ளேயே டாமி காட்டிய கையசைவுக்கு இசைந்து வேறொரு டாக்ஸி வந்து நின்றது.

''அந்த டாக்ஸியைத் தொடர்'' என அறிவுறுத்தினான் இளையவன். ''விட்டு விடாதே.''

வயசான டாக்ஸி ஓட்டுநர், டாமியின் கட்டளைக்கு அதிகம் முக்கியத்துவம் தரவில்லை. 'வாடகைக்கு' என மேலே ஒளிர்ந்த பலகையை அணைத்து விட்டு டாக்ஸியைக் கிளப்பியவன் அதிக வேகமில்லாமல் சராசரியாக ஓர் ஒழுங்கற்று ஓட்டினான். டாமி பட்ட அவசரத்துக்குச் சொல்லிக் கொள்ளும்படி அமையாத இப்பிரயாணம், எப்படியோ, விட்டிங்டன் டாக்ஸி வந்து நின்ற சுவட்டுக்குப் பின்னாலேயே வந்து சேர்ந்தது. டிக்கெட் வாங்கும் அலுவலக நுழைவாயிலில் விட்டிங்டனுக்கு உடனடி பின்னாலேயே வந்து நின்று கொண்டான் டாமி. போர்ன்-மவுத் எனும் இடத்துக்கு அவர் ஒரு முதல் வகுப்பு டிக்கெட் எடுத்துக் கொள்ள அதையே செய்தான் இவனும். வெளியே வந்த விட்டிங்டனைப் பார்த்ததும், ''சீக்கிரம் வந்துட்டீங்க'' என்று குறிப்பிட்டான் போர்ஸ். ''இன்னும் அரை மணியிருக்கு.''

போரீஸ் சொன்ன மேற்படி வார்த்தைகள், ரயில் பெட்டிகள் போல வரிசையாய் சிந்தனைகளை டாமியினுள் உருவாக்கிவிட்டன. ஆக, விட்டிங்டன் மட்டும் தனியாகப் பிரயாணத்தை மேற்கொள்ள, மற்றவர் இங்கே லண்டனிலேயே இருந்துவிடப் போகிறார். இதனால், எந்த மனுஷனைத் தொடர்வது என்ற தெரிந்தெடுத்தல் இப்போது டாமியிடம் விடப்பட்டது. நிச்சயம் இருவரையும் இவன் ஒருவனே ஒரே நேரத்தில் தொடர முடியாத சூழ்நிலை. எதிரே தொங்கியக் கடியாரத்தையும் அறிவிப்புப் பலகையையும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். வண்டி புறப்படும் நேரம் 3.30 மணி. இப்பொழுது மூன்றடித்து பத்து. விட்டிங்டனும் போரீஸும் மேலும் கீழுமாயும் நடந்துக் கொண்டிருந்தனர். சிறு சந்தேகப் பார்வையை அவர்கள் மீது பதித்தபடி, விறுவிறுவென்று அருகிலேயே இருந்த தொலைபேசி பூத்துக்குப் போனான் டாமி. டூபென்ஸைப் பிடித்துப் பேசுவதில் நேரத்தை விட்டுவிட இவன் விரும்பவில்லை. நிச்சயம் அவள் இன்னமும் தெற்குக் குடியிருப்பில் தான் இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான். ஆனால், இவ்விவகாரத்தில், இன்னொரு கூட்டும் இருக்கிறது. உடனடியாய் ரிட்ஸுக்கு போன் போட்டு, ஜூலியஸ் தேவையெனக் கேட்டான். 'டபக்'கென்று செவிக்குழல் மேஜையில் வைக்கப்படும் ஓசை. கர்ரக் புர்ரக் என்று செவிக்குழலில் மேலும் சில ஓசைகள். ஓஹ்... அந்த இளைய அமெரிக்க ஜூலியஸ் மட்டும் அறையில் இருந்து விடக் கூடாதா...?! 'டபக்'கென்று செவிக்குழல் தூக்கப்படும் ஓசை. தொடர்ந்து, ''ஹல்லோ'' என்று நுனி நாக்கு அமெரிக்க ஆங்கிலம்.

''ஓ. இது, ஜூலியஸ்? தாமஸ் ஃபோர்டு பேசறேன். நான் வாட்டர்-லூ ரயிலடியில் இருக்கேன். விட்டிங்டன் மற்றும் இன்னொரு நபர் ஆகியோரை நான் இங்கே பின்தொடர்ந்துக்கிட்டு இருக்கேன். விவரிக்க நேரம் கிடையாது. விட்டிங்டன், போர்ன்-மவுத் பகுதிக்கு, மாலை 3.30 ரயில்ல கிளம்பறார். அதுக்குள்ளே உங்களால இங்கே வந்துட முடியுமா?''

வந்த பதில், தைரியம் தந்து உறுதிப்படுத்தும் வகையில் இருந்தது: ''நிச்சயமா. பறந்து வரேன்.''

தொலைபேசி துண்டிக்கப்பட்டது. நிம்மதி பெருமூச்சோடு இப்பக்கம் டாமி செவிக்குழலை வைத்தான். பறந்துப் போய் சாதிப்பதில் ஜூலியஸுக்கு உள்ள திறமையில் டாமிக்கு நல்லபிப்ராயம் உண்டு. எனவே சரியான நேரத்துக்கு அந்த அமெரிக்கன் வந்து விடுவான் என்ற நம்பிக்கை இவனுக்கு உள்ளூர துளிர்த்தது.

எங்கே பார்த்து விட்டு சென்றிருந்தானோ அதே இடத்திலேயே விட்டிங்டனும் போரீஸும் இருந்தனர். டாமி தன் சட்டைப் பையை விரல்களால் தாளமிட்டுத் தடவி பார்த்தான். கேளுங்கள் தரப்படும் என்று சொல்லியிருந்தாலும் இத்தனைக் கொடு என்று கேட்டுக் கொண்டு இதுவரை இவனோ டுபென்ஸோ போய் ஜூலியஸிடம் நிற்கவில்லை. போர்ன்-மவுத் பகுதிக்கு ஒரு முதல் வகுப்பு டிக்கெட் எடுத்துள்ளதால் இவனுடைய சட்டைப் பையின் இருப்பு வெறும் ஒரு சில தம்புடிகளாகத் தானிருந்தது. கையில் நல்ல பணத்தோடு ஜூலியஸ் வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் டாமி.

இதனிடையில், நேரம் நீர்வீழ்ச்சியாய் கொட்டித் தீர்ந்துக் கொண்டிருந்தது: 3.15, 3.20, 3.25, 3.27. ஒருவேளை குறிப்பிட்ட நேரத்துக்கு ஜூலியஸால் வரமுடியாமல் ஆகிவிட்டால்...? 3.29. வண்டியின் கதவுகள் மூடுவதற்கான மணியடித்தது. அப்போது ஒரு கை இவனுடைய தோளில் வந்து விழுந்தது.

''வந்துட்டேன், டாமி. உங்க பிரிட்டன் போக்குவரத்துத் துறை வேகமா ஓட்டினா நிறுத்திக் காரணம் கேட்குது! அந்தக் கிறுக்கனுங்க யார் யார்னு விளக்கு.''

''அது விட்டிங்டன் - அதோ - அங்கே - உள்ளே ஏறுபவன் - நல்லா பெருசா கறுப்பா இருக்கானே - ஆங், அவனே தான். அவனோட பேசிக்கிட்டுக் கீழே நிற்பவன், அவன் கூடவேயிருந்த அயல்நாட்டுக்காரன்.''

''நான் அவனுங்களை நெருங்கறேன். என் இரை யாரு?''

டாமி இந்த கேள்வியை யோசித்து வைத்திருந்தான். எனவே சொன்னான்: ''கையில பணம் இருக்கா?''

இதற்கு ஜூலியஸ் தோள்களைக் குலுக்கி விரிக்க, டாமியின் முகம் வாடி தொய்ந்தது.

''என்கிட்டே நானூறு டாலருக்கு மேல இப்போ இருக்காதுனு நினைக்கிறேன்.''

டாமியிடம் சிறு நிம்மதி விளைந்தது. இருந்தாலும் சொன்னான்: ''நீங்கள்லாம் மில்லியனர்... கோடீஸ்வரர்கள். பேச்சு தான். சரி, ஏறுங்க. உடனே இதோ உங்க டிக்கெட். விட்டிங்டன் தான் உங்க விருந்து.''

''எனக்கு விட்டிங்டனா!'' - இருளடைந்துப் போய் சொன்னார் ஜூலியஸ். அப்போது ஒரு கிரீச் ஒலியோடு ரயில் ஊரத் துவங்க துள்ளி அதில் ஏறிக் கொண்டார் இவர். ''என்ன இப்படி பண்ணிட்டே, டாமி!'' ரயில் நழுவி பிளாட்பாரத்தைக் கடந்து விட்டிருந்தது!

டாமி ஓர் ஆழமான உள்ளிழுப்பினை மேற்கொண்டான். அந்த போரீஸ் மனிதன் டாமியை நோக்கி வந்துக் கொண்டிருந்தான். தன்னைக் கடந்து அவன்

போகும் வரை காத்திருந்த டாமி மீண்டும் ஒருமுறை பின்தொடர்தலைத் துவங்கினான்.

வாட்டர்-லூ பகுதியிலிருந்து பிக்கா-டில்லி சென்றடைவதற்கான டிக்கெட்டை வாங்கினான் போரீஸ். அங்கு, ஸோ-ஹோ பகுதியில், காண்போரைத் திகைக்க வைக்கும் அளவுக்கு அலங்கோலமாய் கிடந்த பல சிறுசிறு சந்துகளில் நுழைந்து வெளியாகி, விரைந்து நடந்தான் அவன். சந்தேகத்தைத் தவிர்க்கும் இடைவெளி விட்டபடி, டாமியும் தொடர்ந்த வண்ணமிருந்தான்.

இந்த நீண்ட நடையின் முடிவில் சிறிய, முழுக்கவும் சிதைந்து சிதிலமடைந்த நிலையில் காணப்பட்ட சதுக்கம் ஒன்றினை வந்தடைந்தனர். அழுக்கும் அழுகலும் கலந்திருந்த காற்றில் கிடந்த அனைத்து வீடுகளும் அமானுஷ்ய தோற்றத்தில் இருந்தன. போரீஸ் சுற்றும் முற்றும் பார்த்தான்; தாமதியாது தன்னை ஒரு விளக்குக் கம்பத்துக்குப் பின்னால் திணித்து மறைத்துக் கொண்டான் டாமி. பகுதி முழுவதும் ஒரு பாலைவனமாய் ஓசையின்றிக் கிடந்தது. வசதியாக வண்டிகள் போக்குவரத்தில் ஈடுபடும்படி சந்துகளின் அமைப்பு இல்லாததன் காரணத்தால், எவ்வித வாகனங்களும் இல்லை. கள்ளத்தனமாய் மறுபடியும் ஒருமுறை சுற்றும் முற்றும் அவர் பார்த்த விதம், பின்தொடர்ந்து வந்த பார்வையாளனின் கற்பனையை வேக வேகமாய் தட்டி விட்டது! ஒரு வீட்டின் காம்பவுண்ட் கேட் வரை போய் நின்று, பிறகு அதனைத் திறந்துக் கொண்டு உள்ளே போய், அங்கு மூடியிருந்த நிலைக் கதவில்... ஒருவித ரிதம் அமைந்திருக்கும்படி தாளமிட்டு போரீஸ் தட்டியதை - கம்பத்தின் பின்னாலிருந்தபடியே டாமி கவனித்துக் கொண்டிருந்தான். ஆயத்தமாய் காத்திருந்தது போல் கதவு உடனே திறக்கப்பட்டது. திறந்தவனிடம் ஒன்றோ இரண்டோ வார்த்தைகளை இவர் உதிர்த்துவிட்டு, உள்ளே நுழைந்தார். மறுபடியும் மூடிய நிலைக்கு ஆனது கதவு.

இந்தக் கட்டத்தில், தான் என்ன செய்கிறோம் என்றே புரியாதவன் போல அடிகள் எடுத்து வைத்தான் டாமி. சாதுர்யமுள்ள எவனும் இதுபோன்ற ஓர் இக்கட்டில் என்ன செய்திருப்பானோ, அதைத்தான் இவனும் செய்திருக்க வேண்டும்; அதாவது *காத்திருத்தல்*. எங்கே நின்றுக் கொண்டிருக்கிறானோ அங்கேயே நின்றபடி, உள்ளே போனவன் வெளியேறும் வரை காத்துக் கிடந்திருக்க வேண்டும். டாமியோ, அவனுக்கே உள்ள துறுதுறு குணாதிசயத்தின் உந்துதலால், யோசிக்காமல் சட்டென்று ஒரு காரியத்தைச் செயல்படுத்தினான். இவன் முகபாவமே காட்டித் தருவது போல... இவன் மூளைக்குள் ஏதோ ஒன்று வெட்டி ஆட்கொள்ளத் துவங்கியது. அது நல்லது தானா என்றெல்லாம் சிந்திக்க அவகாசமே எடுத்துக் கொள்ளாமல், இவனும்,

நேராய் காம்பவுண்டை அடைந்து, கடந்து, நிலைக்கதவினை நெருங்கி, இயன்ற அளவு அப்படியே ஒத்துப் போகும்படி கேட்ட அதே ரிதத்தில் கதவினைக் குட்டினான்.

முன்பு போலவே, தயாராய் யாரோ பின்னால் காத்திருந்தது போல கதவு உடனே திறக்கப்பட்டது. காவலன் போல முழுக்கவும் வெட்டப்பட்டிருந்த கேசத்தால் ஆன ஒரு வில்லன் போன்ற குண்டன் கதவருகே தோன்றினான்.

''ம்?'' - அரைபடும் குரலில் கேட்டான் அவன்.

என்ன மடத்தனமான காரியமெல்லாம் கடந்த சில நிமிடங்களில் செய்து முடித்துள்ளோம் என்ற புரிதலே, விடை தெரியாத இந்தக் கேள்வியை எதிர்கொண்ட நொடியில் தான் டாமிக்குள் பொருளானது. ஆனால் யோசித்துத் தடுமாறி என்றெல்லாம் எதுவும் அவன் காட்டிக் கொள்ளவில்லை. சிந்தனைக்குள் அப்போது என்ன வார்த்தை வந்ததோ அதை அப்படியே கொட்டினான்: *''மிஸ்டர் பிரௌன்!''*

இவனை ஆச்சரியத்தில் தூக்கிப் போடும்படி, வில்லன் முகம் கொண்ட அந்தக் காவலாளி, உள்ளே நுழைய வழி விட்டுத் தள்ளிநின்றுக் கொண்டான். சொன்னான்:

''மேலே. மாடியில். இடப்பக்கம் இரண்டாவது அறை.''

அத்தியாயம் - 8

டாமியின் வீர சாகசங்கள்

திசை காட்டிய காவலாளியின் வார்த்தைகளால் அடுத்து என்ன செய்வது என்ற பின்னடைவு டாமிக்குள் விளைந்தாலும், துணுக்குறலை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. துடுக்குத்தனமான துணிவு இவனை இந்த தூரத்துக்கு அள்ளிக் கொண்டு வந்து விட்டிருக்கிறதென்றால், இன்னும் தூரத்துக்கு அது சுமந்து செல்லும் என்று நம்பித்தானே ஆக வேண்டியிருக் கின்றது! அரவமின்றி வீட்டுக்குள் நடந்து பின் உலுத்துப் போயிருந்த படிக்கட்டுகளில் ஏறலானான். வீட்டிலிருந்த எல்லாமுமே அசுத்தமாயும் அழுக்கேறியும் கிடந்தன. என்ன விஷயம் உள்ளே இருக்கிறது என்று பிரித்தறிய முடியாத அளவுக்கு தூசு ஏறியிருந்த படங்கள், ஆங்காங்கே சுவர்களில் சட்டம் போட்டுத் தொங்கிக் கொண்டிருந்தன. தலையை எந்தக் கோணத்தில் திருப்பி மேலே உத்திரத்தைப் பார்த்தாலும் அங்கு சாம்பல் நிறத்தில் கொழித்திருந்த பெரிய சிலந்திவலை இருந்தது.

டாமி அவசரம் காட்டாது நிதானமாய் முன்னேறினான். ஏறிய படிகளின் முடிவில் முதல் தளம் வந்தடைந்தபோது, கீழே காவலாளி பின் பக்கம் இருக்கும் ஓர் அறைக்குள் நுழைந்து விட்ட ஓசையைக் கேட்டான். ஆக, இதுவரை இவன் மீது ஒருவருக்கும் எவ்வித சந்தேகமும் விளையவில்லை. சொல்லப் போனால், வீடு வரை வந்து திருவாளர் ப்ரௌன் பற்றி விசாரித்து நுழைந்துள்ளது, இங்கு, இப்போது, ஒருவன் இயல்பாய் மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே இப்போது ஆயிற்று!

முதல் தளத்தில் கால் பதித்ததும், அடுத்து செய்ய வேண்டியது என்ன என்ற யோசனையில் சற்று நேரம் அப்படியே நின்றான் டாமி. இரு மருங்கிலும் மூடிய கதவுகள் கொண்ட அறைகளோடு அவனுக்கு எதிராய் ஒரு குறுகிய பாதை நீண்டுக் கொண்டே போனது. அருகில் இடது பக்கத்திலிருந்த அறையிலிருந்து ஒலி கம்மிய முணுமுணுப்பாய் குரல்கள் கசிந்துக் கொண்டிருந்தன. இந்த அறைக்குப் போகுமாறு அறிவுறுத்தப்பட்டுத் தான்

உள்ளே அனுமதிக்கப்பட்டுள்ளான் இவன். ஆனால் தற்சமயம் இவனை எது பரவசப்படுத்தி ஆட்கொண்டதென்றால்... வலது பக்கத்தில், அருகில், பாதி கிழிந்தும் கிழியாமலும் தொங்கிய ஒரு வெல்வெட் திரையால் மறைக்கப் பட்டு, உடனடியாய் இருந்த ஒரு சின்ன இடுக்கு... ஒதுங்குமிடம்! இடப்பக்கத்து அறைக்கு நேரெதிராய் வரும்படி அமைந்திருந்தது மட்டுமல்ல... அது இருந்த கோணம், மாடிப்படிகளின் மேல் பகுதியையும் அங்கு வந்து முடிந்த சில படிக்கட்டுகளையும் துல்லியமாய்க் காட்டின. இரண்டு அடி ஆழமும் மூன்றடி அகலமும் கொண்டிருந்தபடியால், ஒன்று, அல்லது அதிகபட்சமாய் இன்னொரு நபர், ஆகிய இருவர் ஒளிந்துக் கொள்ள ஏதுவான பகுதியாய் அது தெரிந்தது. இப்படிப்பட்ட இந்த சின்ன வளைகுடா... டாமியைக் கட்டுக் கடங்காமல் ஈர்த்தது. நடந்துள்ள விஷயத்தை இவனுக்கே உரித்தான மெதுவான ஆனால் அலுங்காத முறையில் அசை போட்டவன், 'திரு ப்ரௌன்' என்று சொல்லப்படும் பெயர், அப்படிப்பட்ட ஒரு தனி நபர் குறித்து அறிய பயன்படுத்தப்படும் வார்த்தை அல்ல. ஆனால், இவ்வார்த்தை, இந்தக் கூட்டத்துக்கு உரிய ரகசிய வார்த்தையாகவே இருந்தாக வேண்டும் என்று முடிவெடுத்தான். இவ்வார்த்தையை இவன் உபயோகப்படுத்தியது, ஏதோ அதிர்ஷ்டவசமாய் இவன் உள்ளே நுழைய அனுமதியைப் பெற்றுத் தந்துள்ளது. இதில், இதுவரை, யாரிடமும் துளியும் சந்தேகத்தை இவன் எழுப்பவில்லை. ஆனால் அடுத்த அடி என்ன என்பதை இவன் சீக்கிரத்தில் முடிவெடுத்தே ஆகவேண்டும்.

இடப்பக்கத்தில் இருக்கும் அறைக்குள் துணிச்சலாய் டாமி நுழைவதாய் வைத்துக் கொள்வோம். இவன் குறுக்குக் கேள்விகள் இன்றி வீட்டுக்குள் வெறுமனே அனுமதிக்கப்பட்டுள்ள நிதர்சனம் மட்டுமே போதுமான தாகுமா? மேற்கொண்டு முன்னேற, ஒருவேளை, அடுத்து வேறொரு ரகசிய வார்த்தை ஏதாவது தேவைப்படலாம்... அல்லது இவனும் இக்கூட்டத்தவன் தான் என்பதை விளக்க ஓர் அடையாளம்...! கீழே கதவு திறந்துவிடும் காவலாளிக்கு, நிச்சயமாய் அனைவரது முகமும் மனப்பாடமாய் தெரிந்திருக்க நியாயமில்லா விட்டாலும், இடப்பக்கத்து அறைக்குள் நிலைமை முழுக்கவும் வேறுபட்டு இருக்கும். ஆக மொத்தத்தில், அதிர்ஷ்டம் இதுவரை மறு பேச்சின்றி இவனுக்கு சேவகம் செய்துள்ளது டாமிக்கு விளங்கியது. ஆனாலும், அது அப்படியே இதிலும் தொடரும் என நம்பி முன்னேறுவது யோசிக்க வேண்டிய ஒன்று தான்! கதவைத் திறந்துக் கொண்டு இடப்பக்க அறைக்குள் நுழைவது ஒரு பூகம்ப அபாயம். இவன் பக்கத்து நிலைமையை இனியும் தொடர்ந்து சிதையாமல் தக்க வைத்துக் கொள்வ

தென்பது முடியாதது; உடனடியாகவோ அல்லது சற்று காலந்தாழ்த்தியோ இவனே இவனைக் காட்டிக் கொடுத்துவிடும் நிலை தான் அடுத்து காத்திருக்கின்றது... எனில், உள்ளே நுழைவது இவன் செய்யும் உலக மகா முட்டாள்தனமின்றி வேறு ஆகாது.

கீழே, அதே ரிதத்தில் கதவு தட்டப்படும் ஓசை கேட்டதும், துரிதமாய் ஒரு முடிவினைக் கையிலெடுத்துக் கொண்ட டாமி, அந்த இடுக்குக்குள் சட்டென நழுவி இறங்கியவன், யாருடைய பார்வைக்கும் இந்த ஒளியும் இடமோ அல்லது அதில் இருக்கும் இவனோ தெரிந்து விடாவண்ணம் ஜாக்கிரதையாக கிழிந்தத் திரையையும் இழுத்து இயன்ற வரை மூடினான். அந்த அரதப்பழசான திரையில் ஏகமாய் பொத்தல்களும் கிழிசல்களும் இருந்த படியால், வெளியே குறுகிய பாதைப் பகுதியில் நடைபெறும் அனைத்தும் டாமிக்கு சிறப்பாகவே தெரிந்தன. மறைந்திருந்தபடியே நடப்பவற்றைக் கண்காணித்துக் கொண்டிருப்பான்... எப்போது வெளியேறி அக்கூட்டத் தோடு இணைந்து கொள்ளலாம் என இவனுக்குள் முடிவாகின்றதோ, அப்போது வெளியேறி, சமீபத்தில் தான் உள்ளே நுழைந்தவன் போல் இணைந்து விடுவான்.

திருடன் போல மிருதுவாய் நடந்து ஒலியெழுப்பாது படிகளேறி மேலே வந்தவன், டாமி அறியாதவன். சமூகத்தால் வடிகட்டி எடுத்துப் போடப் பட்டவன் போல தோன்றினான் அவன். பிதுங்கித் தொங்கிக் கொண்டிருந்த இரக்கமற்ற பெரும் கருவண்டுக் கண்களும், இறுகிக் குற்றங்களுக்குத் தயாராயிருந்த முகவாயும், தோற்றம் நெடுகிலும் தெறித்த கொடூரமும்... இளையவனுக்குப் புதுசு.

ஒதுங்குமிடப் பகுதியை குண்டன் கடக்கும் போது, குண்டு குண்டாய் ஓசையெழும்படி அடர்த்தியான மூச்சு விட்டபடிப் போனான். இடப்புற அறை வாசலில் நின்ற அவன், மூடியிருந்த கதவில் ஒருவித தட்டுதலைத் திருப்பித் திருப்பி செய்து சமிக்ஞை தந்தான். உள்ளிருந்து ஒரு குரல் என்னவோ சொல்ல, இந்த மனிதன் கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். அப்படி அவன் செய்த போது அறையின் உள் பகுதி டாமிக்கு மின்னல் கீற்றாய் பட்டது. அங்கிருந்த இடம் முழுவதையும் அடைத்திருந்த ஒரு பெரிய மேஜையைச் சுற்றிலும் நாலைந்து நபர்கள் உட்கார்ந்திருப்பதாய் கணித்தான்; ஆனால், தலைமுடியை இறுக்கமாய் சவரம் செய்து, சின்னதாயும் கூராயும் பட்டாளத்தான் போன்ற தாடியோடு, நடுநாயகமாய், இக்கூட்டத்தை அழைத்த தலைவன் போல, முன்னால்நிறைய தாள்களோடு அமர்ந்திருந்த நெட்டையான ஓர் ஆசாமி தான், டாமியின் கருத்தை ஈர்த்து நிறுத்தியது. புது ஆசாமியாய் வந்த ஆள் உள்ளே நுழைந்ததும் நிமிர்ந்து அவனைப் பார்த்த

நெட்டை ஆசாமி, டாமியின் கவனத்தை ஆச்சரியப்பட வைத்து இழுத்த, சரியான மேலும் துல்லியமான உச்சரிப்போடு கேட்டான்: ''உன் கூட்டாளி எண்?''

''பதினான்கு, தலைவரே'' என்றான் நுழைந்தவன், உறுமலான குரலில்.

''சரியே.''

கதவு மறுபடி மூடப்பட்டது.

'நான் உள்ளே அவசரப்பட்டு நுழைந்து விடாதது தான் எத்தனை நல்லதாய் போயிற்று...' எண்ணிக் கொண்டான் டாமி. தப்பான ஏதாவது ஓர் எண்ணைத் தந்திருப்பேன்... எல்லாம் நீர்த்துப் போயிருக்கும். ம்...ம்... இதுதான் என் இடம்! ஹல்லோ... இதென்ன மறுபடியும் கீழ்க்கதவில் ரிதமாய் தட்டுமொலி...

கடைசியில் வந்த ஆசாமிக்கு நேரெதிரான வகையாயிருந்தான், தற்சமயம் வந்தவன். வந்தவனுக்குள் ஐரீஷ் செழுமையைக் கணக்கெடுத்தான் டாமி. நிச்சயமாய் இந்த மிஸ்டர் ப்ரௌனின் வட்டம் எங்கெல்லாமோ தொலைதூரங்களுக்குள் நீண்டுள்ளது. சீராய் தன்னை வைத்துக் கொள்ளாமல் கொடூர தோற்றத்தோடு திரியும் ஒரு திருட்டுப் பயல், வசீகரமாய் தோன்றும் ஒரு ஐரீஷ் ஜென்டில்மேன், வாடி வதங்கிய ரஷ்யன், மேலும் வல்லமை பொருந்தி நடுநாயகமாய் உட்கார்ந்துள்ள ஜெர்மானியன்! நிஜமாய், இது ஒரு, வாடிக்கையாய் காணக்கிடைக்காத, சற்றே அந்நியமாய்ப்படும், ஒருவிநோத அளவளாவலே! இப்படிப் பஞ்சவர்ணத் தொடர்புகள் கொண்டு ஆனால் அடையாளம் மட்டும் தெரியாத அந்த முழுச் சங்கிலியைத் தன்னுடைய விரல் இடுக்குகளில் விட்டு சுழற்றிச் சுழற்றி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் அந்த மர்ம மனிதன் - *யார்?*

இம்முறையும் அதே வழிமுறையே கடைபிடிக்கப்பட்டது. கீழேயிருந்து மேலே வந்தவனின் சமிக்ஞை தட்டுதல்... எண் விசாரித்தல்... 'சரி' என்ற அதிகாரப்பூர்வ அங்கீகரிப்பு... அதனால், உள்ளே நுழைதல்.

பிறகு, கீழே நுழைவாயில் கதவில் ரிதம் நிறைந்த கதவுத் தட்டுதல் இரண்டு முறை நிகழ்ந்தது. முதலில் வந்தவன் டாமிக்கு முன்பின் தெரியாதவனே... குமாஸ்தா போலத் தோன்றினான்... புத்திசாலித்தனம் முகத்தில் ஆடத் தோன்றிய அவன் முக்கியத்துவம் தராது உடையணிந் திருந்தான். அடுத்து வந்தவன், வேலை பார்த்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் சராசரி ரகம்... அவனுடைய முகம், இளையவனுக்கு பட்டும் படாமலும் பிரசித்தமான ஒன்றாய்த் தோன்றியது.

மூன்று நிமிடங்கள் கடந்த பிறகு வந்தவன்... அதிகார தோரணை தெரிக்கவும், அற்புதமான ஆடை அணிந்த கனவானாகவும் பிறப்பிலேயே சிறப்பான குடும்பத்தில் பிறந்தவன் என்ற உணர்த்தலிலும் இருந்தான். அவனது முகமும் கவனித்துக் கொண்டிருந்த இவனுக்கு பரிச்சியமில்லாததே.

கடைசியாய் வந்து சேர்ந்த இவனுக்குப் பிறகு ஒரு நீண்ட இடைவேளை விளைந்தது. காத்திருந்தான். மேற்கொண்டு ஒருவரும் வரவில்லை. வரவேண்டிய அனைவரும் இப்போது வந்து சேர்ந்து விட்டார்கள் என்று முடிவெடுத்துக் கொண்ட டாமி, ஜாக்கிரதையாய் மறைவிடத்திலிருந்து நகர்ந்து வெளியே வந்தான். அப்போது கீழே உருவான புது ரித ஒலி, மளமளவென இவனை மறுபடியும் வெல்வெட் துணி மறைவுக்குள் புகுத்திக் கொள்ளச் செய்தது.

படிகளேறி முதல் தளத்திற்கு இப்போது வந்தவன் அத்தனை வேகத்தில் வந்தபடியால், டாமி, இப்படியொருவன் இடப்புற அறையின் வாசலில் வந்து நின்று கொண்டிருக்கிறான் என்று புரிந்து கொள்வதற்குள் ஏறத்தாழ இவனுடைய முகத்துக்கு முகமாய் வந்து நின்றே விட்டான் அவன்.

வந்தவன், சின்னவன். தொய்ந்திருந்தான். மிருதுவாகவும் ஒரு பெண்ணின் நளினத்தோடும் தோன்றினான். கன்னத்தில் துருத்திக் கொண்டிருந்த நீண்ட எலும்புகள் இவன் ஒரு ஸ்லோவேனியா அல்லது ரஷ்ய ஆளாய் இருக்க வேண்டும் என உணர்த்தின... இது தவிர அவனிடம் பிறந்த நாடு பற்றிய வேறெந்த குறிப்பும் கிடைக்கவில்லை. திரையைக் கடக்கும் போது நின்ற அவன், தலையை மெல்லமாய் திரும்பி, அமானுஷ்யமாய் தகதகத்த அவனுடைய கண்களால், கிழித்திருந்த துணியைத் தாண்டி உள்ளே ஊடுருவினான். உள்ளே இப்படி ஓர் இளைஞன் ஒளிந்திருப்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கவே வாய்ப்பில்லை என்று டாமிக்கு அப்பட்டமாய் தெரிந்த போதிலும், தன்னையும் அறியாது, படு வேகமாய் இவன் நடுங்கினான். பார்த்துக் கொண்டிருந்த மனிதனைச் சுற்றிலுமிருந்து ஏதோ ஓர் அசாதாரண சக்தி... விசை... பீறிட்டுக் கொண்டிருப்பதாகப் படித்தான் டாமி. அம்மனிதன்... நுனி நாக்கில் விஷத்தைத் தயாராய் வைத்திருக்கும் பாம்பினை நினைவுபடுத்தினான்.

அடுத்த நொடியே, இவனது நினைப்பு சரியே என ஊர்ஜிதமானது. வந்த இந்தப் புது மனிதன் ஏனையவர்களைப் போலவே தான் அறைக் கதவினைத் தட்டினான் ஆனாலும் அவன் வரவேற்கப்பட்ட விதம் மாத்திரம் மிக வித்தியாசமிருந்தது. தாடிக்கார ஜெர்மானியன் உடனடியாய் எழுந்து நின்றான்... விரைந்து நெருங்கினான்... மீதிப் பேர்களும் தாடிக்காரன் செய்ததையே செய்தனர்... ஜெர்மானியன் சின்னவனுடைய கைகளைப் பிடித்து மரியாதையாய் குலுக்கினான்... அவனது பாதங்கள் இரண்டும் உடனே இணைந்து போலீஸ் விறைப்பில் நின்றன.

''நாங்கள் மரியாதைப்படுத்தப்பட்டு விட்டோம்'' என்றான் தாடிக்காரன், சின்னவனின் வருகையை. ''ஆமாம்... முழு மரியாதை செய்து விட்டீர்கள்

நீங்கள்! உங்களால் வர முடியாது போய் விடலாம் என்றே நான் நினைத்திருந்தேன்!''

சின்ன உருவத்தில் வந்திருந்தவன், சப்தமற்ற ரகசியக் குரலில் இதற்கு பதிலளித்தான். ''வருவதில் கடினங்கள் இருந்தன... கஷ்டங்கள் எதிர்ப்பட்டன. இது போல மறுபடியும் ஒரு முறை என்னால வர முடியாதுனு நினைக்கிறேன். ஆனா ஒரு சந்திப்பு முக்கியமா தேவைப்படுது... என்னுடைய கொள்கைகளை, பாலிஸிகளை முன் வைக்க. மிஸ்டர் ப்ரௌன் இல்லாம என்னால எதுவுமே பண்ண முடியாது. இது என்று இல்லை... எதையுமே அவர் இல்லாம என்னால மேற்கொள்ள இயலாது'' என்றவன், கண்களை அறைக்குள் துளாவ விட்டபடி கேட்டான்: ''அவர் இங்கே இருக்கார், இல்லே?''

ஜெர்மன்காரனின் உள்ளத்தில் ஏற்பட்டு விட்ட மாற்றத்தை, சிறு தயக்கம் தென்பட அவன் சொன்ன மறு பதிலில் காண முடிந்தது: ''ஒரு தகவல் எங்களுக்குக் கிடைச்சுது. அவரால தனிப்பட்ட முறையில இன்னிக்கு இங்கே வர முடியலே.'' அப்படியே நிறுத்திக் கொண்டான், அப்புறம் என்ன என்ற சிறு ஆர்வத்தை முடிக்காத வாக்கியத்தில் தொங்க விட்டு!

மிகக் குறுகிய சிரிப்பு வந்தவனின் முகத்தில் மெதுவாய் முளைத்துப் பரவியது. ஒரு சிறு வட்டப்பார்வையால், சுற்றி வர இருந்தோரின் சிரிப்பற்ற முகங்களைப் பார்த்தான்.

''ஆஹ்! எனக்குப் புரிகின்றது. அவருடைய அணுகுமுறை பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன். இருட்டுக்குள் இருந்தபடியே இயங்கும் அவர் யாரையும் நம்புவதே கிடையாது. இருந்தாலும், அவர், இப்போ, நம்மிடையே, *நமக்குள்ளே ஒருவரா* இங்கு இருப்பதும் சாத்தியமே...'' சொல்லிவிட்டு, கூடியிருந்தோரின் முகமெங்கும் சிறு திகில் பரவும் வரைத் திரும்பித் திரும்பி சுற்றிவர இருந்த அவர்களை அவன் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

ரஷ்யன், தனது முகவாயைத் தட்டிக் கொண்டிருந்தான். ''அப்படியே இருந்து விட்டுப் போகட்டும்'' என்றவன், ''நம் வேலையைத் தொடங்குவோம்'' என்றான்.

ஜெர்மன், களையிழந்துப் போன தனது நிலையைப் பிரயத்தனப்பட்டு களைந்து, பழையபடி இயல்பாய் மாற முயன்றான். அவன் இதுவரை உட்கார்ந்திருந்த நடுநாயக இருக்கையை வந்த சின்னவனுக்குச் சுட்டிக் காட்டினான். ரஷ்யன் மறுத்த போதிலும் அங்கு போய் தான் அவன் அமர வேண்டும் என தாடிக்காரன் வற்புறுத்தினான். ''அதுதான் ஒரே ஓரிடம்...''

என்றவன் சிறு இடைவெளிவிட்டு, ''... நம்பர் ஒன்'னுக்கு'' என்றான் முக்கியத்துவம் தந்து. ''எண் பதினாலு, கதவை அடைக்கட்டும்.''

மீண்டுமொரு முறை மூடிய கதவுகளை மட்டுமே பார்க்க வேண்டிய நிலைக்குள்ளான டாமியால், அறைக்குள்ளிருந்து, மூழ்கிப் போய் விளங்காமல் முணுமுணுப்பாய் வந்த குரலோசைகளை மட்டுமே கேட்க முடிந்தது. இதுவரை டாமி கேட்ட உரையாடல்கள் அவனுடைய ஆர்வத்தைக் கடைந்துப் பொங்கி வழியச் செய்து விட்டதால், உள்ளூர, முரண்டு பிடிக்கும் பிள்ளையானான் இவன்! அதிர்ஷ்டவசமாகவோ... அல்லது வேறெப் படியோ... விடுபட்டு விட்ட உரையாடலைத் தொடர்ந்துக் கேட்டேயாக வேண்டும் என்று ஆனான்!

கீழ்த்தளத்திலிருந்து எவ்வித அரவமும் வரவில்லை. காவலாளி மாடி வரை ஏறி வருவதற்கான சாத்தியங்களும் இல்லை. இதை, ஓரிரு முறை உற்றுக் கேட்டு ஊர்ஜிதம் செய்து கொண்ட டாமி, வெல்வெட் திரையை ஒதுக்கித் தலையை மட்டும் வெளியே விட்டு சுற்றும் முற்றும் பார்த்தான். குறுகிய பாதை முழுக்கவும் வெறிச்சோடிக் கிடந்தது. குனிந்து, இரு காலணிகளையும் கழற்றி, அவற்றை திரைக்குப் பின்னால் மறைவாய் போட்டு விட்டு, 'ஸாக்ஸ்' போட்டிருந்த கால்களால் பூனை நடை நடந்து வெளியே வந்த டாமி, இடப்புற அறையின் கதவில் தென்பட்ட சில இடுக்குகளின் அருகே மண்டியிட்டு அமர்ந்து, காது பொருத்தி, உன்னிப்பாய் கவனித்தான். டாமி செய்த இம்முயற்சி, இவனுடைய தீவிர ஆர்வத்திற்கு எதிராய் தான் அமைந்தது. பிரித்தறிந்துப் புரிந்துக் கொள்ளும்படி ஒன்றும் கேட்கவில்லை. அவ்வப்போது, யாராவது குரலை உயர்த்திப் பேசினால் மட்டும், ஓரிரு வார்த்தைகள் காதில் விழுந்தன... அவை, எரிந்துக் கொண்டிருக்கும் இவனுடைய தீராத ஒட்டுக் கேட்கும் ஆசைக்கு மேலும் நெய் வார்ப்பதாய் தான் அமைந்தன.

கதவின் தாழ்ப்பாளைப் பார்த்தான். இதை, ஒவ்வொரு கோணமாக டிகிரியாக... அறைக்குள் இருக்கும் ஒருவருக்குக் கூட ஒன்றும் புலப்பட்டு விடாத வகையில்... மிருதுவாய், இவனால் திருக முடியுமா? பெரும் கவனம் பொதித்து முயன்றால் செய்ய முடியும் என்று முடிவாகியது டாமிக்குள். மிக மெதுவாக, ஒரு சென்டி மீட்டரின் பாதிக்குப் பாதி அளவில், சொட்டுச் சொட்டாக, மூச்சுக் காற்றினை அதீத கவனத்தோடு இழுத்து நிறுத்தி... கதவுப் பிடியைத் திருகி சுற்றினான் டாமி. இன்னும் - இன்னும் கொஞ்ச தூரம் - இன்னும், இன்னும் - ஒஹ்... இது முடியவே முடியாதா! ஆஹ்... இதென்ன... இனி பிடியை கழற்றவே முடியாத இறுதிக்கல்லவா வந்துவிட்டது..?!

அப்படியே. அதே நிலையிலேயே கை இயக்கத்தை ஓரிரு நிமிடங்கள் நிறுத்திய டாமி, விட்டுக் கொண்டிருந்த சுவாசத்தையும் மெதுவாக நிறுத்தி முழுக்க இறுக்கிக் கொண்டு, கதவை அமுக்கினான். கொஞ்சமாய் உள்ளுக்குத் தள்ளினான். கதவு அடி பணிய மறுத்தது. டாமிக்குள் சிறு கோபம் மூண்டது. இன்னும் அதிக விசை தந்துத் தள்ளலாம்... அப்படி செய்தால் கதவு நிச்சயமாய் கிறீச்சிடும். இதைச் செய்ய உள்ளே குரல் திடுமென கூடி உயரும் வரைக் காத்திருந்தான். அது நடந்தது. அப்போது, கதவை அழுத்தமாய் உள்ளுக்குத் தள்ளுவதை முயன்றான். இப்போதும் ஏதும் நடக்கவில்லை. கை அழுத்தத்தை அதிகமாக்கினான். கடங்காரக் கதவு திறந்ததா? ம்ம்! இறுதியாய், நடப்பது நடக்கட்டும் என்ற ஒரு நிர்க்கதியான முடிவில், எவ்வித முன்னேற்பாடுமின்றி, வலு அத்தனையையும் சேர்த்துக் கதவைத் தள்ளினான். ஆனால் கதவு ஸ்திரமாய் நின்றது. இறுதியாய் உண்மை அவனுக்குப் புரிந்தது. உள்பக்கமாய் கதவு பூட்டப்பட்டோ அல்லது தாளிடப்பட்டோ உள்ளது!

ஒரு சில நொடிகளுக்கு டாமியின் கோபம் அவனை முழுக்க ஆட்கொண்டது. ''ச்சே...! நான் முட்டாள் - படுமுட்டாள்'' என்று சொல்லிக் கொண்டான். ''இது முதல்லேயே தெரிஞ்சிருக்க வேண்டாம்?''

பிறகு எரிச்சல் குளிரத் துவங்கியதும் எதிரிலுள்ள நிலைமையை எதிர்கொள்ளத் துணிந்தான் இவன். ஐயமின்றி முதலில் செய்ய வேண்டிய வேலை, கதவின் கைப்பிடியைப் பழையபடி அதன் நிலைக்குக் கொண்டு வருவதாகும். பிடியை அப்படியே விட்டு விட்டால், உள்ளேயிருக்கும் ஆண்கள் அதை நிச்சயமாய் கவனித்து விடுவார்கள். எனவே, மறுபடியும் அதே ஆழ்ந்த முயற்சியை மேற்கொண்டு, கடல் கடந்த சிரத்தையோடு கதவுத் திருகினை ஆரம்பநிலைக்கு ஆக்கினான். எல்லாம் சுபமாய் முடிய, நீண்ட பெருமூச்சினூடே இளையவன் எழுந்துக் கொண்டான். தோல்வியை ஒப்புக் கொள்ளும் மனோநிலை அதிகம் பெறாத டாமிக்கு, ஏற்பட்டுள்ள பெருமுயற்சி ஒன்றின் இழப்பினை ஜீரணிக்க நாழிகை பிடித்தது. மூலையில் முட்டிப் போட்டுவிட்ட நிலை டாமிக்கு ஏற்பட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது ஒதுக்கித் தள்ளிவிட்டு, பூட்டிய அறைக்கு உள்ளே என்ன பேச்சு இடம்பெறுகின்றது எனக் கேட்டே ஆக வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டிலேயே இருந்தான். வெற்றி, *வேண்டும்!* ஆகவே, ஒரு திட்டம் தோல்வியைத் தழுவி விட்டாலும், இன்னொரு திட்டத்துக்கு அவன் போயாக வேண்டும்.

தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். குறுகிய பாதையில் சற்று தள்ளி இடப்பக்கத்தில் அடுத்த கதவு ஒன்று இருந்தது. டாமி அமைதியாய் அதற்கு நழுவினான். அதை சிலநொடிகள் கவனித்து விட்டு பின் அதன் பிடியை முயன்றான். அது ஒத்துழைத்தது. உள்ளே வழுக்கினான்.

யாரும் வந்து தங்கியிராத அந்த அறை ஒரு படுக்கை அறைக்கான சாமான்களோடு இருந்தது. இந்த வீட்டின் ஏனையவற்றைப் போலவே இங்கிருந்த மரச்சாமான்களும் தூள் தூளாய் உதிர்த்துக் கொண்டு தானிருந்தன... இருந்த தூசிகளும் அளப்பற்கரியதாகவே இருந்தன.

ஆனால், இப்போதைக்கு, அவன் எதிர்பார்த்து வந்திருந்த விஷயம் மட்டுமே, டாமியின் கவனம் முழுவதையும் ஈர்த்து வைத்திருந்தது; அடுத்த அறைக்கும் இந்த அறைக்கும் வழி பண்ணித்தரும் ஒரு கதவு! அப்படி ஒன்று இருந்தது! உடனடியாய் நுழைந்த கதவினை ஜாக்கிரதையாய் சாற்றிவிட்டு, இந்த இன்னொரு கதவினை நெருங்கி இதை நெருக்கமாய் பரீட்சித்தான். மிகத் துருவாய் இருந்தது... நிச்சயமாய் சமீப காலங்களில் இது உபயோகப் படுத்தப்படவில்லை. பிடியினை மிக மிருதுவாக மேலும் கீழுமாய் ஆட்டியாட்டிப் பழக்கிய டாமி, அதனை மெதுவாக பின்னுக்குத் தள்ளும் போது அதீத ஓசையெல்லாம் எழுப்பாமல் இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்துக் கொண்டான். பிறகு, களத்தில் இறங்கி, பிடியினை முழுக்கப் பின்னுக்கு அமுக்கிக் கதவை உள்பக்கமாய் தள்ளுவதில் இறங்கினான் இவன். அமோக வெற்றி. சிறு ஓசை... கம்பு ஒன்று முறிக்கப்படுவது போன்ற ஓசை... இதனை ஏற்படுத்தி, டாமியால் உள்ளே நிகழும் உரையாடல் முழுவதையும் நன்றாய் கேட்குமளவுக்கு கதவு ஒருக்களித்து நின்றது. அறையின் நுழைவில், உள்ளே நடக்கும் எதையும் இவன் பார்க்க முடியா வண்ணம் வெல்வெட்டி னால் ஆன ஒரு திரைச்சீலை தரை வரை தொங்கிக் கொண்டிருந்தது. ஆனாலும், ஒலிக்கும் குரல்கள் யார் யாருடையவை என்பதை தேவையான அளவு பிரித்தறியும் அளவுக்கு டாமியால் முடிந்தது.

ஐரீஷ்காரன் போலத் தோன்றியவன் பேசிக் கொண்டிருந்தான். அவனுடைய வசீகரமான ஐரீஸ் குரலைத் தப்பாக புரிந்துக் கொள்ள முடியாது.

அடுத்த குரல் - இது போரீஸுடையதாயிருக்கலாம் என டாமி [illegible]த்த குரல் - பதிலளித்தது: ''நிச்சயம் காரியம் கைகூடும்னு உங்களால உத்தரவாதம் தர முடியுமா?''

''இன்னிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளே - உடனடியாகவா அல்லது சற்று காலந்தாழ்த்தியா என்பது உங்க இஷ்டம் - இந்த பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் அஸ்திவாரத்தையே உலுக்கிப் பார்க்கவல்ல தொடர் வன்முறைகள் அயர்லாந்தில் வெடிக்கும் என்று என்னால உத்தரவாதம் தரமுடியும்.''

சிறு இடைவேளை உருவாக, பின் வந்தது, மிருதுவாகவும் குறி சொல்வது போலவும் அமைந்திருந்த எண் ஒன்றின் குரல்: ''நல்லது! உங்களுக்குப் பணம் தரப்படும். போரீஸ், இதுக்குத் தேவையான ஏற்பாடுகளை பண்ணலாம்.''

போரீஸ் ஒரு கேள்வி கேட்டான்: ''வழக்கம் போல், ஐரீஸ் வழி அமெரிக்கர்கள் மற்றும் திரு பாட்டர் ஆகியோர் மூலமாகத் தானே?''

''அது சரியாக இருக்கும்னே நான் நினைக்கிறேன்!'' என்றது ஒரு புதுக்குரல், அட்லாண்டிக்கிலிருந்து குடி பெயர்ந்தோர் போன்ற தொனியில். ''இருந்தாலும், இப்போ நான் ஒரு முக்கியமானதைச் சொல்ல பிரியப்படறேன். விஷ்யங்கள், இங்கும் அங்குமா, சிக்கலாக ஆரம்பிச்சிருக்கு. முன்னமிருந்த இரக்கம், தயையெல்லாம் இப்போ காணோம். அமெரிக்காவை அதன் லிமிட்'லே அப்படியே நிறுத்தி வெச்சுட்டு, அதன் இடையூறும் தலையீடும் கிஞ்சித்தும் இல்லாம, தங்கள் கொள்கைகளை தாங்களே வகுத்தும் வழிநடத்தியும் செல்லத் துணிந்து விட்டது ஐரீஷ்.''

பின்வரும் பதிலை போரீஸ் சொன்ன போது அவருடைய தோள்களைக் குலுக்கி உணர்ச்சி ரீதியாகவும் விளக்கியிருக்கலாம் என்று தோன்றியது டாமிக்கு: ''இது நமக்கு அவசியமா? பணம் அமெரிக்காவிலிருந்து வந்துடுதில்லே?! அப்புறம் அவன் யாரைக் கட்டுப்படுத்தினா, என்ன! அல்லது யாராலக் கட்டுப்படுத்தப்பட்டதான் நமக்கென்ன! அந்த பாலிடிக்ஸ் நமக்கெதுக்கு?!''

''இருக்கலாம். ஆனாலும், முக்கியமான கஷ்டம் என்னவென்றால்... தளவாடங்கள் மற்றும் யுத்த உபகரணங்களைக் கொண்டு வந்து குவிப்பதில் உள்ள பிரச்னை தான்'' என்றான் ஐரீஷ்காரன். ''பணம் சுலபமா இந்தப் பகுதிக்கு பட்டுவாடா ஆயிடுது - இந்த விஷயத்துல, இங்குள்ள நண்பர்களுக்கு நன்றி.''

மற்றொரு குரல் - இது, உயரமாய், அதிகார தோரணையில், எங்கோ பார்த்த முகம் போலுள்ளதே என டாமியை எண்ண வைத்தவனின் குரல் - சொன்னது: ''இவையெல்லாம் அயர்லாண்டின் பெல்ஃபாஸ்ட் மக்கள் கேட்க நேரிட்டால் அவர்களின் மனம் எப்படி உணருமோ!''

''அதை விடுவோம். பேச்சை வளர்க்க வேணாம். இப்போ - அந்த இங்கிலீஷ் செய்தித்தாளுக்குத் தரவேண்டிய கடன் பற்றிய விஷயம் - இதுக்கு விளாவாரியாவும் திருப்திகரமாகவும் ஏற்பாடுகள் பண்ணியாச்சில்லே, போரீஸ்?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''நல்லது. மேலும் நமக்குத் தேவைப்பட்டா, அதிகாரப்பூர்வமான மறுப்பை மால்கோ தரும்.''

சிறு இடைவேளை. பிறகு, புத்திசாலித்தனமான ஜெர்மானியனின் குரல் அமைதியை உடைத்தது:

''நாம அமைத்திருக்கும் பல கூட்டணிகளிலிருந்து பெறப்பட்டுள்ள அறிக்கைகளின் ஒட்டுமொத்த சாராம்சத்தை உங்க எல்லார் முன்னிலையிலும் சமர்ப்பிப்பதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். திரு ப்ரௌனால். சுரங்க ஏற்பாடுகளைப் பொறுத்தவரை - முழு திருப்தி. ரெயில்வேயை நாம நம் கட்டுக்குள் கொண்டு வந்தாகணும்.''

இந்த சிறு அறிக்கைக்குப் பிறகு அங்கு ஒரு நீண்ட அமைதி நிலவியது. தாள்கள் திருப்பப்படும் ஓசையும் அவ்வப்போது ஜெர்மானியன் தந்த விளக்கங்களாலும் மட்டுமே இந்த அமைதியானது உடைபட்டது. பிறகு மேஜையில் மெதுவாய் போடப்படும் விரல் தாளத்தைக் கேட்டான், டாமி.

''ஆங்... தேதி, நண்பரே?'' என்றது, எண் ஒன்று.

''29 அன்று.''

இதை ரஷ்யன் முக்கியப்படுத்தி எடுத்துக் கொண்டது போலத் தோன்றியது. ''இது ரொம்ப சீக்கிரம்.''

''எனக்கும் தெரியும். ஆனா இது உழைப்பாளிக் கட்சியின் முக்கியத் தலைவர்களால் முடிவான ஒன்று... இதுல நாம அதிகம் மூக்கை நுழைக்க வழிவகை தென்படலே. இது, முழுக்க முழுக்க அவங்க சொந்தமா நடத்துவது போலவே அமைந்தாகணும் - இதுதான் முக்கியம்.''

வியப்படைந்தவன் போல, கமுக்கமாய் சிரித்தான் ரஷ்யன். ''ஆமாமாம்'' என்றான் அவன். ''அது நிஜம் தான். நாம அவங்களை நம்முடைய ஆதாயத்திற்காக உபயோகப்படுத்திக்கிறோம் என்பது துளிக்கூட அவங்களுக்குத் தெரிஞ்சுடக் கூடாது. அவங்க, பொய்க் கலப்பேயற்ற, மிக மிக உண்மையான ஊழியனுங்க - அவங்களோட இந்த மதிப்பு தான் நமக்கு விலை! இதுல ஒரு வேடிக்கையான விஷயம் - உண்மையான ஊழியனுங்க இல்லாம புரட்சி பண்ணவே முடியாது! சாமானிய ஜனங்களின் பலம், தவறாய் போய் முடியவே முடியாது.'' நிறுத்தி இடைவெளி தந்தவன், ஏதோ சொன்ன வாக்கியங்கள் அவரை மிகவும் திருப்தி செய்தவை என்பது போல, மறுபடியும் சொன்னார்: ''ஒவ்வொரு புரட்சியும் உண்மை பிசகாத நேர்மையான பொது ஜனங்களாலும் சாமானியர்களாலும் ஆக்கப்பட்டதே! ஆனால், அவர்கள், உடனடியாகவேத் தள்ளி ஒதுக்கப்பட்டு விடுவார்கள்!''

கடைசியாய் சொன்னதில் வஞ்சக தொனி நின்றது.

ஜெர்மன் இடைபுகுந்தான்: ''இந்த விஷயத்தை எண் பதினாலு கவனிக்கட்டும்.''

இப்போது உறுமலாய், ''சரி தலைவா'' என்ற முணுமுணுப்பு விளைந்தது. பிறகு உடனேயே, ''ஒருவேளை நான் பிடிபட்டு விட்டால்...'' என்ற கேள்வியும் அதே பன்றி உறுமலாய் வந்தது.

''உன்னை வெளியே கொண்டு வர மிகச் சிறந்த சட்டப் பாதுகாப்புத் தரப்படும்'' - பதிலளித்தான் ஜெர்மானியன், சாந்தமாக. ''போலீஸ் தேடிக்கிட்டு இருக்கும் விமரிசையான திருடன் ஒருவனுடைய கை ரேகைகள் பதிவு செய்யப்பட்ட கையுறையைத் தான் நீ அணிந்திருப்பே. அதனால பயம் வேண்டாம்.''

''ஓ, நான் கொஞ்சமும் பயப்படலே, தலைவா. நடப்பதெல்லாம் ஒரு நல்ல முடிவுக்காகத் தானே. தெரு முழுக்க ரத்த ஆறு ஓடும் பாருங்க'' - இறுக்கத்தை ரசிப்பவனாய் பேசினான். ''இதேபோல கனவுகள் சில சமயம் எனக்கு வருது. வைரங்களும் வைடூரியங்களும், யார் வேண்டுமானாலும் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம் என்பது போலத் தரையெல்லாம் சிதற ஓடிக்கிட்டேயிருக்கு!''

டாமி ஒரு நாற்காலி தள்ளப்படும் ஓசையைக் கேட்டான். பிறகு எண் ஒன்று பேசியது: ''அப்படினா, எல்லாம் சிறப்பா ஏற்பாடாயிடுச்சுனு எடுத்துக்கலாம். நன்று. நமக்கு வெற்றி நிச்சயம் தானே?''

''நா... நா... நான்... அப்படித்தான் நினைக்கிறேன்'' - ஜெர்மானியன் அவனுக்குள் எப்போதும் இருக்கும் நம்பிக்கைத் தளர்ந்து பேசினான்.

''என்ன தடுமாற்றம்?''

''ஒண்ணுமில்லே. ஆனா - ''

''ஆனா என்ன?''

''உழைப்பாளிக் கட்சியின் தலைவர்கள், உழைப்பாளிகளின் வர்க்கமான அவங்களுடைய துணையில்லாம, நீங்க குறிப்பிட்ட மாதிரி நம்மால ஒண்ணும் செய்ய முடியாது. 29ஆம் தேதியன்று பொது வேலை நிறுத்தத்தை அவங்க அறிவிக்கவில்லை என்றால் - ''

''அவங்க அப்படி ஏன் செய்யணும்?''

''நீங்களே சற்று முன் குறிப்பிட்டது போல - அவங்க படு உண்மையானவங்க, பொய்க்கலப்பே இல்லாம. நடைபெறும் அரசாட்சியும் அரசாங்கமும் பைசா பெறாத கூட்டம் என்று அவங்க நம்ப நாம எல்லா ஏற்பாடுகளையும் பண்ணியிருந்தாலும் கூட... கொஞ்சமாகவாவது, அவங்களுக்குள்ளே, இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையும் பக்தியும் இல்லாம போகாது என்றுதான் நான் நினைக்கிறேன்.''

''ஆனா - ''

''எனக்குத் தெரியும். எல்லாரும் ஒண்ணா கவர்ண்மெண்ட்டை ஒதுக்கறாங்க... விடாம எதிர்க்கிறாங்க. எனக்கும் தெரியும். ஆனா, ஒட்டு மொத்தத்துல, பொது மக்களின் கருத்து, அரசாங்கத்துக்குச் சாதகமாத் தானிருக்கு. அதுக்கு எதிரா இவனுங்க போக மாட்டானுங்க.''

மறுபடியும் ரஷ்யனின் விரல்கள் மேஜையில் தாளம் போட்டன. ''இந்த விஷயத்துல... நண்பர்களே. நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து எனக்கொரு தகவல் இருக்கு. நம் வெற்றிக்கு சாதகமா ஓர் ஆவணம் உயிர்ப்போடு இருக்கு என்பதே அது.''

''அது நிஜம்தான். அந்த ஆவணங்கள் மட்டும் கிடைக்கப் பெற்று அவற்றையெல்லாம் இப்போது மண்ணாண்டுக் கொண்டிக்கும் தலைவர்கள் முன்னாடி விரித்து வைக்கப்பட்டால், அதன் விளைவுகள் மிக மிக உடனடியா அமையும். பிரசுரித்து... இங்கிலாந்து முழுக்க ஒலிபரப்பி நொடி தாமத மில்லாம புரட்சி வெடித்துவிடும். இறுதியாகவும் முடிவாகவும் அரசாங்கம் உடைந்து ஒட்ட வைக்க வழியேயில்லாமல் சுக்கு நூறாகிவிடும்.''

''பின்னே, இதுக்கு மேல நமக்கு வேற என்ன தான் வேணும்?''

''அந்த ஆவணங்களே'' என்றான் ஜெர்மானியன், பட்டென்று...!

''ஆஹ்... அந்த ஆவணங்கள் உங்க கையிருப்புல இல்லையா?''

''கிடையாது''

''வேற யாருக்காவது அவை எங்கேயிருக்கு எனும் சேதி தெரியுமா?''

''ஒரு பெண்ணுக்கு.''

டாமிக்கு மூச்சு நின்றே போனது.

''ஒரு பெண்?'' - தூஷிக்கும் வகையில் உயர்ந்து நின்றது ரஷ்யனின் குரல். ''அவளை இன்னுமா நீங்க பேச வைக்கலே? ச்சே...! எங்க ரஷ்யாவுல இதுபோன்ற பெண்களை வாயைத் திறந்து உண்மையைக் கக்க வைக்க நிறைய வழிகள் இருக்கு.''

''இந்த கேஸே வேற'' என்றான் ஜெர்மானியன், கடுகடுப்பும் கோபமும் சேர்ந்து.

''எந்த வகையில இது வித்தியாசமானது?'' என்றவன், சிறு இடைவெளி தந்துவிட்டு தொடர்ந்தான்: ''அந்தப் பொண்ணு இப்போ எங்கேயிருக்கா?''

''அந்தப் பொண்ணு...''

''ஆமாம். அந்தப் பொண்ணுதான். சொல்லு...''

''அவ...''

ஆனால், இதற்கு பிறகு மேற்கொண்டு டாமி ஒன்றையுமே கேட்க வில்லை. அவன் தலையில் அதிவேகத்தோடு மோதுவது போல ஒரு பேரடி இறங்க... எல்லாமும் இருண்டன.

அத்தியாயம் - 9

டுபென்ஸ் ஏற்றுக் கொண்ட புதுவேலை

இரண்டு ஆடவர்களையும் பின்தொடர்ந்து டாமி முன்னேறிச் சென்றதும், அவனோடு கூடச் செல்லாமல் கட்டுப்படுத்திக் கொண்டு அடங்கிப் போனாள் டுபென்ஸ். இருந்த போதிலும், இவளுடைய கற்பனை கணக்குகளெல்லாம் சரியே என்று நிஜத்தில் நடக்கும் அனைத்தும் வரிசையாய் ஊர்ஜிதம் செய்ததால், இது ஊட்டித் தந்த ஆறுதலின் பலத்தில், இவளால் எத்தனை அளவுக்கு சிறப்பாய் இயங்க முடியுமோ அத்தனை பிரமாதமாய் இருந்தாள். அந்த இரண்டு நபர்களும் ஐயமின்றி அடுக்ககத்தின் இரண்டாம் தளத்திலிருந்து தான் வந்தார்கள்... இது, மேலும் 'ரீட்டா' எனும் ஒரு சிறுநூலிழை ஆகியவற்றைப் பிடித்துக் கொண்டு, இளஞ்சிங்கங்கள் லிமிடெட், ஜானே ஃபின்னைக் களவாடியவர்களைத் தேடி சுறுசுறுப்பாய் இயங்க ஆரம்பித்திருந்தது.

இப்போதைக்கான கேள்வி, அடுத்து என்ன செய்வது? வெறுமனே உட்கார்ந்துக் கொண்டு காலுக்கடியில் புற்கள் வளர்வதைப் பார்த்தபடி இருப்பது டுபென்ஸுக்கு என்றுமே பிடிக்காத ஒன்று. பின்தொடர்தலில் டாமியிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டதில், பிடிப்பற்று தொங்குவதாய் உணர்ந்தாள் இவள். எழுந்து அடுக்கக பிரதான நுழைவாயிலின் கதவு வரை ஒரு நடை நடந்தாள். அங்கு ஒரு சிறு பொடிப்பயல் இருந்தான் - லிஃப்ட் பையனாக இருக்க வேண்டும். கதவு, நாற்காலி இதிலெல்லாமிருந்த உலோகப் பகுதிகளைப் பளபளக்க வைக்க எதையோ தடவி தேய்த்துக் கொண்டி ருந்தான். தற்சமயம் பிரபலமாயிருந்த ஒரு பாடலை முழு ஈடுபாட்டோடும் போதுமான அளவு சரியாகவும் 'விசில்' அடித்துக் கொண்டிருந்தான் அவன்.

டுபென்ஸ் அறைக்குள் வந்திருப்பதை ஓரப்பார்வை பார்த்தான் பயல். டுபென்ஸுக்குள் ஒருவிதமான துறுதுறுப்பும்... துடுக்கும் உண்டு. இவற்றால் சங்கோஜமின்றி இவளால் பொடிசுகளோடு சுலபமாய் இழைய முடிந்தது.

இருவருக்குள்ளும் கனிவு நிறைந்த நெருக்கம் உடனடியாய் உருவாகிவிடும். எதிரியின் கூடாரத்துக்குள்ளேயே இருக்கும் போது வசதியான ஓரிரு கூட்டாளிகள் அமைவதைத் தட்டக் கூடாது என்றோர் எண்ணம் இவளுக்குள் வலுத்தது.

''ஹாய் வில்லியம்...'' என்று, ஆஸ்பத்திரியில் காலையில் கண் விழித்ததும் ஒரு நல்ல நர்ஸ் மிக ஆதரவாய் அகமகிழ்ச்சியோடு வணக்கம் சொல்லும் குதூகலத்தோடு குறிப்பிட்ட டூபென்ஸ், ''பளபளப்பு வருதா?'' எனக் கேட்டாள்.

பதில் சொல்லும் நோக்கத்தோடு இளித்தான் அந்தப் பயல். ''ஆல்பர்ட், மேடம்'' என்று திருத்தினான்.

''அப்படியே ஆகட்டும், ஆல்பர்ட்'' என்றாள் டூபென்ஸ். அறையைச் சுற்றி ஓர் அதிசயப்பார்வைப் பார்த்தாள். இப்படிப் பார்ப்பதை ஒருவேளை ஆல்பர்ட் கவனிக்காமல் விட்டு விட்டாலும் அவனை இது சென்றடைய வேண்டும் என்ற இலக்குடனே, மிக விசாலமாய் ஒரு சுற்றுப் பார்வை பார்த்தாள் இவள்! பயலின் பக்கமாய் குனிந்தவள் குரலைத் தாழ்த்தினாள்: ''உன்னோட ஒரு வார்த்தை பேசணும், ஆல்பர்ட்.''

இரும்புப் பகுதிகளுடனான வேலையை அப்படியே நிறுத்திய ஆல்பர்ட், கொஞ்சமாய் வாயை 'ஆ'வென திறந்தான்!

''இதோ பார்! இது என்னனு உனக்குத் தெரியுமா?'' - ஒரு நாடகத்தனம் சரளமாய் பாய்ந்தோட, தனது கோட்டின் இடப்புறத்தை சரேலென்று விலக்கி உள்ளே இருந்த சின்ன பளபளத்த அடையாளத் தகட்டைக் (Badge) காட்டினாள். அது என்ன என்பது பற்றிய எவ்வித ஞானமும் ஆல்பர்ட்டுக்கு இருக்காது என்பது நிஜம். இது, போர்க்காலத்தில், மதகுருக்களுக்குப் போர்ப்பயிற்சி தரும்போது, அவர்களுக்குத் தரப்பட்டிருந்த அடையாளத் தகடு. இவளிடமிருந்தது. நேற்று, பூக்கள் சிலவற்றைக் குத்திக் கொள்வதற்காக உள்பக்கமாய் இதனை ஒரு 'பின்' போல பயன்படுத்தினாள் இவள். டூபென்ஸுக்குத்தான் கூர்மையாய் தேடும் கண்கள் உள்ளனவே... அவை, ஆல்பர்ட்டின் அரை டிராயர் பைக்குள்ளிருந்து துருத்திக் கொண்டிருந்த ஒரு மர்ம நாவலைப் பார்த்து விட்டன...! இப்போது, இவளுடைய கேள்விக்கு உடனடியாய் பெரிதான பயலின் கண்கள், போட்ட திட்டம் சரியே என இவளுக்குள் உணர்த்தின - மீன், தூண்டிலில் அகப்பட்டுவிடும்!

''அமெரிக்க துப்பறியும் இலாக்கா'' என கிசுகிசுத்தாள், கேட்ட கேள்விக்கு பதிலாய்.

ஆல்பர்ட் இதற்கு விழுந்து விட்டான்!

''தெய்வமே...'' என்று முணுமுணுத்தான் அவன், மிகக் களிப்பாய்.

இருவருக்குள்ளும் சரியான இணக்கத்தை ஏற்படுத்திவிட்ட தொனியில் அதிகாரமாய் தலையசைத்தாள் டூபென்ஸ். ''யாரைத் துரத்திக்கிட்டு வந்திருக்கேன்னு தெரியுமா?'' என்று படு உல்லாசமாய் விசாரித்தாள்.

அகண்டக் கண்களை இன்னும் இயல்பாக்காத ஆல்பர்ட் மூச்சடைக்க ஆர்வமாய் கேட்டான்: ''இங்கிருக்கும் பிளாட்டுல யாரையாவது...?''

டூபென்ஸ் வீரமாய் தலையசைத்தபடி ஒரு விரலை அதிகாரமாய் தூக்கி மாடிப்பக்கம் காட்டினாள். ''எண் 20. அவளை வாண்டே - மேயர் அப்படினு சொல்லிக்கிறா. வாண்டே - மேயர்! ஹா! ஹா!''

ஆர்வம் பொங்கிப் பொங்கி வழிய ஆல்பர்ட் கேட்டான்: ''குற்றவாளி?''

''குற்றவாளி?! ஆமாம்... நான் அப்படித்தான் சொல்வேன். 'ரெடி - ரீட்டா'னு இவளை அமெரிக்கால கூப்பிடுவாங்க.''

''ரெடி-ரீட்டா'' - உச்சமான குரலில் திருப்பிச் சொன்னான்.''ஓஹ்... இது சினிமாவுல வர்ற மாதிரியே இல்லே?''

அப்படித்தான் இருந்தது! சினிமாவுக்கு அடிக்கடி போய் வரும் பிரஜை, இந்த டூபென்ஸ்.

''இவ எத்தனை மோசமானவனு அன்னீ பல தடவை சொல்லியிருக்கா'' - தொடர்ந்துக் கொண்டிருந்தான் பயல்.

''யாரது அன்னீ?'' - சும்மா கேட்பது போல் விசாரித்தாள் இவள்.

''வீட்டைக் கவனிச்சுக்கிறவ. அவ இன்னிக்குக் கிளம்பிடறா. பலப்பல தடவை அன்னீ என்கிட்டே சொல்லியிருக்கா: 'நான் சொல்றதைக் குறிச்சு வெச்சுக்கோ, ஆல்பர்ட், கூடிய சீக்கிரத்துல இவளைத் தேடிக்கிட்டு போலீஸ் வந்தா நான் ஆச்சரியப்பட மாட்டேன்' இது மாதிரி சொல்வா. அவ பார்க்கறதுக்கு ரொம்ப முரடா... மிரட்டலா இருக்கா, இல்லே?''

''ஏய்... அவ எமரால்டு அணியறாளா?''

''எமரால்டு? மரகதக் கல். பச்சைக் கல் இல்லே?''

டூபென்ஸ் ஒப்புதலாய் தலையசைத்தாள். ''அதுக்காகத்தான் அவளை நாங்க துரத்திக்கிட்டு வந்திருக்கோம். உனக்கு கிழப்பய ரைஸ்டேலைத் தெரியுமா?''

ஆல்பர்ட் மறுத்துத் தலையசைத்தான். அப்பாடி!

''பீட்டர் ரைஸ்டேல்? 'ஆயில் கிங்' - எண்ணெய்க் கிணறுகளின் ராஜா.''

சிந்தித்தான் அவன். பிறகு ''ஏதோ கேள்விப்பட்ட மாதிரி இருக்கு'' என்றான்!

''மின்னும் மரகதங்கள். எல்லாம் அவனுக்குச் சொந்தமானவை. உலகிலேயே அதி அற்புதமான எமரால்டு தொகுப்புகள். மில்லியன் மில்லியன் டாலருக்குப் போகும்!''

''ஆஆஆஆ'' - பரவசமாய் பயலிடமிருந்து எக்காளம் பீறிட்டது. ''ஒவ்வொரு நிமிஷமும் படத்துல வர்ற மாதிரியே இங்கே நடந்துக்கிட்டிருக்கு.''

தான் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களின் வெற்றிக் களிப்பில், சிரித்தாள் டூபென்ஸ்.

''இதுவரைக்கும் எங்களால மிகச் சரியா நிரூபிக்க முடியலே. ஆனா, அவ மேல நாங்க கண் வெச்சுக்கிட்டு தானிருக்கோம். இந்தத் தடவை...'' நீண்ட தூரத்தைப் பார்த்தபடி இமை கொட்டிய இவள் சொன்னாள்: ''... இந்தத் தடவை நவமணி கற்களைத் தூக்கிக்கிட்டு சுலபமா அவளால தப்பிச்சுட முடியாது.''

களிப்பின் உச்சத்துக்குப் போய் விட்டதை பிதுங்கி விழுந்த இன்னொரு ''ஆஆஆஆ'' மூலம் காண்பித்துக் கொண்டான் ஆல்பர்ட் பயல்!

''நினைவிருக்கட்டும் தம்பீ... இதுபற்றி ஒரு வார்த்தை... மூச்...'' என்று திடுதிப்பென்று குறிப்பிட்டாள் டூபென்ஸ். ''நீ புத்திசாலியானு எனக்குத் தெரியலே... அமெரிக்க பயலா இருந்தா ஒரே பார்வையிலேயே என்னால பய எப்படினு சொல்லிட முடியும்.''

விறுவிறுப்பான ஆவலாய், ''ஒரு வார்த்தை பேசுவேனா நான்...!'' என்று உறுதியளித்தான் ஆல்பர்ட். ''இதுல நான் பண்ண ஏதாவது இருக்கா? நிழலாய் பின்தொடர்வது, இல்லே, இது போல ஏதாவது?''

இதைக் காது கொடுத்துக் கேட்பது போல காட்டிக் கொண்ட டூபென்ஸ், பின் மறுத்துத் தலையசைத்தாள். ''இப்போதைக்கு இல்லை. ஆனா உன்னை என் நினைவிலேயே நான் வெச்சிருப்பேன், தம்பீ. ஆங்... என்னது அது, யாரோ ஒரு பொண்ணு இன்னிக்கேக் கிளம்பறதா சொன்னியே...''

''அன்னீயா? என்னவோ... தகராறு போல... கிளம்பறா. இவ கிளம்பறதா ஊருரா டமாரம் அடிச்சும் கூட, மாற்றா இன்னொருத்தி கிடைக்கலே.''

''அப்படியா?'' என்று சிந்தனையாய் கிரகித்துக் கொண்டாள் டூபென்ஸ். ''ஆங்... எனக்கு என்னத் தோணுதுனா...''

ஒரு சிறு எண்ணம் அவள் சிந்தனைக்குள் உருவாகிக் கொண்டிருந்தது. ஒருசில நிமிடங்கள் யோசித்துக் கொண்டிருந்தவள், பிறகு ஆல்பர்ட்டின் தோள்களைத் தட்டிக் கொடுத்தாள்.

"கவனி கண்ணா... என் மூளைக்கு நல்ல வேல கிடைச்சிடுச்சு. உனக்கு ஒரு உறவுக்காரப் பொண்ணோ, அல்லது ஒரு தோழியோ...! இந்த வேலைக்கு ரொம்பவும் உகந்த ஓர் ஆள் இருக்கிறதா நீ சொன்னா... அது எப்படி இருக்கும், ம்? நான் சொல்றது புரியுதா?"

"ஆஹாஹா" என்றான் ஆல்பர்ட், இறக்கை முளைத்துப் பறக்காத குறையாய். "நான் இருக்கேன். என்கிட்டே விடுங்க" என்றான் துள்ளி. "அத்தனை சமாச்சாரத்தையும் சொடக்குப் போடறதுக்குள்ளே நான் முடிச்சுடறேன்."

"சுட்டிப்பய!" எனப் பாராட்டிய டூபென்ஸ், "உடனடியா அந்தப் பொண்ணு வந்து வேலைக்குச் சேரத் தயார்னு நீ சொல்லணும். இதுக்கு சம்மதிக்காறாங்களானு நீ எனக்கு உடனடியா சொல்லு. நான் நாளைக்குக் காலைல பதினோரு மணிக்கு வரேன்."

"எந்த இடத்துல இந்த விஷயத்தை நான் வந்து உங்ககிட்டே சொல்லணும்?"

"ரிட்ஸ்."

இதற்கு, ஆல்பர்ட் இவளைப் பொறாமையாய்ப் பார்த்தான்.

"நல்ல வசதியான இடம். சூப்பரான வேலை. ஜாலியா இருக்கும் இல்லே, துப்பறிய?"

"நிச்சயமா" என்று அவன் ஆசையை இன்னும் மூட்டினாள் டூபென்ஸ். "அதுவும் இந்தக் கிழவன் பீட்டர் பில்லுக்கான தொகைகளைக் கட்டும் போது! ஜாக்கிரதை கண்ணு. வெளியே தெரிஞ்சா, நீ வேலை போய் மண்ணைக் கவ்வ வேண்டியதுதான்."

இந்த அறிவிப்போடு தனது புதுக்கூட்டாளியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டவள், காலையில் தான் மேற்கொண்ட வேலைகளில் நல்ல திருப்தி அடைந்தவளாய், தெற்குக் குடியிருப்பிலிருந்து ஊக்கத்தோடு வெளியேறினாள்.

நமுவவிட அதிகம் அவகாசம் கிடையாது. ரிட்ஸில், தான் இருக்கும் இடத்திற்கு நேராகச் சென்றவள், சில சின்ன குறிப்புகளைக் கார்ட்டருக்கு எழுதினாள். இவற்றைத் தபாலில் சேர்ப்பித்துவிட்டு, டாமி அதுவரை வந்து சேராதபடியால் (இது ஒன்றும் இப்போதைக்கு டூபென்ஸை அதிக வியப்பாக்கவில்லை!), ஒரு சிறப்பான ஷாப்பிங் செல்ல முடிவெடுத்துக் கிளம்பினாள். நடுவில் கொஞ்சம் சாப்பிடவும் ஐஸை ருசிக்கவும் இவள் எடுத்துக் கொண்ட நேரங்களைத் தவிர, இவள் மேற்கொண்ட கடை ஆராய்ச்சிகள் இவளை மாலை ஆறு மணிவரை ஆக்கிரமித்து வைத்தன. வாங்கிய சாமான்களில் முழு நிறைவு இருந்தாலும் ஓடியோடி இளைத்துக்

களைத்தக் குதிரையாய்தான் திரும்பினாள். மலிவான துணிக் கடையில் பிரயாணத்தைத் தொடங்கி இரண்டாம் விலைக்கு விற்பனைச் செய்யும் துணிக்கடைகள் ஒன்றிரண்டில் நுழைந்து துளாவித் தேர்ந்தெடுத்தவள், கடைசியாய் ஒரு பிரபலமான சிகையலங்கார நிலையத்தில் வேலையை முடித்துக் கொண்டு திரும்பியிருந்தாள். இப்போது, இவளுடைய படுக்கையறையின் தனிமையில் கடைசியாய் இவள் வாங்கி வந்துள்ள உறைகளைப் பிரித்து வெளியே எடுத்தாள். ஐந்து நிமிடத்திற்கு பிறகு நிலைக் கண்ணாடியில் பிரதிபலித்த இவளுடைய பிம்பத்தை 'இது போதுமே...' என்ற மனோநிலையோடு நிறைவாய் பார்த்தாள். புருவத்தைத் திருத்தும் ஒரு சிறு பென்சிலால், இவளுடைய புருவ இறக்கத்தின் போக்கினைச் சிறிதாய் மாற்றி எழுதினாள்; இதுவும், தற்சமயம் புதிதாய் முளைத்திருந்த இவளுடைய வெண்ணிறக் கூந்தலுமாய் சேர்ந்து, இவளுடைய தோற்றத்தையே முழுவதுமாய் மாற்றி அமைத்துவிட, நேருக்கு நேராய் அந்த விட்டிங்டனே வந்தாலும் கூட நிச்சயமாய் தன்னை அடையாளம் கண்டு கொள்ள முடியாது என்ற தீர்மான தன்னம்பிக்கை இவளுக்குள் நிலைத்தது. உயரத்தைக் கூட்டிக் காட்டும் செருப்பாய்ப் பார்த்துத் தான் காலணிகளை வாங்கியிருக்கிறாள்; அது நடையையும் மாற்றிவிடும். ஒரு தொப்பியும் ஒரு மேல் கோட்டும் இந்த மாறுவேடத்துக்குப் பொருத்தமாய் அமைந்து மேலும் சிறப்புக் கூட்டும்! மருத்துவமனை அனுபவத்திலிருந்து, யூனிபார்முக்குள் மாறிவிடும் ஒரு நர்ஸை, சாதாரணமாய் ஒருவராலும் உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியாது என்பது இவள் அறிந்ததே!

''ம்...'' என்று பெருமையாய் கண்ணாடியில் தெரிந்த பிம்பத்துக்கு உரைத்த டூபென்ஸ், ''நீ முடிச்சுடுவேடீ - *வெற்றிகரமா!*'' என்றாள் உரக்க. பிறகு தனது சுய தோற்றத்துக்கு மாறிக் கொண்டாள்.

இரவுச் சாப்பாடு தனிமையில் சாப்பிடும்படி ஆயிற்று. டாமி திரும்பி வராததில் டூபென்ஸுக்கு ஆச்சரியமே இருந்தது. ஜூலியஸும் தான் வரவில்லை - ஆனால் இது இப்பெண்ணின் புத்திக்கு சுலபமாய் விளக்கப்பட்டது. 'துரிதப்படுத்த வேண்டும்' எனும் அவரது குணம் வெறும் லண்டனில் மட்டும் முடிந்துவிடும் குணமல்லவே. திடுமென வருவதும் பிறகு முழுக்கக் காணாமல் போய் விடுவதும் அவரது தினசரி பணிகளில் ஒன்று என்று இளஞ்சிங்கங்கள் லிமிடெட் நன்கு ஒப்புக் கொண்டுள்ள விஷயம்! ஏதாவது ஒரு காவல்நிலையத்தில் தன்னுடைய அத்தைப் பெண் பற்றிய சேதி உள்ளது என்று மட்டும் சிறு கற்பனை செய்துக் கொண்டு விட்டால் போதும்... அது உலக உருண்டையின் எந்தப் பாகத்திலிருந்தாலும் அங்கு இவர்

சளைக்காது போய் ஆஜராகி விடுவார் என்பது ஜூலியஸ் என்பவரைப் பற்றிய இளஞ்சிங்கங்கள் குறிப்பில் நிச்சயம் உள்ளது! இத்தனை சக்தி பொருந்திய இளைய ஜூலியஸ், இந்த குணத்தாலேயே, பல ஸ்காட்லாண்டு காவலர்களைப் பாவம் அதிர அதிர ஓடவிட்டிருக்கிறார். 'ஹல்லோ' என்ற இவரது பிரபலக் குரல் தொலைபேசியில் வந்தாலே, அது எத்தனை பயங்கரமானதும் ஓட வைப்பதுமான விளைவுகளை உண்டுபண்ணும் என்பது காவல்நிலையம் முழுவதும் உடனே பரவிவிடும். பாரீஸில், முதன்மை இன்ஸ்பெக்டரோடு, மூன்று மணி நேரத்துக்கும் மேல் இங்குமங்கும் பறந்துப் பறந்துத் தேடிவிட்டு, 'இங்கு இருக்காது... இந்தக் கடத்தல் பற்றிய முழு ரகசியமும் அயர்லாண்டு போனால் கிடைக்கும்' என்று மனதில் புதிதாய் ஊறிய ஊகத்தோடு திரும்புவார் - அயர்லாண்டுக்கு...!

'நிச்சயமா அந்த ஆளு அங்கே தான் விழுந்திச்சுக்கிட்டு ஓடியிருக்கணும்... ச்சே!' எண்ணிக் கொண்டாள் டூபென்ஸ். 'எல்லாம் சரிதான்... அவர் அவசரம் அவருக்கு. ஆனா இப்ப எனக்கு இங்கே ருசிகரமா இல்லாம நேரம் 'போரா' போகுதே! என்ன செய்ய...?! சேதிகளோடு நான் பிதுங்கி வழிஞ்சுக்கிட்டு இருக்கேன்... ஆனா சொல்லத்தான் சுத்தமா ஒரு நாதி கூட இல்லே! டாமி ஏதாவது தந்தியோ தொலைபேசியோ அனுப்பியிருப்பான். அவன் எங்கேயிருப்பான்னு எனக்கு ஆச்சரியமாயிருக்கு. நிச்சயமா பின்தொடர்தல்ல அவன் தோற்றிருக்க மாட்டான். ஆங்... இது எனக்கு ஒன்றை நினைவுபடுத்துது...'

போதும் என்று, நீண்ட இந்த சிந்தனைக்குத் தடைக்கல் போட்டுக் கொண்டாள் இவள்.

மறுநாள் விடிந்த காலைப் பொழுது, கார்ட்டரிடமிருந்து இவளுக்கு ஒரு குறிப்பினைச் சுமந்து வந்தது:

அன்புக்கினிய மிஸ்,

நீங்கள் வேலையைப் பிரகாசமாய் ஆரம்பித்துள்ளீர்கள்... இதற்காக உங்களை நான் வாழ்த்திப் பாராட்டுகிறேன். இருந்தாலும், மீண்டுமொரு முறை, நீங்கள் எதிர்கொண்டிருக்கும் அபாயத்தை உங்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக இனியும் இந்த சமாச்சாரத்தைத் தொடர்ந்து நீங்கள் மேற்கொள்ளும் பட்சத்தில், அபாயம் இன்னும் கூடுகின்றது. அந்தக் கூட்டத்திடம் கருணையோ கரிசனமோ இரக்கமோ துளியும் இல்லை. ஞாபகமிருக்கட்டும். உங்கள் எதிரேயுள்ள அபாயத்தை நீங்கள் துச்சமாக எடை போட்டுள்

ளீர்கள் என்று நான் எண்ணுகிறேன், அதனால், என்னிடமிருந்து பிறகு எவ்வகையான பாதுகாப்பையும் நீங்கள் எதிர்பார்த்து வரக்கூடாது என இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன். நீங்கள் எங்களுக்கு விலைமதிப்பற்ற தகவலைத் தந்திருக்கிறீர்கள்... இத்துடன் அப்படியே முடித்துக் கொள்வதாய் இருந்தாலும் பரவாயில்லை... ஒருவரும் உங்களைக் குறை சொல்லப் போவதில்லை. எப்படியிருந்தாலும் விஷயத்தை நீங்கள் முடிவு செய்வதற்கு முன்னால் நன்றாய் சிந்தியுங்கள்.

என்னுடைய இத்தனை எச்சரிக்கைகளையும் மீறி முடிவாய் நீங்கள் சமாச்சாரத்துக்குள் நுழைந்து பார்க்க முடிவு கட்டினால்... நல்லது, தேவையான அனைத்தும் செய்து தரப்படும். நீங்கள் லானே - லில்லி பகுதியில் வசிக்கும் டாம்ப்ரின் என்பவரிடம் இரண்டு வருடங்கள் பணியாற்றிருக்கிறீர்கள். தேவைப்பட்டால் வாண்டே-மேயர், உங்களைப் பற்றிய குணாதிசயங்களை இந்த அம்மணியிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்!

ஓரிரு வார்த்தைகள் அறிவுரை தர அனுமதியுண்டா? எத்தனை முடியுமோ அத்தனை அளவுக்கு, உண்மையாகவே இருந்து விடுங்கள்... பொய்யால் ஏற்படும் 'வழுக்கல்களை' இது வெகுவாய் குறைக்கும். முன்னால் பெரிய வேலையில் இருந்தாலும் இப்போது வீட்டுப் பணி செய்ய வந்துள்ளதாகவே சொல்லுங்கள் - தப்பில்லை - கவுரவக் குறைச்சலில்லை - இப்போது பலர் இப்படி இருக்கிறார்கள். நம் நடவடிக்கைகளில் தொனிக்கவல்லப் பொருந்தாமைகளைத் தவிர்த்து விடுங்கள்... எப்போதுமே... இந்த அறிவுறுத்தலை மறக்க வேண்டாம். இதன் வாயிலாக தேவையற்று விளையவல்ல பல சந்தேகங்களைத் தணித்து விடலாம்.

எந்த வழியில் நீங்கள் முடிவினைத் தெரிந்தெடுத்தாலும் - உங்களுக்கு, குட்லக்.

உங்கள் பரிபூரண நண்பன்

ஏ கார்ட்டர்.

டுபென்ஸின் அக்னிக் குஞ்சு பாதரசமானியின் பாதரசம் போல கூடியது. கார்ட்டரின் மெனக்கெட்டு எழுதப்பட்ட எச்சரிக்கைகள் அனைத்தும் அலட்சியமாய் தூக்கியெறியப்பட்டன. இளைய காரிகை தன் மீதே வைத்திருக்கும் அளவுக்கதிகமான தன்னம்பிக்கை, கார்ட்டரின் எந்த வரியையும் சட்டை செய்யவில்லை.

அவளுக்கென்று வடிவமைத்து வாங்கி வந்து வைத்திருந்த ஒப்பனை சாமான்களை, வேண்டாவெறுப்பாய், சற்றே ஒதுக்கி வைத்தாள். அமைத்துள்ள பாத்திரத்தை எத்தனைக் காலம் வேண்டுமானாலும் தொய்யாது தூக்கி நிறுத்தும் சாமர்த்தியத்திலும் நம்பிக்கையிலும் டூபென்ஸுக்கு துளியும் அவநம்பிக்கை இல்லாவிட்டாலும், அவளுடைய ஆறாவது அறிவுக்கு, கார்ட்டர் முக்கியப்படுத்திக் கூறியுள்ள எச்சரிக்கைகளை அப்படியே தள்ளிவிட மனசு வரவில்லை.

இன்னும் டாமியிடமிருந்து தபாலிலோ தொலைபேசியிலோ ஒரே ஒரு வார்த்தை கூட வராத நிலையில், அன்றைய காலை தபால், அழுக்கேறியிருந்த ஒரு தபால் அட்டையைச் சுமந்து வந்து தந்தது. அதில் 'பரவாயில்லை... அது சரி' என்று கிறுக்கப்பட்டிருந்தது.

10.30 மணிக்கு, கொஞ்சமாய் நசுங்கியிருந்த ஒரு டின்னுக்குள் வைக்கப்பட்டிருந்த அவளுடைய புது துணிமணி மற்றும் சாமான்களைப் பெருமை பொங்க நோட்டமிட்டாள். அது மிகச் சீராக கட்டப்பட்டிருந்தது. வருவது வரட்டும்... ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்! சின்னதாய் நாணச்சிரிப்புக் கன்னங்களில் கூட மணியை அடித்தாள்... அந்த டின்னைக் கொண்டு போய் வாடகைக்கார் ஒன்றில் ஏற்றுமாறு பணித்தாள். பாடிங்டன் ரயிலடி வரை பயணித்தவள், அங்கே பெண் பயணிகள் காத்திருக்கும் அறையில் லக்கேஜை வைத்தாள். பிறகு, அங்கேயிருந்த பெண்கள் ஆடை மாற்றும் அறைக்குள் தனியாய் நுழைந்தாள். தாளிட்டாள். பத்து நிமிடங்களில் முழுக்க முழுக்க வேற்றுரு கொண்ட டூபென்ஸ் அட்டகாசமான நடையில் ரயிலடி விட்டு வெளியேறி, பேருந்து ஒன்றுக்குள் ஏறிக் கொண்டாள்.

மறுபடியும் தெற்குக் குடியிருப்புக்குள் டூபென்ஸ் புகுந்த போது மணி பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் பணியைத் தொடர்ச்சியற்று இங்குமங்குமாய் செய்துக் கொண்டிருந்த ஆல்பர்ட், எக்கி எக்கி இவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் உடனடியாக டூபென்ஸை அடையாளம் காணவில்லை. கண்டு கொண்டவுடன், அவனுடைய ஆச்சரிய அங்கீகரிப்பு எல்லையற்றுப் போனது.

''எனக்கே உங்களைத் தெரியலியே! கண்டுபிடிக்க முடியலியே! புரியலியே''

பெருந்தன்மையோடு, ''இதை நீ ரசிக்கறதுக்கு நன்றி, ஆல்பர்ட்'' என்றாள் டூபென்ஸ். ''ஆங், ஆங்... நான் உன் உறவா? கிடையாதா?''

''உங்க குரல் கூட'' என்றான் அவன், ஆச்சரியத்திலிருந்து மீளாது. ''அப்படியே அச்சு அசலா இங்கிலாந்து இங்கிலீஷ்!'' என்றவன் வியப்பூடே

இவள் கேட்ட கேள்விக்கான பதில் தந்தான்: ''இல்லை. என் நண்பன் ஒருத்தனுக்கு ஒரு சின்னப் பெண்ணைத் தெரியும்னு சொல்லியிருக்கேன். இதுல அன்னீக்கு திருப்தியில்லே. போக வேண்டாம்னு சொன்னாங்களாம் - இன்னிக்கு வரைக்கும் - அவ சொல்றா. ஆனா, உங்களை இந்த வேலையில சேர விடாம என்னத்தையாவது சொல்லி பயமுறுத்தித் துரத்தத் தான், இப்படியெல்லாம் புளுகிக்கிட்டு அவ இன்னும் இங்கே இருக்கா!''

''நல்ல பொண்ணு!'' என்றாள் டூபென்ஸ்.

ஆல்பர்ட் இந்த விமர்சனத்தில் எதையும் அறியவில்லை. கேட்டான்: ''இப்பவே மேல போறீங்களா, மேடம்? லிஃப்டுக்குள்ளே வாங்க. நம்பர் 20 தானே?'' - கண் சிமிட்டினான்.

அவனை இறுக்கமான ஒரு பார்வையால் அடக்கிய டூபென்ஸ், உள்ளே நுழைந்தாள்.

எண் இருபது தாங்கிய கதவின் அழைப்பு மணி அடிக்கப்பட்டது.

சாதுர்யமான இளம்பெண்ணொருத்தி கதவைத் திறந்தாள்.

''வேலையிருக்குனு கேள்விப்பட்டு இங்கே வந்தேன்'' என்றாள் டூபென்ஸ்.

''இது ஓர் அழகிய இடம்'' - தயக்கமின்றி பட்டென்று சொன்னாள் அந்த இளம்பெண். ''கிழப்பூனை - எப்பப்பாரு நமக்கு இடையூறு. அவளுக்கு வர்ற கடுதாசிகளை நான் பிரிச்சேன்னு குற்றம் சுமத்தினா. நான்! வரும்போதே ஒட்டின உறையில பாதி கிழிஞ்சு தான் வந்தது. குப்பைக் கூடையில ஒரு சின்னத் துண்டுச் சீட்டை விட்டு வைக்க மாட்டா. ஒவ்வொரு துண்டுச் சீட்டாத் தேடிப் பொறுக்கி எரிக்கிறாப்பா. அவ சரி கிடையாது - *இதுதான் அவ.* ஆமாம். சமையக்காரிக்கு இவளைப் பற்றிய விஷயங்கள் கொஞ்சம் தெரியும் - ஆனா சொல்ல மாட்டா - மரண பயம் பயந்து, நடுநடுங்கிக்கிட்டு இருக்கா அவ. இதுல சந்தேகம் வேற! வெளியாள் யார் கூடவாவது நீ பேசத் தொடங்கினேனா பேயா வந்து மேல விழுவா. ஒண்ணு சொல்றேன்...''

அன்னீ மேலே என்ன சொல்ல வந்திருந்தாலும் அதை டூபென்ஸ் கேட்டு அறிந்திருக்க முடியாது. அப்போது, துல்லியமான ஒரு குரல், அதனைச் சுற்றி இரும்பு வளையம் இட்டுக் கொண்டு, ''அன்னீ!'' என்றலறியது.

சுடப்பட்டது போல அந்த சாதுர்யம் துள்ளியெழுந்தது! ''யெஸ், மேம்.''

''யார்கிட்டே நீ பேசிக்கிட்டு இருக்கே, ம்?''

''இங்கே வயசுப் பொண்ணு ஒருத்தி வந்திருக்கு மேம். வேலையிருக்குனு.''

''இங்கே காட்டுடீ. உடனே.''

''யெஸ், மே'ம்.''

நீண்ட ரேழியின் வலப்புறத்திலிருந்த அறைக்குள் உடனடியாய் கொண்டு போகப்பட்டாள் டூபென்ஸ். அங்கிருந்த கணைப்புக்குப் பக்கத்தில் ஒரு பெண்மணி நின்றுக் கொண்டிருந்தாள். அவள் இளையப் பருவத்தைக் கடந்திருந்தாள்... அவளிடம் அபரிமிதமாய் கொட்டியிருந்திருக்கவல்ல தளிர் வனப்பும் அழகும் கவர்ச்சியும் வடிந்து இறுகியிருந்தன... முற்றியிருந்தன. அவளுடைய இளமைப் பொழுதில், முட்டி மோதும் தளதளப்பின் உச்சத்திலிருந்திருக்க வேண்டும். தங்க நிறத்துக்கு மாற ஆரம்பித்திருந்த அவளது கூந்தல், சிறு முயற்சிகளுக்குப் பிறகு, அழகழகாய் சுருட்டப்பட்டு கழுத்து முழுவதும் விழுந்துத் தடவும்படி பறந்துக் கொண்டிருந்தது. சுட்டெரிக்கும் மின்சார விளக்குப் போல மின்னிய கண்கள், அதே மின் குணத்தோடு, பார்க்கும் நபரின் ஆன்மா வரை போய் அதனை அவிழ்த்து விடும் சக்தி கொண்டிருந்தன. வனப்பு மிகும் அவளுடைய உடலழகு, உடுத்தியிருந்த ஊதா நிற கவுனால், மேன்மேலும் உயர்த்திக் காட்டப்பட்டது. காண்போரை அலைக்கழிக்கும் நாகரீகம், உயர்ரக உடையலங்காரம், சுண்டியிழுக்கும் மேன்மையான உடல் அமைப்பு, இவையெல்லாம் இருந்த போதிலும் - கரடுமுரடான பாறையும், அச்சுறுத்தும் அகங்கார அத்துமீறலும் - துரு உராய்வது போல வந்து விழுந்த அந்த இரும்புக் குரலிலும் அஞ்சாது மினுமினுத்துக் கொண்டிருந்த அவளது கண்களிலும் தீர்க்கமாய் இருப்பதை, கணப்பொழுதில் உணர்ந்துவிட முடிந்தது.

இளஞ்சிங்கங்கள் லிமிடெட்'டின் டூபென்ஸ், முதல் முறையாக 'பயமாய்' உணர்ந்தாள். விட்டிங்டனுக்கு இவள் கொஞ்சமும் பயப்படவில்லை... ஆனால் இந்தப் பொம்பளை விஷயம் வேறு. வசியம் பண்ணப்பட்டவளைப் போல, வளைந்து கழிந்து நீண்ட அவளுடைய செக்கச்சிவந்த நயவஞ்சகப் புன்னகையை அச்சத்தோடு கவனித்தாள்... மீண்டும் கிலியின் காற்று இவளைக் கடந்து போவதை உணர்ந்தாள். இவளுக்கே உரிய சக்தி வாய்ந்த தன்னம்பிக்கை இவளைத் தனியே கழற்றிவிட்டு விட்டது. உடன்பிறந்த சாதுர்யம் நகர்ந்து நின்றது. இந்தப் பெண்ணை ஏமாற்றுவது, விட்டிங்டனை ஏமாற்றுவது போல ஒன்றும் அத்தனை சுலபமே கிடையாது என்று பனிமூட்டமாய் மெல்ல மெல்ல இவளுக்குப் புரிந்தது. ஏ கார்ட்டரின் எச்சரிக்கை மணி முதல் முறையாய் இவளுக்கு உறைக்கும்படி உள்ளே ஓங்கி ஓங்கி அடித்தது. இங்கே, இவள், நிச்சயமாய், இரக்கத்தையோ தயையோ எதிர்பார்க்கவே முடியாது.

இவளை ஒடுக்கத் துடித்துக் கொண்டிருந்த கிலியை சண்டையிட்டு மண்டியிட வைத்தவள், கேள்விக் குறியாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அப்பெண்மணியின் பார்வைக்குப் பதிலாய், மரியாதையும் திடமான ஸ்திரம் நிறைந்த பார்வையையும் அளித்தாள்.

இப்போது பார்த்த முதல் சந்திப்பே தனக்குள் நிறைவைத் தந்து விட்டதைப் போல, திருமதி வாண்டே - மேயர், ஒரு நாற்காலி பக்கமாய் போனார். ''நீ உட்காரலாம். எனக்கு ஒரு பணியாள் வேணும் எனும் விஷயம் உனக்கெப்படி தெரியும்?''

''இங்கிருக்கும் லிஃப்ட் பையனுக்குத் தெரிஞ்ச நண்பன் மூலமா. இந்த இடம் எனக்கு உகந்ததா இருக்கும்னு அவனுக்குத் தோணியிருக்கு.''

மறுபடியும், அந்த மின்சாரப் பார்வை, இவள் தோலையெல்லாம் உருக்குவதாய் உணர்ந்தாள் டூபென்ஸ்.

''நல்லா படிச்ச பொண்ணு மாதிரியிருக்கு, உன் பேச்சு?''

இவளின் கற்பனா சக்தி, உடனடியாய் வழுக்கி, திரு கார்ட்டர் கோடிக்காட்டியிருந்த வரிகளுக்குப் பாய்ந்தோடியது. இப்படிச் செய்துக் கொண்டிருப்பதால், வாண்டே - மேயரின் டென்ஷனான குணாதிசயம் மெல்லத் தளர்வதாய் தோன்றியது இவளுக்கு.

''உன்னைப் பற்றி நான் யார்கிட்டேயாவது விசாரிக்கணுமே...?!''

''இங்கே வர்றதுக்கு முன்னாடி, லானே - லில்லி பகுதியில் வசிக்கும் டஃப்ரின் என்பவரிடம் நான் பணியாற்றினேன். ரெண்டு வருஷம்'' - (நன்றி திரு கார்ட்டர்!)

''அப்புறம் லண்டனுக்கு வந்துட்டா, கூட சம்பாதிக்கலாம்னு தோணி யிருக்கும்... இல்லே? எப்படியோ போ... அது எனக்குத் தேவையில்லே. உனக்கு ஐம்பதிலிருந்து அறுபது பவுண்ட் வரை தர முடியும். என்ன வேணுமோ கேளு. உன்னால உடனடியா சேர முடியுமா?''

''யெஸ், மே'ம் நீங்க சம்மதிச்சா, இன்னிக்கே. என் பெட்டியை பாடிங்டன்ல வெச்சிருக்கேன்.''

''அப்போ போய் அதை டாக்ஸியில போட்டு எடுத்துக்கிட்டு வா. பக்கந்தான். நான் முக்கியமா வெளியே போக வேண்டியிருக்கு. ஆங்... உன் பேரு?''

''புருடன்ஸ் கூப்பர், மே'ம்.''

''நல்லது, ப்ருடன்ஸ். போய் உன் லக்கேஜை எடுத்து வா. வஞ்சுக்கு நான் வெளியே போறேன். எதெல்லாம் எங்கே இருக்குனு உனக்கு சமையக்காரி காட்டுவா.''

''தேங்க்ஸ், மே'ம்.''

டூபென்ஸ் வெளியேறினாள். கீழ்த்தளத்திலிருந்த பெரிய வரவேற்பறையில், காவலாளி, ஆல்பர்ட்டை பின்பகுதிக்கு விரட்டிக் கொண்டிருந்தான். அவனருகே போகும் போது அவனை சின்னதாய் ஓரப்பார்வை கூட பார்க்காமல் குனிந்த தலை நிமிராது வெளியேறினாள் இவள்.

வீரசாகசங்கள் செய்ய வேண்டிய கட்டங்கள் துவங்கி விட்டன. ஆனால் இன்று காலைப் பொழுது போலல்லாது, இப்போது, டூபென்ஸ் துள்ளலாய் இல்லை. ஒருவேளை ஜானே ஃபின் ஏற்கனவே இந்த வாண்டே - மேயரின் கைகளில் அகப்பட்டிருந்தால் அவள் முகவரி இல்லாது ஆகியிருப்பாள் என்றோர் எண்ணம், இப்போது இவளுடைய மூளையைக் கடந்து போனது.

அத்தியாயம் - 10

ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்

ரூ பென்ஸ், இவள் ஏற்றுக் கொண்டுள்ள புது வேலையில் எவ்விதமான தர்மசங்கட நிலைமைகளையும் உருவாக்கி விடவில்லை. வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்து முடிக்கும் திறமையில் பாதிரிகளின் பெண்கள் மிகச் சிறப்பாக வேரூன்றப்பட்டு விடுகின்றார்கள். பாதிரி குடும்பங்கள், வீட்டு வேலைகளைத் தலை மேல் தூக்கிப் போட்டு வலிய போய் செய்து முடிக்கும் குணத்தினை, இவ்வகை வேலைகளில் 'பண்படாத' சின்னப் பெண்களுக்குள் ஆழமாக விதைத்து விடுகின்றன. இதன் தவிர்க்க முடியாத நல்விளையாக, பயிற்சி தரப்படும் 'பண்படாத' பிள்ளைகள், வேறேதோ மூலையில் வேலைக்குச் சேரும் போது, வீட்டை நிர்வகிப்பதில் அதியற்புதமாகத் திறமைகளை வெளிக்காட்டி, பாதிரியாய் பணியாற்றி வரும் கையளவு சம்பளத்தை விட அதிகமான சம்பளத்தையும் பாராட்டுதல் களையும் அள்ளிக் கொண்டு வந்து விடுகின்றனர்.

எனவே, தப்பாய் போய் விடுமோ என்ற பயமே ரூபென்ஸிடம் இருக்கவில்லை. ஆனால், தனது முதலாளி குறித்த வெளிப்படையான பயத்தினை சமையல்காரி வெளிப்படுத்தினாள். அவள் ஒரு விளங்கா புதிராய் பட்டாள், இவளுக்கு. வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டு இங்கிருந்த அன்னி பெண் தான் சமையல்காரி மீது அதிக ஆதிக்கம் செலுத்தி இப்படி ஒரு பயத்தை அவளுக்குள் உண்டாக்கியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் இவள். மற்றபடி, ஒரு நட்சத்திர ஓட்டலின் தலைமை சமையல் நிபுணன் போல சுவையோ சுவையாய் சமைக்கும் அளவுக்குத் தகுதியும் திறமையும் பெற்றவள் தான் இந்த சமையல் காரி என்பதை, அன்று மாலையே நேரடியாய் அனுபவித்து தீர்ப்பெழுதும் வாய்ப்பு ரூபென்ஸுக்குக் கிடைத்தது. அன்று இரவு, விருந்து சாப்பாட்டுக்காகத் திருமதி வான்டே-மேயர் ஒருவரை எதிர்பார்த்துக் காத்திருக்க, அதற்காக, உயர் மரத்தால் ஆக்கப்பட்டிருந்த டைனிங் மேஜையை, இருவர் சாப்பிட வசதியாக

கலை நயத்தோடு தயாராக்கி வைத்தாள் இவள். வரப்போகும் விருந்தாளி பற்றி தன் மூளைக்குக் கொஞ்சமாய் வேலை தந்து உலுக்கிப் பார்த்தாள். அது விட்டிங்டனாய் நிரூபணம் ஆக நிறையவே சாத்தியக் கூறுகள் உள்ளன. இவள் யார் என்று அவரால் கண்டுபிடித்து விட முடியாது என்பதில் டூபென்ஸ் கூடுமான அளவுக்கு நம்பிக்கையோடு இருந்தாலும், வரும் நபர் இவள் முன் பின் அறியாத ஒருவராய் இருந்து விட்டால் நிம்மதியாக இருக்கும் என்றே உணர்ந்தாள். போகட்டும்... அப்படி பயப்பட இதில் ஒன்றுமில்லை... நல்லதே நடக்கும் என்று நினைப்பதைத் தவிர!

எட்டு மணி ஆகி சில நிமிடங்களில் அழைப்பு மணியோசை ஒலித்தது... அது யாராயிருக்கும் என உள்ளூர உதித்த சிறு உதறலோடு நிலைக் கதவுக்குப் போனாள் டூபென்ஸ். வந்திருக்கும் விருந்தாளி, வலுக்கட்டாயமாக டாமி பின்தொடர்ந்துக் கொண்டு கிளம்பிய ஆசாமி என்பதை அறிந்த போது, விடுதலையுணர்வு டூபென்ஸின் மீது படர்ந்தது.

அவர், தன் பெயரை, 'கவுண்ட் இவானோவிட்ச் ஸ்டெப்போனாவ்' என்று நீளமாய் சொல்ல, அதை அப்படியே திருமதி வாண்டே-மேயருக்கு இவள் சப்தமாய் அறிவிக்க, தரையோடிருந்த திவானில் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணி, சிறு சந்தோஷ முணுமுணுப்பினை வெளியிட்டபடி சட்டென எழுந்து, வந்தவரை வரவேற்க வேகமாயும் எதிர்பார்ப்போடும் விரைந்து வந்தார்.

''உங்களை வரவேற்பதில் நான் பெருமைப்படுகிறேன், போரீஸ்'' என்றார்.

''எனக்கும் அதே உணர்வு தான், மேடம்'', என முதுகு வளைத்து, ஆழ்ந்த மரியாதை செலுத்திப் புன்னகைத்தான் போரீஸ்.

டூபென்ஸ் திரும்பி சமையலறைக்குப் போய் விட்டாள்.

''கவுண்ட் ஸ்டெப்போனோவ்' வோ...என்னவோ சொன்னான்...'' என்று குறிப்பிட்ட டூபென்ஸ், உள்ளூர விளைந்த துறுதுறுப்பையும் கிசுகிசுப்பையும் வெளிக்காட்டாது, ''யார் அவன்?'' என்றாள்.

''ஒரு ரஷ்யன்னு நினைக்கிறேன். பேரும் அப்படித் தானிருக்கு.''

''அடிக்கடி இங்கே வரானோ?''

''அவ்வப்போது. எதுக்கு இதெல்லாம் உனக்கு?''

''அம்மாவுக்கு ரொம்ப இனிமையானவனா இருப்பானோனு நினைச்சுப் பார்த்தேன்... அதான்'' என்று விளக்கிய இவள், கடுகடுப்பாகி விட்டதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு, ''கேட்ட கேள்வியில எதுக்காக நீ தப்பர்த்தம் தேடணும்!'' என்றாள்.

''என் மனசு ஒரு நிலையில் இல்லே... அதான்'' என்று விளக்கினாள் சமையல்காரி.

'உனக்கு என்னவோ தெரிஞ்சிருக்கு' என்று உள்ளுக்குள் டூபென்ஸ் நினைத்துக் கொண்டாலும், பின்வருவதை மட்டுமே வாய் விட்டுக் கேட்டாள்: ''இனி நேரடியா விருந்து? ரைட்...!''

பரிமாற சாப்பாட்டு மேஜையருகே இருந்த போது அங்கு பேசப்பட்ட அத்தனைகளையும் கூர்மையாய் கேட்டாள் இவள். டாமியைக் கடைசியாய் பார்த்த சமயத்தில் அவன் இந்த ஆளைத் தான் நிழலாய் தொடரலனான் என்பது இவளுக்கு நினைவிருந்தது. மனமொப்பி இப்போது ஏற்றுக் கொள்ள இயலாவிட்டாலும், கொஞ்ச நேரமாகவே, டாமியைப் பற்றிய ஓர் இருப்புக் கொள்ளாமை இவளுக்குள் வியாபிக்க ஆரம்பித்து விட்டது. *அவன் எங்கே?* எந்த வகையான தகவலும் ஏன் அவனிடமிருந்து வரவில்லை? ரிட்ஸ் பகுதியை விட்டுக் கிளம்பி இங்கு வரும்போது இவளுக்கு ஏதாவது கடுதாசியோ அல்லது தகவல்களோ அங்கு வந்தால் அவற்றை இங்கு அருகிலிருக்கும் ஒரு கடைக்கு உடனடியாக அனுப்பி விடுமாறும்- இக்கடைக்கு அடிக்கடி போய் அப்படி ஏதாவது வந்திருக்கின்றனவா என விசாரித்து, வந்திருந்தால் கொண்டு வந்து தர ஆல்பர்ட்டையும் இவள் ஏற்பாடு செய்திருந்தாள். நேற்று காலையில் தான் டாமியிடமிருந்து இவள் பிரிந்து வந்தாள் என்பதே உண்மை. ஆகவே, இது குறித்து தேவையற்ற கவலைகள் முட்டாள் தனமானவை என்று இவளுக்குள் சொல்லிக் கொண்டாள். 'இருப்பினும், எவ்வகையிலாவது முயன்று ஒரே ஒரு தகவல் கூட அவன் அனுப்பாதது ஆச்சரியம் தான்'.

இங்கு, இயன்ற அளவுக்கு இவள் காது தீட்டிக் கொண்டு கேட்டாலும், உரையாடல், உதவும் எந்த ஒரு குறிப்பையும் அளிக்கவில்லை. போரீஸும் வாண்டே-மேயரும் முழுக்கவும் வேறுபட்ட சமாச்சாரத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்: அவர்கள் பார்த்த நாடகம், களித்த நடனங்கள், மேலும் சமீப காலமாய் சமுதாயத்தில் உலவும் கிசுகிசுக்கள். சாப்பாடு முடிந்ததும் அழகிய முற்றத்தை நோக்கி இருவரும் கழன்றுக் கொள்ள, அங்கே, விரிக்கப்பட்டிருந்த திவானில் நீட்டி முழக்கி நெளிந்து அமர்ந்த முதலாளியம்மா, முன்னெப்போதையும் விட அதிகமான நரி நளினம் திகழத் தோன்றினாள். போரீஸ் கேட்டான்: ''இவ புதுசு இல்லே?''

''இன்னிக்கு தான் உள்ளே வந்திருக்கா. இது வரைக்கும் இருந்தது ஒரு பிசாசு. இவ ஒழுங்கு போல தெரியுது. காத்திருந்து வேலை செய்யறா. பார்ப்பம்.''

ரூபென்ஸ் கதவருகே சில கணங்கள் நின்று விட்டு ஜாக்கிரதையாய் அதனை முழுதும் மூடாமல் விலகிய போது, வந்தவன் சொன்னதைக் கேட்டாள்:

''ஆபத்தானவ கிடையாது, இல்லே?''

''போரீஸ்... நீங்க ஒரு சரியான அடிமட்ட சந்தேகப் பிராணிப்பா. லிஃப்ட் பையனுக்கு உறவோ... தோழியோனு நினைக்கிறேன். இங்கே இருக்கிற யாருக்கும், நான், நம்முடைய பரஸ்பர நண்பரான மிஸ்டர் ப்ரௌன் கூட கூட்டுள்ளவ'னு - கனவுல கூட தோணாது.''

''அய்யய்யோ... தயவு செய்து... ரொம்ப ஜாக்கிரதையா பேசுங்க ரீட்டா...! கதவு, மூடலே.''

''நல்லது. அப்போ மூடுங்க'' - சிரித்தாள் முதலாளியம்மா!

விரைவாக ரூபென்ஸ் அங்கிருந்து நழுவி மறைந்தாள்.

பின்பக்க முற்றப்பகுதியிருகே இருந்த அந்தப்புரம் போன்ற அறைக்குப் போயிருந்த இருவரை விட்டு அதிக நேரம் விலகியிருக்க விரும்பாத ரூபென்ஸ், ஆஸ்பிட்டல் அனுபவத்தின் காரணமாக, மூச்சு முட்டும் அதி வேகத்தில், சாமான்களையும் தட்டுகளையும் கழுவி துடைத்து இடங்களைச் சுத்தமாக்கி முடித்தாள். பிறகு, ஓசையேதுமின்றி, முற்றத்தின் கதவுக்கு நழுவினாள். சமையக்காரி, அடுக்களையில் சாவகாசமாக பணியில் இருந்தாள்; எங்கே புதியவளைக் காணோம் என்று அவளுக்குள் கேள்வி வந்தாலும், இரவு நேரப்படுக்கைகளைச் சரி செய்து ஏற்பாடு செய்துக் கொண்டிருப்பாள் என்று தான் எண்ணக் கூடும்.

கடவுளே! உள்ளே பேசப்பட்டுக் கொண்டிருக்கும் சமாச்சாரத்தின் ஒரு வார்த்தையைக் கூட இவள் பிடித்து விட முடியாத அளவுக்கு சம்பாஷணை மிக மிக கம்மிய குரலில் நடந்துக் கொண்டிருந்தது. துளி கூட கதவினைத் திறக்க முயற்சி செய்யக் கூடாது என்பதில் இவள் உறுதியாய் இருந்தாள். இவளுடைய முதலாளியம்மா கதவுக்கு நேரெதிரில் வரும்படி அமர்ந்திருந் தாள், மேலும், இவளுக்கு, வெகு தூரத்திலிருப்பதைக் கூட துல்லியமாய் கவனித்து விடவல்ல இவளுடைய புது முதலாளியின் பாம்புக் கண்களின் மீது மரியாதை மிக உண்டு!

ஆயினும், உள்ளே அப்படி என்ன தான் போய்க் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து விட, ஏதாவது ஒரு முயற்சியை செய்தே தீர வேண்டும் என்று துணிந்தாள். இவள் கவனத்திற்கு வராத ஏதாவது நடந்திருப்பதாகத் தெரிய வந்தால், அதன் மூலமாய் ஒரு வேளை டாமியைப் பற்றிய தகவல் இவளுக்குக் கிடைக்கப் பெறலாம். சில நொடிகள் யோசனைக்குள் போன ரூபென்ஸின் முகம் மளமளவென பிரகாசமானது. விரைவாக திருமதி

வாண்டே-மேயரின் படுக்கையறைக்கு விரைந்த இவள், அங்கு இருந்த ஃபிரெஞ்ச் ஜன்னல்களில் (கதவு மட்டும் இருந்து கம்பிகள் இல்லாமல் அமைக்கப்பட்டிருக்கும் விசாலமான ஜன்னல் வகை) கண் பதித்தாள்... இதன் வழியாக அந்தப்பக்கம் இருக்கும் பால்கனிக்குள் குதித்திறங்கி விடலாம்... அங்கிருந்து வீட்டை ஒரு சுற்று சுற்றி இரண்டடி அகலத்தில் பால்கனி பாதை போகின்றது. அது நேராய் அவர்களிருவரும் பேசிக் கொண்டிருக்கும் அந்த அந்தப்புரம் போன்ற தனிமை அறைக்குப் போய் முட்டி நிற்கும். வேகமாய் ஃபிரெஞ்ச் ஜன்னல் வழியாக குதித்திறங்கிய டூபென்ஸ், ஓசையே எழுப்பாது நழுவி, முற்றத்தின் ஜன்னல் வரை போனாள். இவள் எதிர்பார்த்தது போலவே முற்ற ஜன்னல் ஒருக்களித்துத் திறந்திருக்க அந்தப்புர அறையின் உள்ளிருந்து வார்த்தைகள் சிக்கலற்றுத் தெளிவாய் கேட்கும்படி வெளியேறி விழுந்தன.

கவனமாய் அவற்றை டூபென்ஸ் உற்றுக் கேட்டாலும்... எந்த வகையில் அர்த்தப்படுத்திப் பார்த்தாலும்...அவற்றிலிருந்து, டாமியோடு இணைத்துப் போடும்படி எதுவும் கிடைக்கவில்லை. ஏதோ ஒரு சமாச்சாரம் குறித்து ரஷ்யக்காரனும் முதலாளிம்மாவும் அபிப்பிராய பேதம் கொண்டிருப்பதாய் தோன்றியது... கடைசியில் ரஷ்யாக்காரன் பேசினான்:

''உங்களுடைய விடாப்படியான பிடிவாதத்தாலும் யோசனையற்ற அசட்டுத் துணிச்சலாலும், நம் எல்லோரையும் தவிடு பொடியாக்கிப் புதைச்சுட்டுத் தான் நீங்க ஓயப் போறீங்க!''

''ஹாஹ்ஹா'' - சிரித்தாள் அந்தப் பெண்மணி. ''ஒரு 'பதவிசான' கெட்டவனா இருப்பது தான்... அதாவது, ஆங், ஒரு 'நல்ல' கெட்டவனா இருப்பது தான்... நம் மேல் விழுகிற அத்தனை சந்தேகங்களையும் வென்றுத் தள்ள அத்தியாவசியமானது. வெளியே நல்லவனா; உள்ளே கெட்டவனா! கொஞ்ச நாட்களிலேயே இது உங்களுக்குத் தெரிய வரும் பாருங்க- சொல்லப் போனா நீங்க நினைக்கிறதை விட சீக்கிரமாகவே!''

''நீங்க எல்லா இடங்களுக்கும் அந்த ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன் கூடவே அலையறீங்க. அவன் நாடறிஞ்ச ஒரு பிரபல இங்கிலாந்து வக்கீல் என்பதால நான் சொல்லலே... அவனுடைய முக்கிய தொழிலே க்ரிமானலஜி! குற்றவியல்! நீங்க செய்துக்கிட்டிருப்பது முழுபைத்தியக்காரத்தனம். ஊஃப்!''

''அவருடைய சொல் வன்மை எண்ணிலடங்கா பலரைத் தூக்கு மேடையிலிருந்தே இறக்கிக் காப்பாற்றியிருக்குனு எனக்குத் தெரியும்'' என்றார் வாண்டே-மேயர், சாந்தமாய். ''இதே வகையிலான அவருடைய உதவி, எனக்கே கூட ஒரு நாள் தேவைப்படலாம். அப்படினா- நெருங்கிய நண்பர் ஒருவரே வக்கீலா நீதிமன்றத்துல அமைவது எத்தனை அதிர்ஷ்டம்

-சொல்லப்போனா, இதுவே கூட என்பக்கத்து 'நியாயத்தை'த் தூக்கி நிறுத்த உதவும் அற்புதமான கருவியா அமையும், இல்லையா...?!''

போரீஸ் எழுந்துக் கொண்டு, நீண்ட நீண்ட தப்படிகளை வைத்து இப்படியும் அப்படியுமாக நடக்க ஆரம்பித்தான். அவன் அதிகம் கிளறப்பட்டிருந்தான்.

''நீங்க ரொம்ப புத்தசாலியான பொண்ணு, ரீட்டா; அதே சமயம் படு முட்டாளும் கூட. என் அறிவுரையைக் கேட்டு நடங்க... அந்த ஜேம்ஸ் பீலைத் தூக்கயெறிங்க.''

மெதுவாய் மறுத்துத் தலையசைத்தார் வாண்டே-மேயர்.

''அது என்னால முடியாதுனு நினைக்கிறேன்.''

''நீங்க மறுக்கறீங்களா?''- ரஷ்யாக்காரனின் குரலில் அசிங்கமான எகத்தாளம் வளையமிட்டது.

''மறுக்கறேன்.''

''அப்படினா---'' என்று உறுமிய அவர், மூச்சிழுத்து, ''--- பார்ப்போம்!'' என்றார்.

இப்போது திருமதி வாண்டே- மேயரும் எழுந்துக் கொண்டு கண்கள் எரிய நின்றார். ''நீங்க மறந்துட்டு ஆடறீங்க, போரீஸ்'' என்று விட்டு, ''நான் யாருக்கும் எப்பவும் கட்டுப்பட்டவ கிடையாது'' என்று நினைவுபடுத்துவது போல கூறினார். ''எனக்காக கட்டளைகளை நான் மிஸ்டர் ப்ரௌனிடமிருந்து பெறுகிறேன். அவ்ளோ தான்.''

ஒன்றும் செய்வதிற்கில்லையே என்பது போல நிராதரவாய் கைகளை வீசினான் வந்தவன். ''நீங்க ஒரு சகிக்க முடியாதவர்'' என்றான் முணுமுணுப்பாய்.'' சகிக்கவே முடியாத, அசாத்தியம்! இம்பாஸிபிள்... யெஸ், யூ ஆர் இம்பாஸிபிள். நீங்க இது வரைக்கும் அந்த ஆள் கூட சேர்ந்து போட்டக் கொம்மாளத்துலேயே அந்த ஆள் எதையெல்லாம் கிரகிச்சிருக்கானோ... காட்! ஜேம்ஸ் பீல், ஒரு குற்றவாளியை மிகச் சுலபமா *மோப்பம்* பிடிச்சுடுவார்னு பேசிக்கறாங்க. உங்க மேல இத்தனை அளவுக்கு அவருக்குள்ளே ஏற்பட்டிருக்கும் திடீர் அளவுக்கு அடித்தளமா என்ன இருக்கும்னு நம்மில் யாருக்கு என்ன தெரியும்? பார்க்கப் போனா, இப்பவே கூட அவருக்குள்ளே சந்தேகங்கள் வலுவா உருவாகியிருக்கலாம்.''

அவரை வெறுப்பாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் திருமதி. ''உங்க எல்லைகளை மீற வேண்டாம், திரு போரீஸ். அவர் எதையும் சந்தேகப்படலே. பொதுவா நான் ஓர் அழகிய தேவதைனு எல்லோராலும் பார்க்கப்படுவதை நீங்க மறந்துடறீங்க. இது தான்- இது மட்டும் தான்

ஜேம்ஸை என் பக்கம் ஈர்த்து நகர விடாம உட்கார வெச்சிருக்குனு நான் உங்களுக்கு உத்தரவாதம் தரேன்.''

சந்தேகமாய் மறுத்துத் தலையசைத்தார் விருந்தாளி.

''இந்த இங்கிலாந்து ராஜ்ஜியத்துல வேற ஒருத்தனும் படிக்காத அளவுக்கு, க்ரைம் பற்றி அக்கு வேறு ஆணி வேறா படிச்சு கரை கண்டவர்- ஜேம்ஸ். அவரை ஏமாத்திடலாம்னு நீங்க கனவு காண்றீங்களா?''

திருமதி வாண்டே-மேயரின் கண்கள் குறுகிப் பார்த்தன. ''நீங்க சொல்ற மாதிரி தான் அவர்னு நிச்சயமானா -அப்படி ஏமாத்த ஏன் முயற்சி பண்ணக்கூடாதுனு எனக்குள்ளே குறுகுறுப்பு வருது!''

''ரீட்டா ஆஆஆ...!''

''தவிர,'' என்று மேலும் பேசினார் திருமதி: ''இன்னொரு விஷயமும் எங்களைக் கட்டிப் போட்டிருக்கு. அவர் கணக்கற்ற கொள்ளைப் பணக்காரர். நான் ஒரு பணப்பிசாசு-பணத்தை ஒதுக்கவே ஒதுக்காதவள். பணம் - ஆதாரமான விஷயங்களின் பிணைப்பு போரீஸ்-தசைக்குள்ளே பிணைந்துள்ள தசை நாண் போல- பிரிக்கவே முடியாமல்! ஹாஹ்ஹா!''

''பணம் - *பணம்!* இது தான் உங்ககிட்டே இருக்கிற பேராபத்து, ரீட்டா. நீங்க உங்க உயிரையே கூட பணத்துக்காக வித்துடுவீங்களோன்னு நான் பயந்திருக்கேன். எனக்கு என்ன தோணுதுனா---'' என்று விட்டு சிறு இடைவேளைத் தந்தவர், மெலிதான, தணித்த, அமானுஷ்யக் குரலெடுத்து சொன்னார்: ''---சில சமயங்கள்ல நான் நினைப்பதுண்டு-பணத்துக்காக நீங்க வித்துடுவீங்களோன்னு-*எங்களை!*''

சிரித்து விட்டு தோள்களைக் குலுக்கிக் காட்டிய வாண்டே-மேயர், ''அப்படியே ஆனாலும், இதுக்குத் தர வேண்டிய தொகை, விண்ணை முட்டுற அளவுக்கு இருக்கணும்'' என்றார் லகுவாய். ''மாபெரும் மில்லியனரைத் தவிர அந்தப் பணத்தை யாராலும் எனக்குத் தர முடியாது.''

''ஆஹ்...'' என உறுமிய ரஷ்யாக்காரன், ''பார்த்தீங்களா... பார்த்தீங்களா... என் ஊகம் சரி'' என்றார்.

''என்ன சரி...?! ப்பூ...!'' என வியப்பாய்ச் சுட்டிக் காட்டிய முதலாளியம்மா,'' ஏன் போரீஸ், உங்களால ஒரு ஜோக்'கைக் கூடவா ரசிக்க முடியாது...?!'' என்று கேட்டார்.

''அது ஜோக்கா, என்ன?''

''இல்லையா, பின்னே...!!''

''அப்படினா, ஜோக்கில கூட உங்களுடைய கருத்துக்கள் அசாதாரணமா தான் இருக்கு, டியர் ரீட்டா.''

இதற்கும் பெண்மணி சிரித்தார். ''நாம வாக்குவாதம் பண்ண வேண்டாமே. மணி அடிங்க. ஏதாவது குடிப்போம்.''

அவசர அவசரமாய் தன்னிடத்துக்குக்கு விரைந்தாள் டூபென்ஸ். எதுவும் தன்னிடமிருந்து கழன்று விடவில்லையே என்று... முதலாளியம்மா கண்ணாடியில் சில கணங்கள் தன் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டாள். பின், அடிக்கப்பட்ட மணிக்கு அடக்கமாய் பதில் தந்தாள்.

இவள் மறைந்திருந்து கேட்ட உரையாடல், ரீட்டா மற்றும் போரீஸ் ஆகியோரின் சிக்கலான வாழ்க்கை முறையைச் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு சுவைபட ஊர்ஜிதம் செய்தாலும், தேடி வந்த விஷயத்தின் மீது இவ்வுரை யாடல் மிக மிக மங்கலான வெளிச்சத்தைத் தான் போட்டது. ஜானே ஃபின் எனும் பெயர் பயன்படுத்தப்படவில்லை.

ஆல்பர்ட்டை மறுநாள் காலையில் விசாரித்த போது இவளுக்காக எந்த ஒரு தகவலும் பக்கத்துக் கடையில் இல்லை என்பது தெரிய வந்தது. டாமியின் பக்கம் எல்லாம் நலமாய் இருக்கும்பட்சத்தில், அவன் ஒரே ஒரு தகவலைக் கூட இன்று காலை வரை அனுப்பாமல் இருப்பது, இவளால் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றாய் இருந்தது. ஓர் இறுகியக் கை... ஈவிரக்கமற்ற கரம்... இவள் குரல் வளையைப் பிடித்து இறுக்குவது போல ஆனது...ஒரு வேளை...ஒரு வேளை...தனக்குள் விளைந்த பயத்தைத் தன்னுடைய துணிவின் துணையோடு களைந்து தூக்கிப் போட்டாள். கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை. அப்போது, வாண்டே-மேயர் கொடுத்த ஒரு வாய்ப்பினைக் கவ்விப் பிடித்துக் கொண்டாள்.

''எந்தக் கிழமையில நீ வெளி வாசல் போய் வர விரும்பறே, ப்ருடன்ஸ்?''

''வெள்ளிக்கிழமை தான் என் வழக்கமான நாள், மே'ம்.''

தன்னுடைய புருவங்கள் நன்றாய் உயர்த்திக் காட்டினாள் பெண்மணி. ''இன்னிக்கு வெள்ளி! ஆனா நீ நேற்று தான் வேலையில சேர்ந்திருக்கே! இன்னிக்கு வெளியே போக விரும்பறியா?''

''அது முடியுமா'னு உங்களையே நான் கேட்கணும்னு இருந்தேன், மே'ம்.''

இவளையே ஒரு சில வினாடிகள் உற்றுப் பார்த்த அவர், புன்னகைத்துக் கொண்டார். ''உன்னைப் பற்றி போரீஸ் நேற்று ஒரு விமர்சனம் தந்தார்''- சொல்லி விட்டு அவருக்கே உரிய வினைப்புன்னகையை விரித்தார். ''உன் வேண்டுகோள், தனிப்பட்ட ஒன்றா நின்னு ஜொலிக்குது. எனக்கு திருப்தியே. உனக்கு இதெல்லாம் ஒன்னும் புரியாது- ஆனா நீ வெளியே போகலாம். இன்னிக்கு ராத்திரி நான் இங்கே சாப்பிடப் போறது கிடையாது, அதனால, பாதகமில்லே ''

''தேங்க் யூ, மே'ம்.''

அருகிலிருந்த இப்பெண்மணியிடமிருந்து நகர்ந்து வெளியேறியதும் தீவிரமாய் முற்றுகையிட்டிருந்த ஆபத்திலிருந்து சட்டென முழுவதுமாய் விடுபட்டு விட்ட உணர்ச்சியை அனுபவித்தாள் டூபென்ஸ். 'கர்ண கொடூரமான பார்வையை வீசும் அந்தப் பெண்மணியைப் பார்த்தாலே பயப்படுகிறேன்... பயந்து நடுங்கிக் குலைகிறேன்... குலைந்து சிதைந்து வீழ்கிறேன்...' என்று தனக்குள் நிச்சயமாய் ஒப்புக் கொண்டாள்.

அடுக்களையிலிருந்த சாமான்களைத் தொடர்பற்ற சிந்தனையோடு ஏறக்கட்டிக் கொண்டிருந்த டூபென்ஸின் வதங்கிய மனதினைத் தொந்தரவு செய்யும் வகையில் வாசலின் அழைப்பு மணி ஒலித்தது. யார் என்று பார்க்கப் போனாள். இந்த முறை அவரது விருந்தாளி விட்டிங்டனோ அல்லது போரீஸோ அல்ல... ஆனால் கம்பீரமான தோற்றம் கொண்டு, காண்போரை அத்தோற்றத்தால் கட்டிப் போட்டு விடும் ஓர் ஆண்.

சராசரி உயரத்தைக் காட்டிலும் துளி அதிகமான உயரத்தில் ஆளுமை யோடும் சமயோஜிதத்தோடும் வந்தவர் புடைத்திருந்தாலும், தான் ஒரு பெரிய மனிதன் என்ற 'பந்தா' பதிவினை அவர் உண்டாக்கவேயில்லை. மாறாக, மழுங்க சரைத்திருந்த அவரது முகம் உத்தமமாகத் தோன்றியது... அது, நிலையாய் அல்லாது தீவிரமான இயக்கத்திலிருந்தது. கோடிக்கணக்கில் கொட்டிக் கிடக்கும் சாதாரண ஆடவர்களின் முகங்களில் சராசரியாய் காணக் கிடைக்காத சக்தியும் விசையும் எழுச்சியும் அவரிடம் முத்திரை குத்தப்பட்டு மின்னின. காந்தக் கவர்ச்சி அவரிடமிருந்து கதிர் வீச்சாய்க் கிளம்பி அவர் இருக்குமிடம் நெடுகிலும் பரவி நிறைவதாய் பட்டது.

வந்திருக்கும் ஆடவனை, இக்குணாதிசயங்களெல்லாம் வாடிக்கையாய் இருக்கவல்ல நடிகனென்பதா... டாக்டரென்பதா... வக்கீலென்பதா... என்ற மும்முனைக் குழப்பத்தில் டூ பென்ஸ் விழ, இவள் சந்தேகம், தனது பெயராய் அவர் சொன்னதிலிருந்து தீர்ந்தது: சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்.

தற்போது புதுப்பிக்கப்பட்ட ஈடுபாட்டோடு அவரைப் பார்த்தாள் இவள். அப்படியானால், இது, இங்கிலாந்து முழுவதும் மிக விமரிசையாய் பிரபலமாகியுள்ள பெயரே. நீதிமன்றத்து சிம்ம சொப்பனக் கதாநாயகர். இவர் ஒரு நாள் பிரதம மந்திரி ஆவதற்குக் கூட அதிக வாய்ப்புகள் இருப்பதாக பிறர் சொல்ல இவள் கேள்விப்பட்டிருக்கிறாள். தனது தொழில் பாதிக்கப் பட்டு விடும் எனும் ஒரே காரணத்திற்காக அப்படி வந்த அந்த உயர் பதவியைக் கூட துறந்து விலக்கி விட்டு ஸ்காட்லாண்டு ராஜாங்கத்தின் அங்கத்தினராக இருப்பதையே விரும்பியவர்.

அவளுடைய சமையலறைப் பகுதிக்குச் சிந்தனையோடு திரும்பி வந்தாள் டூபென்ஸ். அந்த மாபெரும் மனிதன் இவளைப் பாதித்து விட்டான். போரீஸ் அடைந்த கலவரத்தை இப்போது உணர்ந்தாள் இவள். ஜேம்ஸ் பீல், ஒருவர் சுலபமாய் ஏமாற்றி ஏய்த்து விடத்தகுந்தவரே அல்ல.

கால் மணி நேரம் போல கடந்த பிறகு அழைப்புமணி அடிக்கப்பட, எழுந்து போன டூபென்ஸ் வந்தவரை வழியனுப்ப இறங்கினாள். முன்னமேயே, இவளைத் துளைத்தெடுக்கும் ஒரு பார்வையை உள்ளே நுழைந்த பீல் வீசியிருந்தார். இப்போது, அவருடைய தொப்பி மற்றும் கைத்தடி ஆகியவற்றை இவள் எடுத்துக் கொடுத்து உதவிய போது அதே கண்கள் இவளைப் பார்வையாலேயே களையெடுத்துக் கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். கதவினைத் திறந்து, அவர் வெளியேற வசதியாய் இவள் ஓரமாய் நகர்ந்து வழி விட்டு நின்ற போது, வாசலில் அப்படியே ஒதுங்கி நின்றார் அவர்.

''இந்த வேலையில அனுபவமில்லையோ...ம்?''

டூபென்ஸ் தன் விழிகளைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள்-மகா ஆச்சரியத்தோடு. அவர் விட்ட நோட்டத்தில் கனிவு கொட்டியது; மேலும் இன்னும் ஏதோ ஒன்றும்-அதைக் கூர்மையாய் அறிய முடியாதபடி...!

தன் கேள்விக்கு இவள் பதில் தந்து விட்டதைப் போல ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டார் அவர்.

''முன்னாடி பார்த்த வேலை... கஷ்டமாயிடுச்சு போல... உனக்கு...ம்?''

''ஆ...'' என வாய் பிளந்தாள் டூபென்ஸ். ''இதை திருமதி வான்டே-மேயர் சொன்னாங்களா?''- சந்தேகமாய்க் கேட்டாள் இவள்.

''இல்லே, குழந்தே! உன் பார்வை எனக்கு சொல்லிச்சு. இடம் நல்லாயிருக்கா?''

''ரொம்ப நல்லா. தேங்க் யூ, ஸார்.''

''ஆஹ்...! ஆனா இப்பல்லாம் எக்கச்சக்கமா நல்ல இடங்க இருக்கு. சில சமயம்... அப்படிப்பட்ட இடங்களுக்கு உடனடியா மாறிக் கொள்வதுல பாவமே இல்லே.''

''அதாவது... நீங்க சொல்ல வர்றது---'', என ஆரம்பித்தாள் டூபென்ஸ்.

ஆனால் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன், எப்பொழுதோ படிக்கட்டுகளின் முதல் படியில் இறங்கக் கால் பதித்திருந்தார். அங்கிருந்தபடியே திரும்பியவர், அவருடைய கனிவான துளைக்கும் நோட்டத்தை விட்டார்.

''ஒரு சின்ன குறிப்பு -ஹின்ட்'' என்றார். *''அவ்வளோ தான்.''*

இது வரை தன் வாழ்நாளில் இப்படி இவள் சிந்தித்ததே இல்லை எனும் அளவுக்கு ஆழ்ந்து சிந்தித்தபடி தனது பகுதிக்குப் போனாள் டூபென்ஸ்.

அத்தியாயம் - 11

ஜூலியஸ் ஒரு கதை சொல்கிறார்

தனக்கே உரிய இயல்பான உடையலங்காரம் செய்துக் கொண்ட டூபென்ஸ், அன்று மதிய நேரத்திலேயே, முந்தியடித்துக் கொண்டு முன்னேறும் வேகத்தோடு கிளம்பினாள். அந்த சமயத்தில் ஆல்பர்ட் கண்களில் படவில்லை. எனவே டூபென்ஸே நேரடியாக பக்கத்துக் கடைக்கு விரைந்து தனக்கு எவ்விதமான தகவல்களும் வரவில்லையா என்பதை சரிபார்த்துக் கொண்டாள். இல்லை என்பதை அறிந்துக் கொண்டதும் தன்னுடைய ஜாகையிருந்த ரிட்ஸ் பகுதிக்குப் பாதையை மாற்றிக் கொண்டு நடந்தாள். அங்கு விசாரித்ததிலும் டாமி இன்னும் திரும்பவில்லை என்ற விடையே கிடைத்தது. இந்த விடையைத் தான் இவள் எதிர்பார்த்தாள்... ஆனாலும் இவளுடைய நம்பிக்கை எனும் பூவில் குத்தப்பட்ட ஆழமான ஆணியாகவே இது அமைந்தது. கார்ட்டரை அணுகி டாமி எங்கு எப்போது தன்னுடைய தேடுதல் வேட்டையை ஆரம்பித்தான் என்பதை சரியாக அறிந்துக் கொள்வதே உசிதம் என முடிவெடுத்துக் கொண்டவள், அவரையே இவ்விஷயத்தில் சிறந்ததொரு உபாயம் தந்து உதவுமாறு கேட்க வேண்டு மென்றும் முடிவெடுத்துக் கொண்டாள். தளர்ந்திருந்த இவனுடைய புத்துணர்ச்சியைத் தட்டியெழுப்பி மளமளவென வளரச் செய்தன, கார்ட்டரின் ஆரோக்கியமான வார்த்தைகள். பிறகு ஜூலியஸ் பற்றி விசாரித்தாள். இதற்கு இவளுக்குக் கிடைத்த பதில், ஓர் அரை மணி நேரத்துக்கு முன்னால் தான் அவர் திரும்பி இங்கு வந்துள்ளதாகவும், ஆனால், உடனேயே புறப்பட்டு இப்போது வேறெங்கோ சென்று விட்டதாகவும் அமைந்தது.

அயர்ந்திருந்த டூபென்ஸின் ஆன்ம பலம் வீறு கொண்டு எழுந்தது. ஜூலியஸைப் பார்த்தால் ஏதாவது தெரிய வரலாம். டாமியின் நிலை என்ன ஆனது என்பதைக் கண்டறிய உதவ அவரே கூட நல்ல திட்டம் ஒன்றை வடிவமைத்துத் தரலாம். கார்ட்டருடைய வரவேற்பு அறையிலேயே

அமர்ந்துக் கொண்டு இவள் ஜூலியஸுக்கு ஒரு சிறு குறிப்பு எழுதி விட்டு, அவருடைய முகவரியை உறை மீது எழுதும் போது தான், அறைக் கதவு உடைத்தெறியப்படுவது போன்ற வேகத்தோடு திறக்கப்பட்டது.

''என்ன கஷ்டமிது---'' என்று ஆரம்பித்த ஜூலியஸ், ஆனால் அதை முடிக்காமல் அப்படியே பின்வாங்கினார். ''ஓ, மன்னிக்கவும், மிஸ் டூபென்ஸ். இங்கே கீழே ஆபிஸ்ல இருக்கிற முட்டாளுங்க வெறுப்பேத்திட்டாங்க. தாமஸ் இங்கே வரவேயில்லையாமே-அவர் புதன்கிழமையிலிருந்து வரவேயில்லையாமே...?! அப்படியா?''

டூபென்ஸ் ஒப்புதலாய் தலையசைத்தாள். ''அவன் எங்கேனு உங்களுக்குத் தெரியாதா?'' -தளர்ச்சியாய்க் கேட்டாள் இவள்.

''எனக்கா? எனக்கெப்படி தெரியும்? அவர் கிட்டேயிருந்து ஒரு பதில் கூட எனக்கு வரலே... இத்தனைக்கும் நேற்று காலைல நான் அவருக்கு தந்தி அனுப்பியிருக்கேன்.''

''அந்தத் தந்தி பிரிக்கப்படாம ஆபிஸ்லேயே இருக்குனு நினைக்கிறேன்.''

''ஆனா இவர் எங்கே?''

''எனக்குத் தெரியலே. உங்களுக்குத் தெரியும்னு எதிர்பார்த்தேன்.''

''புதன்கிழமை நாங்க டெப்போலிருந்து பிரிஞ்சது முதல் அவர் கிட்டேயிருந்து ஒரே ஒரு வார்த்தை கூட நான் இன்னும் கேட்கலை... ஆமாம்.''

''என்ன டெப்போ?''

''டெப்போ...! ரயிலடி...! வாட்டர்-லூ...!''

''வாட்டர்-லூ?''-ஒன்றும் புரியாததால் சற்றே கோபமான டூபென்ஸ் கேட்டாள்.

''ஏன், ஆமாம். அவர் உங்ககிட்டே சொல்லவே இல்லையா?''

''ப்ச்...நானும் தான் அவனைப் பார்க்கவேயில்லே'' என பொறுமை யிழந்தவளாய் குறிப்பிட்டாள் இவள். ''அந்த வாட்டர்-லூ விஷயத்தைத் தொடருங்க. அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க, ரெண்டு பேரும்.''

''அவர் தான் எனக்கு போன் செஞ்சார். உடனே கிளம்பும்படியும் விரையும்படியும் சொன்னார். ரெண்டு ஆபத்தானவங்களைப் பின்தொடந்துக் கிட்டிருக்கிறதா சொன்னார்.''

''ஓ...!'' என்றாள் இவள், கண்ணகல. ''அப்படியா விஷயம். சொல்லுங்க.''

''போட்டது போட்டபடி ஓடினேன். தாமஸ் அங்கேதான் இருந்தார். ஆபத்தானவங்கனு அவர் சொல்லியிருந்த ரெண்டு பேரையும்

சுட்டிக்காட்டினார். அதுல திடகாத்திரமான ஆள் எனக்கு'னார்-அது, நீங்க ஆரம்பத்துல வசதியா ஏமாத்தின ஆளு. டாமி ஒரு பிரயாண டிக்கெட்டை என் கையில திணிச்சுட்டு விட்டிங்டன் பயணம் செஞ்ச அதே ஊர்தியில ஏறிக்கும்படி சொன்னார்.''-இப்போது ஜூலியஸ் சற்றே நிறுத்தினார். பின், ''உங்களுக்கு இதெல்லாம் சர்வ நிச்சயமா தெரிஞ்சிருக்கும்னே நினைச்சுக்கிட்டிருக்கேன்'' என்றார்.

''ஜூலியஸ்'' என்று காட்டமாய் அழைத்தாள் டூபென்ஸ். ''முதல்ல மேலும் கீழும் நடக்கிறதைக் கொஞ்சம் நிறுத்தித் தொலையுங்க. இது என் தலைய சுத்த வெக்குது. அந்த கை வெச்ச நாற்காலியில் வசதியா உட்காருங்க... உட்கார்ந்துட்டு, அறுக்காம, எத்தனை விறுவிறுப்பா சொல்ல முடியுமா அத்தனை விறுவிறுப்பா நடந்த கதையை சொல்லுங்க.''

''ஓ கே'' -ஜூலியஸ் கட்டுப்பட்டார்! ''நான் எதுல ஆரம்பிக்க?''

''எங்கே விட்டீங்களோ அங்கே. வாட்டர்-லூ.''

''ஆங்...'' -தொடங்கினார் அவர். ''உங்க ஆருயிர் பிரிட்டிஷ் ரயில்வே யின், சுமாரான, ஆனாலும் கூசாம முதல் வகுப்புனு அச்சடிக்கப்பட்டிருக்கும் ஒரு பெட்டிக்குள்ளே ஏறினேன். ரயில் அப்போ தான் கிளம்பியிருந்தது. முதல்ல நடந்தது இது தான்-ஒரு ரயில்வே காவல்காரன் என்னை நெருங்கி, நான் புகைபிடிக்க அனுமதியுள்ள பெட்டியில் ஏறலேனு அமரிக்கையா சாந்தமா குறிப்பிட்டுக் காட்டினான். அவன் கையில அரை டாலரை நான் திணிக்க...எனக்கு மட்டும் அது புகைபிடிக்கும் பெட்டியா மாறிச்சு! சற்று நிதானமா முன்னேறி அடுத்த பெட்டியின் நுழைவில் போய் நின்னேன். விட்டிங்டன் அதுல சந்தேகத்துக்கிடமின்றி இருந்தார். முகமெங்கும் சதைப் பிதுங்கித் தொங்கும் அந்த அகண்ட குரூர முகத்தைப் பார்த்தேன்... உடனேயே அவரின் கைப்பிடிகளில் சிக்கிக் கொண்டிருப்பதாய் ஜானேயையும் நினைத்துப் பார்த்தேன்... கையில ஒரு துப்பாக்கி இல்லாம போச்சேனு அத்தனை படபடப்பானேன். அவன் சதையில கொஞ்சத்தைச் சுட்டே பிய்ச்சிருப்பேன்.

''இடையூறில்லாம, போர்ன்-மவுத்'தை அடைந்தோம். ஒரு வாடகை ஊர்தியை எடுத்துக்கிட்ட விட்டிங்டன் ஹோட்டல் ஒன்றின் பெயரைச் சொன்னார். அதையே நானும் செய்ய... ஒருவருக்கொருவர் மூன்று நிமிட இடைவெளியில் ஸ்தலத்தை அடைந்தோம். ஒருருமை அவர் வாடகைக்கு எடுத்துக்கிட்டார். நானும். இது வரை எல்லாமும் தடங்கலே இல்லாம சுலபமா சென்றன. அவருக்குப் பின்னால அவரைக் குறி வெச்சுக்கிட்டு ஒருத்தர் வர்றதா விட்டிங்டனுக்குத் துளி கூட எண்ணம் இல்லே. ஹோட்டலின் வரவேற்பறை யில் இருக்கை மாற்றி இருக்கை உட்கார்ந்துக்கிட்டு, சிதறிக்

கிடந்த எல்லா சஞ்சிகைகளையும் படிச்சார். டின்னருக்கான நேரம் வரும் வரை இதையே செஞ்சார். டின்னர் குறித்து அவரிடம் ஒரு படபடப்பு இல்லாததைக் குறிச்சுக்கணும்.

''இதனால, அவர் சம்பந்தமா துப்பறிய ஒண்ணுமிருக்காது என்று நான் நினைக்க ஆரம்பிச்சேன். ஓய்வெடுக்கனு அவர் இங்கே ஓரிரு நாட்கள் வந்திருக்கணும்னு எண்ணினேன். ஆனா டின்னர் சாப்பிட அவர் கிளம்பாததை கவனிச்ச நான், இதுக்குக் காரணம், இது ஒரு சுமாரான ஹோட்டலா இருப்பதால, ஒரு வேளை சாப்பிட மட்டும் இந்த விட்டிங்டன் வெளியே ஒரு நல்ல உணவகமா பார்த்துப் போகும் திட்டமிருக்கலாம்னு நினைச்சேன்.

''ஒன்பது மணியிருக்கும்... நான் நினைச்சா மாதிரி அப்படியே நடந்தது! மனுஷன், ஒரு வாடகைக் காரை அமர்த்திக்கிட்டு டவுனுக்குப் போனார். அழகான டீஸன்ட்டான பகுதி-ஜானே கிடைச்சதும் முதல் வேலையா அவளைக் கூட்டிக்கிட்டு இந்தப் பகுதிக்கு சுத்த வரணும்னு நினைச்சுக் கிட்டேன். டாக்ஸியை அனுப்பிட்டு, அங்கிருந்த மலையுச்சியை அலங்கரிச்சுக்கிட்டிருந்த சின்ன மரக் காட்டை நோக்கி கால்களை விட்டார். நானும் அங்கேயிருந்தேன், ஓ கே...?! நாங்க நடந்தோம்...அரை மணிக்கும் மேலா நடந்திருப்போம். வழியெங்கும் பலப்பல வில்லாக்கள்...அதாவது சின்னச் சின்ன தனிமைக் குடில்கள்...இருந்தன. தூரம் போகப் போக இவற்றின் கூட்டம் கொஞ்சங்கொஞ்சமா குறைவதைக் கவனிக்க முடிஞ்சது. கடைசியில, இந்த வகை குடில்கள்ல ஒண்ணே ஒண்ணு மட்டும் தனித்து நிற்கும் இடத்தை அடைஞ்சோம். நல்ல பெரிய விசாலமான வீடு அது. வீட்டைச் சுற்றி உள்ளே நிறைய பைன் மரங்களின் அடர்த்தி.

''அது, ஒரு நல்ல காரிருள் இரவு. அவரோட அரவம் எனக்கு முன்னால கேட்டுது... இருந்தாலும் அவரை என்னால பார்க்க முடியலே. தன்னை யாரோ தொடர்றாங்க எனும் சந்தேகம் அவருக்கு வந்துடவேக் கூடாது எனும் எச்சரிக்கையோடு நான் சத்தமேயெழுப்பாம நடக்க வேண்டிய தேவையிருந்தது. கொஞ்சம் விரைவா வந்து எதிர்ப்பட்ட திருப்பத்துல திரும்பினேன்... அங்கே அந்த வீட்டின் கதவைத் தட்டி அவர் உள்ளே அனுமதிக்கப்படுவதைப் பார்க்க, வெகு சரியா வந்து சேர்ந்திருந்தேன். எங்கேயிருந்து பார்த்தேனோ...அங்கேயே அப்படியே நின்னுட்டேன். மழை கொட்ட ஆரம்பிச்சது-திடீர் மழை. சடுதியில் தொப்பத் தொப்பலா நனைஞ்சுட்டேன். நடுங்கி உறைய வைக்கும் குளிர் வேற. நான் கோட்டும் போடலே!

''விட்டிங்டன் மறுபடியும் வெளியே வரலே... நான் இங்கே மெதுமெதுவா எரிச்சலும் குழப்பமும் அடைஞ்சேன். சில அடிகள் இப்படியும் அப்படியும் நடந்து எட்டி எட்டிப் பார்க்கலானேன். கீழ்த்தளப் பகுதியின் அனைத்து ஜன்னல்களும் இறுக்கமா மூடப்பட்டிருந்தன. எங்கேயும் விளக்கு எரியலே. ஆனா, ரெண்டு மாடி கொண்ட இந்த வீட்டின் முதல் தள மாடிப்பகுதியில விளக்கொளி படர்ந்திருந்த ஒரு ஜன்னலை நான் பார்த்தேன். அதன் திரைச்சீலைகள், மூடப்படவில்லை.

''என்ன செய்யறது? ஆங்... சரியா, அந்த ஜன்னலுக்கு எதிரா வர்ற மாதிரி, வெளியில, ஒரு மரம் வளர்ந்துக்கிட்டிருந்தது. வீட்டிலிருந்து ஒரு முப்பது அடியிருக்கலாம்... அந்த அளவுக்குத் தள்ளியிருந்த இந்த மரம், என் மண்டைக்குள்ளே ஓர் ஐடியாவை உருவாக்கிச்சு. இந்த மரத்தின் மேலே மட்டும் நான் ஏறிட்டா, எதிர் அறைக்குள்ளே நடப்பவற்றை நான் பார்க்கக் கூடிய வாய்ப்புகள் நிறையவே அமையும். வீட்டின் வேற எந்தப் பகுதியிலாவது இல்லாமல், அந்தக் குறிப்பிட்ட அறைக்குள்ளே தான் வீட்டிங்டன் இருக்கணும்னு சட்டம் ஏதும் இல்லை என்பது எனக்கும் தெரியும்- வெறும் மழையில சொட்டச் சொட்ட நனைஞ்சுக்கிட்டு வெறுமனே நடுங்கறதுக்கு பதிலா எதையாவது உருப்படியா செஞ்சு பார்ப்பதே மேல்னு தோணினதன் விளைவு இது! ஆகவே, கிளம்பினேன்.

''சுலபமா அமையலே-உயிரெடுத்துடுச்சு, உண்மையிலேயே. கடைசியிலே நீங்களே புரிஞ்சுப்பீங்க பாருங்க! மரத்தண்டு, கிளை எல்லாத்தையும், தொட்டாலே வழுக்கித் தள்ளுமளவுக்கு மழை மாற்றி யிருந்ததாலே, ஒரே ஓர் அடியை மரத்துல வெச்சு மேற்கொண்டு மேல ஏறுவதே சிரமமா இருந்தது. அடி அடியா எப்படியோ போராடி ஏறி, ஒரு வழியா அந்த ஜன்னலுக்கு சமமான உயரத்தை அடைஞ்சேன்.

''அடைஞ்சும், ஏமாந்துப்போனேன்! ஆமாம்... கோணம் சரியா பார்த்து ஏறாம, அதிகபட்சமான இடப்பக்கத்துக்குப் போயிருந்தேன். ஒருக்களிச்ச அறை பகுதியைத் தான் பார்க்க முடிஞ்சதே தவிர நேருக்கு நேரா அல்ல. திரைச்சீலையின் ஒரு பகுதி மற்றும் பெரிய சுவரின் ஒரு குறுகிய 'வால்-பேப்பர்' பகுதி... இவை தான் என்னால பார்க்க முடிந்தவை- அவ்வளோ உயரம் ஏறி! இந்த நிலையில, நான் உச்சாணிக் கொம்புல ஏறிப்போய் உட்கார்ந்து ஒன்றும் ஆகப்போவதில்லை என்று முடிவு செஞ்சு, வேதனைப் பட்டபடியே நான் கீழே இறங்கி விட முயன்றபோது தான், யாரோ ஒருவர் உள்ளே நடந்து முன்னேறி வந்து, எனக்கு தரிசனம் தந்துக்கிட்டிருந்த அந்தத் துண்டுச் சுவர் பகுதிக்குள் கச்சிதமா நின்னாங்க- ஓ, கடவுள் ஆணையா, அது விட்டிங்டன்!

''பார்த்துமே ரத்தம் கொதிச்சது. எப்படியாவது வலப்பக்கமா நகர்ந்து போயிட்டா, அறையை படு துல்லியமா பார்க்கலாம். மரத்திலிருந்து கிளம்பி, வலப்பக்கமா நீண்ட ஒரு மரக் கிளையை அப்ப தான் நான் கவனிச்சேன். அந்தக் கிளையின் பாதி வரைக்கும் நான் நகர்ந்து போயிட்டா கூட போதும்... என் ப்ராப்ளம் தீர்ந்துடும். ஆனா, அது, என் முழு கனத்தையும் தாங்குமா என்பது பெருத்த சந்தேகமா இருந்தது. வேற வழி கிடையாது... ஆபத்தை சந்திச்சு தான் தீரணும்... துணிந்தேன். ரொம்பவுமே கவனமா... ஜாக்கிரதையா... அங்குலம் அங்குலமா...நான் அந்தக் கிளையில தவழ ஆரம்பிச்சேன். தொங்கிய அக்கிளை, முணுமுணுத்தபடி அபாயமான ஒரு கோணத்துல வளைஞ்சது! என்னைக் கீழே தள்ள அதுக்கு ரொம்ப நேரமாகாது. ஆனா, கடைசியா, நான் எங்கே போகணும்னு எண்ணி தவழ ஆரம்பிச்சேனோ...அந்த இடத்தை பத்திரமா அடைஞ்சேன்.

''அந்த அறை, மத்திய அளவிலிருந்தது. ரொம்ப பெரிசு கிடையாது. அதிக அடைசல் இல்லாம சுகாதார முறையில அமைந்திருந்தது அது. அறையின் நடுவுல ஒரு மேஜையும் அதில் ஒரு விளக்கும் தென்பட்டன. அந்த மேஜையில் உட்கார்ந்துக்கிட்டு போதுமான அளவுக்கு எனக்கு முகம் காட்டியபடி இருந்தது- அதே விட்டிங்டன். மருத்துவமனை செவிலி போல உடையணிந்து, எனக்கு முதுகு காட்டி உட்கார்ந்துக்கிட்டிருந்த ஒரு பெண்ணுடன் அவர் பேசிக்கிட்டிருந்தார். ஆகையினால அவள் முகத்தை என்னால பார்க்கவே முடியலே. திரைச்சீலைகள் விலக்கப்பட்டிருந்தாலும் ஜன்னல்கள் மூடியே கிடந்ததாலே, அவங்க பேசும் வார்த்தைகளின் ஒரே ஓர் அட்சரத்தைக் கூட... காற்று வாக்கிலாவது என்னால அடைய முடியலே. முழு பேச்சையும் விட்டிங்டனே செஞ்சுக்கிட்டிருந்ததைப் போலத் தான் தெரிஞ்சது... அந்த நர்ஸ் வெறுமனே கேட்டுக்கிட்டிருந்தா. கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் தந்துக் கொண்டிருப்பவளைப் போல... அவ்வப்போது ஒப்புதலாய்த் தலையசைத்தாள்; சில சமயங்களில் மறுத்துத் தலையசைத்தாள். ரொம்ப பிரயத்தனப்பட்டு விளக்குபவரைப் போலத் தோன்றினார் விட்டிங்டன்... ஓரிரு முறை தனது முஷ்டியால் மேஜையைக் குத்தும் விட்டார். மழை அப்போது நின்று விட்டிருக்க... எப்படி சரசரவென வந்ததோ அதே வேகத்தில் மேகங்கள் கலைந்து வானம் தெரியத் தொடங்கியிருந்தது.

''அந்த சமயத்தில், அவர் என்னவெல்லாம் பேசிக் கொண்டிருந்தாரோ அவற்றின் முடிவுக்கு வந்து விட்டவராய் தோன்றினார் விட்டிங்டன். எழுந்தார். அவளும் அப்படியே. வந்து ஜன்னல் வழியே எல்லா பக்கங்களையும் பார்த்தவர் -ஏதோ கேட்டார். இன்னும் மழை போகுதானு

கேட்டிருப்பார்னு நினைச்சேன். என்னத்தைக் கேட்டாரோ, இந்தப் பொம்பளையும் நேரா எழுந்து வந்து வெளியே பார்த்தாள். அதே நேரத்துல தான், மேகங்களுக்குள்ளிருந்து நிலாவும் வெளியேறணுமா...?! நான் கொட்டக் கொட்ட நிலா வெளிச்சத்துல முக்கியப்படுத்தப்பபட... மரப்பக்கமா பார்த்த அவ கண்ல நான் பட்டுடக் கூடாதேனு பயந்து அலறிப் போனேன். அதனால, கொஞ்சம் பின்னுக்கு வளைய முயன்றேன்; அப்போ நிலா ஒளி முகத்துல விழாது. உலுத்துப் போயிருந்த அந்தப் பாழாப் போன மரக்கிளைக்கு, பின்னால் நகர நான் கொடுத்த ஓர் அமுக்கு... பிடிக்கலே! கரபுரனு முறிஞ்சு அது கீழே விழுந்தது- கூடவே ஜூலியஸூம்...!''

''ஓ, ஜூலியஸ்...''- மூச்சிரைத்தாள் டூபென்ஸ். ''எத்தனை விறுவிறுப்பா இருக்கு. ம்...! முடிச்சுடாதீங்க...!''

''அவ்ளோ இண்ட்ரஸ்டிங்கா இருக்கா, நான் விழுந்தது! அதிர்ஷ்டவசமா, நான் விழுந்த இடத்துல, தரை மெத் மெத்னு வித்தியாசமா மெத்தை போல இருந்தது. ஆனா, அந்த நேரத்துல... விழுந்தத வேகம், என்னை அந்தாண்டை இந்தாண்டை நகர விடாம இருட்டாக்கித் தான் போட்டது அடுத்து என் பிரக்ஞைக்குத் தெரிந்த விஷயம், நான் ஓர் ஆஸ்பத்திரி படுக்கையிலே, நர்ஸ் ஒருத்தி என் பக்கத்துல நிற்க படுத்திருந்தது தான் -இது விட்டிங்டன் நர்ஸ் கிடையாது! படுக்கைக்குப் பக்கத்துல சின்னதா கறுப்பு தாடியும் தங்க முலாம் பூசப்பட்ட மூக்குக் கண்ணாடியும் கொண்டு-முகமெங்கும் டாக்டர் என்று எழுதப்பட்டிருந்தத ஓர் ஆள்! தன்னோட இரு உள்ளங்கைகளையும் ஒன்றோடு ஒன்றாக்கி சேர்த்து இழைத்த அவர், நான் அவரைப் பார்த்து கண் விழித்து முறைத்ததும் புருவங்களைத் தூக்கிக் கொண்டு என்னைப் பார்த்தார். ''ஆஹ்...!'' என்றார். ''ஆக, நமது புது நண்பர், கொஞ்சங் கொஞ்சமா திரும்பிவரார். வெற்றி. வெற்றி.''

''வழக்கமா விடற கரடி வித்தையைக் காட்டினேன்: 'என்ன ஆச்சு எனக்கு?' அப்புறம்... 'இப்ப நான் எங்கே இருக்கேன்?' ஆனா, எனக்கு, கடைசி கேள்விக்கான விடை பரிபூரணமாத் தெரியும். 'இப்போதைக்கு இது போதும்னு நினைக்கிறேன், ஸிஸ்டர்' என்றார் அந்த இளையவர்... இதற்கு நர்ஸ் நச்சுனு பழக்கப்பட்ட ஒரு செவிலியைப் போல மளமளவென்று நகர்ந்து வெளியேறினாள். ஆனா, அவ, கதவைக் கடந்த போது, கிளர்ச்சியும் ஆர்வமும் கலந்த ஓர் எதிர்பார்ப்பு பார்வையை என்மேல தூக்கிப் போட்டுட்டுப் போனதை, நான் பிடிச்சுக்க வேண்டி வந்தது!

''நான் பிடிச்ச அந்தப் பார்வை, எனக்குள்ளே ஒரு குட்டித் திட்டத்தை வகுத்துத் தந்தது. 'இனி டாக்டர்'- சொன்னேன் நான். சொல்லியபடி படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்கார பார்த்தேன்... ம்ம்... இந்த முயற்சி

வலப்பாதத்தில் கடுமையான வலியை உண்டுபண்ணியது. 'ஒரு சின்ன சுளுக்கு' என்று விளக்கினார் டாக்டர். 'கவலைப்பட ஒண்ணுமில்லே. இரண்டொரு நாள்ல குணமாயிடுவீங்க.'

''நீங்க நொண்டியபடி நடக்கும் போதே நினைச்சேன்'' என இப்போது ஒப்பிட்டுப் பார்த்தாள் டூபென்ஸ்.

ஜூலியஸ் ஒப்புதலாய்த் தலையசைத்து விட்டு தொடர்ந்தார்: ''இது எப்படி நடந்தது?' அப்படினு கேட்டேன். 'என்னோட மரத்தின் குறிப்பிட்ட ஒரு பெரும்பகுதியை விட்டுடாம கையிலேயே பிடிச்சுக்கிட்டு, புதுசா மண் போட்டு பாத்தி கட்டி நான் நட்டு வெச்சுள்ள பூச்செடிகளின் குறிப்பிட்ட ஒரு பெரும்பகுதி மேலே-நீங்க விழுந்துட்டீங்க...!' என்றார், வறட்சியாய்.

''எனக்கு அந்த மனுஷனைப் பிடிச்சுப் போச்சு. வாழ்க்கையைத் தேவையான அளவு ஹாஸ்யத்துடன் பார்க்கும் அவரோட குணாதிசயம் தெரிந்தது. குறைந்தபட்சம்... இவர் மட்டுமாவது, குறுக்கு புத்தியற்ற நேரானவர்னு அப்போதைக்கு நான் நெனச்சேன். 'அப்படியா, டாக்டர்'னேன் நான். 'மன்னிச்சுடுங்க, டாக்டர், உங்க மரத்தை முறிச்சுப் போட்டதுக்கு. ஆங்... உங்க தோட்டத்துல, கும்மிருட்டுல, அதுவும் ஒரு மரத்து மேல ஏறி உட்கார்ந்துக்கிட்டு நான் என்ன செஞ்சுக்கிட்டிருந்தேன்னு தெரிஞ்சுக்க உங்களுக்கு நிச்சயமா ஆர்வமா இருக்கும்...?!' இதுக்கு, 'நடந்துள்ள சம்பவங்கள் நிச்சயமா விளக்கப்படணும் தானே!' அப்படினு மறுபதில் தந்தார் அவர். சிரித்தார்.

''அப்புறம் கேட்டார்: 'நீங்க ஓர் அமெரிக்கன்... இல்லே?' நான் அவருக்கு என் பேரைச் சொன்னேன். 'நீங்க?'. 'நான், டாக்டர் ஹால். இது, உங்களுக்கே தெரிஞ்சிருக்கணும், என்னுடைய தனியார் மருத்துவமனை'.

''எனக்கு அப்படியெல்லாம் ஒண்ணும் தெரியாது... ஆனா மறுத்து ஒண்ணும் ஆகிவிடப் போறதில்லே. இத்தகவலை என்னிடம் சொன்னதுக்காக நன்றி தெரிவிச்சுக்கிட்டேன். எனக்கு அந்த மனுஷனைப் பிடிச்சாலும்... பொய்ப் பித்தலாட்டம் இல்லாதவன்னு உணர்ந்தாலும்... என் முழுக்கதையை சொல்றதா இல்லே. அப்படி நான் சொன்னாலும் அதை அவர் முழுசா நம்புவதே கஷ்டம் எனும் காரணத்துக்காகவாவது நான் நிஜத்தை சொல்லலே!

''மின்னலடிக்கும் நேரத்துக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்துட்டேன். 'டாக்டர், டாக்டர்...'னு... விஷயத்தைச் சொன்னாதான் ஆச்சு என்பது போல ஆரம்பிச்சேன். 'பெரிய மடத்தனம் ஒண்ணு பண்ணியிருக்கேன். அது-வானத்தை வில்லா வளைக்கும் அதியற்புத வேலையெல்லாம் கிடையாது ஆனையால அதை உங்ககிட்டே சொல்லியே ஆகணும்.' பிறகு ஆரம்பிச்சேன்-ஒரு பெண் சம்பந்தப்பட்டதுனு போட்டு பசப்பினேன். பெண் ஏற்படுத்தித்

தந்த தோல்வி- அதனால் மனமுடைந்து ஏற்பட்ட நரம்புத் தளர்ச்சி-வழியில அதே போன்ற சாயலை இன்னொரு பெண்ணிடம் பார்த்தேன்- இந்த மருத்துவமனையிலேயே நோயாளியா இருக்கும் பெண் அவ- அதனால் தான் நான் நடத்திய முட்டாள்தனமான வீர சாகசம்- என்றெல்லாம், எங்கேயிருந்து வந்ததோ தெரியாது... சரளமா விட்டுக்கிட்டே இருந்தேன்.

''இது போல ஏதோ கதையைத் தான் அவர் எதிர்பார்த்துக்கிட்டு இருந்ததுனு நான் கணிச்சிருந்தேன். நான் முடிச்சபோது, 'அடடா... என்ன ஒரு ரொமான்ஸ்...' அப்படினு ஸ்லாகித்தார். 'இந்த கட்டத்துல... டாக்டர்...' அப்படினு நானும் தொடர்ந்தேன், என் தூண்டிலைத் தூக்கிக்கிட்டு. 'என்கிட்டே கொஞ்சம் வெளிப்படையா இருக்க முடியுமா? இப்போ சமீபத்துல... இல்லே, எப்பவாவது கடந்தத காலத்துல... இங்கே, ஓர் இளைய பெண்... ஜானே ஃபின் என்று பெயர்... அவ வந்திருக்காளா?' டாக்டர், இதே பெயரை திரும்பத் திரும்ப சிந்தித்தபடி சொல்லிக்கிட்டார். 'ஜானே ஃபின், ஜானே ஃபின்.' பிறகு 'ம்ம். கிடையாது' அப்படின்னார்.

''எனக்கு எரிச்சல் மண்டிக்கிட்டு வந்தது... அதை மறைக்க முடியாம காட்டிட்டேன்னே நினைக்கிறேன். 'நிச்சயமா தான் சொல்றீங்களா?'னு வேதனை கலந்த வெறுப்பா கேட்டேன். 'நிச்சயமா, திரு ஜூலியஸ்'னார் அவர் சாவதானமா! 'இது பொதுவா இங்கே யாரும் பயன்படுத்தாத பெயர். அதனால இதை நான் மறந்திருக்க சாத்தியமில்லை' னார்.

''இது தான், எல்லாத்தையும் தரை மட்டமாக்கிப் போட்ட இறுதி. என் தேடுதல் அங்கே ஓவர்னு முடிவாக்கிக்கிட்டேன். 'அப்ப அவ்ளோ தான்' என்றேன் நான். பிறகு, 'ஆங்...இப்ப இன்னொரு சங்கதி'னேன் தற்காலிகமா எரிச்சலைத் தள்ளி வைத்து. 'அந்த மரக்கிளையை நான் பிடிச்சுக் கட்டிக்கிட்டு தொங்கிக்கிட்டிருந்த போது, என் பழைய நண்பன் ஒருவன் உங்க நர்ஸுகள்ல ஒருவரோடு பேசிக்கிட்டிருந்த மாதிரி பட்டுது.' இந்த சமயத்துல நான் வேணும்னே எந்தப் பெயரையும் குறிப்பிடலை; இந்த விட்டிங்டன், அங்கே, அவருக்கு அவரே முழுக்கவும் வேறுபட்ட ஒரு பெயரை அறிவிச்சுக்கிட்டு வந்து போகலாம் இல்லையா...! ஆனா என் கேள்விக்கு டாக்டர் பட்டுனு பதில் தந்தார்: 'திரு விட்டிங்டனா இருக்கலாம்...?!' கண்ணகல ஆன நான், 'அதே...அதே ஆள் தான்'னேன். 'இங்கே வந்து அந்த மனுஷன் என்ன பண்ணிக்கிட்டிருக்கார்? அவருக்கும் நரம்புத் தளர்ச்சினு மட்டும் சொல்லிடாதீங்க...!'

''டாக்டர் ஹால் கலகலனு சிரிச்சுட்டார். 'இல்லே, இல்லே. அவர் இங்கே என் நர்ஸுகள்ல ஒருத்தியைப் பார்க்க வந்தார். நர்ஸ் எடித். அவரோட சகோதரர் மகள் போல.' 'எதுக்காக? விளங்கலையே...!' என ஆச்சரியம்

காட்டிய நான், 'அவர் இன்னும் இங்கே தான் இருக்காரா?' னேன். 'இல்லே... அவர் டவுனுக்கு வந்த வேகத்திலேயே கிளம்பிட்டார்'னார் அவர் இதுக்கு, 'அப்படினா- நான், அந்த நர்ஸ்... என்ன பேர் சொன்னீங்க... எடித் தானே- ஆங்... அவகிட்டே பேசிப் பார்க்கறேன்'னேன் நான்.

''இதுக்கு டாக்டர் மறுப்பாய் தலையசைச்சார். 'இதுவும் முடியாதுங்க' னார். 'ஒரு பேஷண்ட்டைப் பார்க்க இன்னிக்கு ராத்திரி நர்ஸ் எடித் போயிருக்காங்க' னார். 'சரியான அதிர்ஷ்டக்கட்டை நான்'னு குறிப்பிட்டேன். 'விட்டிங்டனோட டவுன் முகவரி உங்ககிட்டே இருக்கா? அங்கே நான் போனதும் அவரைப் போய் பார்க்கலாம்னு தோணுது.' 'எனக்கு அந்த முகவரி தெரியாது. வேணும்னா நர்ஸ் எடித்கிட்டே வாங்கி அனுப்பறேன்.' இதுக்கு அவருக்கு நான் நன்றி தெரிவிச்சேன். 'யாருக்கு இந்த முகவரி தேவைப் பட்டதுனு கேட்டா, சொல்லாதீங்க. அவர் முன்னாடி நான் போய் நின்னு சின்ன ஆச்சரியம் தர விரும்பறேன்.'

''அந்தக் கட்டத்துல என்னால செய்ய முடிஞ்சதெல்லாம் இவ்ளோ தான். ஒரு வேளை அந்த பொண்ணு நிஜமாவே விட்டிங்டனோட சகோதர-சகோதரி மகளா இருந்தா, நான் வைக்கும் பொறியில தவறாம விழுந்துட வாய்ப்பு நிறைய இருக்கு. முயற்சி பண்ணணும். அடுத்து நான் செஞ்சது, தாமஸுக்கு ஒரு தந்தி அனுப்பினது... நான் எங்கேயிருக்கேன் எனும் தகவல், சுளுக்கின காலோட படுத்துக் கிடக்கிற நிலைமை, முக்கியமான வேலை ஒண்ணும் இல்லேனா புறப்பட்டு வர வேண்டுகோள்... எல்லாம் அனுப்பினேன். ஒரு துணையில்லாம என்னால நகர முடியாது என்பதைக் கோடிக் காட்டியிருந்தேன். ம்ம். அவர் கிட்டேயிருந்து எந்த பதிலும் எனக்கு வரலே. சீக்கிரமாகவே என் காலும் நலமாச்சு; பார்க்கப் போனா அது சுளுக்கு இல்லே... சின்ன நரம்புத் திருகுதான்... அதனால! அந்த டாக்டர் பயலுக்கு ஒரு தேங்க்ஸ். நர்ஸ் எடித் கிட்டேயிருந்து தகவல் கிடைச்சதும் எனக்கு அனுப்பச் சொல்லிட்டுக் கிளம்பி நேரா டவுனுக்கு வந்தேன். இப்ப நீங்க. சொல்லுங்க டூபென்ஸ்... நீங்க பிரமை பிடிச்ச மாதிரி வெளிறிப் போயிருக்கீங்க.''

''டாமி'' என்றாள் டூபென்ஸ். ''அவனுக்கு அப்படி என்ன தாங்க நடந்திருக்கும்?''

''விடுங்கப்பா. அவர் எங்கேயோ சுகமாத்தான் இருக்கார். அப்படி இல்லாம, ஏதாவது நடந்து தான் இருக்கணுமா? இதோ பாருங்க... அயல்நாட்டுக்காரன் மாதிரி தெரிஞ்ச ஒருத்தனுக்குப் பின்னாடி அவர் போனார். ஒரு வேளை ரெண்டு பேரும் கிளம்பி எங்கேயாவது போயிருக்கலாம். போலந்து! இல்லே, இது மாதிரி ஏதாவது...?''

''எதுக்கு அங்கேயெல்லாம்...?'' என்று மறுத்துத் தலையசைத்த டூபென்ஸ். ''பாஸ்-போர்ட் இத்யாதிகள் இல்லாம அவனால அதெல்லாம் பண்ண முடியாது'' என்றாள். ''தவிர அந்த ஆள்... போரீஸோ என்ன எழவோ... அவனை நான் பார்த்தேன். நேத்து ராத்திரி அவன் திருமதி வாண்டே-மேயர் கூட இரவு விருந்து எடுத்துக்கிட்டான்.''

''திருமதி- *யார்?*''

''ஓ... மறந்துட்டேன்... இதெல்லாம் தான் உங்களுக்குத் தெரியாதே.''

''நான் கேட்டுக்கிட்டுத் தான் இருக்கேன்''- சொன்னார் ஜூலியஸ். சொல்லி விட்டு அவருடைய ஆஸ்தான சொற்றொடரான ''புரியும்படியா வெளிச்சம் போட்டுக் காட்டுங்க...!'' என்றார். ''விளக்குங்க.''

இதற்குப் பிறகு, டூபென்ஸ், இரு நாட்களாக நடந்து வரும் தொடர் சம்பங்களைக் கோர்வையாய் தந்தாள். ஜூலியஸின் ஆச்சரியமும் பாராட்டுதல்களும் எல்லையற்று ஆயின.

''உங்களை ஓங்கி அறையலாமானு வருது! கிறுக்கா நீங்க, ஆங்...? இது வரை நீங்க சொன்ன கதை, என்னை சாவின் கதவு வரை கொண்டு போய் நிறுத்தது!'' சொல்லி விட்டு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் சொன்னார்: ''இப்போவாவது கவனியுங்க, டூபென்ஸ். எனக்கு பிடிக்கலே, இது பிடிக்கலே. சுத்தமா. உடனடியா இதை விட்டு நீங்க விலகிடணும்னு விரும்பறேன். நாம எதிர்த்து நிற்கும் இந்த அயோக்கியனுங்க, ஒரு ஆம்பிளையை எப்படி வெட்டி சாய்ப்பாங்களோ அதே மாதிரி பெண்ணுனு கூட பார்க்காம வெட்டி சாய்ச்சுடுவாங்க... என்னிக்கு வேணும்னாலும். வேணாம் இது.''

''நான் பயந்து போய் இத்தனையும் சொன்னதா நினைக்கிறீங்களா?'' என்று சற்று எரிச்சலாய் கேட்டாள் டூபென்ஸ்-எதிர்கொண்ட திருமதி வாண்டே-மேயரின் இரும்புப் பார்வையை தைரியமாய் நினைவுகூர்ந்தபடி.

''நீங்க கிறுக்கானு கேட்டேன். அதுக்கு இப்போ நான் துளியும் வேதனைப்படலே.''

''ஐயோ எனக்குத் தொந்தரவா நிக்காதீங்களேன், ப்ளீஸ்'' என்று பொறுமையற்று குரலை உயர்த்தினாள் டூபென்ஸ். ''டாமிக்கு என்ன நடந்திருக்கும் என்பதை மட்டும் பேசுவோமே. மிஸ்டர் கார்ட்டருக்கு இதைப்பற்றி எழுதியிருக்கேன்''என்று கூடுதலாய் தகவல் தந்தவள், கடித சாராம்சத்தையும் ஒப்பித்தாள்.

ஆழ்ந்து கேட்டுக் கொண்டார் ஜூலியஸ். ''நடந்தது நடந்தபடி இருக்கட்டும். இப்போதைக்கு நாம விறுவிறுப்பாகி ஏதாவது செஞ்சாகணும்.''

''நாம என்ன செய்யலாம்?'' என்றாள் டூபென்ஸ், அவளுடைய ஆன்மபலம் அதிகரிக்க.

''போரீஸ் பாதைக்குள் நாம நுழைவது சரியாயிருக்கும்னு தோணுது. அவர் உங்க இடத்துக்கு வந்ததா நீங்க சொல்றீங்க. அவர் மறுபடியும் வருவார்னு தோணுதா?''

''வரலாம். எனக்கு நிஜமா அதைப்பற்றித் தெரியலே.''

''அப்படியா. சரி. நான் ஒரு கார் வாங்கலாமானு நினைக்கிறேன். உடனடியா. ரொம்பல்லாம் யோசிக்காம. வாங்கிட்டு வெளியே காத்திருக்கணும். பிறகு போரீஸ் வந்தார்னா, ஏதாவது ஒரு வகையான சமிக்ஞையை நீங்க எனக்குத் தரணும். உடனே நான் அவரைப் பின்தொடர்வேன். இதெப்படி இருக்கு?''

''மிஸ்டர் ஜூலியஸ்...?! அவர் வாரக்கணக்கா வராம கூட இருந்துடலாம்...! வெளியே கார்லேயே குடுத்தனம் நடத்துவீங்களா? ஆஹ்...!''

''அப்படி நடக்குதானு வாய்ப்பின் அடிப்படையில பார்ப்போமே! ஒரு சான்ஸ்! உங்களுக்குப் பிடிக்கலே?''

''சிறப்பாத்தானிருக்கு... ஆனா...''

''உங்களுக்குப் பிடிச்சிருக்கு இல்லே... அது போதும்'' என்று விட்டு எழுந்து விட்டார் ஜூலியஸ்.

''நீங்க இப்போ எங்கே கிளம்பிட்டீங்க?''

''கார் வாங்கத்தான்'' என்று மறுபதில் தந்தார் அவர், ஆச்சரியமாய். ''எந்த கம்பெனி உங்களுக்குப் பிடிக்கும்? முடிவா வாங்கறதுக்கு முன்னாடி, நாம ஒரு சுற்று சுற்றிப் பார்த்துட்டுத் தான் வாங்கணும். ஆமாம்.''

''ஒஹ்... அப்படி வாங்கித்தான் ஆகணும்னா...'' என்று மெலிதாய் குறிப்பிட்ட டூபென்ஸ், ''... அது, ராயல்-ரோல்ஸ் மாதிரி இருக்கணும்'' என்றாள். கூடவே இதென்னதுக்கு இந்தப் புதுக் கூத்து என்றும் நினைத்துக் கொண்டிருந்தாள்.

''நிச்சயமா'' என்றார் ஜூலியஸ், டூபென்ஸ் சொன்ன குறிப்புக்கு. ''நீங்க என்ன சொன்னீங்களோ-அதே கம்பெனி. ஒண்ணு வாங்கிடறேன்.''

''என்னாச்சு உங்களுக்கு? என்ன விலை அது? சரி... விலை உங்களுக்கு 'பாக்கெட் மணி' போலவே இருக்கட்டும்... ஆனா, உங்களால், அதை உடனேயே வாங்கிட முடியாது. தெரியுமா? முன்பதிவு பண்ணி வெச்சுட்டு, மாசக்கணக்கா...ஏன் வருஷக்கணக்காக் கூட மக்கள் காத்திருக்காங்க.''

''குட்டி ஜூலியஸ் காத்திருக்க மாட்டான்''-உறுதியாய்ச் சொன்னார் அவர். ''கவலையே படாதீங்க. அரை மணி நேரத்துல ஒரு முழு வட்டம் அடிச்சுட்டு அந்த கார்ல வரேன் பாருங்க.''

டூபென்ஸ் எழுந்துக் கொண்டாள். ''நீங்க அசகாயன், ஜூலியஸ். இருந்தாலும்... இது ஒரு முதிர்ச்சியற்ற முயற்சினு என்னால சொல்லாம இருக்க

முடியலே, ஜூலியஸ். உண்மையிலே என் நம்பிக்கை அத்தனையும் இப்போ கார்ட்டார் மேல தான் இருக்கு.''

மனதில் பட்டதைச் சொன்ன டூபென்ஸ், ''ஆங், ஆங்... இன்னொரு விஷயம்'' என்று ஞாபகம் வந்தவளைப் போலக் குறிப்பிட்டு விட்டு சொன்னாள்: ''உங்க கிட்டே இன்னிக்குக் காலையில நடந்த ஒரு விளக்க முடியாத சம்பவத்தைச் சொல்ல மறந்துட்டேன்'' என்றாள்.

சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனுடன் ஏற்பட்ட சந்திப்பினைப் பற்றி விவரித்தாள். இதில் ஜூலியஸ் ஈடுபாடாய் இருந்தார்.

''அப்படி சொன்னதுல அந்த ஆள் எதை அர்த்தப்படுத்தினார்னு நீங்க நினைக்கிறீங்க'' - கேட்டார்.

''எனக்குத் தெரியலே''-ஒப்புக் கொண்டாள் டூபென்ஸ். ''அவர் ரொம்பக் கனிவானவராகவும் தெரிந்தார். மேலும், ஜஸ்ட்...ஒப்புயர்வற்ற புத்திசாலி...படு,படு புத்திசாலி! அவர் கிட்டே நேராப் போய் நடந்த அத்தனையையும் மளமளனு சொல்ல நான் தயங்கவே மாட்டேன்.''

டூபென்ஸின் ஆச்சரியத்துக்குத் தீனி போடும் வகையில், ஏனோ அவளுடைய எண்ணத்தைக் கறாராய் தள்ளினார் ஜூலியஸ்.

''இதோ பாருங்க... நம்ம விஷயத்துல எந்த ஒரு வக்கீலும் வந்து மூக்கை நுழைப்பது கூடாது. அந்த ஆளு நமக்கு எந்த உதவியும் தந்துட முடியாது.''

''கிடையாது. அவரால் உதவ முடியும்னு நான் நம்பறேன்''- இன்னொரு முறை முன் வைத்தாள் டூபென்ஸ்.

''அப்படி நினைக்கிறீங்களா?! நினைச்சுக்கிட்டே இருங்க! நான் அரை மணி நேரத்துல திரும்பறேன்.''

ஜூலியஸ் மீண்டும் வந்த போது முப்பத்தைந்து நிமிடங்கள் கடந்திருந்தன. டூபென்ஸைத் தனது முஷ்டிக்குள் வளைத்துக் கொண்டு ஜன்னலோரம் கூட்டிப் போனார் அவர். அங்கிருந்து கீழே பார்த்தபடியே ஆச்சரிய அதிர்வில் பேசினார்கள்:

''அவ, அதோ, அங்கே இருக்கா.''

''ஒஹ்...'' குரலில் நம்பவே முடியாத உணர்வினைப் பிரதிபலித்த டூபென்ஸ், அகண்ட கண்களோடு கீழே நின்றுக் கொண்டிருந்த படகு போன்ற பிரம்மாண்டமான காரையே பார்த்த வண்ணமிருந்தாள்.

''அவ மயக்கும் ஒரு மந்திரக்காரி... நான் சொல்றேன்!'' என்றாள், மரியாதை கலந்த சந்தோஷம் பொங்க. காரை! ''எப்படி அரை மணி நேரத்துல இதைப் பிடிச்சீங்க?'' - மூச்சடைக்கக் கேட்டாள்!

''ஒரு பெரிய பணக்காரன் ஒருத்தன் வீட்டுக்கு இது அனுப்பப் பட்டிருந்தது.''

''அப்புறம்?''

''நான் அவன் வீட்டுக்குப் போனேன்'' என்றார் ஜூலியஸ்.'' 'நான், இதே...இதே போல ஒரு காரைத்தான் மனசுல கணக்கிட்டு வெச்சிருந்தேன்' அப்படினு சொன்னேன்.''

''அப்புறம்?''- மேலும் மூச்சடைத்துப் போனது டப்பன்ஸூக்கு!

'''இருபதாயிரம் பவுண்டு விலை இது- இன்னிக்குத் தேதியில. நீங்க வாங்கி வந்திருக்கீங்க. அப்படியே என் பெயருக்கு மாற்றினா, நீங்க வியாபாரி. நான் வாடிக்கையாளன். விலை-ஐம்பதாயிரம் பவுண்டு'னேன்.''

''அப்புறம்?''

''அப்புறம் ---'', என்று டூபென்ஸ் பக்கம் திரும்பிய ஜூலியஸ், ''விட்டுக் கொடுத்துட்டான். அவ்ளோ தான்'' என்றார்.

அத்தியாயம் - 12

உதவ வந்த நண்பன்

எவ்வித விசேஷ நிகழ்வுகளும் இல்லாது, வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் கடந்து போயின. ஏ கார்ட்டருக்கு வேண்டுகோள் விடுத்து, டூபென்ஸ் எழுதியிருந்த கடிதத்திற்கு அவர் பதில் எழுதியிருந்தார்.

அதில், இளஞ்சிங்கங்கள் லிமிடெட், இந்தத் துப்பறியும் வேலையை அவர்களுடைய கட்டுப்பாடுக்குள்ளேயே தான் ஆரம்பித்தனர் என்றும், இதில் புதைந்துள்ள ஆபத்துக்கள் அனைத்தும் அவர்களுக்கு முன்னமேயே எடுத்துக் கூறப்பட்டு எச்சரிக்கையும் தரப்பட்டது என்றும் தெரிவித்திருந்தார். டாமிக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் அதற்காகத் தனது ஆழ்ந்த அனுதாபத்தை மட்டுமே தர முடியும் என்றும், இதை மீறி தன் பக்கத்திலிருந்து செய்வதற்கு ஒன்றுமில்லை என்றும் முடித்திருந்தார். இது தான் 'அசுர வசதி' -நினைத்துக் கொண்டாள் டூபென்ஸ்.

ஏனோ, டாமியில்லாது, சாகசம் அள்ளித் தந்துக் கொண்டிருந்த ருசி அத்தனையும் வெளியேறியிருந்தன. மேலும், முதல் தடவையாக, இம்முயற்சியில் அடைய வேண்டிய வெற்றிக் கனியையே சந்தேகித்தாள், டூபென்ஸ். இவர்களிருவரும் ஒன்றாய் சேர்ந்திருந்த போது, வெற்றியை ஒரு நிமிட நேரம் கூட இவள் கேள்விக்குறியாக்கிப் பார்த்ததில்லை. டூபென்ஸே தான் ஒவ்வொரு முறையும் முதல் ஆளாய் நின்று, இவளுடைய சாதுர்யத்தால் மிகப் பெருமையாக நிகழ்வுகளை மேற்கொண்டு நகர்த்திச் சென்றிருந்தாலும், நிஜமாய் பார்த்தால், அப்போதெல்லாம் டாமியின் துணையை இவள் சார்ந்தே இருந்திருக்கிறாள்; இது, இவளே கூட அப்போது உணர்ந்திராத ஒன்று. அவனுடைய பிரசித்தி பெற்ற முதல் தரமான மாபுத்திசாலித்தனம், உணர்ச்சி வயப்படாத நிதான புத்தி, இனி என்ன நடக்கும் என கணித்து முடிவெடுக்கும் நுணுக்கமான பார்வை, போன்ற என்றும் மாறாத சக்திமிகு தரங்கள், அவனில்லாமல் இவள் ஒரு நங்கூரமற்ற கப்பல் என்றே இப்போது கருத வைத்தன. டாமியை விட மேற்கூறியவை போன்ற அனைத்து சாதுர்யங் களிலும் இன்னும் அதிக திறமையுடன் திகழும் ஜூலியஸ், இவளுக்கு டாமி

ஏற்படுத்தித் தந்துள்ளது போன்ற ஒரு பாதுகாப்பு உணர்வினை ஏற்படுத்தித் தர முடியாததை எண்ணும் போது இவளுக்கு ஆச்சரிய வியப்பாயிருந்தது. 'உனக்கு நல்லது நடக்கும்னே நினைக்கத் தெரியாதாடா...!' - டாமியைக் கேட்டிருக்கிறாள். 'எதிலும் தீமையே நடக்கும்னே பார்க்கிறே, நீ!' - வைதிருக்கிறாள். கெடுதல் எதுவும் நடக்காது என மேட்டுமையாய் இவள் முன்னேறும் விஷயங்களில் புதைந்துள்ள எதிர் விளைவுகளையும் ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் -அவன் முன்கூட்டியே படித்திருக் கிறான்... எச்சரித்திருக்கிறான். எனவே கொஞ்சங்கொஞ்சமாய் இவள் அவனுடைய கணிப்புகளுக்குத் தன்னை இழக்க ஆரம்பித்து அவனை சார்ந்தே இயங்க வேண்டிய கட்டத்தை அடைந்தாள். அவன் மெதுவாகத் தான் இயங்குவான், ஆனால் வெற்றி நிச்சயம் என்பதில் ஸ்திரமானவன்.

ரொம்ப விளையாட்டாய் கையில் எடுத்து வைத்துக் கொண்டுள்ள இவ்வழக்கினுள் உள்ள கொடூர வஞ்சனை வலைகளை முதன் முறையாக உணரத் துவங்குவதாய் பட்டது இப்பெண்ணுக்கு. காதல் கதையின் ஏதோ ஒரு கிளுகிளு பக்கத்தைப் படிப்பது போலத் தான் துவங்கியது... ஆனால், இப்போது, அப்படிப்பட்ட கவர்ச்சி முலாமெல்லாம் கலைந்து, தனது அபாய கதத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய் தோன்றியது இவளுக்கு. டாமி- அவன் ஒருத்தனே இவளுடைய முழுச் சிந்தனையும் ஆனான். ஒருவருக்கும் தெரிந்து விடா வண்ணம், கண்ணோரம் துளிர்க்கும் கண்ணீர்ப் பூக்களைப் பற்பல முறை தட்டி விட்டுக் கொண்டே தானிருக்கிறாள். 'முட்டாளே...' என்றும், 'முட்டாள் பெண்ணே...' என்றும் தன்னைத் தானே அழைத்துக் கொண்டு, 'அழாதே...' என தன்னைத் தானே தேற்றிக் கொள்ள முயல்வாள். 'உனக்கு அவன் என்றால் உயிர் தான். உன் வாழ்நாள் முழுவதும் 'அவன்' நீ அறிந்தவன் தான். என்ன செய்வது? அதற்காக இத்தனை பந்தபாச உணர்வு தேவைதானா?'

இந்நிலையில், போரீஸைப் பற்றியும் அதிகமாய் ஒன்றும் தெரிய வரவில்லை. அவர் அடுக்ககக் குடியிருப்புக்கு வரவில்லை... கீழே ஜூலியனும் காரும் காத்திருந்தது வீணாகவே ஆயிற்று. மேற்கொண்டு என்னவெல்லாம் பண்ணலாம் என்று புதுப்புது சிந்தனைகளுக்குள் தன்னை அர்ப்பணித்தாள் ரூபென்ஸ். ஜூலியஸ் சொன்ன மறுப்பினை இவள் அனுமதித்தாலும், சர் ஜேம்ஸ் பீலினைச் சந்தித்து முறையிடும் எண்ணத்தை இவள் முழுவதுமாகக் கைவிட்டு விடவில்லை. சொல்லப்போனால், அவரது முகவரி என்ன என்பதை தொலைபேசிப் புத்தகத்திலிருந்து கண்டுபிடிப்பது வரை போனாள் இவள். இவளை எச்சரிப்பதற்காகவா அன்று அப்படி

பேசினார்? அப்படியானால், ஏன்? அவரே வாய் விட்டு இவளிடம் வலிய வந்து அப்படிப் பேசியிருப்பதால் அதற்கான காரணம் என்ன என்று அறியும் குறைந்தபட்ச உரிமை இவளுக்கு உள்ளது. இவளை மிகக் கனிவாய் அவர் பார்த்தார். ஒரு வேளை அவர் இவர்களிருவரிடமும் திருமதி வாண்டே-மேயர் சம்பந்தமாய் ஏதாவது கூறலாம்... அது, டாமி எங்கிருக்கிறான் என்பது பற்றிய சூசகக் குறிப்பு தருவதில் கூட முடியலாம்.

எப்படியானாலும் போய் ஒரு முயற்சி செய்து விடுவதில் குறையப் போவது ஒன்றுமில்லை என... இவளுக்கே உரிய உறுதி செய்யும் தோள் குலுக்கலோடு முடிவெடுத்துக் கொண்டாள், டூபென்ஸ். ஞாயிறு மதியம் இவளுக்கு விடுமுறை உள்ளது. நேராய் போய் ஜூலியஸைத் தன்னுடைய எண்ணத்துக்கு இசையுமாறு நச்சரிப்பாள். இருவரும் கிளம்பி நேராகச் சென்று சிங்கத்தை அதன் கூண்டிலேயே சந்திப்பார்கள்.

அந்த தினம் வந்ததும், ஜூலியஸை இவள் விருப்பத்துக்கு இணங்க வைக்க மிக அதிகமாக மெனக்கெட வேண்டியிருந்தது... ஆனால், டூபென்ஸும் விடவில்லை. "இதனால என்ன குறைஞ்சுடப் போகுது, ம்?" - இதே கேள்வியைத் தான் திருப்பித் திருப்பி விதவிதமாய் கேட்டு அவரைத் துளைத்தெடுத்தாள். கடைசியில், "ச்சே..." என்ற சலிப்பான உறுமலோடு தனது பிடிவாதத்தை ஜூலியஸ் விட வேண்டி வந்தது. இருவரும் காரில் சிங்கக்கூண்டுக்குப் புறப்பட்டனர்.

வாயிற்கதவு பவ்யமான ஒரு பட்லரால் திறந்து விடப்பட்டது. டூபென்ஸ் கொஞ்சம் படபடப்பாய் உணர்ந்தாள். இப்போது இவள் மிகப்பெரிய அளவிலான ஒரு துடுக்குத் தனம் செய்ய வேண்டிய நேரமாயிற்றே. 'சர் ஜேம்ஸ் வீட்டிலிருக்கிறாரா?' என்று கேட்கக் கூடாது என முடிவெடுத்திருந்தாள்... ஆனால், வேறொரு வகை தனிப்பட்ட உத்தியைக் கையிலெடுத்துக் கொண்டாள். கேட்டாள்: "சர் ஜேம்ஸிடம் போய் அவரை ஒரிரு நிமிடங்கள் நான் சந்திக்க முடியுமானு கேட்டுச் சொல்ல முடியுமா? அவர் கிட்டே சொல்ல முக்கியமான ஒரு சமாச்சாரம் வெச்சிருக்கேன்."

சென்ற பட்லர், சில கணங்கள் கழித்து திரும்பினான்: "சர் ஜேம்ஸ் உங்களைச் சந்திப்பார். இந்தப்பக்கமா வாங்க."

பின்புறத்திலிருந்த ஓர் அறைக்கு இவர்களை அழைத்துப் போனான் பட்லர். அது நூலகம் போல வடிவமைக்கப்பட்டிருந்தது. அதில் சேகரிக்கப்பட்டிருந்த புத்தகங்கள் பிரம்மாண்டமாய் இருந்தன... அங்கு ஒரு சுவர் முழுவதும் வியாபித்து எழும்பியிருந்த மர பீரோவில், க்ரைம் மற்றும் க்ரிமினாலஜி சம்பந்தமான ஆழ்ந்த புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன.

மெத்தை வைத்து வசதியாய் இருந்த மர நாற்காலிகள் கொஞ்சமிருந்தன. ஜன்னலருகே தாள்களால் சூழப்பட்டிருந்த ஒரு பெரிய மேஜையிருக்க அதனருகே வீட்டின் தலைவர் இடம்பெற்றிருந்தார்.

இருவரும் நுழையும் போது அவர் எழுந்தார்.

''நீங்க - *எனக்கு ஒரு சேதி கொண்டு வந்திருக்கீங்க*... ஆங்...?! அப்படியா...?!'' -சிறு புன்னகை பூத்து டூபென்ஸை அடையாளம் கண்டு கொண்ட அவர், ''ஓ, இது நீயா? நீ தானே...?! யார் தந்த சேதி? திருமதி வாண்டே-மேயர்?'' என்றார்.

''ம்ம். அப்படி கிடையாது'' என்றாள் மெதுவாய். ''எப்படியாவது உள்ளே நுழைஞ்சுடணும் என்பதற்காக நான் பண்ணின வழி இது. மன்னிக்கணும். ஆங்...'' என்று ஜூலியஸைப் பார்த்தவள், ''இது, சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்'' என்றாள்.

''உங்களைச் சந்திப்பதில் மகிழ்கிறேன்'' என்று பட்டென கை குலுக்க கையை நீட்டினார்-வந்திருந்த அமெரிக்கர்.

''ரெண்டு பேரும் உட்காரக் கூடாதா?'' என்று கேட்டார் ஜேம்ஸ். இதற்கு வசதியாக இரண்டு இருக்கைகளை முன்னுக்கு இழுத்துப் போட்டுத் தந்தார்.

''சர் ஜேம்ஸ்'' என்று தாமதிக்கவே விரும்பாதவளாய் விஷயத்துக்குள் குதித்தாள் டூபென்ஸ். ''இப்படி பொய் சொல்லிட்டு நான் உள்ளே நுழைந்திருப்பதை நீங்க கேவலமா நினைக்கலாம்... நிச்சயமா. ஏன்னா, நீங்க அதி முக்கியமான ஒரு புள்ளி... அதனால, உங்களை ஏதாவது பண்ணுவதற்காகனு கூட நீங்க நினைக்கலாம். அப்படி அல்ல. நானும் டாமியும் அவ்ளோ பிரபலமான, முக்கியமான புள்ளிகள் கிடையாது. ஆனாலும் ---'', சேர்த்துப் பேச வராது மூச்சிரைத்தது டூபென்ஸுக்கு.

''டாமி?'' - குறுக்காய் அமெரிக்கனை ஒரு பார்வை வெட்டியபடி விசாரித்தார் ஜேம்ஸ்.

''இவர் கிடையாது. இது ஜூலியஸ்''- விளக்கினாள் டூபென்ஸ். ''நான் நரம்பதிர்வுல இருக்கேன்... இது தான் என்னை இப்போ உளர வெக்குது. சர் ஜேம்ஸ் பீல்... அன்னிக்கு என்னைப் பார்த்து நீங்க சொன்னதன் உள்ளர்த்தம் என்ன? இது தான் நான் இப்போ முதல்ல தெரிஞ்சுக்க விரும்புவது. திருமதி வாண்டே-மேயருக்கு எதிரா நீங்க என்னை எச்சரிக்க நினைச்சீங்களா? அப்படித்தான் செஞ்சீங்க, அப்படித்தானே?!''

''அருமை தோழி... என்னால ஞாபகப்படுத்திப் பார்க்க முடியற வரைக்கும் அந்த வேலைக்கு சமமா வெளியிலும் வாய்ப்புகள் நிறைய காத்திருக்குனு குறிப்பிட்டேன்... அவ்ளோ தான்.''

''ஆமாம். அது எனக்கும் தெரியும். ஆனா அது ஒரு குறிப்பு -ஹின்ட்... இல்லே? நீங்களே அப்படித்தான் சொன்னீங்க.''

''ம். இருக்கலாம். அது அப்படித்தான்''- ஆழ்ந்து ஒப்புக் கொண்டார் ஜேம்ஸ்.

''அப்படினா நான் மேலும் தெரிஞ்சுக்க விரும்பறேன். *என்னைப்* பார்த்து நீங்க ஏன் அந்த ஹின்ட்'டைத் தந்தீங்கன்னு நான் தெரிஞ்சுக்கணும்.''

இவளுடைய கண்ணுங்கருத்துமான ஆர்வத்தைக் கவனித்து புன்முறுவினார் ஜேம்ஸ். ''அந்தப் பொம்பளை, அவளுடைய பெயருக்கு என்னால களங்கம் உண்டாயிடுச்சுனு சொல்லி எனக்கு எதிரா ஓர் அவதூறு வழக்கு கொண்டு வரானு வெச்சுக்குவோம்.''

''இருக்கட்டுமே...'' என்றாள் டூபென்ஸ் உடனே. ''அது உங்க ரெண்டு பேர் பாடு. தவிர, வக்கீல்கள் எப்பவுமே அடி ஆழம் வரைக்கும் ஜாக்கிரதையானவங்கனு எனக்குத் தெரியும்.''

இன்னும் சிரிப்பு மாறாது தொடர்ந்த அவர், ''அப்படியே இருக்கலாம்'' என்றார். ''ஆனாலும், எனக்கு ஒரு சகோதரி இருந்து, அவள், தன் வாழ்க்கைக்கான பணத்தினை அவளே உழைத்து தான் சம்பாதிக்கணும்னு ஒரு நிலைமை இருந்தா, அவளை, திருமதி வாண்டே-மேயரிடம் பணியாற்றும் நிலைமையில பார்க்க நான் விரும்பவே மாட்டேன். அதனால, அந்த ஹின்ட்'டை உனக்கு நான் தர வேண்டியது என்... ஆங், என்ன சொல்வது... கடமை?... ஆங்... என் கடமைனு தோணியது. அது இளைய மற்றும் முன்னனுபவம் அற்ற ஒரு பெண்ணுக்கான இடம் கிடையாது. அவ்ளோ தான் நான் சொல்வேன்.''

''அப்படியா'' என்று சிறு சிந்தனையோடு சொன்னாள் இவள். ''உங்களுக்கு என் நன்றிகள். ஆனா நான் *உண்மையிலேயே* முன்னனுபவம் இல்லாதவ கிடையாது, தெரியுமா? அங்கே போய் நுழைஞ்சதுமே அவ ஒரு கொடூர அபாய மூட்டைனு நான் புரிஞ்சுக்கிட்டேன்- சொல்லப்போனா, அதுக்காகத் தான் நான் அங்கே போனதே'' - வக்கீலின் முகத்தில் ஒரு புது பயம் படர்வதைக் கவனித்தபடி கொட்டினாள்: ''உங்களுக்கு முழு கதையையும் நான் சொல்லி விடுவது தான் உசிதம்னு தோணுது, சர் ஜேம்ஸ். அதை சொல்லாம நான் விட்டா, அப்படி மறைக்கப்படுவதை நீங்க இன்னும் ஓரிரு நிமிடங்கள்லேயே தெரிஞ்சுப்பீங்கனு எனக்கு உள்ளூர தோணுது. அதனால, ஆரம்பத்திலிருந்து முழுசையும் நீங்க தெரிஞ்சுக்குங்க. நீங்க என்ன நினைக்கிறீங்க, ஜூலியஸ்?''

''நீங்க சொல்ல முடிவெடுத்துட்ட பிறகு, உங்களுக்குத் துணையா நானும் உண்மைகளை முன் வைக்க உதவறேன்'' என்றார், இத்தனை நேரமும் அமைதியில் அமர்ந்திருந்த அவர்.

''அதுவும் சரி தான். எல்லாத்தையும் என்னிடம் சொல்லுங்க'' என்றார் சர் ஜேம்ஸ் பீல். ''நான் டாமி என்பது யார்னு தெரிஞ்சுக்கணும்.''

இவ்வகை ஊக்குவிப்பால் தன்னுடைய முழு கதைக்குள்ளும் குதித்து டூபென்ஸ் சொன்னவற்றைத் துளி விடாது முழு கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் வக்கீல்.

அவள் முடித்த போது ''படு சுவாரஸ்யமாயிருந்தது'' என்றார் அவர். ''நீ இது வரை சொன்ன சமாச்சாரத்தின் பெரும்பகுதி, மிஸ், நான் ஏற்கெனவே விளாவாரியா அறிந்திருப்பதுதான். இந்த ஜானே ஃபின் பற்றி எனக்குள்ளேயே சில கோட்பாடுகளும் ஊகங்களும் விளைந்துள்ளன. இது வரை அசாத்தியமான முறையில நீ பிரமாதப்படுத்தியிருந்தாலும்- அவர் பேர் என்னனு சொன்னே... கார்ட்டர்? - ஆங், அந்தக் கார்ட்டர், உங்களைப் போன்ற இரண்டு இளையவர்களைக் கொண்டு போய் தப்பவே வழியில்லாத சிக்கலான இது போன்ற சமாச்சாரத்துக்குள்ளே திணிச்சு சிக்க வைத்திருப்பது... மிக மிகத் தவறு. இருக்கட்டும். திரு ஜூலியஸ் இதுல எங்கே எப்போ வராரு? அதை நீ சரியா எனக்கு விளக்கலே.''

ஜூலியஸ் முன் வந்து பதில் தந்தார். ''நான் ஜானேயின் முதல் உறவு... அத்தை வழி முறை'' என்றார், வக்கீலின் ஆழமான நோட்டத்தை எதிர்கொண்டபடி.

''ஆஹ்!''

''ஓ, சர் ஜேம்ஸ்'' என உடைந்துப் போய் கேட்டாள் டூபென்ஸ்: ''டாமியின் நிலைமைக்கு என்ன ஆகியிருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க?''

''ஹ்ம்...'' -வக்கீல் எழுந்துக் கொண்டார். மெல்ல, மேலும் கீழும் அறைக்குள் நடந்தார். ''நீங்க உள்ளே நுழைந்த போது நான் என் மூட்டை முடிச்சுகளை அடுக்கிக் கட்டிக்கிட்டிருந்தேன். ரெண்டு மூணு நாள் அப்படியே நிம்மதியா தனிமையில கழிக்கலாம்னு ஸ்காட்லாண்டுக்குக் கிளம்பிக் கிட்டிருந்தேன். இன்னிக்கு ராத்திரி ரயில்லே. அங்கே போய்... படகு சவாரி... மீன்பிடிப்பு.. இப்படி கழிக்க. ஆனா இங்கே வேறு வகையான மீன்பிடி வேலை வந்திருக்கு. பயணத்தைத் தள்ளிப் போடறேன் - பாதகமில்லே. அந்த இளையப் பயலைப் பற்றி வேற ஏதாவது தகவல் திரட்ட முடியுமானு அதுக்குள்ளே நீங்களும் பாருங்க.''

''ஓஹ்...!'' - தன்னுடைய கைகளிரண்டையும் பரவசமாய் இணைத்துக் கொண்டாள் டூபென்ஸ்.

''நான் முன்னாடி சொன்னதை மறுபடியும் சொல்றேன்... ரெண்டு சின்னக் குழந்தைகளை, இது போன்ற அபாயத்தின் அடையாளமா இருக்கிற ஒரு வேலைக்கு, அந்த- அந்த கார்ட்டர்... அனுப்பியிருக்கவே கூடாது. மிஸ்- மிஸ்-''

''மிஸ் ப்ருடன்ஸ். ப்ருடன்ஸ் கவுலி. என் நண்பர்கள் என்னை டூபென்ஸூன்னு அழைப்பாங்க.''

''அப்போ, நல்லது, மிஸ் டூபென்ஸ்... நான் உங்க நல்ல நண்பனா விளங்குவேன். நீங்க ரொம்ப சின்னப்பசங்கன்னு நான் குறிப்பிடுவதால கோபம் கொள்ள வேண்டாம். இப்போ, உங்களுடைய இளைய டாமி பற்றி-''

''யெஸ்'' என்று தன் கைகளைக் குறையாத பரவசத்தால் இன்னும் இறுக்கிக் கொண்டாள்.

''வெளிப்படையா சொல்றேன். நிலைமை அவருக்கு ரொம்ப மோசமா போயிருக்கிற மாதிரி இருக்கு. அவரோட இருப்பு கொஞ்சங்கூட தேவையே படாத ஏதோ ஓர் இடத்துக்குப் போய் துளாவியிருக்கார். இதுல துளி சந்தேகம் கிடையாது. இருந்தாலும் நம்பிக்கை இழக்க வேண்டாம்.''

''நீங்க எங்களுக்குத் தொடர்ந்து உதவுவீங்க தானே? இந்த ஜூலியஸ்! இங்கே வர வேண்டாம்னு, என்னை அப்படித் தடுத்தாரு'' - இதைச் சொல்ல வேண்டும் என்பது போல விளக்கினாள் இவள்.

''ஹூம்...'' என்றார் வக்கீல் - மற்றொரு முறை அமெரிக்கனைக் கண்கொத்தி பாம்பாய்க் கண்களில் பருகியபடி. ''எதுக்காக அப்படி?''

''இது போன்ற பைசா பெறாத ஒரு பொடி விஷயத்துக்காக இங்கிலாந்து வியக்கும் உங்களை வந்து வீணா தொந்தரவு செய்ய வேண்டாமேனு தான்.''

''ஓஓ''- சிறு இடைவேளை தந்தார். ''உங்க பாஷையிலேயே சொல்லனும்னா, இந்தப் பைசா பெறாத பொடி விஷயம்... பாறாங்கல் போன்ற மாபெரும் சமாச்சாரத்தையெல்லாம் உள்ளே சுமந்துக்கிட்டு நிக்குது. சொல்லப்போனா, நீங்களோ இல்லை இந்த டூபென்ஸ் பொண்ணோ நினைச்சே பார்த்திராத அளவுக்கு கனமான கேஸ் இது. அந்த வாலிபப் பையன் மட்டும் இன்னும் உயிரோடிருந்தா... நமக்கு அள்ளி அள்ளித் தர விலைமதிப்பற்ற தகவல்களை வெச்சிருப்பார். ஆகவே, நாம, அவரைக் கண்டுபிடிச்சே தீரணும்.''

''ஆமாம், ஆமாம். ஆனா, எப்படி?''- கதறினாள் இவள். ''என்ன வழியெல்லாம் இருக்கோ அத்தனையையும் நான் மண்டையிலப் போட்டு சிந்திச்சு பார்த்துட்டேனே.''

சர் ஜேம்ஸ் பீல் புன்னகைத்தார்.

''அப்படியிருந்தும் நமக்கு அருகாமையிலேயே ஒரு நபர் இருக்கார். எல்லா சாத்தியக் கூறுகளையும் போட்டுப் பார்த்தா... அந்த இளைஞன் எங்கேயிருப்பான்னு இவருக்கு மட்டும் தான் தெரியும் என்பது சுலபமா விளங்கும். அல்லது, குறைந்தபட்சம் அவர் எங்கேயிருப்பார்னாவது இவருக்குத் தெரிந்திருக்கும்- *தெரியும்.*''

''அது யார்?''- டூபென்ஸ் புதிர்ப் போடப்பட்டவளாய்க் கேட்டாள்.

''திருமதி வாண்டே-மேயர்.''

''ஆமாம், இருக்கலாம். ஆனா அவ என்றைக்குமே நம்ம கிட்டே சொல்ல மாட்டாளே.''

''ஆஹ்... அங்கே தான் நான் வரேன். எனக்கு என்ன தெரியணும்னு எதிர்பார்க்கிறேனோ, அதை, திருமதி வாண்டே-மேயரே என்னிடம் சொல்லும்படி, சுலபமா என்னால விஷயத்தைப் பெயர்த்து எடுத்து விட முடியும்னு நான் நம்பறேன்.''

''அதெப்படி?'' என்று கறாராய் கேட்டாள் டூபென்ஸ், கண்களை அகல விரித்து.

''ஜஸ்ட், அவங்ககிட்டே கேள்விகள் கேட்பதன் மூலமா'' எனச் சுலபமாய் பதிலளித்தார் ஜேம்ஸ். ''இப்படித் தான் நாங்க விஷயங்களை வாங்குவோம், தெரியுமா?''

மேஜையின் மீது தன் விரல்களால் அவர் சிறு தாளம் போட, இப்போது மறுபடியும், எதிரிலிருக்கும் மனிதனிடமிருந்து கதிர்வீச்சாய் கிளம்பிப் பாய்ந்து நிறையும் அசகாய சக்தியினை டூபென்ஸ் உணர்ந்தாள்.

''அப்படியும் அவங்க சொல்லாட்டா?''- திடீரென்று கேட்டார் ஜூலியஸ்.

''சொல்லுவாங்கனு நினைக்கிறேன்'' என்றார் வக்கீல், இதுதான் நடக்கும் என்று நம்புபவராய். ''என்கிட்டே ஓரிரு பலமான வழிமுறைகள் இருக்கு. அப்படி முடியாட்டா-இது சாத்தியமில்லை... இருந்தாலும், ஒரு பேச்சுக்கு-அப்படி முடியாவிட்டால்... அந்த இக்கட்டிலும், *பேரம் பேசி...* லஞ்சம் தருவதா பேச்சுக்காவது சொல்லி... பணிய வைக்க முடியும்.''

''நிச்சயமா. அங்கே... அங்கே தான் நான் வரேன்!'' - கத்தலாய் சொன்னார் ஜூலியஸ், தன்னுடைய முதல் அழுத்தமான குத்தினை மேஜையில் வைத்து. ''நீங்க என் உதவியைத் தாராளமா எடுத்துக்கலாம் - தேவைப்பட்டால். ஒரு மில்லியன் டாலர்னு சொல்லுங்க. ஆமாம், ஸார், ஒரு மில்லியன் டாலர்!''

நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்ட வக்கீல், சொன்ன ஜூலியஸை நுட்பமாய் ஆழ்ந்து கவனித்தார். ''மிஸ்டர் ஜூலியஸ்'' என்று இறுதியில் பேசத் துவங்கிய வக்கீல், ''இது பெரிய தொகை'' என்றார்.

''ஆமாம்... அப்படி இருந்தாகணும் என்பது என் ஊகம். அவளைப் போன்றவங்க எல்லாம், வெறும் பத்து பவுண்டுக்கு விஷயத்தைக் கக்கும் ப்ளாட்பாரங்கள் கிடையாதே.''

''இன்னறய செலாவணி கணக்குல பார்த்தா, நீங்க சொன்ன தொகை, தாராளமா ஒன்றரை லட்சம் பவுண்டுக்கு மேலே போகுது, ஸார்.''

''அப்படித்தான். இருக்கட்டுமே. எனக்கு இது சாதாரணம். கேட்க தற்பெருமையா தோணலாம். நான் ஒப்புக்கொண்ட தொகை -தப்பாம வந்து சேரும். கவலையே வேண்டாம். ஆங்... உங்களுக்குத் தர வேண்டிய தொகையும் - வந்து விடும். இதுக்கும் கவலை வேண்டாம்!''

இதை சர் ஜேம்ஸ் புறங்கையால் ஒதுக்கித் தள்ளி விட்டார். ''ஃபீஸ்? எனக்கா? அப்படி எதுவும் கிடையாது, மிஸ்டர் ஜூலியஸ். நான் தனியார் துப்பறியும் வேலை பார்க்கலை.''

''மன்னிக்கணும். அவசரப்பட்டுப் பேசிட்டதா நினைக்கிறேன். தப்பா எடுத்துக்க வேண்டாம். கொஞ்ச நாளைக்கு முன்னாடியே ஜானே ஃபின்னைக் கொண்டு வந்து நிறுத்துபவருக்கு ஏகமான பணத்தொகை அறிவிச்சு ஒரு விளம்பரம் தர எண்ணினேன்... ஆனா, உங்களுடைய கட்டுப் பெட்டி ஸ்காட்லாண்டு காவல்துறை, அப்படியெல்லாம் எதுவும் அவங்களைக் கேட்காம நான் பண்ணவே கூடாதுனு தடுப்புப் போட்டுட்டாங்க. அதெல்லாம் தேவையற்றவைனு சொல்லிட்டாங்க.''

''அவங்க சொன்னது சரியா கூட இருக்கலாம்'' என்றார் வக்கீல், வறட்சியாய்.

''இந்தத் தொகையெல்லாம் ஜூலியஸூக்கு ஒரு பிரச்சினையேயில்லை'' என்றாள் டூபென்ஸ். ''அவர் பெருமை அடிச்சுக்கலே, சர் ஜேம்ஸ். இங்கிலாந்தே- அவர் பாக்கெட்டுல தான். அத்தனை பணம். குடங்குடமா வெறும் பணம் மட்டும் தான் வெச்சிருக்கார், இவர்!''

''எல்லாம் பரம்பரை பரம்பரையா வருது. சரி... விஷயத்தை விட்டு மாற வேண்டாம். உங்க திட்டம் என்ன?''

சர் ஜேம்ஸ் சில நிமிடங்கள் தனக்குள் அடங்கினார். ''இனியும் நேரத்தை வீணா விரயமாக்க வேண்டாம். எத்தனை சீக்கிரம் களத்துல இறங்கறோமோ... அத்தனை நல்லது.'' இப்படிச் சொல்லி விட்டு டூபென்ஸ் பக்கம் திரும்பினார். ''இன்னிக்கு ராத்திரி சாப்பாட்டுக்கு திருமதி வாண்டே-மேயர் வெளியில போறாரா? உனக்கு ஏதாவது தெரியுமா?''

''ஆமாம், அப்படித்தான் நான் நினைக்கிறேன். ஆனா இன்னிக்கு அவங்க ரொம்ப நேரமெல்லாம் வெளியில அலைய மாட்டாங்க. அப்படி நேரமாகும்னா கையோட சாவியையும் கொண்டு போயிருப்பாங்களே.''

''நல்லது. நான் பத்து மணியையொட்டி அவங்களைப் பார்க்க வரேன். நீ எத்தனை மணிக்குத் திரும்பி அங்கே போவதா எண்ணம்?''

''ஒன்பதரை, பத்து. ஆனா அதுக்கு முன்னாடியே கூட நான் போகலாம்.''

''எந்தக் காரணத்தைக் கொண்டும் இப்படி நீ செஞ்சுடவே கூடாது. வழக்கமான நேரம் வரை நீ வெளியே தங்கலேனா அது வீணான சந்தேகங்களுக்கு வழி வகுத்துடும். ஒன்பதரைக்கே திரும்பிப் போ. நான் பத்துக்கு வந்து சேர்றேன். ஜூலியஸ் கீழே ஒரு டாக்ஸியில வேணும்னா காத்திருக்கட்டும்.''

''அவர் ஒரு புது ராயல்-ரோல்ஸ் கார் இப்பத்தான் வாங்கியிருக்கார்''- தாள முடியாத பெருமையோடு குறிப்பிட்டாள் டூபென்ஸ்.

''வசதியாப் போச்சு. அவ கிட்டேயிருந்து முகவரியை வாங்குவதில் நான் வெற்றியடைஞ்சுட்டா, நேரா நாம கிளம்பி அங்கேயே போயிடலாம்... தேவைப்பட்டா, திருமதி வாண்டே-மேயரையும் தூக்கிக்கிட்டு. விளங்குதா?''

''ம்.''

ஆனந்தம் பொங்க எழுந்துக் கொண்டாள். ''ஒஹ்...! அப்பா... இப்போ எவ்வளவோ பரவாயில்லைனு தோணுது!''

''இதுல ரொம்ப கற்பனைகளை வளர்த்துக்க வேணாம், மிஸ் டூபென்ஸ்! சாதாரணமா- கிளம்புங்க!''

ஜூலியஸ் வக்கீல் பக்கமாய் திரும்பினார். ''அப்போ, என் காரை எடுத்துக்கிட்டு ஒன்பதரை மணியையொட்டி நான் உங்களை அழைத்துப் போக வரேன்... அப்படித்தானே?''

''எனக்கென்னவோ இது தான் நல்ல திட்டமா படுது, இல்லையா? ரெண்டு காருங்க வெளியே காத்திருப்பது தேவையற்றது. ஆங்... மிஸ் டூபென்ஸ்... உங்களுக்கு நான் தர விரும்பும் ஆலோசனை: போய் நல்லா டின்னர் சாப்பிடுங்க. நிஜமாவே நல்ல டின்னர், நினைவிருக்கட்டும். நம்ம கையை மீறி எதையும் நீங்க கற்பனைப் பண்ணிக்கிட்டிருக்காதீங்க.''

இருவரிடமும் கை குலுக்கிக் கொண்டார் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன். அடுத்த நொடியில் இருவரும் வெளியேறியிருந்தனர்.

''அப்பப்பா...'' என்று பரவசத்திலேயே இருந்தாள் டூபென்ஸ். தெருவிறங்கி நடக்கும் போதும், ''அப்பப்பா...'' என்று சில முறை பரவசமடைந்தாள்.

''ஹலோ... அவர் நல்ல சரக்குள்ள மனுஷன் தான்னு ஒத்துக்கறேன். இவரை வந்து பார்ப்பது முட்டாள்தனம்னு நான் சொன்னது தப்புனும் ஒத்துக்கறேன். அடுத்து என்ன... நேரா ரிட்ஸுக்குத் திரும்பறோமா?''

''ம்ம். நான் கொஞ்சம் காலாற நடக்கலாம்னு நினைக்கிறேன். அதிகபட்ச இன்ப அதிர்விலிருக்கேன். போற வழியிலே என்னை பார்க்'ல இறக்கி விட்டுடுங்களேன். நீங்களும் வரதுனா வரலாம்.''

ஜூலியஸ் மறுத்துத் தலையசைத்தார்.

''பெட்ரோல் போடணும்'' என்று பதிலளித்தார். ''ரெண்டு தந்தி அனுப்ப வேண்டியிருக்கு.''

''நல்லது. நான் உங்களை ரிட்ஸில் ஏழு மணிக்குச் சந்திக்கறேன். மாடியில சாப்பிடுவோம். என்னால சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த முடியலேப்பா.''

''ஓ கே. ஓட்டல் வெயிட்டர் ஃபெலிக்ஸ் மூலமா சிறப்பான மெனு தயார் செஞ்சுடறேன். எனக்குத் தெரிஞ்சவன், அவன்.''

ஆமோதித்து விட்டு இறங்கி சுறுசுறுப்பாய் நடக்க ஆரம்பித்த டூபென்ஸ், முதலில் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது. டீ சாப்பிடவில்லை என்பது நினைவுக்கு வந்தது... ஆனால், இன்ப அதிர்வு, பசியைப் பற்றிச் சட்டை செய்ய விடவில்லை...! தனது நடையின் வேகத்தை... குளிர்ந்தடிக்கும் புத்தம்புது காற்றினை அனுபவிக்கும் விதத்தில்... சற்று குறைத்துக் கொண்டாள். இவள் இப்போது நடந்துப் போகும் பகுதியை ஒட்டிச் சற்று அருகில் தான் தெற்குக் குடியிருப்பும் உள்ளது. சர் ஜேம்ஸின் அறிவுரையை சுலபமாகக் கடைபிடிக்க முடியவில்லை... வீடிருக்கும் பகுதியை நெருங்கி நெருங்கி வரும்போது, தெற்குக் குடியிருப்புக்குள் புகுந்து விட வேண்டும் எனும் வீடு மீதான ஆசையை அடக்க முடியவில்லை.

என்னயிருந்தாலும், வெறுமனே போய் குடியிருப்பை ஒரு எட்டுப் *பார்ப்பதால்* ஒரு தீங்கும் விளைந்து விடப்போவதில்லை என்று முடிவெடுத்தாள் டூபென்ஸ். பிறகு உடனே, அப்பகுதியிலிருந்து விலகி வெளியேறி, மறுபடியும் இப்படியேச் சுற்றி விட்டு, பத்து மணிக்காகக் காத்திருக்கலாம்.

தெற்குக் குடியிருப்பு -காலையில் எப்படியிருந்ததோ அப்படியே இப்பொழுதும் இருந்தது! ஏனோ- இப்பொழுது-இந்த ரத்தச்சிகப்புச் செங்கல்கள் போன்று வடிவமைக்கப்பட்டிருந்த குடியிருப்பு - எப்பொழுதும் இல்லாமல் - டூபென்ஸுக்குள், முழுக்கவும் காரணமற்ற இருப்புக் கொள்ளாமையைப் பீடிக்க வைத்தது. சில நொடிகள் அப்படியே இருந்து விட்டு அதே மன ஹிம்சையோடு இவள் திரும்பும் போது, விசில் ஒன்றைக் கூர்மையாய் அடித்தபடி, இவளுடன் சேர்ந்துக் கொள்ள ஓடி வந்துக் கொண்டிருந்தான் ஆல்பர்ட்.

டூபென்ஸ், அவனைப் புறக்கணித்து தப்பி விடப் பறந்தாள். இங்கு இவள் இரவு ஒன்பதரைக்கு முன்னால் வந்துப் போயிருப்பதாக யாரும் கவனித்து விடக்கூடாது என்பது திட்டத்தின் முக்கிய பகுதி... ஆனால் சுட்டிப்பய, அவனுக்குள் உண்டான கிளர்ச்சியால் கன்னங்கள் சிவக்க இருந்தான். அருகிலும் வந்து விட்டான்!

''மிஸ்...மிஸ்...அவங்க போறாங்க.''

''யாருடா போறாங்க'- வெறுப்பாய் விடையை உடனே சொல்லும்படி கூராய் கேட்டாள் டூபென்ஸ்.

''ரெடி ரீட்டா. திருமதி வாண்டே-மேயர். எல்லாத்தையும் மூட்டை கட்டிட்டாங்க. ஒரு டாக்ஸியை உடனே கூட்டிட்டு வா' ன்னு இப்போ தான் என்னை அனுப்பினாங்க.''

''அடேய், அடேய்! என்ன, என்னடா?''-அவனுடைய வலக்கரத்தை இறுக்கமாய் பிடித்துக் கொண்டாள் இவள்.

''இது உண்மை, மிஸ். உங்களுக்குப் பாவம் தெரியாமா இருக்குமே'னு தான் சொன்னேன்.''

''ஆல்பர்ட்'' என அலறியே விட்டாள் டூபென்ஸ். ''நீ தெய்வம்டா. வந்து இப்ப நீ சொல்லலை' னா, அவளை நாங்க இழந்திருப்போம்டா- *மொத்தமா.''*

இந்தப் பாராட்டுதலில் சிலிர்க்கச் சிலிர்க்க மொத்தமாக வீழ்த்தப்பட்டான், 'ஆல்பர்ட் பய'!

''நொடி நேரத்தை இழக்கக் கூட அனுமதி கிடையாது'' என்ற டூபென்ஸ், பாதையைக் கடந்து குடியிருப்புக்குள் நுழைந்துக் கொண்டிருந்தாள்! ''அவளை நான் நிறுத்தியாகனும். என்ன ஆனாலும் அவளை நான் இங்கேயே நிறுத்தி வெச்சாகனும்- --'' இப்போது உடைந்துப் போனாள். ''ஆல்பர்ட்... இங்கே தொலைபேசி இருக்கு இல்லே... வரவேற்பு மேஜையில...?''

பயல் மறுத்துத் தலையசைத்தான். ''ஃப்ளாட்ல எல்லா வீட்லேயும் சொந்தமா போன் இருக்கு மே'ம்'' என்று காரணம் சொன்னவன், '' ஆனா... அதோ அந்த மூலையில ஒரு பொது தொலைபேசியிருக்கு'' என்று கழுத்து நீட்டி சுட்டிக் காட்டினான்.

''அப்போ, உடனே அங்கே போ.''

''டாக்ஸி?''

''அவளையே நிறுத்தனுங்கறேன்...! சொல்றதைக் கேளுடா. போ. போய் ரிட்ஸ் ஓட்டலுக்கு போன் பண்ணு. மிஸ்டர் ஜூலியஸ் வேணும்னு கேளு. அவர் கிடைச்சதும், அவரை நேரா போய் சர் ஜேம்ஸ் என்பவரைக் கையோட கூட்டிக்கிட்டு உடனே இங்கே வந்துடச் சொல்லு. மிக அவசரம்னு சொல்லு-

திருமதி வாண்டே-மேயர் தப்பியோடப் பார்ப்பதால! ஜூலியஸ் இல்லைனா நேரடியா சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனுக்கு போன் பண்ணு- விஷயத்தை அவர் கிட்டே அப்படியேச் சொல்லு. இந்தா நம்பர்ங்க. பேரெல்லாம் மறந்தோ மாற்றியோ குழப்பிட மாட்டியேடா? ஒட்டல்ல, ஜூ-லி-ய-ஸ். இன்னொருத்தர் சர்-ஜே-ம்-ஸ்.''

வெகு சுலபமாய்த் திருப்பிச் சொன்னான் பயல். ''என்னை நீங்க நம்புங்க, மே'ம். எல்லாம் நலமா முடியும்! ஆனா, நீங்க? தனியா அந்தம்மாவைப் பார்க்கப் போனா உங்களுக்கு பயமாயிருக்காது?''

''ச்சு. ச்சு. அதை விடு. ஆனா உடனே போய் போன் பண்ணு. ம்... சீக்கிரம்.''

நீண்ட உள் மூச்சினை இழுத்துக் கொண்ட டூபென்ஸ், குடியிருப்புக்குள் நுழைந்து, கதவு எண் 20 வரை ஓட்டமாய் ஓடிப் போய் நின்றாள். இரண்டு ஆண்களும் வந்து சேரும் வரை வாண்டே-மேயரை எப்படி நிறுத்தி வைப்பது? இவளுக்குத் தெரியாது. எப்படியோ அது நடந்தாகத்தான் வேண்டும். மேலும் இந்தச் சவாலை இவள் தனியோர் ஆளாய் நடத்தி ஆக வேண்டும். 'காதும் காதும் வெச்சா மாதிரி நடக்கும் இந்த திடீர் ஓட்டத்தை -எது அவசியப்படுத்தியிருக்கும்?'- எண்ணிக் கொண்டாள். 'திருமதி வாண்டே-மேயர் என்னை சந்தேகித்து விட்டாரா?'

உபயோகமற்ற ஊகங்கள் ஊறின. டூபென்ஸ் அழைப்பு மணியை அழுத்தமாய்க் குத்தினாள். சமையல்காரியிடமிருந்து ஏதாவது விஷயத்தை இவள் வாங்கலாம்.

ஒன்றும் நிகழவில்லை. சில நிமிடங்கள் காத்திருந்து விட்டு, அழைப்பு மணியின் சுவிட்சில் சற்று நேரம் விரலைப் பதித்தபடி இந்த முறை அழுத்தினாள். கடைசியாய் உள்ளிருந்து சில காலடி ஓசைகள் நெருங்கிக் கொண்டிருப்பதை இவள் உணர, சில கணங்களின் நழுவலில், திருமதி வாண்டே-மேயரே கதவைத் திறந்து நின்றார். இவளைப் பார்த்த உடனே புருவங்களை ரொம்பவும் மேலே தூக்கினார்.

''நீயா?''

''பல்லு வலி. மே'ம். கொல்லுது'' -வலி தாங்காத வெறுப்பாய்ச் சொல்வது போல குறிப்பிட்டாள் இவள். ''எங்கேயும் போகாம பேசாம வீடு திரும்பி இங்கேயே அமைதியா மாலைப்பொழுதைக் கழிக்கலாம்னு தோணிச்சு. திரும்பிட்டேன்.''

வாண்டே-மேயர் எதுவும் சொல்லவில்லை. ஆனால் பின்வாங்கி வழி விட்டு இவள் வரவேற்பறைக்குள் நுழைய வகை செய்தார்.

''ஒரு நாள் லீவு. அதையும் அனுபவிக்க முடியலியே... பாவம், நீ. துரதிர்ஷ்டசாலிப் பொண்ணு'' என்றார் இறுக்கமாய். ''நீ நேரா படுக்கப் போயிடு. போ, போ. *போம்மா, போ!''*

''கொஞ்ச நேரம் அடுக்களையில இருந்தேன்'னா ஆறுதலா ஆயிடும், மே'ம். சமையல்காரி கூட்---''

''அவ வெளியே போயிருக்கா''- சொன்னார் வாண்டே-மேயர்... டூபென்ஸ் சொன்ன விளக்கத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்பது போல். ''நான் தான் அவளை வெளியே அனுப்பினேன். அதனால்...நீ, நேரா படுக்கைக்குப் போயிடு... அது நல்லது.''

திகுதிகுவென டூபென்ஸுக்கு பய உணர்வு விளைந்தது. வாண்டே-மேயர் சொன்ன தினுசில், இவளுக்குப் பிடிக்காத ஓர் அபாய வளையமிருந்தது. மேலும், அந்த முதிர் பெண்மணி... இவளைக் கொஞ்சங்கொஞ்சமாக நெருங்கி வந்துக் கொண்டிருப்பது போலிருந்தது. குலைந்து வெளிறி செக்கச்சிவக்க முகம் மாற, சட்டென திரும்பினாள் டூபென்ஸ். ''இப்போ எனக்குத் தூக்கம்---''

ம்ம். பேச நேரமில்லாமல் போயிற்று. மின்னலாய், இரும்பு வளைவு போன்ற ஒன்று இவளுடைய பொட்டில் வீரியமாய் அடிக்கப்பட, அதட்டும் கோபத்தோடு இரக்கமற்ற வாண்டே - மேயரின் குரல் எகிறி ஒலித்தது; ''நாயே! சொல்றேன் போய் படுடீனு! பேருரை தரியா! முட்டாளே! எனக்கு ஒண்ணும் தெரியாதுனா நினைக்கிறே, நீ? பேசாதே, பேசாதே. ஒரு பதிலும் வேணாம். கத்திக் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ண நினைச்சே... நாயைச் சுடற மாதிரி சுட்டுப் பொசுக்கிடுவேன். தூ...''

துப்பாக்கியின் இரும்பு வளைவு, இளையவளின் நெற்றியை மேலும் அழுத்தி அமுக்கியது.

''ம்... நட'' - தொடர்ந்த படியிருந்தார் வாண்டே - மேயர். ''இப்படி - இந்த வழியில - என் ரூமுக்கு. உள்ளே போனதும், நான் சொல்றபடி, நீ படுக்கறே. ஓகே? என்ன முழிக்கிறே? அப்புறம் தூங்கறே, தூங்குவேடீ நீ. நான் தூங்க வைப்பேன்.''

ஒளித்து வைத்த ரகசிய சந்தோஷம் அந்தக் கடைசி வார்த்தைகளில் ரீங்காரமிட, அது டூபென்ஸுக்குத் துளியும் ஒப்பவில்லை. தற்போதைக்கு இவள் எதுவும் பண்ண முடியாது. ஆகவே மரியாதையாய் வாண்டே - மேயரின் படுக்கையறைக்குள் போனாள். பிஸ்டல் அவளுடைய நெற்றியிலிருந்து விலகவே இல்லை. மிருகத்தனமான அலங்கோலத்தில் கிடந்தது அறை - துணிமணிகள் வலமும் இடமும் எடுத்துச் சிதறப்பட்டி

ருந்தன - நட்ட நடுவில், பாதி அடைக்கப்பட்டிருந்த ஒரு சூட்கேஸ், ஒரு கைப்பை.

பிரயத்தனப்பட்டு தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள் டூபென்ஸ். பேசிய அவளது குரல் சற்று நடுங்கிக் கொண்டுதானிருந்தது. ஆனாலும், துணிச்சலாய் பேசினாள்: ''இதோ பாருங்க...'' என்றாள்! ''இது முட்டாள்தனம். கோழைத்தனம். உங்களால என்னைச் சுட முடியாது. அந்த ஓசையைக் கட்டிடத்தில் இருக்கும் எல்லோரும் கேட்டுடுவாங்க.''

''அதை நான் எதிர் கொள்வேன்டீ'' என்றார் அவர் குதூகலமாய். ''காப்பாற்ற உதவி கேட்டு நீ பெரிசா பாட்டுப் பாடாத வரைக்கும் - உனக்கு ஆபத்து கிடையாது. ஆனா உன்னைப் பார்த்தா, அந்தப் பாட்டு பாடாம இருக்க மாட்டேன்னு தான் தோணுது! நீ புத்திசாலிப் பொண்ணு. நீ என்னை ஏமாத்தியிருக்கே. இருக்கட்டும். இருக்கட்டும்! ஏய்.. நீ இப்போ கீழேயும், ஆபத்தான நான் உன் மேலேயும் நின்னுக்கிட்டிருக்கும் நிலைமை - உனக்கு சந்தேகத்துக்கமிடமின்றி அப்பட்டமா புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். முதல்ல - இப்போ - படுக்கையில உட்கார். கையைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடி. ஆங்... அப்படி. உன் உயிர் மேல உனக்கு மதிப்பிருந்தா, தூக்கின கைகளை நகர்த்தாதே.''

டூபென்ஸ் வாய் திறக்காது கட்டுப்பட்டாள். அவளுடைய சாதுர்ய மூளை, நிலைமையை அப்படியே ஏற்றுக் கொண்டு விடுவதை விட புத்திசாலித்தனமான வேறொன்று கிடையாது என்றது. உதவி கேட்டு இவள் வீர் வீரென்றுக் கத்திக் கதறினாலும், அதை அந்நியர் ஒருவர் கேட்பார் என்பதில் நிச்சயம் கிடையாது. மாறாக, திருமதி வாண்டே - மேயர் ஈவிரக்கமற்று அதற்காக இவளைச் சுட்டு விடும் வாய்ப்பு தான் பிரகாசமாக இருந்தது. இதற்கிடையே... எப்படியோ, காலந்தாழச் செய்து சேகரிப்படும் ஒவ்வொரு நிமிடமும், விலைமதிப்பற்றவை.

அவருடைய கை அருகாமையில் இருக்குமாறு, துப்பாக்கியை, கை கழுவும் குழாய் மேடையில் வைத்த வாண்டே - மேயர், தனது கூரிய விஷப் பாம்புக் கண்களால் அதை எடுக்க இந்தப் பெண் ஏதாவது செய்கிறாளா என்று கவனித்த வண்ணமேயிருந்தார். மேடைக்கு அருகிலிருந்த சிறு மர அலமாரியிலிருந்து தக்கை வைத்து மூடப்பட்டிருந்த கையடக்க பாட்டில் ஒன்றினை எடுத்து, அதன் தக்கையைத் திறந்து, அதிலிருந்து கொஞ்சம் போல திரவத்தைக் கண்ணாடிக் கோப்பை ஒன்றுக்குள் ஊற்றி, மீண்டும் அதை மூடி எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு, கோப்பையைப் பிறகு நீரூற்றி நிரப்பினார்.

''என்னது அது?'' - கறாராய்க் கேட்டாள் டூபென்ஸ்.

''என்னவோ ஒண்ணு... உன்னை எழுந்திருக்க விடாம ஆழ்ந்து தூங்கச் செய்ய.''

டூபென்ஸ் சற்று வெளிறிப் போனாள். சின்ன அழுகையூடே. ''எனக்குவிஷம் வைக்கப் போறீங்களா?'' என்றாள். அவள் குரல் நன்றாய் நடுங்கிற்று.

''இருக்கலாம்'' என சிரித்தார் வாண்டே - மேயர், ஒப்புதலாய்.

''அப்போ நான் அதைக் குடிக்க மாட்டேன்'' என்று ஸ்திரமாய் சொன்னாள் இவள். ''அதுக்கு நான் சுடப்படுவதே மேல். அதையும் இப்ப பண்ண முடியாது. உண்டாகும் பிரளய வெடி சப்தத்தை நிச்சயம் யாராவது கேட்டுடுவாங்க. ஆனாலும்... நோ... ஒரு மாடு போல, விஷம் வைத்து என்னைக் கொல்ல முடியாது.''

திருமதி வாண்டே-மேயர் தன் காலடிகளுக்கு வேலைக் கொடுத்தார். ''முட்டாளா இருக்காதே. என் செய்கைக்குப் பின்னால, நான் ஒரு கொலை செஞ்சதை அறிவிக்கிற மாதிரி ஒரு பேரோசையை, அலாரம் மாதிரி விட்டு வைப்பேன்'னா நினைச்சே? சுட மாட்டேன்டீ. உனக்கு நிஜமாவே புத்தினு ஒண்ணு வேலை பண்ணினா, உன்னை விஷம் வைத்துக் கொல்வது என் வட்டத்துக்குள் நுழையாத ஒரு செயல்னும் நீ புரிஞ்சுப்பே. இது ஒரு தூக்கப் பவுடர் - அவ்வளவே தான். அதிகபட்சம்... நாளைக்கு மதியம் நீ எழுந்துருவே. நல்லப் பொண்ணா லட்சணமா இதைக் குடி. எந்த பாதகமும் உனக்கு நேராது. உன்னை வந்து பிடிச்சு.. இறுக்கி... வாயைத் திறக்க அமுக்கி... குத்தி... ம்ம்! இதெல்லாம் எனக்குப் பிடிக்காதும்மா. குடி. த பாரு.. தேவைப் பட்டா படு கிராதகத்தனமா நான் நடந்துப்பேன். ஞாபகமிருக்கட்டும்.''

தனது நெஞ்சுக்கு நெஞ்சாய், டூபென்ஸ் அவரை நம்பினாள். நடந்த சம்பாஷணை, அடி ஆழம் வரை உண்மையே என அவளை நம்ப வைக்கவே செய்தது. இருந்தாலும், துளியும் நாகரீகமின்றி அவர் முன்மொழியும் தூக்க மாத்திரை திட்டத்துக்கு, ஓர் அடிமை போல, வெகு சாதுவாய் அடிபணியும் நிலையை... இவளின் தைரிய மனப் போக்கு ஏற்றுக் கொள்ளவேயில்லை. இதற்கிடையில், இந்த வாண்டே மேயரை நழுவ விட்டு விட்டால், டாமி கிடைப்பான் என்று ஓட்டிக் கொண்டிருக்கும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் தவிடு பொடியாகி விடும் என்றும் வேறு எண்ணிக் கொண்டாள்.

இத்தனையும் இவள் மண்டைக்குள் குடைய... மனக் கணக்கில் மிக விரைவாய் இயங்கிக் கொண்டிருந்தாள் டூபென்ஸ். இத்தனை சிந்தனையும்

அவளுக்குள் ஒரு முடிவான மின்னலாய் குவிந்து இறுதி உரு கொண்டு பளிச்சிட, இவற்றில் திருமதியை மடக்கிப் போட எங்கு சாதகமான வாய்ப்பிருக்கிறது என்பதைக் கண்டு விட்டாள்! எப்பாடு பட்டாவது அதை நடத்தியே தீருவது என்றும் இறங்கினாள்.

அதன்படி, படுக்கையிலிருந்து, மயக்கமடைந்த ஒருத்தியைப் போல திடீரென தரையில் விழுந்து, முட்டி போட்டு அமர்ந்த நிலையில் அவருடைய இரு பாதங்களையும் படு இறுக்கமாய் பற்றிக் கொண்டு, வெறி பிடித்தவள் போல நடுங்கினாள். ''நான் அதை நம்ப மாட்டேன்'' - பயமாய் அழுதாள் இவள்! ''அது விஷம், எனக்குத் தெரியும். அது விஷம். ஓ... என்னைப் போய் அதைக் குடிக்க வெச்சுடாதீங்க.''

''ஏய்..''

''நான் சின்னவ, சின்னப் பொண்ணு, சாகறதா? ஆ..! அதுவும் விஷம் குடித்து..!''

''ஏய்..''

''ஒரு காரணம் கூட இல்லாம, எனக்கு மரணமா...! ஆ..!''

திருமதி வாண்டே மேயர், ஒரு கையில் கோப்பையும் உதட்டுச் சுழிப்பில் குரோதமும் சுமந்தபடி, கீழே குனிந்து நிகழ்ந்துக் கொண்டிருக்கும், திடீர் முறிவினைக் கவனித்தார்.

''எழுந்திருடீ, முட்டாளே. அப்படியே முட்டிப் போட்டுக்கிட்டு எதையாவது பேத்தாதே. இப்படியெல்லாம் கூட உனக்கு நடிக்க வருமா...? என்னால கற்பனை கூட பண்ண முடியலேடீ. இப்ப எழுந்திரு, எழுந்திருடீங்கறேன்.''

ஆனால் டூபென்ஸோ கவ்வியக் காலை விடாது பிடித்துக் கொண்டு மூச்சிரைக்கக் கதறினாள்! கதறலுக்கு நடுவே, தொடர்ச்சியேயில்லாமல், இடையிடையே, கருணை வேண்டி மனுக்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தாள். சேகரிக்கப்படும் ஒவ்வொரு நிமிடமும் நன்மைக்கே. தவிர, அவள் தரையில் மண்டியிட்டுக் கதறிக் கொண்டிருக்கும் போதே, நழுவி நகர்ந்தாள்... ஒருவராலும் கவனிக்க முடியா வண்ணம் அவளுடைய இலக்கின் பக்கமாக வழுக்கிக் கொண்டிருந்தாள்.

திருமதி வாண்டே மேயர், பொறுமையிழந்து, குரோதம் வெடிக்க ஒரு குமுறலான ''ஏய்...''யினை உதிர்த்து விட்டு, காலாலேயே இவளை ஓர் எத்து விட்டு நெம்பித் தூக்கினார். முட்டியிட்டிருந்த நிலையிலேயே நிமிர்ந்த அவளது கன்னங்களை அமுக்கி வாயைத் திறக்க வைக்க முயற்சித்து, ''குடீடீ'' என்று உதட்டிடுக்கில் வைத்து ஊற்றினார்.

டூபென்ஸ் மூச்சு விட முடியாது. கடைசி முனகலை வெளியிட்டாள். ''இது நிச்சயம் என்னைக் கொன்னுடாதுனு சத்தியம் செய்ய முடியுமா?'' - இப்படிக் கேட்டு கோபத்தை இன்னும் ஏற்றினாள்!

''ஆமாண்டி, இது உன்னைக் கொல்லாது, நாயே. முட்டாளா நீ?''

''நீங்க சத்தியம் பண்ணுவீங்களா?''

''ஆமாம், ஆமாம்'' என்றார் அவர், பொறுமை அத்தனையையும் இழந்து! ''நான் சத்தியம் பண்றேன்.''

''அது சரி.''

இவளுடைய வாய் மெதுவாய் திறந்தது.

தனது கவனம் முழுவதும் கண நேரம் நழுவிப் போக, விடுதலையை உணரும் போக்கில் நீண்டப் பெருமூச்சு விடுவித்தார் திருமதி. அப்போது மின்னும் மின்னலை விட துரிதமாய், கோப்பையை மேல் நோக்கி, எத்தனை சக்தியாய் முடியுமோ அத்தனை சக்தியோடு தள்ளி விட்டாள், டூபென்ஸ். அதனுள்ளிருந்த திரவம் வாண்டே மேயரின் முகமெங்கும் தூக்கி வீசப்பட... அப்போது அவருக்குள் நேர்ந்த கண நேர மூச்சடைப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, டூபென்ஸின் வலக்கை பாய்ந்தோடி குழாய் மேடையின் விளிம்பில் பளபளத்துக் கொண்டிருந்த துப்பாக்கியினைக் கைப்பற்றியது. இதற்கடுத்த கணம், மிகத் துரிதமாய் டூபென்ஸ் பின்னோக்கி நகர்ந்துக் கொள்ள, கைத் துப்பாக்கி, அதைச் சுமந்துக் கொண்டிருந்த இவளின் கையில் துளியும் நடுக்கமற்று, நேராய், திருமதி வாண்டே மேயரின் மார்பினைக் குறி வைத்து நிமிர்ந்திருந்தது.

பெரும் வெற்றி நிகழ்ந்த நொடியில் இவள் கொக்கரித்தாள்: ''இப்ப, யாரு மேலே? யாரு கீழே?''

எதிராளியின் முகம் பழிவாங்கும் குரோதத்தில் கனன்று திருகிப் போனது. அவர் எகிறி தன் மேல் பாயத் தான் நினைக்கிறார் என எண்ணிக் கொண்டாள் டூபென்ஸ். துப்பாக்கியை எடுக்கத்தான் இத்தனை சாகசங்களை இவள் செய்ய வேண்டியதாயிற்றே ஒழிய, வேறொரு வில்லத்தனமான இயக்கமெல்லாம் இவளுக்குத் தெரியாது. ஆவேசத்தில் அவர் பாய்ந்தே விட்டாரெனில், அப்படிப்பட்ட அதிர்ச்சியையெல்லாம் எதிர் கொள்ளத் தெரியாத டூபென்ஸ், நிச்சயமற்றக் குழப்பத்தில் வீழ்ந்தாள். சற்று முயன்று தன்னை இறுக்கமாய்க் கட்டுப்படுத்திக் கொண்ட திருமதி வாண்டே மேயர், பிசாசு போன்ற உதடு திறந்து அகண்டு கிழித்த புன்னகையை வீசினார்.

''நீ அப்படி ஒன்னும் முட்டாள் கிடையாது தான்டி. ஜெயிச்சுட்டே. ஆங்..? ஆனா நீ இதுக்கு விலை கொடுப்பே - ஆங்.. விலை கொடுப்பேடி. கொடுப்பே! பாம்பு மூளை எனக்கு... பழி வாங்க மறக்க மாட்டேன்.''

''இத்தனை சுளுவா ஒரு முட்டாள் மாதிரி நீங்க ஏமாறுவீங்கன்னு நான் நினைச்சே பார்க்கலே, தெரியுமா?'' - இகழ்ந்துக் குறிப்பிட்டாள் டூபென்ஸ். ''தரையில விழுந்து புழுவா துடிச்சு 'கருணை காட்டுங்க... காட்டுங்க'னு அழும் வகையைச் சேர்ந்த ஒரு கோழைனா நீங்க என்னை நினைச்சீங்க? ச்சூ..! ச்சூ..!''

''இதையே நீ செய்வேடீ - ஒருநாள்! செய்ய வைப்பேன்!'' - விசேஷ அர்த்தம் வைத்துச் சொன்னார் திருமதி.

விரோதமும் ஆபத்தும் மிக்க தீவிரமான அவருடைய சபதம், முதுகுத் தண்டு முழுவதும் சில்லென்ற பய ஆறினை டூபென்ஸுக்குள் ஓட விட்டது. ஈவிரக்கமற்ற திருமதி, அப்படிச் செய்யக் கூடியவளே... ஆகவே அதற்கு வழி விட்டு விடக் கூடாது. எனவே ''உட்காருவோமா?'' என்று, அமைதியாய், ஆரவாரமற்ற அரவணைப்புக் காட்டிக் கேட்டாள் டூபென்ஸ். ''நாம ரெண்டு பேருமே இப்போ கோபத்தின் கைப்பிடிகளில் சிக்கியிருக்கோம். இருந்தாலும், இது சுபமாத்தான் முடியணும். ஆங்.. ஆங்... மெத்தையில கூடாது. ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கங்க... அது சரி. இப்ப நான் உங்களுக்கு எதிரா வர்ற மாதிரி உட்கார்ந்துருக்கறேன்... ஆங், இப்படி. உங்க நெஞ்சுக்கு நேரா - குறி! நீங்க ஏதாவது, விபத்தா, எனக்கெதிரா பண்ணிட்டா - அதுக்காகத்தான்...! மேடை தயார். அற்புதம், நாம பேசலாம்.''

''எதைப் பற்றிடீ?'' என்றார் வாண்டே - மேயர், உள்ளுக்குள் பொங்கும் வன்மத்தோடு பேச மறுக்கும் ஒரு நபராய்!

டூபென்ஸ் அவரையே ஒரு நிமிடம் போல ஆழ்ந்து கவனித்தாள். பல விஷயங்களை அந்த ஒரு நிமிடத்தில் அவள் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள். பேசலாம் என்றாயிற்று. அவரே கேட்டது போல, என்னத்தை...?! போரீஸ் சொன்ன தடாலடியான வார்த்தைகள்: '- - - சில சமயங்கள்ல நான் நினைப்பதுண்டு - பணத்துக்காக நீங்க வித்துடுவீங்க ளோன்னு - எங்களை!' இதற்கு, இப்பெண்மணியுடைய லகுவான, அலட்டலான பதில்: 'அப்படியே ஆனாலும், இதுக்குத் தர வேண்டிய தொகை, விண்ணை முட்டுற அளவுக்கு இருக்கணும்.' இது, விளையாட்டாய் சொல்லப்படாமல், ஒருவேளை முழுக்க முழுக்க உண்மையை மட்டுமே தாங்கிச் சொல்லப்பட்டிருந்தால்? ரொம்ப ஆரம்பத்திலேயே விட்டிங்டன் கேட்கலே...?!: 'எனில், ரகசியங்களை வெளியிட்டது யார்? ரீட்டா?' அப்படியானால், ப்ரௌன் எனும் முகந் தெரியாதவளின் அரங்கத்தின் 'பலவீனமா' - இவர்?

எதிரிலிருப்பவரின் மீது அசையாக் கண்களைப் பதித்தபடி டூபென்ஸ் அமைதியாய் பதில் தந்தாள்: ''பணம் - - -''

திருமதி வாண்டே மேயர் துணுக்குற்றார். நிச்சயமாய் - அவர் இந்த மறு பதிலை எதிர்பார்த்திருக்கவில்லை. ''என்ன சொல்றே நீ?''

''சொல்றேன். 'பாம்பு மூளை எனக்கு... மறக்கவே மாட்டேன்'னு இப்பத் தான் நீங்க சொன்னீங்க. இவளை எப்படியாவது அடிச்சு நொறுக்கிட்டு தப்பிக்கணும்னு உலகத்திலிருக்கிற எல்லா வகையான ஏமாற்று வேலை களையும் நீங்க இப்போ சிந்திச்சுக்கிட்டு இருப்பீங்க, இல்லியா?! இதுதான் புத்திசாலித்தனமா? ம்..? பழி - ஒரு பாவம். எல்லாரும் சொல்றாங்க. பழியைச் சேர்த்தா பாவமும் கூடுமாம். ஆக, என்னைத் தீர்த்துக் கட்ட நீங்க போடும் பழித் திட்டம், ஒரு பாவம், ஆனா, பணம் - - -'' சொல்லி விட்டு தன் வார்த்தைகள் அவருடைய மண்டைக்குள் ஏறட்டும் என்ற தினுசில் அமைதி காத்தாள். பின் ''- - - பணத்தில் பாவம் என்பதே கிடையாது, இல்லையா?'' - என்றாள்.

''ஏய், என்னை என்ன நண்பர்களைப் போட்டுக் கொடுத்து வாழும் இழிவானவள்னு நினைச்சியா?'' திருமதி கேட்டார், வெறுப்புடன்.

''ஆமாம் - - -'' என்றாள் இவள், மாற்று பதில் வேறு கிடையாது என்பது போல். ''- - - இதற்கு விலையாகக் கொடுக்கப்படும் பணம், எண்ணிலடங் காமல் இருக்கும் பட்சத்தில்...! இல்லையா..?!''

தற்போதைக்கு, ஜூலியஸ் அறிவித்துள்ள அந்தப் பெரும் டாலர் தொகையை வாய் விட்டு சொல்லிவிட, டூபென்ஸின் மெல்ல முன்னேறும் திட்டம், வழி விடவில்லை.

ஒரு மனமாற்றம், சடுதியில் வாண்டே மேயரின் முகத்தினை வருடிச் சென்றது. ''என்ன சொன்னே நீ?'' - நெஞ்சுக்குக் குறுக்கே விழுந்திருந்த சங்கிலியின் நுனியைப் பிடித்துப் படபடப்பாய் உருட்டியபடி கேட்டார் திருமதி. அந்த நொடியில், மீண்டும் துள்ளி தண்ணீருக்குள் விழுந்த மீன், பாவம், பரிதாபமாய் மறுபடியும் தப்பிக்க முடியாதபடி தூண்டிலுக்குள் மாட்டிக் கொண்டு விட்டது என்பதை உணர்ந்த டூபென்ஸ், முதன் முறையாக, நேருக்கு நேராக, திருமதி வாண்டே மேயரின் பணம் சார்ந்த கொடூரத்தினையும் கவனித்தாள்.

''ஒரு லட்சம் பவுண்டுகள்'' - சொன்னாள் டூபென்ஸ்.

வாண்டே - மேயரின் முகத்தில் பிரகாசிக்க ஆரம்பித்திருந்த விளக்கு - அணைந்துப் போனது. தன் நாற்காலியில் மீண்டும் சாவகாசமாய் சாய்ந்துக் கொண்டார் அவர். ''ஃப்பூ..'' என்றார். ''அத்தனை தொகையெல்லாம் உனக்கேதுடி. மூடு.''

''கிடையாது தான்'' என ஒப்புக் கொண்ட இவள், ''என்னிடம் இல்லை தான் - ஆனா, இத்தனை வெச்சுக்கிட்டுத் தரத் தயாராயிருக்கும் ஒருத்தரையும் தெரியும்'' என்றாள்.

''யாரு?''

''என்னுடைய ஒரு நண்பர்.''

''அவர் ஒரு மில்லியனரா இருக்கணும்'' - விளக்கு மீண்டும் எரியத் துவங்க, நம்ப முடியாதவராய் குறிப்பிட்டார் வாண்டே - மேயர்.

''சொல்லப் போனா - அவர் அப்படித்தான். மில்லியனருக்கும், மில்லியனர். அமெரிக்கன். நான் சொன்னத் தொகையை முணுமுணுக்காம தருவார். இதுல ஏமாற்றுதலே இருக்காதுனு நானே சொல்றேன்... இது ஒரு சிறப்பான பெரும் 'டீல்' என்பதும் என் கருத்து.''

திருமதி வாண்டே - மேயர் மறுபடியும் முன் வந்து நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்துக் கொண்டார். மெல்லமாய், ''உன்னை நம்பத்தான் வேண்டியிருக்கு'' என்றார்.

இருவருக்குமிடையே சற்று நேரம் மவுனம் நிலவியது. பிறகு திருமதி வாண்டே - மேயர் நிமிர்ந்து பார்த்தார். ''அவருக்கு... அதான், உன் நண்பன்.. எதைத் தெரிஞ்சுக்கணுமாம்?''

திருமதியைக் கொஞ்சம் நேரம் தத்தளிக்க விட வேண்டும் என்பது ஒரு பக்கம் டூபென்ஸ் எதிர்பார்த்ததாயிருந்தாலும்... இது ஜூலியஸின் பணம்... இதில் அவருடைய விருப்பம் முதலில் வர வேண்டும் எனவும் தயங்கினாள். ஆயினும் அடித்தாள்: ''ஜானே ஃபின் எங்கேயிருக்கானு அவருக்குத் தெரியணும்.''

வாண்டே மேயர் கொஞ்சமும் ஆச்சரியம் காட்டவில்லை. ''இந்த க்ஷணத்துல அவ எங்கேயிருக்கானு என்னால நிச்சயப்படுத்திச் சொல்ல முடியலே'' என மறுபதில் தந்தார்.

''ஆனா உங்களால கண்டுபிடிக்க முடியும்... ஆங்?''

''ஓ.யெஸ்'' - விட்டேற்றித்தனமாய் பதிலளித்தார் அவர். ''அதுல எவ்வித கஷ்டமும் இருக்காது.''

''அப்போ - - -'' டூபென்ஸின் குரல் கொஞ்சம் நடுங்கியது. ''- - - இன்னொருத்தன். என்னுடைய நெருக்கம். அவனுக்கு என்னவோ நடந்திருக்குனு எனக்குள்ளே பயம். உங்க ஆள் போரீஸ் மூலமா.''

''அவன் பேர் என்ன?''

''டாமி தாமஸ் ஃபோர்டு.''

''அப்படி ஒருத்தனை நான் கேள்விப்பட்டதே கிடையாது. ஆனா போரீஸை நான் கேட்கறேன். அவருக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் என்கிட்டே சொல்லுவார் அவர்.''

''தேங்க் யூ'' - டூபென்ஸ் அவளுடைய ஆன்ம பலத்தில் மளமளவென்று உற்சாகம் கூடுவதை உணர்ந்தாள். இது, அவளை சில நடவடிக்கைகளை, அதி

துணிச்சலாய்க் கையிலெடுத்துக் கொண்டு இயங்கத் தூண்டியது. ''இன்னும் ஒரு விஷயம் இருக்கு'' என்றாள்.

''ம்?''

முன்னுக்கு வளைந்த டூபென்ஸ், குரலைத் தணித்துக் கொண்டாள்.

''மிஸ்டர் ப்ரௌன் யார்?''

இவளுடைய துரிதமான கண்கள், சட்டென அழகு அத்தனையும் வடிந்துக் குன்றிப் போகும் முகத்தை எதிராளியில் கணித்தன. பிரயத்தனப் பட்டுத் தன்னை நிலையாக்கிக் கொண்ட திருமதி வாண்டே மேயர், சற்று முன்னிருந்த அவருடைய இயல்புக்கு வர முயற்சித்தார். ஆனால் இம்முயற்சி பரிகாசமாய் ஆனது. அவரால் இயலவில்லை. தோள்களைத் தோல்வியாய் குலுக்கிக் காட்டினார். *''எங்களில் ஒருத்தருக்கும் அந்த மிஸ்டர் ப்ரௌன் என்பது யார்னு தெரியாது* என்பதை நீ இதுவரைக்கும் உணரலேனா.. பாவம், நீ. இன்னும் எங்களை முழுசா புரிஞ்சுக்கலேனு தான் அர்த்தம்!''

''ஆனா, உங்களுக்குத் தெரியும்?'' - டூபென்ஸ் நிதானமாய் குறிப்பிட்டாள்!

மறுபடியும் எதிராளியின் முக வண்ணம் கலைந்து வெளிறிப் போனது.

''எதுடீ உன்னை இப்படி தப்புத் தப்பா நினைக்கத் தூண்டுது?''

''எனக்குத் தெரியலே'' என்றாள் இவள், உண்மையாய். ''ஆனால் நான் நினைப்பதுதான் *நிச்சயம்.''*

முன்னால் அமர்ந்திருந்த வாண்டே மேயர் நெடு நேரமாய் இவளை முறைத்துக் கொண்டிருந்தார். உறுமும் குரலில், ''யெஸ், எனக்குத் தெரியும்'' என்றார் முடிவாய். ''எனக்குத் தெரியும். நான் அழகி, இல்லையா! பெரும் அழகி - ரொம்ப ரொம்ப அழகா இருந்தவ!''

''இன்னும்! இப்பவும்!'' என்றாள் டூபென்ஸ், ஆச்சரியித்துப் பாராட்டும் தொனியில்.

''ம்ம்'' - மறுத்துத் தலையசைத்தார் வாண்டே மேயர். அவருடைய மின்சாரக் கண்களில், விசித்திரமான ஒரு மினுமினுக்கும் ஒளி, புதிதாய் தோன்றிப் பிரகாசித்தது. ''தேவைப்படும் அளவுக்கான அழகு - இப்ப இல்லை''- மிருதுவான ஆனால் ஆபத்தான குரலில் குறிப்பிட்டார் அவர். ''அழகு - போதுமான அளவு - இல்லை. அப்புறம், கொஞ்ச காலம் கடந்தது; அப்போ பயப்பட்டேன்... நிறைய விஷயங்களைத் தேவைக்கும் அதிகமா தெரிஞ்ச வைப்பது - ஆபத்தானது!'' முன்னால் வளைந்து வந்தார் அவர். ''என்னோட பேர் வெளியே வரவே வராதுனு நீ சத்தியம் பண்ணனும் - என்னிக்கும் யாரும் தெரிஞ்சுக்க மாட்டாங்கன்னு பிரமாணம் பண்ணனும். செய்வியா?''

''அப்படியே. மண் மீது அடித்துச் சத்தியம். தவிர, 'அவன்' பிடிக்கப் பட்டதும், எல்லா ஆபத்துக்களிலிருந்தும் நீங்க வெளியே வந்துடுவீங்க.''

காணவே அச்சுறுத்தும் உணர்ச்சிப் பிரவாகம் வாண்டே மேயரின் முகத்தில் அலையாய் எழுந்து அடித்தது. ''நானா? வெளியேறிடுவேனா? அத்தனை ஆபத்துக்களிலிருந்துமா? அது முடியுமா?'' - அப்படியே எகிறி டுபென்ஸின் கரங்களை இறுக்கிக் கவ்விக் கொண்டார் அவர். ''பணம் பற்றி நிச்சயப்படுத்தித் தான் சொன்னியா? நிச்சயமா? பணம்... பணம், *பணம்..!*''

''நிச்சயமா, நான் சொன்ன தொகை - சொன்னது தான். பின்வாங்கவே மாட்டேன்.''

''அது எப்போ எனக்குக் கிடைக்கும். இதுல தாமதமே இருக்கக் கூடாது.''

''நான் சொன்ன அந்த என் நண்பன், இதோ இப்போ இங்கே வரப் போறார். அலுவலக ரீதியினாலான தகவல்களை வங்கிக்கு அனுப்பி பணத்தைப் பெற வேண்டிய தேவையிருக்கு - அது மட்டும் தான் தாமதத்தை உண்டாக்கும். மற்றபடி காலந்தாழாது. அவர் அத்தியாவசியமா அந்தப் பெண்ணைத் தேடிக்கிட்டிருக்கார்.''

ஒரு ஸ்திர முடிவு,வாண்டே மேயரின் முகத்தில் வந்தமர்ந்ததைக் கவனித்தாள் இவள்.

''நான் சொல்றேன். சொல்லிடறேன். இது கிடைக்கவே கிடைக்க முடியாத பெரும்... பெரும்.... மாபெரும் தொகை.எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரத்துல... சிந்திக்கவே இடம் தராது பறிச்சுடறேன்.ஏன்னா'' - என்று வித்தியாசமான கிண்டல் புன்னகையை வீசிய அவர், ''அத்தனை பெரிய தொகையை என் போன்ற ஒரு பெண்ணின் மீது அள்ளி வீசுவது - ஒரு கிறுக்குத்தனமில்லே!'' என்றார்.

ஒரு சில நிமிடங்கள் அதே சிரிப்போடு, மேஜையில் தாளமிட்டபடி யிருந்தார் அவர். திடீரென்று, ஒரு நொடியில், துணுக்குற்றார். அவரது முகம் உயிரிழந்தது. சட்டென்று தான். எதிர்பாராமல்.

''என்னது அது?'' - பயமாய் கேட்டார் அவர்.

''எது?''

''கேட்கலே?''

மளமளவென்று சுற்றும்முற்றும் பயக்கலவரம் கொண்ட பார்வையை ஓட்டினார் வாண்டே - மேயர். ''ஏய் ... ஏய்..... என்னது அது? யாரோ மறைஞ்சிருந்து நான் ஒப்புக் கொண்டதைக் கேட்டு விட்டது மாதிரி .....''

''முட்டாள். யார் இருந்திருக்க முடியும்?''

''இந்த சுவர்களுக்குக் கூட காது இருக்கும்டீ'' - முணுமுணுத்தார் அவர். ''பயமா இருக்குடீ. ஆமாம். எ... எ..... எனக்கு, நடுக்கமா இருக்கு. ஆமாம்... நான் சொல்றேன்... உனக்கு அவனைத் தெரியாது!''

''மண்ணு. அந்த ஒரு லட்சம் பவுண்டை இப்போ நினைச்சுக்குங்க. நடுக்கம் போயிடும்!''

காய்ந்து விட்டிருந்த உதடுகளின் மீது நாவினை ஒட்டினார் திருமதி வாண்டே மேயர்.

''உனக்கு அவனைத் தெரியாதுடீ'' என்றார் மீண்டும், கறகறவென்ற தொண்டை அடைப்போடு. ''அவன்.,... அவன்.... ஆஹ்!''

கிரீச்சென்ற திகில் குரலெடுத்த அலறலோடு, தனது கால்களின் பலம் குலைய, நிலை தடுமாறி வளைந்தார் அவர். அவருடைய நீண்டு அகண்டுப் போயிருந்த கை, டூபென்ஸின் தலைப்பக்கமாய்ச் சுட்டிக் காட்டியது. பிறகு அப்படியும் இப்படியுமாக ஊஞ்சலாடிய வாண்டே மேயர், மரண மயக்கமடைந்தவர் போல தரையில் வீழ்ந்தே போனார்.

இந்த அளவுக்கு முதலாளிம்மாவை எது துணுக்குற அடித்து சாய்த்திருக்கும் என்று சட்டென்று சுற்றிவரப் பார்த்தாள் டூ பென்ஸ்.

அங்கே - கதவருகில் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனும், ஜூலியஸும் இருந்தனர்.

அத்தியாயம் - 13

ராக்காவல்

ஜூலியஸை இடித்துத் தள்ளிக் கொண்டு அவசரமாய் முன்னால் வந்த சர் ஜேம்ஸ் பீல் கீழே விழுந்துக் கிடந்த பெண்மணியை நோக்கிக் குனிந்தார்.

''ஓ...'' என்றார் கூர்மையாய், ''திடுதிப்புனு எங்களை உள்ளே பார்த்தது இவங்களுக்கு பேரதிர்ச்சியைத் தந்திருக்கணும். ப்ராண்டி - அதுவும் சீக்கிரமா, இல்லேனா நம் விரலிடுக்குகள் வழியாவே இவங்க நழுவிடுவாங்க.. ''

ஜூலியஸ் கழுவும் மேடைக்கருகேயிருந்த சிறு அலமாரிக்கு ஓடினார்.

''அங்கே இல்லை'' - திரும்பிய டூபென்ஸ் தன் தோள் வழியே சொன்னாள். ''சாப்பிடும் மேஜையருகே, அலமாரியில். அப்படியே நடங்க. அலமாரியின் ரெண்டாவது கதவு. ஆங், அதான். திறங்க.''

ஜேம்ஸூம் டூ பென்ஸூம் ஆளுக்கொரு பக்கமாய் திருமதி வாண்டே மேயரைச் சுமந்துக் கொண்டு அவருடைய படுக்கை வரை தூக்கிப் போய் போட்டனர். அங்கே அவரது முகத்தின் மீது தண்ணீரை அடித்தனர். ஆனால் நல்விளைவு ஏதுமில்லை. வக்கீல், அவருடைய நாடித்துடிப்பினை தன் விரல்களில் படித்தார்.

''வருது - போகுது'' என்று மெதுவாய் குறிப்பிட்டார். ''அந்த ஆளு ப்ராண்டியை எடுத்துக்கிட்டு சீக்கிரமா வரணும்...''

இந்தக் கணத்தில், கையிலிருந்த கோப்பையில் பாதி அளவு புளித்த திரவத்தை நிரப்பிக் கொண்டு மறுபடியும் அறைக்குள் நுழைந்த ஜூலியஸ், அதனை ஜேம்ஸிடம் ஒப்படைத்தார். டூபென்ஸ் தொங்கிப் போயிருந்த திருமதியுடைய தலையை நிமிர்த்திக் காட்டுவதில் முனையும் போது, ப்ராண்டியை இறுக மூடியிருந்த அவருடைய உதடுகளுக்கு இடையில் அமுக்கி ஊற்ற முயற்சித்துக் கொண்டிருந்தார் ஜேம்ஸ். இறுதியாய் சன்னமாக தனது கண்களைத் திறந்தார் அவர். டூபென்ஸ், கோப்பையை அவருடைய உதடிடுக்கில் மேலும் சாய்த்தார். ''இதைக் குடிங்க.''

வாண்டே மேயர் ஒத்துழைத்தார். வெளிறிப் போயிருந்த அவருடைய ரோஜா நிறக்கன்னங்களில் மீண்டும் அவ்வண்ணத்தை மெச்சத்தக்க வகையில்

கொண்டு வந்து தந்தது. மருந்தாய் பயன்பட்டுக் கொண்டிருந்த ப்ராண்டி. நிமிர்ந்து உட்கார முயற்சித்தார் - அது முடியாத போது ''ம்ம்ம்ம்'' என்ற அடித்தொண்டை உறுமலோடு வீழ்ந்தார். கைகளிரண்டும் வெவ்வேறு திசுசாய் அகண்டு படுக்கையில் சிதறின. ''என் நெஞ்சு.... என் நெஞ்சு...'' என முணுமுணுத்தார். ''நான் பேசலே.''

கண்களை மூடி பழையபடி ஆனார்.

ஒரு நிமிடம் போல தனது விரல்களை அவரது நாடித்துடிப்பில் பொருத்திய சர் ஜேம்ஸ், ஒப்புதலான தலயசைப்போடு பிறகு நிமிர்ந்தார். ''இனி சரியாயிடுவாங்க.''

மூவரும் நகர்ந்துப் போய், ஒன்றாக சேர்ந்து நின்றுக் கொண்டு, தணிந்த குரலில் பேசலாயினர்.

எதிர்பார்த்து வந்ததற்கு நேர்மாறாக உச்சக்கட்டம் நிகழ்ந்துள்ளதை எல்லோரின் புத்தியும் நிச்சயமாய்ப் புரிந்துக் கொண்டன. பெண்மணியைக் குறுக்குக் கேள்விகள் கேட்டு விஷயத்தை வாங்குவதென்பது, இந்த இக்கட்டில் செய்யவே கூடாத ஒன்று என்பது துல்லியமாய் விளங்கிப் போனது. இதை உணர்ந்ததும் அனைருமே உலுக்கப்பட்டனர். வேறொன்றுமே செய்ய முடியாத தருணம்!

மிஸ்டர் ப்ரௌன் என்பவர் யார் என்பது குறித்து திருமதி வாண்டே - மேயர் எப்படி தானாக முன் வந்து உடைக்க சம்மதித்தார் என்பதையும், ஜானே ஃபின் எவ்விடத்தில் இருக்கிறாள் என்பது வரை கண்டுபிடித்து இவர்களுக்கு தெரிவிக்க திருமதி ஒப்புக் கொண்ட காட்சியையும் விவரித்தாள் டூபென்ஸ். ஜூலியஸ் பாராட்டும் நிலையிலிருந்தார்.

''பிரமாதம், மிஸ் டூபென்ஸ்! பிரமாதம். இனி கவலையே வேண்டாம். இன்னிக்கு இரவு அந்த ஒரு லட்ச டாலர் எனும் தொகை இந்த அம்மாவுக்கு எத்தனைக்கெத்தனை அதியற்புதமா தெரிஞ்சதோ, அதே அளவு அற்புதமா தான், நாளை காலையும் தெரியும்! ஆக, கவலைப்பட்டு கிலேசமடைய இதுல ஒண்ணுமில்லே. பந்தயம் வெக்கறேன்... பணம்னா போதும்... காலையில, தெரிஞ்ச அத்தனையையும் கொட்டிடுவாங்க!''

இந்த வாக்கியங்களில் நிறைய நிதர்சனங்கள் இருந்ததால், கொஞ்சமாய் ஆறுதலானதாய் உணர்ந்தாள் டூபென்ஸ்.

ஏதோ சிந்தனையிலிருந்த ஜேம்ஸும், ''நீங்க சொல்வது நிஜம் தான்'' என்றார் ''இந்த ஆபத்தான நேரத்துல அவங்களைத் தொந்தரவு பண்ணாம விட்டோமே, இதுக்கு நம்ம மூணு பேரையுமே நான் மனப்பூர்வமா பாராட்ட விரும்பறேன். பண்ணியிருந்தா - அவங்க உடைஞ்சிருக்கலாம். ஆயினும்

குறுக்குக் கேள்விகளை நாம தள்ளிப் போட முடியாது - என்ன, ஜஸ்ட், நாளை காலை வரை காத்திருக்கணும்.''

சொல்லி விட்டு, அசைவற்ற ஜடமாய் மெத்தையில் கிடந்த உடலைப் பார்த்தார். சலனமேயின்றி படுக்கையில் கிடந்தார் வாண்டே மேயர். மறுப்பாய் தலையசைத்துக் கொண்டார், வக்கீல்.

''நல்லது...'' என்று, புத்துணர்வினைத் தூவும் நோக்கத்தோடு, ''இப்போ என்ன.. காலை வரை காத்திருக்கணும்...! அவ்ளோ தானே...! நோ ப்ராப்ளம்... அதுக்காக நாம இந்த ஃப்ளாட்டை விட்டு கிளம்பிடணும்னு அர்த்த மில்லையே...!'' என்றாள், இவள்.

''உங்களுடைய துறுதுறுப் பயலை இங்கு காவலுக்கு விட்டுட்டு நாம கிளம்பலாமே. இல்லையா?''

''ஆல்பர்ட்? அவங்க மறுபடியும் எழுந்து மளமளனு கிளம்பி ஓடிட்டா...?! இந்தப் பயலால நிறுத்த முடியாது, ஜேம்ஸ்...''

''கிடைக்கவுள்ள லட்சக்கணக்கான டாலர் தொகையை விட்டுட்டு பாதை மாறிட மாட்டாங்க என்பது என் ஊகம்.''

''பாதை - *மாறிடலாம்.* 'மிஸ்டர் ப்ரௌன்' குறித்து அதிகபட்ச கிலியில் அவங்க இருப்பது மாதிரி எனக்குத் தோணுது.''

''என்ன? அயோக்கியத்தனத்தின் இந்த மொத்த உருவுக்கு, அவனைக் கேட்டா பயமா?''

''ஆமாம். விஷயத்துக்கு ஒத்துக்கிட்டதும், உள்ளூர அவருக்கு பயம் உண்டாச்சு. சுற்றிவரப் பார்த்துட்டு, சுவருக்குக் கூட காது இருக்கும்னு சொன்னாங்க... அப்ப அவங்க முகத்தில எத்தனை கிலி தெரியுமா....?''

''அதை சும்மா ஒரு வழக்கு மொழியா சொல்லியிருக்கலாம் - உவமைக்கு' என்றார் ஜூலியஸ், ஈடுபாடு கொடுத்து.

இப்போது, ''மிஸ் டூபென்ஸ் சொல்வது தான் சரி'' என்றார் சர் ஜேம்ஸ், நிதானமாய். ''வாண்டே மேயர் வேணும்னா, ஃப்ளாட்டை விட்டுட்டு நாம போகக் கூடாது.''

ஜூலியஸ், வக்கீலைப் பார்த்து கண்ணகல முறைத்தார். ''இவங்களை வந்து 'அவர்' கவர்ந்திடுவார்னா சொல்றீங்க? இப்போதிலிருந்து நாளை காலைக்குள்ளே? இதெல்லாம் அவனுக்கு எப்படிங்க தெரியும்?''

''நீங்க குறிப்பிட்ட வழக்கு மொழி உவமையை மறுந்துடாதீங்க'' - வறட்சியாய் குறிப்பிட்டுக் காட்டினார் ஜேம்ஸ். ''நாம படு பயங்கரமான எதிரியை...மறைந்திருக்கும் பகைவனை எதிர்த்து நின்னுக்கிட்டிருக்கோம். எல்லா வகையான முன்னெச்சரிக்கைகளையும் நாம விட்டுடாம

கடைபிடிச்சா, நம் கைகளில் அவள் ஒப்படைக்கப்படும் வாய்ப்புகள் நிறைவா இருப்பதாக நான் நம்பறேன். மறுபடியும் சொல்றேன். எந்த முன்னெச்சரிக்கை யையும் நாம ஒதுக்கிடக் கூடாது. ஆமாம். நம்ம கையில அற்புதமான சாட்சி இருக்கு - ஆனா அவங்க பாதுகாக்கப்படணும். மிஸ் டுபென்ஸ் தூங்கப் போய்டலாம்னு எனக்குத் தோணுது. நானும் மிஸ்டர் ஜூலியஸூம் ராக்காலத்து ரோந்துல இருக்கோம்.''

இந்த ஆலோசனையை எதிர்க்க டுபென்ஸ் நினைத்தாள். இதைச் சொல்லி விடவும் வாயெடுத்தாள். ஆனால், பய உணர்வும் பகைமையும் குரோதமும், என எல்லாம் கலந்து, பாதி கண்கள் திறந்த நிலையில் மெத்தையில் கிடந்த திருமதி வான்டே மேயரை ஓரக்கண்ணால் பார்க்க நேரிட்ட போது இவள் உதடு வரை வந்த வார்த்தைகள் வெளியில் வழியாது நின்றுப் போயின.

இக்கணத்தில், இப்படி ஏற்பட்டிருக்கும் மயக்கமும் இதய பலஹீனமும், ஒரு வேளை ராட்சஸ சைலிலான பம்மாத்து வேலையாயிருக்குமோ என்று கூட இவள் வியந்தாள்! ஆனால், அவர் முகத்தில் கொஞ்ச நேரத்துக்கு முன்பு உருவான ஸ்மரணையற்ற நிர்சலனத்தை நினைவில் கொண்டு வந்த போது, இவள் நினைத்தது சத்தற்றுப் போனது. மறுபடியும் அவரைப் பார்த்தாள். திருமதி வான்டே மேயர் இயக்கமற்று மரத்துண்டாய்க் கிடக்க இவளுக்குள் உருவான சந்தேகம் மறைந்தது. கள்ளத்தனமான வேஷமோ என்று நினைத்தது எத்தனை பெரிய தப்பு என்று அஃறிணையாய் கிடந்த வான்டே மேயரின் உடல் டுபென்ஸை உணர வைத்தாலும், அந்தப் பெண்மணியிடம் ஜாக்கிரதை யாய் இருந்தே ஆக வேண்டும் என்றும் தீர்மானமெடுத்துக் கொண்டாள்.

''சரி'' என்று ஆரம்பித்த ஜூலியஸ், ''இங்கிருந்து கிளம்புவது நல்லதுனு நினைக்கிறேன்'' என்றார்.

மீதியிருவரும் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டனர். சர் ஜேம்ஸ் மறுபடியும் திருமதியின் நாடித் துடிப்பினைப் படித்தார்.

''மிக திருப்திகரமாயிருக்கு'' என்று டுபென்ஸிடம் சன்னமாய் குறிப்பிட்டார். ''ராத்திரி ஓய்வுக்குப் பிறகு ரொம்ப நலமா ஆயிடுவாங்க.''

இளையவள், படுக்கைக்கு அருகே நின்றபடி சில கணங்கள் தயங்கினாள் கிட்டப்பவர், அதிர்ச்சியால் உறைந்துப் போன போது பிரதிபலித்த உணர்ச்சிக் கொந்தளிப்பின் உத்வேகம், நிற்பவளை மிக சக்திக் கொண்டு தூக்கியிருக் கின்றது திருமதி வான்டே மேயர் அவருடைய இமைகளை சிரமப்பட்டுத் தூக்கினார். பேசுவதற்கு அவர் துடிப்பதுப் போல தோன்றியது. டுபென்ஸ் அவருக்கு மிக அருகில் குனிந்தாள்.

''விட்டுடாதீங்க....'' பிறகு, பேச முடியாமல் ஆகி விட்டதைப் போல தோன்றியவர், ''தூக்கமா...'', என்பது போல என்னவோ முணுமுணுத்தார். பிறகு மறுபடியும் முதலில் விட்டதைத் தொடர முயன்றார்.

ரூபென்ஸ் இன்னும் அதிகமாய் குனிந்து மிக அருகாமைக்குப் போனாள். அது, வெறும் மூச்சு தான்.

''மிஸ்டர் - ப்ரௌன்...''

குரல் நின்றுப் போனது. ஆனாலும், அந்தப் பாதி மூடிய கண்கள், தீவிர வேதனையின் காரணத்தைச் சொல்ல துடிப்பது போலிருந்தது.

உள்ளுக்குள்ளிருந்து உந்திய திடீர் உணர்ச்சியின் காரணமாக ரூபென்ஸ் பேசினாள். ''நான் ஃப்ளாட்டை விட்டு எங்கேயும் போக மாட்டேன். கவலை வேண்டாம்மா... கண் முழிச்சு பக்கத்துலேயே ராத்திரி பூரா இருப்பேன். யெஸ்.''

இமை முழுவதும் கீழிறங்கி மூடிக் கொள்வதற்குள், ஒரு வித விடுதலை உணர்வின் கீற்று அவரிடமிருந்து வெளியேறியது. திருமதி வாண்டே மேயர் தூங்கிப் போனார். ஆனால் அவர் இப்போது சொன்ன வார்த்தைகள் புதுவிதமான இருப்புக் கொள்ளாமையை ரூபென்ஸுக்குள் உண்டு பண்ணியது. ஒலியற்ற அந்த முணுமுணுப்பின் மூலம் அவர் சொல்ல வந்தது என்ன? 'மிஸ்டர் ப்ரௌன்?' இது உணர்த்துவது என்ன? ரூபென்ஸ் உள்ளுக்குள் உண்டான படபடப்பின் காரணமாக திரும்பித் தன்னுடைய தோளின் வழியாகப் பார்த்தாள். அந்த பெரிய அலமாரி இவளுக்கு முன்னால் ஓர் அமானுஷ்யமாய்ப் பல்கிப் பெருகி தோன்றியது. ஒரு வளர்ந்த மனிதன் உள்ளே போய் மறைந்துக் கொள்ள அதனுள் தாராளமாய் இடமிருக்கும்... தனக்குள் கூசிக்கொண்டே எழுந்து போய் அதனைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தாள்... யாருமில்லை - பின்னே ! இவள் மடிந்து குனிந்து படுக்கைக்கு அடியிலும் பார்த்தாள். அங்கு வேறு ஓர் ஒளியும் இடம் கிடையாது.

ரூபென்ஸ், அவளுக்கே உரிய பிரபல தோள் குலுக்கலைத் தந்துக் கொண்டாள். இப்படி நரம்புகள் திருகிப் போக இடம் தருவதைப் போன்ற கிறுக்குத் தனம் வேறு இருக்க முடியாது! மெதுவாய் இவள் அறையை விட்டு வெளியேறினாள் ஜூலியஸும் சர் ஜேம்ஸும் தணிந்த குரலில் பேசிக் கொண்டிருந்தனர். சர் ஜேம்ஸ் இவள் பக்கமாய் திரும்பினார்.

''கதவை வெளிப்பக்கமா தயவு செய்து பூட்டிடுங்க. மிஸ் ரூபென்ஸ் பூட்டிட்டு சாவியை எடுத்துடுங்க... அந்த அறைக்குள்ளே துணையும் வாய்ப்பு வேறு யாருக்கும் இருக்கக் கூடாது ''

அவருடைய துரித நடவடிக்கையின் அழுத்தம் இருவரையும் கவர்ந்தது. சற்றுமுன் நரம்பதிர பயந்ததை இன்னும் கூடுதலாய் கூசிக்குறுகி எண்ணிக் கொண்டாள் டூபென்ஸ்.

''ஆங்...'' என்று ஞாபகம் வந்தவராய் குறிப்பிடத் துவங்கிய ஜூலியஸ், ''டூபென்ஸுடைய அந்த புத்திசாலி நண்பன் பாக்கியிருக்கான்! நான் கீழே போய் அந்தப் பிஞ்சு மனதை ஆசுவாசப்படுத்தி வரலாம்னு நினைக்கிறேன். சரியான பய அவன், டூபென்ஸ்.''

''அது சரி... நீங்க ரெண்டு பேரும் எப்படி உள்ளே வந்து நின்னீங்க?'' என்றாள் இவள் திடுமென்று. ''இதைக் கேட்க மறந்துட்டேனே.''

''ஆல்பர்ட் என்னை போன்ல பிடிச்சான். சர் ஜேம்ஸைத் தேடி விழுந்தடிச்சுக்கிட்டு ஓடினேன்... நேரடியா ரெண்டு பேரும் இங்கே வந்தோம். நாங்க வரோமானு பரபரனு பார்த்துக்கிட்டிருந்தான் அவன்... உங்களுக்கு என்ன ஆகியிருக்கும்னு தான் அவன் குழப்பத்துல இருந்தான். வீட்டுக் கதவுக்கு வெளியே நின்னுக்கிட்டு காதைக் கதவோடு கதவா பொருத்தி முயற்சி பண்ணிக்கிட்டிருந்தான் - ஆனால் அவனால எதையும் கேட்க முடியலே. அழைப்பு மணியடிக்கிறதுக்கு பதிலா எங்களைப் பின்பக்கம் போய் பார்க்கச் சொன்னான் அவன்... புத்திசாலி. அப்படியே செஞ்சோம். ஃப்ளாட்டின் புழக்கடைக்குப் போனோம். கதவு திறந்திருந்தது. அப்படியே உள்ளே வந்தோம். உங்களைப் பார்த்தோம். ஆல்பர்ட் இன்னும் கீழே தானிருப்பான். இந்நேரத்துல அவனுக்குப் பைத்திமே பிடிச்சிருக்கணும்...'' இவ்வார்த்தைகளோடு பட்டென்று கிளம்பிப் போனார் ஜூலியஸ்.

''இப்போ, மிஸ் டூபென்ஸ்'' என்ற ஜேம்ஸ், ''உனக்கு, என்னை விட, இந்த வீட்டின் பகுதிகள் நல்லா தெரியும். நாம எங்கெல்லாம் இன்னிக்கு ராத்திரி தங்கிக்கலாம்னு நீ நினைக்கிறே?'' என்று கேட்டார்.

டூபென்ஸ் ஓரிரு கணங்கள் எடுத்து உள்வாங்கிக் கொண்டாள். ''திருமதி வாண்டே மேயரின் தனிமை அறை... அந்தப்புரம் போன்ற தனிமைப் பகுதி.... உங்களிருவருக்கும் போதுமானதா இருக்கும்னு நினைக்கிறேன்'' என்று சொன்னவள், அந்தப் புறத்துக்கு வழி காட்டியபடி நடந்தாள்.

சர் ஜேம்ஸ், சம்மதமாய், சுற்றிவர ஒரு முறை பார்த்துக் கொண்டார்.

''இது யதேஷ்டம், மிஸ். ஆங்... இப்போ நீ படுக்கைக்குப் போய் கொஞ்சம் தூங்கப்பாரு.''

முடிவாய் மறுத்துத் தலையசைத்தாள் டூபென்ஸ். ''தேங்க்யூ, ஸார்.... ஆனால் என்னால அது முடியாது. அப்படி பண்ணினா, ரா முழுக்க மிஸ்டர் ப்ரௌன் கனவாகவே ஆயிடும்.''

''ஆனா ரொம்பக் களைப்பாயிடும், குழந்தே.''

''இல்லை. ஆகாது. நான் முழிச்சுக்கிட்டே இருந்துடறேன் - நிஜமா.''

வக்கீல் அவள் வழிக்கு, வழி விட்டார்!

ஆல்பர்ட்டுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் கூடவே அவன் செய்த சேவைக்கு தாராளமாய் இனாமும் தந்துவிட்டு, மீண்டும் வந்து சேர்ந்தார், ஜூலியஸ். டூபென்ஸைப் படுக்கைக்கு அனுப்பும் முயற்சியில் அவர் பங்குக்குத் தோல்வியைத் தழுவி விட்டு, முடிவாய் சொன்னார்: ''எப்படியோ போங்க... ஆனா வயிற்றுக்கு எதையாவது போட்டே ஆகணும், இல்லையா? சாப்பாடெல்லாம் எங்கேயிருக்கு?''

டூபென்ஸ் அவருக்கு அடையாளம் கூற, சற்று நேரத்தில் மூன்று தட்டுகளும் பணியாரங்கள் சிலவற்றையும் எடுத்து வந்தார் ஜூலியஸ்.

திருப்தியாய் அவற்றை சாப்பிட்டு முடித்த பிறகு, இளையவள், அரை மணிக்கு முன் எதிர்கொண்ட வீரதீர சாகசங்களை அள்ளி வீசிப் பீற்றிக் கொள்ள விழைந்தாள். ''பணத்தை லஞ்சமாய் தந்து வென்றுவிடப் போட்ட திட்டம் பொய்க்கவில்லை!'' என்றாள். பச்சை கொடி காட்டிய சர் ஜேம்ஸும் இவளுடைய துணிகரமான அனுபவங்களைக் கேட்க ஆர்வங்காட்டினார். அப்படியே என வழி மொழிந்தார் ஜூலியஸ்.

டூபென்ஸ் தன்னுடைய சாகசங்களைக் கொஞ்சம் தற்பெருமை வழிய ஒப்பிக்க ஆரம்பித்தாள். பாராட்டும்படியான 'கால் வாரல்களை' இடையிடையே அழகாய் செருகினார் ஜூலியஸ்! இவள் முடிக்கும் வரை வாயை திறக்காத ஜேம்ஸ், முடித்ததும், ''தூள் பண்ணிட்டீங்க, மிஸ் டூபென்ஸ்'' என்று சொன்னது, இளையவளை புளகாங்கிதத்தின் உச்சத்திற்கு இட்டுச் சென்றது.

''எனக்கு இதுல ஒரு விஷயத்தைச் சரியா பிடிக்க முடியலே'' என்றார் ஜூலியஸ். ''எது, அவங்களை, இங்கிருந்து மளமளனு தூரத்திக் கிளப்பியிருக்கு?''

''எனக்குத் தெரியாது'' - மனமாரச் சொன்னாள் டூபென்ஸ்.

சர் ஜேம்ஸ், அவருடைய முகவாயைச் சிந்தித்தப்படி தட்டிக் கொண்டிருந்தார். ''அந்த அறை, படு மோசமாய் கலைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து, அவங்களுடைய பிராயணம் துளியும் எதிர்பார்த்திராத ஒன்று என்று புரியுது. அதாவது - யாரிடமிருந்தோ 'உடனடியா கிளம்பிடு'னு திடீர் எச்சரிக்கை வந்ததால நடந்தா மாதிரியிருக்கு...''

''மிஸ்டர் ப்ரௌன்கிட்டேயிருந்து - ம் ?'' என்று பரிகசித்துக் குறிப்பிட்டார் ஜூலியஸ்.

வக்கீல், ஒரிரு நிமிடங்கள், சொன்னவரைச் சீர்தூக்கிப் பார்க்கும் தினுசாய், கண்ணுக்குக் கண் வைத்து ஊடுருவிப் பார்த்தார். பிறகு, ''ஏன் இருக்கக் கூடாது?'' என்றார். ''ஞாபகமிருக்கட்டும், நீங்கள் கூட ஒரு முறை அவனாலே கேவலமா ஏமாற்றப்பட்டிருக்கீங்க.''

ஜூலியஸ் வெறுப்பால் முகஞ்சுளித்தார். ''ஒரு படுமுட்டாள் போல ஜானேவுடைய புகைப்படத்தை நான் அவன் கிட்டேயே அள்ளிக் கொடுத்திருப்பதை நினைக்கும் போதெல்லாம்... ஓஹ், எனக்குப் பைத்தியமே பிடிச்சுடும் போல ஆகுது... ஊஃப்! அது மட்டும் எனக்கு மறுபடியும் கிடைச்சுட்டா...''

''அந்த மாற்று சிகிச்சைக்குத் தான் வழியே இல்லாம ஆயிடுச்சே'' - வக்கீல் வறட்சியாய்க் குறிப்பிட்டார்.

''ஆமாம்.. நீங்க சொல்வதும் சரி தான்'' என்று வெளிப்படையாய் ஒப்புக் கொண்டார் ஜூலியஸ். ''ஆனால், நான், நிழலை விட, நிஜத்துக்கு அலைஞ்சுக்கிட்டிருக்கேன். அவ எங்கே தான் இருப்பானு நீங்க நினைக்கிறீங்க. சர் ஜேம்ஸ்.''

வக்கீல் தெரியாது என தலையசைத்து உணர்த்தினார். ''சொல்றது ரொம்ப கஷ்டம். ஆனா அவங்க எங்கே *இருந்தாங்க* என்பதற்கு என்கிட்டே ஆழமான ஊகமிருக்கு.''

''அப்படியா? எங்கே?''

சர் ஜேம்ஸ் புன்னகைத்தார். ''நீங்க மரங்களேறி காதல் தேடல் நடத்திய ஸ்தலத்துல - போர்ன்-மவுத் மருத்துவமனையில்...''

''அங்கேயா? சாத்தியமேயில்லை. நான் கேட்டேனே.''

''இல்லை. என் இனிய நண்பா, நீங்க அங்கே ஜானே ஃபின் எனும் பெயரில யாராவது தங்கியிருந்தாங்களானு கேட்டீங்க... ஒரு வேளை அந்தப் பொண்ணு அங்கே தங்க வைக்கப்பட்டிருந்தா, நிச்சயமா வேற ஒரு புனை பெயர்ல தானே அது நடந்திருக்கும்.''

''அடடா'' என்று அலறினார் ஜூலியஸ். ''நான் அப்படி நினைச்சே பார்க்கலியே!''

''நான் இதுல தெளிவா இருந்தேன்'' என்றார் வக்கீல்.

''அப்படினா அந்த டாக்டரும் இதுல உடந்தையோ?'' என ஆலோசித்தாள் ரூபென்ஸ்.

மறுத்துத் தலையசைத்தார் ஜூலியஸ். ''எனக்கு அப்படித் தோணலே. அவருக்குள்ளே நான் உடனடியா ஈர்க்கப்பட்டேன். ம்ம்... டாக்டர் ஹால் கல்மிஷமில்லாதவர் என்பதுல நான் ஸ்திரமா இருக்கேன்.''

''ஹால்' னா சொன்னீங்க?'' -கேட்டார் ஜேம்ஸ். ''இது என் ஆர்வத்தை தூண்டுது. ஆமாம். உண்மையா - இது என் ஆர்வத்தைக் கிண்டுதுப்பா.''

''ஏன்?'' - சீக்கிரம் விளக்க வேண்டும் என்பது போல கேட்டாள் டூபென்ஸ்.

''ஏன்னா- அவரை இன்று காலையில் நான் சந்திக்கும்படி நேர்ந்தது. சில வருஷமா, விட்டுவிட்டு அவரோட எனக்குத்தொடர்பு இருந்தது. இன்னிக்குக் காலையில அவரை நான் ஏதேச்சையா சாலையில சந்திச்சேன். மெட்ரோ-போல் பகுதியில் இருப்பதாய்ச் சொன்னார்'' என்றவர் ஜூலியஸ் பக்கமாய் திரும்பினார்.. ''டவுன் வரைக்கும் வரும் விஷயத்தை அவர் உங்கக்கிட்டே சொல்லவேயில்லையா?''

ஜூலியஸ் மறுத்தார். ''ஏன்? ஆச்சரியமாயிருக்கு'' - முணுமுணுத்தார் சர் ஜேம்ஸ். ''நீங்க அவர் பெயரைக் காலையில சொல்லவேயில்லை. சொல்லியிருந்தா, என் பெயர் அட்டையை அடையாளமா உங்ககிட்டே தந்து, நேரா உங்களை அவர்கிட்டே அனுப்பி, மேற்கொண்டு விவரங்களைச் சேகரிச்சுக்கிட்டு வர வெச்சிருப்பேன்.''

''நான் ஒரு முட்டாள்'' - வழக்கத்துக்கு மாறாய் தோன்றும்படி அதிகபட்ச விமர்சனத்துடன் சொல்லிக் கொண்டார் ஜூலியஸ். ''தப்பான பெயர் தந்து நடத்தப்பட்டிருக்கும் கழைக்கூத்தாடி நாடகமெல்லாம் எனக்கும் ஊகிக்கத் தெரிஞ்சிருக்கணும்.''

''அந்த உயரமான மரத்திலிருந்து தலைக்குப்புற விழுந்ததுக்கபுறமா உங்களால எதைத்தான் ஊகிச்சிருக்க முடியும்?'' என்றாள் டூ பென்ஸ். ''வேற யாராவதா இருந்தால் - ஒரேயடியா போயிருப்பாங்க. ஆமாம்.''

''அது இப்போ எதுக்கு?'' என்றார் ஜூலியஸ். ''ஊசலாடிக்கிட்டடிருக்கும் வாண்டே மேயர் நமக்கு முன்னாடி இருக்கார். அதை மட்டும் சிந்திப்போம்.''

''சரி'' என்றாள் டூபென்ஸ். ஆனால் அக்குரலில் உறுதி சற்று குலைந்திருந்தது.

ஒருவித அமைதி குழுவினரின் மீது படர்ந்து கவிந்தது. மெதுமெதுவாய் இரவு எனும் சூத்திரதாரியின் மாயக் கை இவர்களை ஆட்சி செய்ய ஆரம்பித்தது. அங்கு திடுமென விளைந்த நாற்காலி இழுப்புகளின் ஓசை கூடியது. மூடியிருந்த திரைச்சீலை இழுக்கப்பட்டு விலக்கப்படும் விளக்க முடியாத ஓசைகளும் கூடின. திடீரென்று விடுபட்ட அம்பாய் ஓர் அலறலோடு எழுந்தாள் டூபென்ஸ்.

''என்னால நம்ப முடியலே. மிஸ்டர் ப்ரௌன் இந்த ஃப்ளாட்ல தான் எங்கேயோ இருக்கான்! என்னால அவனை உணர முடியுது!''

''நிச்சயமா இல்லே டூபென்ஸ். அவன் எப்படி இங்கே? இதோ.... இந்தக் கதவு திறந்திருக்கு. இதைக் கடந்துதான் அவன் அந்த அறைக்குள்ளே போக முடியும். குத்துக்கல்லா நாம இங்கேயே இருக்கோம். நாம பார்க்காமலோ கேட்காமலோ யாராலும் நம்மைக் கடந்து அந்த அறைக்குள்ளே போயிருக்க முடியாது, மிஸ்.''

''ஆனா என்னால அதிர்வைக் கட்டுப்படுத்த முடியலே. எப்படி விளக்குவேன்? அவன் இங்கே இருக்கான்னு நான் *உணர்றேன்..*''

சர் ஜேம்ஸை ''நம்புங்களேன்'' என்று இவள் பார்க்க, அவர் ஆழ்ந்து பேசினார்: ''ஒப்புக்க முடியலேம்மா. நாம கவனிக்காம... நம்முடைய அறிதல் இல்லாம... இந்த ஃப்ளாட்டுக்குள்ளே யாராவது வருவதென்பது மனித சக்தியால் ஆகாத விஷயமாத் தான் எனக்குப்படுது, டூபென்ஸ்.''

இவ்வார்த்தைகள் அவளுக்கு சிறு உள வசதியைத் தந்தன. ''தூங்காம நெட்டைக் குத்தலா ரா முழுக்க உட்கார்ந்திருக்கும் போது... தூக்கம் வர்றது கூட தெரியாம விழுந்துடறோம். அப்போது விட்டுவிட்டு என்னெல்லாமோ தோணுது'' - ஒப்புக் கொண்டாள் இவள்.

''ஆமாம்'' என்றார் சர் ஜேம்ஸ். ''ஏதோ ஆவிகளை பூமிக்கு இழுக்கிற கூட்டத்துக்கு நடுவுல மயான அமைதியில உட்கார்ந்துக்கிட்டு இருக்கிற மாதிரி பிரமை. ஒரு வேளை, ஆவிகளோடு பேசும் ஆசாமிங்க யாராவது இப்போ இங்கேயிருந்து த்யானம் செஞ்சா, இருக்கிற அமைதிக்கு அதியற்புதத் தீர்ப்புகள் கிடைச்சிடும்னு தோணுது.''

''ஆவி சாம்ராஜ்ஜியத்துல எல்லாம் நம்பிக்கை இருக்கா?'' - கேட்டாள் டூபென்ஸ், கண்களை நன்றாய் விரித்து.

வக்கீல் தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு அதுல கொஞ்சம் நிஜங்கள் இருக்கத்தான் செய்யுது. ஆனால் அப்படிக் கிடைக்கிற பல சாட்சிகளை நீதிமன்ற சாட்சிக் கூண்டுல ஏத்த முடியாது.''

மணிநேரங்கள் சுருங்கித் தீர்த்தன. மெலிதாய் மினுமினுத்து பூமியுள் விழுந்த முதல் சூரியோதயக் கதிர்களை உள் வாங்க, திரைச்சீலைகளை விலக்கி வழி செய்தார் வக்கீல். உறங்கும் நகருக்கு புது ஒளியைப் போர்த்திக் கொண்டிருந்தான் கதிரவப் பெருமகனார்! எழும் கதிரவனாலும் வளரும் அதன் வெளிச்சத்தாலும், முந்தைய இரவின் அச்சங்களும் விநோதமான கற்பனைகளும் இப்போது முட்டாள்தனமாகப் பட்டன. டூபென்ஸின் ஆன்மபலம், புதுப்பிக்கப்பட்டு, இயல்பாயிற்று.

''ஹுரே....'' என்றாள் இவள். ''இன்றைய தினம் புல்லரிக்க வைக்கும் இன்பகரமாய் இருக்கப் போகிறது'' என்று அறிவித்தாள். ''நாம டாமியைக்

கண்டுபிடிச்சிடுவோம். ஜானே ∴பின்னையும். பிறகு எல்லாமே அழகாயிடும். இந்த இங்கிலாந்து அரசாங்கத்தின் முடிசூடா மகாராணியாக என்னை அறிவிக்க வாய்ப்பிருக்கானு. ஏ கார்ட்ரை நான் கேட்கணும்!''

ஏழு மணி சுமாருக்குத் தானாக வலிய சென்று டீ தயாரிக்க முன் வந்தாள் டுபென்ஸ். ஒரு டீ தாம்பாளம் மற்றும் நான்கு தேநீர் கோப்பைகளோடு திரும்பி வந்தாள்.

''இன்னொரு கோப்பை யாருக்கு?'' என்று விசாரித்தார் ஜூலியஸ்.

''நம் கைதிக்கு! அந்தம்மாவை அப்படிக் கூப்பிடலாம், இல்லே...?''

''ம்... குடியுங்க...''

குடித்தனர். பிறகு, ''நீங்க ரெண்டு பேரும், ப்ளீஸ், என்னோடகூட வாங்களேன். அது என்ன நிலைமையில எழுந்திருக்கும்னு தெரியலே. ''வாவ் ..'' னு என் மேல பாய்ந்து வெச்சா!''

சர் ஜேம்ஸும் ஜூலியஸும் பக்கவாட்டிலிருந்த அந்த அறைக் கதவு வரை உடன் சென்றனர்.

''சாவி எங்கே? ஆங்...? ம்...! ஓஹ்... அது என்கிட்டேயே இருக்கு...!''

அதைப் பூட்டுக்குள் விட்டு, ஒரு திருகுத் திருகிய பின் தயங்கினாள். ரகசிய முணுமுணுப்பாய், ''ஒரு வேளை... அது... உள்ளேயிருந்து தப்பி ஓடியிருந்தா?'' என்றாள்.

''அதுக்கு சாத்தியமேயில்லை'' என்று நம்பிக்கையூட்டும் விதமாய் சொன்னார் ஜூலியஸ்.

ஆனால் சர் ஜேம்ஸ் எதுவும் சொல்லவில்லை.

டுபென்ஸ், நீண்ட உள் மூச்சினை இழுத்துக் கொண்டு நுழைந்தாள். படுக்கையிலேயே திருமதி வாண்டே மேயர் இருப்பதைக் கவனித்தும் ஒரு விடுதலைப் பெருமூச்சினை விடுவித்தாள்.

''குட் மார்னிங்'' என்று குதூகலமாய்க் குறிப்பு தந்த டுபென்ஸ், ''உங்களுக்குக் கொஞ்சம் டீ கொண்டு வந்திருக்கேன்'' என்றாள்.

திருமதி வாண்டே மேயர் மறுபதில் தரவில்லை. அருகிலிருந்த சிறு டேபிளில் டீ நிரப்பியக் கோப்பையை வைத்தாள். அறையின் குறுக்கே நடந்து அந்தப்பக்கம் போய் திரைச்சீலைகளை இழுத்து விட்டுத்திறந்து வெளிச்சம் கூட்டினாள். இப்போது மறுபடியும் இவள் திரும்பியபோது, திருமதி வாண்டே மேயர் எவ்வித அசைவுமின்றிப் படுத்திருந்தார். இவள் இதயத்தை ஒரு திடீர் பயம் கவ்விப் பிடிக்க, டுபென்ஸ் படுக்கை நோக்கி விரைவாய் ஓடி வந்தாள். இவள் தூக்கிப் பார்த்த அவரது கை ஐஸ் கட்டியைப் போல குளிர்ந்து இறுகிக் கிடந்தது... இங்கு இனி, வாண்டே மேயர் பேசப் போவதேயில்லை.

இவளின் கிலிக்கதறல் மற்ற இருவரையும் அள்ளிக் கொண்டு வந்து சேர்த்தது. ஓரிரு நிமிடங்களே போதுமானதாக இருந்தன. திருமதி வாண்டே மேயர் இறந்துவிட்டார். சில மணி நேரங்களுக்கு முன்னாலேயே உயிர் பிரிந்திருக்க வேண்டும். அவர் தூக்கத்திலேயே இறந்துப் போயிருப்பது வெளிப்படையாகவேத் தெரிந்தது.

''ஓஹ்.... எப்படி... எப்படி இது? இது சாத்தியமேயில்லை. யாராலும் உள்ளே வந்திருக்கவே முடியாது.'' கதறினார் ஜூலியஸ்.

'' வெளியிலிருந்து - யாராலும் வந்திருக்க முடியாது தான் '' என்று ஏற்றுக் கொண்டார் வக்கீல். ''அப்படி எப்படி வர முடியும்னும் எனக்குத் தெரியலே... இருந்தாலும் - மிஸ்டர் ப்ரௌனை ஏமாற்றும் உச்சத்தில் நின்றுக் கொண்டிருந்த இந்தப் பெண்மணி - *இறக்கிறார்.''*

''ஆனா எப்படி....?''

''அதான்.. *எப்படி!* அதைத்தான் நாம கண்டுபிடிக்கணும்'' - அப்படியே அமைதியாய், தன்னுடைய முகவாயைத் தட்டிக் கொண்டே நின்றார் வக்கீல். ''நாம கண்டுபிடிச்சே தீரணும்'' என்று நிதானமாய் குறிப்பிட்டார். தான் மிஸ்டர் ப்ரௌனாயிருந்தால், இப்போது கடைசியாய் வக்கீல் சொன்னதன் தொனியை, டூபென்ஸ் நிச்சயம் விரும்பியிருக்கவே மாட்டாள் என இவள் எண்ணிக் கொண்டாள்.

ஜூலியஸின் நோட்டம் ஃப்ரெஞ்ச் ஜன்னலுக்குச் சென்றது. ''ஜன்னல் திறந்திருக்கு'' என்று காட்டினார். ''அப்படின்னா...''

டூபென்ஸ் மறுத்துத் தலையசைத்தாள். ''பால்கனியிலிருக்கும் சின்ன வழி - அந்தப்புர அறை வரைக்கும் தான் போகும். அது தான் கடைசி. அங்கே நாம இருந்தோம்.''

''இங்கே மட்டும் வந்துட்டு நழுவியிருக்கலாம்.''

ஆனால் சர் ஜேம்ஸ் இடைமறித்தார்.

''மிஸ்டர் ப்ரௌனின் திட்டங்களெல்லாம் அத்தனை பக்குவமற்றதா இருக்காது. சரி.... உடனடியா ஒரு டாக்டருக்கு சொல்லியனுப்பணும். அதைச் செய்யறதுக்கு முன்னாடி... இந்த அறையில் நமக்கு உதவும்படியா மதிப்புள்ள துப்பு ஏதாவது இருக்குமா?''

அவசர அவசரமாய் மூவரும் தேடினர். கனப்புக்குள் எரிந்துப் போய்க் கிடந்த சில கரிய காகிதக் குப்பைகள், தான் கிளம்பிப் பறந்துப் போவதற்கு முன்னால் மிக அவசரமாக திருமதி வாண்டே மேயர் ஏதோ தாள்களை எரித்துக் கொண்டிருந்திருக்கிறார் என்று விளக்கின. முக்கியமாய் எதுவும்

இங்கு விட்டு வைக்கப்படாத நிலையில், இவர்கள் அடுத்த அறைகளையும் துளாவினர்.

''அதோ... அங்கே...'' என்றாள் டூபென்ஸ் திடீரென்று. சுவரில், பழைய காலத்திய மாடல் போலிருந்த ஒரு சிறு பாதுகாப்புப் பெட்டியைக் காட்டி இப்படிச் சொன்னாள். ''அது நகைக்காகனு நினைக்கிறேன். ஆனா, அதுல முக்கியமான ஏதாவதும் கூட பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கலாம்.''

சாவி அதிலேயே தொங்கிக் கொண்டிருக்க, அதைத் திறக்க தாவியோடி விரைந்த ஜூலியஸ், திறந்து, தேடினார். இந்த வேலையில் அவர் கொஞ்ச நேரத்தைச் செலவழித்தார்.

''என்னாச்சு...?'' என்று பொமையிழந்தவளாய்ச் சொன்னாள் டூபென்ஸ்.

ஜூலியஸ் பதில் சொல்வதற்கு முன்னால் சிறு தயக்கம் விளைந்திருந்தது... பிறகு அதனுள்ளிருந்து தலையை வெளியே எடுத்து, அதை மூடி விட்டார். ''ஒண்ணுமில்லே'' என்றார் அவர்.

அவசரமாய் வரவழைக்கப்பட்ட ஓர் இளைய டாக்டர், ஐந்தாவது நிமிடத்தில் அங்கிருந்தார். சர் ஜேம்ஸை அடையாளம் கண்டு கொண்ட அவர், அவரிடம் மிகுந்த மட்டு மரியாதையோடு பழகினார்.

''மாரடைப்பு... இல்லேனா, அதிகபட்சமா உட்கொள்ளப்பட்ட தூக்க மாத்திரை'' - சொல்லி விட்டு மூக்கை உறிஞ்சி உறிஞ்சி மோப்பம் பிடித்தவர், ''காத்துல க்ளோரல் எனும் தூக்க மருந்தின் வாடையிருப்பது போல தெரியுதே'' என்றார்.

இவள் எழுந்து தட்டி விட்டுச் சிதறச் செய்த கோப்பை டூபென்ஸூக்கு ஞாபகம் வந்தது. ஒரு புது சிந்தனை இவளைக் கை கழுவும் மேடை வரை விரட்டி விட்டது. அங்கு, இவளுக்குத் தர, திருமதி வாண்டே மேயர் கோப்பைக்குள் சில சொட்டுக்கள் மட்டும் ஊற்றிய புது பாட்டில் இருந்தது.

அந்த பாட்டில் முக்கால் பாகம் வரை நிறைந்திருந்தது, அப்போது.

இப்போது *அது காலியாகியிருந்தது.*

அத்தியாயம் -14

ஓர் ஆலோசனை

சர் ஜேம்ஸின் திறமையால் சுலபமாயும், எளிமையாயும் நிலைமைக் கையாளப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் முடிந்துவிட, இதனால், நடந்துள்ள விபரீதத்தின் தீவிரம், டூபென்ஸைப் பயமுறுத்தியோ அல்லது அதிர்ச்சி தந்தோ குலைக்கவில்லை. சர் ஜேம்ஸ் இருந்த காரணத்தால், திருமதி வாண்டே மேயர் அவரையும் அறியாது விபத்தாய் தான் மிக அதிகமாய் க்ளோரலை உட்கொண்டிருப்பார் என்ற கோட்பாடு டாக்டரால் உடனடியாய் அங்கீகரிக்கப்பட்டது. மரண விசாரணை அது இது என்று இழுத்தடிக்கப் படுமா? என்று வக்கீல் கேட்டார். அப்படி ஏதாவது இருந்தால் சர் ஜேம்ஸுக்கு அவரே தெரியப்படுத்துவதாய் ஒப்புக் கொண்டார். வாண்டே - மேயர் வெளிநாடு எங்கோ போக கிளம்பிக் கொண்டிருந்ததாயும், அதற்காக அவருடைய வேலையாட்களைக் கூட அவர் வெளியேற்றி விட்டதாயும், சர் ஜேம்ஸும் அவருடனிருக்கும் இளையவர்களும் திருமதியைப் பார்க்க இங்கு வந்திருந்ததாகவும், ஜேம்ஸ் விளக்கினார். அப்போது எதிர்பாராத விதமாக வாண்டே மேயர் மயங்கி சுருண்டு விழுந்து விட்டதாயும், அவரை அப்படியே தனியே விட்டுவிட்டு வெளியேறிப் போக மனமில்லாத காரணத்தால் விடியும் வரை ஃப்ளாட்டிலேயே இருந்துவிட மூவரும் முடிவெடுத்துக் கொண்டதாயும், மேலும் குறிப்பிட்டார் வக்கீல். அப்போதே டாக்டரை அழைத்திருக்கலாமே என்ற சமயோஜிதமான கேள்விக்கு, ப்ராண்டி தந்ததும் அவர் மீண்டு விட்டதைச் சுட்டிக் காட்டினார்கள் மூவரும். அவருடைய உறவுகள் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா என்ற கேள்விக்கு மூவரும் இல்லை என்றனர். இப்போது, திருமதி வாண்டே மேயரின் அந்தரங்க வழக்குரைஞரைத் தொடர்புக் கொள்வது உசிதமான ஒன்று என ஆலோசித்தார் வக்கீல்.

சிறிது நேரத்துக்குள்ளாகவே மரணமடைந்திருந்த வாண்டே மேயருக்கு செய்ய வேண்டியவற்றுக்காக மருத்துவமனைச் சிப்பந்திகள் வந்திறங்கி விட,

ஏனையவர்கள், அபசகுனமாய் அமைந்துவிட்ட அவ்வீட்டினை விட்டு வெளியேறினர்.

''இனி அடுத்து என்ன?'' என்று மனோதிடம் குன்றிப் போய் கேட்டார் ஜூலியஸ். ''வெளியே போய் முதல்ல சாப்பிடலாம்னு நினைக்கிறேன்.''

சிந்தனையோடு வக்கீல் அவரது முகவாயைத் தாளமிட்டுக் கொண்டிருந்தார். ''அது பிறகு'' என்றார். ''டாக்டர் ஹால் சில விஷயங்களை நம்மிடம் சொல்ல - கொஞ்சம் வாய்ப்புகள் இன்னும் சிதையாமல் காத்திருக்கு.''

''ஒஹ்! நான் அவரை மறந்தே போயிட்டேன்.''

''நம் முன்னிருக்கும் வாய்ப்பு சொற்பமானது தான்... ஆனா ஒதுக்கக்கூடாத ஒன்று. அவர், மெட்ரோ- போல் பகுதியில் தங்கியிருக்கார்னு உங்ககிட்டே சொன்னேனில்லையா. அவரை... எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் பிடிக்கணும்னு நினைக்கிறேன். ஒரு குளியல்... சின்ன சிற்றுண்டி... இவற்றுக்குப்பிறகு, உடனடியானு வெச்சுக்கலாமா?''

டூபென்ஸூம் ஜூலியஸூம் நேராய் ரிட்ஸிலுள்ள இருவருடைய பகுதிக்கு சென்று, திரும்பும் போது சர் ஜேம்ஸையும் அழைத்துக் கொண்டு கிளம்புவது என்று முடிவானது. இது சிறப்பாய் கடைபிடிக்கப்பட்டு, பதினோரு மணியையொட்டிய நேரத்தில் மூவரும் மெட்ரோ-போல் வளாகத்தில் இருந்தனர். டாக்டர் ஹால் என்ற இவர்களது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து ஒரு காவல்காரப்பையன் அப்படி ஒரு டாக்டர் உள்ளே இருக்கிறாரா என தேடிக் கொண்டு ஓடினான். ஓரிரு நிமிடங்களிலேயே அந்த இளைய, சின்ன டாக்டர், இவர்களை நோக்கி விரைவாய் வந்துக் கொண்டிருந்தார்.

''எங்களுக்கு ஓரிரு நிமிடங்களை ஒதுக்கித் தரமுடியுமா, டாக்டர் ஹால்?'' என்று நட்பு மிளிரக் கேட்டார், வக்கீல். ''உங்களை நான் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இது மிஸ் ப்ரூடன்ஸ். மிஸ்டர் ஜூலியஸ் - இவரை முன்னமேயே உங்களுக்குத் தெரியும்னு நினைக்கறேன்.''

''ஆஹ், ஆமாம், என் இளைய மரக்கிளை நாயகன்! சுளுக்கு சரியாப் போயிடுச்சா, ஆங்?''

''உங்களுடைய திறமையான மருத்துவத்தால அது குணமாயிடுச்சு, டாக்டர்.''

''அப்போ - இதயப் பிரச்சினை?! ஹா! ஹா!''

''இன்னும் தேடிக்கிட்டிருக்கேன்'' என்றார் இவர் சுருக்கமாய்.

சர் ஜேம்ஸ், ''உங்க கூட தனிமையில் ரெண்டொரு வார்த்தை பேச முடியுமா, டாக்டர்?'' எனக் கேட்டார்.

''நிச்சயமா. அங்கே ஒரு ரூம் இருக்குனு நினைக்கிறேன். யாரும் அதிகம் நுழைய மாட்டாங்க. நாம அதிகம் தொந்தரவு இல்லாம இருக்க முடியும்.''

டாக்டர் வழி காட்டி செல்ல, ஏனையவர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். உட்கார்ந்துக் கொண்டனர். டாக்டர், வக்கீலை, விசாரிக்கும் போக்கில் பார்த்தார்.

''டாக்டர் ஹால்.... ஒரு முக்கியமான ஆவணத்தைக் கையகப்படுத்தும் காரணத்துக்காக குறிப்பிட்ட ஓர் இளம்பெண்ணை நான் மிகவும் ஆர்வமா தேடிக்கிட்டிருக்கேன். உங்களுடைய போர்ன் - மவுத் ஸ்தாபனத்துல அந்தப் பொண்ணு ஏதாவது ஒரு காலகட்டத்துல இருந்திருக்கணும் என்று நம்பும்படியான காரணங்கள், என்கிட்டே திருப்திகரமா இருக்கு. இந்த விஷயம் சம்பந்தமா உங்களைக் கேள்விகள் கேட்பதினால், மருத்துவக் கோட்பாடுகள் குறித்த உங்க சட்டதிட்டங்களுக்குள் நான் அத்துமீறி நுழையவில்லை என்றே கருதுகிறேன், டாக்டர்.''

''இது, அவங்க நன்னடத்தைக் குறித்த சாட்சியத்துக்குத்தானே.,..?''

சர் ஜேம்ஸ் இந்தக் கேள்விக்கு சில கணங்கள் தயங்கினார். பிறகு, ''ஆமாம்'' என்றார்.

''அப்படின்னா... என் சக்திக்குட்பட்ட எந்தத் தகவலையும் தர எனக்கு சம்மதம். அந்த இளம்பெண்ணின் பெயர் என்ன? திரு ஜூலியஸ் கூட என்கிட்டே கேட்டார். அது....''

''அந்தப் பெயர்'' என்று வெட்டு ஒன்று துண்டு ரெண்டாய் ஆரம்பித்த ஜேம்ஸ். ''துளி கூடத் தேவையற்ற ஒன்று'' என்றார். ''அது நிச்சயமா ஒரு புனைபெயர்ல தான் உங்ககிட்டே அனுப்பப்பட்டிருக்கனும். ஆனா, இப்போ முதல்ல, உங்களுக்கு, திருமதி வாண்டேமேயர் என்பவரோடு பழக்கமிருந்ததா என்று நான் தெரிஞ்சுக்க விரும்பறேன்.''

''திருமதி வாண்டே மேயர், 20, தெற்குக் குடியிருப்பு? ஆஹ்.. எனக்கு அவங்களை சன்னமாத் தெரியும்.''

''உங்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதே தெரியாதா?''

''என்ன சொல்றீங்க?''

''திருமதி வாண்டே மேயர் இறந்துட்டாங்கனு, உங்களுக்குத் தெரியாதா?''

''ஏய், ஏய், அப்படியெல்லாம் ஒண்ணுமே எனக்குத் தெரியாதே! எப்போ இது நடந்தது?''

''நேற்று இரவு, அதிகமான க்ளோரல் தூக்க மருந்தினை அவங்க உள்ளுக்கு எடுத்திருக்காங்க.''

''வேணுமின்னேவா?''

''விபத்துனு நம்பறாங்க... நானே முன் வந்து அது குறித்து கருத்து வழங்க விரும்பலே. எப்படியோ.... இன்னிக்குக் காலையில் மரணமடைந்த அவங்களைக் கண்டெடுத்திருக்காங்க.''

''மிக வருத்தமான சேதி. தனிப்பட்டு ஜொலித்த பிரத்யேக அழகி. அவங்க சம்பந்தமா இத்தனை விவரங்களை நீங்க தெரிஞ்சு வெச்சிருப்பதாலே.... அவங்க உங்களுடைய நெருக்கம்னு நினைக்கிறேன்.''

''அவங்க சம்பந்தப்பட்ட இத்தனை சேதிகளை நான் தெரிஞ்சு வெச்சிருக்கேன் - ஏன்னா -ம் ..! நான் தான் அவங்க மரணித்துக் கிடந்ததைப் பார்த்தது.''

''அப்படியா! என்றார் டாக்டர், துணுக்கற்று.

''ஆமாம்!'' என்ற வக்கீல் சிந்தனையாய் அவருடைய முகவாயை மெதுவாய்த் தட்டிக் கொண்டார்.

''இது ஒரு சோக சேதி தான். ஆனா, மன்னிக்கணும்... இதுக்கும் நம்ம விசாரணைக்கும் என்ன சம்பந்தம்னு எனக்கு விளங்கலே.''

''இந்த வகையில் ஒரு சம்பந்தமிருக்கு : திருமதி வாண்டே-மேயர், அவங்களுடைய இளைய உறவுக்காரப் பொண்ணு ஒருத்தியை உங்க மருத்துவமனை ஸ்தாபனத்தின் பாதுகாப்புல கொண்டு வந்து ஒப்படைத்தது, நிஜம் தானே?''

ஜூலியஸ் ஆர்வமாய் முன்னுக்கு வளைந்து வந்திருந்தார்.

''அப்படித்தான்'' என்றார் டாக்டர் சாந்தமாய்.

''என்ன பெயர்ல?''

''ஜானேட் வாண்டே மேயர். அவங்க கூடப் பிறந்தவருடைய மகள்னு அறிமுகப்படுத்தப்பட்டேன்.''

''அவ எப்போ உங்ககிட்டே வந்தா?''

''என் ஞாபகத்துக்கு உட்பட்டு பார்த்தா - ஜூன் அல்லது ஜூலை, 1915-ல்.''

''அவ ஒரு மூளை பிசகின கேஸா?''

''அவ முழுக்க முழுக்க சுய நினைவுல புத்தி சுவாதீனமா இருந்தா - இதைத் தானே குறிப்பாக தெரிஞ்சுக்க விரும்பறீங்க! திருமதி வாண்டே மேயர் சொன்னதிலிருந்து, இந்தப் பொண்ணு, அவங்க கூட, *ஹாஸிடானியா* கப்பல்ல, அந்த துரதிர்ஷ்ட நீர்மூழ்கிக் கப்பல் கண்ணி வெடியில் அடிப்பட்டு மூழ்கும் போது இருந்திருக்கு. அதன் விளைவா மிகக் கடுமையான மன அதிர்ச்சியை அனுபவிச்சிருக்கு.''

''நாம சரியான பாதையில் இறங்கியிருக்கோம்னு நினைக்கிறேன்.'' - சொன்ன சர் ஜேம்ஸ், சுற்றியிருந்தவர்களைப் பார்த்துக் கொண்டார்.

''நான் தான் மடையனா இருந்திருக்கேன்'' - திருப்பிப் பேசினார் ஜூலியஸ்!

இருந்த அனைவரையும் எதுவும் விளங்காத ஆர்வத்தோடு பார்த்தார் டாக்டர். ''அவங்ககிட்டே ஏதோ ஆவணம் சம்பந்தமா பேசணும்னு சொன்னீங்க'' என்ற டாக்டர், சூசகமாய் கேட்டார் : ''ஒரு வேளை அது குறித்து அவங்களால எந்தத் தகவலும் தர முடியலே' னா?''

''என்ன? இப்போ தானே அவங்க முழு புத்தி சுவாதீனமா இருக்காங்கனு நீங்க சொன்னீங்க.''

''அப்படித்தான் இருக்காங்க. இருந்தாலும், அவங்க கிட்டேயிருந்து, மே 7, 1915க்கு முன்னாடி நடந்த நிகழ்வுகள் குறித்து நீங்க ஏதாவது சேதிகளைப் பிடுங்க நினைச்சீங்கன்னா... அவை குறித்து அவங்களால் உங்களுக்கு எந்தத் தகவலும் தர முடியாது.''

''ஆனா, ஏன் ஸார்? என்ன விஷயம்னு போட்டு உடையுங்கப்பா...?''

அந்த சின்ன டாக்டர், அவருடைய தயைமிகும் விழிகளை அதிர்ந்த அமெரிக்கன் பக்கமாய்த் திருப்பினார். ''ஏன்னா, ஜானேட் வாண்டே-மேயர், நினைவுகளை இழந்து விட்ட தீவிர ஞாபக மறதி வியாதியாலே அவதிப்பட்றாங்க...''

''என்ன?''

''அப்படியே தான். எங்க கவனத்தைக் கவரும் ஒரு கேஸ். ஆமாம்... நாங்க *ரொம்பவும்* அக்கறை பதிக்கும் கேஸ். நீங்க நினைக்கிற மாதிரி இது அப்படி ஒண்ணும் அபூர்வ நோய் கிடையாது. இதுக்கு ஜோடியா பல பிரபல கேஸ்கள் இருக்கு. ஆனா, இது, நான் என்னுடைய தனிப்பட்ட முறையில பரிசோதித்து கவனித்துச் சிகிச்சை தந்த முதல் கேஸ்... இது, என் முழு கவனத்தையும் கொள்ளை கொண்ட ஒரு விந்தையான கேஸ்னே சொல்வேன்'' - இரை கிடைத்த பருந்தின் ஒருவித சந்தோஷம், இந்த சின்ன டாக்டரின் திருப்தியில் தெரிந்தது.

''அப்போ அவங்களுக்கு எதுவுமே ஞாபகத்திலே இல்லையா?'' என்று கேட்டார் சர் ஜேம்ஸ்.

''மே 7, 1915க்கு முன்னால நடந்த எதுவுமே கிடையாது. இந்தத் தேதிக்கு அப்புறம், அவங்களுடைய சுவாதீனம்... உங்களுடைய என்னுடைய மூளையின் தரத்துல இருக்கு.''

''அப்போ... இந்த நினைமையில் அவங்க ஞாபகத்துக்கு வரும் முதல் விஷயம்?''

''உயிர் தப்பிச்சவங்களுடன் வந்து தரை இறங்கின விஷயம். இதுக்கு முன்னாடி நடந்த அத்தனையும் - சூன்யம். அவங்களுக்கு அவங்களோட பேரே கூடத் தெரியலே... எங்கேயிருந்து கப்பல்ல வந்தோம்னு தெரியலே... எந்த இடத்தைச் சார்ந்தவங்கன்னு தெரியலே... ஒஹ்... அவங்களால அவங்க தாய்மொழியைக் கூட உடனடியா பேச வரலே.''

''ஆனா, இவையெல்லாம், சர்வ நிச்சயமா வழக்கத்துக்கு மாறுபட்ட நடவடிக்கைகளாத் தெரியலே?''

''கிடையாது, அருமை தோழரே. நடந்துள்ள சூழ்நிலையில - இவை, நிகழக்கூடிய ஒரு கொடூரம் தான். நரம்பு மண்டலம் முழுவதையும் உலுக்கிப் போட்டுள்ள மாபெரும் அதிர்வு. ஞாபக சக்தியை இழப்பது... நரம்புத் தளர்ச்சியோடு பின்னிய ஒன்று. இதுக்கு நான் ஒரு நிபுணரைக் கூட ஆலோசித்தேன். பாரீஸ்ல இருக்கார். பிரமாதமான ஆளு. இப்படிப்பட்ட நோய்களில் ஆய்ந்து கரை கண்டவர். ஆனா, ரகசியமா வைக்க வேண்டிய இந்த விஷயத்துக்கு தேவையற்ற விளம்பரம் கிடைப்பதை திருமதி வாண்டே மேயர் ஏற்கலே.''

''அவங்க அப்படித்தான் நினைச்சிருக்கணும்னு எனக்குத் தெரியும்'' என்றார் சர்ஜேம்ஸ், கடுமையாய்.

''எனக்கும் அவங்களுடைய பார்வையில் உடன்பாடு இருந்தது. இது போன்ற கேஸ்களுக்கு சமூகத்துல ஒரு வகையான கெட்ட பெயர் *இருக்கத்தான்* செய்யுது. அந்தப் பொண்ணு வேற ரொம்ப சின்னவ - பத்தொன்பதுனு நினைக்கிறேன். அவளுடைய தனிப்பட்ட பிரச்சினை சமூகத்தால் பலவாறாக பேசப்படுவதென்பது ஒரு பரிதாபம் தான். அவளுடைய எதிர்காலத்தையே அல்லவா இது பாதிக்கும். தவிர, இந்த மாதிரியான நோய்கள்ல நிபுணத்துவம் வாய்ந்த ஸ்பெஷல் சிகிச்சையெல்லாம் ஒண்ணும் கிடையாது. ஒரே மருந்து - *காத்திருத்தல் தான்.*''

''காத்திருத்தல்?''

''ஆமாம். உடனேயோ இல்லை கொஞ்சம் காலந்தாழ்த்தியோ இல்லே ரொம்பக் காலந்தாழ்த்தியோ நினைவு திரும்பும். அப்படி எதுவும் நடந்தா, இந்த இடைப்பட்ட காலங்களில நடந்திருக்கும் அத்தனையையும் அந்தப் பொண்ணு மறந்துட்டு, ஒரு புது வாழ்க்கையை, அவவிட்ட இடத்திலிருந்து, அதாவது *லூயிடானியா* கப்பல் மூழ்கிய காட்சியிருக்கு இல்லையா... அங்கிருந்து துவங்கும்...!''

''இது எப்போ நடக்கும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்க?''

டாக்டர் தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''யாருக்குத் தெரியும்? அது பற்றி என்னால எதுவும் சொல்ல முடியாது. சில சமயங்களில் சும்மா ஓரிரு

மாதங்கள்.... சில கேஸ்கள்ல, கற்பனைக்கு அப்பாற்பட்ட இருபது வருடங்கள்! சில சமயங்கள்ல, இன்னொரு படு மோசமான அதிர்ச்சி, நினைவு திரும்பும் தந்திரத்தை நிகழ்த்திச் சாதிக்கும்! ஓர் அதிர்ச்சி, முன்னோர் அதிர்ச்சி எடுத்துச் சென்றதைத் திருப்பிக் கொடுக்கும்....!''

''இன்னோர் அதிர்ச்சி, ம்? அப்படியா?'' என்று இப்போது சொன்னார் ஜூலியஸ், சட்டென்று ஊறிய சிறு சிந்தனையோடு.

''அதே தான். கொலராடோவில் ஒரு விசித்திரமான கேஸ்'' - டாக்டரின் குரல், உற்சாகம் கொண்டு தணிந்த குரலில் மளமளவெனத் துள்ள ஆரம்பித்தது.

அவற்றையெல்லாம் ஜூலியஸ் கவனிப்பதாய்த் தோன்றவில்லை. தன்னுடைய சுய சிந்தனைகளுக்குள் வீழ்ந்து விட்ட அவர் அதனுள் அப்படியே மூழ்கிக் கொண்டிருந்தார். இறுதியாய் தனது சிந்தனைகளில் முடிவு கண்டவராய் வெகுண்டு நிகழ்காலத்திற்குள் வந்த அந்த அமெரிக்கன், குவிந்த இரு கைகளையும் ஓர் இடி போல மேஜையில் இறக்கினார் பாருங்கள்... எல்லோரும், டாக்டர் உட்பட, பதறியடித்துக் கொண்டு துள்ளியெழுந்தனர்.

''நான் பிடிச்சுட்டேன்! டாக்டர்... நான் இப்போ கோடிக்காட்டப் போகிற திட்டத்துக்கு உங்களுடைய மேலான மருத்துவ ஆலோசனையை வேண்டு கிறேன். நீர்மூழ்கி... மூழ்கும் அந்தக் கப்பல்... எல்லோரையும் கொத்தாகத் தள்ளிக் கொண்டு படகுகள் பக்கமாக ஓடும் அவசரம்... இன்னும் இப்படிப் பலப்பல... இதெல்லாம் சேர்ந்து நமக்கு உதவாதா? ஜானே ஃபின்னுடைய அடி மன ஆழத்துக்கு இதெல்லாம் ஒண்ணு சேர்ந்து ஒரு புது பேரிடியைத் தராதா? தோற்றுப் போயிருக்கும், அவர் நினைவுகளைப் பழைபடி சரியான பாதைக்கு இதெல்லாம் திருப்பி விடாதா?''

''ரொம்ப ருசிகரமான ஊகம், மிஸ்டர் ஜூலியஸ். என்னுடைய தனிப்பட்ட கருத்து - இது வெற்றி பெறும். ஆனா, நீங்க வரிசையா அடுக்கிச் சொன்ன எந்த ஒரு சூழ்நிலையும் மறுபடியும் நேர வாய்ப்பே இல்லை என்பது தான்... இதுல துரதிர்ஷ்டம்.''

''இயற்கையா, ஒரு வேளை, முடியவே முடியாம போய் விடலாம், டாக்டர். நான் பேசுவது கலை நுணுக்கங்களோடு, *செயற்கையா.*''

''செயற்கையாவா?''

''ஆமாம், ஏன்? இதுல என்ன கஷ்டம் இருந்துடப் போகுது? ஒரு கப்பலை வாடகைக்கு எடுத்து....''

''ஒரு கப்பலை!'' சற்றே மயங்கிப் போய் முணுமுணுத்தார் டாக்டர்.

ஜூலியஸ் விடவில்லை! ''நீர் மூழ்கிக் கப்பலா வாங்கணும் - அது தான் கஷ்டமே. இந்த அரசாங்கங்கள், அண்டை நாட்டுப் போர் எப்ப வேணும்னாலும் மூளும் என்பதாலே, நீர்மூழ்கிப் போன்ற விஷயங்களில் ரகசியமாவே இருந்துடறாங்க. அதனால வாடகை, விற்பனை போன்றவையெல்லாம் நீர் மூழ்கிக் கப்பல் கிட்டே முடியாது. இருந்தாலும், பார்ப்போம். அப்புறம் பிரயாணிகள் கொஞ்சம் பேரை வாங்க வேண்டியிருக்கும். இதுக்காகப் போய் உண்மையிலேயே கண்ணி வெடி வெடிக்க வேண்டிய தேவையிருக்காது என்பது என் கணிப்பு. காசுக்கு வந்த எல்லா 'பிராயணிகளும்' இப்படியும் அப்படியுமாகக் கத்திக் கதறிக்கிட்டு 'கப்பல் மூழ்குதே....மூழ்குதே....'னு அழுதுக் கூப்பாடு போடணும். மனசெல்லாம் வெள்ளையான ஜானே போன்ற குழந்தையுள்ளதுக்கு - இவை போதும்.. அவளுக்கும் படகுல இறங்கத் தேவையான பாதுகாப்பு பெல்ட்' டைப் போட்டு, அவசர அவசரமா படகுக்குள்ளே இறக்கும் போது... நல்லா நடிக்கப் பழக்கப்பட்ட நடிகர்களின் உண்மையான கதறல், அவளை, எந்த நேரத்துல மே 7, 1915 அன்னிக்கு இவ வாழ்க்கையைத் தொலைச்சாளோ, அதே இடத்துக்கேக் கொண்டு போய் நிறுத்திடாது?''

டாக்டர் ஹால், ஜூலியஸைப் பார்த்தார். எதையெல்லாம் இப்போது அவர் சொல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டு ஆனால் பேச இயலாமல் வாயடைத்துப் போயிருந்தாரோ அவையெல்லாம் அந்தப் பார்வையிலேயே விசாலமாய் பிரதிபலித்தன.

அதற்கு பதிலாய், ''அப்படி கிடையாது'' என்று பதில் தந்த ஜூலியஸ், ''எனக்கு கிறுக்கெல்லாம் ஒண்ணும் பிடிச்சுடலே'' என்றார்! ''நான் சொன்னவை... படு துல்லியமா இயலும். இதெல்லாம், ஒவ்வொரு நாளும், படங்களுக்காக எங்க அமெரிக்காவில் பண்ணப்படுது.... மறு நாளே அழிக்கப்படுது! ரயில்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு சுக்கு நூறா சிதறுவதை நீங்க படங்கள்ல பார்க்கலே? ஒரு ரயிலை வாங்குவதற்கும் ஒரு கப்பலை வாங்குவதற்கும் என்ன பெரிய வித்தியாசம் இருந்துடப் போகுது? நாம நேரடியா களத்துல இறங்கிடலாம்.''

ஜூலியஸின் குரலில் இருந்த தீர்மானத்தைப் பார்த்தார் டாக்டர். எனவே கேட்டார்: ''ஆனால் செலவு, மை டியர் ஸார்? அந்த செலவு! அது இங்கிலாந்து விலை பிடிக்கும்...!''

''காசு எனக்கு என்றைக்கும் கவலை தந்ததில்லை?'' என மிகச் சாதாரணமாய் விளக்கினார் அவர்.

டாக்டர் ஹால் உதவி வருமா என்ற பரிதாபப் பார்வையை சர் ஜேம்ஸ் பக்கம் திரும்பி வீச, பதிலுக்கு அவர் புன்னகைத்தார். ''மிஸ்டர் ஜூலியஸ் கொழுத்த பணக்காரர் - கொழுத்த, கொழுத்த, *கொழுத்த பணக்காரர்.*''

டாக்டரின் நோட்டம், மீண்டும் ஜூலியஸ் நோக்கி, புதிதாய் பூசிக்கொள்ளப்பட்ட தரம் மற்றும் கூர்மை கொண்டு திரும்பியது. ம்ம்.... கிறுக்கன் போல் மரத்தில் ஏறி கீழே விழும் மிகவும் சாதாரணமான ஆள் கிடையாது இவர்! உண்மையிலேயே ஒரு செல்வச் சீமானாய் திகழ்பவரைப் பார்க்கத் தேவையான மட்டு மரியாதையை டாக்டரின் கண்கள் உடுத்திக் கொண்டன.

''குறிப்பிடும்படியான உயர்ந்த திட்டமிது. நிச்சயமாய், இது உயர்ந்த திட்டம் தான்'' என முணுமுணுத்தார் அவர். ''படங்கள் - ம்... சினிமா படங்கள். அத்தனை செலவழித்து! கேட்கவே ருசிகரமாய் உள்ளது. இங்கே நாங்க காலத்தில் ரொம்பவே பின்தங்கியிருக்கோமோ என்று தோணுது! அமெரிக்க மூளை, ம்! உங்களுடைய இந்த குறிப்பிட்டு பாராட்டும்படியான திட்டத்தை நீங்க நிஜமாகவே நடத்திக் காட்டத்தான் போறீங்களா?''

''உங்ககிட்டேயிருக்கிற கடைசி டாலர் வரைக்கும் - பந்தயம்! சவாலுக்குத் தயாரா....?''

வியந்துப் பின் வாங்கிய டாக்டர் ஜூலியஸை நம்பி விட்டார். ''ஆனால், நிச்சயம் குணமடையும் எனும் ஓர் உத்தரவாதத்தை என்னால தர முடியாது'' - குறிப்பிட்டுக் காட்டினார். ''இதை நான் வெளிப்படையா சொல்லி விட வேண்டியிருக்கு.''

''புரியுது... அதனால என்ன.. பரவாயில்லே'' என்றார் ஜூலியஸ். ''நீங்க ஜானேயை அவிழ்த்து விடுங்க.... மீதியை என்கிட்டே விட்டுடுங்க.''

''ஜானே?''

''இல்லேனா, மிஸ் ஜானேட் வாண்டேமேயர்.. ஓ கே? ரொம்ப தூரத்திலிருந்தாலும் பரவாயில்லே... உங்க இடத்துக்கு உடனடியா புறப்பட்டுப் போய் அவளைக் கூட்டிக்கிட்டு வரலாமா; இல்லை நான் மட்டும் போய் அவளை என் கார்ல தூக்கிப் போட்டுக்கிட்டு வரட்டுமா?''

டாக்டர் முழித்தார். ''மன்னிக்கணும், திரு ஜூலியஸ். உங்களுக்கு விளங்கியிருக்கும்'னு நெனச்சேன்.''

''என்ன விளங்கியிருக்கணும்?''

''மிஸ் ஜானேட் இப்போ என் கட்டுப்பாட்டுல *இல்லவே இல்லை* என்பது.....''

அத்தியாயம் - 15

டுபென்ஸ் பெற்ற அழைப்பிதழ்

ஸ்பிரிங்கிலிருந்து தூக்கியடிக்கப்பட்டதைப் போல துள்ளினார் ஜூலியஸ்.

''என்னது?''

''உங்களுக்கு இது புரிஞ்சிருக்கும்னு நெனச்சேன்.''

''எப்போ அவ கிளம்பினா?''

''பார்க்கிறேன்'' - தலையை விட்டம் பார்த்து தூக்கி யோசித்தார். ''இன்னிக்கு திங்கள், இல்லையா? அது கடந்த புதன்கிழமை அன்னிக்கு நடந்திருக்கணும். இருங்க, இருங்க.. அப்படியா? ஆமாம், ஏன் இருக்கக்கூடாது? ஆங், ஆங், ஆங்! யெஸ், நீங்க மரத்துலேந்து கீழே விழுந்தீங்களே... அன்னிக்கு சாயந்திரம்.''

''அன்னிக்கு சாயந்திரமா? எப்போ? நடந்ததுக்கு முன்னாடியா பின்னாடியா?''

''பார்க்கிறேன்'' - விட்டத்தைப் பார்த்தார்! ''ஓ, ஆமாமாம். அப்புறம் தான். திருமதி வாண்டே மேயரிடமிருந்து மிக அவசரம்னு சொல்லி ஒரு சேதி வந்தது. அந்த இளம்பொண்ணும் அவளைக் கவனிச்சுக்கிட்டிருந்த நர்ஸும் அன்னிக்கு ராத்திரி ரயில்லேயே புறப்பட்டனர்.''

ஜூலியஸ் மறுபடியும் அப்படியே இருக்கையில் புதைந்துப் போனார். ''நர்ஸ் எடித் - ஒரு நோயாளி கூட கிளம்பிட்டா - ஓ, இப்ப ஞாபகம் வருது'' என்று முணுமுணுத்தார். ''ஓ, காட்... அவ்ளோ அருகிலா இருந்திருக்கேன்!''

டாக்டர் ஹால் பயந்து விட்டது போல இருந்தது. ''எனக்குப் புரியலே, அந்த இளம்பெண் அவங்க அத்தை கூட இல்லையா?''

டுபென்ஸ் மறுத்துத் தலையசைத்தாள். அவள் பேச வாயெடுத்திருப்பாள்... ஆனால் எச்சரித்து வந்த வக்கீலின் பார்வை, உதடுகளிலேயே வார்த்தைகளை உறைய வைத்தது. வக்கீல் அப்போது எழுந்துக் கொண்டார்.

''உங்களுக்கு மிகவும் நான் கடமைப்பட்டிருக்கேன், டாக்டர் ஹால். நீங்க சொன்ன எல்லா தகவல்களுக்காகவும் நாங்க நன்றி தெரிவிச்சுக்கறோம். செல்வி வாண்டே மேயரின் முகவரியை நாங்க இனிமே முழுவதும் புதிதா தேட ஆரம்பிக்க வேண்டும் போல! அசதியா வருது! அவ கூட போன நர்ஸுக்கு என்ன ஆச்சு? அவ எங்கே இருப்பானு உங்களுக்குத் தெரியாது, இல்லியா?''

டாக்டர் மறுத்துத் தலையசைத்தார். ''இப்போ வரைக்கும் அவ கிட்டேயிருந்து எங்களுக்கு எவ்விதமான தகவலும் வரலே. அவ, செல்வி வாண்டே மேயருடனேயே கொஞ்ச காலம் தங்கியிருக்கணும் என்பது தான் நான் அறிந்திருந்தது. ஆனா என்ன நடந்திருக்கலாம்? நிச்சயமா அந்த நர்ஸ் பொண்ணு கடத்தப்பட்டிருக்க மாட்டா, இல்லே?''

''அதை இனிமே தான் பார்க்கணும்'' என்று ஆழ்ந்து சொன்னார் வக்கீல்.

கூடயிருந்தவர் தயங்கினார். ''போலீஸுக்குப் போய் நான் சொல்லணுமா... என்ன நினைக்கிறீங்க?''

''ம்ம்.''

இதில் டாக்டர் முழுவதுமாய் திருப்தியடையவில்லை; ஆனால் சர் ஜேம்ஸ் பீல், மேற்கொண்டு இனி எதுவும் பேசக்கூடாது என்று முடிவாகி விட்டார் என்பதை மட்டும் படித்தார். மீறி, அந்த இங்கிலாந்தின் முதல் தர வக்கீலின் வாயிலிருந்து தான் எதையாவது பிடுங்க எத்தனித்தாலும், அது வீணான வேலையாய்த் தான் முடியும் என்பதையும் புரிந்துக் கொண்டார். ஆகவே அவர்களுக்கு டாக்டர் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ள, அந்த வளாகத்தை விட்டு வந்தவர்கள் வெளியேறினர்.

''பைத்தியமாகுது'' என்று அலறலாய் குறிப்பிட்ட டூபென்ஸ், ''அவளுட னேயே ஒரிரு மணி நேரங்கள் ஜூலியஸூம் அதே ஸ்தாபனத்துல இருந்திருக்கார் என்பதை நினைக்க, நினைக்க... ஊஃப்!" என்றாள்.

''நான் ஒரு களி மண் முட்டாள்'' என்று முணுமுணுத்தார், உலுக்கப் பட்டிருந்த ஜூலியஸ்.

''உங்களுக்கு அவ தான்னு எப்படி தெரியும்?'' என்று ஆறுதல் தந்தாள் டூபென்ஸ். ''இவருக்குத் தெரிஞ்சிருக்குமா, என்ன?'' என்று உடனே ஜேம்ஸிடம் முறையிட்டாள் இவள்.

''உங்களை, வருத்தப்பட வேண்டாம்னு நான் அறிவுறுத்த விரும்பறேன்'' என்றார் அவர், கருணை பொங்க. ''திரிஞ்ச பாலைப் பார்த்துப் பார்த்து அழுவது... பிரயோஜனமற்றது. என்ன...?''

நிதர்சனமாய் ஒலித்த அவரது குரலுக்கு வலு சேர்த்து, ''முன்னேயிருக்கும் பெரிய கேள்வி - அடுத்து என்ன செய்வது?'' என்றாள், இவள்.

சர் ஜேம்ஸ் தன்னுடைய தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''ஜானேவுக்குத் துணையாய் வந்த பெண் பற்றி நீ ஒரு விளம்பரம் தரலாம். இது மட்டும் தான் இப்போதைக்கு மேற்கொள்ளவல்ல அடுத்த பணி என்று எனக்குத் தெரியுது. இதனாலும் அதிகமான முடிவுகள் வராது என்றும் மனப்பூர்வமா சொல்லிக்க விரும்பறேன். இது தவிர வேற ஒண்ணும் தென்படலே.''

''வேற ஒண்ணுமேவா தெரியலே?'' - வெற்றிடப் பார்வை பார்த்தபடி கேட்டாள் டூபென்ஸ். ''அப்போ - டாமி?''

''விட்டுடு'' என்றார் ஜேம்ஸ். ''நல்ல சேதி வரும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதுதான். ஆமாம். எதிர்ப்பார்த்துக்கிட்டே இருக்க வேண்டியது தான், டூபென்ஸ்.''

ஆனால், தற்போது குனிந்துக் கொண்டு விட்ட டூபென்ஸ் செய்கைக்குப் பின்னணியில் ஜூலியஸின் கண்களைச் சந்தித்துக் கொண்டிருந்த வக்கீலின் தலை, அர்த்தம் புலப்படாமலேயே மறுத்து அசைந்துக் கொண்டிருந்தது. ஜூலியஸ் புரிந்துக் கொண்டார். வக்கீலைப் பொறுத்தவரை - இந்த கேஸ் - நம்பிக்கையற்றுப் போய் விட்டது. அந்த இளைய அமெரிக்கனின் முகம் ஆழ்ந்து அழுதது. சர் ஜேம்ஸ், டூபென்ஸின் கரங்களைப்பிடித்துக் கொண்டார்.

''மேற்கொண்டு ஏதாவது விஷயம் வெளிச்சத்துக்கு வந்தால், தாமதியாது எனக்குத் தெரியப்படுத்திடனும். கடிதப் போக்குவரத்தை நிறுத்தவே கூடாது.''

டூபென்ஸ், அவரை, வெற்றிடப் பார்வை பார்த்தாள். ''அப்போ - நீங்க விலகிப் போறீங்களா?''

''நான் சொல்லியிருந்தேனே, உனக்கு. நினைவில்லே? ஸ்காட்லாண்டுக்கு.''

''ஆமாம். ஆனா நான் நெனச்சேன்...'' - இளையவள் சொல்லத் தயங்கினாள்.

சர் ஜேம்ஸ் அவரது தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''என்னருமை டூபென்ஸ்.... இதுக்கு மேலே நான் செய்ய ஒண்ணும் இல்லே... மன்னிக்கணும். நம்மிடமிருந்த எல்லா ஊகங்களும் இப்போ காத்துல கரைஞ்சாச்சு. இனி மேலும் செய்வதற்கு ஒண்ணுமே கிடையாது என்கிற என் வார்த்தைகளை மனசுல வெச்சுக்க. மீறி ஏதாவது பிரச்சினைகள் எழுந்தா, என்னால முடிந்த எந்த வழியிலும் உனக்கு உதவ வர நான் காத்திருக்கேன்.''

அவருடைய இவ்வார்த்தைகள் டூபென்ஸுக்கு விளக்கவொண்ணா அசாதாரண இழப்பை உணர்த்தின. ஆயினும், ''நீங்க சொல்வதும் ஒரு வகையில் சரி தான்'' என நிலைமையை உணர்ந்தாள். ''எப்படியோ.... இத்தனை தூரத்துக்கு வந்து எங்களுக்குத் தொய்வில்லாம உதவியதற்கு - நன்றிகள். குட் பை.''

காரை இயக்குவதற்காக காருக்குள் வளைந்து நுழைந்துக் கொண்டிருந்தார், ஜூலியஸ். ஜேம்ஸின் கவனமான கண்களில், தலைகுனிந்து நின்றுக் கொண்டிருந்த இளையவளைப் பார்த்த போது, கண நேர பரிதாப உணர்வு எட்டிப் பார்த்தது. ''ஆறாத கவலைக்குள்ளே அதிகமா விழுந்துடாதே, டூபென்ஸ்'' என்று மிகவும் ஒலி கம்மிய குரலில் சொன்னார். ''நினைவிருக் கட்டும். விடுமுறைனு சில நாட்கள் கிடைச்சா, அது எப்பவுமே வெறுமனே விளையாடிக் கூத்தடிக்க'னு மட்டும் வாய்ச்சுடாது. நிறைய வேலைகள் பண்ணும்படியும் அமைஞ்சுடும்.''

அவரது குரல் தொனியிலிருந்த ஏதோ ஒன்று, டூபென்ஸைச் சட்டென நிமிர்ந்து அவரைக் கூர்மையாய்ப் பார்க்க வைத்தது. அவர் புன்னகைத்தப்படி மறுத்துத் தலையசைத்தார். ''ம்ம். நான் மேற்கொண்டு எதுவும் சொல்லக் கூடாது. இப்படி அதிகமா உங்கிட்டே குறிப்பு தருவது - பெரும் தவறாயிடுது! ஒண்ணு நினைவிருக்கட்டும். உனக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் சொல்லிக்கிட்டு அலையாதே - உனக்கு ரொம்ப ரொம்பத் தெரிஞ்ச நபரிடம் கூட. புரியுதா? குட் பை. ''

அவர் திரும்பி விறுவிறுவென நடக்க ஆரம்பித்து விட்டார். அவர் முதுகையே முறைத்தபடியிருந்தாள் இவள். சர் ஜேம்ஸின் அணுகு முறைகளைப் புரிந்துக் கொள்ள ஆரம்பித்தாள். முன்னம் ஒரு முறை கூட இதே போன்ற விட்டேற்றியான முறையில் ஒரு முக்கிய குறிப்பினை தூக்கிப் போட்டார். இதுவும் ஒரு குறிப்பா - ஹின்ட்' டா? அந்தக் கடைசி சுருக்கமான வார்த்தைகளின் பின்னால் படுத்துக் கிடக்கும் பெரிய அர்த்தம் தான் என்ன? அவர், இவ்வழக்கை, முழுவதுமாக கை கழுவி விடவில்லை என்று உணர்த்தினாரா...? ரகசியமாக தொடர்ந்து அவர் வழியில் இவ்வழக்கின் மீது உழைத்துக் கொண்டிருப்பார் என்றா சொன்னார்...?

இவளுடைய சிந்தனைகளை, ''உடனே உள்ளே ஏற முடியுமா?'' என்ற ஜூலியஸின் கட்டளை தடுத்தது.

கிளம்பியதும், ''மூட்டை மூட்டையான சிந்தனைகளில் இருப்பதா தெரியுது'' என்றார் ஜூலியஸ். ''அந்தக் கிழப்பய எதையாவது சொன்னானா?''

ஷாக் அடித்தது போல ஆவேசமாய் வாயைத் திறந்த டூபென்ஸ், பிறகு அடைத்துக் கொண்டு விட்டார். சர் ஜேம்ஸின் குரல் அவள் காதுகளில் ஒலித்தது. 'உனக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் சொல்லிக்கிட்டு அலையாதே - உனக்கு ரொம்ப ரொம்பத் தெரிஞ்ச நபரிடம் கூட. புரியுதா?' உடனேயே ஒரு மின்னல் போல இவளுடைய மூளைக்குள் இன்னொரு ஞாபகம் வந்தது.

பாதுகாப்புப் பெட்டகத்துக்கு முன்னால் நின்ற ஜூலியஸ்... இவளே முன் வந்து அப்போது கேட்ட கேள்வி... அதற்கு, 'ஒண்ணுமில்லே' என்பதற்கு முன், இவரிடம் மட்டுமே வைத்துக் கொள்ள முடிவு கட்டிய எதையோ ஒன்றை இவர் பார்த்தாரா? இவர் அப்படி ஒரு ரகசிய முடிவை எடுக்கத் தெரிந்தவர் எனும் பட்சத்தில், இவளாலும் அப்படி முடியும்.

''குறிப்பிடும்படியா ஒண்ணுமில்லே'' என்று பதில் தந்தாள் இவள்.

ஓரக்கண்ணால் ஜூலியஸ் இவளைக் கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள் இவள்.

''சொல்லுங்க... பார்க்' கை ஒரு சுற்று சுற்றிட்டு வருவோமா?''

''உங்களுக்கு வேணும்னா.''

கொஞ்ச நேரம் இருவரும் மரங்களுக்கடியில் நடந்துக் கொண்டிருந்தனர். அமைதியாய். அது ஓர் அழகிய நாள். புதிதாய் அடிக்க ஆரம்பித்திருந்த தளிர்க்காற்று, டூபென்ஸுக்குள் களிப்பினை ஊற்றுவித்தது.

''சொல்லுங்க டூபென்ஸ்... என்னால ஜானே ஃபின்னைக் கண்டுபிடிக்க முடியும்னு நீங்க நம்பறீங்களா?'' - ஜூலியஸ் நம்பிக்கையற்றக் குரலில் பேசினார். அவருடைய மனோநிலை மிகவும் அந்நியப்பட்டு வெறுப்பில் தெரிந்ததால் டூபென்ஸ் திரும்பி அவரை ஆச்சரியமாய் முறைத்தாள். இதற்கு அவர் ஒப்புதலாய்த் தலையசைத்தார்.

''நீங்க நினைப்பது சரிதான். இந்தத் தேடுதலில் நான் வெம்பி வெதும்பி வீழ்ந்து விட்டதா உணர்றேன். இன்னிக்கு சர் ஜேம்ஸூக்கேக் கூட இந்த விஷயத்துல துளியும் நம்பிக்கை இல்லாமத்தான் இருந்தது. நான் அதை கவனிச்சேன். அவரை எனக்குப்பிடிக்கலே. ஏனோ ரெண்டு பேருக்கும் ஒத்து வர மாட்டேங்குது. ஆனா அவர் படு சாமர்த்தியம்''

டூபென்ஸுக்கு கொஞ்சம் லஜ்ஜையாயிற்று. ஆனால், இவரும் தன்னிடமிருந்து சில விஷயங்களை மறைத்து ரகசியம் காக்கிறார் என்ற நம்பிக்கை நினைவுக்கு வந்த போது, வாயை மூடி ஸ்திரமானாள்.

''அந்த நர்ஸ் குறித்து விளம்பரப்படுத்தச் சொல்லி அவர் ஆலோசனை தந்தார்''- இப்போது ஞாபகப்படுத்தினாள் இவள்.

''ஆமாம் - கூடவே அவரது குரலுக்கு மட்டுமே சொந்தமான பரிகாசத்தோடு! ஒண்ணும் வேண்டாம். நான் வெறுப்பின் உச்சத்துக்குப் போயிட்டேன். அமெரிக்காவுக்கே திரும்பிப் போயிடலாமானு கூட ஒரு மனசு நினைக்குது''.

''ஓ, நோ'' என்று சட்டென அலறினாள் இவள். ''நாம டாமியைக் கண்டுபிடிக்கணும்.''

''நான் சுத்தமா தாமஸ் ஃபோர்டை மறந்தே போயிட்டேன்'' என்று அனுதாபத்தோடு சொன்னார். ''அது இருக்கு. நாம அவரைக் கண்டு பிடிக்கணும். இது ரெண்டும் இருக்கட்டும். மிஸ் டூபென்ஸ்... நான் உங்க கிட்டே கேட்க வேண்டிய ஒரு விஷயமிருக்கு.''

''ம்.''

''நீங்களும் தாமஸும். அது பற்றி?''

''உங்களை எனக்குப் புரியலே'' என்றாள் டூபென்ஸ், சுய மரியாதையைக் கூட்டி. உடனே, கேள்விக்குத் தொடர்ச்சி போலல்லாது விட்டுவிட்டு சொன்னாள். : ''ஆனா, நீங்க, தவறு.''

''உங்க ரெண்டு பேருக்கும், ஒருத்தருக்கொருத்தர் மீது ஒரு கனிவான உணர்ச்சி இல்லே?''

''நிச்சயமா கிடையாது'' என்று சூடாய் சொன்னாள் டூபென்ஸ். ''டாமியும் நானும் - நண்பர்கள். மீறி எதுவும் கிடையாது.''

''ஒவ்வொரு ஜோடிக் காதலர்களும், இதே வசனத்தை ஏதாவது ஒரு கட்டத்துல சொல்லித் தானிருக்காங்க'' என்று முன் வைத்தார் அவர்.

''முட்டாள்'' - வாயிலடித்தாள் டூபென்ஸ். ''பார்க்கும் ஆண்களை யெல்லாம் படுக்கைக்கு கூப்பிடும் பெண் போலவா நான் தெரியறேன். பல்லு - வேண்டாமா?''

''அப்படி தெரியலே நீங்க - அப்படியும் கிடையாது. ஆனா, பார்க்கும் ஆண்களெல்லாம் அப்படி நினைக்கிற மாதிரியான பெண் - நீங்க!''

''ஓஹ்...!'' என்றாள் டூபென்ஸ், வீழ்த்தப்பட்டவளைப் போல். ''வஞ்சப்புகழ்ச்சியா?''

''ம்ம். இது, பாராட்டு, ஓ.கே. இப்போ, ஒரு நிதர்சனத்தை முன் வைத்துப் பேசுவோம். தாமஸ் ஃபோர்டு நமக்குக் கிடைக்கவே இல்லாம ஆயிடுதுனு வெச்சுப்போம். அவர் - அவர்-''

''ம். சொல்லுங்க. என்ன தள்ளாட்டம்? என்னால நிதர்சனங்களைச் சந்திக்க முடியும். ஒரு வேளை அவர் - *செத்திருந்தால்...!* அப்படித்தானே?''

''எடுத்த முயற்சிகளெல்லாம் அப்படியே வீணாகிப் போயிடுது. அப்போ நீங்க என்ன செய்வீங்க?''

''எனக்குத் தெரியாது'' என்றாள் டூபென்ஸ், பரிகசித்து.

''பரிதாபமான சின்ன இளம்பெண்ணான நீங்க... இந்த ஜன சமுத்திரத்துல தனித்து விடப்படுவீங்க.''

''என்னை தனிமை ஒண்ணும் பண்ண முடியாது'' என்று மறுபடியும் வார்த்தையாலேயே வாயிலடித்தாள், எவ்விதமான கருணையையும் கழிவிரக்கத்தையும் என்றுமே அண்ட விட்டுப்பழகாத டூபென்ஸ்.

''கலியாணம் பண்ணிக்கலாம், இல்லே?'' என்று விசாரிக்கப் பார்த்தார் ஜூலியஸ். ''அது பற்றி ஏதாவது சிந்தனையிருக்கா?''

''எனக்கும் கலியாணம் பண்ணிக்க ஆசையிருக்கு... யெஸ்'' என்றாள் டூபென்ஸ். ''அதாவது எப்போனா-'' கண நேர தாமதம் விளைவதையும் அதனால் ஜூலியஸிடம் எதிர்பார்ப்புக் கூடுவதையும் கணக்கில் கொண்டபடி, தனது துணிகரமான துப்பாக்கி வார்த்தைகளைச் சுட்டாள் : ''என் வாழ்க்கை முழுக்கப் போதுமான அளவு திருப்தி தரவல்ல பணக்காரனை... கொடை பணக்காரனை... கொழுத்த பணக்காரனை நான் கண்டுபிடிக்கும் போது! வெளிப்படையா இருப்பதுல தப்பு கிடையாது, இல்லே? பணத்தை முக்கியப்படுத்தி கலியாணம் பேசும் என்னை நீங்க நிச்சயமா இகழ்ந்துத் துப்புவீங்கன்னு எனக்குத் தெரியும்!''

''பிஸினஸ் ரீதியா உள்ளிருந்து உந்தப்பட்டு வரும் உண்மைகளை நான் எப்பவுமே தூழிப்பவன் கிடையாது'' என்றார் ஜூலியஸ். ''சரி... கலியாணம் பற்றி உங்க மனசுல இருக்கிற எதிர்ப்பார்ப்பு - எப்படிப்பட்டது?''

''குட்டையா, நெட்டையா...?! சிகப்பா, கறுப்பா...?! ஓஹ்... இதெல்லாம் என் இலக்குக்கு முன்னாடி, தேவையா மிஸ்டர் ஜூலியஸ்?''

''ஓ, நோ. அதைத்தான் தெளிவாக்கிட்டீங்களே. உங்க மனசுல இருக்கிற - *தொகை?* அது!''

''ஓஹ்! அதையெல்லாம் நான் இன்னும் கணக்கிட்டு வைக்கலே, ஸார்!''

சட்டென கேட்டார்:

''என்னைப் பற்றி?''

''நீங்க?''

''நிச்சயமா.''

''ஓ, அது என்னால முடியவே முடியாது''

''ஏன், முடியாது?''

''சொல்றேன்லே... முடியாது.''

''மறுபடியும் - ஏன் முடியாது?''

''அவ்ளோ அசிங்கமாத் தெரியும்.''

''இதுல அசிங்கமா எனக்கு எதுவுமே தென்படலியே... உங்களுக்கு மட்டும் அப்புறம் எப்படி? நீங்க வீறாப்புப் பேசறீங்க... அவ்ளோ தான். டூபென்ஸ்... இதுவரை நாடு நாடா நான் பார்த்த எத்தனையோ பெண்கள்ல உங்களை மட்டும் தான் நான் அளவு கடந்து பிரமிக்கிறேன். என்னை முழுவதுமா பறிச்சு வெச்சிருக்கீங்க... ராட்சஸத் திருடி! நிஜமும் அன்பும் கலகலப்பும் நிறைந்த ஓர் உண்மையான தாம்பத்தியத்தை, காதல் கலந்து நான் உங்களுக்கு என்றென்றும் அள்ளி அள்ளித் தருவேன். நான் எதிர்பார்க்கும்

அந்த ஆமோதிப்பான வார்த்தையைச் சொல்லிடுங்க... நேரடியா கிளம்பி ஓர் உயர்தர நகைக்கடைக்குப் போவோம்... மோதிரம் மாற்றும் சம்பிரதாயத்துக்கு நாள் குறிப்போம்.''

''என்னால முடியாது'' - மூச்சிரைத்தாள் டூபென்ஸ்.

''டாமி' யாலேயா?''

''கிடையாது, கிடையாது, *கிடையாது.''*

''அப்போ, பிறகு?''

டூபென்ஸ் வெறுமனே தனது தலையை வெறியாய் மறுத்து அசைப்பதிலேயே இருந்தாள்.

''என்னிடம் இருக்கிற டாலர்களை விட நிறையா நீங்க வேற யாரிடமும் எதிர்ப்பார்க்க முடியாது, மிஸ்.''

''ஓ, அது கிடையாது விஷயம்'' என்று, மூச்சிரைக்க, கோபத்தின் உச்சத்தில் நின்று கத்தினாள் இவள். ''இருந்தாலும் என்னைத் தேடி நாடி வந்து அழைப்பு தந்ததற்கு ரொம்ப நன்றி. இவையெல்லாம் இருந்தாலும் கூட, என்னிடமிருந்து - *நோ, தான்.''*

''நாளை காலை வரை அவகாசம் எடுத்து, ஆழ யோசித்து முடிவு சொல்கிற அனுகூலத்தை, நீங்க எனக்காகக் கடைபிடிக்கணும்.''

''அதுல எந்தப் பிரயோஜனமும் விளைஞ்சுடாது.''

''இருந்தாலும் - இந்த முடிவோடு, நாம இதை இப்போது நிறுத்தலாம் என்பது என் விருப்பம்.''

''ரொம்ப நல்லது'' என்றாள், கொஞ்சமாய் சாதுவாகியிருந்த டூபென்ஸ்.

ரிட்ஸ் பகுதியிலிருந்த இவர்களது அறைகளுக்குத் திரும்பும் வரை இருவரும் பேசிக் கொள்ளவேயில்லை.

டூபென்ஸ் படிகளேறி இவளுடைய அறைக்குப் போனாள்.ஜூலியஸின் உக்கிரமான குணாதியத்துக்கு எதிராய் நின்று போராடியதில் மனத்தளவில் அடி வரை உலுக்கப்பட்டு வீழ்த்தப்பட்டதாய் உணர்ந்தாள் டூபென்ஸ். பெரிய நிலைக்கண்ணாடிக்கு முன்னால் உட்கார்ந்துக் கொண்டு, அதில் பிரதிபலித்த அவளுடைய பிம்பத்தையே சற்று நேரமாய் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''மு-ட்-டா-ள்'', என்று, அழகு காட்டிக் கொண்டு, நீளமாய் தன்னை வைதுக் கொண்டாள். ''முட்டாப் பொண்ணு! நீ கேட்ட எல்லாமும்! கிடைக்குமா கிடைக்குமா'னு ஏங்கி ஏங்கி நீ தவம் கிடந்த எல்லாமும்! உள்ளங்கை மேலே! ஆனா நீ பவ்யமா போய் வேணவே வேணாம்பே, கிறுக்கு போல! இது, உனக்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு சந்தர்ப்பம். ஏன் இதை நீ எடுத்துக் கொள்ளக்கூடாது? பிடுங்கிக் கொள்ளக் கூடாது? பிடுங்கிப்

பதுக்கிக் கொள்ளக்கூடாது? இதை தவிர உனக்கு வேறெப்படி அதிர்ஷ்டம் வேணும்டீ?''

இப்படி இவளுக்குள் விளைந்திட்ட கேள்விகளுக்கான பதில்களாக, சட்டம் போட்டு அருகிலிருந்த அலங்கார மேஜையில் சாய்த்து வைக்கப் பட்டிருந்த கையகல டாமியின் புகைப்படத்தில் இவளது கண்கள் விழுந்து நிலைத்தன. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள சில கணங்கள் போராடினாள். முடியவில்லை. தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் பாசாங்கு முயற்சிகள் எல்லாவற்றையும் குப்பையில் கொட்டி விட்டு, புகைப்பட சட்டத்தைத் தன் இதழோடு இதழாக பொருத்தி, ஊளையிட்டுக்கதறினாள்.

''ஓ, டாமி, டாமி,'' - அழுதாள், ''உன்னை நான் இந்த அளவுக்கு காதலிக்கிறேன் - ஆனா உன்னை நீ இனி பார்க்கவே மாட்டேன்... டாமீஈஈஈஈ.....''

இப்படியே போன ஐந்து நிமிடங்கள் கழித்து நிமிர்ந்து உட்கார்ந்து, மூக்கினை இழுத்து சிந்தி, முகமெங்கும் வியாபித்திருந்தக் கூந்தலை அள்ளிப் பின்னுக்குத் தள்ளிக் கொண்ட டூபென்ஸ், இவளுக்கே உரிய துணிகரப் பெண்ணானாள்.

''நடப்பது நடக்கட்டும்''- கண்டிப்பாய் பதிந்துக் கெண்டாள். ''நிதர்சனத்தை முகத்துக்கு முகம் வைத்து சந்திப்பதை விட வேறு எது வாழ்க்கையாக முடியும்....? நான் சாப்பிட்டேனா இல்லையா என்பதைப் பற்றிக் கூட கவலைப்படமனமில்லாத ஒரு விளையாட்டுப் பயலின் மேல் - நான் காதல் வயப்பட்டிருக்கிறேன்.'' இங்கு அவள் தயங்கினாள். பின் ''எப்படியிருந்தாலும்-...'' என்றபடி, கண்ணுக்குத் தெரியாத ஓர் எதிரி எதிரில் இருப்பது போல் பாவித்துக் கொண்டு சிந்தனையைத் தொடர்ந்தாள்: ''இப்படி அவனும் உணர்கிறானா? எனக்குத் தெரியவில்லை. என்னிக்குத் தான் அவன் முன் வந்து போட்டு உடைச்சிருக்கான்...? நான் ஒரு பாழா போகிற பெண் ஜென்மம் - உணர்ச்சிவயப்படும் முட்டாள் இனம் - இப்போ, எதற்கும் முன்னெப்போதும் பட்டிராத உணர்ச்சிக் கொந்தளிப்பில்... நான்.'' ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலுமாய், நிலைமை. அல்லாடினாள். ''என்னால விட முடியுமா? தலையணைக்கு அடியில அவன் போட்டோவை மறைத்து வைப்பதை? இரவு முழுக்க அவனைக் கனவில் காண்பதை? விழித்ததும் கனவை விட்டுடக் கூடாதுனு, தலையணைக் களைந்து போட்டோவைத் தேடுவதை? ஓஹ்... ஓஹ்...!''

இவ்வாறு தனது மனத்தினை ஒரு முறை விமர்சனம் செய்து பார்த்துக் கொண்ட டூபென்ஸ், அதன் தீர்வாய். வருத்தம் தோய்ந்து மறுப்பாய் தலையசைத்துக் கொண்டாள்.

''ஜூலியஸுக்கு என்ன சொல்வதுனே தெரியலியே! *எதையாவது* நான் சொல்லித்தானே தீரணும்...! காரணம் என்னனு கேட்டுத் துளைத்து நச்சரிக்காம விட மாட்டாரே! அவருக்குக் காரணம் தெரிஞ்சாகணும்... முரட்டு அமெரிக்க வழக்கம்...''

இப்போது டூபென்ஸின் நினைவுகள், 'அந்தப் பாதுகாப்புப் பெட்டிக் குள்ளே அவர் எதையாவது பார்த்திருப்பாரோ என்றே எனக்கு சந்தேக மாயிருக்கு...!' என்று திசை மாறியது. தொடர்ச்சியாயும் கவனமாயும் கடந்த இரவு நடந்த நிகழ்வுகளை ஓட்டிப் பார்த்தாள் டூபென்ஸ். ஏனோ புரியவில்லை... சர் ஜேம்ஸின் விளக்கிப் புரிந்துக் கொள்ள முடியாத வார்த்தைகளால் இருவரும் கட்டப்பட்டுள்ளதாய் உணர்ந்தாள் இவள்.

திடுமென்று மாபெரும் அதிர்ச்சியை வெளிக்காட்டினாள் டூபென்ஸ். இவள் முகத்து செந்நிறம் உள் வாங்கி வெளிறிப் போனது... மந்திரத்தால் கட்டுண்டது போல விரிந்து பெரிதாகி நிலைகுத்திப் போன இவளுடைய கண்மணிகள் முன்னாலிருந்த கண்ணாடியை முறைத்த வண்ணமிகுந்தன.

''சாத்தியமேயில்லே...!'' முணுமுணுப்பாய் அலறினாள் டூபென்ஸ். ''இது முடியவே முடியாது. இப்படிப்பட்ட ஒண்ணை நினைச்சாலே நான் பைத்தியமாயிடுவேன்...''

''பூதாகாரமானது - ஆயினும் இது *அத்தனையையும் விளக்குது* - முடிவாய் எண்ணிக் கொண்டாள்.

சில கண சிந்தனைக்குப் பிறகு, நகர்ந்து உட்கார்ந்துக் கொண்டு ஒரு சிறு குறிப்பினை எழுதினாள். - தாளில், விழும் ஒவ்வொரு வார்த்தையையும் சிறப்பாய் அளந்து, எடை போட்டு! கடைசியில் அவளுக்குள் திருப்தி கொண்டவளாய் ஆமோதித்துத் தலையசைத்துக் கொண்டவள், அதனை ஜூலியஸ் பெயருக்கு முகவரியிட்டு ஓர் உறைக்குள் நழுவ விட்டாள். எழுந்து கீழிறங்கிப் போனவள் அவரது அறைப்பகுதிக்குச் சென்று கதவினைத் தட்டினாள். அவள் எதிர்பார்த்து வந்தது போலவே, அறை, காலியாய் தானிருந்தது. எழுதி வந்திருந்த குறிப்பினை காலியாயிருந்த மேஜையின் மேல் விட்டு வைத்தாள். திரும்பினாள்.

தனது அறைக்கு இவள் திரும்பி வந்த போது ஒரு காவல்காரப் பையன் அவளுடைய அறை வாசலில் நின்றுக் கொண்டிருந்தான்.

''உங்களுக்கு ஒரு தந்தி, மிஸ்.''

டூபென்ஸ் அவனிட்மிருந்து அதைப் பெற்றுக் கொண்டு முக்கியத்துவம் தராது ஏதோ சிந்தனையோடு அதனைப் பிரித்தாள். பிறகு அப்படி ஓர் இனிய கூவலை அவள் வெளியிட்டாள். *அந்தத் தந்தி, டாமியிடமிருந்து!*

அத்தியாயம் - 16

மேலும் டாமி மேற்கொண்ட சாகசங்கள்

நெருப்பாய் தீய்த்துத் துடிதுடிக்க வைத்த கடும்வலியினால், தன்னிலையிழந்து மயக்கத்துக்குள் போய் விடாது பிராயத்தனப்பட்டு, தனது உணர்வுகளை நினைவுலகுக்குள் மீண்டும் இழுத்து வந்தான் டாமி. கடைசியில் எப்படியோ இவன் இமைகளைத் திறந்த போது, கடும் வேதனைமிக்கக் கொடூர தலைவலி, இரு பொட்டுகளின் வழியாகவும் மண்டையோட்டின் ஆழம் வரை பரவியிருப்பதைத் தவிர வேறெதுவும் இவனுக்கு உறைக்கவில்லை. தனக்குப் பரிச்சயமில்லாத ஓரிடத்தில் கிடப்பதாய் தனக்குள் குழம்பினான். 'எங்கேயிருக்கிறேன்? என்ன ஆயிற்று? சத்தற்று விழித்தான். ரிட்ஸில் இவன் விழித்தெழும் படுக்கையறை கிடையாது இது. 'இந்த அழகில் என் பாழாய் போகும் தலைக்கு என்ன தான் ஆயிற்று?'

''கஷ்ட காலம்'' என்ற டாமி, எழுந்து உட்கார முயற்சித்தான். ஞாபகத்துக்கு வந்தது. ஓஹோ... இது ஸோ-ஹோவின் அமானுஷ்ய வீடு. அவ்வளவு தான்... ஓர் இயலாமை உறுமலை உதிர்த்து விட்டு, அப்படியே படுக்கையில் விழுந்து விட்டான். ஏறத்தாழ மூடியிருப்பது போல மற்றவர்களுக்குத் தெரியும் பாதி திறந்திருந்த இமைகளின் வழியாக, ஜாக்கிரதையாய் ஊடுருவி வேவு பார்த்தான்.

''திரும்பி வரான்...'' - குறிப்பு தந்தது, இவன் காதருகிலிருந்த ஒரு குரல். உடனே, ஒலித்த குரலினை, தாடி வைத்துக் கொண்டு சமயோஜிதனாய்த் தெரிந்த ஜெர்மனுடையது என்று கண்டுபிடித்து விட்ட டாமி, கைதேர்ந்த ஒரு நடிகனைப் போல அசைவற்ற ஜடமாய் கிடந்தான். மளமளவென்று வெகு சீக்கிரமாய் எழுந்து உட்கார்ந்து விடுவது பரிதாபமான விளைவுகளை உண்டுபண்ணி விடும் என்பது இவனுக்குத் தெரியும். தவிர, இவன் பொட்டுக்களில் நுழைந்து முகுளத்தையே வறுத்தெடுத்துக் கொண்டிருக்கும் தலைவலியின் தீவிரம், தாங்கிக் கொள்ளுமளவு குறையும் வரை, தன் அவயங்கள் அனைத்தையும் ஒன்றாய் ஒத்துழைக்க வைத்து இயங்குவது முடியாத ஒன்று என்பதையும் வெகு நிச்சயமாய் அறிந்திருந்தான். மிக

சிரமப்பட்டு, என்ன நடந்துள்ளது என்பதை நினைவுக்குள் மீட்டிப் பார்க்க முயற்சித்தான். இவன் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்ததை யாரோ பின்பக்கத்தி லிருந்து கவனித்துவிட்டு, அப்படியே நெருங்கி வந்து, தலையில் பேரிடியாய் இறங்கும்படி, எதனாலோ அடித்திருக்கின்றனர். இப்போது டாமி ஓர் ஒற்றன் என்ற அளவுக்கு இவர்களனைவருக்கும் தெரிந்துவிட்டது. சந்தேகத்துக்கு துளி இடமின்றி மிக இறுக்கமான வட்டத்துக்குள் வந்து அகப்பட்டுக் கொண்டுள்ளான் இவன். இங்கு வந்து தப்பிப்பற்று மாட்டிக் கொண்டுள்ள விஷயம் ஒரு நாதிக்குத் தெரியாது. எனவே இவனால் வெளி உலகத்திலிருந்து எவ்வித உதவியையும் பெற முடியாது. தனது அங்க அவயங்களைச் சார்ந்திருந்து தான் இவன் பிழைத்ததாக வேண்டும்.

'வேற வழி கிடையாது' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டவன், முன் குறிப்பிட்ட வார்த்தையை மீண்டும் வெளியிட்டான்: ''கஷ்ட காலம்!'' இந்த முறை எழுந்து அமர்ந்துக் கொள்வதில் வெற்றி கண்டான்.

அடுத்த நிமிடமே, அந்த ஜெர்மானியன், ஓரிரு அடிகள் எடுத்து மேலும் நெருங்கி வந்து, இவனுடைய உதடிடுக்கில் கோப்பை ஒன்றை வைத்து அழுத்தினான். ''குடி'' என்று சின்னதாய் அதிகாரம் தந்தான். டாமி குடித்தான். திரவத்தின் வீரியம் அவனை லொக் லொக்கென்று கனைக்கச் செய்தது. ஆனால், இவனுடைய மயக்க நிலமையை அதியற்புதமாய் அது தீர்த்து வைத்தது.

மீட்டிங் நடைபெற்ற பெரிய மேஜையில் தான் இவன் கிடத்தப் பட்டிருந்தான். இவனுக்கு ஒரு பக்கத்திலிருந்தான் ஜெர்மானியன். இன்னொரு பக்கத்தில், இவனை உள்ளே நுழைய அனுமதி தந்த... வில்லத்தனமான முக அமைப்பு கொண்டிருந்த காவலாளி. மீதியனைவரும் ஒரு சிறு குழுவாய் சற்று தள்ளி நிறுத்தப்பட்டிருந்தனர். இதில் ஒரு முகத்தை டாமி காணாமல் தவற விட்டான். நம்பர் ஒன்று என்று அறியப்பட்டிருந்த ஆசாமி இக்குழுவில் இல்லவே இல்லை.

உதடுகளிலிருந்து கோப்பையை உருவியபடி, ''இப்போ பரவா யில்லையா?'' கேட்டான் ஜெர்மானியன்.

''ம். நன்றி'' என்று பதில் தந்தான் டாமி, சற்று உற்சாகமாய்.

''ஓ....! உன் மண்டை நல்லா வலுவா இருப்பது உன் அதிர்ஷ்டம்டா. காவல்காரன் போட்டபோடு இருக்கே....'' பிசாசு போல இருந்த காவல் காரனைப் பார்த்து ஒப்புதலாய் தலையசைத்துக் காட்டினான் அவன்.

காவல்காரன் முறைத்தபடியே இருந்தான்.

டாமி, பிரயாசைப்பட்டுத் தன் கழுத்தை ஒரு திருகுத்திருகித் திரும்பிப் பார்த்தான். ''ஓ, நீ தான் காவல்காரப்பயலா! என் தலை படு ஸ்ட்ராங்கா

இருந்தது. உனக்கும் ஒரு வகையில அதிர்ஷ்டம் தான்னு எனக்குப்படுது. தெரியுமோ ! நீ மட்டும் தூக்குல மாட்டற ஆளாயிருந்தா, ஒரேயடியா நான் கிளம்பியிருப்பேன். அது பாவமில்லையா உனக்கு? அந்தப் பாவத்திலிருந்து நீ தப்பிச்சுட்டே இல்லே, இப்ப....?''

அவன் உறுமிக் காட்ட, தாடி வைத்த ஜெர்மானியன் சாந்தமாய் சொன்னான் : ''அதைப் பண்ண அவனுக்கு ரொம்ப நேரமாகாது.''

''உங்க இஷ்டப்படி!இப்பல்லாம் போலீஸ் அதிகாரத்தை ஆளுக்காளு கையில் எடுத்துப்பது ஃபாஷனாப் போச்சு.''

டாமி செய்துக் கொண்டிருப்பது, வடிகட்டிய முட்டாள் தனத்தின் கடைந்தெடுத்த பிரதி. தனிப்பட்ட பிரத்யேகத் திறமை கொண்டு மிளிர்ந்து, சபைதனில் கோலோச்சும் புத்திசாலி அமெரிக்கனைப் போன்ற ஜென்டில்மேன் வகை கிடையாது, இந்த டாமி. ஆனால் இறுக்கமான சூழல்களில் சொல்வன்மை ஒன்றினால் மட்டுமே பிரகாசித்துத் தனித்து கவனிக்கப்படும் வகை. இவனுடைய சாதுர்ய சாமர்த்தியம் ஒன்று மட்டுமே இப்போதைக்கு இவனை இங்கிருந்து தப்பித்து வெளியே ஓட விட வல்ல ஆயுதம் என்பதை தனது ஒவ்வொரு செல்லிலும் உணர்ந்தான், டாமி. சாதாரணமாய் இருப்பது போலக் காட்டிக் கொள்ளத் துவங்கியுள்ள இவனுடைய கிராமத்தான் வேஷத்துக்குப்பின்னால் இதற்காக தனது மூளையை மூர்க்கத்தனமாய் ஓட்டி இயக்கிக் கொண்டிருந்தான் இவன்.

இரக்கமற்ற ஜெர்மானியனின் குரல் உரையாடலைக் கையிலெடுத்துக் கொண்டது.

''ஓர் ஒற்றன் என்ற குற்றத்திற்காக உன்னைக் கொல்வதற்கு முன்னால் நீ ஏதாவது சொல்ல விரும்பறியா?''

அதே நாட்டுப்புறக் காட்டான் பாணியில், ''ஆமாங்க, நிறைய, நிறைய'' என்றான்.

''கதவிடுக்கில் நின்றுக் கொண்டு நீ ஒட்டுக் கேட்டதை மறுக்கிறியா?''

''நான் மறுக்கலீங்க! தப்புனா அதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன் - ஆனா, நீங்க பேசின விதமும் உரையாடல் சென்ற அழகும்... இது தப்புங்கறதையே என்னை மறக்க வெச்சுடுச்சுங்க.''

''நீ எப்படி உள்ளே வந்தே?''

''அன்பு காவல்காரனால'' - இதுக்காக என்னை ஒண்ணும் செஞ்சுடாதே என்பது போல அந்த குண்டான காவல்காரனைக் கண்டு சிரித்தான் டாமி.

போட்டுத் தரும் இவனை உடனே ஒன்றும் செய்ய முடியவில்லையே எனக் காவல்காரன் உறுமி விட்டு, தாடி வைத்த ஜெர்மானியன் நாலுகால் பாய்ச்சலில் அவனை நெருங்குவதைக் கண்டு, கோபத்தை உள்ளடக்கிய

இருண்ட முகத்தோடுச் சொன்னான்: ''சங்கேத வார்த்தையை இவன் சொன்னான் - எனக்கெப்படி தெரியும்?''

''அதானே''... அடிபிறழாது ஒத்தூதினான் டாமி. ''அவனுக்கு என்ன தெரிஞ்சிருக்க முடியும்? அந்தப் பத்தாம்பசலியை, பாவம், வையாதீங்க. அவன் அவசரப்பட்டு அனுமதிச்சதினாலேத் தானே என்னால உங்க அனைவரையும் இத்தனை நெருக்கமா முகத்துக்கு முகம் பார்க்கும் பாக்கியம் கிடைச்சுது. ஆஹா....!''

தள்ளியிருந்த குழுவினரிடம் இவனுடைய வார்த்தைகள் வயிற்றுக் கலக்கலை உண்டு பண்ணியதாக நினைத்துக் கொண்டான் டாமி. ஆனால் இதையெல்லாம் ஜெர்மானியன் புறங்கை கொண்டு ஒதுக்கித் தள்ளினான்.

''செத்த எந்த நாயும் புராணம் படிக்காது.''

''ஐ!'' என்ற டாமி, ''நான் தான் இன்னும் சாகலையே!'' என்றான்.

''சாக வெக்கிறேன் - சீக்கிரத்திலேயே!''

தங்கள் பக்கம் ஜெயிப்பது போல், குழுவினரிடமிருந்து எக்காள முணுமுணுப்புக்கள் சிதறின.

''அது நடக்காதுனு நான் நினைக்கிறேன்'' என்றான் டாமி. ''சாகறதுக்கு நான் தீவிர எதிர்ப்பு தெரிவிக்கிறேன்!''

என்ன பேசுகிறான் இவன் என்ற புதிரினை அனைவரது முகத்திலும் இவன் உருவாக்கினான்; அனைவரது முகத்திலும் இதை இவனே கூடப் படித்தான்!

''நீ என்னடா அனுமதி தர்றது?'' என்ற ஜெர்மானியன், ''உன்னைத் தரதரனு கொண்டு போய் தூக்குல ஏன் தொங்க விடக்கூடாது என்பதற்கு, உன்னால காரணம் தர முடியுமா?'' என்றான்.

''காரணம் என்ன...?'' என்று எக்காளமாய் கேட்ட டாமி, ''காரணங்கள் தர முடியும் என்னால - எக்கச்சக்கமா'' என்று மறுபதில் தந்தான். ''இதோ பாருங்க, மிஸ்டர்! வரிசையா நீங்க தான் என்னைக் கேள்விகளாகக் கேட்டுக் கிட்டிருந்தீங்க. மாற்றத்துக்கு நான் உங்களை ஒரே ஒரு கேள்வி கேட்கறேன். நான் நினைவு திரும்பி எழுந்து உட்காருவதற்கு முன்னாடியே நீங்க என்னை ஏன் கொன்னிருக்கக்கூடாது?''

ஜெர்மானியன் தயங்க... டாமி, அவனுடைய அனுகூலச் சீட்டினைக் கைப்பற்றினான்.

''ஏன்னா, உங்களுக்கு, எனக்கு எவ்வளவு தெரியும்னு, தெரியாது! இப்போ நீங்க என்னைக் கொன்னுட்டீங்கன்னா, எப்பவுமே அது உங்களுக்குத் தெரியாது!''

ஆனால், இக்கூட்டத்தில், போரீஸின் உணர்ச்சிக் கொந்தளிப்பு இவனுக்குப் பெரும் இடைஞ்சலாய் ஆயிற்று! அவன், கைகளை ஓங்கிக் கொண்டு இவனை நோக்கி ஓடி வந்தே விட்டான்!''உளவு நாயே'' என்றவன், ''உன்னை உடனடியா இல்லாமப் பண்றோம், பாரு. இவனைக் கொல்லுங்க! இவனைக் கொல்லுங்க!'' என்றலறினான்.

இதற்கு, கைதட்டலுடன் கூடிய ஆராவாரம், அறையை நிறைத்தது.

''கேட்டியா?'' என்றான் ஜெர்மன் - தனது கண்களை டாமியின் மேல் புதித்தபடி. ''இதுக்கு நீ என்ன சொல்லப் போறே?''

''நானா?'' என்று விட்டு, தோள்களைக் குலுக்கிக் காட்டினான் டாமி. ''முட்டாள் பொதி மூட்டைங்க...இதுங்களைக் கழுதை தான் சுமக்கணும்'' என்றவன், தொடர்ந்தான்: ''இவனுங்களுக்குள்ளேயே ஒரு கேள்வியைக் கேட்டுப் பார்த்துக்கட்டும். நான் இந்த இடத்துக்குள்ளே எப்படி நுழைஞ்சேன்? காவல்கார குண்டன் சொன்னதும் அப்படியே நினைவிலிருக்கட்டும். *'சங்கேத வார்த்தையை இவன் சொன்னான்'.* இதானே? என் கைப்பிடிக்குள்ளே அந்த வார்த்தை எப்படி வந்தது? நான் வாசப்படி வரைக்கும் ஏறி வந்து நின்னு - குண்டு மாமா கதவைத் திறந்ததும் - சொல்லிப் பார்ப்போமேனு வாய்ல வந்ததை சொன்னேன்னு, வடிகட்டின முட்டாள் தனமா கணக்குப் போட்டுட மாட்டீங்களே... ஆங்..?''

இவன் நிகழ்த்திய உரையின் இறுதி வார்த்தைகளின் மீது டாமி பரிபூரண திருப்தி கொண்டான். இவனுடைய துப்பறியும் சாறின் ருசியைச் சுவைக்க இங்கு டூபென்ஸ் இல்லாமல் போய் விட்டாளே என்பது தான் பெருங் குறையாய் ஆயிற்று.

இயங்கிக் கொண்டிருந்த மனிதன், ''இதுவும் நிஜம் தான்'' என்றான். ''ஏய் நாம வஞ்சிக்கப்பட்டுட்டோம். ஆ.ஆ.ஆ... ஏமாற்றப்பட்டுட்டோம்.''

உடனே குழுவினரிடம் அவலமான முணுமுணுப்பு விளைந்தது. ஊக்குவிக்கப்பட்ட டாமி புன்னகைத்தான். 'அப்படிப் போடு!' கழுதைப் பயலுக எதைச் சொன்னாலும் அப்படியே நம்பறானுங்க!''

''ம்.. சொல்லு, இப்படி ஒரு வஞ்சகத்தைப் பின்னி எங்களுக்கு எதிரா உன்னை ஏவி விட்டது யார்னு சொல்லு. விளையாடறியா? உளவு பார்க்கவா வந்தே? அதை சொல்லிட்டா மட்டும்.... நீ தப்பிச்சுட முடியாது. உனக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் இப்போ நீ கொட்றே. இதோ, இங்கேயிருக்கும் போரீஸுக்கு பேசாதவனைப் பேச வைக்க வகை வகையா வழிகள் தெரியும்.''

''பாஷ்... த பாருடா'' என்று நிந்திக்கும் வகையில் டாமி கிண்டலடித் தாலும், அவனடைய அடிவயிற்றில் தனித்துவ நகங்களுடன் கீறிக்

கொண்டிருந்த திகில் நண்டுடன் போராடிக் கொண்டுதானிருந்தான். ''உங்களால் என்னைத் துன்புறுத்தவும் முடியாது.... கொல்லவும் முடியாது.''

''ஏண்டா?'' என்றான் துடித்தக் கரங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த போரீஸ்.

''ஏனா? பொன் முட்டைகளை இடும் வாத்தினைக் கொல்லும் - மட வாத்தா, நீ?''

''ஏஏஏஏய்யய்ய்ய்....''

ஜெர்மானியனின் கை அமர்த்தலுக்குக் கட்டுப்பட்டு அங்கு ஒரு தாற்காலிக அமைதி உருவாகி நிலைத்தது. திரும்பத் திரும்ப டாமி சொல்லிக் கொண்டிருந்த உறுதியான கற்பனை - ஒரு வழியாய் எடுபடுவது போலிருந்தது. ஏனோதானோவென்று உடையணிந்திருந்த மனிதன், ''அவன் போட்டுப் பார்க்கிறான். போரீஸ்'' என்றான். ''எதைப் பேசினாலும்.... பேச்சை வளர்க்கிறான். அவனைச் சுட்டுத் தள்ளாம...!''

டாமிக்கு அவன் மீது வெறுப்பு வந்தது. அவன், இவனின் 'திட்டத்தை' மோப்பம் பிடித்து விட்டானா!

பட்டென்று டாமி பக்கமாய் திரும்பினான் ஜெர்மானியன். ''நீ என்ன சொல்ல வர்றே?''

''நான் என்ன சொல்ல வர்றேன்னு நீங்க நினைக்கிறீங்க?!'' - அதையே திருப்பிக் கேட்டான் டாமி, தன் மூளைக்குள் ஆதரவற்றவனாய் தப்பிப்புத் தேடியபடி.

திடுமென கட்டுப்படுத்த முடியாமல் முன்னுக்கு வந்த போரீஸ், ''எப்படி வளர்க்கிறான் பாரு....! இவன் கூடப் போய் பேசிக்கிட்டு...'' என்றபடி, தனது மூடிய உள்ளங்கையின் கடுமையான பின்பகுதியை டாமியின் முகத்தில் இறக்கினான்.

''பேசு இப்போ. பேசுடா, இப்பப் பேசு.''

''இப்படி உணர்ச்சிவசப்பட இப்ப இங்கே என்ன நடந்திடுச்சு, நண்பரே'' என்றான் டாமி. ''உங்க கூட்டத்தின் மொத்த சரக்கே இது தான் - அடி, உதை. உங்களால சாந்தமா அணுக முடியாது. இப்போ உன்னையே ஒரு கேள்விக் கேட்கிறேன்ப்பா... என்னைப்பார்த்தா, நீ என்னைக் கொல்லவே மாட்டேனு முடிவா நினைச்சுக்கிட்டு உன் கூண்டுக்குள்ளேயே நுழைஞ்ச ஒருத்தனை மாதிரியா தெரியுது...?''

''இல்லே'' என்றான், போரீஸ் முரண்டு பிடிப்பது தணியாமல்.

'நல்லதாப் போச்சு, கடவுளே' - நினைத்துக் கொண்ட டாமி, தனக்குக் கிடைத்த இந்த அனுகூல வாய்ப்பைப் பிடித்துக் கொண்டு முன்னேறினான்.

''அப்போ நான் எப்படி இவ்ளோ உறுதியா இருக்க முடிஞ்சது?''

''? ? ? ''

''ஏன்னா... ஏன்னா... *ஏன்னா...*'' என்று ஒவ்வொருவராய் பார்த்து வெற்றிக் களிப்பாய்க் கூறிக் கொண்டு, ஆனால் உள்ளூர 'இப்படி வெட்டியாய் பேசிக்கொண்டே போனால் ஒரு நிலையில் விஷயமின்றி முட்டிக் கொண்டு நின்றுவிட நேர்ந்து விடுமே....' என்ற நிதர்சனத்திகிலோடு, என்ன பேசுவதென்றே விளங்காமல் கடைசியில் தன்னுடைய ஆரம்ப அஸ்திரத்தையே வேறு மாதிரி அலங்கரித்து வீசினான். ''ஏன்னா ... உங்க கூட பேரம் பேசி வியாபாரம் பண்ண முன் வரும் அளவுக்கு, எனக்கு *என்னவோ* தெரிஞ்சிருக்கு!''

தாடி வைத்துப் பேசிக் கொண்டிருந்த மனிதன், ''பேரம்?'' என்றான், இனி உன்னை விடுவதற்கில்லை என்ற கூரான பார்வையோடு.

''ஆமாம். பேரம். பேரம் தான். இந்த பேரத்தில், என் பக்கம்... என் உயிரும் விடுதலையும். உங்க பக்கத்துல- - -''

''எங்க பக்கத்துல?'' - கூட்டமே முன்னுக்கு வளைந்து விரைந்தது. அருகில் வந்து நின்றது. குண்டு மணி ஓசை கிடையாது. மெதுவாய் டாமி தான் பேசினான்!

''அமெரிக்காவிலிருந்து, *லூஸிடானியா*வில் டேன்வர்ஸ் சுமந்து வந்த ஆவணத் தாள்கள்.''

சிறிது நேரம் எடுத்துக் கொண்டு இவன் சொன்ன இவ்வாக்கியத்தின் விளைவு, ஒரு மின்சார விளைவு. அனைவரும் சுழற்றியடிக்கப்பட்டு இவனுடைய கால்களில் போடப்பட்டனர்.

குழுவினரைப் பின்னுக்குப் போகும்படி கையசைப்புச் செய்தான் ஜெர்மானியன். டாமிக்கு வெகு வெகு அருகில் இப்போது குனிந்திருந்த அவனுடைய முகம் கிளர்ச்சியில் மிகச் சிவந்திருந்தது.

''அப்போ... அதெல்லாம் உன்னிடமா இருக்கு?''

அதியற்புத அமைதியுடன் - மறுத்துத் தலையசைத்தான் டாமி.

சற்றே கடுப்பாகி, ''அப்போ அதெல்லாம் எங்கேயிருக்குனு உனக்குத் தெரியுமா?'' என்று குடைந்தான் அவன்.

இதற்கும் அப்படியே செய்தான் டாமி. ''அப்படியெல்லாம் எதுவும் கிடையாது.''

''அப்போ - அப்போ-'', கோபமும் உலுக்கப்பட்ட திடீர்க் கிளர்ச்சியும், வார்த்தைகள் வராத அவசரத்தை அவனிடம் உண்டு பண்ணின.

டாமி மெதுவாய்ச் சுற்றிவர ஒருமுறை பார்த்தான். கோபமும் கடுமையும் ஒவ்வொரு முகத்திலும் தெறித்தன. ஆனால், சாந்தமாய், தான் சொன்னதே உறுதியான சமாச்சாரம் என தொடர்ந்து இவன் நின்ற விதம், அதன் வேலையைச் செய்தது! இவன் வார்த்தைகளுக்குப் பின்னால் என்னவோ இருக்கிறது என்பதைத் தவிர ஒருவரும் வேறெந்த சந்தேகமும் கொள்ள வில்லை.

இவன் மீதிருந்த சந்தேகத்தை, இவனிடமிருப்பதாய்ச் சொன்ன ஆவணத்தாள்கள் மீது அப்படியே மாற்றிவிட்டான், இவன்!

''அந்தத் தாள்கள் எங்கேயிருக்குனு எனக்குத் தெரியாது. ஆனால் அவற்றை சுலபமா கண்டெடுத்துடலாம்னு எனக்கு நம்பிக்கையிருக்கு. ஒரு வழி... ஒரு தியரி...''

''போடாங்....''

கூடியிருந்தோரில் விளைந்த வெறுப்பினை, ஆவேசமாய் தூக்கிய ஒரு கைத் தூக்கலில் தடுத்து நிறுத்தினான் டாமி. ''நான், அதை ஒரு வழி.... கோட்பாடு, அதாவது தியரி, அப்படினு பொதுவாய் சொன்னாலும், என்னிடம் இருக்கிற தகவல்கள் மேலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கு. தகவல்கள் - வேறு ஒருத்தருக்குத் தெரியாது! - எனக்கே எனக்கு மட்டும் தெரிந்துள்ள ரகசியத் தகவல்கள். ஓ கே' யா? சரி, சொல்லுங்க... இப்ப நீங்க எதை இழந்துடப் போறீங்க? அந்த ஆவணத் தாள்களைக் கொண்டு வந்து நான் உங்க முன்னாடி போட்டா என் உயிரையும் என் விடுதலையையும் தானே நீங்க பணயப் பொருளா எனக்குத் தரப் போறீங்க...? பிறகென்ன? பேரத்தைச் சந்திப்போம், ம்!''

''இதுக்கு நாங்க சம்மதிக்கலைனா?'' - ஜெர்மானியன் சாந்தமாய் கேட்டான்.

மேஜையில் அப்படியே படுத்துக் கொண்டான் டாமி. இந்தக் கேள்விபடியே ஆகி விட்டால்... அடி வயிற்றில் பய நண்டுகள் தங்கள் பணியைச் செய்தன. ஆனாலும் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''29-ஆம் தேதி. அது வர இன்னும் பாதி மாசம் கூட இல்லே'' என்றான்.

ஒரு கணம் ஜெர்மானியன் தயங்கினான். பிறகு காவல்காரனுக்குச் சைகை தந்தான். ''அந்த அறைக்கு இவனை எடுத்துக்கிட்டுப் போ...ம்.''

பூச்சற்று செங்கற்கள் துருத்திக் கொண்டு தெரியும், அழுக்கடைந்த அடுத்த அறையில் ஐந்து நிமிடம் உட்கார்ந்திருந்தான், டாமி. அவனது இதயம் கட்டுப்படுத்த முடியாமல் அடித்துக் கொண்டிருந்தது. எல்லா ஆபத்துக் களையும் இத்தனை நேரம் எறிந்த எறிதல்களில் கையிலெடுத்துள்ளான் டாமி.

அவர்கள் என்ன முடிவெடுப்பார்கள்? இந்த உயிர் பிடுங்கும் கேள்வி அவனுக்குள் பூகம்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

கடைசியாய் கதவு திறக்கப்பட அந்த ஜெர்மானியன், இறுமாப்பு ஓங்கியிருந்த குரலில், திரும்பி வருமாறு காவல்காரனை அழைத்தான்.

''கனம் நீதிபதியார் என்னைத் தூக்கில் ஏற்றிவிட மாட்டார் என்று கருதுவோமாக'' என்று கிஞ்சித்தும் பயம் கருதாது அற்பத் தொனியில் காவல்காரனிடம் சொன்ன டாமி, ''அப்படித் தான் குண்டா. கதவைத் திற. ஆங்.. நான் போக வழி செய். விசாரணை மன்றத்துக்குள் நான் நுழைய வேண்டாமா?'' என்றான். பதிலுக்குக் கண்காளாலேயே தீ உமிழப் பார்த்தான் அந்த குண்டுக் காவல்காரன்.

இன்னொரு முறை அந்த டேபிளின் நடுநாயகமாக அமர்ந்திருந்தான் ஜெர்மானியன் - அவனுக்கு எதிராய் வருமாறு அமரச் சொல்லி டாமிக்கு சைகைக் காட்டினான்.

''நீ சொன்ன அத்தனைக்கும்...'' என்று குரூரமான குரலில் சொன்ன அவன், ''...நாங்க ஒத்துக்கறோம்'' என்று முடித்தான். ''நீ விடுவிக்கப்படு வதற்கு முன்னரே அந்த அனைத்து ஆவணத் தாள்களும் எங்க கைகளுக்கு வந்திருக்கணும்.''

''முட்டாள்'' என்றான் டாமி, நேசமாய்! ''இப்படிக் காலையும் கையையும் கட்டிப் போட்டு என்னை இங்கே வெச்சிருந்தா, என்னால எப்படி 'அவங்களை' த் தேட முடியும்னு நினைக்கிறீங்க?''

''அப்போ என்ன தான் நீ எதிர்ப்பார்க்கிறே?''

''எனக்குனு இருக்கிற வழியிலே நான் இந்த பிஸினஸைப் பண்ணி முடிக்க எனக்கு சுதந்திரம் வழங்கப்படணும்.''

ஜெர்மானியன் சிரித்தான். ''ஏன்யா... நீ வெறும் சத்தியங்களால் மட்டும் அலங்கரிக்கப்பட்ட ஒரு கதையை எங்களுக்குச் சரடு திரிச்சு தருவே. அதை வெச்சுக்கிட்டு உன்னை வெளியே விட, நாங்க என்ன வாய்ல சாக்லெட் வெச்சிருக்கிற குழந்தைகளா...?''

''இல்லே'' என்றான் டாமி சிந்தனையோடு. ''இப்போ நான் சொல்லப் போறதுல அணுகளவு கூட பிரச்சினை இல்லேனு இருந்தாலும், என் மேலான உங்க பயத்துக்கு முன்னாடி அது எடுபடுமானு எனக்குத் தெரியலே! ஆனாலும் ஓர் உடன்பாட்டுக்கு நாம வர வேண்டியது இப்ப ஓர் அவசியத் தேவையாயிருக்கு... (?!) சொல்லுங்க: என்னோட எப்பவுமே இருக்கிற மாதிரி இந்த குண்டு காவக்காரனை அனுப்பி வெச்சா .. இது எப்படி? அவன் ஒரு நாய்... ஒஒஒ... முறைக்காதே. முறைக்காதே... நன்றி மறக்காதவன்னேன்' பா! பலசாலி வேற !''

''நீ இங்கேயே இருப்பது தான் நல்லதுனு நாங்க கருதறோம். எங்கள் எண்கள்ல ஓர் எண், நீ தரும் கட்டளைகளை வெகு நுணுக்கமா வெளியில் செஞ்சு முடிப்பான். அப்படி நடைமுறைப்படுத்துவதில் ஏதாவது சிக்கல்கள் வந்தா, என்ன மாதிரியான சிக்கல் எனும் அறிக்கையோடு அந்த எண் வந்து உன்னைப் பார்க்கும்... அதுக்கேற்றா மாதிரி நீ மேற்கொண்டு கட்டளைகள் தரலாம்.''

''நீங்க என் கைகளைக் கட்டறீங்க'' - குற்றஞ்சுமத்தினான் டாமி! ''இது ரொம்ப நுண்மையான சங்கதி. ஆமாம், சொல்லிட்டேன்! அந்த 'எண்'... எத்தனை குழப்பி சொதப்ப முடியுமோ அப்படி பண்ணிடலாம். அப்புறம் நான்? இங்கேயிருந்து தப்பிச்சு இன்னொருத்தன் கிட்டே சுருக்கா? அதான் இப்போ இங்கே பார்த்தேனே... உங்கள்ல ஒருத்தனுக்குக்கூட ஓர் அவுன்ஸ் அளவு மூளையோ சமயோஜிதமோ கிடையாது!''

ஜெர்மானியன் மேஜையைக் குத்தினான். ''இது தான் நாங்க நிர்ணயிப்பது. இல்லேனா - *மரணம் தான்.'*

டாமி நாற்காலியில் களைப்பாய்ச் சாய்த்துக் கொண்டான். ''எனக்கு உங்கபாலிஸி பிடிக்குது. வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு போல நறுக்குத் தெறிச்சா மாதிரி... ஓ. கே. அப்போ, அப்படியே ஆகட்டும். ஆனா ஒரு விஷயம் அத்தியாவசியம். இதுல உங்க ஆர்ப்பாட்ட அதிகாரக் கையை நீங்க வெக்கக் கூடாது. வெச்சா.. *தோல்வி தான்.* (இங்கு அப்படியே ஜெர்மானியன் சற்று முன் சொன்ன தொனியிலேயே சொல்லிக் காட்டி வெறுப்பேற்றினான் இவன்). நான் பொண்ணைப் பார்க்கணும்.''

''பொண்ணா? எங்கேயா பொண்ணு?''

''ஜானே, ஃபின்.''

எதிராளி, இவனைச் சற்று நேரம் ஆர்வமாக பார்த்துவிட்டு, வார்த்தைகளைப் பத்திரமாய் தேர்ந்தெடுத்தவனைப் போல, மெதுவாய், நிறுத்தி நிதானமாய் சொன்னான் : ''அவ உனக்கு எவ்விதத் தகவலையும் தர முடியாதுனு உனக்குத் தெரியாதா?''

பயந்து, உள்ளூர அதிகமாய்த் துடித்துக் கொண்டிருந்த டாமியின் இதயம், மேலும் அதிகமாய்த் துள்ளியது. ஒரு வேளை, நான் கேட்பது போலவே அவளை என் முகத்துக்கு நேரே கொண்டு வந்து நிறுத்தித் தொலைவார் களோ...?! - நினைத்த போதே இதயம் கட்டுக்கடங்காமல் ஓடும் குதிரையானது.

''அவளை என்கிட்டே எதுவும் சொல்லச் சொல்லி நான் கேட்க மாட்டேன்'' - சாந்தமாய் சொன்னான் இவன். '' வளவளனு கட்டுரை போல பேச விட மாட்டேன்' னேன்.''

''ஏய், அப்ப எதுக்குடா அவ? மாங்கா!''

டாமி தாமதித்தான். 'என்னத்தை என்று சொல்ல...?!' மனதில் நடுநடுங்கிக் கொண்டே, ஒரு வழியாய், கடைசியாய் சொன்னான் : ''அவளை நான் ஒரு கேள்வி கேட்கும் போது, அவளுடைய முகத்தைக் கவனிக்க.''

இப்பொழுது ஜெர்மானியனின் விழிகளில், டாமியால் சட்டெனப் புரிந்துக் கொள்ள முடியாத ஏதோவொன்று இருந்தது.

''நீ கேட்கிற கேள்விக்கு அவளால பதில் சொல்ல இயலாது.''

''அது பற்றிய கவலையேயில்லை. அதைக் கேட்கும் போது அவ முகத்தை ஊடுருவிக் கவனிப்பேன்.''

''அது ஏதாவது துப்புத் தரும்னு நீ நினைக்கிறியா?'' - ஒப்புக் கொள்ளயியலாத சிரிப்பினை உதிர்த்தபடி கேட்டான் அவன். இது வரை இல்லாத அளவுக்கு, இவனுக்குப் புரியாத ஒரு விஷயம், இங்கே ஜானே விஷயத்தில் பின்னிப் பிணைந்திருப்பதைச் சட்டென புரிந்துக் கொண்டு விட்டான் டாமி. அது எது? ஜெர்மானியன் இவனை ஒரு தேடுதலோடு பார்த்துக் கொண்டிருந்தான். ''நாங்க இப்ப விழுந்து விழுந்து பயப்படற அளவுக்கு நிஜமாவே உனக்கு ஏதாவது விஷயம் தெரியுமானு - எனக்கு சந்தேகமா இருக்கு!'' என்றான் அவன் மிருதுவாய். ஒரு நிமிடம் முன்னால் டாமி நினைத்ததைப் போலவே, புரியாத ஏதோ ஒரு சங்கதியால் இவன் வீழ்ந்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான். ஓஹ்.... அது எது? எப்படி அதை அடைவது? இவன் இங்கு எப்படியெல்லாமோ முயன்று ஏற்படுத்தி வந்த பிடிப்பு, துளி தளர்ந்தது. புதிர்ப்போடப்பட்டவனைப் போல ஆனான். ஆயினும், துல்லியமாய் முடிவெடுத்துக் கொண்டான். 'இப்போ தப்பா என்ன சொல்லிட்டேன்? அந்தந்த நொடியில எப்படியெல்லாம் கொண்டு போகணுமா அதுக்குப் பேசறேன். ஆக, பயம் வேண்டாம்.'

இப்படி நினைத்துக் கொண்டவன், விளைந்துள்ள இந்த நொடிக்குத் தேவையானதைப் பின்வருமாறு பேசினான்: ''உங்களுக்குத் தெரிஞ்சு ஆனா எனக்குத் தெரியாத விஷயங்கள் இருக்கலாம். உங்க நாடகத்தின் அத்தனை சமாச்சாரங்களும் சப்ஜாடா எனக்குத் தெரியும்னு நான் காட்டிக்கலையே. அதே போல, நான் என் தலைக்கு மேலே மிக முக்கியமான - *உங்க ஒருத்தருக்கும்* தெரியாத விஷயங்களை வெச்சிருக்கேன். அதை வெச்சு தான் நான் சாதிக்க விரும்பறேன். டேன்வர்ஸ், ஒரு உலக மகா புத்திசாலி ----'', என்று சொல்லிவிட்டு, திடீரென ஏதோ அதிகம் பேசி விட்டவனைப் போல பாவித்துக் கொண்டு நிறுத்திக் கொண்டான்!

இங்கு ஜெர்மானியனின் முகம் சற்று ஒளி கொண்டது.

''டேன்வர்ஸ்'' - அவன் முணுமுணுத்தான். ''அப்படியா சங்கதி''- சற்று நிதானித்தான். பிறகு காவல்காரனைப் பார்த்து, அதிகாரமாய், ''இவனை எடுத்துக்கிட்டு போ. அதாவது- மாடிக்கு.''

''இருய்யா, ஒரு நிமிஷம்'' என்றான் டாமி முன் வந்த குண்டனைப் பார்த்து. ஜெர்மானியனிடம் கேட்டான்: ''அப்போ அந்தப் பொண்ணு?''

''அதை நாங்க பார்த்து ஏற்பாடு பண்றோம்.''

''அது நடக்கணும்''

''நாங்க அதை யோசிக்கிறோம். ஒரே ஒரு நபர் தான் அதை முடிவு செய்ய முடியும்''

''யாராது?'' என்று கேட்டான் டாமி. ஆனால் அவனுக்கே கூட பதில் தெரியும்.

''மிஸ்டர் ப்ரௌன்....''

''நான் அவரைப் பார்க்க முடியுமா?''

''ம்.''

''வா'' - காவல்காரன் அவசரமாய் அழைத்தான்.

டாமி மரியாதையாய் எழுந்துக் கொண்டான்! வெளியே வந்ததும், கூட வந்த குண்டன் படிகளேறி மேலே போகும்படி பணித்தான். அவனே கூட இவனை மிக நெருக்கமாய் பின்தொடர்ந்து ஏறிக் கொண்டிருந்தான். மாடியேறிய தளத்தில், காவல்காரன் ஒரு கதவைத் திறந்து வழி காட்ட டாமி ஒரு சிறிய அறைக்குள் நுழைந்தான். உஸ்ஸென்று சத்தமிட்டுக் கொண்டேயிருக்கும் ஒரே சிறு காஸ் விளக்கினை ஏற்றிவிட்டு காவல்காரன் வெளியேறினான். வெளியே பூட்டப்பட்டு உருவப்படும் சாவியின் ஓசையை இங்கே டாமி கேட்டான்.

அவனது சிறையைப்பரிசோதனையிடும் ஜோலியில் இறங்கினான் டாமி. கீழேயிருந்த அறையை விட சிறிய அறை இது. உள்ளே நிலவிய இறுக்கத்தால் காற்றற்ற நிலைமை இங்கிருப்பதாய் உணர்ந்தான். இதற்குக் காரணம் தேடியபோது, இவ்வறைக்கு ஜன்னல்கள் இல்லை என்பதை அறிந்தான். ஒரு சுற்று நடந்து வந்தான். மற்ற இடங்களைப் போலவே இங்கும் அழுக்கும் தூசுமாய் பிசுக்கேறிக் கிடந்தது சுவர். நான்கு,சட்டம் போடப்பட்ட படங்கள் சுவரில் அங்குமிங்குமாய் விதிதாச்சாரமற்றுத் தொங்கின. இயற்கைக் காட்சி - 'மார்குரெட்' எனப் பெயரிடப்பட்டு, அணிகலன்கள் பொங்கி வழியும் நகைப்பெட்டியை அவள் தழுவிக் கொண்டிருப்பதாய் வரையப்பட்டிருந்த ஒரு தேவைதையின் படம் - கர்த்தரின் ஓவியம் - விலங்குகள் நிறைந்த ஒரு காட்டின் காட்சி. சீல் வைக்கப்பட்டது போல் கடினமான மரக்கதவால்

மூடப்பட்ட இந்த அறையுள் இருப்பதை, உலகின் ஏனைய அனைத்திலிருந்தும் பிரிக்கப்பட்ட ஒரு நரகமாய் உணர்ந்தான் இவன். முடிந்தவரை இவன் கத்திப் பார்க்கலாம். யாரும் கேட்கப்போவது கிடையாது. இது - ஒரு வாழும் காராக்கிரகம். ஜன்னல்களற்ற, சுத்தமற்ற, பாறாங்கற்களால் சுவர் ஏழுப்பப் பெற்ற, ஒரு பாதாளச் சிறை.

கஷ்டப்பட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அடங்கினான் டாமி. அங்கிருந்த படுக்கையில் படுத்துக் கொண்டு தன்னை அப்படியே சிந்தனைகளுக்குள் அர்ப்பணித்துக் கொண்டான். அவன் தலை தாள முடியாமல் வலித்தது. கூடவே பசி வேறு. அறையின் கனமான அமைதி, மன நம்பிக்கையைக் குலைத்தது.

''எதெப்படியோ....'' என்று தன்னைத் தானே உற்சாகப்படுத்திக் கொள்ள முயற்சித்த டாமி, ''நான் தலைவனை - ரகசியங்கள் நிறைந்த மிஸ்டர் ப்ரௌனைப் பார்ப்பேன். முட்டாளாக்க முயற்சி செய்யும் போதெல்லாம் படு வெற்றி உண்டு என்ற ஜாதகம் கொண்டுள்ள நான். அவரையும் ஏதாவது பேசி கவிழ்ந்து - ஜானே ஃபின்னையும் பார்க்கலாம். அதற்குப் பிறகு - ---''

அதற்குப் பிறகு?

அதற்குப்பிறகு முன்னேற்றங்கள் மிகவும் சஞ்சலம் தருவதாய் இருப்பதை, டாமியே ஒப்புக் கொண்டான்....

அத்தியாயம் - 17

ஆனெட்

எதிர்கால கேள்விகள் ஏற்படுத்தித் தந்த சஞ்சலம், நிகழ்கால சஞ்சலங்களுக்கு முன்னால் விரைவாகவே காணாமல் போனது. இவற்றில், உடனடியாகவும் ஆரவாரமாகவும் அழுத்திய அவதி - *பசி!* டாமிக்கு ஆரோக்கியமான மேலும் அள்ளி அள்ளி வெட்டத் தோன்றும் வயிறு உண்டு. குச்சிக் குச்சியாய் லஞ்சுக்குத் தரப்பட்ட 'சிப்ஸ்' வகையெல்லாம் ஏதோ போன நூற்றாண்டில் சாப்பிட்டவைப் போல ஆகிவிட்டன, இவனுக்கு. வயிற்றுக்குள் பசி நடத்தும் போராட்டத்துக்கு முன்னால் இவன் ஜெயிக்க முடியாது என்று பரிதாபமாய் அறிந்தான் டாமி.

சிறையைச் சுற்றி இரை தேடும் புலியாய் அலைந்துப்பார்த்தான் இவன். ஓரிரு முறை தனது சுய மரியாதையைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு கதவைத் தட்டியும் அதன் சிறு இடுக்கு வழியாக யாராவது தெரிகின்றார்களா என்பதற்காக எகிறிக் குதித்தும் வித்தைகளில் இறங்கினான். ம்ம்.. இவ்வேலைகளால் பசி கூடியது தான் மிச்சமாயிற்று. இவன் அழைப்புகளுக்கு பதில் தருவாரில்லை.

''தூக்குல போடுங்க எல்லாரையும்'' என்று கோப எரிச்சலில் கத்தினான். ''என்னைப் பட்டினி போட்டுக் கொல்ல அவனுங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.'' இப்படிச் சொன்னவுடனேயே புதிதாய் பிறந்த பயம் ஒன்று அவன் குடலைப் பிடுங்கிற்று, ஒரு வேளை, இது, சிறையாளியைப் பேச வைக்க, அந்த போரீஸ் கையிலெடுத்துக் கொள்ளும் பல வழிகளில் ஒன்றாயிருக்குமோ? மறுபடி ஒரு முறை இதையேச் சிந்தித்துப் பார்த்ததில் இந்த எண்ணத்தை இவனே மறுதலித்தான்.

''அவன் திட்டம் கிடையாது. இது, இவன் திட்டம் - குண்டு காவல்காரப்பய. இவனை ஒரு நாள், என் மனசார.... ஆர்வமா திமிசுப் போட்டாத்தான் எனக்கு ஆறும். நிச்சயமா இந்த நாயோட திட்டம் தான் இது - இந்தக் கூட்டத்துக்கு இவனால ஆன கைமாறு!''

இந்த எண்ணத்தின் மீதே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த போது, அந்தக் குண்டனின் முட்டை வடிவ சொட்டை மண்டையில், பளீர் என்று ஓசையெழுப்பி உடைக்கவல்ல எதையாவது வேகமாய் இறக்கி ரெண்டாகப் பிளந்தால் எத்தனை இன்பகரமாயிருக்கும் எனத் தோன்றியது. அந்த இன்பத்தை இப்போது நேரிலேயே அனுபவித்ததைப் போல தன்னை அந்தக் கற்பனைக்குள் இறக்கிக் கொண்ட இவன், மெலிதாய் தலையசைத்து ஆமோதித்தும் கொண்டான். இதனால், ஒரு பிரகாசமான திட்டம் இவன் மனதுக்குள் டாலடித்தது. ஏனிந்தக் கற்பனையை நிஜத்தில் பண்ணி விடக்கூடாது! காவல்காரன், சந்தேகத்துக்கிடமின்றி இதே வீட்டில் வசிப்பவன்; மற்றவர்கள் (இப்போதைக்கு ஜெர்மானியனைக் கணக்கில் சேர்க்காமல் பார்த்தால்), இந்த வீட்டினைக் கூடி அளவளாவ ஓர் ஒதுங்குமிடமாகத் தான் பயன்படுத்துகிறார்கள். எனவே, குண்டன் வருவான் என்று எதிபார்த்து, கதவுக்குப் பின்னாலேயே ஒளிந்திருந்து, அவன் நுழையும் போது மின்னல் வேகத்தில் வழிமறித்து, கனமான அந்த நாற்காலியையோ, அல்லது தொங்கும் கனமான படங்களில் ஒன்றையோ, அவனுடைய மைதான மண்டையில் ஏன் இறக்கக் கூடாது?! அவனே போய் விடும் அளவுக்கு 'உடைக்காமல்' இருக்க வேண்டிய ஒரே ஒரு ஜாக்கிரதை தான் இதில் முக்கியம். இதன் பிறகு? பிறகு, வெற்றி நடை தான்! கீழிறங்கித் தப்பியோடும் போது யாரேனும் பார்த்துவிட்டால்! ஓஹ்.. சற்று முன் முகத்தில் வாங்கிய குத்து! அதே போன்ற குத்துக்கள், இப்படிப்பட்ட சாகச துப்பறியும் முயற்சிகளில், ஒன்றிரண்டோடு முடியாமல் எண்ணிக்கைகளற்று இருக்கும் என்று இவனை எச்சரித்தது. ஆயினும் தனது திட்டத்தால் பரவசமான டாமி, தொங்கிய கனமான சதுரப்படங்களில் ஒன்றினை மெல்லமாய் கழற்றி இறக்கினான். இந்தத் திட்டத்தில் இவனுடைய எதிர்பார்ப்புகள் அநேகம். இத்திட்டம் எளிமையானதாகவும் அதே சமயம் புத்திசாலித்தனமானதாகவும் பட்டது இவனுக்கு!

நேரம் தான் கடந்து போய்க் கொண்டிருந்ததே ஒழிய, காவல்காரன் வரவில்லை. சிறை அறைக்குள் காலையும் மாலையும் ஒரே அழகாய்த்தான் தோன்றின. ஆனால், செவ்வனே ஓடிக் கொண்டிருந்த டாமியின் கைக்கடிகாரம் மணி ஒன்பது என்றது. இரவு ஒன்பது! இரவுச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு இப்போது அவன் வராவிட்டால் மறுநாள் காலை சிற்றுண்டி வரை காத்திருக்க நேர்ந்து விடும் எனும் எண்ணம், டாமியை மனச்சோர்வடையச் செய்தது. மணி, பத்து. வெறும் திட்டத்தை மட்டும் கலந்துக் கொண்டு தனிமையானான் இவன். தூக்கத்தில் ஆறுதலடைய மெத்தைக்குத் தாவினான். ஐந்தே நிமிடங்கள் தான்... இவன் துக்கங்கள் மறந்த ஆனந்தம், தூக்கத்தில் கிடைத்தது.

கதவில் சாவி போட்டு குலுக்கிய ஓசை, ஆழ்ந்த நித்திரையிலிருந்து டாமியை உலுக்கி எழுப்பியது. தனது உடலியக்கம் முழுவதையும் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தபடி பட்டென விழித்தெழும் சினிமா கதாநாயகனைப் போல அல்ல - நமது நாயகன். உத்திரத்தைப் பார்த்து வெறுமனே மலங்க மலங்க விழித்த டாமி, தானிருப்பது எங்கே என்று சில கணங்கள் வியந்துத் தான் போனான். பிறகு விஷயங்கள் நினைவுக்கு வர கைக்கடிகாரத்தைப் பார்த்தான் மணி எட்டு - காலை!

'காலை டிபனோ... இல்லே காபியோ!' எனக் கணக்கிட்ட இளைஞன், "ஆண்டவா... முதலாவதா இருந்துடக் கூடாதா!" என வாய் விட்டே ஏங்கினான்.

கதவு அரை வட்டமடித்துத் திறந்தது. இது நிகழ்ந்த பிறகு தான், டாமி, குண்டனை அடித்து நிலை தடுமாறச் செய்ய, தான் போட்டிருந்த திட்டத்தையே நினைத்துக் கொண்டான். நொந்துக் கொள்ள இவனுக்கு அவகாசம் தராது, மறந்து தூங்கி விட்டதால் இந்த முறை பாதகம் ஒன்றும் இல்லை என இவன் ஆசுவாசப்படும்படி, உள்ளே நுழைந்தது, ஓர் இளைய கன்னி- அந்தக் குண்டு காவல்காரனல்ல. அவள் கையில் ஒரு பெரிய தட்டினைச் சுமந்து வந்திருந்தாள். அதனை அங்கிருந்த டேபிளில் நழுவ விட்டாள்.

ஒளி கம்மியாய் எரிந்துக் கொண்டிருந்த காஸ் விளக்கின் சன்னமான ஒளியில் பார்வையை விழிப்பாய் வைத்துக் கொண்டு அவளை ஆராய்ந்தான் டாமி. உடனேயே, அக்கணமே, தான் இது வரை சந்தித்தப் பெண்களிலேயே அப்ஸரஸ் அழகு கொண்ட ஒரே பெண் இவள் தான் என்று முடிவு கட்டி விட்டான். அவளுடைய கூந்தல், ப்ரவுன் நிறத்தில் துள்ளித் துள்ளி வழுவழுத்தது. அப்போதெல்லாம் அதன் இடுக்குகளில் யாராவது தங்க மணிகளைக் கோர்த்துப் புதைத்து வைத்திருக்கிறார்களோ என வியக்கும் வண்ணம் கூந்தலின் அடியிலிருந்து மினுமினுப்புகள் விளைந்துப் பரவின. ரத்தச் சிகப்பு ரோஜாவின் தரம் - அவள் முகம். சாதாரணமாகவே அகண்டிருந்த அவளது பெரிய விழிகள் பழுப்பு நிறத்தில் ... தங்கப் பழுப்பு நிறத்தில் அமைந்திருந்து, மீண்டும் தங்க மணிகள் குறித்த அனுமானத்தை உண்டு பண்ணின.

மளமளவென ஒரு பரவசமான நினைப்பு அவனுக்குள் உருவெடுத்தது.

' நீ .. ஜானே ∴பின்னா?" - மூச்சடைக்கக் கேட்டான் இவன்.

அதிசயமாய் இவனைப் பார்த்தபடி மறுத்துத் தலையசைத்தாள் அந்தப் பெண். "ஸார்-என் பேர் ஆனெட், ஸார். " மெலிதான குரலில் பேசினாள் அவள்.

''ஒஹ்'' - தூக்கி வீசப்பட்டவனாய் குறிப்பிட்டான் இவன். ''ஃபிரான்ஸ்?''

''ஆஹ்...! ஆமாம். ஸாரும். ஃபிரான்ஸா?''

''ரொம்ப நாளெல்லாம் அங்கே தங்கலே'' என்றவன், ''என்னது அது? டிபனா?'' என்றான்.

ஆமென்று தலையசைத்தாள் அவள். டாமி படுக்கையிலிருந்து இறங்கி வந்து அதிலிருந்தவற்றை நோட்டம் விட்டான். ஒரு ரொட்டித் துண்டு. துளி ஜாம். ஒரு கூஜா காபி.

''ம்...'' என்று பெருமூச்சு விட்டவன் நினைத்துக் கொண்டான். 'இங்கு வாழ்க்கை ரிட்ஸ் மாதிரி இருக்காது, போல! நமக்கு இன்னிக்கு எத்தனை அரிசியோ அத்தனையைத் தானே இறைவன் போடுவான்.'

ஒரு நாற்காலியை இழுத்துக் கொண்டு தட்டுக்கு அருகே இவன் அமர, அந்தப் பெண் கதவு நோக்கிப் போனாள்.

''ஒரு நொடி, ப்ளீஸ்'' - கத்தி விட்டான், டாமி. ''உன்கிட்டே நான் கேட்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு, ஆனெட். போயிடாதே! இந்த வீட்டில நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்கே? காவல்காரனோட பெண்ணு... பேத்தி... இப்படி ஏதாவது உறவு முறையைச் சொல்லிடாதே - நான் நம்ப மாட்டேன்.''

''நான் இங்கே இருக்கிறவங்களுக்குப் *பணிவிடை* பண்றேன் ஸார். நான் யாருக்கும் உறவு கிடையாது.''

''ஓஹோ...'' என்றான் டாமி. ''உன்னை இப்போ நான் கேட்டது பற்றி ஏதாவது தெரியுமா? அந்தப் பேரை நீ எப்பவாவது கேட்டிருக்கியா?''

''இங்கேயிருக்கிறவங்க ஜானே ஃபின்'னுனு பேசக் கேட்டதா, ஞாபகம்.''

''அவ எங்கேயிருக்கானு உனக்குத் தெரியுமா?''

ஆனெட் மறுத்துத் தலையசைத்தாள்.

''உதாரணத்துக்கு.... இந்த வீட்டுல அவ இருக்காளா?''

''ஓ, நோ, ஸார். நான் இப்போ போயாகணும் - அவங்க எனக்காகக் காத்திருப்பாங்க.''

அவள் அவசர அவசரமாய் போனாள். கதவின் வெளியே சாவித் திருகி எடுத்துக் கொள்ளப்பட்டது.

''அவங்கனா யாரு? விளங்கலே' - ரொட்டித் துண்டைச் சுவைத்தபடி நினைத்துக் கொண்டான் டாமி. 'வழக்கமான நம் அதிர்ஷ்டத்தைப் பிரயோகிச்சு இங்கிருந்து தப்பித்து வெளியேற, அழகி உதவலாம். இந்தக் கூட்டத்தின் ஓர் ஆளா அவள் தோணலே.'

ஒரு மணிக்கு இன்னொரு தட்டைத் தூக்கிக் கொண்டு ஆனெட் மறுபடியும் பிரவேசித்தாள் - ஆனால் இம்முறை, கூடவே காவல்காரனும்.

அவனுக்கு, ''குட் மார்னிங்'' என்று நட்பு பாராட்டிச் சொன்ன டாமி, ''இன்னிக்கு சோப்பு போட்டு குளிக்கலையோ!'' என்றான்.

காவல்காரன் பயமுறுத்தும் ஒலியில் உறுமினான். ''விளையாட்டை ரசிக்கத் தெரியாதா!'' என்ற டாமி, தன் தலையைத் தட்டிக் காட்டி, 'அதுல ஒன்னும் கிடையாதா...?' என்பது போல கிண்டலாய்ச் செய்துவிட்டு தொடர்ந்தான்: ''இன்னிக்கு லஞ்சுக்கு என்ன? மீன்? அப்படித்தானே? ஏய், குண்டுப் பையா!நான் எப்படிக் கண்டுபிடிச்சேன் சொல்லு...? ஆஹ்ஹா... உனக்குத் தெரியாது! வெங்காயம்ப்பா... அதுவும் மீனும் சேர்த்துத் தூக்கும் வாசனை! எப்படி...?!''

''பேசுடா, பேசு'' என பற்களை நறநறத்தான் காவல்காரன். ''நீ எத்தனை நேரம் பேசப்போறே? கொஞ்சநேரம்... அவளோ தானே!''

டாமி இவ்வார்த்தைகளை ஒதுக்கினான். ''நீ கிளம்பலாம்'' என்றான். நாடகத்தனமாய்க் கைகளை வீசி, மகாராஜா தோரணையில். ''ரசனையற்ற வர்கள் என் ராஜாங்கத்தில் தேவையில்லை.''

''வெக்கக்கறேன்.''

வந்த இருவரும் சென்றனர்.

அன்று மாலை படுக்கையில் உட்கார்ந்துக் கொண்டு மனத்திலிருந்த வற்றை சீர் தூக்கிப்பார்த்து ஆழ்ந்து யோசிக்கலானான். மறுபடியும் காவல்காரன் அந்தப் பெண்ணோடு சேர்ந்து வருவானா? அப்படி அவன் வராவிட்டால், வரும் அழகியோடு கூட்டணி ஒன்றினை அமைத்துக் கொள்ளும் ஆபத்தான முயற்சியில் இவன் இறங்கலாமா? எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற நிலையில் இவன் இருந்தபடியால் எந்தக் கல்லையுமே எறிந்துப் பார்க்காமல் விட்டு விடக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான்.

எட்டு மணி சுமாருக்கு, இவனுக்கு பழக்கப்பட்டுப் போயிருந்த சாவி திருகும் ஓசையெழுந்தது. காலில் சக்கரம் கட்டிய பரபரப்பானான். அவள் தனியே வந்திருந்தாள்.

'கதவை மூடு' - கட்டளையிட்டான். ''நான் உன் கூட பேசணும்.''

அவள் கட்டுப்பட்டாள்.

''கவனி, ஆனெட், இங்கேயிருந்து நான் கிளம்ப உன் உதவி வேணும்.''

அவள் மறுத்துத் தலையசைத்தாள், ''சாத்தியமேயில்லை. கீழ்த்தளத்துல அவங்கள்ல மூணு பேர் இருக்காணுங்க.''

''ஓ...!'' இத்தகவலுக்காக ரகசியமாய் அவளைப் புகழ்ந்தான், டாமி. ''ஆனாலும், நீ மனசு வெச்சா, எனக்கு உதவ முடியும்.''

''முடியாது, ஸார்.''

''ஏன், முடியாது?''

இதற்கு அந்தப் பெண் தயங்கினாள். ''அதாவது - அதாவது- அவங்க எல்லாரும் என் ஆளுங்க... நீங்க அவங்களைப் பின்தொடர்ந்து உளவு பார்த்திருக்கீங்க... அவங்க உங்களை இங்கே வெச்சிருப்பது ரொம்ப சரி தான்.''

''அந்தக் கூட்டமே ஒரு மோசமான குப்பை, ஆனெட். நீ மட்டும் எனக்கு உதவி பண்ணினா, இந்த சதிகாரக் கூட்டத்திலிருந்து உன்னையும் சேர்த்து நான் வெளியில கூட்டிட்டுப் போறேன்.''

ஆனால் அந்தப் பெண் வெறுமனே மறுத்துத் தலையசைப்பதிலேயே இருந்தாள்.''என்னால இதெல்லாம் நிச்சயமா முடியாது ஸார். எனக்கு அவங்க'னால பயமாயிருக்கு.''

அவள் திரும்பி விட்டாள்.

''நீயும் ஒரு பெண் தான். நீ, இன்னொரு பெண்ணுக்கு உதவ நினைக்கவே மாட்டியா?'' - கத்தினான் டாமி. ''உன் வயசு தான் அவளுக்கும் - தெரிஞ்சுக்கோ. இவனுங்கப்பிடியிலிருந்து அவளை நீ காப்பாற்ற மாட்டியா?''

''ஜானே ஃபின்'னையா சொல்றீங்க?''

''ஆமாம்.''

''அவளைப் பார்க்கவா நீங்க இங்கே வந்தீங்க? ம்?''

''அதே.''

அந்தப் பெண் திரும்பி இவனைப் பார்த்து விட்டு தன்னிச்சையாய்த் தனது விரல்களை நெற்றியில் தடவ விட்டாள். ''ஜானே ஃபின். இந்தப் பேரை நான் எப்பவும் கேள்விப்படறேன். எனக்கு இது மிக பரிச்சியமாயிருக்கு.''

டாமி ஆர்வமாய் முன்னுக்கு ஓடி வந்தான். ''உனக்கு அவளைப் பற்றி என்னவோ தெரிஞ்சிருக்கு...ம்?''

ஆனால் அந்தப் பெண் மீண்டும் அறுத்துக் கொண்டு திரும்பி விட்டாள். ''எனக்கு ஒண்ணும் தெரியாது - *வெறும் பேரைத் தவிர்*'' என்ற அவள் கதவு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அப்போது திடீரென்று அப்படி ஓர் அலறல் அலறினாள் அவள். முந்தைய நாள் இரவு டாமி அவிழ்த்துக் கீழே வைத்திருந்த படத்தை அவள் பார்க்க நேரிட்டதால் இந்த அலறல். கண நேரம்... ஆனெட்டின் விழிகளில் தகதகத்தக் கிலியின் வீரியத்தைப் படித்து விட்டான் டாமி. உடனேயே மாயமாய் அவளை உலுக்கியிருந்த கிலி மறைந் தும் போனது. பின், திடீரென, அவசரமாய் வெளியேறிப் போனாள் அவள்.

''அதை வைத்துக் கொண்டு அவளை அடித்து நொறுக்க நான் திட்டமிட்டிருக்க வேண்டும் என கற்பனை செய்திருப்பாளோ? நிச்சயம்

அப்படியெல்லாம் எதுவும் இருக்காது''. நினைத்துக் கொண்டே, படத்தினை எடுத்து மறுபடியும் அதனிடத்திலேயே சுவரில் மாட்டி வைத்தான் டாமி.

சஞ்சலமான மனத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் இல்லாமல் மூன்று முழு நாட்கள் ஓடிப் போயின. தனது நரம்புக்குள் இறுக்கங்கள் கூடிக் கொண்டே போவதை உணர்ந்தான் டாமி. காவல்காரன் மற்றும் ஆனெட்டைத் தவிர இவன் வேறு ஒரு நாதியைப் பார்க்கவில்லை. அதிலும், அந்தப் பெண், இப்போதெல்லாம் முழு ஊமையாகிப் போனாள். கேட்ட கேள்விக்குப் பதில் எனும் ரீதியில் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே அவள் பேசினாள். இருண்ட சந்தேகம் அவளது துள்ளும் விழிகள் முழுவதும் மேவிக் கிடந்தது. இன்னும் இத்தனிமை வாழ்க்கை நீண்டுக் கொண்டே போனால் வெகு சீக்கிரத்திலேயே தனக்குப் பைத்தியம் பிடித்து விடும் என்று உணர்ந்தான் டாமி. காவல்காரன் மூலமாக, மிஸ்டர் ப்ரௌனிடமிருந்து கட்டளைகளை எதிர்ப்பார்த்துக் கூட்டம் காத்திருக்கும் சேதி இவனுக்குக் கிடைத்தது. 'ஒரு வேளை, 'அவன்', வெளிநாடு போயிருக்கலாம்... அல்லது உடனே வர முடியாமல் இருக்கலாம்....இவர்களுக்கோ காத்திருப்பதை விட வேறு வழியே கிடையாது., காத்திருக்கிறார்கள். 'அவன்' வருகைக்காக...' நினைத்துக் கொண்டான் டாமி.

ஆனால், மூன்றாவது நாளின் மாலைப்பொழுது, ஒரு மூர்க்கத்தமானத் திருப்பத்தைச் சுமந்து வந்தது.

சிறை அறைக்கு வெளியேயிருந்த நடைபாதையில் கலவையாக காலடி ஓசைகளை இவன் கேட்ட போது மணி ஏழிருக்கலாம். அடுத்த நிமிடத்தில் பூட்டுத் திறக்கப்பட்டு கதவு அரை வட்டமிட்டுத் திறந்தது. காவல்காரன் நுழைந்தான். அவனுடன், பேய்ப் போல தோன்றும் எண் பதினான்கு. அவர்களைப் பார்த்த நொடியே டாமியின் இதயத் துடிப்பு அமுங்க ஆரம்பித்தது.

''ஈவினிங், மன்னா...!'' என்றான் காவல்காரன் ஏளனமாய். ''கயிறு கொண்டு வந்திருக்கோம், கயிறு.''

உருட்டிக் கையில் வைத்திருந்த கனமான ஒரு கயிற்றினை, வந்திருந்த எண் பதினான்கு அவிழ்த்து நீளத் தொங்க விட்டது. அவனுடைய வலக்கை, கொடூரமாய் இயங்கி, இவனுடைய அங்கங்கள் அனைத்தையும் சேர்த்து லாகவமாய்க் கட்டிக் கொண்டு போனது. திமிறிய இவன் அசையவே முடியாத வண்ணம், குண்டனின் அழுத்திப் பிடித்த பிடி பார்த்துக் கொண்டது.

''முண்டங்களா.... என்ன நடக்குது இங்கே?'' - ஆரம்பித்தான் டாமி. ஆனால், மெதுவாகவும் அதே சமயம் அதீத இறுக்கத்துடனும் டாமியின்

உடலைப் பிடித்துக் கொண்டு வார்த்தைகளற்று செயல்பட்டுக் கொண்டிருந்த காவல்காரனின் இயக்கம், ஆரம்பித்த இவனை மேற்கொண்டு பேச விடாது கட்டிப் போட்டது.

ஈடுபாட்டோடு தனது பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்தான் எண் பதினான்கு. அடுத்த நிமிடத்தில், டாமி, சுயமாய் ஏதும் செய்துக் கொள்ளயியலாத, வெறும் ஒரு மூட்டையானான்.

''எங்களை முட்டாளாக்கியாச்சு'னு நினைச்சுக்கிட்டிருந்தியா? ம்? உனக்குத் தெரிஞ்சது தெரியாதது எல்லாத்தையும் போட்டுத் திரட்டி - எங்ககிட்டேயே சவால், ம்...?!நீ பேசிய ஒவ்வொண்ணும்... ஒவ்வொரு வார்த்தையும் - *பித்தலாட்டம்!* ஒரு அங்குல நீளத்துக்குக் கூட உனக்கு எந்த விஷயமும் தெரியாது. *தெரியாது.* ஆனா நீ சொன்ன நம்பர் மட்டும் ரொம்பச் சரி.... அதை நம்பி சாஞ்சோம்டா நாங்க, நாய் மகனே!''

டாமி அமைதியாய் வீழ்ந்துக் கிடந்தான். இனி சொல்வதற்கு இம்மி கிடையாது. இவன் - தோற்று விட்டான். உண்மைப் போல வாயில் வந்ததை யெல்லாம் சொல்லிக் இவன் நடித்துக் கொண்டிருக்கிறான் என்பதை, எப்படியோ, எந்த சக்தி கொண்டோ, ஒரே ஒரு சக்தியாய் திகழ்ந்துக் கொண்டிருக்கும் மிஸ்டர் ப்ரௌன் கண்டு கொண்டு விட்டான். இப்போதும் - திடீரென்று ஓர் எண்ணம் டாமிக்கு வந்தது.

''ரொம்பச் சரியா பேசிட்டீங்க... '' என்றான், ஒப்புக் கொள்ளும் தினுசாய். ''அப்ப எதுக்கு இந்த கட்டும், விலங்கும்? இதோ நிற்கும் குண்டு வில்லன், இங்கேயே, இப்பொழுதே, ஏன் என் கழுத்தை அரிந்து எறிந்து விடக் கூடாது?''

''எல்லாத்துக்கும் இப்படி எதையாவது பேசிப் பேசி எங்களை திசை திருப்பித் தான்...'' - சொல்லி விட்டு தனது காலால், கிடந்த டாமியை ஓர் எத்துவிட்டான் எண் பதினான்கு.

''கேட்டதுக்குப் பதில்?'' என்று, நிலைமையின் தீவிரம் அறியாது, தனது விடலை முயற்சியை விடாமல் தொடர்ந்தான் டாமி.

''சொல்றேன்டா'' என வாயைத் திறந்தான் எண் பதினான்கு. ''உன்னை இங்கே போட்டுத் தள்ளிட்டு போலீஸுக்கு வசதியா ஒரு துப்பை விட்டு வைக்க எங்களை என்ன கேனையனுங்க'னு நினைச்சியா? உன்னை எல்லாம் வல்ல இறைவனிடம் பார்ஸல் பண்ண நாளை விடிகாலைல ஒரு வண்டியை வரச் சொல்லியிருக்கோம். ஆனா, அதுக்குள்ளே உன்கிட்டே எந்த விதமான ரிஸ்க் எடுக்கவும் நாங்க விரும்பலே. நீ இருக்கியே... ஊஃப்!''

டாமி, புன்னகைத்தான்! ''சந்தோஷம், சந்தோஷம்'' என்றான்! ''ரொம்பப் பெரிய தப்பை செஞ்சுக்கிட்டிருக்கீங்க. இழப்பு - உங்களுக்குத்தான்!''

''நிறுத்தறானா பாரு. இது போல இனி எங்களை ஏமாத்த முடியாது, ப்பூ...!'' என்றான் எண் பதினான்கு. ''ரிட்ஸுல மெத்தையில படுத்திருப்பதா நினைப்பு, ம்? மவனே இப்படியே கால் கட்டிக் கிட. ஒரு மணி நேரம் போனா தெரியும்....!''

டாமி மறுபதில் தரவில்லை. மிஸ்டர் ப்ரௌன் எப்படி தன்னுடைய இருப்பிடத்தைத் துல்லியமாக அறிந்தான் என்பதில் வியந்துக் கிடந்தான் இவன். 'இந்த டூபென்ஸ், நான் காணவில்லை என்ற அவஸ்தையில், குடுகுடுவென போலீஸுக்கு ஓடிப் போய் கம்ப்ளெயிண்ட் தந்திருக்க வேண்டும்... அது பொது ஜனக் கூட்டத்தில் ஏதோ ஒரு வகையில் விளம்பரமாகிப் பரவியிருக்க வேண்டும்... இந்தக் கொலைகாரக் கூட்டம் அது தான் என்று உள்ளங்கையில் அறிந்திருக்கும்...'

இரண்டு மனிதர்களும் அறையை விட்டு வெளியேற, கதவு அறையப்பட்டது. தனிமையில் சிந்திக்கத் தன்னை அனுமதித்துக் கொண்டான் டாமி. நடப்பது இவனுடைய உடம்புக்கு அனுகூலமாய் இல்லை. ஏற்கெனவே கயிறால் இறுக்கப்பட்ட உடம்பின் அங்க அவயங்கள் மரத்துப் போய்த் துடிக்க ஆரம்பித்து விட்டன. கிஞ்சித்தும் உதவி இல்லாமல் ஆக்கப்பட்ட டாமிக்கு, எத்திசையிலிருந்தாவது உதவி வரும் என்ற நம்பிக்கை துளியும் இல்லாமல் ஆயிற்று.

ஒரு மணி நேரம் ஆன பிறகு, கதவில் சொருகப்பட்ட சாவி சன்னமாய் திருகப்பட்டு கதவு திறக்கப்படும் காட்சி தெரிந்தது. அது ஆனெட். டாமியின் இதயம் இப்போது அதிகம் துடிக்க ஆரம்பித்தது. ஓ... இவன் அந்தப் பெண்ணையே மறந்து விட்டிருக்கிறான். ஒரு வேளை, அந்தப் பெண், இவனைக் காப்பாற்றித் தப்பிக்க விடும் திட்டத்தோடு வந்திருக்க சாத்தியமுண்டா?

திடுமென காவல்காரனின் குரலைக் கேட்டான் டாமி : ''வெளியே வா, ஆனெட் அவனுக்கு இன்னிக்கு ராத்திரி பச்சைத் தண்ணீ கிடையாது. கொலை பட்டினி, ஆமாம்.''

''ஓ. ஆமாம், ஆமாம். ஆனா நான் வெச்ச இன்னொரு தட்டை எடுத்துக்கிட்டு வரணும். அதுல இருக்கிற சாமான்கள் வேணும்.''

''சரி, சீக்கிரம், சீக்கிரம்'' - குமுறினான் குண்டன்.

டாமியைப் பார்க்காமலேயே அவள் அங்கிருந்த ஒரே மேஜை வரை விரைந்து தட்டைக் கைப்பற்றினாள். உடனேயே கையைத் தூக்கி எரிந்துக் கொண்டிருந்த விளக்கை ஒரு வீசு வீசி அணைத்தாள்.

''அறிவுகெட்ட முண்டமே...'' - வாசல் வரை இப்போது வந்திருந்தான் காவல்காரன். ''ஏன் அப்படி செஞ்சே?''

''நான் எப்பவுமே அணைச்சுடுவேன். அணைக்க வேணாம்னா என்கிட்டே நீங்க சொல்லியிருக்கணும். நான் மறுபடியும் ஏத்தட்டுமா, வாட்ச்மேன் ஸார்...!''

''ஒரு மண்ணும் வேணாம். அங்கிருந்து முதல்ல வெளியே வா.''

''இதோ, உங்க ஆணைப்படி, ஸார்'' என அலறலாய்ச் சொன்னாள் ஆனெட், படுக்கையைக் கடந்தபடி. ''ஓ, இவனைக் கட்டிப் போட்டிருக்கீங்களா! வெட்டித் தொங்கவிட்ட கோழி மாதிரி இருக்கான்.'' - வெளிப்படையாக அவள் குரல் காட்டின கொண்டாட்டம் இவனை அதிர வைத்தது. ஆனால், அதே நொடியில், டாமியினுடைய ஆச்சரியத்துக்குத் தீனி போடும் வகையில் இவனைக் கட்டிப் போட்டிருந்த கட்டினை அவளுடைய மிருதுவான கை மெதுவாய் கடந்துப் போவதையும் அப்போது சின்னதாயும் ஜில்'லென்றும் ஒன்று இவனுடைய உள்ளங்கையில் அமுக்கித் திணிக்கப்படுவதையும் உணர்ந்தான்.

''வாடீ வெளியே, ஆனெட்.''

''இதோ, இதோ, ஸார்.''

தொடர்ந்து கதவு மூடப்பட்டது.

''ம், கதவைப் பூட்டு. சாவியை என் கிட்டே கொடு.''

காலடிகள் தேய்ந்து மறைந்தன. ஆச்சரிய அதிர்ச்சியில் முற்றுகையிடப் பட்டுக் கிடந்தான் டாமி. ஆனெட், டாமியின் கையில் திணித்துச் சென்ற பொருள் ஒரு பேனா கத்தி - அதன் கத்தி முனை திறந்த நிலையில். இவன் இருக்கும் நிலையினைக் கவனிப்பதை அவள் ஜாக்கிரதையாய்த் தவிர்த்தே நடந்துக் கொண்ட முறையிலிருந்தும், விளக்கினை அணைத்து அவள் நடவடிக்கைளை அரங்கேற்றிய விதத்திலிருந்தும், இந்த அறையானது ஓசைப்படாமல் கவனிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்துக் கொண்டான் இவன். சுவரிலேயே, பார்க்க உதவும் துளை ஒன்று எங்காவது இருக்க வேண்டும். அவளுடைய நடவடிக்கைகளில் எப்போதுமே ஒரு பாதுகாப்புப் போர்வையை மூடிக் கொண்டே ஆனெட் இயங்கி வந்திருப்பதை நினைவுபடுத்தி பார்த்த டாமிக்கு, ஒவ்வொரு நொடியும், இவனும் கூட கண்காணிப்பில் தான் வைக்கப் பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. எனில், தன்னைத் தானே காட்டிக் கொடுத்துவிடும் விதமாய் இவன் எதையாவது உளறியிருக்கின்றானா? அப்படி ஏதும் கிடையாது. இங்கிருந்து தப்பிப்பதற்கு தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறான். பிறகு ஜானே ஃபின்னைக் கண்டுபிடிக்க இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தி யிருக்கிறான். இவையெல்லாம் இவன் யாரென்ற அடையாளத்தைக் காட்டிக் கொடுக்கப் போதாதவை. ஜானே ஃபின் பற்றி உரையாடல் போனபோது

எழுந்தக் கேள்விகளில், இவனுக்கும் அவளுக்கும் எவ்வித அறிமுகங்களும் கிடையாது என்பது தெரிய வந்தது. ஆனால் அப்போதும் அவளைத் தெரிந்த மாதிரி இவன் காட்டிக் கொள்ளவேயில்லை. ஆக, இப்போது மிஞ்சும் ஒரே முக்கியமான கேள்வி. ஆனெட்'க்கு மேலும் விஷயங்கள் தெரியுமா? இல்லை என்கிற அவள் மறுப்புகளெல்லாம் தேர்தல் நேரத்து வாக்குறுதிகளா?! இந்தக் கேள்விகளில் அவனால் எவ்வித முடிவுக்கும் வர முடியவில்லை.

ஆனால், மற்ற கேள்விகள் அனைத்தையும் ஓரங்கட்டி விட்டு, இப்போது, மிக முக்கியமான மற்றும் வலுவான கேள்வி ஒன்று இவன் முன் வந்து நின்றது! இப்படித் திமிங்கிலம் போல் இயக்கமற்று விழுந்துக் கிடக்கும் நிலையில், இவனால் கட்டுகளைக் கழற்றிக் கொள்ளத்தான் முடியுமா? இவனுடைய இரண்டு மணிக்கட்டுகளையும் ஒன்றோடு ஒன்றாக சேர்த்துக் கட்டிப் போட்டிருந்தக் கட்டினைக் கத்தியால் மேலும் கீழும் ஆட்டி ஆட்டி நறுக்க முடிகிறதா எனப் பரீட்சித்துப் பார்த்தான். இது மிக்க கடினமான வேலையாய் மட்டும் அமையவில்லை. கயிற்றோடு மணிக்கட்டும் கூடவே அறுபட்டதால், தாள முடியாத 'அவ்...' என்ற முனகலையும் இவனிடமிருந்து வாங்கியது. இருப்பினும் மெதுவாகவும் மிகப் பொறுமையாகவும் கத்தியை முன்னும் பின்னும் இயக்கினான். சதையின் ஒரு பகுதியை மிக மோசமாக அறுத்துக் கொண்டு இவன் துடித்தாலும், ஒரு வழியாய் கயிற்றின் இறுக்கம் இளக ஆரம்பித்தது. பின் தளர்ந்தது. இவன் கைகள் விடுதலைப் பெற்ற உடனேயே ஏனைய விடுதலைகள் சுலபமாயின. எலும்பு இணையும் பகுதிகளில் ஏற்பட்ட இறுக்கங்களினால் வசதியாய் நிற்பது கஷ்டமாய்த் தோன்றினாலும், ஐந்து நிமிடங்களில் வழக்கம் போல் நின்று இயங்க முடிந்தது. இவனுடைய முதல் கவனிப்பு ரத்தம் வழியும் மணிக்கட்டினைக் கட்டுவதாகும். செய்துக் கொண்டான். பிறகு, யோசிப்பதற்காக, மெத்தையின் நுனியில் அமர்ந்தான். கதவுச் சாவியை காவல்காரன் வாங்கிக் கொண்டு போயுள்ளதால் மேற்கொண்டு ஆனெட்டிடமிருந்து ஒரு சிறு உதவியை இவன் எதிர்பார்ப்பதும் கடினமே. அறையிலிருந்து வெளியேற இருக்கும் ஒரே வழி கதவு தான். ஆகையால், இவனை எடுத்துக் கொண்டு போக அந்த இரு ஆடவர்களும் மீண்டும் கதவைத் திறந்துக் கொண்டு வரும் வரை இவன் காத்திருந்தாக வேண்டும். அப்படி அவர்கள் இருவரும் உள்ளே வரும் போது... டாமி சிரித்தான்! கும்மிருட்டு அப்பியிருந்த அறையில் துளி அரவம் தராது வெகு ஜாக்கிரதையாய் நகர்ந்து நடந்த இவன், இவனுடைய பிரபலப் படத்தைக் கண்டறிந்து அதை ஆணியிலிருந்து தரையிறக்கினான். இவனுடைய முந்தைய திட்டம் வீணாகாமல் மறுபடியும் சேகரிக்கப்பட்டதில்

தனி இன்பம் இவனுக்குள் விளைந்தது. காத்திருப்பதைத் தவிர மேற்கொண்டு செய்ய அங்கு எதுவும் இல்லாமல் ஆனது. *காத்திருந்தான்.*

இரவு மெதுவாய் நகர்ந்து, யுகங்கள் கடந்து போவதுப் போல மணி நேரங்கள் கடப்பதை உணர்ந்தபடி இருந்தான் டாமி. ஆனால் ஒரு கட்டத்தில் காலடி ஓசைகள் அருகாமையில் வருவதை, அமைதியைக் கிழிக்கும் சன்னமான ஓசையாய்க் கேட்டான். நிமிர்ந்து நெட்டைக் குத்தலாய் நின்றுக் கொண்டான். மூச்சினை இழுத்துப்பிடித்து வலு சேர்த்துக் கொண்டான். கனமான அந்தக் கண்ணாடி போடப்பட்டப் படத்தை இறுக்கமாய் தூக்கிப் பிடித்துத் தயாரானான்.

கதவு திறந்தது. வெளியிலிருந்து ஒரு கோடு வெளிச்ச வகிடு உள்ளே பரவியது. காவல்காரன் நேராய் விளக்கை ஏற்ற காஸ் விளக்கினை நோக்கிப் போனான். முதலில் இவன் நுழைந்து விட்டதற்காக மிக வருந்தினான் டாமி. முதலில் வருபவனை உள்ளே விட்டு விட்டு இரண்டாவதாக வருபவனைப் போட்டு தள்ளுவதாய் திட்டம்! எண் பதினான்கு தொடர்ந்து நுழைந்தான். நுழைவாயிலில் அவன் காலடி வைத்தது தான் தாமதம்... படத்தினைக் கீழ் நோக்கி அவன் தலையைக் குறி வைத்து அதி வேகமாய் இறக்கினான் டாமி. இடி போல வெடித்துச் சிதறிய கண்ணாடித் துகள்களுக்கு நடுவில் கரைந்துப் போனான் எண் பதினான்கு. அடுத்த நொடி முடிவதற்குள் வெளியேறி விட்டு கதவினை இழுத்து மூடினான் டாமி. சாவி கதவிலேயே தொங்கியது. காவல்காரன் கதவினை நோக்கி விரைந்தபடி அசிங்க அசிங்க சாபங்களை இட்டுக் கொண்டு ஓடி வந்த போது, கதவைப் பூட்டிய சாவி டாமியால் உருவப்பட்டிருந்தது!

சில நொடிகள் டாமியிடம் தயக்கம் விளைந்தது. கீழே யாரோ ஒருவன் சுழன்றடித்துப் படப்படப்பது கேட்டது. பிறகு ஜெர்மானியனின் குரல், படிகளேறி நெருங்கி வந்துக் கொண்டிருந்தது.

''வாட்ச்மேன், என்னது அது?''

டாமி, ஒரு சிறு கை, அவன் கைக்குள் திணித்துக் புதைந்து இழுப்பதை உணர்ந்தான். அவனுக்குப் பின்னால் நின்றுக் கொண்டிருந்தது. ஆனெட். பலஹீனமாய் சாய்த்து வைக்கப்பட்டிருந்த ஓர் ஏணியை அவள் சுட்டிக் காட்டினாள். அது, மேலிருந்த ஒரு பெரிய சேந்திக்கு இட்டுச் சென்றது.

''ம், சீக்கிரம், இப்படித்தான், ஏறி வாங்க'' - தனக்குப் பின்னால் இவனையும் இழுத்துக் கொண்டு மேல் நோக்கி ஏறினாள் ஆனெட். அடுத்த நொடியில், பிரயோஜனமற்றப் பல சாமான்களைப் போட்டு அடைத்திருந்த அழுக்கான அந்த சேந்தியில் இருவரும் குனிந்து வளைந்து நின்றுக் கொண்டிருந்தனர்.

டாமி சுற்றிப் பார்த்தான். ''இது பிரயோஜனமில்லே. இது பழைய சாமான்களை ஏறக்கட்டும் இடம். இங்கே தப்பிக்க வழியே கிடையாது.''

''உஷ்! பொறுமையாயிரு!'' அவள் ஆள்காட்டி விரலை உதடுக்குக் குறுக்காய்ப் பொருத்திக் கூடுதலாய் எச்சரித்தாள். ஏணியின் உச்சி வரை திரும்பி வந்துஇப்போது கவனித்தாள்.

கதவைக் குத்தியும் அடித்தும் எழுப்பப்பட்ட ஒலி அதீதமாயிருந்தது. ஜெர்மானியனும் மற்றவர்களும் கதவை உடைத்துத் திறப்பதில் இறங்கியிருந்தனர்.

ஆனெட் முணுமுணுப்பாய் விளக்கினாள்: ''நீங்க இன்னும் உள்ளே யிருப்பீங்கனு தான் அவங்க நினைச்சுக்கிட்டிருப்பாங்க. காவல்காரன் உள்ளேயிருந்து என்ன சொல்றான் என்பது இவங்களுக்கு இங்கே காதுல விழப் போறதில்லே. கதவு அத்தனை தடிமன்.''

''அறைக்குள்ளே என்ன நடக்குதுனு வெளியிலேந்து கேட்க முடியும்னுல்லே நான் நினைச்சேன். அரசல் புரலாத் தான் விழுமா....?!''

''பக்கத்து அறையிலிருந்து உள்ளே நுழைய ஒரு சிறிய துளையிருக்கு. அப்படி ஒண்ணு இருக்கணும்னு நீங்க கணிச்சது, மகா புத்திசாலித்தனம். ஆனா அதையெல்லாம் பற்றி இவங்க இப்போ கவனிக்கப் போவதில்லே.... உள்ளே நுழையறதுல மட்டும் தான் இப்போ வெறியா இருக்காங்க.''

''இருக்கட்டும். ஆனா - இப்போ - நாம - ''

''அந்தக் கவலையை என்கிட்டே விட்டுங்க.''

சொன்ன அவள் குனிந்தாள். டாமியை ஆச்சரியத்தில் தூக்கிப் போடும் விதமாய், ஒரு பெரிய சிதிலமடைந்திருந்த கண்ணாடி ஜாடியின் பிடிக்குள் நீண்டக் கயிறு ஒன்றின் நுனியை அவள் கட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தான் இவன். அதை கவனமாய் நிலைநிறுத்தி விட்டு டாமி பக்கம் நிமிர்ந்தாள்.

''கதவு சாவி உங்ககிட்டே இருக்கா?''

''ஆமாம்.''

''என்கிட்டே கொடுத்துடுங்க.''

இவன் சாவியை ஒப்படைத்தான்.

'' நான் கீழே போறேன். ஆனா உங்களால் இப்ப நான் சொல்ற மாதிரி கீழே இறங்க முடியுமானு பாருங்க. பாதி தூரம் வரை ஏணி வழியா கீழிறங்கி, பிறகு, அப்படியே மறைவா ஏணிக்குப் *பின்னாடி வளைஞ்சு* அவங்க துளி கூட கவனிக்கடாம உங்களால முழுசா இறங்கிட முடியும்னு - தோணுதா?''

டாமி ஒப்புக் கொண்டு தீர்மானமாய்த் தலையசைத்தான்.

''மாடிப் படியிறக்கம் ஆரம்பிக்கும் இடத்துல ஒரு பெரிய அலமாரியிருக்கு. அதுக்குப் பின்னாடி போய் நின்னுடுங்க. இந்தக் கயிறின் கட்டாத இன்னொரு நுனியை மறக்காம கையோட கொண்டு போங்க. உள்ளேயிருக்கிறவங்களை நான் வெளியே விட்டதும் - *இழுத்துடுங்க.*''

மேற்கொண்டு இவன் வேறு எதையும் கேட்பதற்குள், அதற்கு வழி இல்லாத வகையில், பட்டாம்பூச்சி பறப்பது போல ஓசையெழுப்பாது படிக்கட்டுகளில் இறங்கி கூட்டத்துக்கு நடுவில் இணைந்துக் கொண்ட ஆனெட் பயக்கதறல் எழுப்பலானாள்!

''ஆ...! ஆ.... ! என்ன ஆச்சு....! ஆ....! ஏன் கத்தறீங்க....! ஆ....! ஆ....! உள்ளே என்ன ஆபத்து....! ஆ....! ஆ.....!''

கண்டிப்பான குரலில் அவள் பக்கம் திரும்பிய ஜெர்மானியன், ''இங்கே நீ இருக்க வேண்டாம். போயிடு. உன் ரூமுக்குப் போ!'' என்றான்.

வெளியே கூடியிருந்த எல்லோரும் - உள்ளே ஒரு கவனமும், கத்தும் இவள் மீது மீதி கவனமும் செலுத்திக் கழன்றுப் போயிருக்க, ஏணியின் பின்பக்கமாய் வெகு ஜாக்கிரதையாய் ஊஞ்சலாடி இறங்கி முடித்திருந்தான் டாமி. அது வரை இவன் பக்கமாய் யாரும் திரும்ப வழியில்லாது போனதால் அனைத்துமே சுபமாய் முடிந்தன. அலமாரிக்குப் பின்னால் ஒட்டி ஒண்டிக் கொண்டு நின்றான் இவன். கதவு - கூட்டம் - அதனை ஒட்டி அலமாரி மற்றும் இவன் - உடனேயே படிக்கட்டுகளின் துவக்கம், என்ற நெருக்கமான வரிசையில், இவனையும் படிக்கட்டுகளையும் ஒட்டியே அனைவரும் இன்னும் இருந்தார்கள்.

''ஆஹ்....!'' எதையோ மிதித்து விட்டது போலவும் அதனால் தடுமாறி விட்டது போலவும் காட்டிக் கொண்டு, அனைவரது கவனத்தையும் தன் பக்கம் திருப்பி விட்டதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு கீழே பார்த்த ஆனெட், ''ஆ...! ஆ....! கீழே....!'' என்று பழையபடி ஆரம்பித்து, ''ஆ....!ஆ.... சாவி....'' என்று எடுத்தாள்.

அவளிடமிருந்து பலமாய் அதனைப் பிடுங்கிய ஜெர்மானியன், கதவைத் திறந்தான். காவல்காரன் கர்ஜித்துக் கொண்டே வெளியே வந்து விழுந்தான்.

''அவன் எங்கே? அவனை நீங்க பிடிச்சிட்டீங்களா?''

''நாங்க யாரையும் பார்க்கலே'' என்றான் ஜெர்மானியன் கறாராய். அவனது முகம் வெளிற ஆரம்பித்தது. ''நீ என்னடா சொல்றே?''

இன்னொரு கர்ஜனைக்கு வழி விட்டுக் கொண்ட காவல்காரன், ''அவன் வெளியே வந்துட்டான்'' என்றான்.

''சாத்தியமேயில்லே, அவன் எங்களைக் கடந்து தானே போயிருக்கணும்.''

அந்த நொடியில், ஒரு மிகக் கனிப்பான புன்னகையை உதிர்த்துக் கொண்ட டாமி - *இழுத்தான்*. பெரிய கண்ணாடி சாமான் ஒன்று தள்ளப்பட்டு உடையும் ஓசை மேலே சேந்தியிலிருந்து வந்தது. ஓட்டப்பந்தய வீரர்களைப் போல ஒருவனை மற்றவன் முந்தி அடித்துக் கொண்டு வரிசையாய் எல்லோரும் அந்த பலஹீனமான ஏணியில் ஏறி சேந்தியின் இருட்டுக்குள் கரைந்துப் போயினர்.

மின்னலைப் போல, தான் பதுங்கியிருந்த இடத்திலிருந்து வெளியேறி பாய்ந்திறங்கினான் டாமி - கையில் அகப்பட்ட ஆனெட்டையும் இறுக்கமாய் பிடித்து இழுத்துக் கொண்டு. கீழே அறையில் ஒரு மனித வாடையும் இல்லை. வாசற் கதவின் தாழ்ப்பாள் கைப்பிடி இவற்றோடு அவசர அவசரமாக இயங்கினான் டாமி. அவை ஒத்துழைத்தன. கதவு திறக்கப்பட்டது. திரும்பினான், ஆனெட் மறைந்திருந்தாள்.

டாமி உறைந்துப் போய் நின்றான். மறுபடியும் மாடிக்கேவா அவள் ஓடிப்போய் விட்டாள்? எந்தப் பேய் அவளைப் பிடித்து ஆட்டுகின்றது! பொறுமையற்ற துடிப்பில் நடுநடுங்கினாலும், எடுத்த முடிவில் அப்படியே நின்றான். அவளில்லாமல் இவன் நகரப் போவதில்லை.

திடீரென்று ஓர் உச்சஸ்தாயி அலறல் மேல்புறத்திலிருந்து வந்தது. ஜெர்மானியனின் ஆச்சரிய அலறலது.... தொடர்ந்து சுத்தமாயும் துல்லிய மாயும் மிக உயர்ந்து ஒலித்த ஆனெட்'டின் குரல்: ''ஆ....! ஆ....! தப்பிச்சுட்டான்! மின்னல் போல - அத்தனை வேகமா!ஆ....! ஆ....! இதை நாம யாராவது நினைச்சாவது பார்த்திருப்போமா....?!ஆ....! ஆ....!''

நிலத்தில் பதிந்து விட்ட வேராய் இன்னும் நின்றுக் கொண்டிருந்தான், டாமி. மேலும் நிற்காமல் ஓடி விடு என்று இவனுக்கு அவள் இட்ட கட்டளையா அது? அப்படித்தான் எனப் புரிந்தது டாமிக்கு.

இதற்குப் பிறகு, இன்னும் உரக்க, அதே குரல் பறந்து இவனை வந்தடைந்தது : ''இது ஒரு ஆபத்தான வீடு. ஆமாம். என்னவெல்லாமோ நடக்குது. ஆ....!ஆ....! நான் மார்குரெட்டிடமே திரும்பிப் போயிடறேன். மார்குரெட். *மார்குரெட்.*''

டாமி பொறுக்காது மீண்டும் உள் நுழைந்து, படிக்கட்டுகளின் ஆரம்பம் வரை ஓடிப் போய் நின்றான். 'அவளை விட்டு நான் ஓடி விட வேண்டும் என்றா அவள் விழைகிறாள்?' - கலவரமாய் எண்ணிக் கொண்டான் டாமி. 'ம்ம்.. என்ன ஆகட்டும்.... என்னோடு அவளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு ஓடத்தான் நான் முயற்சிப்பேன்.' ஆனால் உடனேயே இவனுடைய

இவ்வெண்ணம் அமுங்கிப் போனது. இவனைப் பார்த்து விட்ட வெறியில் அநாகரீகமாகவும் மூர்க்கமாகவும் கூவிக் கொண்டு, படிகளில் நாலு கால் பாய்ச்சலில் இறங்கிக் கொண்டிருந்தான் காவல்காரன். அவனுக்குப் பின்னால் வந்தனர் ஏனையவர்கள்.

இவனைத் துரிதமாய் நெருங்கியிருந்த காவல்காரனின் இயக்கத்தைத் தனது மடிக்கப்பட்ட கை முஷ்டியின் வெறி சேர்ந்த பேரிடி அடியால் தகர்த்துப் போட்டான் டாமி. வேகமாய் மோதிய ஒரு வாகனம் போல அவனுடைய முகவாயில் அடி இறங்க, ஒரு பொதி மூட்டையாய் சரிந்தான் அவன். குண்டனின் பின்னாலேயே ஓடி வந்து நின்றவனும், காவல்காரனின் சரிந்த அவசரத்தை எதிர்கொள்ள முடியாது தடுமாறி விழுந்தான். படிக்கட்டுகளின் மேல் விளிம்பிலிருந்து சில பட்டாசு வெளிச்சங்கள் உருவாக, இவனுடைய காதின் வெகு அருகாமையில் பறந்துப் போகும் வண்டுகளாய் ஓசையெழுப்பி நழுவின, ஓரிரு துப்பாக்கிக் குண்டுகள். எத்தனை சீக்கிரத்தில் இந்த வீட்டை விட்டு மறைகிறானோ அந்த அளவுக்கு இவன் உடல்நலத்துக்கு தீங்கு நேர்வது தவிர்க்கப்பட்டு விடும் என்று உணர்ந்தான் டாமி. ஆனெட்டைப் பொறுத்தமட்டில் இனி இவன் செய்வதற்கு ஏதுமில்லை. அவள் நிலையை அவள் இரண்டு தனித்தனி வாக்கியங்களில் அறிவித்துவிட்டாள். புவர் கேர்ள்! எப்படியோ... குண்டனை, ஒரே ஓர் அடியாவது இடி போல் இறக்கி நொறுக்க வேண்டும் என்ற தனியா தாகம் தீர்ந்ததே என்று புன்னகைத்து திருப்தி அடைந்தான் டாமி. '' குடுத்த அடி, இடியில்லே....!'' - நினைத்த டாமியின் புன்னகைக் கூடியது.

''நாயே.... சிரிக்கிறியா, நீ....!''

வாசற்கதவை நோக்கி ஒரே பாய்ச்சலில் நெருங்கியிருந்த டாமி, தனக்குப் பின்னால் அதை அடித்து மூடினான். சதுக்கம், பாலைவனமாயிருந்தது. வீட்டின் வாசலிலேயே ஒரு வண்டி காத்திருந்தது. காதும் காதும் வைத்தாற்போல் இவனுடைய உடல் இந்த வண்டியில் கொண்டு செல்லப்பட்டு ஸோ - ஹோ பகுதியின் இந்த வீட்டிலிருந்து பல காத தூர எல்லையில் எங்கோ வீசி விடப் போடப்பட்டிருந்த திட்டம் வெளிப்படையாய்த் தெரிந்தது. வண்டியிலிருந்து டாமியைக் கவனித்து விட்ட டிரைவர், துள்ளிக் குதித்து நடைபாதையில் விழுந்து, டாமியின் வழியை மறிக்க முயன்றான். ஒரு கணம் குண்டனை நினைத்துக் கொண்டான் டாமி... இறங்கியது ஒரு முஷ்டிக் குத்து டிரைவரின் முகரையில்! இதெல்லாம் பழக்கமில்லாது வெறும் பந்தா காட்டியிருந்த அவன், மூர்ச்சையே ஆகி விட்டான்!

பாதங்களுக்கு சக்தி ஊட்டி டாமி ஓடினான் - மற்ற ஒருவராலும் முடியாத அளவுக்கான வேகத்தில் வாசற்கதவு திறக்கப்பட, துப்பாக்கிக் குண்டு களாலான தொடர் சங்கிலி, இவனைத் தொடர்ந்து வந்தது. அதிர்ஷ்டவசமாக அவற்றில் எதுவும் இவனைப் பாதிக்கவில்லை.சதுக்கப் பகுதியின் வளைவில் திரும்பி விட்டான் டாமி.

''இனி நமக்கு சாதகமா ஒரு விஷயமிருக்கு...'' - அவனுக்கே உரிய துடுக்குத்தனத்தோடு நினைத்துக் கொண்டான் டாமி. 'சுட்டுக்கிட்டே அவனுங்க இனி ஓடி வர முடியாது. அப்படி செஞ்சா, அவனுங்களைத் துரத்திக்கிட்டு சுட்ட படி ஓடி வரும் - போலீஸ்!ஆஹ்ஹாஹ்ஹா....! என்ன சத்தத்தையே காணாம். ஒஞ்சுட்டானுங்களா....?!'

ஆனால் உடனேயே இவனைத் தொடர்வோரின் காலடிகள் வேகமாய் நெருங்கி சமீபிப்பதைக் கேட்டு விட்ட டாமி, இது வரை இருந்த வேகத்தை இரண்டு மடங்காக்கிக் கொண்டு ஓடலானான். வளைந்து சுழிந்து ஓடும் இப்பாதைகளைக் கடந்து மட்டும் ஓடி விட்டானென்றால் - பாதுகாப்பு தான். அங்கெல்லாம் நூறடிக்கு ஒரு போலீஸ் உண்டு. போலீஸைப் போய் நாடி தன்னைக் காப்பாற்றுமாறு புகலிடம் தேட டாமி நினைக்கவேயில்லை... அது வேறொரு மாதிரியான சிக்கலான சங்கதியில் முடியும். கேள்விகளில் துளைப்பார்கள். இவன் மீதே ஒரு வேளை அவர்கள் சந்தேகப்பட்டு விட்டால், ஒரு சிறை போய் இன்னொரு சிறை தான் வாய்க்கும் !இந்த சிந்தனையின் நடுவே இவனுடைய அதிர்ஷ்டத்தை இவனே பாராட்டிக் கொள்ளும் சந்தர்ப்பமொன்று விளைந்தது. ஓடி வந்த வேகத்தில், ஏதோ, பலமிழந்து மிக சோர்வாய் மெல்ல நடந்து வந்துக் கொண்டிருந்த ஒரு சீக்காளியின் மீது முட்டி மோதிக் கொண்டு தடுமாறும் நிலை ஏற்பட்டது. நிமிர்ந்து இவனைப் பார்த்த அவனுக்கு என்ன தோன்றிற்றோ... முகம் சுருங்க அருவெறுப்பாய் பார்த்தான். இவன் மன்னிப்புக் கோர அவனை நெருங்கும் போது, அருவெறுப்பின் உச்சத்துக்கே போன அவன், 'ஓ...' என்றபடி எதிர் திசையில் அரக்கப் பறக்க விரைந்தான். பின்னால் கூடிய காலடி ஓசைகளுக்காக அங்கிருந்த ஒரு மறைவில் டாமி ஒடுங்கிக் கொள்ள.... அடுத்த நொடியே, தப்பிக்கும் தொனியில் வெலவெலத்துப் போய் வேகவேகமாய் சென்றுக் கொண்டிருந்த அந்த பலஹீனமானவனைக் குறி வைத்துக் கொண்டு, ஜெர்மானியின் உட்பட, ஒரு முட்டாள் கூட்டமே ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்து ரசிக்கலானான் டாமி!

மறைவிடத்திலிருந்த ஒரு திட்டில் அப்படியே உட்கார்ந்துக் கொண்ட டாமி, தன்னுடைய சீரற்று இருந்த சுவாசத்தை முறையாக்குவதில் இருந்தான். பிறகு, அவசரத்தை வெளியே காட்டிக் கொள்ளாத சிறு நடை பயணத்தை,

எதிர்த் திசையில் நடைமுறைப்படுத்தினான். அப்போது தன் கைக்கடி காரத்தைப் பார்த்தான். ஐந்தரையைத் தாண்டியிருந்தது. ஒளி, மிக விரைவாய் பரவ ஆரம்பித்திருந்தது. அடுத்த திருப்பத்தில் ஒரு போலீஸ்காரனைக் கடந்தான் டாமி. சந்தேகப் பார்வையை இவன் மீது மேய விட்டான் அவன். டாமிக்கு சங்கோஜமாயிற்று. பிறகு தனது முகம் முழுவதையும் கையை ஒரு முறை ஓட விட்டுப் பார்த்த டாமி சற்று பெரிதாகவே சிரிக்க வேண்டிய தாயிற்று. சில நாட்களாக குளிக்கவில்லை. எண்ணெய் வழியும் முகம். அதை மேலும் அசிங்கப்படுத்தும் ஈர்க்குச்சி தாடி. அழுக்கேறிய பரட்டைத் தலை. கேவலமாகி விட்ட உடை. 'என்ன மாதிரியான ஒரு தோற்றத்தில் நான் இருக்க வேண்டும்.....!'

வேறெந்த வேலையையும் கையிலெடுத்துக் கொள்ளாமல், இரவு முழுவதும் திறந்திருக்கும் ஒரு துருக்கிய ஆணழகு நிலையத்துக்கு நேரே கிளம்பினான். வாலிபப் பையனாய் மீண்டும் உருமாறித் தகதகக்கும் காலைச் சூரிய வெளிச்சத்தில் வெளிப்பட்ட டாமி, மேற்கொண்டு திட்டங்கள் தீட்டும் குதூகலமான மனோநிலையிலிருந்தான்.

கட்டம் கட்டி வெட்டும் அளவற்ற சாப்பாடு தான் - டாமியின் இப்போதைய முதல் தேவை. நேற்றிலிருந்தே ஒன்றுமே இவன் சாப்பிட வில்லை. அருகிலிருந்த உணவகத்துக்குள் நுழைந்த டாமி, முட்டை, பதப்படுத்திய பன்றி இறைச்சி மற்றும் காபிக்குக் கட்டளையிட்டான். சாப்பிட்டபடியே இவனுக்கு முன்னால் பரப்பிப் போடப்பட்டிருந்த காலை செய்தித்தாளைப் படித்தான் டாமி. அப்படியே விறைப்பானான். அதில், 'ரஷ்யாவின் கம்யூனிஸத்துக்குப் பின்னால் முதுகெலும்பாய் இயங்கும் நபர்' என்று அறியப்படும் **க்ரெமெனின்** பற்றி ஒரு நீண்டக் கட்டுரை வெளியாகியிருந்தது. தற்போது லண்டன் வந்திருக்கும் அவர், அரசியல் நிமித்தமாய் அல்லாது ஒரு பிரதிநிதியாக வந்திருப்பதாக பலரால் நம்பப்பட்டது. அவருடைய வளர்ச்சி பற்றி கொஞ்சமாய் இக்கட்டுரை பேசியது. ரஷ்யப் புரட்சியின் பக்கங்களை எழுதியது *இவர் தானேயன்றி* பீற்றிக் கொண்டிருக்கும் மற்ற ஏனைய தலைவர்கள் கிடையாது என்றும் ஆழமாகவும் ஆர்வமாகவும் அது பேசியது.

கட்டுரைக்கும் அது இடம்பெற்றிருந்த பக்கத்துக்கும் நடுவில் வருமாறு அவருடைய பெரிய அளவு படமொன்று அச்சாகியிருந்தது.

வாய் முழுக்க முட்டையும் ரொட்டியும் அடைத்திருந்த டாமி, அப்படியே, ''ஆக - இது தான் - நம்பர் ஒன்....!'' என்று சொல்லிக் கொண்டான். ''இதுல எனக்குத் துளியும் சந்தேகங் கிடையாது. இனி நான் துரிதமா இயங்கணும்.''

சிற்றுண்டிக்கான தொகையைச் செலுத்திவிட்டு வெள்ளை மாளிகைக்கே விரைந்தான். அங்கு தன்னுடைய பெயரையும் மிக மிக முக்கியமான ஒரு விஷயத்துக்காகச் சிந்திக்க வேண்டும் என்ற குறிப்பையும் தந்தான். ஒரு சில நொடிகளில் இவனருகில் வந்து சேர்ந்திருந்த இன்னொரு மனிதரோடு இணைந்திருந்தான் டாமி. ''மிஸ்டர் கார்ட்டர்'' என்றெல்லாம் இங்கு டாமி எழுதி அனுப்பியிருக்காத போது வந்து நின்றிருந்தார் அவர். முகத்தில் காரம் வெடிக்கும் கடுகடுப்பு இருந்தது.

''இப்படி திடுதிப்புனு வந்து குதிச்சு, என்னை வெளியே வரச் சொல்ல உனக்கு இங்கே எந்த வகையான உரிமையும் கிடையாது. அப்படியாப்பட்ட இடம் இது. குழப்பமில்லாம உனக்கும் தெரிஞ்சிருக்கணும்... புரியுதா? வெள்ளை மாளிகைப்பா, இது! ஆமா... இவ்ளோ தூரம் நீ முதல்ல எப்படி உள்ளே வந்தே,ம்?''

''தெரியும் ஸார், எல்லாம் எனக்கும் நல்லாவே தெரியும். ஆனா, இந்த விஷயத்துல, நொடி அவகாசம் கூட வீணடிச்சுடக் கூடாது என்பது என் நிலைப்பாடு ஸார்.''

எத்தனை சுருக்கமாகவும் தெளிவாகவும் விஷய சேதாரமின்றி சொல்ல முடியுமோ, அத்தனை துல்லியமாக, கடந்த ஓரிரு தினங்களில் நடந்த அத்தனையையும் சொல்லி முடித்தான் டாமி. இவன் பாதி சொல்லிக் கொண்டிருக்கும் போது புரியாத ஏதோ சங்கேத மொழியில் சில கட்டளைகளைப் பிறப்பிப்பதற்காகத் தொலைபேசி வரை போய் வந்தார் அவர். அவர் முகத்திலிருந்த அத்தனை அதிருப்தியும் இப்போது துடைத் தெறியப்பட்டிருந்தது. டாமி முடித்த போது ஊக்கமாகத் தலையசைத்தார் அவர்.

''நீ சொன்னது ரொம்பச் சரிப்பா. ஒவ்வொரு நொடியும் - *விலை மதிப்பற்றவை.* காலந்தாழ்ந்து விடக் கூடாதுனு இறைவனை இப்போ வேண்டிக்க வேண்டிய கட்டாயம். அவங்க காத்திருக்க மாட்டானுங்க. மறு நொடியே இடத்தைக் காலி பண்ணியிருப்பானுங்க. இருந்தாலும் அவசரத்துல எதையாவது நிச்சயமா அவங்க விட்டுட்டுத் தான் போயிருப்பாங்க - அது நமக்கு மிகப் பெரிய துப்பா அமையும். நம்பர் ஒன் என்பது க்ரெமெனின் என்று நீ அடையாளம் காண்பதா சொன்னே, இல்லே? இது மிக முக்கியம். அவன் கைப்பிடிக்கும் கீழேயே நமது மந்திரி சபை சுக்குநூறா சிதறி விழுவதைத் தடுக்க, அவனுக்கு எதிரா மிக மிக பலமான ஒரு சங்கதி வேணும். உடனே, ஓ கே....! மற்றவங்க பற்றி என்ன சொல்றே? ரெண்டு முகங்கள் உனக்கு மிகவும் பரீச்சயமான முகங்கள் அப்படி'ங்கறே? ஒருத்தன்

உழைப்பாளிக் கட்சியின் ஆளா இருக்கும்னு சொல்றியா? இந்தா இந்தப் புகைப்படங்களெல்லாம் சும்மா பாரு... அவனைக் குறிப்பிட்டுக் காட்ட முடியுமானு பாரு....''

சில நிமிடங்கள் போயின. டாமி அவற்றில் ஒரு புகைப்படத்தைத் தூக்கிப் பிடித்தான். மிஸ்டர் கார்ட்டர் கொஞ்சமாய் ஆச்சரியம் காட்டினார்.

''ஆஹ்.... இது வெஸ்ட்-வே. நான் நினைச்சே பார்க்கலே. சாதாரண ஆள் போல காட்டிக்கிட்டான்!ஓஹ்.. அப்போ.... அந்த அடுத்த ஆளைப் பொறுத்த வரைக்கும், என்னால உனக்கு ஒரு நல்ல ஊகம் தர முடியும்னு நம்பறேன்'' - சொல்லிவிட்டு டாமியிடம் மற்றொரு புகைப்படத்தைத் தந்த அவர், அவன் ஆச்சரியமாகிக் கொண்டிருப்பதை சிறு புன்னகையோடு பார்த்தார். ''அப்போ - *நான் சரி தான்.* தப்பு இல்லே. யார் தெரியுமா இவன்? ஓர் அயர்லாந்துக் காரன். முக்கிய அரசியல்வாதி - எம்.பி. முழுக்கவுமே குருடா இருந்திருக்கோம்ப்பா - ஆமாம். இப்படித்தான்னு நாங்க சந்தேகிச்சோம். ஆனா ஸ்தூலமா சாட்சி அமையலே. வாலிபப் பயலே! நீ அதை செஞ்சு முடிச்சிருக்கே! இருபத்தொன்பதாம் தேதி தான் கெடு'னு சொன்னே... ம்?! இது நமக்கு ரொம்பக் கம்மியான அவகாசத்தைத் தான் விட்டு வெக்குது - ஆமாமாம்... *மிக மிகக் கம்மியான அவகாசம்!''*

''ஆனா....'' டாமி தயங்கினான்.

மிஸ்டர் கார்ட்டர் இவனுடைய எண்ணங்களைப் படித்து விட்டார்.''பொது வேலை நிறுத்தத்தை நாம நல்லபடியா கையாண்டுவிடலாம் - சந்தேகம் தான் - ஆனா எதுவும் நல்லபடியா நடக்கும்னு நம்பிக்கையா எதிர்கொள்ளணும் - அந்த வகையில வாய்ப்பிருக்கு. நோ ப்ராப்ளம். ஆனா அந்த நகல் ஆவணம் மட்டும் அவனுங்க கைகள்ல கிடைச்சுட்டா- அழிஞ்சோம். முடிஞ்சது. இங்கிலாந்தே ஒரு புரட்சிக்காரன் - கலகக்காரன் கைகளில் தாரை வார்க்கப் பட்டு விடும். ஆஹ்.... அது என்ன? ஓ, கார்? வாங்க தாமஸ் ஃபோர்டு- நீங்க அடைக்கப்பட்டிருந்த வீட்டை நாம ரெண்டு பேரும் போய் பார்ப்போம்.''

ஸோ-ஹோ சதுக்க வீட்டின் வாசலில் இரண்டு எட்டுகள் பணியிலிருந் தார்கள். ஓர் இன்ஸ்பெக்டர் மிகத் தணிந்த குரலில் மிஸ்டர் கார்ட்டருக்கு அறிக்கை தந்தார். கேட்டவர், பிறகு டாமியின் பக்கம் திரும்பி சொன்னார் : ''நாம எதிர்பார்த்து வந்தது போலவே - பறவைங்க பறந்துடுச்சு, டாமி - எனினும் உள்ளே போய் பார்ப்பம்.''

பாலைவனமாகிப் போயிருந்த வீட்டை இப்போது சுற்றுவது, கனவில் கண்ட காட்சி ஒன்றோடு நிஜத்தில் பங்குக் கொள்வது போலிருந்தது டாமிக்கு. எங்கெங்கு என்னென்னவெல்லாம் இருந்தனவோ அவை அங்கங்கேயே

இருந்தன. குரூரமான படங்கள் மாட்டப்பட்டிருந்த சிறை அறை, உடைந்த சேந்தி கூஜா, நீண்ட மேஜையோடு கூடிய அளவளாவும் அறை. ஆனால், எந்தவோரிடத்திலும் வெறும் தாள்களோ அல்லது ஆவணம் போன்ற ஒன்றோ இடம்பெற்றதற்கான சுவடே இருக்கவில்லை. அவை போன்ற எல்லாம் ஒன்று அவர்களோடே போயிருக்க வேண்டும்... அல்லது அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

''அந்தப் பொண்ணு பற்றி நீ என்ன என்கிட்டே சொன்னியோ, அது எனக்குப் புதிராப்படுது. தாமஸ்'' என்றது திரு கார்ட்டர். ''அவ வேணுமுன்னே திரும்பிப் போனானா நீ நம்பறே?''

''பார்த்திருந்தீங்கள்'னா அப்படி தான் தோணும், ஸார். நான் இங்கே கீழே தப்பிச்சு ஓடக் கதவைத் திறந்துக்கிட்டு இருக்கேன். அவ என்னை விட்டுட்டு மாடிக்குத் திரும்பி ஓடறா...''

''ஹூம்... அப்படினா, அவளும் அந்தக் கூட்டத்தை சேர்ந்தவளாத் தான் இருக்கணும். ஆனா, அவளும் இளைய பெண்ணா இருப்பதால், அவளுடைய பூரிக்கும் இளமை, ஆணழகா நிற்கும் ஒரு விடலைப் பையன் அநியாயமா கொல்லப்படுவதற்குத் துணை போக அனுமதி தரலே. அவளும் அவங்க கைகாரி தான் என்பது வெளிப்படையாத் தெரியுது - இல்லேனா அவ திரும்பி ஓட வேண்டாமே..''

''அவளும் அவங்கள்ல ஒருத்தி தான்னு என்னால நம்பவே முடியலே, ஸார். அவ ... முழுக்க முழுக்க... அவர்களிலிருந்து... வித்தியாசமா ....''

''ஓ! ரொம்ப அழகா இருந்திருக்கணும்னு நினைக்கிறேன்!'' சிறு குறும்புப் புன்னகையுடன் கார்ட்டர் குறிப்புத் தர, அது, மயிர்கால்களின் அடி வரை சிவக்கச் செய்து டாமியைப் புல்லரிக்க வைத்தது. கடுமையான கூச்சத்தோடு ஆனெட்'டின் அழகினை ஒப்புக் கொண்டான் இவன்.

'' அதிருக்கட்டும்....'' என்று விஷயத்துக்குள் வந்த கார்ட்டர், ''நீ உன் முகத்தை டூபென்ஸூக்குத் தூக்கிட்டுப் போய் இன்னும் காட்டலியா? உன்னைப் பற்றி விசாரித்து விசாரித்து கடித குண்டுகளால் என்னை அவ துளைச்சுக்கிட்டிருந்தா.''

''டூபென்ஸ்? போலீஸ் வரைக்கும் அவ போனாளா?''

மறுத்துத் தலையசைத்தார் கார்ட்டர்.

''அப்போ, அவனுங்க எப்படி என்னைப் பற்றி தோண்டித் துருவித் தெரிஞ்சுக்கிட்டாங்கன்னு எனக்குத் தெரியலே.''

புரியாமல் கார்ட்டர் இவனைப் பார்க்க, டாமி விளக்கினான். சிந்தனையோடு தலையசைத்தபடி கேட்டுக் கொண்டிருந்த அவர், ''நிஜந்தான்,

எதேச்சையா சொல்லப்பட்ட ஒரு வார்த்தையா இந்த 'ரிட்ஸ்' இல்லாத வரைக்கும் - இது அதிசயமா இருக்கு'' என்றார்.

''ஓ, அப்படியும் இருக்கலாம், ஸார். இருந்தாலும், திடீர்னு ஏதாவது ஒரு நிகழ்வால அவனுங்க என்னைப் பற்றி அறிஞ்சிருக்கணும், ஸார்.''

''போகட்டும் ...'' என்று, தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்துக் கொண்ட கார்ட்டர், ''இங்கே இனி மேற்கொண்டு பண்ண ஒண்ணும் கிடையாது. லஞ்ச்சுக்கு என் கூட வர்றீங்களா?'' என்று கேட்டார்.

''ரொம்ப ரொம்ப நன்றி, ஸார். ஆனா நான் உடனடியா திரும்பிப் போய் டூபென்ஸுக்கு அதிர்ச்சி தரேனே....!''

''அதான் சரி. அவளை நான் ரொம்ப விசாரிச்சதாச் சொல்லு. அடுத்த முறை உன்னை உடனடியா யாராவது கொன்னிருப்பாங்கன்னு நம்பி அலற வேண்டாம்னும் சொல்லு. நீ - *எமகாதகன்!*''

டாமி இளித்தான்.

''நல்லது. நான் கிளம்பறேன். நினைவிருக்கட்டும். நீ இப்ப குறிக்கப்பட்டவன். அதனால, உன்னை நீயே, நல்லபடியா, பாதுகாத்துக்கோ, இது முக்கியம்.''

''தேங்க் யூ, ஸார்.''

துறுதுறுவென ஒரு வாடகைக் காரினை அமர்த்திக் கொண்ட டாமி, துரிதமாய் அதனை ரிட்ஸுக்கு செலுத்தச் சொல்லி, டூபென்ஸை எப்படி யெல்லாம் திக்கு முக்காட பண்ணலாம் என்ற சுவாரசியமான திட்டமிடலுடே பறந்துக் கொண்டிருந்தான்.,

'அவ இப்போ என்னப் பண்ணிக்கிட்டிருப்பா... வியப்பா இருக்கு! ரீட்டாவைத் தேடிக்கிட்டு நாயா அலைஞ்சுக்கிட்டு இருக்கணும். ஓ.... அவளைத் தான் இந்த ஆனெட், மார்குரெட் அப்படினு சொன்னாளோ...! அப்போ எனக்குப் புரியாம போச்சே...!' இதனால் திருமதி வாண்டே மேயரும் இப்பெண்ணும் நெருக்கமான உறவில் இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது, இந்த நினைப்பு, இவனைக் கொஞ்சமாய் விசனப்படுத்தியது.

டாக்ஸி, ரிட்ஸ் வரை வளைந்துப் போய் நின்றது. உற்சாகம் கரை புரள குதித்தோடிய டாமியின் ஊக்கம், அங்கிருந்த காவலாளி சொன்ன வார்த்தைகளால் சோதனைக்குள்ளானது. அரை மணி நேரத்துக்கு முன் தான் செல்வி ப்ரூட்டன்ஸ் வெளியே கிளம்பிப்போனதாய் அங்கு தெரிந்துக் கொண்டான் இவன்.

அத்தியாயம் 18

தந்தி

கேட்ட கணத்தில் வெதும்பிப் போனாலும், டாமி, குதித்தோடி ரெஸ்டராண்ட்டுக்குள் நுழைந்தான். அற்புதமான வகையறாக்கள் கொண்ட ஒரு நீண்டப் பட்டியலை லஞ்ச்சுக்காகக் கட்டளையிட்டான். நான்கு நாட்கள் சிறை வாழ்க்கை நல்ல உணவினை மதிப்பதற்கானப் புது பாடத்தை இவனுக்குப் புகட்டியிருந்தது.

வந்த உணவின் ஒரு கவளத்தை எடுத்து வயிற்றைக் கிள்ளும் பசிக்கு விருந்தாக அவசர அவசரமாக வாயில் போட்டுக் கொண்டு நிமிர்ந்த போது, அந்த ரெஸ்ட்ராண்ட் அறைக்குள் நுழைந்துக் கொண்டிருந்த ஜூலியஸ் இவன் கண்களில் பட்டார். உடனேயே அவரின் கவனத்தை ஈர்க்கும் விதமாய் கையைத் தூக்கி அலை அலையாய் அசைத்தான். டாமியைப் பார்த்த அக்கணத்தில் ஜூலியஸின் விழிகள் ஏதோ அவரது முகத்திலிருந்து பிய்ந்து விழுந்து விடும் அளவுக்கு விரிந்தன. குறுக்காய் பாய்ந்தோடி வந்த அவர், டாமியின் கையைப் பிடித்து அழுத்தித் திருகி இணைத்துக் குலுக்கிய விதம் இவனுக்கு ஏனோ அத்தப்படுத்தப்பட்ட தேவையற்ற ஒரு வேலையாய் தோன்றியது.

''இது, உண்மையிலேயே, நீ தானா?'' - பாய்ந்து வந்து விழுந்தன வார்த்தைகள்.

''ஆமாம். பின்னே, ஏன், இருக்கக்கூடாதா?''

''அதானே . ஏன், இருக்கக்கூடாது?!ஏய் மனுஷா! நீ செத்தாச்சுனு உன் படத்துக்கு நாங்க மெழுகுவர்த்தி ஏத்தியாச்சு, தெரியுமா? ரெண்டு நாட்கள்ல, மூட்டி போட்டு அமர்ந்து, 'அவனுடைய ஆத்மா சாந்தியடையட்டும்'னு அழுது, நெத்திக்கும் வயித்துக்குமா தட்டி 'க்ராஸ்' போட்டிருப்போம். ஆமாம்.''

''பாவிகளா !யார் ஐடியா இது - நான் செத்திருப்பேன் என்பது!'' - பதில் தேவை என்பது போல கேட்டான் டாமி.

''டூபென்ஸ்.''

''நான் அதீதமா புண்ணியம் பண்ணியிருக்கணும் மேன். இப்படி தப்பிச்சு வந்து உங்க முன்னாடி சதையோட உட்கார! அதிருக்கட்டும்... அவ எங்கே?''

''உள்ளே இல்லே?''

''இல்லை. ஆபிஸ்ல இருக்கிற ஆளுங்க அவ இப்பத்தான் கிளம்பிப் போனதா சொல்றாங்க.''

''ஹூம்... நல்ல ஷாப்பிங் போல! ஒரு மணி நேரத்துக்கு முன்னால் நான் தான் அவங்களை இங்கே கார்ல இறக்கி விட்டுட்டுப் போனேன். ஏய்... நீ இத்தனை நாளும் என்ன தான் பண்ணிக்கிட்டு இருந்தே? அதைச் சொல்லு.''

''இங்கே தான் நீங்களும் வயித்தை நிரப்புவதாயிருந்தா, சாப்பிடத் தேவையானதைச் சொல்லிடுங்க' என்று முக்கியப்படுத்திச் சொன்ன டாமி, ''சொல்லப் போவது பெரிய கதையா இருக்கும்'' என்றான்.

இவனுக்கு நேரெதிராய் வரும்படி ஒரு நாற்காலியை இழுத்து மேஜைக்கு இந்தப்பக்கம் போட்டுக் கொண்டு உட்கார்ந்த ஜூலியஸ், அலைந்துக் கொண்டிருந்த ஒரு வெயிட்டரை அழைத்து, அவர் ப்ரியப்பட்டவற்றை சொன்னார். பிறகு டாமி பக்கம் திரும்பினார்.''அவிழ்த்து விடு. உன் வீரதீர சாகசப் பசிக்கும் நல்ல விருந்து கிடைச்சிருக்கும்னு நினைக்கிறேன்.''

''ஒன்றிரண்டு'' என்று பெருந்தன்மையாய்க் குறிப்பிட்டுக் கொண்ட டாமி, தனது கச்சேரியை ஆரம்பித்தான்.

ஜூலியஸ், தன்னிலை இழந்துக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னாடி வைக்கப்பட்ட உணவில் பாதியை உண்ண மறந்து கவனித்தார். கடைசியாய் ஒரு பெரும் நீண்டப் பெருமூச்சினை வெளியிட்டார். ''உன்னை என்ன'னு சொல்றது! மயிர்க் கூச்செறிய வைக்கும் மர்ம நாவலா இருக்கு.''

''இப்போ நம்முடைய பின்தொடரும் படலம் ஆரம்பமான களத்துக்கே திரும்பறேன்'' என்று, ஜூலியஸைப் பார்த்தான், டாமி. ''நீங்க ட்ரெயின்ல ஏறினீங்க. ம். அப்புறம்?''

''அ-தா-வ-து...'' என்று இழுத்த ஜூலியஸ், ''எங்களுக்கும் சில சாகச அனுபவங்கள் இருந்ததை ஒத்துக்கறேன்'' என்றார். இதனால், அடுத்தச் சுற்று கச்சேரியாளராக மாறிப் போனார் அவர்! வெற்றியில் முடியாது போன போர்ன்-மவுத் விஷயத்தில் தொடங்கி, லண்டன் திரும்பிய நாளுக்குத் தாவி, கார் வாங்கியதைச் சொல்லி, டூபென்ஸிடம் 'வளரத் துவங்கிய படபடப்பு மற்றும் சர் ஜேம்ஸ் பீலைச் சந்தித்தது வரை குறிப்பிட்டு, உணர்ச்சிகரமான நேற்றைய இரவு நிகழ்வில் கொண்டு வந்து தனது ஆலாபனையை முடித்தார் அவர்.

''ஆனா, அவங்களைக் கொன்னது யார்?'' என்றான் டாமி. ''இது எனக்கு விளங்கலே.''

''அவங்களே அதை அதிகமா எடுத்துக்கிட்டிருப்பாங்கனு குழந்தைத் தனமாச் சொல்லிட்டாரு, டாக்டர்'' என்றார் அவர் வறட்சியாய்.

''சர் ஜேம்ஸ்? அவர் என்ன நினைச்சார்?''

''சட்ட நுணுக்கம் தெரிந்த வல்லுநராய் அனைவரும் அறிய பிரகாசிப்பதால், இந்த மாதிரி விஷயங்கள்ல அவர் ஒரு மனிதச் சிப்பியாகவே இருந்து விடுகிறார்'' என்று மறுபதில் தந்தார் அவர். ''அந்த வக்கீல், 'அவருடையத் தீர்ப்பை, ஒத்தி வெச்சுட்டார்'னு தான் நான் சொல்வேன்''. பிறகு காலையில் நடந்தவற்றை விளக்குவதில் மும்முரமானார்.

''அவ, தன் நினைவை இழந்துட்டாளாமாம், ஆங்?'' என்று சிறு ஈடுபாடு வைத்துக் கேட்டான் டாமி, ''இப்பத் தான் புரியுது... அவளைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டாதான் ஆச்சுனு நான் சொன்னப்போ அதான் பயலுக என்னை ஒரு பைத்தியக்காரனைப் போல பார்த்திருக்கானுங்க! அது, என் பக்கத்துல நேர்ந்துவிட்ட ஒரு சிறு சறுக்கல்! என்னை நானே போட்டுக் கொடுத்துவிட்ட சறுக்கல்! பாதகமில்லே... இது, நிச்சயமா ஒருத்தன் ஊகிக்கும் விஷயமே கிடையாது.''

''ஜானே ஃபின் எங்கே இருப்பா என்பதுப் பற்றி ஒரு சின்னஞ்சிறு க்ளூ கூடவா அவங்க தரலே?''

வருத்தமாய் மறுத்துத் தலையசைத்தான் டாமி. ''ஒரு வார்த்தை...? ம்ம்! கழுதை போல இருந்துட்டு வந்திருக்கேன். ச்சே! அவங்ககிட்டேயிருந்து எப்படியாவது இன்னும் அதிகமா நான் கறந்திருக்கணும்...''

''அது போகட்டும். நீ இங்கே வந்து சேர்ந்திருக்கியே... அது எத்தனை அதிர்ஷ்டம்! அவனுங்களை நீ வரிசையா முட்டாளாக்கிய விதத்தைக் கேட்கக் கேட்கப் பரவசம்ப்பா. அவனுங்களோட ஒவ்வொரு வார்த்தைக்கும் உன்னால எப்படி அப்படி டக்டக்னு சிந்திச்சு விளாச முடிஞ்சிருக்கு என்பது - எனக்கு மகா ஆச்சரியம்.''

''நான் தப்பிப்பற்ற இக்கட்டுல கிடந்ததால எதையாவது நான் சிந்திச்சு தானே ஆகணும்?'' என்றான் டாமி, சராசரியாய்.

அப்போது சில நொடிகள் தாமதம் நிலவியது. பிறகு டாமி திருமதி வாண்டே மேயரின் மரணத்துக்குத் திரும்பினான்.

''அது க்ளோரலால் தான் என்பதுல சந்தேகமே கிடையாதே?''

''ம்ம் - நான் அப்படி நம்பலே. அதிகமா எடுத்துக்கிட்ட மருந்தால உருவான மாரடைப்புனு கை கொட்றாங்க.போகட்டும். அது பற்றிய மரண விசாரணை அது இதுனு நம்ம ப்ராணன் போகாத வரைக்கும் சரி. ஆனா

இந்த விஷயத்துல - நான், டூபென்ஸ் மற்றும் இறுமாப்புள்ள அந்த ஜேம்ஸ் ஆகிய மூவருக்கும் ஒரே ஓர் ஊகம் தானிருக்கு - இது என் கணிப்பு.''

''மிஸ்டர் ப்ரௌன்?'' - அடித்தான் டாமி.

''வெகு நிச்சயமா.''

''கற்பனை நிச்சயமானதாயிருந்தாலும்,'' எனச் சிந்தனையாய் சொன்ன வன், ''மிஸ்டர் ப்ரௌனுக்கு இறக்கைகள் இருக்க வாய்ப்பில்லே! அதனால அவன் எப்படி உள்ளே நுழைஞ்சு வெளியேறினான்னு எனக்கு இன்னும் வெளிச்சமாகலே!'' என்றான்.

''ஏதாவது உயர்ரக - தொழில்நுட்ப மாற்று வேலை மாதிரி...? திருமதி வாண்டே மேயரின் உள்ளத்தை குழப்பும்படி ஒரு காந்த அலையைப் பாய்ச்சி அதன் தாக்கத்தால அவங்களைத் தற்கொலைக்குத் தூண்டி....?''

மரியாதை கலந்து இப்போது ஜூலியஸைப் பார்த்தான் டாமி.''குட், ஜூலியஸ். ரொம்ப பிரமாதம். தனித்துவம் பொங்கும் பிரமாதம். அதிலும் குறிப்பா நீங்க உபயோகப்படுத்திய பதங்கள்! ஆனா இதுல எனக்கு எந்த ருசியுமில்லே. இங்கே நான் நிஜ ப்ரௌனை சதையும் ரத்தமுமா பார்க்க உயிரையே கொடுத்துக்கிட்டிருக்கேன் - உங்களுக்குக் காந்த அலை பாயுதோ! எனக்கென்னவோ ---- நிஜமான துப்பறியும் நிபுணர்கள் இந்த விஷயத்தைக் கேட்டு, விழுந்த வழுக்கைப் பகுதியைச் சொறிந்தெடுத்து, தீர்வு கிடைக்கும் வரை போராடணுமோனு தோணுது. குற்றம் நடந்த ஸ்தலத்தை ஒரு வட்டம் அடிச்சுட்டு வருவோம்... ம்! டூபென்ஸ் சீக்கிரத்துலே வந்துடக் கூடாதா! அற்புதமான இரு உள்ளங்கள் பூரிப்பா இணைவதை - இந்த ரிட்ஸ் ரசிக்க வேண்டாமா?''

வரவேற்பு அலுவலகரிடம் மீண்டும் விசாரித்ததில் டூபென்ஸ் இன்னும் வந்து சேரவில்லை என்பது தெரிந்தது.

''இவனுங்க என்னத்தை கவனிச்சானுங்களோ....'' என்று விட்டு, ''நான் போய் மேல ஒரு பார்வை பார்த்துட்டு வந்துடறேன்'' என்றார் ஜூலியஸ். ''ஒரு வேளை வரவேற்பறையில் அவ உட்கார்ந்திருக்கப் போறா.'' சொன்னவர் உடனே பறந்தார்.

அப்போது திடீரென்று மிகவும் ஒடுக்கமாயும் சின்னவனாயும் இருந்த பையனொருவன் வந்துநின்று டாமியின் கழுத்தின் வழியே கூச்சமாய் முணுமுணுத்தான். ''அந்த சின்னப் பொண்ணு - அவங்க - ட்ரையின் ஏறிப் போயிட்டாங்கனு நினைக்கிறேன் - ஸார்.''

''என்னது?'' - டாமி, சக்கரம் கட்டிய காலில் திரும்பியவனைப் போல சுழன்றடித்துத் திரும்பினான்.

''டாக்ஸியில கேட்டேன், ஸார். ஆங், ஆங்! டிரைவராண்டே சாரிங் சதுக்கத்துக்கு உடனடியா போகும்படி சொன்னாங்க, ஸார். புருவமெல்லாம் சுருங்கி படு கூர்மையான சிந்தனையில் இருந்தாங்க ஸார், பார்க்க!''

ஆச்சரியத்தில் விழிகள் அகல, டாமி அவனை முறைத்துப் பார்த்தான். இதில் தைரியமான பையன் உற்சாகமாய்த் தொடர்ந்துக் கொண்டிருந்தான் : ''ஏ பிஸி மற்றும் ப்ராட்ஷா - இது ரெண்டும் கூட வேணும்னாங்க.''

டாமி உடனேயே குறுக்கிட்டான்: ''ஏபிஸியும் ப்ராட்ஷாவும் வேணும்னு அவ எப்போ கேட்டா?''

''நான் அவங்களுக்கு வந்த தந்தியைக் கொண்டு போன போது, ஸார்.''

''தந்தி?''

''ஆமாம், ஸார்.''

''இது எப்போ?''

''பனிரெண்டே காலை ஓட்டியிருக்கும், ஸார்.''

''என்ன நடந்ததுனு எனக்கு அப்படியே சொல்லுடா.''

சின்னப் பையன் பேச ஏதுவாய் நீளமாய் மூச்சுக் காற்றை உள்ளுக்கிழுத்துக் கொண்டான். ''நான் தந்தியை எடுத்துக்கிட்டு நெ: 891க்குப் போனேன் - அவங்க இருந்தாங்க. அதைப் பிரிச்சவங்க, அப்படியே மூச்சடைத்துப் போனாங்க. 'ஹக்' குனாங்க. அப்புறம் உடனேயே குஷியாகிட்டு சொன்னாங்க : 'ஓட்றா ஹென்றி... போய் ஒரு ஏ பி ஸி, ஒரு ப்ராட்ஷா - ரெண்டுத்தையும் அள்ளிக்கிட்டு வா'னாங்க. என் பேர் ஹென்றி கிடையாது. ஆனா....''

''மகனே... உன் பேரு இப்ப ரொம்ப முக்கியம்!'' என்ற டாமி,''மேலே'' என்றான்.

''சரி ஸார், நான் அதுகளைக் கொண்டு வந்தேன். என்னைக் காத்திருக்கச் சொல்லிட்டு எது பற்றியோ தேடறாங்க. அப்புறம் நிமிர்ந்து கடியாரத்தைப் பார்க்கறாங்க. 'ம்...ம்...சீக்கிரம்'ங்கறாங்க. 'ஒரு டாக்ஸியைக் கூப்பிடச் சொல்லு'னுட்டு கண்ணாடி முன்னாடி நின்னபடி தன்னுடையத் தொப்பியை அழகழகா திருப்பிப் பார்த்துக்கறாங்க. மளமளனு வெளியே வந்துடறாங்க. நாலு கால் பாய்ச்சல்ல கீழே போயிடறாங்க. நானும் அப்படியே பாயறேன். டாக்ஸியில ஏறிடறாங்க. அப்போ தான் நான் உங்ககிட்டே சொன்னதை உரக்க சொல்றாங்க.''

சின்னஞ்சிறு பையன் பேசுவதை நிறுத்திவிட்டு தனது நுரையீரலை நிரப்பலானான், டாமி, அவனை முறைப்பதைத் தொடர்ந்துக் கொண்டிருந்தான். அந்தக் கணத்தில் ஜூலியஸ் வந்து சேர்ந்துக் கொண்டார். ஒரு திறந்த கடுதாசியைக் கையில் சுமந்துக் கொண்டிருந்தார் அவர்.

''இந்த டூபென்ஸ் ...'' என்றபடி ஜூலியஸ் பக்கமாய்த் திரும்பிய டாமி. ''தானா கிளம்பி தனியா துப்பறிய போயிருக்கு'' என்றான்.

''பாவி.''

''ஆமாம், போயிருக்கா. தந்தி ஒண்ணு வந்திருக்கு. அதைப் பார்த்துட்டு தலை போற காரியமா ஒரு கார்ல கிளம்பி சாரிங் சதுக்கத்துக்குப் போயிருக்கா. - தனியா.'' இப்போது இவனுடைய கண்கள் ஜூலியஸின் கைகளிலிருந்த கடுதாசியின் மீது பதிந்தன. ''ஓஹ்... உங்களுக்கு குறிப்பு எழுதிட்டுப் போயிருக்காளா, அவ? அது இருக்கட்டும், எதைத் துரத்திக்கிட்டுப் போயிருக்களாம்?''

இவனது கை, தன்னிச்சையாக அக்கடிதத்தை நோக்கி நீள, ஆனால் ஜூலியஸ், அதை மடித்துத் தனது சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். முக்கியமற்றது போல அவர் காட்டிக் கொண்டார். ''இதுக்கும் கடுதாசிக்கும் சம்பந்தமில்லே, டாமி. இது வேற ஒண்ணைப் பற்றி - எனக்கு பதில் தருமாறு அவ கிட்டே நான் கேட்டிருந்த ஒரு விஷயத்தைப் பற்றி.''

''ஓஹ்...!'' - புதிர்ப் போடப்பட்டவனாய் ஆன டாமி, மேற்கொண்டு ஏதாவது வரும் என்ற ரீதியில் காத்திருப்பதாய்த் தோன்றியது.

''சரி டாமி.... கவனி'' என்றார் ஜூலியஸ் சட்டென்று. ''உனக்குப் புரியும்படியா வெளிச்சம் போட்டு காட்டிடறேன்'' என்றார். ''என்னைக் கல்யாணம் பண்ணிக்கும்படியா இன்று காலைல டூபென்ஸை நான் கேட்டேன்.''

''ஓ...!'' என்றான் டாமி, இயந்திரத்தனமாய் ஒன்றும் விளங்காது திகைத்தவனைப் போலானான் இவன். ஜூலியஸின் வார்த்தைகள் இவன் சுத்தமாய் எதிர்ப்பார்க்காதவை. அச்சமயத்தில், அவை, இவனுடைய மூளையின் இயக்கத்தையே ஸ்தம்பித்துப் போட்டன.

''இதுல முக்கியமான ஒரு விஷயத்தை உங்ககிட்டே நான் சொல்லிக்க விரும்பறேன்...'' என தொடர்ந்தார் ஜூலியஸ்: ''இந்த வழியில நான் டூபென்ஸ்கிட்டே பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னாடி, அவளுக்கும் உனக்கும் நடுவுல மூக்கை நுழைச்சு எவ்விதமான குழப்பத்தையும் நான் உருவாக்க விரும்பலே என்பதைத் தெளிவா உணர்த்திட்டு தான் பேசவே ஆரம்பிச்சேன்.''

ஏறத்தாழ எழுந்துவிட்ட டாமி, ''அதனால என்ன.. பரவாயில்லே'' என்றான் அவசரமாய். ''நானும் டூபென்ஸும் வருஷக் கணக்கா நண்பர்களா இருக்கோம். இதை மீறி எதுவும் இருந்ததில்லே.'' சொல்லிவிட்டு, இதுவரை இருந்திருக்கவே செய்யாத அளவுக்கான விரல் நடுக்கங்களுக்கிடையே ஒரு

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் இவன். ''இதுல தப்பொண்ணும் தெரியலே. டூபென்ஸ் எப்பவுமே அவ எதை எதிர்ப்பார்த்துக் காத்திருக்கானு---''

சொல்ல வந்ததை முடிக்க முடியாது அப்படியே நிறுத்திவிட்ட டாமியின் முகம் மளமளவென சிகப்பு முலாம் கொண்டது. ஆனால் ஜூலியஸ் எந்த வகையிலும், மாற்றம் கொள்ளவில்லை. அவர் தொடர்ந்தார்:

''பணம்! டாலர்களில்! இந்த மேஜிக்'கை செய்திருக்கும் கர்த்தா, இது தான்! அவங்களுடைய எதிர்பார்ப்பு பை கொள்ளா பணம் தான் என்பதைப் பட்டவர்த்தனமா மிஸ் டூபென்ஸ் என்கிட்டே போட்டு உடைச்சாங்க. அவங்ககிட்டே எவ்விதமான மூடு மறைவும் கிடையாது, ரெண்டு பேருமே மனசு விட்டுப் பேசினோம்.''

ஏதோ அவர் கூட பேசப் போவதைப் போல ஆர்வமாய் அவரையே ஒரு நிமிடம் போலப் பார்த்துக் கொண்டிருந்த டாமி, பிறகு தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு ஒன்றும் சொல்லவில்லை. டூபென்ஸூம் ஜூலியஸூம்! ஓகே - ஏன் இருக்கக்கூடாதா என்ன? தனக்கான தேர்வாக ஒரு பணக்காரப் பயலும் கிடைக்கலியேனு அவ விசனப்பட்டதில்லே? பட்டிருக்கா! அப்படி மட்டும் ஒரு வாய்ப்பு கிடைச்சுட்டா யோசிக்காம உடனடியா மோதிரம் மாத்திப்பேன்னு வெளிப்படையா அவ தலையில அடிச்சு சத்தியம் பண்ணலே? பண்ணியிருக்கா! அப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்கா? நேற்று வரை இல்லை - ஆனா இன்னிக்கு - யெஸ்! அமெரிக்க கோடானு கோடீஸ்வரனுடனான சந்திப்பு அவளுக்கு ஏங்கிக் கிடந்த வாய்ப்பை உண்டாக்கித் தந்திருக்கு. அதை அப்படியே உடனே அனுபவிக்காம அவ காலங்கடத்துவா என நினைப்பது அறிவீனம். அவ பணத்துக்குப் பின்னாலேயே இருந்திருக்கா. எப்பவுமே அப்படித்தான் அவ சொல்லவும் செஞ்சிருக்கா. அவ தாகத்துக்கு ஏற்றாற் மாதிரி உண்மையா நடந்துக்கிட்டு இருக்கும் அவளைப் போய் ஏன் குற்றம் சொல்லணும்?

இப்படியெல்லாம் நிதர்சனமாய் எண்ணிக் கொண்டாலும், டாமி, அவள் மீது பழி போடத்தான் செய்தான். மேற்கூறியவை தான் நிதர்சனம், ஆயினும், காரணமேயற்று துளியும் பொருந்தாமல் கோபங்கொண்டான் டாமி. இயலாமை! அப்படியெல்லாம் பேசிக் கொண்டு மனசு ஆறுவது ஒரு பக்கமிருக்கட்டும் - ஆனால் உண்மையாய் பார்த்தால் ஒரு பெண்மை, வெறும் பணத்துக்காக மட்டும் வாழ்க்கையை அர்ப்பணிப்பதில்லை. பணத்துக்காக வும் வேண்டுமானால் செய்யலாம். இந்த டூபென்ஸ் ஈவிரக்கமற்ற ஒரு சுயநலவாதி. பணம், பணம். சே! இவளை இனி தன்

வாழ்நாளில் பார்க்காமலே போய்விட்டால் நல்லது என எண்ணிக் கொண்டான் டாமி.

இது அழகிய உலகமல்ல - அழுகிய உலகம்!

''நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழும் ஜோடி வாழ்க்கை இப்பவே அழகா எடுப்பாத் தெரியுது. ஆரம்பத்துல பொண்ணுங்க. 'தூ....'னு மறுத்து ஒதுக்கிட்டு முகத்தைத் தூக்கிக்கிட்டு தான் போகும் - பாதகமில்லே - எங்கேயும் இந்தக் கதை தானே!'' - தொடர்ந்தார் ஜூலியஸ்.

டாமி அவரது கையைச் சட்டென பற்றினான். ''மறுத்து? மறுத்து ஒதுக்கி'னா சொன்னீங்க? ம்?''

''ஆமாமாம். அப்படியே. நான் சொன்னதையே தான் அவங்க செஞ்சிட்டும் போயிருக்காங்க! 'நோ' வாம்! எந்த வகையான காரணங்களும் சொல்லாம ஒரு 'நோ' வை தட்டும் உதிர்த்திட்டுப் போயிருக்காங்க. இது தான் பெண்மை - மிஞ்சினா கெஞ்சுவது! வருவாங்க - திரும்பி! வந்து, நான் மறுபடியும் போய் கேட்கணும்னு எதிர்பார்ப்பாங்க. ஓஹ், பெண்மையே!''

ஆனால் நாகரீக அணுகுமுறையைத் தாற்காலிகாய் ஒதுக்கி வைத்த டாமி விசையோடு கேட்டான் : ''அந்தக் கடுதாசியில அவ அப்படி என்னதான் சொல்லியிருக்கா?''

இந்த வேண்டுகோளை அனுசரித்துப் போன ஜூலியஸ் அதனை இவனிடமே தந்து விட்டார்: ''அவங்க அப்படி எங்கே தான் போனாங்க என்பதற்கு கிஞ்சித்தும் இதுல குறிப்பு கிடைக்கலே. என்னை நம்பலேனா நீங்களே இதைப் பார்க்கலாம்.

அந்தக் குறிப்பு - டூபென்ஸின் ஆரம்பக்கால பள்ளிக்கூட மாணவியின் கையெழுத்தில் போயிருந்த அந்தச் சிறு குறிப்பு - பின்வருமாறு அமைந்திருந்தது.

டியர் Julius,

எந்த விஷயமும் கைக்கு மெய்யாய் கிடைக்கப் பெற்றால் தான் மேற்கொண்டு முடிவெடுக்க வழி கிடைக்கும். Tommy நம் கைகளில் கிடைக்கும் வரை கல்யாணம் என்ற ஒன்றுக்குள் என் மண்டையை நுழைத்துக் கொள்ள நான் தற்போதைக்கு விரும்ப வில்லை. எனவே அது வரை இந்த விஷயத்தை நாம் விட்டு வைப்போம்.

உங்கள் அன்பான,
Tuppence.

கண்களில் புது மினுமினுப்புக் கூட அதனைத் திருப்பித் தந்தான் டாமி. கூர்மையான ஒரு மாற்றத்தினை இவனுடைய உணர்வுகள் அடைந்திருந்தன. உயர் பண்புகள் மட்டுமே நிறைந்த ஒருத்தி அமரிக்கையாய் மறுக்கும் முறையில் அவள் தனது உணர்வினை வெளிப்படுத்தியதாக உணர்ந்தான் இவன். துளியும் தயக்கமின்றி அவள் ஜூலியஸை ஒதுக்கவில்லை? நிச்சயமாய்! ஒரு வகையில் பார்த்தால், அந்தக் கடுதாசியானது, டாமியைக் கண்டுபிடிக்க விழுந்தடித்துக் கொண்டு ஜூலியஸ் இயங்கியாக வேண்டும் என்று மறைமுகமாக கொடுக்கப்பட்ட லஞ்சமாகக் கூடத் தோன்றியது. *டார்லிங் டூபென்ஸ்.* உன்னை அடித்துக் கொள்ள வேறு ஒரு பெண் இந்த உலகத்தில் கிடையாதடீ, என் செல்லம்!

''நீங்க சொல்ற மாதிரி ....'' என்றபடி தன் இன்ப நிலையைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தான் டாமி. ''அவ எதைத் துரத்திக்கிட்டு ஓடியிருக்கா என்பதற்கு இதுல துளி க்ளூ இல்லே. ஹை, ஹென்றி!''

சின்னஞ்சிறு பையன், கூப்பிட்டக் குரலுக்கு மரியாதையாய் வந்தான். டாமி ஐந்து ஷில்லிங் காசுகளைக் கையில் வைத்திருந்தான். கேட்டான்: ''இன்னொரு விஷயம்டா. அந்தத் தந்தியை அப்புறம் அவ என்ன பண்ணினான்னு உனக்குத் தெரியுமா?''

சின்ன ஹென்றி, மூச்சுக்காற்றை உள்ளுக்கிழுத்து இருப்பு வைத்துக் கொண்டு பேசினான்: ''அதை சுருட்டிப் பந்து போல ஆக்கிட்டு, அதை அங்கேயே குப்பையில போட்டுட்டு 'ஊப்ஸ்' என்பது போல ஒரு பெரிய நிம்மதிப் பெருமூச்சை விட்டாங்க.''

''அப்படியே சொல்றேடா கண்ணா'' என்ற டாமி, ''இந்தா இதுக்கு ஐந்து ஷில்லிங். வாங்க ஜூலியஸ் அந்தத் தந்தியை நாம பிடிக்கணும்'' என்றான்.

மாடிப்படிகளில் விரைந்தனர். அவள் அறைக்கதவிலேயே சாவியும் இருந்தது. ஓ! அப்படி என்ன அவசரம் அவளுக்கு? அவள் எப்படி விட்டுவிட்டு ஓடியிருந்தாளோ அதே நிலைமையிலிருந்தது அந்த அறை. அங்கிருந்த குப்பைக் கூடைக்குக் கீழேயே வெள்ளையும் ஆரஞ்சுப் பட்டியும் கொண்டிருந்த ஒரு சாம்பல் நிறத் தாள் கசக்கி உருட்டப்பட்டுக் கிடந்தது. அதைப் பிரித்து சமமாய் தேய்த்து நேர்த்தி பண்ணிய டாமி படித்தான்.

உடனே வா. மியாட் வீடு. எபுரி பகுதி. அற்புதமான முன்னேற்றங்கள். Tommy.

முட்டாளாகி மூர்ச்சையாக்கப்பட்டவர்களாய்ப் பார்த்துக் கொண்டார்கள் இருவரும். ஜூலியஸ் தான் முதலில் பேசினார்: ''இதை நீங்க அனுப்பலையா?''

''சேச்சே. அப்ப நானும் ஏன் முழிக்கறேன்? இதுக்கு என்ன அர்த்தம்?''

''இது மிக பயங்கரமானதைக் குறிப்பதா நான் நினைக்கிறேன்'' - அடங்கிப் போய் குறிப்பிட்டார் ஜூலியஸ். *''அவனுங்க - இவளைப் புடிச்சாட்டானுங்க.''*

''என்ன?''

''படு நிச்சயமா! உங்க பேரைக் கையெழுத்தா போட்டிருக்கானுங்க. இவ, பொறியில மாட்டிட்டா.''

''ஓ, கடவுளே! நாம என்ன பண்ணலாம்?''

''மளமளனு கிளம்பி டூபென்ஸைத் தொடர்ந்து ஓடணும்! இப்பவே! நொடி வீணாக்க அவகாசம் கிடையாது. நாம பண்ணின ஜென்மாந்திரப் புண்ணியம், தந்தியை அவங்க கையோட எடுத்துக்கிட்டுப் போகாதது! அப்படிப் பண்ணியிருந்தாங்கன்னா...ம்ம்.. கடைசி வரைக்கும் அவங்களை நாம அடைய முடியாமலே ஆகியிருக்கும். இப்ப நாம பதறணும்.... பறக்கணும். அந்த ப்ராட்ஷாவைக் கொஞ்சம் எடு.''

ஜூலியஸின் அளப்பறிய வேகமும் சக்தியும் இப்போது தொற்று நோயாய் டாமிக்குப் பரவின. டாமியைத் தனித்துவிட்டிருந்தால் அரை மணியோ அல்லது ஒரு மணியோ உட்கார்ந்து யோசித்துப் பிறகு மெதுவாய் என்ன செய்யலாம் என திட்டமிட்டு அதற்கு பிறகு எப்படி நடைமுறை செய்யலாம் என ஊகித்து... என எக்கச்சக்கமாய் நேரத்தை வீணாக்கி யிருப்பான். ஆனால், ஜூலியஸுக்கே உரிய சுறுசுறுப்பு கலந்த பரபரப்பு எதையும் தவிர்க்கயிலாததாக ஆக்கிற்று.

என்ன நடந்துள்ளது என்ற மர்மத்திலேயே மூழ்கிக் கிடந்த டாமி, ப்ராட்ஷாவை அவருக்குத் தந்துவிட்டு, தனக்கு ஏ பி ஸி போதும் என்று எடுத்துக் கொண்டான். வரைபடம் ஒன்றைப் பார்த்தபடி குறிப்பிட்டான்: ''இதோ ...இந்த இடம் தான் நாம போக வேண்டிய பகுதி. எபுரி. கிங்ஸ் சதுக்கம். சின்ன பையன் தப்பா சொல்லியிருக்கணும். அது கிங்ஸ் சதுக்கம் - சாரிங் சதுக்கம் கிடையாது. 12.50 - இது தான் அவ போன ரயிலின் நேரம். 2.10 - அது போயிருக்கும். அடுத்து - 3.20. இது மட்டும் எக்ஸ்பிரஸ் கிடையாது- பாஸஞ்ஜர். ஓஹ்.,...!''

''கார்ல போகக் கூடாதா?''

டாமி மறுத்துத் தலையசைத்தான். ''திருப்பி அனுப்பிடறதுனா அனுப்பிடுங்க. ரயில் தான். இப்போதைக்கு நாம செய்ய வேண்டிய பெரிய வேலை - *சாந்தமாவது.''*

ஜூலியஸ் முகம் கோணினார். ''அது சரி! ஆபத்துல மாட்டிக்கிட்டிருக்கும் அந்த வெகுளிப் பெண்ணுக்கு என்ன ஆகியிருக்கோ.. அதைத் தடுக்கப் பாய வேணாமா?''

இதனைப் புரிந்துக் கொண்டவனாய்த் தலையசைத்தான் டாமி. சிந்தித்தான். ஓரிரு கணங்களில் பேசினான்: ''சொல்லுங்க ஜூலியஸ். இப்ப என்ன காரணத்துக்காக அவனுங்களுக்கு டூபென்ஸ் வேணும்?''

''உங்க கேள்வி விளங்கலியே.''

''டூபென்ஸைத் தூக்கிட்டுப் போயிருக்கும் இந்த நாடகத்தை அவனுங்க அவளுக்குத் தீங்கு விளைவிக்க நடத்தலே'னு சொல்ல வரேன்'' - விளக்கிய டாமியின் புருவங்கள் மனச்சுமையின் தாக்கத்தால் சுருங்கி முடிச்சிட்டிருந்தன. ''இப்போதைக்கு - அவ - ஒரு - பிணைக்கைதி! இது, அப்படிப்பட்டது தான்! ஆக, அவ எவ்விதமான உடனடி அபாயத்திலும் இல்லே.''

''பிறகெதுக்கு அவனுங்களுக்கு, டூபென்ஸ்?''

''நாம மேற்கொண்டு எதுவும் நடவடிக்கையில் இறங்காம இருக்க - அதாவது நம்மை முடக்கிப் போட. இப்ப நாம ஓரடி எடுத்து வெப்போமா, ம்?! ஆக, அவ அங்கே இருக்கிற வரைக்கும் - நம்மக் கைகள் கட்டப் பட்டிருக்க, நம்ம முன்னாடி, நமக்காக, கையில கசையோட நிற்கும் பரம எதிரிங்க - அவனுங்க! தவிர, நம்ம உயிருக்கே இப்போ ஏதாவது ஆபத்து நேருதுனு வெச்சுக்குவோம்... அவ அவனுங்களுக்கு அத்தனை உபயோகமா இருப்பா - விஷயத்தைக் கறந்துடலாம். இல்லே?!''

''ஆமாம், ஆமாம்'' என்றார் ஜூலியஸ் விளங்கியவராய். ''இதுக்குள்ளே இத்தனை இருக்கா?''

''இத்தனையிருந்தாலும்'', என்று, பிறகு நினைவில் வந்ததைச் சொல்பவனாய்க் குறிப்பிட்டான்: ''டூபென்ஸ் மிக நம்பிக்கையானவ.''

பிரயாணம், அதிக நிறுத்தங்களாலும் முண்டியடிக்கும் பிரயாணிகளாலும் களைப்பூட்டுவதாய் அமைந்தது. இரண்டு முறை ரயில் மாற வேண்டி நேர்ந்தது. எபுரி, ஆளரவமற்ற ஒரு சிறு குக்கிராம நிறுத்தமாயிருந்தது. அதில் இருந்த ஒரே ஒரு தனிமை ஊழியனை அணுகிய டாமி கேட்டான்: ''மியாட் ஹவுஸ் எனும் வீட்டுக்குப் போகும் வழியைச் சொல்ல முடியுமா?''

''மியாட் ஹவுஸ்? கொஞ்ச தொலைவு நடக்க வேண்டி வருமே... கடலுக்குப் பக்கத்துல இருக்கிற வீட்டைத் தானே சொல்றீங்க?''

மிக சிரத்தையாய் ஆனால் அதே சமயம் தட்டுத் தடுமாறி ரயில்வே ஊழியன் அறிவித்த திசைகளையெல்லாம் மனதில் சுமந்து விடை பெற்ற இருவரும், நிலையத்தை விட்டுக் கிளம்ப ஆயத்தமானார்கள். மழை தூர ஆரம்பித்தது. இருவரும் தங்களது சட்டையின் காலர் பகுதியில் தொங்கிய தொப்பிகளை அள்ளித் தலைக்குப் போர்த்திக் கொண்டு சேற்றில் குழம்ப ஆரம்பித்திருந்த தெருவில் களைப்பாய் நடக்க ஆரம்பித்தனர்.

திடுமென டாமி நின்றான். ''ஒரு நிமிஷம்,'' ஒட்டமாய் ரயிலடிக்குள் நுழைந்தவன், ஊழியனை மற்றுமொரு புதுக் கேள்வியால் பிடித்தான்: ''ஏய், கவனி. மதியம் 12 மணிக்கு லண்டனிலிருந்து வந்த ட்ரெயின்ல ஓர் இளவயது பொண்ணு வந்து இறங்கினதா ஞாபகமிருக்கா? அவளும் கூட மியாட் ஹவுஸுக்கு எப்படிப் போவதுனு உன்கிட்டே கேட்டிருக்கணும்.''

எத்தனை கவனமாய் விவரிக்க முடியுமோ அப்படி டூபென்ஸை விவரித்தான் இவன். ஆனால் ரயில்வே ஆள் மறுப்பாய் தலையசைத்தான். இள வயது பெண் ஒருத்தியைக் குறி வைத்து அவனால் கவனத்துக்குள் கொண்டு வர முடியவில்லை. ஆனால் யாரும் மியாட் ஹவுஸுக்கு எப்படிப் போவது என்று அவனிடம் கேட்டிருக்கவில்லை என்பதில் அவன் உறுதியாய் பதில் தந்தான்.

டாமி ஜூலியஸோடு திரும்பி வந்து இணைந்துக் கொண்டு விளக்கினான். இறக்கி வைக்க முடியாத கனமாய் இவன் மீது மன உளைச்சல் இறங்கியது. இவர்களுடைய தேடுதல் நிச்சயமாய்த் தோல்வியில் தான் முடியப் போகிறது என்பதில் உறுதியானான் இவன். எதிரிக்கு, மூன்று மணி நேர அவகாசம் முன் கூட்டியே கிடைத்திருக்கிறது. இது ஓர் அனுகூலம். இத்தனை நீண்ட இடைவேளை, மிஸ்டர் ப்ரௌனுக்கு மிகமிக அதிகம். அந்தத் தந்தி கண்டெடுக்கப்பட்டு விடும் சாத்தியக்கூறினை உணராமல் விட்டு ஏமாந்து விடும் வகையல்ல அவன்.

நடந்துக் கொண்டிருந்த பாதை ஓர் எல்லையற்றதாய் தோன்றியது. ஒரு முறை, போக வேண்டியத் திசையை விட்டு தவறாக அகன்று, கிட்டத்தட்ட அரை மைல் தூரம் வரை போய் திரும்பினார்கள். ஒரு விடலைப்பயல், எதிரே வரும் திருப்பத்தைக் கடந்ததும் மியாட் ஹவுஸ் இருப்பதாய்ச் சொன்ன போது மணி ஏழே காலைக் கடந்திருந்தது.

துருப்பிடித்த ஓர் இரும்பு கேட், அதன் பிடிப்பெல்லாம் ஏறக்குறைய கழன்று, இருண்ட நிறத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. வீட்டுக்கு இட்டுச் செல்லும் சிறு வாகனப் பாதை முழுதும் கனமான இலைகள் கொண்ட செடி கொடிகளால் அபரிமிதமாய் மூடிக் கிடந்தது. அந்த இடத்தில் ஏதோ ஒன்று சூழ்ந்திருப்பது போன்ற பிரமை தன்னிச்சையாய் உண்டானது. அதுவே இருவரின் மனத்தினையும் ஐஸ் கட்டியாய் குத்திக் குலைத்தது. ஒரு பிராணியாற்றுக் கிடந்த அந்த சிறு பாதையைக் கடந்து முன்னேறினர். சில இலைகள் கால்களுக்கிடையில் மிதிபட்டு மடிந்தன. சூரிய ஒளி முழுக்க விலகியிருந்தது. பேய்கள் நிறைந்த பகுதியில் நுழைந்துக் கொண்டிருப்பது போலிருந்தது. மேலே சில கிளைகளும் இலைகளும் சோகத்தைக் கூட்டும்படி

முறிந்து ஒலியெழுப்பி விழுந்தன. அவ்வப்போது சருகான ஓரிரு இலைகள் ஓசையெழுப்பாது உதிர்ந்து, இருவருடைய கழுத்திலும் பனி சில்லிப்பில் விழுந்து, திகைக்க வைத்துக் கிலியைக் கூட்டின.

நுழைவுப் பாதையின் திருப்பம், வீட்டின் தோற்றத்தை இவர்களுக்கு அளித்தது. ஜன்னல்கள் எல்லாமும் மூடியிருக்க, நிலைக்கதவு வரை இட்டுச் சென்ற பாதை நெடுகிலும் ஈரப்பாசி செழித்திருக்க...அந்த வீடும் கூட, காலியாகவும் துக்கம் கவ்வியதாகவுமே தெரிந்தது. போயும் போயும் பாழடைந்த இந்தப் பகுதிக்கா டூபென்ஸ் கொள்ளையடிக்கப்பட்டிருப்பாள்? இந்தப் பகுதிகளில் மனிதக் காலடிகள் பட்டிருக்கும் என்பதை நம்புவதே கடும் கஷ்டமாயிருந்தது. அந்த அளவுக்கு மாசக்கணக்காய் இங்கு ஒருவரும் வந்திருக்க வாய்ப்பில்லை என்பது வெளிப்படையாய்த் தெரிந்தது.

துருப்பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த அழைப்பு மணியின் கைப்பிடியைப் பிடித்து இழுத்தார் ஜூலியஸ். நாராசமான அலறலாய்ப் பெரிய சத்தம் சூழலுக்கு ஒவ்வாது கதறல் போல ஒலித்து, உள்ளிருந்த காலிப்பிரதேசத்தில் சற்று நேரம் எதிரொலித்தது. ஒருத்தரும் வரவில்லை. மறுபடி மறுபடி அதை ஒலித்தார்கள். ஆனால் உள்ளே உயிரினம் ஏதேனும் இருப்பதற்கான அறிகுறியே கிடைக்கவில்லை. பிறகு இருவரும் வீட்டை முழுவதுமாக ஒரு சுற்றி சுற்றி வந்தார்கள். எங்கெங்கும் அமைதி, மேலும் அடைத்த ஜன்னல்கள். அவர்களின் கண்களின் சாட்சியப்படி - இந்த இடம், ஓர் காலியிடம்.

''ஒண்ணும் செய்யறதுக்கில்லே'' என்றார் ஜூலியஸ்.

வந்த வழியே திரும்பி மெதுவாய் வாசலில் ஹீனமாயிருந்த துருப்பிடித்த கேட் வரை வந்தனர். ''கைக்கெட்டும் தூரத்துல... பக்கத்துல ஒரு கிராமம் இருக்கணும்'' - தொடர்ந்தார் அந்த அமெரிக்கன்: ''அங்கே போய் விசாரித்துப் பார்ப்பது நல்லது. இந்த இடத்தைப் பற்றியும் சமீபத்துல இங்கே யாராவது தங்கியிருந்தாங்களா என்பது பற்றியும் அவங்க ஏதாவது தெரிஞ்சு வெச்சிருக்கலாம்.

''ம், இதுவும் நல்ல யோசனை தான்.''

தெரு காட்டியப் பாதையில் மேலும் சற்று தூரம் நடந்துப் போகும்போது, ஒரு குக்கிராமம் தென்பட்டது. அதன் நுழைவில், தோளில் ஒரு சாக்குப் பையையும் அதில் என்னவெல்லாமோ இரும்பு உபகரணங்களையும் தூக்கியபடிச் சென்றுக் கொண்டிருந்த ஒரு தொழிலாளியைச் சந்தித்தனர்.

'மியாட் ஹவுஸ்? ஓ, அது காலியில்லே! வருஷக்கணக்கா காலியாவே கிருக்கு. அதுக்குள்ளே நீங்க போய்ப் பார்க்கணும்னா, திருமதி ஸ்வீட்டி கிட்டே சாவி கிடைக்கும்...! அவங்க வீடு தபால் ஆபிஸுக்குப் பக்கத்துல.''

டாமி அவனுடைய வரிசையான யோசனையற்ற வெகுளிப் பதில்களுக்கு நன்றிகள் சொன்னான். ரொம்ப அலையாமல், உடனேயே, இனிப்பு மற்றும் பலசரக்குக் கடையாகவும் இயங்கிக் கொண்டிருந்த அந்த ஊர் தபால் அலுவலகத்தைக் கண்டு அடைந்தனர். இருவரும், அதற்கு அடுத்து இருந்த சிறு வீட்டின் கதவினைத் தட்டினார்கள். படு சுத்தமாயும் கலகலப்பாயும் தோன்றிய ஒரு பெண்மணி கதவைத் திறந்தார். தயக்கமின்றி உடனடியாய் மியாட் வீட்டின் சாவியைத் தந்தார் அவர். ''இருந்தாலும், எனக்கென்னவோ உங்களைப் போன்ற ஆடவர்களுக்கு உகந்த இடமா அது எனக்குத் தெரியலே, ஸார். கண்ணால பார்க்க முடியாத நிலையில அது பழுதடைஞ்சுக் கிடக்கு. உத்திரம் ஒழுகும். அதை பழுது பார்க்கவே உங்களுக்கு அத்தனை செலவு பிடிக்கும், ஸார்.''

''நன்றியம்மா'', என்றான் டாமி, குதூகலமாய். ''அதை உடைச்சு தான் கட்ட வேண்டியிருக்கும். பாதகமில்லே. இந்தக் காலத்துல எங்கே ஒரு வீடு கிடைக்குது, சொல்லுங்க...''

''அதை சொன்னீங்களே... நூத்துல ஒரு வார்த்தை'' என்று மனந்திறந்து அறிவித்தார் அவர். ''என் மகளும் மாப்பிள்ளையும் நல்ல வீடு ஒண்ணு தேடறாங்க... தேடறாங்க.. எத்தனை காலம்னு சொல்ல முடியலே... அப்படி தேடறாங்க! எல்லாம் இந்தப் போர்'னால தான்! (* முதல் உலகப் போரை ஒட்டி எழுதப்பட்ட நாவலிது!) எல்லாத்தையும் தாறுமாறா மாத்திடுது, அது. ஆனா, சொல்றதுக்கு மன்னிக்கணும், ஸார். வீட்டின் பல பகுதிகளைப் பார்க்கவே முடியாத அளவுக்கு, இப்போ அத்தனை இருட்டா இருக்கும். ஏன் காலைல வரக்கூடாது?''

''அது பரவாயில்லே. இன்னிக்கு சாயங்காலம் பொழுதோடயே வீட்டை ஒரு வட்டம் அடிச்சுட்டோம். இங்கேயும் வெளிச்சத்திலேயே வந்திருப்போம் - ஆனா வழியைத் தவற விட்டுட்டு அலைஞ்சதுல நேரம் ஓடிடுச்சு. இன்னிக்கு ராத்திரி தங்கறதுக்கு இந்த பகுதியில் இருக்கிற சிறப்பான இடம் ஏதாவது...?''

திருமதி ஸ்வீட்டி சந்தேகமாய் யோசித்தார். ''அங்கே யாக் ஆர்ம்ஸ் உணவகம்னு ஒண்ணு இருக்கு. ஆனா அது உங்களை மாதிரி ஜென்டில்மேனுக்கெல்லாம் உகந்த இடமா படலே.''

''ஓ, அதை நாங்க பார்த்துக்கறோம். ரொம்ப ரொம்ப நன்றிம்மா. ஆங்.. சாவி கேட்டுட்டு இன்னிக்கு இங்கே ஓர் இளவயது கன்னிப் பொண்ணு யாரும் வரலே, இல்லே?''

மறுப்பாய்த் தலையசைத்தார் பெண்மணி. ''பல நாட்களா அங்கே ஒரு நாதி போகலே.''

''நன்றி, நன்றி.''

மியாட் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். திறக்க மறுப்பதாய்ப் பெரும் ஓசையை எதிர்ப்பாய் காட்டிய நிலைக்கதவினைத் தள்ளித் திறந்ததும், கும்மிருட்டில் வழி தெரிய வத்திக் குச்சி ஒன்றினை ஏற்றிக் கொண்டார் ஜூலியஸ். எச்சரிக்கையாகப் பாதையைக் கண்காணித்தார். ''இங்கே ஒருத்தன் வந்ததில்லே'னு சத்தியம் பண்றேன்'' என்று மறுப்பாய் தலையசைத்தபடி சொன்னார். ''தூசியைப் பாருங்க... எத்தனை தடிமன். பாதச் சுவட்டுக்கான அறிகுறியே கிடையாது.''

அரவமற்ற வீட்டினைச் சுற்றினர். எங்கும் இதே கதைதான். தடிமனான போர்வையாய் கலைக்கவேப்படாத தூசு.

''இதுல எனக்கு ஒண்ணு நல்லா புரியுது, மிஸ்டர் டாமி'' என்றார் ஜூலியஸ். ''இந்த வீட்டுக்கு டூபென்ஸ் வந்திருந்தானு என்னால நம்பவே முடியாது.''

''அவ வந்திருக்கணும்.''

ஜூலியஸ் பதிலேதும் தராது அழுத்தமாய் மறுத்துத் தலையசைத்தார். ''நாளைக்குக் காலையில மறுபடியும் வந்துப் பார்ப்போம். ஒரு வேளை பகல் நேரத்து ஒளியில் ஏதாவது நுணுக்கமாத் தட்டுப்படலாம்.''

மறுநாளும் இன்னொரு முறை தேடுதலை மேற்கொண்ட இருவரும், சமீப காலமாக எந்த ஆட்களும் உள்ளே வந்து போகவில்லை என்ற... சுலபமாய் ஜீரணிக்க இயலாத முடிவுக்குத் தள்ளப்பட்டனர். அப்போது அதிர்ஷ்டமாக டாமி கண்டுபிடித்த நிகழ்வு மட்டும் நடக்காமல் இருந்திருந்தால், ஒட்டு மொத்தமாக கிராமத்தை விட்டே வெளியேறியிருப்பார்கள். திரும்பி, துருப்பிடித்த கேட்'டுக்கு இருவரும் வந்துக் கொண்டிருந்த போது, திடீரென ஒரு கத்தலை வெளியிட்டு குனிந்த டாமி, தரையோடு தரையாக, புதராய் மண்டிக்கிடந்த இலைக் கூட்டத்திற்கு அருகில் மினுமினுத்துக் கொண்டிருந்த ஏதோ ஒன்றினை எடுத்து, அதனை ஜூலியஸூக்கு முன் தூக்கிப் பிடித்தான். அது, தங்கத்தினாலான, ஒரு சிறு பட்டன். அழகுக்காக மேல் சட்டையில் போட்டுக் கொள்வது.

''இது டூபென்ஸூடையது!''

''நிச்சயமா தெரியுமா?''

''அப்பழுக்கில்லாம... இதை அடிக்கடி அவ விரும்பி அணிவதை நான் பார்த்திருக்கேன்.''

ஜூலியஸ் நிறைய சுவாசக் காற்றினை உள்ளுக்கிழுத்துக் கொண்டார். முடிவாய் சொன்னார்: ''அவங்க இத்தனை தூரம் வரைக்கும் வந்திருக்காங்க என்பதை இது விளக்கிடுது. நாம இப்போ தங்கியிருக்கிற க்ளப்'பையே

தலைமையிடமாகக் கொண்டு, வா டாமி, பாதாளம் வரைக்கும் இங்கே தேடுவோம். அவங்க கிடைக்கும் வரை. யாராவது நிச்சயம் அவங்களைப் பார்த்திருக்கணும்.''

உடனேயே தேடுதல் துவங்கியது. டாமியும் ஜூலியஸூம் தனித்தனியாகவும், சேர்ந்தும் பணியாற்றினர். ஆனால் முடிவென்னவோ ஒன்றே. டூபென்ஸின் அங்க அடையாளங்களை வர்ணித்ததை வைத்து உதவ ஒருவரும் இந்தப் பகுதியில் இல்லை. இருவரும் அறையப்பட்டனர் - ஆனால் உற்சாகமும் நம்பிக்கையும் இழக்கவில்லை. அவர்களுடைய வியூகத்தைச் சற்று மாற்றிக் கொண்டனர்.மியாட் வீட்டினை ஒட்டிய பிரதேசங்களில் நிச்சயமாய் டூபென்ஸ் வெகு நேரம் தங்கியிருக்கவில்லை. இது, அவளை யாரோ வெற்றி கொண்டு கார் போன்ற ஒன்றில் தூக்கிப் போயிருக்கலாம் என்ற திசையில் போய் நின்றது. விசாரணைகளைப் புதுப்பித்துக் கொண்டனர். மியாட் ஹவுஸை ஒட்டி கார் ஒன்று நின்றதை யாராவது பார்த்தார்களா? அல்லது பக்கத்துப் பகுதிகளில் ஏதேனும் வாகனம்? இதிலும் இருவரும் வெற்றி காணவில்லை.

ஜூலியஸ் அவருடைய சொந்தக் காரைக் கொண்டு வரும்படி பட்டணத்துக்குத் தந்தியனுப்ப, பிறகு அதிலேயே சுற்றுவட்டாரப் பகுதிகள் அனைத்தையும் குறையாத உத்வேகத்துடன் அலைந்துத் திரிந்தனர். சாம்பல் நிற லூமினஸ் கார் ஒன்றின் மீது அதிக நம்பிக்கை (சந்தேகம்) கொண்டு அதனை சில மைல் தூரம் வரை பின் தொடர்ந்து போய் மடக்கியதில், அது, ஒரு பெருமதிப்பிற்குரிய பெண்மணியின் கார் என்பது புலனாயிற்று! ஒவ்வொரு காலையும், ஒரு புது வித விசாரணையும் தேடுதலும் இவர்களை விரட்டியடித்தன. ஜூலியஸ், மோப்பம் பிடித்து அலையும் வேட்டை நாயாகவே ஆனார். நுண்ணிய க்ளுவைக் கூட விடாது பிடித்துக் கொண்டு ஓடினார் அவர். அந்த துரதிர்ஷ்ட நாளன்று இப்பகுதியைக் கடந்து போன ஒவ்வொரு காரும் அறியப்பட்டன. அதன் சொந்தக்காரர்களை முன்னறிவிப்பின்றி அணுகி, தேடுதல் சம்பந்தமானக் குறுக்கு விசாரணையை நடத்தினார். ஜூலியஸ். இதற்கு சளைக்காது அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலும், தேவையற்ற எரிச்சலை அச்சொந்தக்காரர்கள் அடைவதைத் தடுக்கயியலவில்லை. நாளொன்று மறுநாளாய் மாறியதே தவிர, டூபென்ஸின் இருப்பிடத்தை அறிந்து விடும் அருகாமை அகப்படவில்லை. காற்றோடு அவள் கரைந்து விட்டாள் என நம்புமளவுக்குத் திட்டமாகி செயல் படுத்தப்பட்டிருந்தது, டூபென்ஸின் கடத்தல். எடுக்க வேண்டிய மேலும் ஓர் அவசர நடவடிக்கையும் டாமியின் தலையை அழுத்திக் கொண்டிருந்தது.

''நாம எத்தனை நாளா இங்கேயிருக்கோம்னு தெரியுமா?'' - ஒரு நாள் காலை ஒருத்தரை ஒருத்தர் பார்த்தபடி அமர்ந்து சிற்றுண்டி சாப்பிடும் போது கேட்டான் டாமி. ''ஒரு வாரம்!டூபென்ஸைக் கண்டுபிடித்து விடுவதில் நாம கொஞ்சம் கூட முன்னேறலே. அடுத்த ஞாயிறு - 29!''

''ஓஓஓ'' - சிந்தனையோடுச் சொன்னார் ஜூலியஸ். ''நான் இருபத் தொன்பதை மறந்தே போயிட்டேன். டூபென்ஸைத் தவிர வேற எதையுமே நான் நினைக்கலே.''

''அதே கதிதான் இங்கேயும். நான் இருபத்தொன்பதை மறக்கலே - ஆனா டூபென்ஸின் பிரச்சினைக்கு முன்னால எனக்கென்னவோ அது தள்ளி வைக்க வேண்டிய இரண்டாம்பட்சமா ஆயிடுச்சு. இன்னிக்கு 23. நேரம் நெருங்கிக்கிட்டே இருக்கு. அவளை நாம எப்படியோ கண்டுபிடிக்கிறதா இருந்தா, அதை, இருபத்தொன்பதுக்கு முன்னாடியே செஞ்சாகணும் - அவ உயிர் அதுக்கப்புறம் ஒரு மணி நேரம் கூட விட்டு வைக்கப்படாது. பிணைக்கைதியின் காலம் - அப்போது காலாவதியாகி விடும். இதை நாம கையாண்ட விதத்துல பெரிய குழப்படியும் தப்பும் பண்ணிட்டோமோனு தோணுது. நேரத்தை அபரிமிதமா வீணாக்கியதைத் தவிர வேற என்னத்தை செஞ்சோம்...?''

''நான் வேற உன் கூட. ரெண்டு முட்டாள்கள். ஓஹ்....!நம்மை நாம ஏமாத்திக்கிறதிலிருந்து முதல்ல வெளியேறுவோம். டாமி.''

''என்ன சொல்றீங்க?''

''சொல்றேன். ஒரு வாரத்துக்கு முன்னாடியே நாம என்னப் பண்ணியிருந்திருக்கணுமோ அதை நான் இப்பப் பண்ணப் போறேன். நான் இப்ப உடனடியா திரும்பி லண்டனுக்குப் போய் உங்க பிரிட்டன் காவல் துறையின் கைகள்ல இந்த கேஸைத் தந்துடப் போறேன். நம்மைப் பெரிய துப்பறியும் நிபுணர்களாக் கருதி கோமாளித்தனம் பண்ணிக்கிட்டிருக்கோம். துப்பறியும் நிபுணர்கள்! குழந்தைங்க விளையாடற போலீஸ் - திருடன் விளையாட்டா இது! முட்டாள்கள். நான் முடிவா இருக்கேன். ரொம்பப் பட்டாச்சுப்பா. எனக்கு ஸ்காட்லாண்டு போலீஸ் தான்.''

''நீங்க சொல்றதும் - சரி தான்'' - மெல்லமாய்ச் சொன்னான் டாமி.''நாம ஏன் முதல்லேயே இதை பண்ணியிருக்கக் கூடாதுனு வருந்தறேன்.''

''பண்ணாமலே விட்டுவிடுவதற்குப் பதிலா, காலந்தாழ்த்தி பண்ணுவது எவ்வளவோ மேல். நேரா இப்ப ஸ்காட்லாண்டு இலாக்காவுக்குப் போய், அவங்களை, என் கையைப் பிடிச்சுக் நடத்தி நான் எந்த வழியில போகணும்னு வழிகாட்டச் சொல்லப் போறேன். ஒழுங்கா பயிற்சி எடுத்தவங்க அப்படி எடுக்காதவங்களை ஓரங்கட்டி கடைசியில ஜெயிப்பது உறுதி - இது துப்பறிதலுக்கும் பொருந்தும் - நீங்களும் என் கூட வரீங்களா?''

டாமி மறுத்துத் தலையசைத்தான். ''இதுல என்ன பிரயோஜனம் வந்துடப் போகுது? நம்மில் ஒருத்தர் போதும். நான் மேற்கொண்டு இங்கேயேயிருந்து இன்னும் ஏதாவது திரட்ட முடியுமானு பார்க்கிறேன். ஏதாவது - திருப்புமுனை உண்டாகும். அது நமக்குத் தெரியாது.''

''நல்லது. அங்கே போய் ஒரு சில இன்ஸ்பெக்டர்களுக்குக் கைகுலுக்கல்கள் தந்து விட்டு விஷயத்தையும் சொல்லிவிட்டு வரேன். அவங்கள்ல யார் புத்திசாலியோ திறமைசாலியோ அவரைத் தேர்ந்தெடுக்குமாறு அறிவுறுத்தப் போறேன் - எவ்ளோ பணம் ஆனாலும் சரி.''

ஆனால், பிறகு வரிசையாய் நடந்த சில விஷயங்கள், ஜூலியஸ் போட்டு வைத்த திட்டங்களைக் கொண்டு செலுத்த முடியாமல் செய்தன.

அன்று மதியம் கடக்கும் போது டாமிக்கு ஒரு தந்தி வந்தது.

மான்செஸ்டர். மிட்லேண்ட் ஓட்டலில் என்னோடு வந்து இணைந்துக் கொள்ளவும். முக்கியமான சேதி.
Julius

அன்றிரவு ஏழரை மணிக்கு மிக மெதுவாய் வந்து சேர்ந்த ஒரு ட்ரெயினிலிருந்து இறங்கினான் டாமி. ஜூலியஸ் நடைமேடையிலேயே இருந்தார். ''என் தந்தி உங்க கைக்குக் கிடைச்சிருந்தா நிச்சயமா இந்த ட்ரெயின்ல தான் வருவீங்க'னு நான் நெனச்சேன்.''

அவருக்குக் கை கொடுத்த டாமி, ''என்னது அது? டூபென்ஸைக் கண்டுபிடிச்சாச்சா?'' என்றான்.

ஜூலியஸ் மறுத்துத் தலையசைத்தார். ''இல்லை- ஆனா இது எனக்காக லண்டனில் காத்திருந்ததைப் பார்த்தேன். அப்போ தான் வந்திருந்தது.''

தந்தித் தாளை அவர் இவனிடம் தந்தார். படிக்கும் போதே டாமியின் கண்கள் விசாலமாய் திறந்தன.

ஜானே ஃபின் கண்டுபிடிக்கப்பட்டு விட்டாள். மான்செஸ்டர் மிட்லேண்ட் ஓட்டலுக்கு உடனடியாய் வரவும்.
James Peel

அதை மீண்டும் வாங்கிக் கொண்ட ஜூலியஸ் அதனை மடித்தார். ''ஆச்சரியம்'' என்று குறிப்பிட்டார் அவர். சிந்தனையாய், ''அந்த வக்கீல் பய கேஸை விட்டுட்டு ஓடிட்டார்னில்லே இருந்தேன்.''

அத்தியாயம் - 19

ஜானே ஃபின்

''என்னோட ட்ரெயின் அரை மணி நேரத்துக்கு முன்னாடியே வந்துடுச்சு'' என்று ரயிலடியை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தபோது விளக்கலானார் ஜூலியஸ். ''லண்டனை விட்டு நான் கிளம்பும் முன்னாலேயே நீங்கள் நிச்சயமாக இந்த ட்ரெயின்ல எப்படியாவது வந்துடுவீங்கன்னு கணக்கிட்டிருந்தேன். இந்த நம்பிக்கையில் சர் ஜேம்ஸுக்கு ஒரு தந்தியும் அனுப்பிட்டேன். நமக்கு ஓட்டலில் ரூம் போட்டிருக்கார்... நம்ம கூட சாப்பிட எட்டு மணிக்கு வராரு.''

''என்ன காரணம், அவர் இந்த வழக்கிலிருந்து விலகிட்டார்னு உங்களை நினைக்க வெச்சது?'' ஆர்வமாய் கேட்டான் டாமி.

''அவர் தான் சொன்னார்'' என்றார் ஜூலியஸ் வறட்சியாய். ''வயசான அந்த ஆளு சிப்பி போலப்பா - உள்ளே இருப்பதே தெரியாது. அவருக்குள்ளே இருக்கும் சரக்கையெல்லாம் வெளியே விடலாம் என்கிற நிலைமை சர்வ நிச்சயமாக உருவாகிற வரைக்கும், அவர் ஒரு வார்த்தை உதிர்க்கப் போவதில்லை - இதுதானே எல்லா ஸீனியர் வக்கீல்களும் கடைப்பிடிப்பது!''

''ஆச்சரியப்படறேன்'' - டாமி சிந்தனையாய்ச் சொன்னான்.

ஜூலியஸ் இவன் பக்கமாய்த் திரும்பி, ''என்னத்தை நீங்க ஆச்சரியப்படறீங்க?'' என்றார்.

''அவர் சொன்னது தான் உண்மையான காரணமானு.''

''நிச்சயமா. பந்தயம்.''

திருப்தியடையாமல் மறுப்பாய் தலையசைத்தான் டாமி.

சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன், உரிய நேரமான எட்டு மணிக்கு வந்து சேர்ந்தார். ஜூலியஸ், டாமியை அறிமுகப்படுத்தி வைத்தார். இவனோடு சர் ஜேம்ஸ் கதகதப்பாய்க் கைகுலுக்கினார்.

''உங்களோடு பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதில் நான் ரொம்ப மகிழ்கிறேன், மிஸ்டர் தாமஸ் ஃபோர்டு. உங்களைப் பற்றி நான் வண்டி

வண்டியா டூபென்ஸ் மூலமா கேள்விப்பட்டிருக்கேன், தாமஸ்'' - இப்போது தானாக சட்டென புன்னகைத்தார் - ''அதனால எனக்கு ஏதோ உங்களைப் பல நாட்களா தெரிஞ்ச ஓர் உணர்வுதான் உண்டாகுது.''

''தேங்க் யூ ஸார்'' என்றான் டாமி, அவனுக்கே உரிய உற்சாக பல்லிளிப்போடு! தன் முன்னாலிருக்கும் வக்கீல் தொழிலின் மாபெரும் ஜாம்பவானை ஆர்வம் பொங்க ஊடுருவினான் இவன். டூபென்ஸ் உணர்ந்ததைப் போலவே - அம்மனிதனின் தனிப்பட்ட குணாதிசயம் வீசும் காந்த சக்தியின் வீரியத்தை இவனும் உணர்ந்தான். கார்ட்டரின் நினைவு இப்போது உண்டானது. இரு மாபெரும் ஜாம்பவான்கள் - உடல் தோற்றத்தால் துளியும் சம்பந்தமில்லாமல் வேறுபட்டிருந்தாலும், ஒரே விளைவையே உண்டுபண்ணினர். கடுகடுவெனவும் அதனால் களைப்படைந்தும் ஆயாசமாகவும் தோன்றும் ஒருவரும்... தொழில் ரகசியத்தை வெளியிடவே செய்யாது வலம் வரும் இன்னொருவரும்... ஒரே ஒரு சுபாவத்தால் தான் ஆக்கப்பட்டிருக்கின்றனர். அது - கூர்மையான வாள்... ஊடுருவும் பார்வையில்!

இந்நிலையில், சர் ஜேம்ஸின் நுணுக்கமாய்ப் பரிசோதனை செய்யும் கண்ணோட்டத்தையும் டாமி உணர்ந்திருந்தான். அவர் தன்னுடைய கண்களை இறுதியாய் தாழ்த்திக் கொள்ளும் போது, அந்த மாபெரும் வக்கீல், அணுஅணுவாக, ஒரு திறந்த புத்தகத்தைப் போல் தன்னைப் படித்திருப்பார் என இளைஞன் உணர்ந்தான். அதன் கடைசி தீர்ப்பு என்னவாகயிருக்கும் என்று வியப்பதைத் தவிர இவனால் ஒன்றும் முடியவில்லை. அதை அறிய மிக சொற்பமான வாய்ப்பே தெரிந்தது. சர் ஜேம்ஸ் கிடைக்கும் அத்தனையையும் அள்ளி அவர் அறிவுக்குள் போட்டுக் கொண்டார். இருந்தாலும் வெளியே கொடுக்கலாம் என அவர் முடிவு செய்தால் மட்டுமே தந்தார்! இதற்கான நிரூபணம் ஏறத்தாழ அப்பொழுதே விளைந்தது.

ஆரம்ப அறிமுகங்கள் முடிந்த கையோடு, ஜூலியஸ், வகை வகையான கேள்விகளை மடை திறந்த ஆர்வ வெள்ளமாய்க் கொட்டித் தள்ளினார். அந்த ஜானே ஃபின்னின் அடிச்சுவடுகளைக் கண்டுபிடித்துவிட சர் ஜேம்ஸ் நிலைமையை எப்படியெல்லாம் கையாண்டார்? இந்தக் கேஸில் தன்னை இன்னும் அவர் ஈடுபடுத்திக் கொண்டு தானிருக்கிறார் என்பதை ஏன் அவர் இவர்கள் அறிய சொல்லவில்லை? இப்படிப் பல.

சர் ஜேம்ஸ் அவருடைய முகவாயைத் தட்டிக் கொண்டிருந்தார். இறுதியாய், ''போகட்டும், போகட்டும். அவளைக் கண்டுபிடிச்சாச்சு! அது ஒரு பெரிய சாதனை, இல்லே? ஹே.. சொல்லுங்கப்பா... அது ஒரு பெரிய சாதனைதானே?'' என்றார்.

''நிச்சயமா! இல்லையா, பின்னே! ஆனா நீங்க எப்படி அவளுடைய இருப்பிடத் தடத்தைத் தடம் புரளாம பிடிச்சீங்க? நானும் டுபென்ஸும் நீங்க முழுக்கவும் இந்த வழக்கைக் கை கழுவிட்டதா இல்லே கருதினோம்?''

''ஆஹா...!'' - அந்த வக்கீல் மின்னல் போன்ற பார்வையை ஜூலியஸின் மீது வீசி விட்டு பிறகு தன்னுடைய முகவாயுடனானப் பணியைத் தொடரலானார். ''நீங்க அப்படி நினைச்சீங்க, இல்லே? ம், நீங்க! உண்மையா...? ம், உண்மையா? ஹூம்... டியர் ஃபிரண்ட்...!''

''ஆனா அப்ப நாங்க நினைச்சது தப்புனு தான் சொல்லணும்'' - தொடர்ந்தார் ஜூலியஸ்.

இந்தக் கேஸோட சம்பந்தப்பட்டுள்ள அத்தனைக் கூட்டத்துக்கும், அந்தப் பொண்ணு கண்டுபிடிக்கப்பட்டிருப்பது, மறுப்புக்கு இடம் தராத - ஓர் அதிர்ஷ்டம்!''

''ஆனா, அவ எங்கே?'' - அடித்துக் கேட்டார் ஜூலியஸ். ''நீங்க நிச்சயமா அவளை உங்க கூட கொண்டு வந்திருப்பீங்கனு இருந்தேன்.''

''நீங்க குறிப்பிடுவது - ரொம்பக் கஷ்டமான ஒன்று'' - ஆழ்ந்து சொன்னார்.

''ஏன்?''

''ஏன்னா - அந்த இளம் பெண், ஒரு சாலை விபத்துல தூக்கியெறியப் பட்டிருக்கா. தலையில சின்ன காயம் தான்... உடனடியா சீக்காளிகளுக்கு சிகிச்சை தரும் ஒரு ஆசிரமத்துக்கு அவளைக் கொண்டு போயிருக்காங்க. அங்கே நினைவு திரும்பிய போது தன்னுடைய பெயரை - ஜானே ஃபின் - அப்படினு அவ சொல்லியிருக்கா. இதை நான் கேள்விப்பட்டவுடனே - ஆஹ்..! ஆஹ்..! - துரிதமா அவளை அங்கிருந்து என் நண்பன் ஒருவன் டாக்டரா இயங்கும் மருத்துவமனைக்கு மாத்தினேன். உங்களுக்குத் தகவல் அனுப்பினேன். மறுபடியும் ஸ்மரணையற்ற நிலைமைக்குப் போயிருக்கும் ஜானே அப்போதிலிருந்து இன்னும் பேசலே.''

''அபாயகரமா அவளுக்குக் காயம் ஏற்படலே, இல்லே?''

''ஓ.. ஒரு சிராய்ப்பு... ஓரிரு சிறு வெட்டுகள். அவ்ளோதான். சொல்லப் போனா, மருத்துவப் பார்வையில, ஆஸ்பத்திரி வரை கொண்டு போக தேவையேயற்ற அத்தனை சிறு காயங்கள் அவை. ஆனா மயக்கமாயிருக்கா. அவளோட இந்த அதிர்ச்சி நிலைமையை, தொலைந்து காணாமப் போயிருந்த அவளுடைய நினைவுகளை மறுபடியும் மீட்டுத் தந்த, ஒரு மன அல்லது மூளை அதிர்ச்சியோடத்தான் ஒப்பிட்டுப் பார்க்கணும்.''

''அது - திரும்பிடுச்சா?'' - அலறலாய் குதித்தார் ஜூலியஸ்.

பொறுமையிழந்தவர் போல மேஜையில் சன்னமாய்த் தாளங்களிட்டார் ஜேம்ஸ். ''அவ பேரைத் தவற விடாம அவளே சொல்லியிருப்பதால - சந்தேகத்துக்கிடமில்லாமல், யெஸ், மிஸ்டர் ஜூலியஸ்!''

''எத்தனை ஆச்சரியம் பார்த்தீங்களா! ஸ்தலத்துல நீங்க இருக்கிற மாதிரி ஆகியிருக்கே...?!'' என்றான் டாமி. ''ஏதோ கற்பனை தேவதை பற்றிய கதை கேட்கிற மாதிரி இருக்கு, எனக்கு.''

ஆனால், நிகழ்காலத்துக்குள் இழுக்க முடியாதபடி, விழிப்பிலிருந்து விலகி எங்கோயிருந்த சர் ஜேம்ஸ் வறட்சியாய் சொன்னார்: ''எதிர்பாராம நிகழும் எல்லாமே - ஆச்சரியக் கற்பனைகள் தான்!''

இருந்த போதிலும், முன்பே ஒரு முறை டாமி சந்தேகித்திருந்த ஒன்று மிகச் சரியே என இப்போது நிச்சயமானான். மான்செஸ்டரில் சர் ஜேம்ஸ் இருப்பு, எதிர்பாராத விபத்து போன்றதல்ல. ஜூலியஸ் சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பது போல், கேஸைக் கை கழுவி தூர வீசி விடாமல், அவருடைய ஏதோ ஒரு வழியின் மூலமாக, தொலைந்து போயிருந்த அப்பெண்ணை மீண்டும் பூமிக்குள் வெற்றிகரமாக இழுத்து வந்திருக்கிறார் ஜேம்ஸ். இதில் டாமிக்குப் புதிராய் இருந்த ஒரே விஷயம், அவர் காட்டியுள்ள இத்தனை ரகசியம். 'சட்ட நுணுக்கங்களுக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கும் நீதிமன்ற மூளை, தவிர்க்கவியலாது இழைத்து விடும் தவறு, இது' என்ற முடிவுக்கு வந்தான் இவன்.

ஜூலியஸ் பேசினார்: ''டின்னர் சாப்பிட்டு முடிந்ததும்'', என அறிவித்தவர், ''நான் நேராக ஜானேயைப் போய் பார்க்கப் போகிறேன்'' என்றார்.

''அது சாத்தியமேயில்லைனு கருதறேன்'' - சொன்னார் ஜேம்ஸ். ''அவ இருக்கிற நிலைமையில், பின் ராத்திரி வேளையில, ஒரு விஸிட்டரைப் பார்க்க அவளை அனுமதிப்பாங்கனு எனக்குத் தோணலே. நாளை காலைல பத்து மணியையொட்டி என்பது என் ஆலோசனை.''

ஜூலியஸ் இதனை ஒதுக்கித் தள்ளினார். சர் ஜேம்ஸிடம் ஏதோ ஒன்று இருக்கிறது. அது உடனடியாக ஜூலியஸைக் கலக்கி பகை கொள்ள வைக்கின்றது. இரு ஆளுமை கொண்ட பிரத்யேக குணாதிசயங்களின் முரண்பாடு. ''என்ன ஆனாலும் இன்னிக்கு ராத்திரியே நான் அங்கே போய்.. அனுமதிக்காம போனா, ஊசிப் போன அவங்க ஆஸ்பத்திரி சட்டங்களை எதிர்த்து... பார்த்துக்கிட்டே இருங்க!'' - கறுவினார்!

''அது கொஞ்சமும் பிரயோஜனமில்லாம போகும், மிஸ்டர் ஜூலியஸ்.''

பிஸ்டலின் சுண்டப்பட்ட ஒலியோடு வார்த்தைகள் வந்தன. டாமி ஒரு துணுக்குறலோடு பார்த்துக் கொண்டிருந்தான். ஜூலியஸ் நரம்பதிர புகைய

ஆரம்பித்தார். உதடு வரை இப்போது அவர் தூக்கிப் போன கண்ணாடி டம்ளர் நடுங்கியது. அவருடைய கண்கள், வக்கீலின் கண்களை, வீர விரோதம் காட்டி சந்தித்தன. சில நொடிகள், இருவரிடமும் மூண்டிருந்த புகைச்சல், உடனே நெருப்பாய் வெடிக்கும் என்று தான் தோன்றியது. ஆனால் இறுதியில் ஜூலியஸ் தோற்றுப் போய் விட்டவராய் கண்களைத் தாழ்த்திக் கொள்வதுதான் நடந்தது.

''இப்போதைக்கு - நீங்கதான் பாஸ்'னு ஒத்துக்கறேன்'' என்றார் கறுவியபடி.

''தேங்க் யூ'' என்றார் சர் ஜேம்ஸ். ''பத்து மணினே அப்போ முடிவு செஞ்சுக்கலாமா?!'' - அநாயாசமாய் அவர் டாமி பக்கம் திரும்பிக் கேட்டார். ''ஆங்... மிஸ்டர் தாமஸ்... இன்னிக்கு சாயந்திரம் உங்களை நான் இங்கே பார்ப்பது, எனக்கு ஒரு விதத்துல ஆச்சரியமாயிருக்கு. உங்க நண்பர்களெல்லாம் உங்க நிலைமை என்ன ஆச்சோனு படபடப்பா இருந்த சமயத்துல தான் நான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன். உங்களுக்கு என்னதான் ஆச்சுனு எந்தத் தகவலுமே சில நாட்களா இல்லாம இருந்ததுனு நினைக்கிறேன்... அதனால, மிஸ் டூபென்ஸ், நீங்க ஏதோ சொல்லொணா துன்பத்துல அகப்பட்டுக் கொண்டதா நினைச்சா..!''

''அகப்பட்டுதான் இருந்தேன், ஸார்'' - நடந்தவற்றை ஞாபகப் படுத்தியபடி சொன்னான் டாமி.

சர் ஜேம்ஸிடமிருந்து வந்தக் கேள்விகளுக்குப் பதில் தந்து உதவ, தனது சாகச சம்பவங்களை அதிக நேரமெடுத்துக் கொள்ளாது சுருக்கமாய் தந்தான் இவன். கதையை முடிவுக்குக் கொண்டு வந்தபோது புதுப்பித்த ஈடுபாட்டோடு இவனைப் பார்த்தார் வக்கீல். ''மிக மிக இறுக்கமான மற்றும் ஆபத்தான ஓர் இடத்திலிருந்து நீங்க அற்புதமா வெளியே வந்திருக்கீங்க'' என்றார் ஆழ்ந்து. ''இதுக்கு உங்களை வாழ்த்துகிறேன். உங்களுடைய சாதுர்யத்தை அதிக அளவுல வெளிப்படுத்தி சமயோஜிதமா தப்பிச்சிருக்கீங்க, மிஸ்டர் தாமஸ்.''

கன்னங்கள், முகவாய் என டாமியின் முகமே, இந்தப் புகழ்ச்சியில் சிகப்பாகி வெட்கங் கொண்டன. ''இத்தனையிருந்தும், அந்தப் பொண்ணோட உதவி மட்டும் கிடைக்காட்டா.. என்னால தப்பிச்சிருக்க முடியாது, ஸார்..''

''ரொம்ப சரி'' - சின்னதாய் இப்போது சிரித்தார் அவர். ''அந்தப் பொண்ணு... ஏய், ஏய்... உங்க மேல ஒரு வித மையல் கொண்டது, உங்களுடைய அதிர்ஷ்டம்.'' இதனை டாமி மறுத்து எதிர்க்க வாயெடுத்தான். ஆனால், ஜேம்ஸ் தொடர்ந்து சொன்ன ஓர் ஊகத்துக்கு இவன் பதில் தர வேண்டியதாயிற்று. ''அவளும் அந்தக் கூட்டத்துல ஒருத்திதான் என்பதுல சந்தேகம் கிடையாது, ம்?''

''அப்படி கிடையாது என்பது என் கணிப்பு, ஸார். அவளைக் கட்டாயப்படுத்தி அங்கே வெச்சிருக்காங்கனு கூட நான் நினைச்சேன். அவ நடந்து கொண்ட விதம் என்னோட இந்த ஊகத்துக்குள்ளேயும் பொருந்த மாட்டேங்குது. பாருங்க.. தப்பிச்சு ஓடியிருக்கலாம் எனும் நிலைமை கிடைச்சபோது கூட அவ திரும்பி அவங்க கிட்டேயே போயிட்டா..''

சர் ஜேம்ஸ் சிந்தித்தபடி தலையசைத்தார். ''அவ என்ன சொன்னா? அவளை மார்குரெட் கிட்டே கூட்டிட்டுப் போயிடணும் என்பது போல ஏதாவது?''

''ஆமாம், ஸார்.''

''ஓ கே. இதுல மேலும் ஓரிரு விஷயங்கள் எனக்குத் தெளிவில்லாம இருக்கு. உதாரணத்துக்கு - உங்க மீது அவளுக்கிருந்த அபிப்ராயத்துல ஏற்பட்ட திடீர் மாற்றம். ஆங்... அந்த வீடு போலீஸ் கட்டுப்பாட்டுக்குப் போயிருக்கணுமே?''

''ஆமாம், ஸார். ஆனா அதுக்குள்ளே அவனுங்க சுத்தமா கிளம்பிட்டானுங்க.''

''அது, அப்படித்தான்'' என்றார் வறட்சியாய்.

''ஒரு சின்ன க்ளூ கூட விட்டு வைக்கப்படலே.''

''எனக்கு ஆச்சரியமாயிருக்கு - '', என்ற வக்கீல் சிந்தனையாய் மேஜையில் தாளம் போட்டார்.

அவர் குரலில் தொங்கிய ஏதோவொன்று டாமியை நிமிர்ந்துப் பார்க்கச் செய்தது. இந்த மனுஷனுடைய கண்கள், ஏனையவர்களின் கண்கள் காணாமல் குருடாய் விட்டிருக்கவல்ல ஏதோவொன்றினைப் பார்த்திருக்குமோ...? திடீர் உத்வேகத்துடன் சொன்னான்: ''அந்த வீட்டை நாங்க துளாவிய போது நீங்களும் எங்க கூட இருந்திருக்கணும், ஸார்.''

''நான் இருந்திருக்கணும்!'' என்றார் ஜேம்ஸ் சாந்தமாய். சில நொடிகள் அவர் அமைதியில் அமர்ந்திருந்தார். பிறகு நிமிர்ந்தார். ''அதுக்கு அப்புறம்? நீங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?''

கண நேரம் அவரை விளங்காது முறைத்துப் பார்த்தான் டாமி. பிறகு தான் வக்கீலுக்கு எதுவும் தெரியாதே என்பது அவனுக்குள் உறைத்தது. ''ஓ.. டூபென்ஸ் பற்றி உங்களுக்குத் தெரியாது என்பதையே மறந்துட்டேன்'' என்றான் மெதுவாய். ஜானே ∴பின் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால் உருவாகியிருந்த பரபரப்பினால் இவனுக்குள் தலை தூக்காமல் மறைந்திருந்த துயரமான பயம் மீண்டும் டாமி மீது படர்ந்தது.

கையிலிருந்து கத்தியையும் ஸ்பூனையும் அப்படியே கீழே வைத்து விட்டார் வக்கீல். ''மிஸ் டூபென்ஸுக்கு ஏதாவது ஆயிடுச்சா?'' - கத்தி முனையாய் அறுத்தது, கேட்ட அவர் குரல்.

''அவ காணாம போயிட்டா'' என்றார் ஜூலியஸ்.

''எப்போ?''

''ஒரு வாரத்துக்கு முன்னாடி.''

''எப்படி?''

வரிசையாய் சுடப்பட்டன சர் ஜேம்ஸின் கேள்விகள். அவற்றிற்கு நடுவே டாமியும் ஜூலியஸூம் கடந்த வாரத்துக் கதை முழுவதையும், மேலும் உருப்படாமல் முடிந்து விட்ட அவர்களது தேடுதலையும் விளக்கினார்கள்.

தாமதமின்றி உடனேயே சர் ஜேம்ஸ் விஷயத்தின் ஆணி வேருக்குப் பாய்ந்தார். ''உங்க பேர் போட்ட ஒரு தந்தி? ஆக உங்க ரெண்டு பேர் பற்றியும் போதும் போதும் எனும் அளவுக்கு அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. நீங்க அந்த வீட்டில் இருந்த போது என்னவெல்லாம் தெரிஞ்சுக்கிட்டு இருப்பீங்க என்பதுல அவங்களுக்கு நிச்சயத் தன்மை இல்லை. நீங்க தப்பிச்சு வந்ததன் எதிர் விளைவுதான் அவர்கள் செய்துள்ள மிஸ் டூபென்ஸின் கடத்தல். தேவைப்பட்டா - அவளுக்கு ஏதாவது நேர்ந்திடும்னு சொல்லிச் சொல்லியே உங்க உதடுகளைத் திறக்க விடாம மூடிடலாம்.''

டாமி ஒப்புதலாய்த் தலையசைத்தான். ''இதையே தான் நான் நினைச்சேன், ஸார்.''

சர் ஜேம்ஸ் இவனைக் கூர்ந்து கவனமாய்ப் பார்த்தார். ''இதை *நீங்க* கணிச்சிட்டிருக்கீங்க, இல்லையா? புத்திசாலி - அதி புத்திசாலி. இதுல ஆச்சரியமான ஒண்ணு என்ன'னா, உங்களைக் கைதியா அவங்க முதல்ல வெச்சிருந்த போது நீங்க யாரு என்ன என்பது பற்றி அவங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. இருந்தாலும் - அங்கேயிருந்தபோது - உங்களைப் பற்றிய அடையாளங்களை எந்த வகையிலும் நீங்க வெளிப்படுத்தலே என்பது நிச்சயமா?''

வெளிப்படுத்தவில்லை என்பதை மறுப்பானத் தலையசைப்பில் உணர்த்தினான் டாமி.

''அப்படித்தான்'' என்றார் ஜூலியஸ். ''ஆக அவங்களுக்கு யாரோ தகவல் தந்திருக்காங்கனு நான் கணக்கிடறேன் - அதுவும், ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னாடி நடக்கலே.''

''ஆமாம், ஆனா யார்?''

''எல்லா இடங்களிலும் பரப்பிரம்மமாய் நிறைந்திருக்கும், மிஸ்டர் ப்ரௌன்!'' - இப்படிச் சொன்ன அமெரிக்கனின் குரலில் கொஞ்சமாய் நக்கல் ஒட்டியிருக்க அது சர் ஜேம்ஸைக் கூர்மையாய் நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

''நீங்க மிஸ்டர் ப்ரௌன் என்பதை நம்பலையா, மிஸ்டர் ஜூலியஸ்?''

''இல்லே ஸார், நான் நம்பலே'' என்றான் அமெரிக்க இளைஞன் அழுத்தம் தந்து. ''துளி கூட நம்பலே. குழந்தைகளைப் பயமுறுத்தி அடிபணிய வைக்க சொல்லப்படும் 'பூச்சாண்டி' போன்றது இது என்பது என் கணிப்பு. இந்த அத்தனைக்கும் தலைவன் அந்த ரஷ்யப் பயலான க்ரெமெனின். அவன் நினைச்சா மாபெரும் புரட்சியை ஒரே சமயத்துல மூணு நாலு நாடுகள்ல நடத்திக் காட்ட முடியும்! இந்த விட்டிங்டன் ஒரு வேளை அந்தக் கூட்டத்தின் ஆங்கிலேயக் கிளைக்குத் தலைவனா இருக்கலாம்.''

''நான் உங்ககிட்டேயிருந்து வேறுபடறேன்'' என்றார் சர் ஜேம்ஸ் சுருக்கமாய். ''மிஸ்டர் ப்ரௌன் - *இருக்கார்.*'' டாமி பக்கமாய்த் திரும்பினார். ''அந்தத் தந்தி எங்கேயிருந்து கொடுக்கப்பட்டதுனு கவனிக்க முயற்சி எடுத்தீங்களா?''

''இல்லே, ஸார். நான் பண்ணலே.''

''ஹூம். உங்ககிட்டே இருக்கா?''

''மாடியில, ஸார். என் பெட்டியில.''

''அதை நான் சீக்கிரத்துல பார்க்க விரும்பறேன். ஓடாதீங்க, ஓடாதீங்க. ஒரு வாரத்தை வீணாக்கிட்டீங்க'' - டாமி தலையைத் தொங்க விட்டுக் கொண்டான் - ''மேலும் ஓரிரு நாட்கள்'ல என்ன பெருசா ஆகிடப் போகுது?! முதல்ல மிஸ் ஜானே ஃபின்னைக் கையிலெடுப்போம். அதுக்குப் பிறகு மிஸ் டூபென்ஸைக் கடத்தல் கும்பலிடமிருந்து மீட்பதுல இறங்குவோம். உடனடி ஆபத்து எதுவும் அவளுக்கு இருக்கிற மாதிரி எனக்குத் தோணலே - இது ஜானே ஃபின் நம்ம கையில இருக்கா என்பதும், போன அவளுடைய ஞாபகங்கள் திரும்பியாச்சு என்பதும் அவங்களுக்குத் தெரியாதது வரை! இந்த இரண்டையும் எப்பாடுபட்டாவது நாம இருட்டுலேயே தான் வெக்கணும். புரியுதா?''

இருவரும் வழிக்கு வந்தனர். மறுநாளே எங்கு சந்திப்பது என்ற ஏற்பாட்டினைப் பேசிக் கொண்டதும், ஜாம்பவான் லாயர் விடைபெற்றுக் கொண்டார்.

பத்து மணிக்கு இரு இளைஞர்களும் பேசிக் கொண்ட இடத்திலிருந்தனர். வாசலிலேயே காத்திருந்த சர் ஜேம்ஸ் உடனடியாய் இணைந்துக் கொண்டார். அவர் மட்டும் தான் அதிராது பதறாது இருந்தார். இருவரையும் டாக்டருக்கு அவர் அறிமுகம் செய்து வைத்தார். ''திரு ஜூலியஸ் - திரு தாமஸ் ஃபோர்டு, அலையஸ், டாமி. இது, டாக்டர் ராய். பேஷண்ட் எப்படியிருக்காங்க?''

''நல்லபடியா போயிக்கிட்டிருக்காங்க! கால நேரம் எப்படியெல்லாம் போயிருக்குனு அவங்களுக்குக் கொஞ்சமும் தெரியலே. *லூஸிடானியா*

விலிருந்து எத்தனை பேர் காப்பாற்றப்பட்டாங்கனு இன்னிக்குக் காலையில கேட்கிறாங்க. இன்னும் அந்த சேதி பேப்பர்கள்ல வருதா என்ன?! தவிர.. அவங்க மனசுல, வேற ஏதோ ஒரு சமாச்சாரமும் இருப்பதா படுது.''

''எங்களால அவங்க மனக்குழப்பத்தைப் போக்கிட முடியும்னு தோணுது. நாம மேல போலாமா?''

''ஓ, நிச்சயமா?''

டாக்டரைப் பின் தொடர்ந்து இவர்கள் மேலே ஏறும்போது டாமியின் இதயத் துடிப்பு உணரும் அளவுக்கு அதிகமானது. *ஜானே ஃபின்* - இறுதியாய்! வெகு நாட்களாய் தேடப்பட்ட... மர்மங்கள் நிறைந்த... கை நழுவி நழுவி ஏமாற்றியே வந்த... ஜானே! நிறைவே ஆகாத ஒரு பூதாகார பிரச்சினையாய் இது எப்படி அலைக்கழித்தது! இப்போது இங்கே இந்த வீட்டில், தன்னுடைய முழு நினைவுகளும் *மாயாஜாலம்* மாதிரி அதிசயமாய் மீட்டுக் கொண்டு வரப்பட்டு விட்ட நிலையில், இங்கிலாந்தின் எதிர்காலத்தைக் கையில் சுமந்திருக்கும் அந்தப் பெண், படுத்திருக்கிறாள். ஒரு சிறு ஆதங்க முனகல் டாமியின் உதடு வழி வந்தது. 'எங்களுடைய கூட்டு உடன்படிக்கை முழக்கமாய் வென்று நிற்கும் இக்காட்சியைப் பார்த்து மகிழ இப்போது என் பக்கத்திலே டூபென்ஸ் இல்லாமல் போய் விட்டாளே!' உடனேயே முடிவாய் டூபென்ஸ் குறித்த நினைவுகளைத் தற்போதைக்கு பிடிவாதமாய் ஒதுக்கி வைத்தான். சர் ஜேம்ஸ் மீதான நம்பிக்கை இவனுக்குள் விறுவிறுவென வளர்ந்தது. 'டூபென்ஸின் இருப்பிடத்தைக் குறி தவறாது அடைந்து அவள் எந்த வலைக்குள் இருந்தாலும் அதற்குள் புகுந்து வெற்றிகரமாய் வேட்டையாடிக் கொண்டு வந்து கொடுக்க, இதோ... ஒரு மனிதன்' என அதிக நம்பிக்கை வைத்தான். இப்படி நினைக்கும்போது ஒரு மாயக் கை இவனுடைய குரல்வளையைத் திருகியது. இது சாத்தியமே என்றும் டாமிக்குப் பட்டது. ஒருவேளை, அவளை இறந்துவிட்ட நிலையில் கண்டெடுத்தால்..?! மிஸ்டர் ப்ரௌனின் கொலைக்கரம் அதன் வேலையை செவ்வனே முடித்திருந்தால்...?!

அடுத்த நிமிடமே இந்த ஒருதலைக் கற்பனையை எண்ணி நகைத்துக் கொண்டான் இவன். கற்பனை தடைப்பட்டது. டாக்டர் ஓர் அறையின் கதவினைத் திறந்து வழிவிட்டு நின்றுக் கொள்ள இவர்கள் உள்ளே நுழைந்தனர். அங்கிருந்த வெள்ளைப் படுக்கையில் தலையில் கட்டுடன் கிடந்தாள் அந்தப் பெண். ஏனோ... இந்த முழுக் காட்சியும் மெய்மையின்றி தோன்றியது. இக்காட்சிக்கு எப்படி மேடை அமைந்திருக்கும் என்று ஒருவன் எதிர்பார்ப்பானோ அச்சு அசலாக அப்படியே அமைக்கப்பட்டிருந்தது போல இருந்தது.

அலையும் விழிகளோடு ஒருவர் மாற்றி மற்றொருவரை அந்தப் பெண் பார்த்தாள். யாரும் பேசவில்லை. சற்று நேரம் போனது. சர் ஜேம்ஸ் முதலில் பேசினார்: ''மிஸ், ஜானே ஃபின்'' என்றழைத்தவர், ''இது உங்க உறவு. திரு. ஜூலியஸ்'' என்றார்.

ஜூலியஸ் முன்னுக்கு வந்து அவளுடைய கையைப் பற்றிப் பொத்திக் கொண்டதும், கூடுதலான சிகப்பு நிறப் பூச்சு அப்பெண்ணின் முகத்தில் பதிந்தது.

''எப்படியிருக்கே, ஜானே?'' என்றார் அவர்.

ஆனால் அவர் குரலில் இருந்த நடுக்கத்தைத் தவற விடாதுப் பிடித்தான் டாமி.

''நீங்க நிஜமாவே அங்கிள் ஹை-ராமின் மகனா?'' - கண்களின் அலைபாய்ச்சலுடனேயே அவள் கேட்டாள்.

அவளுடைய குரலில் சிலிர்க்க வைக்கும் பாவனை இருந்தது. அந்தக் குரல் டாமிக்கு பிரசித்தமான ஒரு குரலாய் மேலோட்டமாய் பட்டது. ஆனால் வந்ததிலிருந்தே என்னவெல்லாமோ பட்டுக் கொண்டிருப்பதால், இதை, சாத்தியமில்லை என்று கருதி தற்போதைக்கு ஓரமாய் தள்ளினான்!

ஜூலியஸ் ''நிச்சயமா'' என்று தந்த பதில் வந்துக் கொண்டிருந்தது.

''அங்கிள் ஹை-ராம் பற்றிய நியூஸை பேப்பர்ங்க மூலமா அதிகம் படிப்போம்'' என்று அவளுடைய சிலிர்க்க வைக்கும் மெல்லிய குரலில் அவள் பேசினாள். ''ஆனா உங்களை ஒரு நாள் சந்திப்பேன்'னு எதிர்பார்க்கவேயில்லை. அவரை மாற்றவே முடியாதுனு தான் அம்மா சொல்லிக்கிட்டே இருந்தாங்க.''

''வயசான மனிதன் - பாவம், அப்படித்தான்'' - ஒப்புக் கொண்டார் ஜூலியஸ். ''ஆனா இந்தப் புதியத் தலைமுறை வேறுபட்ட ஒன்று என்பது என் ஊகம். குடும்பம்... மரியாதை... பெரியவங்க... இதிலெல்லாம் இதுகளுக்கு நம்பிக்கை இருக்கிறதில்லே. ஜானே... போர் நிறுத்தம் அமலானதும், முதல் வேலையா உன்னை எப்படியாவது தேடிப் பிடிப்பது தான் என் முதல் முக்கியத்துவமா இருந்தது.''

தற்போது ஒரு நிழல் அப்பெண்ணின் முகத்தில் படர்ந்து கருத்தது. ''கதை கதையாச் சொல்றாங்க. பயங்கரமான விஷயங்கள். என் நினைவுகள் ஸ்தம்பித்து நின்ற கதை. இந்தக் காலகட்டத்தில் நான் வாழ்ந்த ஆனால் என்னால் திருப்பி நினைத்துப் பார்க்க முடியாத பல வருடங்கள். என் வாழ்விலிருந்து பிடுங்கி எறியப்பட்ட வருடங்கள். ஓஹ்!''

''உன்னால அவற்றை உன் நினைவுக்குள் உணர முடியலியா?''

பெண்ணின் கண்கள் அகல விரிந்தன. ''ஆமாம், ஏன்? அந்தப் படகுகளுக்குள் எங்களைத் திணிச்சதுக்கும் இப்போதைக்கும் எனக்கு ஒரு நொடி இடைவேளை கூட தெரியலே. அந்த அத்தனை அமளி துமளிகளும், இதோ... இப்ப நடந்தது போல எனக்குள்ளே இருக்கு'' - ஒரு பெரும் நடுக்கத்தோடு இமைகளை மூடிக் கொண்டாள்.

ஜூலியஸ் எதிரேயிருந்த சர் ஜேம்ஸைப் பார்க்க, அவர் ஒப்புதலாய்த் தலையசைத்து உணர்த்தினார். ''மேற்கொண்டு தொந்தரவு தர வேண்டாம். அது நல்லதே கிடையாது. ஆங், ஜானே... இப்போ எங்களைக் கொஞ்சம் கவனமா கேளுங்க. ஒரு விஷயத்தைப் பற்றி தெரிஞ்சுக்க நாங்க விரும்ப றோம். இது உங்க நினைவில் இருப்பதுதான் - ஆக, கஷ்டப்படுத்திக்காம சொல்லுங்க. அந்தப் படகுல பயணித்தவர்களில் ஓர் ஆணும் இருந்தான் - சில முக்கியமான ஆவணங்களைத் தன்னோட வெச்சுக்கிட்டு. இந்த நாட்டின் சில பெருந்தலைகள், அந்த ஆவணங்கள் அப்போ உங்ககிட்டே கொடுக்கப்பட்டதா தகவல் வெச்சிருக்கு. அப்படித்தானா?''

அந்தப் பெண் தயங்கினாள். உடனிருந்த ஏனைய இருவரின் மீதும் அவளுடைய கண்கள் படர்ந்தன. ஜூலியஸ் புரிந்துக் கொண்டார். ஆகவே விளக்கினார்: ''அந்த ஆவணத் தாள்களை மீட்க அமைக்கப்பட்டவர், திரு. தாமஸ் ∴போர்டு. சர் ஜேமஸ் பீல் எட்ஜர்ட்டன் பார்லிமெண்ட்டின் அங்கத்தினர்... அவர் விரும்பியிருந்தா, அரசாங்கத்துல ஒரு முக்கியப் பெரும் புள்ளியாவே உயர்ந்திருக்கலாம். அவராலமட்டும் தான் உன்னை எங்களால மோப்பம் பிடிச்சு மீட்க முடிஞ்சது. ஆகவே அந்த உண்மையை நேரடியா நீ எங்களுக்குச் சொல்லலாம். டேன்வர்ஸ் அந்தத் தாள்களை உங்கிட்டே கொடுத்தாரா?''

''ஆமாம். அது என்கிட்டே இருந்தா தான் சேதமின்றி தப்பிப் பிழைப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்குனு சொன்னார் - ஏன்னா முதல்ல பெண்களையும் குழந்தைகளையும் தானே அனுப்பினாங்க.''

''துல்லியமா நாங்க நினைச்ச மாதிரியே'' - சொன்னார் சர் ஜேம்ஸ்.

''அவை மிக மிக முக்கியமானவை என்றார். ஆனா, ரொம்ப நாளைக்கு முன்னாடி இது நடந்தது என்றால்... போர் நின்னு சகஜம் திரும்பிய பிறகு, எதுக்கு மறுபடியும் புனருத்தாரணம்?''

''வரலாறு தானா திரும்புதுனு நினைக்கிறேன், ஜானே. ஆரம்பத்துல அந்த 'ஹீரோ ஆவணத்தின்' மேலே பெரும் தேடலும் கதறலும் இருந்தது... பிறகு அவையெல்லாம் அப்படியே வடிந்துப் போயின. ஆனா இப்போ அந்த அத்தனை தேடலும் அவசரமும் மறுபடியும் முளைத்துள்ளன - வேறு ஒரு

புதுக் காரணத்துக்காக! சரி... அப்போ அந்த ஆவணத்தை இப்போ உங்களால முழுக்க எங்களிடம் ஒப்படைக்க முடியுமா?''

''ஓ, என்னால அது முடியாது.''

''ஏன்?''

''என்கிட்டே அவை இல்லை.''

''உன் - - - கிட்டே - - - அவை - - - இல்லையா - - -?''

ஜூலியஸ், சின்னச் சின்ன இடைவேளைகள் தந்து அத்தனை வார்த்தைகளையும் முக்கியப்படுத்திக் கேட்டார்.

''இல்லை - நான் அவற்றை பதுக்கி வெச்சேன்.''

''நீ - *பதுக்கினியா?*''

''ஆமாம்.''

''? ? ?''

''எனக்கு இருப்புக் கொள்ளாம ஆச்சு. என்னையே எல்லாரும் கண்காணிக்கிற மாதிரி ஒரு நினைப்பு. அது என்னை பயமுறுத்திச்சு - படு பயங்கரமா.'' இப்போது தன்னுடைய கையைத் தலையில் லேசாய் அமுக்கிக் கொண்டாள். ''இந்த ஆஸ்பத்திரியில எழுந்துக் கொள்வதற்கு முன்னாடி நடந்ததா என் நினைவிலிருக்கும் கடைசி நிகழ்ச்சி இதுதான் - - -''

''ம், தொடருங்க'' என்றார் சர் ஜேம்ஸ், அவருக்கே உரிய துளைக்கும் ஆனால் சாந்தமான குரலெடுத்து. ''என்ன உங்களுக்கு நினைவிருக்கு?''

அவள், வக்கீலின் பக்கமாய் மரியாதையாய்த் திரும்பிப் பார்த்தாள். ''அது ஹோலி - ஹெட் பகுதியில இருக்கு. நான் அந்தப் பக்கமா வந்தேன் - ஏன்? - ஏன்னு எனக்கு நினைவில்லே.. ... ...''

''அதெல்லாம் பரவாயில்லே. நிறுத்தாதீங்க. தொடருங்க.''

''நடுக்கடல்ல நடந்த அமர்க்களத்தால, துறைமுகத்தில் வந்து இறங்கும் போது கூச்சலும் கும்பலும் குழப்பமும் பரபரப்பும் - தாளலே. இதுல, நான் வழி தவறிட்டேன். யாராவதும் என்னைப் பார்க்கறாங்களா? - ம்ம். யாரும் என்னைப் பார்க்கலே. ஒரு காரை அமர்த்திக்கிட்டேன். டவுனை விட்டு எங்கேயாவது என்னைக் கூட்டிப் போகும்படி டிரைவர் கிட்டே சொன்னேன். திறந்தவெளி சாலையில் விரையும்போது கவனிச்சுக்கிட்டே வந்தேன். சாலையிலிருந்து பிரிந்து உள் வாங்கிய ஒரு சின்னத் தெருவைப் பார்த்தேன். அந்த டிரைவரை அங்கேயே காத்திருக்கச் சொன்னேன். இறங்கினேன்.''

இங்கு சற்று நிறுத்திக் கொண்டாள். பின், தொடர்ந்தாள்:

''அந்த வழி ஒரு மலை முகட்டுக்குப் போச்சு. பிறகு நேரா கீழ் நோக்கி இறங்கிக் கடலுக்கு. மஞ்சள் நிற அடர்த்தியான காட்டுப் பூக்கள் நிறைய

இருந்தன - நெருப்பு ஜ்வாலை போல இருக்கும் அவற்றைப் பார்ததா. சுற்றும் முற்றும் பார்த்தேன். பார்வைக்கு எட்டும் தூரம் வரைக்கும் ஒரு ஜீவன் கிடையாது. அங்கே... என் தலை மட்டத்துக்கு, பாறையில, ஒரு துளை இருந்தது. அது ரொம்ப சின்னது - ஜஸ்ட் என் கையை மட்டும் தான் அதுக்குள்ளே நுழைக்க முடிஞ்சது; ஆனா நுழைச்ச கை, ரொம்ப உள்ளே போயிக்கிட்டே இருந்தது. நெஞ்சுக்குள்ளே மறைச்சுப் பதுக்கி வெச்சிருந்த அந்த வழு வழு பாலிதீன் உறையை வெளியே எடுத்தேன்... எத்தனை உள்ளே முடியுமோ அத்தனை ஆழத்துக்கு அதை திணிச்சுப் பதுக்கினேன். அப்புறம் அந்தப் புதரிலிருந்து சில இலைகளை எடுத்து - என்ன இலையோ... ரொம்ப கை எரிஞ்சுது - அப்படி ஓர் ஓட்டை அங்கேயிருந்ததே தெரியாத மாதிரி அந்தத் துளையை மறைச்சேன். அப்புறம் அந்தப் பகுதி எங்கேயிருக்கு... எந்தத் திசையில எதுக்குப் பக்கத்துல வருதுனு... என் மனசுல அழுத்தமா பார்த்துக் குறிச்சுக்கிட்டேன் - மறுபடியும் வந்தா என்னால அதைக் கண்டுபிடிக்க முடியணும் - அதுக்காக. அந்த வழியில, பக்கத்திலேயே, மழை காற்றால ரொம்ப சிதிலமடைந்துப் போயிருந்த வித்தியாசமான ஒரு பெரும்பாறை இருந்தது - ரொம்பப் பரிதாபமா உட்கார்ந்திருக்கிற ஒரு நாயைப் போன்ற அமைப்புல. பிறகு திரும்பி நான் சாலைக்கு வந்துட்டேன். என்ன மாதிரியெல்லாம் கற்பனை பண்ணிக்கிட்டு எத்தனை தூரத்துக்கு நான் பயந்திருக்கேன்னு நினைச்சா எனக்கே கொஞ்சம் வெட்கமா இருந்தது. ஆனா, அப்போ, அந்த துரத்தல்... என்னை எப்படியெல்லாமோ இயக்கிடுச்சு. இந்த நிலைமையில, ட்ரெயின்ல, எனக்கு எதிரா உட்கார்ந்துக்கிட்டு வந்த ஓர் ஆசாமி, எனக்குப் பக்கத்துல இருந்த ஒரு பெண்ணுக்கு கண் சிமிட்டி ஏதோ சமிக்ஞை தந்தான். என்னது அது? உடனே கிலி பிடிச்சுப் போனேன்.. ஆனா அந்தத் தாள்கள் பாதுகாப்பா இருப்பதுல எனக்கு சந்தோஷமும் அமைதியும் வந்தது. ரயிலின் நுழைவாயில் வரை போய் நின்னேன் - கொஞ்சம் காத்து வாங்க. பேசாம இன்னொரு பெட்டிக்கு மாறிடலாமானு கூட அங்கே நினைச்சேன். ஆனா, அந்தப் பொம்பிளை என்னைக் கூப்பிட்டா... எதையோ நான் கீழே போட்டுட்டதா சொன்னா... அப்படியா'னு நான் முட்டி போட்டு குனிஞ்ச போது, ஏதோ ஒண்ணு என்னை படு மோசமா தாக்கின மாதிரி இருந்தது - இதோ, இங்கே...'' - அவள் தன்னுடைய கையினைத் தலையின் பின்புறம் வைத்துக் காட்டினாள் - ''இங்கே மருத்துவமனையில் இப்போ நான் எழுந்திருக்கும் வரை, அப்புறமா என்ன நடந்ததுனே தெரியாது.''

ஒரு சிறு இடைவேளை விளைந்தது.

''தேங்க் யூ, மிஸ் ஃபின்'' -பேசியது சர் ஜேம்ஸ். ''உங்களுக்கு அசதி உண்டாகிற மாதிரி நாங்க நடந்துக்கலைனு நினைக்கிறேன்.''

''ஓ, அதனால என்ன? என் தலை கொஞ்சமா வலிக்குது. மற்றபடி நான் நலமாத்தான் உணர்றேன்.''

ஜூலியஸ் முன்னுக்கு வந்து அவளுடைய கைகளை மறுபடியும் பொத்தி வாங்கிக் கொண்டார்.

''இத்தனை நாளாயிருக்கு, ஜானே, நீ கிடைக்க! அந்தத் தாள்களைத் தேடி நான் அலைய வேண்டியிருக்கும். ஆனா, உடனடியா நான் திரும்பி வருவேன். உன்னை அப்படியே லண்டனுக்குத் தூக்கிட்டுப் போவேன். நீ இழந்த அத்தனை இளமை வாழ்வையும் இங்கேயே அள்ளி அள்ளித் தந்து ஓய்ந்த பிறகு தான் உன்னை நான் அமெரிக்காவுக்கே கூட்டிப் போவேன். நடக்கப் போவதை சொல்றேன் ஜானே - ஆகவே, ம், எழுந்து கலகலனு தயாராகு.''

அத்தியாயம் - 20

காலங்கடந்து விட்டது

''இப்போ ஹோலி-ஹெட்'டுக்கு இருக்கிற டரெயின், 12.14க்கு செஸ்டர் போகும். நீங்க இப்பவே உடனடியா கிளம்பினா இணைப்பு ரயிலைப் பிடிச்சுடலாம்னு நினைக்கிறேன்'' என்றார் சர் ஜேம்ஸ்.

டாமி கேள்விக்குறியாய்ப் பார்த்தான். ''இப்படி அவசரப்பட ஏதாவது தேவையிருக்கா. ஸார்? இன்னிக்கு 24 தான்.''

''காலையில சீக்கிரமா எழுந்திருப்பதுதான் எப்போதுமே நல்லது'' என்று ஓர் உதாரணத்தைப் பதிலாய் தந்தார் ஜூலியஸ் - சர் ஜேம்ஸ், டாமியின் கேள்விக்கானப் பதிலைத் தருவதற்கு முன். ''ரயிலடிக்குப் போற வழியை முதல்ல பார்ப்பம்.''

சர் ஜேம்ஸின் புருவத்தில் சிறு வளைவு வந்திருந்தது. ''நானும் உங்களோட வரணும்னு தான் விரும்பறேன். ரெண்டு மணிக்கு ஒரு மீட்டிங்ல பேச வேண்டியிருக்கு, ப்ச்... துரதிர்ஷ்டம்.''

அவர் குரலிலிருந்த வருத்தம் வெகு வெளிப்படையாய் உணர முடிந்தது. ஜூலியஸ் எவ்வித பிரயத்தனமும் செய்யத் தேவையில்லாமலே, அவருக்குக் கடுப்பையுண்டாக்கவல்ல சர் ஜேம்ஸ், தள்ளி வைக்கப்பட்டு விட்டார்!

''அதனால என்ன...'' என்று வக்கீலின் வசனத்துக்கு பதில் தந்த ஜூலியஸ், ''இதுல அப்படி ஒண்ணும் பெரிய சிக்கல் இருப்பதா தெரியலே. ஜஸ்ட், ஒரு கண்ணாமூச்சி விளையாட்டு அவ்ளோதான்'' என்று குறிப்பிட்டார், விட்டேற்றித்தனமாய்.

''இருக்கலாம்'' என்றார் சர் ஜேம்ஸ்.

''அப்படித்தான். வேற என்னவா இருக்க முடியும்?''

''நீங்க ரொம்பச் சின்னப்பய, மிஸ்டர் ஜூலியஸ். இன்னும் வயசாகி அனுபவங்கள் கிடைக்கும்போது, நான் இப்போ உணர்ந்திருக்கும் ஒரு விஷயத்தை முழுமையா உணர்வீங்க: *'உன் எதிரியை என்றைக்குமே குறைத்து எடை போடாதே.''*

சொன்ன இவ் வார்த்தைகளின் கனம், டாமிக்கு உறைத்து நெஞ்சுக்குள் இறங்கித் தொட்டது. ஆனால் ஜூலியஸின் மேல் ரொம்பக் கம்மியான விளைவையே ஏற்படுத்தியது. அவர் பதிலுக்குத் தொடர்ந்தார்: ''மிஸ்டர் ப்ரௌன் இவ்ளோ தூரம் வந்து கையை வெப்பான்'னா சொல்றீங்க? அப்படி அவன் ஏதாவது பண்ணினா... அதுக்கும் நான் தயாரா தானிருக்கேன்'' - சொல்லி விட்டு தனது சட்டைப் பையைத் தட்டிக் காட்டினார். ''நான் ஒரு துப்பாக்கிக் கொண்டு வந்திருக்கேன். லிட்டில் வில்லி. நான் போகும் இடத்துக்கெல்லாம் என்னோட பிரயாணமாகும்.'' ஒரு கொலைகார ஆட்டோமேடிக் துப்பாக்கியைக் காட்டி விட்டு, அதனை அதனிடத்தில் மீண்டும் வைக்குமுன் செல்லமாய் வருடிக் கொடுத்தார் ஜூலியஸ். ''ஆனா இதுக்கு இந்தப் பயணத்துல எந்தத் தேவையும் இருக்காது. இந்த முறை மிஸ்டர் ப்ரௌனுக்கு விஷயத்தை விண்டு வைக்க - யாரும் கிடையாது.''

வக்கீல், தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''திருமதி வாண்டே - மேயர், இந்த ப்ரௌனுக்கு எதிரா முழுக்கவும் இறங்கிட்டாங்க எனும் செய்தியைக் கொண்டு போய் அவன் முன்னாடி விண்டு வைக்க அப்பவும் தான் யாரும் கிடையாது. இருந்த போதிலும், திருமதி வாண்டே மேயர் ஒரு வார்த்தை பேசாமல் செத்துப் போனாங்க.''

இனி வாயே திறக்க முடியாத அளவுக்கு ஜூலியஸ் அமைதியாக்கப்பட்டார். சர் ஜேம்ஸ் தணித்துப் பேசினார்: ''நீங்களே உங்களை ஜாக்கிரதையா பார்த்துக்க வேண்டிய நிலைமை இருக்கு என்று மட்டும்தான் சொல்ல விரும்பினேன். ஓகே? குட் பை அண்ட் குட் லக். தாள்கள் உங்க கைக்கு வந்த பிறகு மேற்கொண்டு எவ்விதமான சாகசங்களிலும், ப்ளீஸ் இறங்கிடாதீங்க. உங்களை யாரோ நிழல் போல தொடர்ந்துக்கிட்டு நெருங்கியாச்சு என்று நம்பும்படியா ஆதாரம் கிடைச்சுட்டா... உடனடியா அந்த ஆவணத் தாள்களைத் தாமதிக்காம அழிச்சுடுங்க. இது முக்கியம். ஆங், ஞாபகமிருக்கட்டும்... இந்த விளையாட்டை இப்போ ஆட வேண்டியது - நீங்கதான். வாழ்த்துக்கள்.''

இருவரிடமும் கை குலுக்கிக் கொண்டார்.

பத்து நிமிடங்கள் கழித்து செஸ்டர் வழியாக போகும் ரயிலின் முதல் வகுப்புப் பெட்டியில் எதிருக்கு எதிராய் இரு இளைஞர்களும் அமர்ந் திருந்தனர். நீண்ட நேரமாய் இருவருமே பேசவில்லை. வெகு நேரம் கழித்து பிறகு ஜூலியஸ் மவுனத்தை உடைத்தபோது, துளியும் எதிர்பார்த்திராத ஒன்றினைக் குறிப்பிட்டபடி பேசினார்: ''சொல்லுங்க, மிஸ்டர் டாமி'' என்று சிந்தனையாய்க் குறிப்பிட்டவர், ''ஒரு பெண்ணோட முகத்தைப் பார்த்த

மாத்திரத்திலே... அவளை நினைச்சு நினைச்சே நீங்க உருகிப் போய், உங்களை படு முட்டாளா ஆக்கிக்கிட்டது உண்டா?''

சட்டென விளைந்த ஆச்சரியத்தோடு, டாமி மூளைக்குள் துளாவினான். ''அப்படி நான் செஞ்சா மாதிரி தோணலே'' என்றான் கடைசியாய். ''ம்ம். அப்படி எதையும் ஞாபகப்படுத்த முடியலே. ஆமாம்... இது ஏன்?''

''ஏன்னா, கடந்த இரண்டு மாதமா, இந்த ஜானே பற்றிய கனவுல அப்படி உருகிப் போய் படு முட்டாளாவே நான் ஆகியிருக்கேன்! முதல் முறையா அவள் புகைப்படத்தை என் கண்கள் படம் பிடிச்ச நொடியிலேயே... நாவல்கள் வர்ணிக்கும் கண்டதும் காதல் கூத்தையெல்லாம் என் நெஞ்சமும் படபடனு அனுபவிச்சது. அப்படி அவ மேலே பேயா ஆனேன். இது நிஜம்தான்... லஜ்ஜையாயிருந்தாலும் ஒத்துக்கறேன். அதனால, நான் இங்கே வரும்போதே, அவளைக் கண்டுபிடிச்சதும், முதல் வேலையா, மேற்கொண்டு நடவடிக்கைகளை தீர்மானிக்கணும்னு முடிவா வந்தேன். திரும்பிப் போகும் போது அவளையும் என் கூடவே திருமதி ஜூலியஸா தான் அழைச்சுப் போகணும் என்பதே அந்த முடிவு.''

''ஓ..!'' என்றான் டாமி, மலைப்பாய்.

தொங்கிக் கொண்டிருந்த கால்களிரண்டையும் தன்னிச்சையாக 'X' போட்டுக் கொண்டு தொடர்ந்தார் அவர்: ''இதிலிருந்து ஓர் ஆண், எந்த அளவுக்கு அவனை ஒரு முழு முட்டாளா அவனே ஆக்கிக்க முடியும் என்பது நிரூபணமாச்சு! அவளை சதையும் ரத்தமுமா இங்கே பார்த்தது தான் தாமதம்... பிடிச்சிருந்த பித்தெல்லாம் அப்படியே விட்டுப் போச்சு!''

நாக்கு பேச வராது கட்டப்பட்ட விறுவிறுப்பில், ''ஓ..!'' என்று மீண்டும் பீறிட்டான் டாமி, மலைப்பாய்.

''இதனால இப்ப பார்த்த ஜானேவை நான் பழிக்கிறேன் என்றோ குறைத்து எடை போடுகிறேன் என்றோ அர்த்தம் கிடையாது - நினைவிருக்கட்டும்'' என்றபடி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்: ''இவ ரொம்ப அமரிக்கையான அழகு பெண். பார்க்கும் எவனும் இவ மேல் அப்படியே தொபீர்னு காதல்ல விழுந்துடுவான். யெஸ்.''

''நான் அவளை மிக அழகான பெண்ணா நினைச்சிருந்தேன்'' - வார்த்தை கிடைக்க, சொன்னான் டாமி.

''ஆமாம். அப்படித்தான். அவ அழகுதான். இல்லையா, பின்னே! ஆனா அவ போட்டோல இருந்த மாதிரி நேர்ல துளி கூட தெரியலே. ஆனாலும் அப்படி அது போல கொஞ்சமாவது இருந்துதான் ஆகணும் - யெஸ் - உடனேயே என்னால அடையாளம் காண முடிஞ்சது இல்லே...! நெருக்கமான

கூட்டத்துல இவளைப் பார்க்க நேர்ந்திருந்தா, 'ஏய்... அதோ பார்... அந்தப் பொண்ணு... அவ முகம் எனக்கு ரொம்பப் பரிச்சயமா இருக்கு' அப்படினு உடனேயே துளி தயக்கமில்லாம சொல்லியிருப்பேன். ஆனா, அந்த போட்டோ... அந்த போட்டோ... ஆஹ்... அந்த போட்டோவில கூடுதலா என்னவோ இருக்குப்பா...'' - சொன்ன ஜூலியஸ் மறுப்பாய் தலையை ஆட்டி விட்டுக் கொண்டார்; பின் நீண்ட பெருமூச்சு ஒன்றினை வெட்டியெறிந்தார்; சொன்னார்: ''காதல் ரஸம் - ஒரு புரிஞ்சுக்க முடியாத அரக்கன்னு நினைக்கிறேன்...!''

''அப்படித்தான் இருக்கும்'' என்று ரம்பம் போன்ற குரலில் சொன்ன டாமி, ''ஒரு பெண்ணை மனசு முழுக்க ரொப்பிக்கிட்டு இங்கே ஓடி வந்துட்டு, ரெண்டு வாரம் முடியறதுக்குள்ளே இன்னொரு பொண்ணைப் பார்த்து, 'தாயே... என்னைக் கட்டிக்கிறியா'னு கேட்கிற உங்களுக்கு - காதல் - ஓர் அரக்கனாத்தானிருக்கும்!'' என்றான்.

அசௌகரியமானார் ஜூலியஸ்.

''அப்படியில்லே, டாமி. ஜானேயைத் தேடித் தேடி மிகவும் களைச்சுப் போனேன்... 'ஒருவேளை அவ கிடைக்காமலே போயிட்டா...?' என்று கேள்வி பெரிசாச்சு. விடுங்க. ஆங்.. இப்ப கவனிங்க. பிரெஞ்சுக்காரனுங்க இருக்கானுங்களே... அவனுங்க கலியாணத்தை ஒரு தொழிலாவே ஆக்கிடறாங்க. எப்படி தெரியுமா? ஒத்துப் போற ரெண்டு பேர் ஒருத்தரை ஒருத்தர் முதல்ல பார்த்துக் கொள்வது - பிறகு, பணம் எத்தனை இருப்புல இருக்குனு பேசறது - பிறகு கலியாணம் பண்ணிக்கிட்டா இந்தக் கோணத்துல ஒத்து வருமானு பேசுவது - முழுக்க முழுக்க பிஸினஸ் அணுகுமுறை...!''

''இப்போ எதுக்கு இந்த வேண்டாத பேச்சு? என்னைக் கேட்டா...'' என்று மளமளவென சூடான டாமி, ''நாம எல்லாருமே பிஸினஸ் அணுகுமுறையில தான் வாழறோம் - ஒவ்வொரு விஷயத்திலும். ஒரு முயற்சி செஞ்சா - 'அது லாபம் தருமா?' - இது தானேய்யா கேள்வி! இதுல ஆம்பிளைங்க, மோசம். பொம்பிளைங்க படு மோசம்.''

''கூல் கூல், கண்ணா. சட்டுனு இத்தனை சூடாகாதீங்க.''

''கொதிக்குது உள்ளே'' என்றான் டாமி.

இவனை உற்றுப் பார்த்த ஜூலியஸ் மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசாமலிருப்பதே சிறப்பு என்று முடிவாக்கிக் கொண்டார்.

இருவரும் ஹோலி 'ஹெட் பகுதியை அடையுமுன் 'கூலாவதற்கு', டாமிக்கு வேண்டிய அவகாசம் இருந்தது! ஆகவே, இறங்க வேண்டிய இடம் வந்து இருவரும் ரயில் பெட்டியிலிருந்து தரையிறங்கியபோது, இவனுடைய இயற்கையான சுபாவம் திரும்பியிருந்தது.

ஹோலி - ஹெட் பகுதியின் சாலை அமைப்புகள் பற்றிய வரைபடத்தை நன்கு புரிந்து கொண்ட பிறகு எந்த திசை நோக்கிப் பயணத்தைத் தொடங்க வேண்டும் என்பதில் இரு இளைஞர்களுக்கும் இணக்கம் உருவானது. வேறெந்த நேர வீணடிப்பும் இல்லாது உடனடியாய் ஒரு வாடகைக் காரினை அமர்த்திக் கொண்டு ஜானே விவரித்திருந்த வளைகுடா பகுதிக்குக் கிளம்பினார்கள். முக்கிய சாலையிலிருந்து பிரிந்து உள்ளே திரும்பும் சிறு சாலையை விட்டு விடக் கூடாது என்பதற்காக, இயன்ற வரை மெதுவாகப் போகும்படி டிரைவரை அறிவுறுத்தி விட்டு கண் கொத்தி பாம்பாய் வழி நெடுகத் தேடிக் கொண்டே வந்தார்கள். டவுனை விட்டு வெகு தூரம் தள்ளி செல்ல வேண்டிய தேவையில்லாமல் அந்தச் சிறு சாலை உடனேயே தென்பட்டது. ஆயத்தமாயிருந்த டாமி உடனே காரை நிறுத்தினான். இந்த வழி கடலுக்குப் போகிறதா என்று, ஆர்வமாயும் எதேச்சையும் ஒரு புதியவனைப் போல கேட்ட டாமி, ஆம் என்ற பதில் வந்ததும், ஏதோ அப்படிப்பட்ட ஒரு தனிமை கடற்கரைப் பகுதிக்கே காத்திருந்தவனைப் போல மகிழ்ச்சியாய் இறங்கிக் கொண்டு, அதிகத் தொகையை டிரைவருக்கும் தந்து, அவனைப் போய் வா மகனே என்று அனுப்பி வைத்தான்.

அடுத்த கணங்களில், டாக்ஸி, ஹோலி - ஹெட்'டை விட்டு மெல்ல நழுவி, வந்த வழியே சென்றது. கண் பார்வையிலிருந்து மறையும் வரை டாமியும் ஜூலியஸும் அதனைக் கண்காணித்து விட்டு, திரும்பினர். அந்தக் குறுகிய சந்தில் மேற்கொண்டு முன்னேறினர்.

''போக வேண்டியது, வலப்பக்கம்னு நினைக்கிறேன்'' சந்தேகமாய் சொன்னான் டாமி. ''வெறும் பாறைக் குவியல்தான் இங்கெல்லாம் கிடக்கும் போல!''

''ஆமா.. இதே வழிதான். அங்கே பாருங்க... புதர்க் கூட்டம். ஜானே சொன்னது நினைவிலிருக்கா?''

பொங்கி வழிவது போல பூத்துக் குலுங்கிய ஜ்வாலை நிற மலர்கள் பாதை நெடுகிலும் இருபுறமும் பட்டிக் கட்டியிருப்பதைப் பார்த்தான் இவன்... திருப்தி கொண்டான்.

ஜூலியஸ் முன்னால் போக ஒரே நடையில் விரைந்துக் கொண்டிருந்தனர் இருவரும். இருப்புக் கொள்ளாமல் இரண்டு முறை தலையைத் திருப்பித் திருப்பிப் பின்னால் பார்த்துக் கொண்டான் டாமி. ஜூலியஸ் ஒரு முறை இதைக் கவனித்தார்.

''என்ன அங்கே?''

''எனக்குச் சொல்லத் தெரியலே. ஆனா உள்ளுக்குள்ளே புது உதறல் துடிக்குது. யாரோ நம்மைப் பின்னால் தொடர்ந்துக்கிட்டே நெருங்கி, நமக்கு மிக அருகில் வந்துட்ட மாதிரியே தோணுது.''

''முடியவே முடியாது'' என்றார் ஜூலியஸ் திட்டவட்டமாய். ''அப்படியிருந்தா நாம கவனிச்சிருப்போம்.''

இதுதான் நிஜம் என்று டாமி ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. இருந்த போதிலும் இவனுக்குள் இருப்புக் கொள்ளாமை ஆழ போய்க் கொண்டே தானிருந்தது. இவனையும் மீறி, எங்குமிருக்கவல்ல இவர்களுடைய எதிரியின் இருப்பினை இங்கும் உணர்ந்தான்.

''என்ன மறுபடியும்? இதோ பாருங்க டாமி... அந்த ஆளு நமக்கு முன்னாடி இப்ப வரணும்னே நான் எதிர்பார்க்கிறேன்... விரும்பறேன்!'' என்றார் ஜூலியஸ். தனது சட்டைப் பையைத் தட்டிக் காட்டினார். ''லிட்டில் வில்லி, இங்கே, அவனுக்கு வேலை கிடைக்காதானு தவிச்சுக்கிட்டிருக்கான்!''

''அவனை - நீங்க - எப்பவுமே - கூட - எடுத்துக்கிட்டுப் - போவீங்களா?'' - ஊறும் ஆர்வம் தாளாது கேட்டான் டாமி.

''ஏறத்தாழ, எப்பவுமே. அடுத்து என்ன நடக்கும்னு சொல்ல முடியாத இக்கட்டுல இருக்கோம், டாமி.''

பயபக்தியான அமைதியைக் காட்டினான் டாமி. லிட்டில் வில்லி இவனுக்குப் பிடித்துப் போயிற்று. மிஸ்டர் ப்ரௌனால் விளைந்திருந்த கிலியினை அது தூரத் தள்ளி வைத்தது.

பாதை, இப்போது, கடலுக்கு இணையாக, உச்சி முகட்டினை நோக்கி நீண்டுக் கொண்டிருந்தது. அப்போது, விரைந்துக் கொண்டிருந்த ஜூலியஸ் திடீரென்று அப்படியே நின்றுவிட, டாமி அவருடன் படேரென்று மோதுவது தவிர்க்கயியலாததாயிற்று.

''என்ன திடீர்னு?'' - இவன் விசாரித்தான்.

''அங்கே பாருங்க.''

காட்டிய இடத்தை டாமி பார்த்தான். பாதி வழியை மறித்துக் கொண்டு அங்கிருந்த பழம்பெரும் பாறை, சந்தேகத்துக்கிடமின்றி, பரிதாபமாய் கை நீட்டும் ஒரு கரடி போலத்தானிருந்தது.

ஜூலியஸின் உணர்வினை ஒதுக்கி விட்டு, ''அதுக்கென்ன இப்ப?'' என்ற டாமி, ''அது இங்கேயிருக்கும்னு எதிர்பார்த்து தானே வந்தோம்? புதுசா இல்லியே...?!'' என்றான்.

இவனைப் பார்த்த ஜூலியஸ் சோகமாய் மறுத்துத் தலையசைத்துக் கொண்டார். ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்! அதை எதிர்பார்த்து இருந்தோம் - இல்லேங்கலே - இருந்தாலும் என்னை இது அறையுது. எங்கேயிருக்கும்னு எதிர்பார்த்தோமோ அங்கேயே இது இருக்கும் போதும் எனக்குள்ள திகிலைக் கிளப்புது...! திரும்பித் திரும்பிப் பார்த்து இத்தனை நேரம் பயந்த உங்களுக்கு இது பயம் தரலே... ஆங்...? கத்துய்யா!''

டாமி, இயற்கையாய் இல்லாது செயற்கையாய் இப்போது கடைப்பிடித்த சாந்தத்தோடு, பொறுமையற்று காலடிகள் எடுத்து வைக்கலானான். ''நடங்க, நடங்க. ஓட்டையைத் தேடுவோம்!''

உச்சிப் பகுதி முழுவதையும் கறாராய் ஊடுருவினார்கள். டாமி தத்துவம் போல் சொன்னான்: ''இத்தனை வருஷமா அது அங்கேயாவா இருக்கும்? ம்ம்.''

இதை ஒத்துக் கொள்வதாய், ''நீங்க சொல்றதும் சரி தான்'' என்றார் ஜூலியஸ்.

''அப்ப எதுக்கு இந்த ரெண்டு மூளையும் இவ்ளோ தொலைவு வரணும்...?!'' என்று ஏதோ இப்போது தான் விளங்கியது போல சொல்லிக் கொண்டிருந்த டாமி, சட்டென நின்றுவிட்டு, நடுங்கும் கைகளை நீட்டிக் குறித்துக் காட்டினான். ''பாறையில அந்த சின்ன பிளவு... சந்து போல - என்னது அது?''

அச்சம் ஒட்டிக் கொண்ட குரலோடு ஜூலியஸ் சொன்னார்: ''அது தான். *அதேதான்.* சந்தேகமில்லே.''

இருவரும் ஒருவரை மற்றொருவர் பார்த்துக் கொண்டனர். அப்போது டாமி சற்றே தூக்கலான வேதனை மிகும் குரலில் பேசினான்:

''குப்பையில போடுங்க! சாத்தியமே கிடையாது! ஐந்து வருடங்கள்! நினைச்சுப் பாருங்க - சாத்தியமா...?! விளையாடும் பசங்க... சுற்றுலா பயணிகள்... காதலர்களின் திருட்டுப் பதுங்குமிடம்... ஆயிரக்கணக்கான பேர்கள் வந்து போனது...! அது இங்கே இருக்காது! ஆயிரத்துல ஒரு பங்கு கூட அது இங்கே இருக்கும் என்பது சாத்தியமில்லே! பைத்தியக்காரனுங்க போல கிளம்பி இங்கே வந்திருக்கோம்...!''

சொல்லப் போனால், இந்த ஆவணத்தைக் கையகப்படுத்துவதில் பலர் தோற்றுப் போயிருக்க, சும்மா இத்தனை சீக்கிரமாய் அது கைகளுக்குக் கிடைக்கும் வாய்ப்பு அமைந்து விட்டதில்... இவனுக்கே கூட நம்பிக்கையில்லை - - - அதன் விளைவுதான் இந்த நம்பிக்கை அற்ற புலம்பல்! ரொம்ப சுலபமாய் சுபமாகி விட்டது - ஆகவே இது சாத்தியமில்லாத ஒன்றாகி விட்டது! துளையும் காலியாக இருக்கும் என்ற நினைப்பில் முடிந்து விட்டது!

விரிந்துக் கொண்டே போன சிரிப்போடு ஜூலியஸ் இவனைப் பார்த்தார். ''என்ன திடீர்னு ஒரே சலசலப்பு? ம்?!'' என கொண்டாட்டமாய்க் கேட்டார். ''சரி... அதையும் பார்த்துடுவோம்.''

அந்த சிறு எலி வளை போன்ற பாறைப் பொந்துக்குள் கையை நுழைத்த ஜூலியஸ் முகத்தை அவலட்சணமாய் ஆக்கினார். ''ரொம்ப நெருக்கமா இருக்கு. என் கையை விட ஜானேயின் கைகள் ஒரு சுற்று சின்னதா

இருந்திருக்கணும்...! என் கைகள்ல ஒண்ணும் படலே - சரி, இன்னும் கொஞ்சம் நுழைச்சுப் பார்க்கறேன் - ஆஹ்... இறுக்கமாயிருக்கு - இன்னும், இன்னும் - ஒண்ணும் இல்லேப்பா - இன்னும் கொஞ்சம் - அவ்ளோ தான், இனி உள்ளே நுழைக்க கை கிடையாது - முழுக்க நுழைச்சாச்சு - ஏய்... என்னது அது?! - என்னவோ படுதுப்பா - ஓவ்... *கவர்ப்பா..!''*

சர்ரக்கென்று கையில் அகப்பட்டதை உருவி வெளியே எடுத்தார் ஜூலியஸ். அது ஒரு நிறம் மங்கிப் போயிருந்த வழுவழு பாலிதீன் உறை.

''இதுதான் அந்த உறை. ஆமாமாம். வழுவழு பாலிதீன் உறை... நீங்களே பாருங்க டாமி! பிடியுங்க. என் பேனாக் கத்தியை எடுக்கறேன்.''

இவன் நம்ப முடியாதிருந்த ஒன்று நடக்கின்றது. விலைமதிப்பற்ற உறையினைத் தனது கரங்களில் தளிர் மலரைப் போல தூக்கி நின்றுக் கொண்டிருந்தான் டாமி. இவர்கள், *வென்று விட்டார்கள்!*

''இது ஆச்சரியமாயிருக்கு'' என்றான் இப்போது டாமி, கவரின் வாயைக் குத்து மதிப்பாய் சுட்டிக் காட்டி. ''நாட்கள் ஆனதால, கவர் வண்ணம் மங்கியிருக்கு. அப்போது இந்தக் கவரைத் தைத்திருக்கும் நூல் என்னவாகியிருக்கணும்? அது நைந்துப் போயிருக்கணும், இல்லியா? அதுமட்டும் புதுசாயிருக்கு! இது ஆச்சரியம், மிஸ்டர் ஜூலியஸ்.''

ஜாக்கிரதையாய் கவரின் நூலை அவிழ்த்து விட்டு வழுவழு பாலிதீன் உறையை இழுத்தனர். உள்ளே ஒரு, மடிக்கப்பட்ட தாளிருந்தது. நடுநடுங்கிய விரல்களால் அதனை விரித்தனர். தாள் - *வெற்றிடமாய் கிடந்தது!* விடை தெரியாத புதிர் கேட்டவர்களாய் ஒருவரையொருவர் நிமிர்ந்து பார்த்துக் கொண்டனர்.

''ஒண்ணுமில்லாத வெற்று வெள்ளைத் தாள்'' - சொன்னார் ஜூலியஸ். ''டேன்வர்ஸும் கொள்ளைக்காரனா?''

டாமி மறுத்துத் தலையசைத்தான். இந்தப் பதில் டாமிக்கு திருப்திகரமாய் தோன்றவில்லை. கணங்கள் நழுவின. தாளின் நிலைமைக்குத் தீவிரமாய் சிந்தித்தான். சட்டென அவனது இருண்ட முகம் பிரகாசமானது.

''எனக்குப் புரிந்து விட்டது! *கண்ணுக்குத் தெரியாத பேனா மை.''*

''அப்படியா நினைக்கிறீங்க?''

''அதுதான் - மிஸ்டர் ப்ரௌன். அப்படி தானானு பார்த்துடுவோமே...! வெப்பம், கண்ணுக்குத் தெரியாத பேனா மையைப் பல்லிளிக்க வெச்சுடும். கொஞ்சம் குச்சிகளைக் கொண்டு வாங்க. நெருப்பு செய்வோம்.''

சில நிமிடங்களில் சுள்ளிகளாலும் காய்ந்த சருகுகளாலும் உருவாக்கப்பட்ட தீ ஜ்வாலை, நீண்டது.

ஜ்வாலையின் நுனியில் தாளினைப் பிடித்துக் கொண்டான் டாமி. சூட்டினால் தாள் சற்று சுருண்டது. மற்றபடி பாதிப்பு இல்லை.

திடீரென்று ஜூலியஸ் இவனுடைய கைகளைப் பற்றினார். இறுக்கினார். மங்கலான ப்ரௌன் நிறத்தில் அட்சரங்கள் தெரியத் துவங்கிய பகுதியை நடுக்கமாய்ச் சுட்டிக் காட்டினார். ''நீங்க சாதிச்சுட்டீங்க, டாமி. உங்களோட அந்த ஐடியா - இமாலயமானது! அவ்ளோ பெரிசு! எனக்கு அப்படியெல்லாம் தோணியிருக்கவே செய்யாது!''

வெப்பம் அதன் வேலையை செவ்வனே முடித்து விட்டது என்று தெரியும் வரை, ஆட்டாது அசைக்காது, தாளினை அப்படியே பிடித்த வண்ணமிருந்தான் டாமி. பிறகு வெளியே எடுத்தான். நொடிகள் சில முடிந்ததும் அப்படி ஓர் அலறல் அலறினான் இவன்.

தாளுக்குக் குறுக்காய் சுத்தமான ப்ரௌன் நிறத்தில் ஓடிய வார்த்தைகள்:

நெஞ்சுநிறை அன்பளிப்பு:
மிஸ்டர் ப்ரௌனிடமிருந்து.

அத்தியாயம் - 21

டாமி, கண்டுபிடித்தான்

அதிர்ச்சியில் உறைந்துப் போன இருவரும், முட்டாளாக்கப்பட்டு விட்டதைப் பார்வையில் உணர்த்தியபடி ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர். எப்படியோ, விளக்க முடியாத ரகசியமான முறையில், மிஸ்டர் ப்ரௌன்... அவனுடைய கை வரிசையை மீண்டும் காட்டி முந்தியுள்ளான். தோல்வியை அமைதியாய் ஜீரணித்துக் கொண்டான் டாமி. அப்படி செய்யவில்லை ஜூலியஸ்.

''எந்த மாய மந்திரத் துப்பைப் பிடிச்சுக்கிட்டு அவன் நமக்கு முன்னால இங்கே வந்துட்டுப் போயிருக்கான்? இதுதான் என்னைக் கொதிக்க வைக்குது'' - முடித்தார் அவர்.

டாமி தெரியாது என தலையசைத்து விட்டு, சுரத்தில்லாமல் சொன்னான்: ''இது, கவரைத் தைத்திருக்கும் நூல் புத்தம் புதுசா இருப்பதற்கு விளக்கம் தருது. இதைப் பார்த்ததுமே நமக்குப் புரிஞ்சிருக்கணும்.''

''அதை விடுப்பா. கேள்வி இதுதான்: நமக்கு முன்னாடி அவன் எப்படி இங்கே வந்தான்? நாம எப்படி முண்டியடிச்சுக்கிட்டு ஓடி வந்தோம்னு நமக்குத் தெரியும். நம்மை விட முந்திக்கிட்டு ஒருத்தன் இங்கே வருவதென்பது - அசாதாரணம். அசாத்தியம். அவனுக்கு விஷயம் எப்படிக் கசிஞ்சது? ஜானே ஃபின் அறையில சின்னதா மைக் போல ஏதாவது ரகசியமா ஒளிச்சு வெச்சிருப்பாங்களா? அப்படி என்னவாவதும் தான் இருக்கணும்.''

ஆனால் டாமியின் பகுத்தறிவு மறுப்புத் தெரிவித்தது. ''அந்த வீட்டில அவ வந்து தங்கப் போறா எனும் சேதி யாருக்கும் முன் கூட்டியே தெரிந்திருக் காது... அதிலும் குறிப்பா அந்த அறையில தான் இருப்பா என்பதெல்லாம் - ம்ம்.''

''ஆமாமாம்'' - ஏற்றுக் கொண்டார் மற்றவர். ''அப்படினா அங்கே யிருக்கும் நர்ஸுகள்ல ஒருத்திக்கு அவனுங்களோடத் தொடர்பு இருக்கணும்... அவ கதவோரமா நின்னு ஒட்டுக் கேட்டு... ... ... இது?''

''அதெல்லாம் இப்ப நமக்கு ரொம்பத் தேவையா, மிஸ்டர்?'' - களைப்பாய்ச் சொன்னான் டாமி. ''இந்த ரகசியத்தை அவன் சில மாதங்களுக்கு முன்னாடியே கூட அறிந்திருக்கலாம் - வந்து ஆவணத் தாள்களை எடுத்துப் போயிருக்கலாம் - ஓ... அப்படினா அதை வெச்சு பூஜை பண்ணியிருக்க மாட்டானுங்களே... இதுக்குள்ளே அத்தனை பத்திரிகைகளிலும் பிரசுரித்திருப்பாங்களே...?!''

''ஆமாம்... சர்வ நிச்சயமா அப்படித்தான் பண்ணியிருப்பானுங்க! அப்போ - சில மணி நேரங்களுக்கு முன்னாடி, யாரோ, நம்மை முந்திக்கிட்டு இங்கே வந்திருக்காங்க. யெஸ். ஆனா எப்படி? எப்படிப்பா?''

''அந்த ஜேம்ஸ் பய இப்ப இருக்கக் கூடாதா?'' - சிந்தனையாய்ச் சொன்னான் டாமி.

''எதுக்கு? ஏன்?'' - முறைத்தார் ஜூலியஸ். ''நாம பயணத்திலிருக்கும் போது இந்தக் கூத்து நடந்திருக்கு.''

''ஆமாம் - - -'', என்ற டாமி தயங்கினான். அவனுடைய உணர்வுகளை அவனாலேயே உடனே விளக்க முடியவில்லை - நேர்ந்துள்ள அந்த இடையூற்றினை அவரது இருப்பு நிச்சயம் தடுத்திருக்கும் என்று தொடர்பற்றுப் பிறந்த எண்ணமது! இவனுடைய முதற் கட்ட விவாதத்துக்குள்ளேயே மீண்டும் நுழைந்துக் கொண்டான்: ''எப்படி நடந்தது என்று திரும்பத் திரும்பப் பேசுவதில் பிரயோஜனம் விளையாது. விளையாட்டு நடந்துக்கிட்டு இருக்கு. நாம் தோற்றுட்டோம். இப்போதைக்கு நான் செய்ய ஒரே ஒரு விஷயம்தான் இருக்கு.''

''என்னது அது?''

''எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் லண்டனுக்குத் திரும்பி விடுவது. திரு. கார்ட்டருக்கு நடந்துள்ளதைப் பற்றி எச்சரிக்கையை அனுப்பிடணும். பிரளயம் வெடிக்க இன்னும் சில மணி நேரங்கள் தானிருக்கு... இருந்தாலும், அவருக்கு, நேர்ந்துள்ள இந்தத் திருப்பம் தெரிஞ்சாகணும்.''

டாமி சொன்ன இந்தக் கடமை உயிரெடுக்கும் ஒரு வேலைதான். ஆனால் இதனைத் தவிர்த்துவிட இவனுக்கு எண்ணமில்லை. இவனுக்கு நேர்ந்துள்ள இத்தோல்வியை திரு. கார்ட்டருக்குத் தெரிவித்தே தீர வேண்டும். அப்போதுஇவனுடைய பணி முழுவதுமாய் முற்றுப் பெறும். நடு ராத்திரி ரயிலில் ஏறி லண்டனுக்குத் திரும்பினான். ஹோலி - ஹெட்டிலேயே இரவில் தங்கும் நிலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் ஜூலியஸ்.

சேர்ந்த அரை மணி நேரத்துக்குப் பிறகு, வெளிறியும் உலுக்கப்பட்டும் தோன்றிய டாமி, அதிகாரிக்கு முன்னால் நின்றுக் கொண்டிருந்தான்.

''உங்க கிட்டே அறிக்கை தர வந்திருக்கேன், ஸார். நான் தோற்றுட்டேன். படு கேவலமாத் தோற்றுட்டேன்.''

கார்ட்டர் இவனைக் கூர்மையாய் பார்த்தார். ''அப்படினா, அந்த ஆவணம் - - - ''

''- - - இப்போ அந்த ப்ரௌன் கையில இருக்கு, ஸார்.''

''ஆஹ்'' - சாந்தமாய் சொன்னார் கார்ட்டர். அவருடைய முகத்திலிருந்த பாவனை மாறவேயில்லை... ஆனால் அக்கண்களில் மினுமினுத்து அடங்கிப்போன நம்பிக்கையிழந்த துயரத்தை டாமி படித்தான். நடந்திருப்பது நம்மை மிஞ்சிய ஒரு செயல் என்ற ஆதரவை, கார்ட்டரின் கண்கள் இப்போது வெளிப்படுத்திய உணர்வைப் போல, வேறெந்த வார்த்தைகளும், துடிக்கும் டாமிக்குத் தந்திருக்காது.

''ஓகே'' என ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு பேசிய கார்ட்டர், ''இதுக்காக நம்ம கால்முட்டி வரை நாம தொங்கிப் போயிடக் கூடாது. இதுதான் நடந்திருக்கும் என்ற குழப்பமற்ற திட்டவட்டமான ஒரு தகவல் கிடைச்சிருப்பதுல எனக்கு சந்தோஷம். நம்மால என்னவெல்லாம் பண்ண முடியுமோ அதைப் பண்ணத் துவங்கணும்'' என்றார்.

இதற்கு உத்தரவாதத்தைத் தர டாமியின் மனம் முன் வந்தாலும் உதடுகள் சொன்னவை வேறு: ''அது உபயோகமற்றது, ஸார். அவனுக்கும் அது உபயோகமற்றதுனு தெரியும்.''

எதிரிலிருந்த அதிகாரி நிமிர்ந்து நேராய் இவனைப் பார்த்தார்: ''இதை மனசுல எடுத்துக்காதே பையா'' என்றார் கருணையாய். ''உன்னால முடிஞ்ச அதிகபட்ச பணிகளை நீ செஞ்சே. இந்த நூற்றாண்டின் மாபெரும் கொள்ளைக் கூட்ட மூளைக்கு எதிரா நீ இயங்கினே. நீ வெற்றியின் விளிம்பு வரை வந்தே - அது நினைவிருக்கட்டும்.''

''தேங்க் யூ, ஸார். அளவிட முடியாத அளவுக்கு மேன்மையா இருக்கீங்க.''

''நான் என்னைத் தான் குற்றஞ்சுமத்திக்கிட்டு இருக்கேன். அதிலும், குறிப்பா, இந்த இன்னொரு சேதியைக் கேட்டதிலிருந்து, நான் என்னையே தான் அதிகமா திட்டிக்கிட்டு இருக்கேன்.''

அவர் சொன்ன தொனியின் வீச்சிலிருந்த ஏதோவொன்று டாமியின் கவனத்தைக் கவர்ந்தது. ''இன்னும் ஏதாவது சேதி - இருக்கா, ஸார்?''

''அப்படித் தான் நினைக்கிறேன்'' - மிக ஆழ்ந்து சொன்னார் கார்ட்டர். மேஜையில் இருந்த ஒரு தாளினை நோக்கித் தனது கையைக் கொண்டு போனார்.

''டூபென்ஸ் - - - ?'' - தானாக முன் வந்து கேட்டான் டாமி.

''நீயே படிச்சுப் பார்.''

தட்டச்சு செய்யப்பட்டிருந்த வாசகங்கள் இவனுக்கு முன்னால் நர்த்தனமாடின. ஒரு பச்சை பட்டன் பற்றிய விவரம்... ஒரு கோட் மற்றும் அதனுள்ளிருந்த கைக்குட்டை பற்றிய அடையாளங்கள்... இவையிருந்தன. கலவரமான கேள்விக்குறியோடு நிமிர்ந்து பார்த்தான் டாமி. இக் கேள்விக்கு பதில் தந்தார்: ''எபுரி அருகேயிருக்கும் யார்க் கடற்கரையில் ஒதுங்கியவை, இவை. நம்மை ஏமாற்ற அவங்க நடத்திய நாடகங்களில் ஒன்றா இது இருந்துடக் கூடாதானு - - -.''

''ஓ, கடவுளே!'' - மூச்சிழுத்துப் போனான் டாமி. ''டூபென்ஸ்! அடப்படுபாவிகளா - அவனுங்களை துவம்சம் செய்யாம நான் ஓய மாட்டேன். அவனுங்களைத் தேடுவேன் - துரத்திப் பிடிப்பேன் - துடிக்க துடிக்க வெட்டுவேன் - நான் - நான் - ''

கார்ட்டர் முகத்தில் தொனித்த பரிதாபப் பார்வை இவனை நிறுத்தியது.

''உன் உணர்வுகள் எப்படித் துடிக்கும்னு எனக்குத் தெரியும், கண்ணா. ஆனா, பிரயோஜனமில்லே - பிடிக்க முடியாது. உன் சக்தியெல்லாம் பலனற்று வீணா போகும். நான் சொல்வது உனக்குக் கொடூரமா தோணலாம்... இருந்தாலும், உனக்கான என் அறிவுரை: *இழப்பை மற.* காலம் மிகக் கனிவானது - கருணையானது. நீ மறப்பாய்.''

''டூபென்ஸை மறப்பதா? ம்ம். நெவர், *நெவர்!''*

இவனை மறுத்துத் தலையசைத்தார் கார்ட்டர். ''இப்போ அப்படித் தான் நினைப்பே. அந்த துணிச்சலான பெண்ணின் இழப்பை - நோ, நோ... அத்தனை சுலபமா ஒதுக்கிட முடியாது! நடந்துள்ள அத்தனைக்கும் நான் மிக வருந்தறேன் - மனசாரப்பா, மனசார... மனசார... வருந்தறேன்!'' - குரல் தழுதழுக்கப் பேசினார்.

சற்று முயன்று தன்னிலைக்கு வந்தான் டாமி. ''நான் உங்க பொன்னான நேரத்தை வீணாக்கிட்டு இருக்கேன், ஸார்,'' என்றான் அசதியாய். ''உங்களை நீங்க குற்றமா நினைக்க அவசியமில்லை, ஸார். எங்க தப்பு அது. எத்தனை கொடூரமான ஆட்களுக்கு எதிரா நிற்கிறோம் என்பது தெரிஞ்சிருந்தும் நாங்க மார் தட்டினது எங்களுடைய முட்டாள் தனம். நீங்க முதல்லேயே தேவையான அளவுக்கு மிக அற்புதமா எச்சரித்தீங்க. ஆனாலும்... நான்... நான்... நான்தான்... விடாம பிடிவாதமா...'' என்று உடைந்தவன், உடனடி யாய் ''குட் பை, ஸார்'' என்று விட்டான். அவனுக்குத் தனிமை அவசியமாய்ப் பட்டது.

ரிட்ஸ் வந்தவன், நினைவுகள் அனைத்தும் எங்கோ ஒரு தொலைவில் சஞ்சரித்துக் கொண்டிருக்க, அவனுடைய சில சாமான்களை இயந்திரத் தனமாய் மூட்டை கட்டினான். தான் எங்கிருந்தாலும் இருக்கும் அப் பகுதியையே கலகலவென்று ஆக்கி விடவல்ல டாமியின் குணாதிசயத்திற்கு, சற்று முன் சொல்லப்பட்ட சொல்லொணா சோகம் தந்த கிலியை... கலவரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இறந்த காலத்தை எண்ணி... அந்த இழப்பை எண்ணி... அவன் இதயம் நடுநடுங்கியது. எத்தனை குதூகலமான கலாட்டா காலங்களை இருவருமாய் கழித்திருக்கின்றனர் - டாமி அண்ட் டூபென்ஸ்! ஆனால் இப்பொழுது - ஓஹ்... இவனால் நம்பவே முடியவில்லை - அது, உண்மையாக இருக்கக் கூடாது. டூபென்ஸ், இறந்து விட்டாள்! உயிர்ப்புடன் புடைத்துத் துள்ளும் குட்டி டூபென்ஸ்! இது ஒரு கனவு. குடல் பிடுங்கும் கனவு. வேறு கிடையாது.

ஓட்டல் காரர்கள் இவனுக்கு ஒரு துண்டுச் சீட்டினைக் கொண்டு வந்து தந்தனர்... அதில் கனிவாய் தனது அனுதாபத்தை சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன் தெரிவித்திருந்தார். செய்தித்தாளின் வாயிலாக சேதியை அவர் அறிந்திருக் கிறார். *(தலைப்புச் செய்தி: இளம்பெண் மூழ்கியிருப்பாள் என அஞ்சப்படு கின்றது.)* கடிதம், அர்ஜென்டைன் பகுதியில் ஒரு வேலையிருப்பதாகவும், டாமி அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்றும், இதில் சர் ஜேம்ஸுக்கு அதிகம் ஈடுபாடிருப்பதாகவும், முடிந்திருந்தது.

கடிதத்தைத் தூக்கி ஓர் ஓரத்துக்கு எறிந்தபோது, ''இளகிய மனம் படைத்த ராட்சஸன்'' என்று சொல்லிக் கொண்டான் இவன்.

ஜூலியஸுக்கே உரிய வேகமான இயக்கத்தோடு உடைப்பது போல் கதவை சத்தமாய் திறந்துக் கொண்டு இப்போது உள்ளே நுழைந்தார் அவர். திறந்துக் கிடந்த ஒரு செய்தித் தாளைக் கையில் சுமந்திருந்தார்.

''என்னது இதெல்லாம்? தெரியுமா உங்களுக்கு? டூபென்ஸைப் பற்றி ஏதோ தவறான தகவல் போட்டிருக்காங்களே... என்ன கூத்து இது?''

''அதுதான் நிஜம்'' - டாமி சாந்தமான குரலில் பேசினான்.

''அவங்க - அவளை - தீர்த்துட்டாங்கன்னா - சொல்றீங்க - - -?''

டாமி ஒப்புதலாய் தலையசைத்தான். ''ஆவணத் தாள்கள் கையில் கிடைத்த கணத்துல அவளால எவ்விதமான உபயோகமும் மேற்கொண்டு கிடையாதுனு முடிவு செஞ்சிருப்பாங்க... ஆனா அவளை வெளியில கழட்டி விடவும் பயந்திருப்பாங்க. காட்டிக் கொடுத்துட்டான்னா...?!''

''ஓ.. நெஞ்சே வெடிச்சுடும் போல இருக்கே...'' என்றார் ஜூலியஸ். ''லிட்டில் டூபென்ஸ். நிச்சயமா... துணிவு நிறைஞ்ச புது மலர் போன்ற குட்டிப் பொண்ணுதான் அவங்க...''

ஆனால் இப்போது திடீரென்று ஏதோ ஒன்று டாமியின் மூளைக்குள் வெடிப்பது போல் இவனுக்குத் தோன்றியது. வெறியும் துடிப்புமாய் எழுந்து நின்றுக் கொண்டான்.

''முதல்ல வெளியே போங்க, ம். கெட் அவுட், ஐ ஸே! உங்களைக் கலியாணம் பண்ணிக்க முடியமானு வெறும் சதைப் பித்துப் பிடிச்சு அழுகின வார்த்தைகளால அவளை நீங்க கேட்டீங்க; ஆனா அவளை நான் *காதலிச்சேன்.* ஏற்பட்ட கஷ்டத்திலிருந்து அவளைக் காப்பாற்ற என் உடலிலுள்ள ஆவியையே நான் விலையா கொடுத்திருப்பேன். அவளுக்கு வழி விட்டு மௌனமா விலகி நின்னு அவ உங்களைக் கலியாணம் பண்ணிக்கத் தேவையான அத்தனையையும் நான் செஞ்சிருப்பேன்... ஏன் தெரியுமா? கையில தம்புடி இல்லாத என்னை விட, அவ கனவா நினைச்சுக்கிட்டிருந்த அந்த வாழ்க்கையை உங்க ஒருத்தரால மட்டும்தான் தர முடியும் - அதனால! நீங்க பேசறீங்க இப்போ... புது மலர்... குட்டிப் பொண்ணு.. தூ! ப்ளீஸ், அவுட்.''

தற்காலிகமாய் ''இதோ பாருங்க...'' எனத் துவங்கினார் ஜூலியஸ்.

''முதல்ல போய்யா வெளியே! நீங்க இங்கே வந்து 'லிட்டில் டூபென்ஸ்' லொட்டு லொசுக்குனு பேசறதை என்னால சகிச்சுக்கு முடியாது. போய் முதல்ல உங்க அத்தைப் பொண்ணு முறையில இருக்கும் அந்தப் பொண்ணை கவனியுங்க. டூபென்ஸ் - *என்னவள்!* குழந்தைகளா நாங்க விளையாடின பொழுது முதல் அவளை நான் காதலிச்சிருக்கேன்! வளர்ந்தோம் - இருந்தாலும் அதே நிலைமைதான்... அதே உணர்வுதான்... அது - *காதல்!* எங்கும் எதிலும் அவளையே பார்க்கும் காதல்! நான் ஆஸ்பத்திரியில் இருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தை என்னால மறக்கவே முடியாது... வெள்ளை தொப்பியும் கவுனும் போடப்பட்ட அந்தக் கோமாளித்தனமான நர்ஸ் உடையில அவ உள்ளே வந்தா..! நான் மிக அதிகம் நேசிச்சு காதலிக்கும் பெண்ணை ஒரு நர்ஸா வேஷம் கட்டிப் பார்த்தது. எனக்கு மகா ஆச்சரியமாயிருந்தது... ... ...''

ஆனால் மேலும் பேச விடாது ஜூலியஸ் இடைமறித்தான். ''ஒரு நர்ஸ் உடையில! ஓ, வாவ்... அப்படிப் போடு! சத்தியம் டாமி... ஒரு நிமிஷம் கோவப்படாதீங்க... ப்ளீஸ், கேளுங்க! அதேபோல நானும் ஜானேவை நர்ஸ் உடையிலயும் வெள்ளைத் தொப்பியுடனும் பார்த்தேன்... இது சத்தியம்; ஆனா இது எத்தனை அசாத்தியம், இல்லே! ஆங்... ஆங்... கடவுள் சாட்சியா இப்ப புரிஞ்சிடுச்சு. போர்ன்-மவுத் ஆஸ்பத்திரியில விட்டிங்டனுடன் பேசியதா நான் பார்த்த நர்ஸ் தான் இவ. அங்கே இவ ஒரு நோயாளி கிடையாது! இவ ஒரு நர்ஸ்!''

''ஏய்... சொல்லிக்கிட்டே இருக்கேன்'' என்று கோபம் குரோதமாய் எகிற கத்தினான் டாமி. ''அவ, அவங்க கூட ஆரம்பத்திலிருந்தே இருந்திருக்கலாம். டேன்வர்ஸிடமிருந்த ஆவணத் தாள்களை இவளே சுருட்டியிருந்தா கூட அதுக்கு நான் ஆச்சரியப்பட மாட்டேன்.''

''மூடு வாயை'' - கத்தினார் ஜூலியஸ். ''அவ என் உறவு. மேலும் இதுவரை இந்த நாடு கண்டிராத அளவுக்கான நாட்டுப்பற்று செறிந்த ஒரு பெண். ஜாக்கிரதை.''

''ஏய், என்ன மிரட்டறே! அவ என்ன ஏதுனு எதைப் பற்றியும் எனக்குத் துளி கவலை கிடையாது. ஓகே? முதல்ல போ வெளியே'' - எதிர்த்தான் டாமி, அவரை விட உசத்தலான குரலில்.

கைகலப்பில் ஈடுபடும் அளவுக்கு இரு இளைஞர்களும் வந்திருந்தனர். காதலால்! ஆனால், திடீரென்று மந்திரம் போட்டது போல, ஜூலியஸின் கோபம் அணைந்தது. ''நல்லது, நண்பா'' என்றார் சாந்தமாய். ''நான் கிளம்பறேன். நீங்க சொன்ன எதுக்குமே நான் உங்களைக் குற்றங்குறை சொல்லப் போவது கிடையாது. கடைசியில நீங்க சொன்ன வார்த்தைகளுக்கு நன்றிகள். அமைதியாகுங்க -''

பொறுமையற்றவனாய் காட்டிக் கொண்ட டாமி, 'முதலில் நீ வெளியே போனால் போதும்' என்பதை முகச் சுளிப்பினால் உணர்த்தினான்.

''நான் உடனடியா கிளம்பிடப் போறேன். முதல்ல லண்டனுக்கு. பிறகு அங்கிருந்து வடமேற்கு ரயிலடிக்கு, அவசியமிருந்தா குறிச்சுக்குங்க.''

''நீங்க எங்கே போய் தொலையறீங்க என்பது பற்றியெல்லாம், கண்றாவி துளி கவலை கிடையாது எனக்கு'' - குமுறினான் டாமி.

கதவை மூடி ஜூலியஸ் போனதும் தனது பெட்டிக்குத் திரும்பினான் டாமி. பெட்டியுள்ளே நோட்டமிட்டான். ''இவ்ளோ தான் மொத்தமும்'' என்று முணுமுணுத்தவன் அழைப்பு மணியை அடித்தான்.

''என் பெட்டியை எடுத்துக்கிட்டு கீழே போ.''

''யெஸ், ஸார். கிளம்பியாச்சா, ஸார்?''

''ஆமாம்... நான் நரகத்துக்குப் போயிக்கிட்டிருக்கேன்'' என்றான் டாமி, அவன் என்ன நினைப்பான் என்றெல்லாம் கருதாது!

அந்த பிரகஸ்பதியோ, மரியாதை குறையாது பின்வரும் பதில் தந்தது: ''நல்லது, ஸார். அதுக்கு நான் டாக்ஸியைக் கூப்பிடட்டுமா, ஸார்?!''

டாமி ஒப்புதலாய் தலையசைத்தான்!

அது சரி... இவன் இப்போது எங்கு கிளம்பி விட்டான்? இவனுக்கே கூட இக்கேள்வி குறித்து சின்னஞ்சிறு பதில் கிடையாது. மிஸ்டர் ப்ரௌனை இல்லாமல் செய்தாக வேண்டும் என்ற ஒரே நிலையான இலக்கைத் தவிர

இப்போது இவனிடம் வேறு ஒன்றும் கிடையாது. சர் ஜேம்ஸின் கடுதாசியை மறுபடியும் எடுத்துப் படித்தவன், மறுப்பாய் தலையசைத்துக் கொண்டான். டூபென்ஸுக்கு நேர்ந்த கதிக்குப் பழிக்குப் பழி வாங்கியாக வேண்டும். அதற்கு முன்... வேறெந்த வேலையும் வேண்டாம். 'இருந்தாலும், இக்கடுதாசிக்கு ஒரு பதில் போட்டுவிட வேண்டும்' - எண்ணிக் கொண்டான் டாமி.

அருகிலிருந்த மேஜை நோக்கி எழுந்துப் போனான். என்னவெல்லாமோ அதில் இருந்தனவே தவிர ஒரு வெள்ளைத்தாள் இல்லை. அழைப்பு மணியை அடித்தான். ஒருத்தரும் வரவில்லை. ஏற்பட்ட தாமதம் அவனுக்குள் வடிந்திருந்த புகைச்சலைக் கிண்டி விட்டது! அப்போதுதான், ஜூலியஸின் அறையிலுள்ள மேஜையில் நிறைய வெள்ளைத்தாள்கள் இருப்பது இவனுக்கு நினைவு வந்தது. உடனடியாய் கிளம்பிப் போய் விடப் போவதாக அமெரிக்கன் சொல்லி விட்டுப் போனான். அவனை எதிர் கொள்ளும் தர்மசங்கடம் நேர வாய்ப்பில்லை. அப்படியே இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும்... தாள்கள் ஒட்டல் சொத்து... அவருடையவை அல்ல. இந்த நினைப்பு, இத்தனை நேரம் ஜூலியஸைப் பார்த்து டாமி பேசியவற்றுக்காக, இவனைக் கொஞ்சம் கொஞ்சமாய் வெட்கப்படவும் வேதனைப்படவும் செய்தது. 'நல்ல வேளை, ஜூலியஸ் அவற்றை அதிகம் பொருட்படுத்தா திருந்தார். ஆகவே அவர் ஒருவேளை இன்னும் அறையிலிருந்தால் மன்னிப்புக் கோரி விடலாம்...' - எண்ணிக் கொண்டான் டாமி.

ஆனால், அவருடையஅறை காலியாயிருந்தது. டாமி குறுக்காய் நடந்து மேஜையை நெருங்கி அதன் மையத் தட்டினைத் திறந்தான். அதில், கவனமற்று, மல்லாக்கப் போடப்பட்டிருந்த ஒரு புகைப்படம், இவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. கண நேரம் பூமியில் நட்டு வைத்தவனைப் போல மரமாய் நின்றான். பிறகு அதனை வெளியே எடுத்தான்... மையத் தட்டினை அடைத்தான்... மெல்லமாய், அங்கிருந்த கை வைத்த நாற்காலி வரை போனான்... கையிலிருந்த புகைப்படத்தை முறைத்தபடி அதில் உட்கார்ந்தான்.

பிரெஞ்சுப் பெண்ணான ஆனெட்'டின் புகைப்படம். இந்த ஜூலியஸின் மேஜை டிராயருக்குள் பதுங்கிக் கிடக்க அப்படி என்னதான் காரணமிருக்க முடியும்?

அத்தியாயம் - 22

டவுனிங் சாலையில்

நரம்பதிர்வால் நடுங்கிக் கொண்டிருந்த விரல்களால் தனக்கு முன்னாலிருந்த மேஜையை சன்னமாய் தட்டிக் கொண்டிருந்தார், பிரதம மந்திரி. களைத்து சளைத்துப் போயிருந்த அவருடைய முகம் கவலையில் தோய்ந்து தொய்ந்திருந்தது. எந்த இடத்தில் விட்டுப் போனதோ அதே இடத்திலிருந்து திரு. கார்ட்டருடனான தனது சம்பாஷணையைத் தொடர்ந்தார். பி.ம: ''எனக்கு விளங்கலே, மிஸ்டர் கார்ட்டர்'' என்றார்; ''அப்ப என்ன சொல்ல வறீங்க... விஷயம், தப்பிக்கவே முடியாத அளவுக்கு மோசமாகலே'னு சொல்ல வறீங்களா?''

''அப்படித்தான் இந்தப் பய நினைக்கிற மாதிரி தெரியுது!''

''அவனுடைய கடிதத்தை நாம இன்னொரு தடவைப் பார்ப்போம்.''

கார்ட்டர் பிரதமரிடம் அதைக் கொடுத்தார். பள்ளிக்கூட மாணவனின் கையெழுத்துப் போக்கில் அது எழுதப்பட்டிருந்தது.

டியர், திரு. கார்ட்டர்,

குழப்பமாயிருக்கு... நடந்துள்ள சில விஷயங்கள் ஒண்ணுக்கு ஒண்ணு ஒட்டாம இருக்கிற மாதிரி படுது. ஒருவேளை என்னோட இந்த சந்தேகம் முழு முட்டாள்தனமா ஆனாலும் ஆகிடலாம் - ஆனா அப்படி ஆகும்னு எனக்குத் தோணலே. விளக்கறேன். எனக்குள்ளே விளைந்துள்ள முடிவுகள் சரியா இருக்கும் பட்சத்தில் - மேன்செஸ்டரில் வந்திருக்கும் அந்தப் பொண்ணு, ஒரு செமத்தியான செட்-அப். அந்த அத்தனை சமாச்சாரமும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட அற்புத நாடகம். நாம எதுக்காகப் போராடிக்கிட்டிருக்கோமோ, அந்த விஷயமே ஒரு முடிவுக்கு வந்தாச்சு என்று நாம் நினைப்பதற்காக செய்யப்பட்டுள்ள ஒரு கற்பனைக் காட்சி. இதனாலேயே, நாம நொடியும் வீணாக்காம இயங்க வேண்டிய கட்டாயம் இன்னும் இருக்குனு நினைக்கிறேன்.

உண்மையான ஜானே ஃபின் யார்னு எனக்குத் தெரியும் என்பது என் கருத்து... சொல்லப் போனா, அந்த ஆவணத் தாள்கள் எங்கேயிருக்குனு

கூட எனக்கு ஊகங்கள் இருக்கு. ஆவணம் பற்றிய கருத்து, முழுக்க முழுக்க என் ஊகம் தான் - ஆனா அது நிச்சயமா சரியான ஓர் ஊகமாத்தான் உருவெடுக்கும் என்பது என் நம்பிக்கை. எப்படியிருந்தாலும், அத்தகவலை, ஒட்டப்பட்ட உறையில் வைத்து நான் உங்களுக்கு இணைத்துள்ளேன். இதை, கடைசி நொடி வரை... அதாவது 28 ஆம் தேதி நள்ளிரவு வரை - நீங்க பிரிக்கவே கூடாது என்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கப் போறேன். ஏன்னு ஒரு நிமிஷத்துல நீங்களே புரிஞ்சுக்கப் போறீங்க. கவனியுங்க... டூபென்ஸ் சம்பந்தமா கிடைத்துள்ள கடற்கரை காட்சிகள் கூட ஓர் அழகிய நாடகம் என்றுதான் நான் உருவகப்படுத்தியிருக்கேன். நான் இங்கே மூழ்கிக்கிட்டு இருக்கிற மாதிரியெல்லாம் அவ மூழ்கவே இல்லே..! காரண காரியங்களோடு நான் முடிவு செய்திருக்கும் உண்மை இதுதான்: கடைசி முயற்சியா ஜானே ஃபின்னைத் தப்பித்துப் போகும்படி அவங்க விடுதலைப் பண்ணப் போறாங்க - அவ, மூளைப் பிசகிப் போயிடுச்சுனு நடத்தும் நாடகம்தான் நிஜமே தவிர உண்மையிலேயே அவளுக்கு அப்படி எதுவும் ஆகலே என்பது அவங்களோட நெனப்பு - அவங்க கிட்டேயிருந்து முழுசா தப்பிச்சாச்சு'னு அவளுக்குப் புலப்பட்டதும் என்ன பண்ணுவா... நேரா அந்தப் புதையலைத் தேடிக்கிட்டு ஓடுவா - இது, அவங்க எடுக்கிற படு முட்டாள்தனமும் ஆபத்தும் நிறைந்த அணுகுமுறை... ஏன்னா, அவளுக்கு இவனுங்க ஒவ்வொருத்தனையும் அடி ஆழம் வரை தெரியும் - ஆனா வேற வழி கிடையாது - எப்படியாவது அந்த ஆவணங்களை அடைஞ்சே தீரணும் எனும் நெருக்கடி அவங்க கழுத்தை நெறிக்குது. ஆனா, இப்போ, *அந்தத் தாள்கள் நம்மால கையகப்படுத்தப்பட்டாச்சுனு அவனுங்களுக்குத் தெரிஞ்சா,* ரெண்டு பெண்களும் உயிரோட திரும்ப மாட்டாங்க. ஆக, ஜானே தப்பிப்பதற்கு முன் நான் முதல் வேலையா எப்படியாவது முயன்று டூபென்ஸைப் பிடிச்சாகணும்.

ரிட்ஸூக்கு, டூபென்ஸூக்காக அனுப்பப்பட்ட தந்தி மறுபடியும் எனக்கு அனுப்பப்படணும். அது எனக்குக் கிடைக்கத் தேவையான வற்றை நீங்க செய்வீங்கன்னு சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன் என்கிட்டே சொன்னார். அடிச்சுக்க முடியாத புத்திசாலிதனத்தாலேயே - அவர் பயமுறுத்தறார்!

கடைசியாக - ஸோ - ஹோவிலிருக்கும் வீட்டை, தயவு கூர்ந்து, இரவு பகலாய் கண்காணிக்கவும்.

உங்கள் மதிப்புக்குரிய, அன்புக்குரிய, இத்யாதி... இத்யாதி...
Thomas Ford!

பிரதம மந்திரி நிமிர்ந்துப் பார்த்தார்: ''அந்த இணைப்பு?''

கார்ட்டர் வறட்சியாய் சிரித்தார். ''பேங்க் லாக்கர்ல! எவ்விதமான அபாயத்தையும் நான் இனி புதுசா உருவாக்க விரும்பலே.''

''அதை இப்பவே திறந்து விடுவது...'' என்ற பிரதம மந்திரி, கணம் தாமதித்து விட்டு, ''... ரொம்ப நல்லதுனு உங்களுக்குத் தோணலியா?'' என்றார். ''தாமஸின் ஊகங்கள் சரியா அமைந்து விடும் பட்சத்தில், உடனடியா, இப்பவே, நாம அந்த ஆவணத்தைக் கையகப்படுத்தணும், இல்லியா? அப்படி நாம செய்வதைக் காதும் காதும் வெச்சா மாதிரி வேற ஒருத்தருக்கும் தெரியாம ரகசியமா செய்ய முடியும்.''

''அப்படி நம்மால முடியுமா? சந்தேகம் தான். நம்மைச் சுற்றி எல்லா திசைகளிலும் ஒற்றர்கள் இருக்காங்க. விஷயம் எப்படியெல்லாம் போகுதுனு இப்போ தெரிஞ்சுட்டப்பிறகு - '' - விரல்களைக் குறுக்காய் மடித்து மறுப்புக் காட்டிய கார்ட்டர் - ''அந்தப் பெண்களின் உயிர் கருதியாவது, அந்த உறையை நான் எடுக்க விட மாட்டேன். அந்தப் பய என்னை அப்படி நம்பி எழுதியிருக்கான் - ஒப்படைச்சிருக்கான். ம்ம். நம்பிக்கை துரோகம், முடியாது.''

''சரி, சரி. அப்போ அப்படியே விட்டுடுவோம். சொல்லுங்க... இந்தப் பய எப்படி...?''

''வெளிப்புறத் தோற்றத்துல - மிக சாதாரணமானவன் - நல்ல பழக்க வழக்கங்கள் கொண்ட ஓர் சாதாரணப் பிரஜை - ரொம்ப மண்டையில சரக்கெல்லாம் இல்லாதது போல தோன்றும் ஓர் ஆங்கிலேய இளைஞன். மூளையைக் கசக்கிப் பிழிவதில் கொஞ்சம் ஆமைதான். ஆனா இவனுடைய கற்பனை முடிவுகள்... ஊகங்கள்... சமயோஜித இயக்கம் ஆகியவை, இவனை எப்பவுமே தவறான பாதையில் திசை திருப்பிடாது என்ற அளவு நிஜம். இவனுக்குனு ஒண்ணும் கிடையாது - அதனால இவனை ஏமாற்றுவது கடினம். ஓர் விஷயத்தைப் பற்றி யோசித்து... ஆழ்ந்து பார்த்து... முக்கியத்துவம் கொடுத்து... என்று செய்வதெல்லாம் ரொம்ப மெதுவாத்தானிருக்கும். ஆனா, இதையும் மீறி சரியா பிடிச்சுட்டான்னா - ஸார் - கை நழுவ விடவே மாட்டான்! இவனுடன் உழைக்கும் அந்த இளைய காரிகை - நேரெதிர். உள்ளுணர்வு அதிகம் - படு புத்திசாலி. சேர்ந்து உழைப்பதுல ரெண்டு பேரும் செமத்தியான ஜோடியா ஆயிடறாங்க. ஒண்ணு புயல் - சமயோஜிதம் கம்மி. இன்னொன்னு மூளை, வேகம் கம்மி.''

''பய தன்னம்பிக்கையோட இருக்கான்'' - ஆலோசித்தார் பிரதமர்.

''ஆமாம். அது தான் எனக்கு நம்பிக்கையையே தருது. இவன் ஒரு வகையில் அதைரியமான தன்னம்பிக்கையற்ற பய. ஒரு கருத்தை சொல்வதற்கு முன்னாடி அல்லது ஒரு விஷயத்துல இறங்குவதற்கு முன்னாடி பலப்பல முறை சரி பார்த்துக்கிட்டு தான் செயல்படவே இறங்குவான்.''

எதிரிலிருந்து நாடாளுபவரின் இதழ்களில் சிறு குறுநகை விளைந்தது. ''நாம் வாழும் காலகட்டத்தின் மாபெரும் கயவர்களை... நாட்டையே கவிழ்த்து விட இயங்கிக் கிட்டிருக்கும் கொடியவர்களை - இப்படிப்பட்ட பய தான் முடக்கப் போறான், ம்?''

''ஆமாம், இந்தப் பய தான் - உங்க மொழியில! இவனைத் தவிர, இந்த வழக்குல, சில சமயங்கள்ல, ஒரு நிழலையும் நான் உணர்றேன்.''

''யாரைச் சொல்றீங்க?''

''பீல் எட்ஜர்ட்டன்.''

''பீல் எட்ஜர்ட்டன்?'' - ஆச்சரியக் கொப்பளிப்பாய்ச் சொன்னார் பிரதமர்.

''ஆமாம். நான் இதுல அவருடைய கை வரிசையைப் பார்க்கிறேன். அவர் இதுல இருக்கார் - இருட்டுல, ஒதுங்கி, அமைதியா, வெளியே ஒருத்தருக்கும் தெரியாம இயங்கியபடி! ப்ரௌனை நமக்கு முன்னாடி கொண்டு வந்து நிறுத்தி அவனுடைய முகத்திரையை விலக்க ஓர் ஆளால முடியும்னா - அது நிச்சயம் சர் ஜேம்ஸாத் தானிருக்கணும் என்பது என் நிலைப்பாடு. அவர் இந்த வழக்குல கரைஞ்சிருக்கார் - என்கிட்டேயிருந்து இந்த வார்த்தையை எடுத்துக்குங்க - ஆனா இந்த உண்மை வெளியே தெரிவதை அவர் விரும்பலே! ஆங்... அன்னிக்கு அவர்கிட்டேயிருந்து ஒரு வித்தியாசமான வேண்டுகோள் எனக்கு வந்திருந்தது, தெரியுமா, ஸார்?''

''அப்படியா?''

''ஓர் அமெரிக்கன் செய்தித் தாளிலிருந்து ஒரு நறுக்கை அவர் எனக்கு அனுப்பியிருந்தார். நியூயார்க் கப்பல் பழுது பார்க்குமிடத்தை ஒட்டி மூன்று வாரங்களுக்கு முன்னால் கண்டெடுக்கப்பட்டுள்ள ஒரு நபரின் உடல் பற்றியது. அதுபற்றி என்னால என்ன சமாச்சாரங்களெல்லாம் பெற முடியுமோ அத்தனையும் பெற்றுத் தருமாறு வந்த வேண்டுகோள் அது.''

''ஓஹோ...?!''

கார்ட்டர் தனது தோள்களைக் குலுக்கிக் காட்டினார். ''எனக்கு அதிக தகவல்கள் கிடைக்கலே. 35 வயசிருக்கும்னாங்க - ஏழ்மையான உடை - முகம், அடையாளம் காண முடியாத சிதைஞ்சிருக்கு. யார்னு கடைசி வரைக்கும் தெரியாமலே போயிடுச்சு.''

''இந்த ரெண்டுத்துக்கும் ஏதாவது ஒரு வகையில தொடர்பிருக்கும்னு நினைக்கிறீங்க?''

''ஏனோ... அப்படித்தான் தோணுது. என் நினைப்பு தப்பா கூட இருக்கலாம். ஆங்..!'' - சிறு இடைவெளி விளைந்தது... பிறகு கார்ட்டர் தொடரலானார்: ''அவரை நான் இங்கே ஒரு நடை வந்துட்டுப் போகச் சொல்லியிருக்கேன். அவர் சொல்ல மறுக்கும் விஷயத்தை எப்படியாவது அவரிடமிருந்து பிடுங்குவதற்காக அல்ல. அவருடைய சட்ட நுணுக்கமான அணுகுமுறைகள் மிகவும் ஆழமானவை. வலுவானவை. ஆனா, டாமியுடைய கடிதத்துல தெளிவில்லாம இருக்கிற ஒரு சில விஷயங்களுக்கு நிச்சயமா அவரால வெளிச்சம் காட்ட முடியும். ஆஹ்... இதோ, வந்துட்டாரே!''

உள்ளே வந்த ஜாம்பவானை அழைக்க இருவருமே எழுந்துக் கொண்டனர். க்ஷண நேரத்தில், எப்படியெல்லாமோ போன நாட்டுத் தலைவனின் மனத்தில், ஒரு நினைப்பு வெட்டியது: ''எனக்கு அடுத்து வரப் போகிறவர்!''

ஆனால், பேச வேண்டிய விஷயத்துக்குள் அக்கணமே நுழைந்த கார்ட்டர்: ''டாமி கிட்டேயிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது'' என்கிறார். ''நீங்க அவனைப் பார்த்துட்டு தான் வந்திருக்கணும்னு நினைக்கிறேன்.''

''நீங்க தப்பா நினைக்கிறீங்க'' என்றார் வக்கீல்.

''ஒஹ்!'' - கார்ட்டர் சற்றே செய்வதறியாது திகைத்தார்.

சர் ஜேம்ஸ் சிரித்து விட்டு தனது முகவாயைத் தட்ட ஆரம்பித்துக் கொண்டார். பிறகு ''அவர் தான் எனக்கு ஃபோன் செஞ்சார்'' என்று தானாக முன் வந்து சேதி தந்தார்.

''அப்போ உங்களுக்குள்ளே என்ன பேசப்பட்டது என்பது பற்றிய தகவல்களை எங்களுக்குத் தர ஏதாவது ஆட்சேபணை உண்டா?''

''ஒரு ஆட்சேபணையும் கிடையாது. அவருக்கு நான் எழுதியிருந்த ஒரு கடிதத்துக்காக எனக்கு நன்றி சொன்னார் - இதிலும் ஒண்ணும் ரகசியம் கிடையாது - அவருக்கு ஒரு வேலை தருவதா எழுதியிருந்தேன். மிஸ் ப்ருடன்ஸைக் குருடாக்கிக் கடத்திப் போயிருந்த அந்தப் போலி கடிதம் பற்றி நான் மேன்செஸ்டரில் சொன்னவற்றைப் பற்றி நினைவுபடுத்தினார். திரு. ஜூலியஸின் அறையிலிருந்த மேஜை தட்டிலிருந்து டாமி கண்டுபிடித்த ஒரு புகைப்படத்தைப் பற்றியும் சொன்னார்.'' இங்கு சற்று நிதானித்த வக்கீல் பின் தொடர்ந்தார்: ''அந்தப் புகைப்படம், ஒரு கலிபோர்னிய புகைப்படக்காரரின் பெயரையும் முகவரியையும் தாங்கியிருக்கிறதா அப்படினு கேட்டேன். இதுக்கு அவர் தந்த பதில்: 'அப்படியே தான், ஸார். நீங்க சரியா பின் தொடர்ந் திருக்கீங்க. இருக்கு.' பிறகு தொடர்ந்து அவர் நானறியாத எதையோப் பற்றி

சொல்லிக் கொண்டே போனார். அந்த புகைப்படம் - ஆனெட்டுடையது - இவரைக் காப்பாற்றிய அந்தப் பெண்...!''

''என்ன?''

''மிகச் சரியா - அவளே தான். ஒரு வித ஆர்வத்தோடு, அந்தப் புகைப்படத்தை என்ன பண்ணினீங்க'னு அந்த இளையப் பயலைக் கேட்டேன். அதை எங்கே பார்த்தாரோ அங்கேயே வெச்சுட்டதாச் சொன்னார்.'' இங்கு மறுபடியும் நிதானித்தார் வக்கீல். ''அதுதான் சரி, தெரியுமா - குறிப்பிடும் படியான நகர்த்தல், ஆங்..! அவருடைய மூளையை அவருக்கும் சரியா உபயோகப்படுத்தத் தெரியுது - *அந்த இளைய பய!* இதுக்காக அவரை நல்லா வாழ்த்தினேன். அந்தப் புகைப்படக் கண்டுபிடிப்பு - ஒரு தெய்வாதீனமான ஒன்று! இப்போ மேன்செஸ்டரில் இருக்கும் அந்தப் பொண்ணு ஒரு போலினு தெரிஞ்ச மறுகணமே எல்லாமும் மாற்றப்படு கின்றன. மாறுகின்றன! நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லாது, இளைய டாமியே, புத்திசாலித்தனமா அந்த மாற்றங்களைப் பார்த்திருக்கார். ஆனா, மிஸ் ப்ரூடன்ஸ் பற்றிய அவரது கணிப்பினை அவராலேயே நம்ப முடியலே. நான் நினைச்சேனோ - அவ உயிரோட இருக்கா'னு? - கேட்டார். கையிலிருக்கும் சாட்சிகள் அனைத்தையும் கவனமா ஆராய்ந்து, அப்படித்தான் இருக்கணும் என்பதற்குச் சாதகமா நிறைய வாய்ப்புகள் தட்டுப்படுதுனு சொன்னேன். அது எங்களை மறுபடியும் பிடித்திழுத்துத் - தந்திக்குக் கொண்டு வந்து நிறுத்திற்று.''

''ஆஹாங்..?''

''அந்தத் தந்தியுடைய ஒரிஜினல் வார்த்தைகளடங்கிய பிரதியினை உங்களிடம் கேட்டுப் பெறுமாறு நான் டாமிக்கு அறிவுறுத்தியிருந்தேன். டூபென்ஸ் அதைப் படித்துவிட்டு சுருட்டிக் கீழே கடாசியதும், தேடி வருவோரைத் தவறான பாதையில திசை திருப்பும் நோக்கத்தோடு அதில் ஒரிஜினலாயிருந்த சில வார்த்தைகள் அழித்து எக்ஸ்பிரஸ் வேகத்தில மாற்றப்பட்டிருப்பது சாத்தியமே அப்படினு எனக்குத் தோன்றியது.''

இதனைக் கார்ட்டர் ஏற்றுக் கொண்டு தலையசைத்தார். அவரது சட்டைப் பையிலிருந்த ஒரு தாளை வெளியிலெடுத்து உரக்கப் படித்தார்:

உடனே வா - அஸ்ட்லே கட்டிடம் - கேட்-ஹவுஸ் - கென்ட் பகுதி - அற்புதமான முன்னேற்றங்கள் - டாமி.

''ரொம்ப எளிதா செஞ்சு முடிச்சிருக்காங்க, அவனுங்க'' என்றார் சர் ஜேம்ஸ். ''ஆனால், ரொம்ப சாதுர்யம் - சாமர்த்தியம். ஓரிரு வார்த்தை களைத்தான் மாற்றணும் - செய்ய நினைச்சது முடிஞ்சுடும்! இதுல நம்ம ஆளுங்க, ஒரு முக்கியமான குறிப்பைக் கவனிக்காம விட்டுட்டாங்க.''

''அது என்ன?''

''மிஸ் டூபென்ஸ் சேரிங் சதுக்கத்துக்குக் காரை விடச் சொன்னதா அந்த சின்னப்பய சொன்ன குறிப்பு. அவ போன பகுதியின் பேரை இந்தப் பய தவறுதலா புரிஞ்சுக்கிட்டான்னு அவங்களுக்குள்ளேயே நிச்சயமா முடிவு பண்ணிக்கிட்டாங்க.''

''ஓ, அப்போ டாமி எங்கே இருக்கார்?''

''நான் தவறுதலாக் கணிக்காத பட்சத்துல - கேட்-ஜவுஸ், கென்ட் பகுதியில!''

ஆர்வம் மிக கார்ட்டர் வக்கீலைப் பார்த்தார். ''நீங்களும் ஏன் அங்கே போகலேனு எனக்கு ஆச்சரியமா இருக்கு, மிஸ்டர் பீல்?''

''ஆஹ்... நான் ஒரு கேஸ்ல இங்கே மண்டையைப் போட்டு உடைச்சுக்கிட்டிருக்கேன்!''

''அப்படியா? நீங்க உங்க விடுமுறையைக் கழிச்சுக்கிட்டிருக்கீங்க'னு நினைச்சேன்...?!''

''ஓஹ்... அது முடியலே. ஒரு கேஸை நான் தயார் பண்ணிக்கிட்டு இருக்கேன் என்பது தான் சரி. ஆங்... அந்த நியூ யார்க் ஆள் பற்றி எனக்கு ஏதாவது சேதி?''

''அப்படியேதும் இல்லேனு நினைக்கிறேன். அவர் உண்மையிலே யார்னு கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா, என்ன?''

''ஓ... எனக்கு அவர் யார்னு தெரியும்'' என்றார் சர் ஜேம்ஸ், படு சுலபமாய்! ''இன்னும் என்னால நிரூபிக்க முடியலே - ஆனா எனக்குத் தெரியும்.''

மற்ற இருவரும் இதற்குக் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. அது, வெறும் மூச்சுக் காற்றினை விரயம் செய்யும் சமாச்சாரமாய் தான் முடியும் என்று இருவருக்குமே தெரியும்!

''ஆனா எனக்கு எது விளங்கவேயில்லைனா..'' பிரதமர் திடுமென்று பேசினார்: ''... அந்தப் புகைப்படம் எப்படி, எதுக்கு ஜூலியஸ் மேஜை டிராயர்ல வந்தது?''

''ஏன் வரணும்? அங்கேயிருந்து போகாமலே அது இருந்திருந்தா - - -'', வக்கீல் மிருதுவாய் ஆலோசித்தார்.

''ஆனா அந்த பொய் இன்ஸ்பெக்டர்? இன்ஸ்பெக்டர் ப்ரௌன்?''

''ஆஹ்..'' என்றார் சர் ஜேம்ஸ், சிந்தனையாய். உடனே எழுந்து விட்டார். ''உங்களை ரொம்ப நேரம் காக்க வைக்கக் கூடாது. நாட்டின் சமாச்சாரங்கள் பற்றிய உங்கள் பேச்சு தொடரட்டும். நான் போகணும் - என் கேஸுக்கு!''

மேன்செஸ்டரிலிருந்து இரண்டு நாட்கள் கழித்துத் திரும்பினார், ஜூலியஸ். டாமி எழுதியிருந்த ஒரு சிறு குறிப்பு அவரது மேஜையிலிருந்தது:

டியர் Julius,

என் பொறுமையை நான் இழந்து ஆடிய ஆட்டத்திற்கு மன்னிக்கவும். உங்களை இனி பார்க்கவே முடியாமல் போய்விடும் பட்சத்தில் - Good-bye. Argentine-ல் எனக்கு ஒரு வேலை கிடைத்திருக்கிறது - அதை நான் ஒப்புக் கொண்டு விடலாம்.

தங்கள்,
Tommy Ford

ஜூலியஸின் முகத்தில் விளக்கவொண்ணா ஒரு சிரிப்பு சில கணங்கள் நிலைத்தது. அக்குறிப்பினைக் குப்பைக் கூடைக்கு எறிந்தார் அவர். *''வடிகட்டின முட்டாள்!''* - அவர் முணுமுணுத்தார்.

அத்தியாயம் - 23

நேரத்தோடு ஓர் ஓட்டம்

சர் ஜேம்ஸுக்கு போன் பேசிய பிறகு, தெற்குக் குடியிருப்புக்குச் செல்ல வேண்டிய வேலையை வைத்துக் கொண்டான் டாமி. வழக்கமான பணியை ஆல்பர்ட் பயல் செய்துக் கொண்டிருப்பதைக் கவனித்த இவன், அதிக பிரயத்தனப்படத் தேவையில்லாமல், 'டூபென்ஸுக்கு வேண்டப்பட்டவன்..' என்ற ஒரு வார்த்தையிலேயே தேவையான அங்கீகாரத்தினைப் பயலிடம் சம்பாதித்தான். ஆல்பர்ட் உடனே முன் வந்து விட்டான்.

''பிறகு இங்கே எல்லாமே ரொம்ப அமைதியாக போயிக்கிட்டிருக்கு, ஸார்'' என்றான், இதைச் சொல்ல வேண்டும் என்று இத்தனை நாள் தேக்கி வைத்தவனைப் போல்! ''டூபென்ஸ் அம்மா நல்லாயிருக்காங்க இல்லே, ஸார்?''

''அதாண்டா பிரச்சினையே, ஆல்பர்ட். அவளைக் காணலைடா.''

''அத்த முரட்டுப் பசங்க தூக்கிட்டுப் போயிடலையே?''

''அவனுங்க தான்.''

''ஓ! வெளியே தெரியாம இருக்கும் அண்டர்-வேர்ல்ட் தாதா'னு சொல்றாங்களே, அவனுங்களை!''

''நோ. அண்டரும் கிடையாது, அப்பரும் கிடையாது. எல்லாம் இந்த வேர்ல்ட்'ல... கண்ணுக்கெதிரே நடக்குதுடா.''

''அப்படி நினைக்காதீங்க, ஸார். சினிமாவுல பார்க்கலே, நீங்க? பூமிக்கடியில ஒரு ரெஸ்டாரண்ட் இருக்கும் ஸார். அங்கே பொம்பளைங்க ஆடும். சிகரெட் புகை நிறைய இருக்கும். டூபென்ஸ் அம்மாவைக் கொண்டு போய் அங்கே ஆட விட்டிருப்பாங்க'னு நினைக்கிறீங்களா, ஸார்?''

''அப்படியிருக்காது. அதை விடு. சொல்லு... உனக்கு ஏதாவது அத்தை, பாட்டி, பெரியம்மா... இப்படி உறவுக்கார வயசான பொம்பிளைங்க... இன்னிக்கோ நாளைக்கோனு இழுத்துக்கிட்டிருக்காங்களா?''

ஆல்பர்ட்டின் முகச் சாயலில் செல்லமாய் ஒரு பூரிப்பு படர்ந்தது. ''இருக்காங்க, ஸார்'' என்றான் விறுவிறுப்பாய். ''கிராமத்துல, என் ஏழை

அத்தை. இழுத்துக்கிட்டு இருக்காங்க. என் மடியில மூச்சை விடறேன்'னு என்னை வா வானு கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்க.''

டாமி 'இதுதான்...' என்பது போல தலையசைத்துக் கொண்டான்.

''இதையே ஒரு சாக்கா சொல்ல வேண்டிய இடத்துல சொல்லிட்டு, பர்மிஷன் வாங்கிக் கிளம்பி, ஒரு மணி நேர அவகாசத்துல நீ என்னை சேரிங் சதுக்கத்துல சந்திக்க முடியுமா?''

''நிச்சயமா நான் அங்கே இருப்பேன், ஸார். நீங்க என்னை எதிர்பார்க்கலாம்.''

டாமி முடிவு கட்டியிருந்தது போலவே, இவனுக்கு ஒரு சரியான கூட்டாளியாய் அமைந்தான் ஆல்பர்ட். கேட் - ஹவுஸ் பகுதியிலிருந்த ஒரு விடுதியில் இருவரும் தங்க இடம் வாங்கிக் கொண்டனர். டாமிக்குத் தேவையானத் தகவல்களைச் சேகரிக்க வேண்டிய பணி ஆல்பர்ட்டின் தலையில் விடிந்தது. இதில் அவனுக்கு யாதொரு கஷ்டமும் இருக்கவில்லை!

அஸ்ட்லே கட்டிடம் டாக்டர் ஆடம்ஸ் என்பவருடைய சொத்து. இப்போதெல்லாம் மருத்துவப் பயிற்சியில் டாக்டர் ஈடுபடுவதில்லை. ஓய்வு பெற்று விட்டார். இது நிலச் சொந்தக்காரரின் நம்பிக்கை. ஆனால் தனிப்பட்ட முறையில் நோயாளிகள் வந்தால் ஏற்றுக் கொண்டு கவனிக்கிறார் - இதைச் சொல்லும்போது அந்த நிலச் சொந்தக்காரர் விஷமமாய் முன் நெற்றியைத் தட்டியபடி, 'தலைவலி கிராக்கிங்க! புரியுதா!' என்றார். டாக்டர் கிராமத்தில் மிகப் பிரபலமான ஒரு முகம். நடக்கும் எல்லா விழாக்களுக்கும் விளையாட்டுகளுக்கும் பணம் தந்து நட்புறவாடுபவர். 'நாடிப் பழக மிக இனிமையான ஜென்டில்மேன்'! இங்கு வெகு நாட்கள் இருக்கிறாரா? ஓ.. பத்து வருடங்கள் போல இருக்கலாம் - ஏன், இன்னும் கூடுதலாய் கூட இருக்கலாம். ஆய்வும் நன்கு அறிந்த அறிவியல் மேதாவி. பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் இன்னும் சிலரும் டவுனிலிருந்து இவரைக் காண்பதற்காக வந்து போகிறார்கள். எப்படியோ, அது ஓர் உல்லாசமான வீடு, எப்போதும் பார்வையாளர்கள்.

இத்தனை விஸ்தாரமான அறிமுகம் இருந்த போதிலும், டாமி சந்தேகமாய் உணர்ந்தான். இத்தனை மூளையும் பிரபலமும் பிராபல்யமும் கொண்ட மனிதன் நிஜத்தில் ஓர் ஆபத்தான க்ரிமினலாக இருக்கக் கூடுமா? இவருடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாய் அன்றோ இருக்கின்றது...? கள்ளங்கபடம் பொதிந்த வஞ்சகம் எங்குமே காணோமே...? இப்படித் தெரிவதெல்லாம் ஒரு மாயையாயிருந்து விட்டால்...? மாயையற்ற நிஜம் - அது வேறுவித அபாயமாயிருந்து விட்டால்...? நினைக்கும் போதே உறைந்துப் போனான் டாமி.

அப்போது, டாக்டரைக் காண வந்து போகும் தனிப்பட்ட நோயாளிகளின் பக்கம் இவன் நினைவு சுழன்றது - 'தலைவலி கிராக்கிங்க' என்றார் பிறகு, 'புரியுதா' என்றார். ஏன்? அப்படி வந்து செல்பவர்களில், டூபென்ஸை விவரித்து, ஒரு இளம் பெண் வந்து போகிறாளா என்று விசாரித்தான். ஆனால் வந்து போகும் நோயாளிகள் பற்றியெல்லாம் கூர்மையாய் யாரும் கவனிப்பதாய் படவில்லை. உள்ளே என்ன நடக்கிறது என்றெல்லாம் கவனிப்பது மிகக் குறைவாயிருந்தது. பாதுகாப்பாய் ஆனெட் பற்றி தரப்பட்ட குறிப்புகளுக்கும் எவ்வித துப்பும் வரவில்லை.

அஸ்ட்லே கட்டிடம், கண்ணுறுத்தாத பாந்தமான சிகப்பு நிறத்தில் நின்ற ஓர் அற்புத அரண்மனை. சாலையிலிருந்து பார்த்தால் மலையே தெரியாத அளவுக்கு சிறப்பாய் மறைத்து நின்றன, மலையின் முன்னிருந்த பெரிய நிலப்பரப்பில் பரவிக் கிடந்த ஏராளமான பெரும் மரங்கள்!

முதல் நாள் மாலைப் பொழுதில், ஆல்பர்ட்டோடு சேர்ந்துக் கொண்டு, கட்டிடத்தின் வெளிப்புற நிலப்பகுதி முழுவதையும் மேய்ந்தான் டாமி. ஆல்பர்ட் வற்புறுத்தியதன் காரணமாக, இருவரும், வயிறு தேய வீட்டைச் சுற்றி ஊர்ந்து வந்து பாம்பாய் இழுத்தபடி தேடினர். இது, நின்ற நிலையில் நடந்திருந்தால் ஏற்பட்டிருக்கவல்ல ஓசையை விட பன்மடங்கு ஓசையை உண்டு பண்ணி வைத்தது! இந்த அத்தனை தற்காப்புகளும் தேவையற்றவை யாயின. இரவு விழ ஆரம்பித்ததும் வேட்டை நாயை அவிழ்த்து விடுவது... அல்லது புது மனித நடமாட்டம் இடம்பெறுவது... இப்படியெல்லாம் எதிர்பார்த்திருந்தனர். ம்ம். ஒருவரும் இரவில் உள்ளே வந்து போகவில்லை. எவ்வித இடையூறும் தராது வளர்ந்திருந்த ஒரு தோட்டம் மட்டும்தான் குறித்துக் கொள்ளும்படி பிரதானமாயிருந்தது.

சாப்பாட்டு அறையிலிருந்த திரைச் சீலைகள் விலகியிருந்தன. அங்கிருந்த சாப்பாட்டு மேஜையைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. பார்க்க, சாதாரண இனிய அளவளாய்த் தானிருந்தது. திறந்திருந்த ஜன்னலின் வழியாக, இரவுக் காற்று, உள்ளே பேசப்பட்ட வசனங்களில் சிலவற்றை மட்டும் விட்டு விட்டுக் கொண்டு வந்து வெளியே போட்டது. அது, காரசாரமாய் விவாதிக்கப்பட்ட கிராமத்து கிரிக்கெட்!

நிச்சயமற்ற நிலைமை மனதுக்குள் கூடக்கூட ஓர் இறுக்கமான ஐஸ் கட்டிக் கை டாமியை மீண்டும் நெறித்தது. இப்போது எப்படி இருக்கிறார்களோ, இதற்கு எதிர்மாறாய் இந்தக் கூட்டத்தினரை நினைத்துப் பார்ப்பது, சாத்தியமாகவேத் தோன்றவில்லை. மறுபடியும் இன்னொரு முறையும் இவன் முட்டாளாக்கப்பட்டு விட்டானா? உள்ளே, நடு நாயகமாய், இந்தக் கூட்டத்தின் தலைமை போல அமர்ந்திருப்பவர், மிகச் சாதாரணப்

பிரஜையாகவும், பிரத்யேகமாய் வெளிப்படும் உண்மை பிரதிபலிப்போடும் தெரிகிறார்.

அன்று இரவு டாமிக்குத் தூக்கமே சரியாக அமையவில்லை. மறுநாள் காலையில், சலிப்பே அடைந்திராத இந்த ஆல்பர்ட், காய்கறிக்காரப் பையனிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்த கூட்டணியின் வாயிலாக, அவனையும், அங்கிருந்த சமையல்காரியையும் வசப்படுத்திக் கொண்டான். பின்பு டாமியோடு தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பிய பயல், சமையல்காரி, 'கொள்ளைக் கூட்டத்தின் கைகாரி' என்று கண்டறிந்துச் சொன்னான். பயலின் கற்பனை வீச்சின் துரிதத்தை விலக்கினான் டாமி! எப்படிச் சொல்கிறாய் என்று கேட்டதற்கு அவனுடைய வார்த்தைகளை ஸ்திரப்படுத்தி எந்த சாட்சியும் தர இயலாத ஆல்பர்ட், 'அவ... நார்மல் கிடையாது. எல்லோரையும் போல சாதாரணமாத் தெரியலே' என்றான். 'ஒரு நோட்டத்திலே அது நமக்குத் தெரிஞ்சுடுது!'

ஆனால் மறுநாள் நம்பிக்கை தரும் முதல் சேதியைச் சுமந்து வந்தான் ஆல்பர்ட். அந்த வீட்டில் ஒரு பிரெஞ்சு இளைய நங்கை இருக்கிறாள். இவனுக்குள் இருந்த சந்தேகங்கள் அத்தனையையும் ஓரங்கட்டினான் டாமி. இவனுக்குள் உருவாகியிருந்த கோட்பாட்டுக்கு... இதோ, அங்கீகாரம்! ஆனால் இருக்கும் அவகாசம் கழுத்தை நெறித்தது. இன்று 27. அதிகம் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் **Labour** நாள், 29. இது குறித்து நாட்டுக்குள் விதைக்கப்படும் கலகங்களும் குழப்பங்களும் உச்சந்தொட ஆரம்பித் திருந்தன. அனைத்து சஞ்சிகைகளும் 29 ஆம் தேதி குறித்து தோரணம் கட்டியிருந்தன. அரசாங்கம் வாயைத் திறக்கவில்லை. அதற்குத் தெரியும்... ஆகவே தயாராயிருந்தது. அரசாங்கம் என்பது ஒருவரின் பார்வை மட்டுமல்லவே. தீர்க்கதரிசனப் பார்வை கொண்டவர்கள், எழுந்திருக்க முடியாத அளவுக்கு இங்கிலாந்தின் மீது விழப் போகிற பேரிடி என... அவர்கள் நெஞ்சு முழுக்க நேசிக்கும் நாட்டின் எதிர்காலத்தைக் கணித்திருந்தனர். நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஜெனரல் ஸ்டிரைக்கினால் பசியும் பட்டினியும் பஞ்சமும் எப்படித் தலை விரித்தாடப் போகின்றன என கதறியிருந்தனர் அவர்கள்.

கார்ட்டருக்கு மனதுக்குள் நன்றி தெரிவித்தபடி, இப்போதைய சரியான அரசியல் நிலைமை என்ன என்பதை ஏறத்தாழ ஸ்படிக சுத்தமாக தான் அறிந்து விட்டதாகவே எண்ணினான், டாமி. நாட்டின் ஆரோக்கியமான தலைவிதியையே மாற்றிப் போடவல்ல அந்த ஆவணத்தாள்கள் மிஸ்டர் ப்ரௌனின் கையில் இருக்கும் வரையில், பொதுமக்களின் கருத்தானது,

உழைப்பாளிக் கட்சியின் போராளிகளுக்கும் மற்றும் அவர்தம் புரட்சிகளின் பக்கமாகவே தான் சாயும். தன் கையில் விசுவாசமான ராணுவப் படைகள், காவல் துறை சக்தி ஆகியவற்றை வைத்திருக்கும் அரசாங்கம், முன்னே நிற்கும் மாபெரும் புரட்சிக்காரர்களின் படையினை, எண்ணிலா இழப்புகளுக்கு நடுவில் வெற்றி கொண்டாலும் கொள்ளலாம் - இது சொல்வதற்கில்லை. டாமி, இன்னுமொரு, அனுகூலமான கனவினை ருசித்தான். அது - மிஸ்டர் ப்ரௌனின் முகத்திரையினைக் கிழிப்பது! முகத்திரை அகற்றப்பட்டு ப்ரௌன் கையகப்படுத்தப்படும் நொடியில், பயமுறுத்திக் கொண்டிருக்கும் அந்த இழிவான கட்டமைப்பு, முழுதுமாய், கண நேரத்தில் இடிந்து விழுந்து நொறுங்கித் தவிடு பொடியாகும் என கணித்தான் இவன். விளங்கிக் கொள்ள முடியாமல் - யார் யார் என்று ஊகிக்க இடம் கொடுத்தபடி குழப்பிக் கொண்டேயிருக்கும், அந்த *ஒரே* ஒரு மனிதன் கையிலிருக்கும் நூலில் தான், இக்கொடூரக் கட்டமைப்பே வாழ்ந்துக் கொண்டிருக்கின்றது. அது அறும் கணத்தில், தப்பிப்பற்ற நிலைமை அக் கூட்டத்தின் மீது குவிந்து விடும் என்று கணக்கிட்டான் டாமி; இவர்கள் கைகளில் மட்டுமே அந்த ப்ரௌன் கிடத்தப்படும் அந்த உச்சகட்டத்தில், கடைசி நேர பேரத்துக்குக் கூட வழி பிறக்கலாம் என்றும் நிச்சயமாய் கருதினான்.

'இது ஒரு தனி மனித சாம்ராஜ்ஜியம்' - தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் டாமி. 'செய்யத் தகுந்த... செய்ய பாக்கியுள்ள ஒரே ஒரு வேலை - அந்த தனி மனிதனைக் கையகப்படுத்துவது.'

இவன் ஊகங்களின் மீது உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கையின் விளைவாகத்தான், அந்த உறையைக் கூட, திரு கார்ட்டர் திறந்துப் பார்க்கக் கூடாது என்று டாமி வேண்டியிருக்கிறான்! அந்த நகல் ஆவணம் தான் டாமியின் நொறுங்குத் தீனியே! அதன் மீது நடத்தியிருக்கும் துணிவான நடவடிக்கைகளையும் மேலும் அதன் மீது இவன் நினைத்துத் திட்டம் போடும் துணிவான ஊகங்களையும் அவ்வப்போது எண்ணியெண்ணி திகைத்து பிரமித்து நிற்பதே இவனுக்கு ஓர் அலாதி! எத்தனையோ குற்றவியல் ஜாம்பவான்களும் துப்பறியும் மேதைகளும் கண்டு கொள்ள முடியாத ஆபத்தான உளவுகளைத் தனி மனிதனாக இவன் எப்படிக் கொண்டு வந்து கொட்டியிருக்கின்றான்..?! இத்தனையிருந்தும், கொண்டதை அடையாது அடங்காத இவனுடைய தாகம், அடுத்த இவனது திட்டத்தைச் செயல்படுத்தத் துரிதமானது.

அன்றைய இருளத் தொடங்கிய மாலை வேளையில், இவனும் ஆல்பர்ட்டும், அஸ்ட்லே கட்டிட வளாகத்தின் சுற்று வட்டார திறந்த வெளிப்பகுதியை, மற்றுமொரு முறை ஊடுருவினார்கள். டாமியின்

விருப்பமென்னவோ, எப்படியாவது ஒரு வழியில் அந்த வீட்டுக்குள்ளேயே நுழைந்து விடும் அனுமதியை சம்பாதிப்பதில் தானிருந்தது. இந்த இலக்கினையும் சுமந்து கொண்டு, வீடு அமைந்திருந்த அந்தப் பெரிய பகுதியை இவர்கள் நெருங்கியபோது, யாரோ தொண்டையை திடுமெனப் பிடித்து நெறித்து விட்டதைப் போல ஒரு மூச்சடைப்பை வெளியிட்டான் டாமி.

இங்கிருந்த இரண்டாம் தளத்தின் ஜன்னலில், ஜன்னலுக்கும் அங்கிருந்த விளக்குகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் யாரோ ஒருவர் நின்றிருக்க, அவருடைய நிழலின் கறுப்பு விளிம்பு ஜன்னல் திரையில் படிந்து பிம்பமாய் தெரிந்தபடியிருந்தது. அது, டாமி எங்கு எந்த நிலைமையிலும் கண்டுபிடித்து விடவல்ல நிழல் பிம்பம்! *ரூபென்ஸ் அந்த வீட்டிலிருக்கிறாள்!*

ஆல்பர்ட்டின் தோளினைக் கடிப்பது போல் பிடித்தான் டாமி, ''இங்கேயே இரு! நான் பாட ஆரம்பிச்சதும், அதோ,அந்த ஜன்னலை... வெச்ச கண் எடுக்காம கவனி.''

'நானொரு சிப்பாய்...
குதூகலமான பிரிட்டன் சிப்பாய்...
ஆஹ்...!
என்னைப் பார்த்தா தெரியலைனா,
என் காலைப் பாரு...!
ஷூ!
ராணுவ ஷூ!
ஆங்... தெரியுதா?
நானொரு சிப்பாய்...
குதூகலமான பிரிட்டன் சிப்பாய்...

ரூபென்ஸ் மருத்துவமனையொன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது, இந்தப் பாடல், கிராமஃபோன் இசைத்தட்டில் அத்தனை பிரசித்தம். இதைச் [illegible]ட்டு, அவளுடைய சாதுர்யத்தால் வந்திருப்பது யாரென்று புத்திசாலித்தனமாக அவள் முடிவெடுத்துக் கொள்வாள் என்பதைத் தவிர இவனுக்கு வேறெந்த எதிர்பார்ப்பும் கிடையாது. டாமியின் குரலில் ஸ்ருதிக்கான துளி முகவரி கிடையாது. ஆனால், ஓஹ்... இவனுடைய 'லங் பவர்' ... அது அசாத்தியம். பாடுவதாய் இவன் ஏற்படுத்திய சத்தம் அபரிமிதம்!

தற்சமயம், அச்சு அசலாக துளி குற்றம் சொல்ல முடியாத ஒரு பட்லரும், அவனுடன் கூட, அதே அளவு அச்சு அசலாக துளியும் குற்றமற்ற ஒரு பணியாளும், வாசல் நிலைக் கதவுப் பகுதியிலிருந்து வெளியே அனுப்பப்பட்டனர். பட்லர், இவனிடம் கெஞ்சிக் கூத்தாடி வெளியேற வற்புறுத்தினான். டாமி நிறுத்துவதாயில்லை... நகருவதாயுமில்லை... பட்லரை

வாஞ்சையாய், 'கொடுவா மீசை மாமு..' என்று விளித்தபடி பாடலில் 'சிப்பாய்' என்று வந்த வார்த்தைகளை இந்த மாமு போட்டு நிரப்பி, கலாட்டா பண்ணிக் கொண்டிருந்தான். பணியாள், அவனுடைய ஒரு கையிலும் , பட்லர் அவனுடைய ஒரு கையிலுமாக இவனைத் தூக்கிக் கொண்டனர். வெளவாலாய் தொங்கிய டாமியை கார் பாதை நெடுகிலும் சிரமமாய் தூக்கிக் கொண்டு மதில் சுவர் கேட் வரை சுமந்துப் போனார்கள். மறுபடியும் அனுமதியின்றி உள்ளே நுழைந்தால் போலீஸை அழைக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தான் பட்லர். நடந்தவை - *மிக அழகாக* நடத்தப்பட்டு முடிந்தன. அமைதியாக - தெளிவாக - குழப்பமற்று - தேவையான நடிப்புப் பங்களிப்போடு! இங்கு நடந்தவற்றை யாராவது பார்த்திருந்தால், பட்லர், ஒரு நிஜ பட்லரே என்று சத்தியம் பண்ணியிருப்பார்கள் - அதேபோல, அந்தப் பணியாளனும் போக்கிடமற்ற சாட்சாத் நிஜப் பணியாளனே என்றும் தொண்டையைப் பிடித்துக் கொண்டு இறைவனை சாட்சி வைத்துக் கூடுதலாக இன்னொரு சத்தியமும் பண்ணியிருப்பார்கள் - ஆனால், டாமிக்கல்லவா தெரியும் அந்தப் பணியாள் *விட்டிங்டன்* என்று!

டாமி அப்படியே விடுதிக்கு திரும்பி விட்டு ஆல்பர்ட்டுக்காகக் காத்திருந்தான். ஒரு வழியாய், அந்த சிறப்பான கூட்டாளியும் வந்து சேர்ந்தான்!

''சொல்லு, சொல்லு'' என்று ஆர்வமாய்க் கதறினான் டாமி.

''ரொம்பச் சரி, ஸார். உங்களை அவனுங்க தூக்கிக்கிட்டு வெளியே கொண்டுபோகும் போது, ஜன்னக் கதவு திறந்தது. அப்படியே அதன் வழியா ஏதோ ஒண்ணு தூக்கி வீசப்பட்டது. அதை நான் ஜாக்கிரதையா வெளியி லிருந்து பொறுக்கிக்கிட்டேன்.'' ஒரு கசங்கியத் தாளினை டாமிக்கு அளித்தான் பொடிப்பயல். ''இத ஒரு பேப்பர் வெயிட்'ல சுற்றி வந்தது.''

அந்தத் தாளில் மூன்றே வார்த்தைகள் கிறுக்கலாய் இருந்தன: **'நாளை - இதே சமயம்.'**

''வாவ்'' என்றான் டாமி. ''நாம சரியான பாதையில தான் நகர்ந்துக்கிட்டு இருக்கோம்..''

''நானும் ஒரு சேதியை சின்னத் தாள்ல எழுதினேன்...'' - இப்படிச் சொன்ன ஆல்பர்ட்டை ஆபத்தாகவும் அவதியாகவும் டாமி திரும்பிப் பார்க்க, பொடியன் வெற்றி முழக்கமாய் போய்க் கொண்டிருந்தான்: ''அதை ஒரு கல்'ல சுற்றினேன். ஜன்னலுக்குக் குறி வெச்சேன். வீசினேன்'' - மூச்சிழுக்காமல் பேசி முடித்தான்.

முகம் சுளித்தான் டாமி. ''குழப்பிடாதேடா! உன் சுறுசுறுப்பு நமக்கு எதிரா போயிடும்டா, சாமி. அதுல என்ன எழுதினே? நாம எங்கே இருக்கோம் எனும் முகவரியையா?''

''ஆமாம்'' - பெருமிதம் ஆல்பர்ட்டிடம் பொங்கியது.

''வேற வினையே வேண்டாம்!''

''இன்னும் கூட உண்டு! விடுதி எங்கேயிருக்கு - எப்படி இங்கே வருவது - தப்பிச்சுட்டா உடனடியா இங்கே ஓடி வந்துடணும் - நாங்க காத்திருப்போம்...!''

''ஓஃப்... அது ஜன்னலுக்குள்ளே போச்சா?''

''இல்லேனு நினைக்கிறேன்.''

''மூணு வார்த்தைக்கு முப்பது பக்கம் எழுதியிருக்கேடா, நீ!'' - வானமே இடிந்து தலையில் விழுந்தாற் போலானான் டாமி.

முகம் வதங்கிப் போன சிறுவனைப் பார்த்து, ''சரி விட்டுத் தொலை. இனிமே இப்படி எதையும் பண்ணிடாதே'' - என்ற டாமி ஊக்கமாய் பேசலானான்: ''எதுவும் பாதகமா ஆகலே. அந்த பட்லர் இருக்கான் பாரு... அவன் என்னோட பழைய நண்பன். யார் நான் என்பது அவனுக்கு நிச்சயம் அடையாளம் தெரிஞ்சிருக்கும் - பந்தயம் கட்டறேன் - ஆனா அதை அவன் வெளிக்காட்டிக்கலே. சந்தேகம் மனசுல இருக்கு என்பதை வெளியே காட்டாம இயங்க வேண்டியது அவங்க தேவை.''

இரவு நேரத்தின் மடியில் தஞ்சமடையும்போது பெருமிதமான மனோ நிலையில் படுத்தான் டாமி. அடுத்த நாள் மாலை சாயும் பொழுதுக்கான திட்டங்களை விளாவாரியாக முடிவு செய்துக் கொண்டான். ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரையில் அஸ்லே கட்டிட வாசிகள் நிச்சயமாய் இவன் வழியே குறுக்கே வர மாட்டார்கள் என்று தீர்மானமாயிருந்தான் டாமி. அந்தக் கட்டம் வந்த பிறகே, அவர்கள் அனைவருக்கும், ஒரு மாபெரும் ஆச்சரியத்தை இந்த இளைஞன் தருவான்!

பனிரெண்டு மணியிருக்கும்... அப்போது இவனுடைய அமைதி முழுவதும் ஆபத்தாய் உலுக்கப்பட்டது... யாரோ ஒருவன், இவன் அவசியம் வந்தே ஆக வேண்டும் என்று 'பாரில்' அடம் பிடிப்பதாக தகவல் வந்தது. இந்தக் கோரிக்கையை முன் வைத்த அங்கு காத்திருந்தவன், பார்க்க ரௌடி போல மூர்க்கனாய்த் தோன்றினான். தோட்டக்காரன் போல. உடம்பெங்கும் அங்குமிங்குமாய் காய்ந்த களிமண் இன்னமும் ஒட்டிக் கிடந்தது.

''யாரப்பா நீ? என்ன விஷயம்?'' - கேட்டான் டாமி.

''இது உங்களுக்கானு பாருங்க?'' என்றவன் அசுத்தமாய் போயிருந்த ஒரு துண்டுச் சீட்டினைப் பிடித்திருந்தான். அதில் எழுதப்பட்டிருந்தது: **'அஸ்ட்லே கட்டிடத்தின் வெகு அருகிலிருக்கும் விடுதியில் தங்கியுள்ள ஜென்டில் மேனிடம் இதைக் கொண்டு போய் கொடு. சன்மானமாய் அவர் பத்து ஷில்லிங் தருவார்.'**

கையெழுத்து டூபென்ஸுடையது. ஏதோ ஒரு பொய்ப் பெயரில் அருகிலிருக்கும் விடுதியில் தான் நான் தங்கியிருக்க வேண்டும் என்று மிக சாதுர்யமாய் அவள் எடுத்திருந்த இம்முடிவினைப் பாராட்டிக் கொண்டான் இவன். அதைப் பிடுங்கப் போனான்.

உடனே பின்னுக்கு இழுத்துக் கொண்ட வந்தவன், ''ம்ம்'' என்றான்.

''உண்டுப்பா'' என்று அவசரமாய் பத்து ஷில்லிங்கை அவனுள் டாமி திணிக்க, அந்தத் துண்டுச் சீட்டினை மறு பேச்சு பேசாது அளித்தான் அவன்.

அதை பிரித்தான் டாமி.

டியர் Tommy,

நேற்று இரவு வந்தது நீதான்'னு எனக்குத் தெரியும்டா! எனக்காக இவனுங்க இங்கே காத்திருப்பானுங்க. இன்னிக்குக் காலையில எங்களை இவனுங்க எடுத்துக்கிட்டுப் போகப் போறானுங்க. இடம் - ஏதோ காதுல விழுந்தது - வேல்ஸ்... ஹோலி-ஹெட் - இப்படி. நீ எப்படியெல்லாம் தப்பிச்சேனு ஆனெட் சொன்னா, அதே வெறியோட இயங்கு.

உன்

Twopence.

காகிதம் வழி வந்துள்ள இந்த அபூர்வ நிரூபணத்தைப் படித்து முடிக்கு முன்னரே, ஆல்பர்ட்டுக்காக அலறினான் டாமி. ''மூட்டையைக் கட்டு! நாம கிளம்பறோம், மேன்!''

''யெஸ், ஸார்'' - ஆல்பர்ட்டின் காலடியோசை மாடிப்படிகளில் விரைவது கேட்டது.

'ஹோலி - ஹெட்? அப்படித் தானா? சொன்ன இதே பகுதியைத் தான் அவ நிஜமா உணர்த்தியிருப்பாளா? ம்?' புதிர்ப் போடப்பட்டவனாய் நின்றான் டாமி. மறுபடியும் ஒரு முறை அமைதியாய்ப் படித்தான்.

திடீரென்று, தரைத் தளத்திலிருந்து மேல் தளம் நோக்கி, மற்றுமோர் அவசரக் கட்டளைக் குண்டாய் பாய்ந்தது: ''ஆல்பர்ட்! நான் ஒரு வடிகட்டின முட்டாள்!''

''யெஸ், ஸார்!''

''எதையும் நீ மூட்டை கட்டாதே!''

''யெஸ், ஸார்.''

கசங்கி வந்திருந்தக் குறிப்புக் காகிதத்தை ஆழ்ந்த சிந்தனையோடு நேர் செய்துக் கொண்டிருந்தான் டாமி. 'ஆம்... நான் ஒரு வ-டி-க-ட்-டி-ன முட்டாள்தான்' - தனக்குள்ளேயேச் சொல்லிக் கொண்டான். 'ஆனா, இதே போலத்தான் அந்த இன்னொருத்தனும்! ஆஹ்... அப்புறம், கடைசியா, இப்போ, அந்த இன்னொரு வ-டி-க-ட்-டி-ன முட்டாள் யார்னு எனக்குத் தெரியும்!'

அத்தியாயம் - 24

கைகொடுத்த ஜூலியஸ்

தனது பதுங்குமிடத்தில் வசதியாய் சாய்ந்து அமர்ந்துக் கொண்டிருந்த க்ரெமெனின், தன்னுடைய காரியதரிசிக்கு, அட்சர சுத்தமான ரஷ்ய மொழியில் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

தற்சமயம் காரியதரிசியின் கைக்கு அருகேயிருந்த தொலைபேசி சிணுங்கியது. ரிஸீவரை அவன் எடுத்தான். ஓரிரு நிமிடங்கள் பேசினான். பிறகு தனது எஜமானன் பக்கமாய்த் திரும்பினான். சொன்னான்: ''கீழே யாரோ உங்களைக் கேட்டுக்கிட்டு வந்திருக்காங்க.''

''யாரது?''

''தன்னோட பெயர் திரு. ஜூலியஸ்'னு அவன் தந்திருக்கார்.''

''ஓ... ஜூலியஸ்...'' - சிந்தனையாய் அதையே திருப்பிச் சொன்னான் க்ரெமெனின். ''இந்தப் பேரை நான் முன்னமேயே கேட்டிருக்கேன்.''

''இவரோட அப்பா, அமெரிக்காவின் இரும்பு மனிதர்களில் ஒருவர்'' - அனைத்தையும் பற்றிச் செய்திகளைச் சேகரிப்பது ஒன்றே வேலையாய் இயங்க வேண்டிய காரியதரிசி இப்படி விளக்கினான். ''வந்திருக்கும் இளைஞன், பல தலைமுறையா கோடானு கோடீஸ்வரரா இருப்பவர்.''

பாராட்டுத் தெரிவிக்கும் விதத்தில் அவனுடைய கண்கள் குறுகிப் புன்முறுவின. ''நீ முதல்ல கீழே போய் அவரைப் பார்த்துட்டு வா, இவான். அவருக்கு என்ன வேணும்னு கவனி.''

கட்டுப்பட்டான் காரியதரிசி. வெளியேறிய தனக்குப் பின்னால் ஓசையெழுப்பாது கதவினைச் சாத்தினான். சில நிமிடங்களுக்குப் பிறகு திரும்பினான். ''வந்த வேலை என்னனு சொல்ல மறுத்துட்டார். விஷயம், முழுக்கவும் தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமானது என்று ரகசியமாய்ச் சொன்னார். உங்களைப் பார்த்தாகணும் என்றார்.''

''பல தலைமுறையா கோடானு கோடீஸ்வரர்'' - முணுமுணுத்தான் க்ரெமெனின். ''மேலே கூட்டிட்டு வா, டியர் இவான்.''

இன்னொரு முறை அறையை விட்டு வெளியேறிய காரியதரிசி, ஜூலியஸைக் கண்காணித்தபடி அழைத்து வந்தான்.

''நீங்கதானே மிஸ்டர் க்ரெமெனின்?'' - திடுதிப்பென்று கேட்டார் ஜூலியஸ்.

தன்னுடைய வெள்ளையான விஷக் கண்களால் வந்தவனைக் கவனமாய் ஊடுருவிப் படித்த அந்த ரஷ்யன், தலை லேசாய் வளைத்து வணங்கி ஆம் என்பதை உணர்த்தினான்.

''உங்களை நேரிலேயே சந்திப்பதில் மகிழ்ச்சி'' என்றார் வந்த அமெரிக்கன். ''உங்க கூட பேசுவதற்கு மிக முக்கியமான ஒரு சமாச்சாரத்தோட நான் இப்போ இங்கே வந்திருக்கேன்...'' என்ற ஜூலியஸ், ''... உங்க கூட தனியா பேச முடியும்'னா...!'' என்று இழுத்தபடி, கூடயிருந்தவனைக் குறி வைத்து பார்த்தார்.

''என் காரியதரிசி - இவான் - இவனிடமிருந்து எனக்கு எந்தவிதமான ரகசியமும் கிடையாது.''

''அது உங்களுக்கும் அவருக்குமானது - ஆனா, எனக்கு இருக்கு'' - வறட்சியாய்ச் சொன்னார் ஜூலியஸ். ''ஆகையால், அவரை இங்கிருந்து உடனடியா வெளியேறச் சொன்னீங்கன்னா, எனக்கு வசதியா இருக்கும்.''

''இவான்...'' என வலிக்காது அழைத்த ரஷ்யன், ''சற்று நேரம் பக்கத்து அறையில இருக்க முடியுமா... ப்ளீஸ்'' என்றான்.

''பக்கத்து அறையெல்லாம் வேலைக்கு ஆகாது'' என இடைமறித்தார் ஜூலியஸ். ''ஒட்டுக் கேட்கும் வசதி கொண்ட இந்த இரட்டை அறை விஷயமெல்லாம் எனக்குத் தெரியும். இந்த அறை - உங்களுக்கும் எனக்கும் மாத்திரமே விடப்படணும் என்பதே என் வேண்டுகோள். அவரை வேறு எங்கேயாவது போய் விடும்படி அனுப்பணும். இல்லேனா- அந்த மர்ம விஷயத்தை எனக்குள்ளேயேச் சுமந்துக்கிட்டு - நான் கிளம்பறேன்.''

அமெரிக்கனுடைய நேரடியான மற்றும் தடாலடியான பேச்சுக்களை ரஷ்யன் ரசிக்காவிட்டாலும், 'மர்மம்.... ரகசியம்...' போன்ற வார்த்தைகளாலும், அவ்வார்த்தைகளில் ஜூலியஸிடம் தெறித்த நம்பிக்கையினாலும், ஓர் ஆர்வ உந்துதலுக்குத் தள்ளப்பட்டான்.

''நீங்க பேச வந்த விஷயம் ரொம்ப நேரம் பிடிக்குமோ?''

''நீங்களும் விஷயத்துக்குள்ளே விழுந்தீங்கன்னா... இந்த முழு இரவும்!''

''ரொம்ப நல்லது. இவான்... இனி உன் உதவி இன்றைய மாலை முழுவதும் எனக்குத் தேவைப்படாது. ஏதாவது சினிமாவுக்குப் போ. ராத்திரி கூட திரும்ப வேண்டாம்.''

''தேங்க் யூ, ஸார்.''

வணக்கம் தெரிவித்து விட்டுக் கிளம்பிப் போனான் காரியதரிசி.

கதவு வரை போய் அவன் தலைமறையும் வரை பார்த்திருந்த ஜூலியஸ், இறுதியாய், ஒரு திருப்திகரமாகப் பெருமூச்சினைப் புன்னகையோடு வெளியிட்டு, கதவை மூடித் தாளிட்டு, அறையின் சரியான மையப் பகுதிக்குத் திரும்பினார்.

''இப்போ - திரு. ஜூலியஸ் - எந்தத் தடையுமில்லாமல், சொல்ல வந்த விஷயத்துக்குள் நீங்க நுழையலாம்!''

''ம்... அதுக்கு இனி ஒரு நிமிஷம் கூட பிடிக்காதுனு நினைக்கிறேன்'' - அழுத்தமாய் வில்லன் பாணியில் இழுத்துப் பேசினார் ஜூலியஸ். பிறகு, நடத்தையில் ஒரு திடீர் தீவிரத்தனத்தைக் காட்டியவர், ''கையைத் தூக்குங்க... ம்... இல்லே, மவனே யோசிக்காமச் சுட்டுடுவேன்'' எனக் கத்தினார்.

ஜூலியஸின் ஆரம்பத் தோற்றத்தை ரஷ்யன் முழுவதுமாய் நம்பியிருந்தான். ஆகையால், இது, அவன் துளியும் எதிர்பார்த்திராதது. ஒரு கணம், அந்தப் பெரிய இரும்பு உலோகத்தை வெறித்துப் பார்த்த அவன், பிறகு, இயந்திரத்தால் முடுக்கப்பட்ட கார்ட்டூன் பொம்மையைப் போல கையைத் தலைக்கு மேலே மெல்லத் தூக்கினான். அந்த நொடிப் பொழுது கட்டத்தில் ஜூலியஸ் ஒரு பாதையை வகுத்துக் கொண்டார். 'இனி, மேற்கொண்டு இவனை எப்படிக் கையாளுவது போன்ற சிந்தனையி லெல்லாம் நேரத்தை விரயமாக்கத் தேவையேயில்லை. நான் எதிர்கொள்ள வுள்ள இம்மனிதன், உடலையும் உயிரையும் போற்றிப் பாதுகாக்கும் ஒரு கோழை - இதனால், திட்டமிட்டு வந்துள்ள ஏனைய பிற, சுலபமே!' - என்னிக் கொண்டார்.

வெறி கொண்ட சத்தமான குரலில், ''இது அபாண்டம்... அக்கிரமம்..'' என அலறினான் அந்த ரஷ்யன். ''படுபாவி... இது கொடூரம். என்னைக் கொல்லவா போறே?''

''உன் குரலை உடனடியா குறைச்சேனா - சுடமாட்டேன். வேண்டாம்... மேஜையோரத்துல இருக்கிற அந்த மணியின் பக்கமா நழுவிப் போகாதே...! ஆங்.. அது! அப்படி...!''

''உனக்கென்ன வேணும்? அவசரத்துல எதையும் பண்ணிடாதே! என் நாட்டுக்கு, என் உயிர், அத்தனை மகத்துவமும் முக்கியத்துவமும் வாய்ந்தது என்பதை நீ மறந்துடாதே. என்னைப் பழிவாங்க உன்னை யாராவது அனுப்பியிருந்தா - - -''

''- - - அனுப்பியிருந்தா, உன் மேலே வெளிச்சம் போட்டுக் காண்பிச்ச அந்த ஆள்... மனித குலத்துக்கே ஒரு மாபெரும் திருப்பத்தை

உண்டாக்கியவன் ஆவான்'' என முடித்தார் ஜூலியஸ். ''த பாரு... நீ எதுக்கும் பயப்பட வேண்டாம். உன்னைக் கொல்லும் திட்டத்தோட இந்த முறை நான் வரலே - அதாவது, நீ ஒழுங்கா முறையா உருப்படியா நடந்துக்கிட்டா...!''

மாற்ற முடியாத தீர்மானமாய் எதிரிலிருப்பவரின் கண்களில் தெரிந்த தீவிரவாதத்துக்கு முன்னால் ரஷ்யன் புழுவாய் சுருண்டுப் போனான். காய்ந்து விட்டிருந்த அவனுடைய உதடுகளின் மீது நாக்கினை ஓட விட்டான். ''என்ன உனக்கு வேணும்? பணம்?''

''கிடையாது. எனக்கு ஜானே ஃபின் வேணும்.''

''ஜானே ஃபின்? நா.. நான் - அவளைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை.''

''ஆகாசப் புளுகு! நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்று உனக்கு நல்லாவே தெரியும்.''

''அப்படிப்பட்ட ஒரு பெண்ணைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லே'ங்கறேன்...''

''ஒண்ணு சொல்லிக்க விரும்பறேன்...'' என எதிர்த்தார் ஜூலியஸ்: ''என் கையிலிருக்கும் லிட்டில் வில்லி தன் சக்தியைப் பீய்ச்சியடிக்கப் பைத்தியமா துடிச்சுக்கிட்டிருக்கான்.''

தன்னம்பிக்கை சிதைய வெளிப்படையாகவேத் தொய்ந்துப் போனான் ரஷ்யன்.

''நீ சொல்ல மாட்டே, இல்லே - - -?''

''அப்படியில்லே, அப்படியில்லே. இருப்பா, இரு...''

ரஷ்யன் பக்கத்தைக் குற்றவாளியெனக் கண்டு கொண்டு விட்டதாய், ஜூலியஸ் குரலில் பிரதிபலித்த ஏதோவொன்றினைக் க்ரெமெனின் கண்டு கொண்டிருக்க வேண்டும்... கடுகடுப்பாய் கேட்டான்: ''இருக்கட்டுமே... இப்ப அவளைப் பற்றி நான் தெரிந்திருப்பதாகவே இருக்கட்டும்... அதுக்கென்ன இப்போ?''

சிரித்த ஜூலியஸ் இக்கேள்விக்கு பதில் தந்தார்: ''நீ இப்போ - இங்கே - இந்த நொடியே சொல்லணும்... அவளை எங்கே போனா பார்க்கலாம்'னு!''

க்ரெமெனின் மறுத்துத் தலையசைத்தான். ''அது என்னால முடியாது - முடியவே முடியாது.''

''ஏன் முடியாது?''

''என்னால முடியாது - *முடியாது*. முடியாத ஒண்ணை நீங்க கேட்கறீங்க.''

''பயம், ஆங்? யாரை நினைச்சு? மிஸ்டர் ப்ரௌன்? ஆஹ்... இப்படி சொல்வது உனக்கு உற்சாகமாயிருக்கு, ம்? அப்போ, அப்படி ஒரு மனுஷன்

இருக்கான்... ஆங்? நான் இல்லேங்கறேன். அப்படியிருக்கையில், அவரைப் பற்றி வெறுமனே பேசுவதே கூட உன்னை இறுக்கமாக்கிடுது... இல்லே? ப்பூ...!''

''நான் அவரை நகமும் சதையுமா பார்த்திருக்கேன், மிஸ்டர்'' - மெதுவாய் ஆரம்பித்தான் ரஷ்யன்.

''? ? ?''

''முகத்துக்கு முகம் பார்த்து நேரா பேசியிருக்கேன். அவர் யார்? எனக்குத் தெரியாது. ஜன சமுத்திரத்தில் ஒருத்தர். ஆனா ஒண்ணு எனக்கு நல்லாத் தெரியும் - பெயரைக் கேட்டாலே நடுநடுங்க வைக்கும், மனிதன்.''

''இருந்துட்டுப் போகட்டும். ஆனா, இது அவருக்கு என்னிக்குமே தெரிய வராது - ஓ.கே?''

''அவருக்கு எதுவும் தெரியும் - எல்லாரும் தெரியும். அவருடைய பழி வாங்கும் இயக்கம் - அத்தனை துரிதமானது. நான் கூட - இந்த க்ரெமெனின் கூட! - விதிவிலக்கா ஆக முடியாது.''

''அப்போ நான் இப்போ கேட்டதை நீ பண்ண மாட்டே?''

''பண்ணக் கூடாததை - பண்ண முடியாததை - நீங்க கேட்கறீங்க.''

''இது உனக்கு ஒரு பரிதாபமான சூழ்நிலைதான்'' - குதூகலம் கலந்து சொன்னார் ஜூலியஸ். ''ஆனா, இந்த உலகம், அதன் அங்கங்கள், எல்லாமே லாபமடையுமே'' - துப்பாக்கியைக் குறி வைத்து உயர்த்தினார் ஜூலியஸ்.

''நிறுத்து'' - கிறீச்சிட்டான் ரஷ்யன். ''நீ என்னைக் கொல்லவா பார்க்கிறே..?''

''இல்லே... உங்களை, மாப்பிள்ளை பார்க்கிறேன்..! உங்களைப் போன்ற புரட்சிக்காரங்க அத்தனை பேருக்கும் உயிர் என்பது ஒரு பூச்சி மாதிரி என்று நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா பார்த்தியா... அது, உன் உயிராவே ஆகும்போது எத்தனை பெரிய வித்தியாசத்தை உண்டு பண்ணிடுது...! உன்னுடைய பாவ அழுக்கு படிந்த உடம்பைப் பாதுகாத்துக்க ஒரே ஒரு வாய்ப்பை நான் உனக்குத் தந்தேன்... ம்ம், நீ அதை எடுத்துக்கலே.''

''அவங்க என்னைத் தொலைச்சுடுவாங்கப்பா.''

''சரி'' என்று புன்னகைத்த ஜூலியஸ், ''இனி உன் பாடு'' என்றார். ''மறுபடியும் கடைசி முறையா சொல்லிக்க விரும்பறேன். லிட்டில் வில்லி இங்கே உயிர் தாகத்துல துடிச்சிக்கிட்டிருக்கான். நான் உன் இடத்துல இருந்தா - இப்போ - இந்த இக்கட்டுல - அந்த ப்ரௌனுடன் மோதிப் பார்க்கத்தான் துணிஞ்சிருப்பேனே தவிர... ... ... ஓகே! தட்ஸ் ஆல்.''

''என்னைச் சுட்டா உனக்குத் தூக்குதான்'' நிலைமையின் தீவிரம் அறியாது அர்த்தமற்றுப் பிதற்றினான் ரஷ்யன்.

''இல்லே, கண்ணா, இங்கே தான் நீ தப்பே பண்றே. டாலர்... டாலர்... இதன் அற்புதச் சக்தியை நீ மறந்துட்டே. இதைப் பார்த்ததும், சில பெயர் போன வக்கீல்கள் என்கிட்டே ஓடோடி வருவாங்க - சும்மா இல்லே... பிரசித்தமான டாக்டர்களையும் கையோட கூடவே கூட்டிட்டு ஓடி வருவாங்க - இந்தக் கூட்டம் ஒண்ணா சேர்ந்து - நான் சொல்லிக் கொடுத்த மாதிரியே - நான் ஒரு மூளைப் பிசகிய பைத்தியக்காரன்னு நீதிமன்றத்துல சொல்வாங்க - டாலர்ப்பா, டாலர், இது அவங்களை சொல்ல வைக்கும். அமைதியான ஓர் ஆசிரமத்துல ரெண்டு மூணு மாசம் என்னைப் போடுவாங்க - தியானம் பண்ணனும் - பைத்தியம் தெளியும்பாங்'க - ஆஹ்... உன்னை சுட்டா எனக்கு வரும் தண்டனை! பிறகு என் மனநலம் தெளியும்பாங்'க - நான் மறுபடியும் பழையபடி நல்லா ஆயிட்டேனு அதே டாக்டர் கூட்டம் இதே ஜூலியஸ் சொல்லச் சொன்னா மாதிரி கதறும் - பிறகென்ன... இந்தக் குட்டி ஜூலியஸுக்கு எல்லாமே சுபம்தான்! தூக்கு கீக்குனு சின்ன புள்ளே கனவு காணாதே, என்ன...?! எனக்கென்ன தோணுதுன்னா... பேசாம உன்னைப் போட்டுத் தள்ளிட்டு ஹாயா அப்படி ஓய்வெடுக்கப் போயிடலாமானு தோணுது...!''

ரஷ்யன் இவர் சொன்னதை அப்படியே அட்சர சுத்தமாக நம்பினான். இவனே கூட ஒரு ஊழல் தானே... எனவே பணத்தின் சக்தி பற்றி ஜூலியஸ் பேசியதை நம்பினான். ஜூலியஸ் கோடிக் காட்டிய விதத்தில், பல அமெரிக்கக் கொலை வழக்குகள் மூடப்பட்ட சேதியை க்ரெமெனினே கூட பலமுறை படித்திருக்கிறான். ஏன்... இவனே கூட, தீர்ப்பினைப் பண பலத்தின் மூமலாக - வாங்கியிருக்கிறான், விற்றுமிருக்கிறான்! வீராவேசமாய் ஆடும் இந்த இளைஞனுக்குப் பணம் ஒரு பொருட்டே அல்ல என்பதும் ரஷ்யன் அறிந்ததுதான்.

''ஐந்து எண்ணப் போறேன்'' என தொடரலானார் ஜூலியஸ்: ''நாலு எனும் எண்ணைக் கடக்க நீ என்னை அனுமதிச்சுட்டே'னா... உனக்கு மிஸ்டர் ப்ரௌன் பற்றிய கவலையே தேவையில்லாமப் போயிடும்... குறிச்சுக்கோ! உன் இறுதிச் சடங்குக்கு சில மலர் வளையங்களை வேணும்னா அவர் அனுப்பலாம்...! தயாரா? ஆரம்பிக்கிறேன்! ஒண்ணு - ரெண்டு - மூணு - நாலு-''

ரஷ்யன் மறுபடியும் சிதைந்திருந்த கிறீச் குரலெடுத்துக் கதறினான்: ''சுட்டுடாதே, சுட்டுடாதே. நீ சொல்ற எல்லாத்தையும் நான் கேட்கிறேன்.''

ஜூலியஸ் துப்பாக்கியைக் கீழிறக்கினார். ''சொல்லு, அந்தப் பொண்ணு எங்கேயிருக்கா?''

''கேட்-ஹவுஸ்ல. கென்ட் பகுதி. அஸ்ட்லே என்பது அந்தக் கட்டிடம்.''

''சிறைக் கைதியாவா இருக்கா?''

''வீட்டை விட்டு வெளியேற அவ அனுமதிக்கப்படலியே தவிர - மற்றபடி அங்கே பாதுகாப்பான வாழ்க்கைதான். அந்தப் படுபாவி கடந்த காலம் முழுக்க மறந்திருக்கா - ச்சே... இதுதான் எங்க துரதிர்ஷ்டம்.''

''இது உன்னையும் உன் கூட்டத்தையும் வெறுக்கடிச்சிருக்குமே...! அந்த இன்னொரு பெண் பற்றி பேச்சையே காணோம்...! ஒரு வாரத்துக்கு முன்னாடி கொள்ளையடிச்சுக்கிட்டு வந்தீங்களே...?!''

''அவளும் அங்கேதான் இருக்கா'' - கடுகடுப்பாய் சொன்னான் ரஷ்யன்.

''அப்படி வா!'' என்றார் ஜூலியஸ். ''எல்லாம் நினைச்சா மாதிரியே அழகழகா அடுக்கப்படலே? இன்னிக்கு ராத்திரி அப்போ ரெண்டு பேரும் அற்புதமா ஓர் ஓட்டம் ஓடலாம்!''

''என்ன ஓட்டம்?'' - முறைத்தபடி அதட்டலாய்க் கேட்டான் ரஷ்யன்.

''வேறெங்கே... கேட்-ஹவுஸுக்குத்தான். கார்ல நட்ட நடு ராத்திரியில ஊர் சுத்துவது உங்களுக்குப் பிடிக்குமில்லே...!''

''என்ன பேசறே நீ? என்னால அதெல்லாம் ஒண்ணும் முடியாது.''

''பெரும் புத்திசாலி போல நடிக்காதே. சுட்டுடுவேன், ஆமா! உன்னை இங்கே பத்திரமா விட்டுட்டுப் போக, என்னைப் பச்சைக் குழந்தைனு எடை போடாதே. அதோ... அந்த டெலிபோன்ல, முத வேலையா உன் நண்பர் வட்டத்துக்கு போன் பண்ணுவே... மாட்டே?! ஆங்... அப்படி!'' - எதிராளியின் முகம் தொய்ந்து சுருங்குவதைப் பார்த்து இதைக் குறிப்பிட்டார் ஜூலியஸ். தொடர்ந்தார்: ''கவனியுங்க. நீங்க இனி பண்ண வேண்டிய அத்தனையும் ஏற்கனவே முடிவானவை. ஆங்... ஆங்... ஆங்... நோ, ஸார்... மறுக்க முடியாது. என்னோட வரீங்க... இது முதல் படி. உங்க படுக்கையறை எது? அடுத்த அறை? அப்படினா பேசாம நடங்க - உள்ளே போங்க - நானும் விட்டில் வில்லியும் கவனமா பின்னாடியே வரோம்! ஒரு நல்ல திக்'கான கோட் போட்டுக்கோங்க. ஆங்... அதுசரி. அதோ.. அந்த மேலங்கியை எடுத்துக்குங்க. குளிருக்கு அடக்கமா அதையும் மேலே போடுங்க. அது சரி. தலை முகம் எல்லாத்தையும் அதிலிருக்கும் தொப்பியால மூடுங்க. செய்ப்பா! இப்போ நீங்க ஒரு சாதா பிரஜை! இனி நாம ரெடி. கீழே போறோம். வாசல் வழியா என் கார் எங்கேயிருக்கோ அங்கே வரை நடக்கறோம். உன்னை ஒவ்வோர் அங்குலத்திலும் நான் பின்னாடியே குறி வெச்சபடி தொடர்ந்துக்கிட்டிருக்கேன் என்பதை மறந்துட வேண்டாம். மீறினா... என் கோட் பாக்கெட் வழியாகவே துளி சத்தம் வராம - ஸைலன்ஸர் போட்டிருக்கு. கண்ணா - சுட்டுட்டு எதிர் திசையில நான் போய்க்கிட்டேயிருப்பேன். நீ

எதுக்கு நடுங்கி விழறேனு புரியாம கூட்டம் திகைச்சு கண்டுபிடிக்கிறதுக் குள்ளே நான் சில கிலோ மீட்டர் தாண்டியிருப்பேன். ஒரு நோட்டம்... சின்ன சிக்னல்... ஜாடை.. எதையும் முயற்சிக்க வேண்டாம். ஸல்ஃபர் புகை தான் பதிலாகும். சொன்னதை செய்யறவன் நான்.''

ஒன்றாக இருவரும் படிகளிறங்கினார்கள். காத்திருக்கும் காருக்குச் சென்றார்கள். கடுங்கோபம் தாளாது துடித்துக் கொண்டிருந்தான் ரஷ்யன். ஹோட்டல் பணியாளர்கள் ஒரு முறை இவ்விருவரையும் சூழ்ந்தனர். ஒரு கதறல். இவன் வாய் வரை வந்து நின்றது... ஆனால் அது செயல்படுத்த விடாது, நடுங்கிய நரம்புகள் தடுத்து விட்டன. 'சொன்னதை செய்யறவன் நான்' - ரஷ்யனின் காதுகளில் விடாது ஒலித்துக் கொண்டேயிருந்தது.

காரை நெருங்கியதும் உடனே பெரும் நீண்ட நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்டார் ஜூலியஸ். ஆபத்துப் பிரதேசத்தைக் கடந்தாகி விட்டது. இவரருகிலிருந்த மனுஷனை, பயம், மூளைச் சலவை செய்து தன்னகப்படுத்தி வைத்து, காரியத்தை நிறைவேற்றித் தந்துள்ளது.

''உள்ளே'' - ஆணையிட்டார் ஜூலியஸ். இப்போது, ரஷ்யன், அருகிலிருந்தவனை ஓரக் கண்ணால் ஒரு நீண்டப் பரிதாபப் பார்வை பார்த்தபோது, ''அதெல்லாம் செல்லாது கண்ணா'' என்றார் கிண்டலாய். ''டிரைவரால சின்ன உதவி பெயராது. ராணுவத்தான். ஜார்ஜ். இந்தப் புரட்சி வெடித்தபோது சைனாவில் ஒரு நீர்மூழ்கிக் கப்பல்ல இருந்தவன். நாட்டுப் பற்று கொப்பளிக்கும் மனிதன். போதுமா...?! ஆங்.. உங்க ஆள் ஒருத்தனால தான் இவனோட சகோதரன் அநியாயமா கொல்லப்பட்டிருக்கார்.''

''அப்படியா, ஸார்?'' - டிரைவர் ஆக்ரோஷமாய் ரஷ்யனை நோக்கித் திரும்பினான். அவனிடம், ''ரஷ்ய கம்யூனிஸ்ட்டைச் சேர்ந்த ஆள் இவன். இவனைச் சுட இன்னும் நாங்க தீர்மானிக்கலே - ஆனா போற போக்கைப் பார்த்தா அது அத்தியாவசியமா ஆகி விடும் போல! புரியுதா?''

''படு சுத்தமா, ஸார்.''

''கென்ட் பகுதியிலிருக்கும் கேட் - ஹவுஸுக்கு நான் போகணும். வழி தெரியுமா?''

''தெரியும், ஸார். இங்கிருந்து ஒன்றரை மணி நேரப் பிரயாணம் பிடிக்கும்.''

''ஒரு மணி நேரத்துல முடி. நான் அவசரத்துல இருக்கேன்.''

''முடிஞ்ச அளவு முயற்சிக்கிறேன், ஸார்!'' கார், போக்குவரத்தைக் கிழித்துக் கொண்டு அம்பென முன்னேறியது.

கூட வந்திருந்த பிணையாளியைப் பாதுகாப்பாய் மறைத்து வசதியாய் அமர்ந்துக் கொண்டார் ஜூலியஸ். ஒரு கையை கோட் பாக்கெட்டுக்

குள்ளேயே நுழைத்து வைத்திருந்த போதிலும் அவருடைய நடத்தை, நாகரீகம் குறையாது மரியாதையாகவே இருந்தது. பிரயாணம் சூடு பிடிக்கும்போது, ''ஒருமுறை அரிஸோனாவில் நானிருக்கும் போது ஒருத்தன் இருந்தான்... அவனை நான் சுட வேண்டியதாச்சு...!'' என்று உல்லாசமாய் ஆரம்பித்தார் ஜூலியஸ்.

ஒரு மணி நேரப் பிரயாணத்தின் முடிவில் அதிர்ஷ்டக் கட்டையான க்ரெமெனின், உயிரோடிருப்பதை விட ஏறக்குறைய உயிரிழந்திருந்தார்! அரிஸோனா மனுஷனை அறிமுகமாகக் கொண்ட கதையை அடுத்து, கடும் காட்சிகள் கொண்ட ஆஸ்திரேலியக் கதையும், ராக்கி என்று அறியப்பட்ட ஒரு ரௌடிக் கூட்டம் சிதைக்கப்பட்டதாக வந்த அத்தியாயங்களும், காரையே ரத்தக்களறியாக்கியிருந்தன. சிறந்த எழுத்தாளனைப் போல கதை சொல்லத் தெரியாமலிருந்தாலும், ஜூலியஸ் பிட்டுப் பிட்டு சொன்ன விதம், வெட்டுக் குத்துக் காட்சிகளைச் செமத்தியாய் கண் முன் கொண்டு வந்து திகிலூட்டிய பிரமாதமான காட்சி வர்ணனைகளாகும்!

காரின் வேகத்தைக் குறைத்த டிரைவர், பார்வையைத் தெருவிலிருந்து அகற்றாமல் தோளின் வழியே கேட்-ஹவுஸினை நெருங்கிக் கொண்டிருப்ப தாக அறிவித்தான். ஜூலியஸ், மேற்கொண்டு இவர்களுக்கு வழிகாட்டும் படி, ரஷ்யனை ஏவினார். நேராக, கார் செல்ல அமைக்கப்பட்டிருந்த பாதை வழியே, நிலைக் கதவு வரை போய் விடுவதுதான் இவரது முதல் திட்டமாக இருந்தது. அங்கேயே, க்ரெமெனின், உள்ளேயிருக்கும் இரு பெண்களையும் கேட்க வேண்டும்! லிட்டில் வில்லியால் தோல்வியைச் சகித்துக் கொள்ளவே முடியாது என வலியுறுத்தியிருந்தார் ஜூலியஸ்! க்ரெமெனின், இப்போது, ஏறக்குறைய அடுத்தவரின் கைப்பதுமையாகவே மாறிப் போயிருந்தார் - பய உறைதலால்! பிரயாண வேகத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டபோது ரஷ்யன் இன்னும் செயலிழந்துப் போனான். ஒவ்வொரு திருப்பத்திலும் சாவின் வாசலை மிதித்து மிதித்துத் திரும்பியதாகவே எடை போட்டுக் கொண்டான் க்ரெமனின்!

கார், நடைபாதையில் வழுக்க ஆரம்பித்தது! நிலைக் கதவருகே வெகு சரியாய் நின்றது. அடுத்த கட்டளைக்காக டிரைவர் ஒரு சுற்று திரும்பிப் பார்த்தான்.

''முதல்ல காரைத் திருப்பிக்கோ, ஜார்ஜ். பிறகு போய் அழைப்பு மணியை சற்று நீண்ட நேரமா அடிச்சுட்டு உடனடியா உன் இருக்கைக்குத் திரும்பிடு. இன்ஜினை அணைக்காதே - தயாராகவே வை. நான் கிளம்புனு வார்த்தையை விட்டதும், நாலாவது கியர் வேகத்துல பறக்கத் தயாரா இரு - இது முக்கியம்.''

''ரொம்ப நல்லது, ஸார்.''

வாசற் கதவு பட்லரால் திறக்கப்பட்டது. தனது இடுப்பு எலும்புகளில் ரிவால்வரின் வாய் சாப்பிடத் தயாராய் அமுக்கிக் கொண்டு இருப்பதை உணர்ந்தான் க்ரெமெனின்.

''இப்போ தான்'' என வண்டு போல் ஹிஸ்ஸித்தார் ஜூலியஸ். ''ஜாக்கிரதை, ஜாக்கிரதை.''

ரஷ்யன் வெளிறிப் போயிருந்தான். அவனது உதடுகளில் ரத்த ஓட்டம் நின்றுப் போயிருந்தது. குரல் ஸ்திரமாயில்லாது நடுநடுங்கியது: ''இது - நா...ன் - க்ரெமெனின். அந்தப் பொண்ணை கீழை கூட்டிட்டு வாங்க - உடனே. இப்பவே. இழக்க, அவகாசம் இல்லே!''

விட்டிங்டன் படியிறங்கி வந்திருந்தார். வாசலில் ரஷ்யனைப் பார்த்ததில், ஏதோ அதிசயத்தைப் பார்த்துவிட்ட ஆச்சரியக் குரலெழுப்பினார். ''நீ! என்ன ஆச்சு? உனக்கு நம்ம திட்டம் தான் தெரியுமே - - - ''

தேவையற்ற அதிர்ச்சிகளை வரிசையாய் ஏற்படுத்திய வார்த்தைகளால் க்ரெமெனின் அவரை இடைமறித்தான்: ''நாம வஞ்சிக்கப்பட்டு விட்டோம். திட்டங்களையெல்லாம் கொண்டு போய் குப்பையில் கொட்டு. நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் - நெருக்கடி. பொண்ணு! அதுவும் இப்பவே! அது மட்டும் தான் நம் முன் உள்ள ஒரே வாய்ப்பு!''

விட்டிங்டன் தயங்கினார் - ஆனால் அது நீடித்தது, சில கணங்கள்தான். உடனடியாய் கேட்டார்: ''உன்கிட்டே *அவரிடமிருந்து* கட்டளை இருக்கா?''

''இருக்காதா பின்னே! இல்லேனா இங்கே வேலை மெனக்கெட்டு நான் எதுக்காக வரணும்? சீக்கிரம், சீக்கிரம்! இழப்பதற்கு நமக்கு நொடி நேர அவகாசம் கூட இல்லேப்பா! அந்த இன்னொரு பொண்ணையும் சேர்த்தே அனுப்பி வையுங்க - அதுதான் நம் உயிருக்கு நல்லது! ம்!''

விட்டிங்டன் திரும்ப வீட்டுக்குள் திபுதிபுவென்று ஓடினார். உயிர் குடித்த நொடிகள் படபடக்க வைத்து நகர்ந்துக் கொண்டிருந்தன. பிறகு சாக்கு போன்ற ஏதோ ஒரு கனமான போர்வையால் உடல் முழுவதும் மறைக்கப்பட்ட நிலையில் இரண்டு உருவங்கள் படிக்கட்டு இறங்கி வருவதுதெரிய, அடுத்த நொடிகளில் அவையிரண்டும் வேக வேகமாக காருக்குள் திணிக்கப்பட்டன. இதற்கு ஒத்துழைப்புத் தர இரு உருவங்களில் சின்ன உருவம் மறுக்க, அதனை அநாகரீகமாய் திணித்து உள்ளே அனுப்பினார் விட்டிங்டன். இடப் பற்றாக்குறையால் தன்னையும் அறியாது ஜூலியஸ் கொஞ்சமாய் வளைந்து முன் வர, அப்போது, திறந்திருந்த கார் ஜன்னல் வழியே உள்ள வழிந்துக் கொண்டிருந்த ஒளி, அவர் முகத்தைப் பிரகாசித்தது. விட்டிங்டனுக்குப் பின்பக்கமாய் வாசல் படிக்கட்டுகளில் நின்றுக் கொண்டிருந்த மற்றொரு

மனிதன் ஆச்சரியக் கத்தல் கத்தினான். பொத்திப் பொத்தி மறைத்து வைத்திருந்த அனைத்தும் முடிவுக்கு வந்தன.

''ம்... எடுத்துடு, ஜார்ஜ்'' - கத்தினார் ஜூலியஸ்.

க்ளட்ச்'சில் காலை டிரைவர் நழுவ விட, ஒரு குதித்தலோடு கார் ஆரம்பத்திலேயே சீறியது.

படிக்கட்டில் நின்றிருந்த அந்த மற்றொருவன் கர்ண கொடூரமாய் கூவினான். அவனுடைய கை தன்னிச்சையாக அவனது கோட் பைக்குச் சென்றது. ஒரு பேரொளியும் அதற்குக் காரணமான துப்பாக்கியின் இயக்கமும் இடம் பெற்றன. நெட்டையான பெண்ணை மயிரிழையில் இழந்தது, துப்பாக்கிக் குண்டு.

''குனி, ஜானே'' - கத்தினார் ஜூலியஸ். ''ம்... காருக்கு அடிப்பக்கமா குனிஞ்சுடு'' அவளைப் பிடித்திழுத்து அமுக்கினார். பிறகு இவர் மட்டும் நிமிர்ந்தமர்ந்து ஜாக்கிரதையாய் குறி பார்த்தார். சுட்டார்.

''அவனுங்களை சுட்டுட்டீங்களா?'' - ஆர்வமாய் கேட்டாள் டூபென்ஸ்.

''பின்னே!'' என்றார் ஜூலியஸ் . ''கடங்காரன் சாகலே. உனக்கு ஒண்ணுமில்லையே, டூபென்ஸ்?''

''ஒரு ப்ராப்ளம் கிடையாது. ஆங்.. டாமி? அவன் எப்படியிருக்கான்? ஆமாம், இது யாரு?'' - நடுங்கும் க்ரெமெனினை அவள் சுட்டிக் காட்டினாள்.

''டாமி, அர்ஜென்டைனுக்குப் போக டிக்கெட் வாங்கியிருக்கார். நீ திசை மாறி போயிட்டேனு நினைச்சுட்டார் போல. கேட் கிட்டே பார்த்து, ஜார்ஜ். ஆங்.. ஆங்... அப்படித்தான். ஓகே... இனிமே சாலை தான். ஜமாய். அவனுங்க தயார் பண்ணிக்கிட்டு நம்மைத் தொடர குறைந்தபட்சம் ஐந்து நிமிடமாவது ஆகும். டெலிபோன் பண்ணிடுவானுங்க'னு நினைக்கிறேன்... அதனால குறுக்கே எவனாவது வந்து வழிமறிக்கிறானானு பார்த்துக்கோ. அப்படி நடந்தா - முட்டிட்டுப் போயிக்கிட்டே இரு. நேரடிப் பாதையை எடுக்காதே. குறுக்குவ போய் பல சந்துகள் வழியா தப்பிச்சுடு. இது யார்னு கேட்டியா, டூபென்ஸ்?! உனக்கு திரு க்ரெமெனினை நான் அறிமுகப்படுத்துவதில் மகிழ்கிறேன். உடல்நலம் கருதி என்னுடன் இந்தப் பிரயாணத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நான் தான் பாவம் ரொம்பவும் வற்புறுத்தினேன்!''

பயத்தால் இன்னமும் ஆப்பறையப்பட்டிருந்த க்ரெமெனின், ஓசையற்றே இருந்தார்.

''ஆனா எங்களை இத்தனை சுலபமா தாரை வார்த்துக் கொடுக்க அவனுங்களை எது தள்ளிச்சு?'' - பதில் தேவை என்பது போல கேட்டாள் டூபென்ஸ்.

''இந்த க்ரெமெனின் அவங்க மறுப்பே சொல்ல முடியாத அளவுக்கு அத்தனை அழகா பதவிசா கேட்டதுதான் காரணம் என்பது என் கணிப்பு.''

இது ரஷ்யனுக்கு ரொம்ப அதிகமாய்ப் பட்டது. கோரமாய் வெடித்தான் அவன்: ''உன்னை சபிக்கிறேன் - *சபிக்கிறேன்.* நிறுத்து - போதும்! நான் அவனுங்களைக் கள்ளத்தனமா வஞ்சித்து விட்டது இப்போ அவனுங்களுக்குத் தெரிந்திருக்கும். என் உயிர், இந்த நாட்டுல, அடுத்த ஒரு மணி நேரம் கூட பாதுகாப்பா இருப்பது அரிது.''

''அப்படித்தான்'' என்று ஒப்புக் கொண்டார் ஜூலியஸ். ''உடனே இப்பவே ரஷ்யாவுக்கு டிக்கெட் எடுத்துடு... இதுதான், உனக்கு என்னுடைய உண்மையான அறிவுரை!''

''அறிவுரை தறியா நீ, எனக்கு?!'' என பரிதாபமாகவும் கழிவிரக்கத்தோடும் சொன்னான். ''அப்போ என்னை விட்டுடு'' - அழுதே விட்டான் அவன். ''நீ கேட்டதை நான் பண்ணிட்டேன். என்னை எதுக்காக இன்னும் உன் கூடவே வெச்சுக்கிட்டிருக்கே?''

''நிச்சயமா உன் கூட சல்லாபிக்க கிடையாது. இப்பவே... வேணும்னா... நீ விரும்பினா... இங்கேயே இறங்கிக்கலாம். நீ லண்டன் வரை போய் இறங்கிக்க விரும்புவதா நான் நினைச்சேன்.''

''நீ லண்டனே போக முடியாது, மாங்கா'' - உறுமினான் ரஷ்யன். ''என்னை இங்கேயே இறங்கிக்க விடு. அதுவும் இப்பவே.''

''நிச்சயமா. நிறுத்து ஜார்ஜ். இந்த ஜென்டில்மேன் இனி திரும்பி இந்த நாட்டுப் பக்கமே வர மாட்டார். நான் ரஷ்யாவுக்கு வர நேர்ந்ததா, அருமை நண்பா, உன்னிடமிருந்து அதிரடியான வரவேற்பும் மற்றும் - - -''

பேசிக் கொண்டிருந்த வாக்கியத்தை ஜூலியஸ் முடிக்கும் முன்பும், டிரைவர் காரினை முழுவதுமாக நிறுத்துவதற்கு முன்பும், வெளியே அவனாக குதித்திறங்கிய ரஷ்யன், இருட்டுக்குள் கரைந்து போனான்.

''எனக்கு வேண்டாம்... இருக்கும் இளங்கன்னிகைகளுக்காவது குட் பை சொல்லியிருக்க வேண்டாமோ?!'' என்று புன்முறுவிக் கொண்டே விமர்சித்த ஜூலியஸ், ''எழுந்திரு ஜானே. இனி நீ ஸீட்'டுல உட்காரலாம்'' என்றார்.

இதுவரை, முதல் தடவையாய், அவள் பேசினாள்: ''அவனை எப்படி நீங்க ஒத்துக்க வெச்சீங்க?''

ஜூலியஸ் அவருடைய துப்பாக்கியைத் தட்டிக் கொடுத்தார். ''லிட்டில் வில்லி இப்போது உங்களுடைய அனைத்து மரியாதைகளையும் பாராட்டுதல்களையும் எடுத்துக்குது!''

''அதியற்புதம்'' சந்தோஷத்தில் கத்தி விட்டாள் அவள். வண்ணம் அவள் முகமெங்கும் வந்து கொட்டியது. அவளது கண்கள் மரியாதை கலந்த பாராட்டுதலோடு ஜூலியஸைப் பார்த்தன.

''ரெண்டு பேருக்கும் அங்கே என்ன நேரப் போகுதோ'னு எனக்கும் ஆனெட்டுக்கும் ஓர் இம்மி தெரியாம இருந்தது'' என்றாள் டூபென்ஸ். ''கிழ விட்டிங்டன் எங்க ரெண்டு பேரையும் தள்ளாத குறையாக கீழே ஒட்டிக்கிட்டு வந்தான். சித்ரவதை செஞ்சுக் கொன்றுப் போடத்தான்'னே நினைச்சோம்.''

''ஆனெட்'' என்ற ஜூலியஸ், ''இந்தப் பேர்ல தான் இவளை நீங்க கூப்பிடறீங்களா?'' என்றார். அவரது சிந்தனை ஏதோ ஒரு புதிய எண்ணத்துக்குள் தன்னைத் தானே புகுத்திக் கொள்வதாய் தோன்றியது.

''அது அவளுடைய பெயர்'' என்றாள் டூபென்ஸ். அவளுடைய கண்களை மிகவும் அகலமாக்கி.

''ஓஓஓஓ'' - அதையே பிரதிபலித்தார் ஜூலியஸ். ''இதுதான் அவ பேர்னு அவ நினைக்கலாம் - ஞாபகம் முழுக்கத் தவறிடுச்சு இல்லே - பாவப்பட்ட பொண்ணு. ஆனா, இங்கே, நமக்கு முன்னால, ஒரே உண்மையான மற்றும் அசலான ஜானே ஃபின்னை நாம வெச்சிருக்கோம்.''

''என்ன - - -?'' - கத்தி விட்டாள் டூபென்ஸ்.

ஆனால் அவள் மேற்கொண்டு சொல்ல வந்ததை செய்ய விடாமல் இடையூறு விளைந்தது. கோபமான வேகத்தோடு, ஒரு புல்லட், ஜஸ்ட் அவளுடைய கொண்டையை உரசிக் கொண்டு சீறிப் போனது.

''அப்படியே குனி, ப்ளீஸ்'' என்று கத்தினார் ஜூலியஸ். ''உடனடியாக புறப்பட்டிருக்கானுங்க. ஒஹ்... தாமதமே இல்லாம தொடர்ந்திருக்கானுங்க. ஒட்டு ஜார்ஜ். புயல் போல பாயணும்.''

காரும் புயலாய்த் தான் வீசிக் கொண்டிருந்தது. மூன்று சுற்று குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன - ஆனால் மிகப் பரந்து விரிந்து எங்கோ போயின. நிமிர்ந்துக் கொண்ட ஜூலியஸ் அப்படியே பின்னிருக்கையில் சாய்ந்துக் கொண்டார். ''ஆஹ்'' என்றார் அனத்தலாய்.

''உங்களுக்கு அடிபட்டிருக்கா?'' - விறுவிறுவென கேட்டாள் ஆனெட்.

''ஒரு சிராய்ப்புதான்.''

அந்தப் பெண் துடிதுடித்துப் போனாள். ''என்னை விட்டுடுங்க. சொல்றேன் இல்லே, என்னை விட்டுடுங்க. யோவ்... காரை நிறுத்து. ம். என்னைத் தான் அவனுங்க துரத்திக்கிட்டு வரானுங்க. நான் மட்டும் தான்

அவனுங்களுக்குத் தேவைப்படுது. போறேன்... விட்டுடுங்க.. எனக்காக உங்கள்ல யாரும் உயிரிழக்க வேண்டாம். என்னை விடுங்க'' - காரின் கதவுப் பிடியோடு போராடினாள் அவள்.

தனது இரு கரங்களினாலும் அவளை ஏந்திக் கொண்டார் ஜூலியஸ். ''முதல்ல உட்காரும்மா'' என்றார். ''உன்னை அவங்க ஏன் தேடணும்?'' என்றார் பல அர்த்தங்களை உள்ளடக்கி. ''அப்படி அவனுங்க உன்னைத் தேடறாங்கனு உன்னால எப்படி நிச்சயமா சொல்ல முடியுது?'' என்றார், மறுபடியும் பொடி வைத்து. ''அதனால, உனக்கு எவ்வித ஞாபக இழப்பும் ஏற்படலே என்பது என் ஊகம். அவனுங்களை இத்தனை நாளும் அப்படி சொல்லிக் சொல்லியே நீ ஏமாத்திட்டு வந்திருக்கே, ம்?''

அந்தப் பெண் அவரைப் பார்த்தாள். ஒப்புதலாய் தலையசைத்தாள். பிறகு திடீரென கண்ணீரில் வெடித்தாள். அவளைத் தோளில் தட்டிக் கொடுத்தார் ஜூலியஸ்.

''அப்படியே ஒழுங்கா உட்கார். உன்னை நாங்க ஓட விட்டுட மாட்டோம்.''

அவளுடைய விசும்பல்களுக்கிடையே, அந்தப் பெண் புரியும்படி பேசினாள்: ''நீங்க நம்ம நாட்டுலேந்து வந்திருக்கீங்களா? உங்க உச்சரிப்பிலிருந்து என்னால கணிக்க முடியுது. இது மேலும் எனக்கு வீட்டு ஞாபகத்தை அதிகரிக்குது. ஹோம்-சிக்'' - அவள் விம்மல் கூடியது.

''ஆமாம். நான் நம்ம நாட்டுக்காரன் தான். அமெரிக்கா தான். நான் உன் மாமன் முறை - ஜூலியஸ். உன்னைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஒரே வேலையாத்தான் நான் ஐரோப்பாவுக்கே வந்தேன். சும்மா சொல்லக் கூடாது... அந்தத் தேடுதல் பயணத்துல எங்க எல்லாரையும் நீ நல்லாவே ஆட வெச்சுட்டே!''

காரின் வேகம் தாழ்ந்தது. சாலையைப் பார்த்தபடியே ஜார்ஜ் பேசினான்: ''நிறைய சாலைகள் பிரியுது, ஸார். எதுல போவது'னு கொஞ்சம் குழம்புது.'' சொல்லிவிட்டு, மிக மெதுவாக்கினான் வேகத்தை. கார் நிற்பது போலான போது, ஓர் உருவம், காரின் பின்னாலிருந்து குதித்து நிமிர்ந்து, இவர்களனைவரின் மத்தியில் தலையை மட்டும் நீட்டியது. ''ஸாரி'' - சொன்னது தன்னைத் தானே அப்படியே வெளியே கொண்டு வந்துக் கொண்டிருந்த - *டாமி!*

குழப்பமும் ஆச்சரியமும் கலந்த கூவல்கள் இவனை வரவேற்றன. தாராளமாய் அவர்களுக்கு பதிலளித்தான் டாமி: ''அஸ்ட்லே கட்டிடத்தின்

கார் பாதையிலிருந்து பல புதர்களில், அடர்த்தியான ஒன்றுக்குள் மறைஞ்சிருந்தேன். பின்னாடி தொத்திக்கிட்டேன். அப்படியே, திறந்து டிக்கிக்குள்ளே இறங்கிட்டேன். நீங்க காரை விரட்டுன விரட்டுல தலையைத் தூக்கி கூப்பிட முடியலே. அவனுங்க வேற பின்னாடியே வந்து குண்டடிச்சாங்க. இப்போ, பொண்ணுங்களா, இறங்குங்க!''

''இறங்குவதா?''

''ஆமாம். தெருவின் மறுபக்கத்துல ஒரு ஸ்டேஷன் இருக்கு. இன்னும் மூணு நிமிஷத்துல ஒரு ரயில் வர வேண்டியிருக்கு. வேகமா போனீங்கன்னா அதைப் பிடிச்சுடலாம்.''

''எதை மனசுல வெச்சுக்கிட்டு இப்படி பெனாத்தறீங்க?'' - அதிகாரமாய்க் கேட்டார் ஜூலியஸ். ''உயிரைப் பணயம் வெச்சு ஜெயிச்சிருக்கேன். காரை விட்டு இறங்கி ஓடி விடுவதன் மூலம் அவனுங்களை ஏமாத்திடலாம்னு நினைக்கிறீங்களா?''

''நீங்களும் நானும் காரை விட்டுப் போகப் போவதில்லே. பெண்கள் மட்டும்தான்.''

''உங்களுக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு, தாமஸ். அதான் ஆடறீங்க! இந்த நேரத்துல, ரெண்டு பெண்களையும், தன்னந்தனியா நீங்க வெரட்ட முடியாது. அப்படிப் பண்ணினா அவங்களுடைய இறுதி முடிவாத்தான் அது அமையும்.''

டாமி, டூபென்ஸ் பக்கமாய் திரும்பினான். ''உடனடியா இறங்கு, டூபென்ஸ். இவளை கூட கூட்டிக்கோ... நான் என்ன சொன்னேனோ அதை செய். யாரும் உனக்கு எவ்வித அபாயமும் தந்துட மாட்டாங்க. ட்ரெயின்ல லண்டனுக்கு டிக்கெட் எடு. நேரா சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன் கிட்டே போயிடு. நீங்க அங்கே பாதுகாப்பா இருப்பீங்க. கார்ட்டர் டவுனை விட்டு வெளியே போயிருக்கார்... அதனால இந்த ஏற்பாடு.''

''கொன்னுடுவேன் உங்களை!'' - கத்தினார் ஜூலியஸ். ''உங்களுக்குப் பைத்தியம்தான்; *கிறுக்கன் - கிறுக்கன்.* ஜானே... நீ அப்படியே இரு. நகராதே, இவன் கிடக்கான்.''

அப்போது ஒரு திடீரென்று துரித வேகத்தோடு இயங்கி, ஜூலியஸ் கையில் பிடித்தபடியிருந்த துப்பாக்கியைப் பறித்துக் கொண்டான், டாமி. அவனுக்கு சரிநிகராய் குறி வைத்துப் பிடித்தான். ''இப்போ நான்தான் சரினு ஒத்துக்குவீங்களா? மீறினா - நிச்சயமா ஒரு பலமான காயத்தை ஏற்படுத்த நான் தயங்க மாட்டேன். இறங்குங்க, ரெண்டு பேரும். நான் சொன்னபடி

செய்ங்க. அவகாசம் கிடையாது. இல்லே... சுட்டுடுவேன்! பிறகு கையோ காலோ இருக்காது.''

குதித்து வெளியேறிய டூபென்ஸ், வர மறுத்த இன்னொருத்தியையும் தன்னோடு சேர்த்து இழுத்துக் கொண்டு ஓடலானாள். அப்படியே, ''பேசாம வா. டாமி ஒரு விஷயத்துல நிச்சயமா இருந்தான்னா - அது நிச்சயமாத் தானிருக்கும்! சீக்கிரம். ரயிலை விட்டுடுவோம்'' என்றாள்.

ஜூலியஸ் வெடித்துப் போய், ''எத்தனை திமிர் உனக்கு?'' என்றபடி இவன் மீது பாய எத்தனித்தார்.

''அமைதி, அமைதி. உங்க கூட சில வார்த்தைகள் பேச வேண்டியிருக்கு, ஜூலியஸ்.''

அத்தியாயம் - 25

ஜானே ஃபின்'னின் முழு கதை

ஜானேவுக்குள் புகுத்தப்பட்டிருந்த கையை, முடிந்த மட்டும் சேர்த்து இழுத்துக் கொண்டு, டூபென்ஸ் ஸ்டேஷனை அடைந்தாள். அவளுடைய கூரான காதுகள் நெருங்கிக் கொண்டிருந்த ரயிலின் ஓசையைப் பிடித்தன.

''சீக்கிரம்'' - மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க குறிப்பிட்ட டூபென்ஸ், ''இல்லேனா விட்டுடுவோம்'' என்றாள் துரிதமாய்.

ரயில், தனது இயக்கத்தை நிறுத்தி நகராது நின்ற அதே கணத்தில், ப்ளாட்பாரத்தில் இருந்தனர் இருவரும். காலியாகவிருந்த ஒரு முதல் வகுப்புப் பெட்டியை டூபென்ஸ் திறக்க, நுழைந்த இரு பெண்களும், காத்திருந்த இரண்டு இருக்கைகளில் விழுந்து மூழ்கினர்.

இந்தப் பெட்டியை ஒரு மனிதன் எட்டிப் பார்த்துவிட்டு அடுத்தப் பெட்டிக்கு நகர்ந்தான். ஜானே நரம்பதிரத் துணுக்குற்றாள். அவளது கண்கள் கிலியால் பெரிதாயின. ''அவன், அவனுங்கள்ல ஒருத்தனா இருக்குமா... நீங்க என்ன நினைக்கிறீங்க?'' - மூச்சு வாங்கியது அவளுக்கு.

டூபென்ஸ் மறுத்துத் தலையசைத்தாள். ''இல்லை, இல்லை. எல்லாம் சுபமா முடிஞ்சிருக்கு'' - அவளுடைய கைகளை இழுத்துத் தனது உள்ளங் கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள். ''நமக்கு எதுவும் நேராது என்பது ஊர்ஜிதமாக இல்லா விட்டால், டாமி, நம்மை இப்படி செய்யும்படி சொல்லியிருக்கவே மாட்டான்.''

''ஆனா, அவருக்கு, அவனுங்களை, எனக்குத் தெரிந்துள்ள அளவுக்குத் தெரியாது!'' - ஜானே பெண் நடுநடுங்கினாள். ''உங்களுக்கெல்லாம் சொன்னா புரியாது. ஐந்து வருடங்கள்! ஐந்து முழு வருடங்கள்! சில சமயங்கள்ல எந்தக் கொடுமையையும் உணர முடியா ஒரு பைத்தியக்கார ஜடமா என் மூளை ஏன் செயலிழந்துடக் கூடாதுனு நான் துடிச்சிருக்கேன்.''

''அந்தப் பேச்சே வேணாம். அவை எல்லாமும் முடிந்து விட்டன.''

''அப்படியா?''

ரயில் இப்போது வேகம் பிடித்திருந்தது... கும்மிருட்டைக் கிழித்துக் கொண்டு அதன்வேகம் கூடிக் கொண்டிருந்தது. திடுமென ஜானே ஃபின் நெட்டைக் குத்தலாய் நிமிர்ந்தமர்ந்தாள். ''என்ன அது? ஒரு முகத்தைப் பார்த்தா மாதிரி தோணுது - ஜன்னல் வழியா உள்ளே உற்றுப் பார்த்தது மாதிரி... ஆமாம்.''

''இல்லே, அங்கே ஒண்ணுமேயில்லை. பார்...'' - டூபென்ஸ் எழுந்து ஜன்னல் வரை போய் அதன் திரையை இழுத்து விட்டு மூடினாள்.

''நிச்சயமா சொல்றியா, நீ?''

''படு நிச்சயமா.''

இப்படிக் குழப்பியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டுமென ஜானே எண்ணியது போலிருந்தது: ''பயந்து நடுங்கிப் போய் மூலைக்கு மூலை ஓடும் எலி போல ஆகியிருக்கேன் - ஆனா இதை என்னால தவிர்க்கவும் முடியலே. இப்போ என்னை அவனுங்க கையும் களவமா பிடிச்சுட்டா, என்னை - - -'' உணர்விழந்து விரிந்த நிலையில் அவளது கண்கள் நிலை குத்திப் போயின.

''வேண்டாம்'' - யாசிப்பது போல கெஞ்சினாள் டூபென்ஸ். ''பின்னாடி சாய்ந்த மாதிரி படுங்க - எதையும் நினைக்காதீங்க. பாதுகாப்பானதா இல்லாத பட்சத்துல இப்படி நம்மை நடு நிசியில ரயிலேறிப் போகும்படி டாமி சொல்லியிருக்கவே மாட்டான் என்பதை தயவு செய்து நம்புங்க - எல்லாம் சரியாயிடும்.''

''ஆனா என் மாமன் பையன் அப்படி நினைக்கலியே. அவர் நாம இப்படிப் பண்ணக் கூடாது'னு தானே சொன்னார்.''

''அப்படியில்லே அது - - -'' என்றாள் டூபென்ஸ் சற்றே தர்மசங்கடமாய்.

''என்னவோ சொல்ல நினைக்கிறீங்க... ஆங்?'' கறாராய் கேட்டாள் ஜானே.

''என்னது?''

''உங்க குரல் - ஒரு தினுசாயிருந்தது!''

''நான் ஒரு விஷயத்தை சிந்திச்சுக்கிட்டிருந்தேன்'' - ஒப்புக் கொண்டாள் டூபென்ஸ். ''ஆனா அதை உன்கிட்டே சொல்ல விரும்பலே - அதுவும் இப்போ. அது தவறா கூட இருக்கலாம். ஆனா அப்படியாகும்னு எனக்குத் தோணலே. ரொம்ப நாளைக்கு முன்னமேயே என் மண்டைக்குள்ளே விழுந்து விட்ட ஒரு யோசனை அது. டாமிக்கும் இதே எண்ணமிருக்கு - ஆமாம். எனக்கு நிச்சயமா தெரியும். ஆனா இப்போ அதையெல்லாம் கற்பனை பண்ணாதே... அதை விளாவாரியாக பேச அப்புறம் வேண்டிய மட்டும் அவகாசம் வரும். முதல்ல சாஞ்சுக்கோ. எதையுமே சிந்திக்காதே.''

''முயற்சிக்கிறேன்'' - நீண்ட இமைகளைப் பயந்துக் கிடந்த கருவிழி களுக்கு மேல் போர்த்திக் கொண்டாள்.

பாதுகாப்பாக நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு சுற்றும் முற்றும் அலையும் ஒரு வாட்டசாட்டமான வேட்டை நாயின் மனோநிலையில், டூபென்ஸ், நிமிர்ந்து மூங்கில் கட்டையென உட்கார்ந்தாள். பயமற்ற தைரியம் பேசியிருந்தாலும், டூபென்ஸும் நரம்பதிர்வில் தானிருந்தாள். ஒரு ஜன்னல் மாற்றி மறு ஜன்னல் என அவளது கண்கள் தாவிக் கொண்டேயிருந்தன. எதைக் கருத்தில் கொண்டு இவளும் இப்படி பயப்படுகிறாள் என்பதை வார்த்தையில் சொல்ல இவளால் முடியாமலே இருந்தது. வார்த்தைகளால் சற்று முன் இவள் தெரிவித்த தன்னம்பிக்கையெல்லாம், இவள் மனதில் சற்றும் இல்லை! இதற்காக டாமியை இவள் நம்பவில்லை என்று சொல்லி விட முடியாது... ஆனால், நாட்டையே விலை பேசும் அளவுக்கு முன்னேறி யிருக்கும் ஒரு மகா கூட்டத்தைப் பற்றிய டாமியின் கணிப்புகள், எப்போதும் தவறற்று சரியாகவே இருக்குமா என்ற பயம் என்று தான் சொல்ல வேண்டும்.

பாதுகாப்பாய் எப்போது இவர்கள் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனிடம் போய் சேருகிறார்களோ... அதன் பிறகு எல்லாமே சுபமாய்த்தானிருக்கும். ஆனால், இவர்கள், அவரைப் போய் அடைந்து விடுவார்களா? அமைதிப் படையான மிஸ்டர் ப்ரௌனின் கூட்டாளிகள் இவர்களுக்கு முன் விரைந்து லண்டன் நகரில் குழுமியிருக்க மாட்டார்களா? டாமியின் கடைசியாய் நின்ற அந்தக் கம்பீரமான காட்சி - கையில் துப்பாக்கி ஏந்திய 'போஸ்' - அது கூட இவளுக்கு இப்போது ஆறுதலாய் அமையவில்லை. அடுத்து என்னென்ன செய்வது என்ற திட்டத்தில் மனதினைத் திசை திருப்பினாள் டூபென்ஸ்.

ரயில் மெல்ல மெல்ல வேகம் குறைந்து, சேரிங் சதுக்கத்துக்குள் நுழைந்து அசைந்து தணியும்போது ஒரு துணுக்குறலோடு எழுந்துக்கொண்டாள் ஜானே. "நாம வந்து சேர்ந்துட்டோமா? ஓஹ்... இங்கே வராமலே போயிடணும் னுல்லே நினைச்சேன்...!"

"லண்டனுக்குத் தான் போகணும்னு டிக்கெட். இந்தப் பிரயாணத்துல ஏதாவது குஷியான ஒரு சமாச்சாரம் நடக்கணும்னா - அது இப்போ தான் நடக்கப் போகுது! சீக்கிரம். இறங்கு. நாம ஒரு டாக்ஸியைப் பிடிப்போம்."

"எதுக்கு? லண்டன் தானே சொன்னீங்க?"

"இறங்கு."

அடுத்த சில நிமிடங்களில், செக்கிங் இன்ஸ்பெக்டரைக் கடந்து, பயணத்துக்கான பணத்தினை அவரிடம் செலுத்தி விட்டு, வெளியேறி, ஒரு டாக்ஸிக்குள் தலையை நுழைத்துக் கொண்டிருந்தனர்.

"கிங்ஸ் சதுக்கம்" - விவரித்தாள் டூபென்ஸ். உடனேயே ஒரு பயத்துள்ளலை வெளியிட்டாள். டாக்ஸி நகரத் துவங்கும் போது ஜன்னல் வழியாக ஒருவன் எட்டிப் பார்த்தான். இவர்கள் பிரயாணித்த பெட்டியின்

ஜன்னலில் எட்டிப் பார்த்து விட்டு அடுத்த பெட்டிக்கு நகர்ந்து சென்ற அதே ஆசாமி தான் இது என்பது இவளுக்குத் தெளிவாயிற்று. ஒவ்வொரு பாகமும் மரத்து சில்லிட்டுப் போகும் கொடூர உணர்வினை அனுபவித்தாள் டூபென்ஸ்.

''கவனி'' என்று ஜானேவுக்கு விளக்கினாள்: ''நாம திரு கார்ட்டரைப் பார்க்கப் போறோம்னு அவனுங்க நினைச்சா... நாம இப்போ எடுத்திருக்கும் இந்த திடீர் திருப்பம் அவங்களைத் திசை திருப்பிடும். நாம கார்ட்டரைப் பார்க்கப் போறோம்னு தான் நினைச்சிருப்பாங்க. அது எங்கேயோ வட லண்டன்ல இருக்கு.''

இடையே போக்குவரத்தில் சற்று நெரிசல் ஏற்பட்டு விட, டாக்ஸி ஒதுங்கும்படியானது. இதுபோன்ற ஒன்றைத்தான் டூபென்ஸ் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

''சீக்கிரம்'' - ஜானே காதுக்கு மட்டும் விழும்படி உச்சரித்தாள். ''வலது பக்கக் கதவைத் திற.''

இரு பெண்களும் போக்குவரத்துக்குள் குதித்தனர். ரெண்டே நிமிடங்களில் மற்றுமொரு டாக்ஸியில் இருவரும் விழுந்திருந்தனர் - சர் ஜேம்ஸ் இருப்பிடம் நோக்கி!

''அது!'' என்று மிகுந்த திருப்தியுடன் சொல்லிக் கொண்ட டூபென்ஸ், ''அவனுங்களுக்கு இது வேணும்'' என்றாள். ''நான் இத்தனை சமயோஜிதமான பொண்ணானு எனக்கே அவ்ளோ பெருமையாயிருக்கு! பாவம், அந்த இன்னொரு டாக்ஸிகாரன்! சொல்லாம கொள்ளாம இல்லே இறங்கி வந்துட்டோம்! இருந்தாலும் அவன் டாக்ஸி நம்பரைக் குறிச்சுக்கிட்டேன். அவன் முகவரியைத் தேடிப் பிடிச்சு நாளைக்கே பணத்தை அனுப்பிடறேன். ஓ... என்னது அது குறுக்கால? ஓஹ்...''

சாலையோடு டயர் உராயும் அதீத ஓசையும் ஒரு பெரும் குலுக்கலும் விளைந்தன. இவர்களோடு மற்றொரு டாக்ஸி வந்து மோதியிருந்தது.

''இங்கிருந்து ரெண்டடி தான்'' - மூச்சிரைக்கச் சொன்னாள் டூபென்ஸ்.

ஜானேவுக்கு அவள் பயம் ஒன்று தான் குறியாயிருந்தது. கேட்டாள்: ''நேர்ந்த அந்த மோதல், ஒரு விபத்து தானா? இல்லே வேணும்னே செய்யப்பட்டா ஒன்றா?''

''எனக்குத் தெரியலே. எதுவாகவும் இருக்கலாம்.''

கைக்குள் கை கோர்த்துக் கொண்டு இரண்டு பெண்களும் விரைந்துக் கொண்டிருந்தனர். ''இது என் கற்பனையா கூட இருக்கலாம்'' என்று திடுமென சொன்ன டூபென்ஸ், ''நமக்குப் பின்னால யாரோ இருக்கிற மாதிரியே எனக்குத் தோணுது'' என்றாள்.

''உனக்குமா? அப்போ சீக்கிரம்! ஓஹ், ப்ளீஸ், சீக்கிரம்!''

ஏறத்தாழ இப்போது சர் ஜேம்ஸின் ஜாகையின் வாசலுக்கே இருவரும் வந்திருக்க... இருவருடைய ஆன்ம பலங்களும் விறுவிறுவென கூடின. அப்போது, சட்டென்று, பார்த்தாலே பய மயக்கம் உண்டாக்குவது போலிருந்த பெரிய ராட்சஸனைப் போன்ற ஓர் ஆள், இவர்களுடைய வழியைப் பெருஞ்சுவராக மறித்தான். ''குட் ஈனிஸ், ஸ்வீட்டீஸ்'' என்றான். ''என்ன இத்தனை அவசரம், ம்?''

''நாங்க போறோம், ப்ளீஸ்'' என்றாள் டூபென்ஸ் துடுக்காய்.

''போங்க. உங்க நெருங்கிய தோழியோடுதான் ஒரு வார்த்தை பேசணும்'' - நிதானமற்றிருந்த கையை ஜானேயின் தோள் வரை எடுத்துப் போய் இறுக்கமாய்ப் பிடித்தான். பிசைந்தான். மிக அருகில், இன்னும் சில காலடிகள் நெருங்குவதைக் கேட்டாள் டூபென்ஸ். அது நண்பர்களா எதிரிகளா என்று தீர்மானிக்க நேரம் கடத்த விரும்பவில்லை இவள். தலையைக் கீழே சட்டென வளைத்து குனிந்தவள், குழந்தை வயதில் இந்த நிலையில் அப்படியே வயிற்றில் முட்டி விளையாடும் அனுபவத்தைக் காட்டி, அவனுடைய 'மையப் பகுதியில்' தன் பலமனைத்தையும் கூட்டி பேரிடியாய் முட்டினாள். இந்த குழந்தைத்தனமான இயக்கத்தின் வெற்றி உடனே கையில் கனிந்தது. *அடியைப்* பிடித்துக் கொண்டு அப்படியே நடைபாதையில் உட்கார்ந்து விட்டான் அவன். டூபென்ஸும் ஜானேவும் தத்தம் அவர்களது பாதத்தைக் கிண்டினர்; பறந்தனர். இதோ... கைக்கெட்டும் தூரத்தில் இவர்களிருவரும் நாடி வந்த வீடு. இதர காலடி ஓசைகள் எதிரொலித்தபடி நெருங்கின. சர் ஜேம்ஸின் வீட்டுக் கதவினை இருவரும் ஓடி வந்து தொட்டதும், சீரற்றுப் போன மூச்சு, இருமலாய் குவிந்துக் குவிந்து வந்து விழுந்தது. டூபென்ஸ் அழைப்பு மணியில் கையை வைத்து அழுத்திக் கொண்டேயிருக்க... ஜானே, இடியாய் வாசற் கதவில்!

இவர்களை வழிமறித்த மனிதன், முதல் படி வரை ஏறி விட்டிருந்தான். ஒரு கணம் தயங்கினான் - அந்தத் தயக்கத்தினூடே வாயிற் கதவு திறக்கப்பட்டது. ஒன்றாய் இருவரும் வரவேற்பறையில் போய் விழுந்தனர். சர் ஜேம்ஸ் அவரது லைப்ரரி கதவின் வழியே முன் வந்தார்.

''ஹல்லோ! என்னது, இதெல்லாம்?''

சற்று வேகமாய் முன்னுக்கு வந்து, நிற்கத் தடுமாறியபடி புரியாமல் விழித்த ஜானேவைச் சுற்றிக் கரவளையமிட்டார் அவர். அவளைப் பதமாகத் தாங்கியபடி லைப்ரரி வரை அழைத்துப் போய் அங்கிருந்த அகலமான நாற்காலியில் அமர வைத்தார். மேஜையிலிருந்த கண்ணாடி டம்ளரில் கொஞ்சமாய் பிராண்டி ஊற்றி அதனை ஜானேவைக் குடிக்கச் செய்தார். ஒரு

நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு நிமிர்ந்து உட்கார முடிந்த ஜானேவின் கண்களில் இன்னமும் பய நடுக்கமும் கிலியும் இருந்தன.

''ஒண்ணுமில்லே. இப்படி பயப்படாதே, குழந்தே. நீ தேவையான அளவு பாதுகாப்பா இருக்கே.''

அவளுடைய மூச்சு தற்போது சீரானது. கன்னங்களில் சராசரி நிறம் மீண்டது. சர் ஜேம்ஸ், டூபென்ஸை விடை தெரியா பார்வை பார்த்தார். ''ஆக, நீ இன்னும் சாகலே, டூபென்ஸ்! அதே மாதிரி தான் உன் ஆசை பையன் டாமியும்!''

''இளஞ்சிங்கங்கள் லிமிடெட் பலமுறை சாவின் கதவைத் தட்டிட்டு வர வேண்டியிருக்கு'' என்று தற்பெருமையாய் சொன்னாள் டூபென்ஸ்.

''அப்படித்தான் தெரியுது'' என்றார் அவர். ''உங்களுடைய கூட்டு நடவடிக்கை மாபெரும் வெற்றியில் முடிந்திருக்கு'னு நான் முடிவு கட்டிடலாமா, மிஸ் டூபென்ஸ் - அதாவது, இது -'', என்று அகண்ட நாற்காலியில் இருந்த பெண்ணைப் பார்த்துத் திரும்பியவர், ''-இதுதானே, ஜானே ஃபின்?'' - என்று கேட்டார்.

ஜானே இப்போது நிமிர்ந்து தடுமாறாமல் உட்கார்ந்துக் கொண்டாள். ''ஆமாம்'' என்றாள் சாந்தமாய். ''நான்தான் ஜான் ஃபின். உங்ககிட்டே சொல்ல என்கிட்டே நிறைய இருக்கு.''

''எனக்கு உடம்பு தேறி பரிபூரணமா சக்தி வந்த பிறகு - - - ''

''கிடையாது - இப்பவே!'' - அவள் குரல் எகிறியது. ''நான் எல்லாத்தையும் சொல்லி முடிக்கும்போது தான் என்னால பாதுகாப்பாகவே உணர முடியும்.''

''உன் இஷ்டம்'' என்றார் வக்கீல்.

அவளுக்கு நேரெதிராய் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்துக் கொண்டார் அவர். கீழ்ஸ்தாயியில் ஆன குரலில், ஜானே தொடங்கினாள்:

''பாரீஸில் ஒரு வேலையை ஏற்றுக் கொள்வதற்காக நான் *லூயிடானியாவில்* பிரயாணம் பண்ணிக்கிட்டிருந்தேன். போர் குறித்து மிகவும் பயந்திருந்த நான், எப்படியாவது என்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய ஒரு நிலையிலிருந்தேன். நான் பிரெஞ்சு படிச்சுக்கிட்டிருந்த சமயமது... அந்த டீச்சர், பாரீஸில் ஓர் ஆஸ்பத்திரியில் உதவிக்கு ஆள் தேடிக்கிட்டிருப்பதாக சொன்னார். அதனால நான் உதவத் தயாரா இருப்பதாக உடனே எழுதினேன்... அது அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனக்குனு யாரும் கிடையாது... ஆகவே உடனடியா கிளம்புவது சுலபமாயிருந்தது.

''*லூஸிடானியா* கண்ணி வெடியில் சிக்கியபோது ஓர் ஆள் என்னை நாடி வந்தான். அவனை நான் ஏற்கனவே அங்கே ஓரிரு முறை பார்த்திருந்தேன் - எதைப் பற்றியோ அல்லது யாரைப் பற்றியோ பெரும் பயத்துல அவன்

இருப்பதா நான் கணிச்சிருந்தேன். பரிதாபமாயிருந்தது. நான் ஒரு தேச விசுவாசியானு என்னைக் கேட்ட அவன், கைவசம் சில முக்கிய ஆவணத்தாள்கள் இருப்பதாகவும், அவை, நேச நாடுகளுக்கு வாழ்வா சாவா என்பதை முடிவு கட்டும் முக்கிய சாசனம் என்றும் சொன்னான். அவற்றின் ஐவாப்தாரியா என்னை உடனடியா ஆகச் சொன்னான். நான் 'தி டைம்ஸ்' பத்திரிகையில ஒரு விளம்பரத்துக்காகக் காத்திருக்கணும். குறிப்பிட்ட நேரத்துல அது வரலேனா... உடனடியா அந்த ஆவணத்தாள்களை நான் அமெரிக்கத் தூதரகத்துல ஒப்படைச்சுடணும்.

''இதைத் தொடர்ந்து பிறகு நடந்த ஒவ்வொண்ணும் எனக்கு இன்னும் ஒரு தீக்கனா மாதிரி கண் முன்னமேயே இருக்கு. இப்பவும் சில சமயங்கள்ல என் கனவுல அதையெல்லாம் நான் பார்க்கிறேன்... அந்தப் பகுதிகளை விரைவா சொல்லிடறேன். திரு. டேன்வர்ஸ் விளம்பரத்துக்காக என்னைக் காத்திருக்கச் சொன்னார். நியூயார்க்கிலிருந்தே அவர் பின்தொடரப்பட்டிருக் கலாம். ஆனா அவர் அப்படி நினைக்கலே. முதல்ல எனக்குத் துளி சந்தேகம் கிடையாது. ஆனா, ஹோலி - ஹெட்'டுக்குப் போக படகு ஏறினதிலிருந்து நான் இருப்புக் கொள்ளாம ஆனேன். என்னை ரொம்பக் கவனமா கவனிச்சுக்கிட்டே ஒரு பொம்பிளை அங்கே இருந்தா... சாதாரணமா பிரயாணத்துல நண்பராகும் 'ரயில் சிநேகத்தையும்' என்னுடன் உருவாக்கிக்கிட்டா. அவ - திருமதி வாண்டே - மேயர். ஆரம்பத்துல என் மேல அத்தனை கனிவா அவ இருப்பதற்கு நான் மனசுல பாராட்டவே செஞ்சேன். இருந்த போதிலும், அப்பவும் கூட. எனக்குப் பிடிக்காத ஏதோ ஒண்ணு அவளிடம் தென்படுவதாகவே நான் நினைச்சேன். பிறகு, அந்தப் படகுல, ஒரு வித்தியாசமான தாக்கத்தை உண்டு பண்ணவல்ல ஆம்பிளை ஒருத்தன் கூட அவ பேசிக்கிட்டு வருவதை நான் கவனிச்சேன். அவங்க பார்த்த விதத்தை வெச்சு ரெண்டு பேருமே என்னைப் பற்றித் தான் பேசிக்கிட்டிருக்காங்க என்பது எனக்கு விளங்கிச்சு. அப்போ, உடனேயே, கப்பல்ல டேன்வர்ஸ் என்கிட்டே அந்த வழுவழு உறையைக் கொடுத்தபோது என் பக்கத்திலேயே இவளும் இருந்தது என் நினைவுக்கு வந்தது. இது நடப்பதற்கு முன்னரே, ஓரிரு முறை அவர் கிட்டேயே பேசிட இவ முயற்சி செய்த கட்டங்களும் என் நினைவுக்கு வந்தது. பயப்பட ஆரம்பிச்சேன்... ஆனா இதுக்குப் பரிகாரமா என்ன பண்ணுவது என்பதே எனக்கு விளங்கலே.

''ஹோலி - ஹெட்'டுலேயே தங்கிட்டு மேற்கொண்டு லண்டனுக்குப் பயணமாகாம நின்னுடலாம்னு கூட ஒரு விபரீத முடிவுக்கு நான் சென்றேன்... ஆனா அது எத்தனை மடத்தனம் என்பதும் உடனேயே விளங்கிச்சு. அந்த நேரத்துல என் கையிலிருந்த ஒரே ஒரு சிறப்பான வழி என்ன'னா... எதையும்

நான் கவனிக்காத மாதிரி அப்பட்டமா நடிச்சுக்கிட்டு, நல்லதே நடக்கும்னு எதிர்பார்த்துச் செல்வது தான். செஞ்சேன். நானே பாதுகாப்பா நடந்துக்கிட்டா அவங்களால என்னை எப்படி அடைய முடியும்! இந்த நினைப்பு தந்த ஊக்கத்தாலே, அப்படி ஒரு பாதுகாப்பு நடவடிக்கையையும் நான் முன்னமேயே செய்து முடிச்சிருந்தேன் - *வழுவழு பாலிதீன் உறையைப் பிரிச்சு, அதனுள்ளிருக்கும் ஆவண நகலை உருவியெடுத்துட்டு, வெற்றுத் தாள்கள் ரெண்டை உள்ளே செருகி, பழையபடி தைத்தது தான் அது.* ஆக, என்கிட்டேயிருந்து பலவந்தமா அதை யாராவது பறிக்க நினைச்சா - ஆகப் போவது ஒண்ணும் கிடையாது.

''கையில் இருக்கும் உண்மையான ஆவணத்தை எப்படிப் பதுக்குவது என்பது தான் என்னை எல்லையற்று பயமுறுத்தியது. கடைசியா அதை எடுத்து தட்டையா விரிச்சுப் போட்டேன். அதிலிருந்தவை மொத்தமே ரெண்டு தாள்கள்தான். அந்த ஒவ்வொன்றையும் ஒரு சஞ்சிகையின் விளம்பரப் பக்கங்களுக்கு முன்னும் பின்னுமாய் வெச்சேன். ஓர் உறையிலிருந்து உருட்டி எடுத்த சொற்பப் பசையின் உதவியோடு அந்த ஆவணத் தாள்களின் நுனிப் பகுதியை சஞ்சிகையோடு அழுத்தமா ஒட்டினேன். என் மேலங்கியின் பாக்கெட்டில அந்த மேகஸினை அஜாக்கிரதையா செருகிக்கிட்டுப் பயணமானேன்.

''ஹோலி - ஹெட்ல, கும்பல் தூக்கலாயிருந்த ஒரு பெட்டிக்குள்ளே மாறி ஏறிக்கிட்டேன். ஆனா, அதுல, ஒரு கூட்டம், விளக்க முடியாத வகையில் என்னைத் தள்ளியும் இழுத்தும் அலைக்கழிச்சு, நான் எந்தப் பக்கம் போக கூடாதுனு நினைச்சேனோ அதே பக்கத்துக்கே அழுத்தி அழுத்தித் தள்ளுவதா உணர்ந்தேன். அது ஒரு மர்மமானதாகவும் போன பயத்தை மறுபடியும் கொண்டு வருவதாகவும் உணர்ந்தேன். என் கட்டுப்பாடில்லாத இந்த ஆட்டம் முடிஞ்ச போது, நான், என்னை, திருமதி வாண்டே - மேயருடனான முதல் வகுப்புப் பெட்டியில் கண்டெடுத்தேன். அந்தப் பெட்டியின் கதவு வரை போய் அப்படியே அடுத்த பெட்டிக்கு முதல் வேலையா மாறிட முயன்றேன்... ம்ம்... மற்ற பெட்டிகளில் பிதுங்கிய கும்பலால் நான் மறுபடி வந்து உட்கார்ந்து விடும் நிலை உருவானது. இந்தப் பெட்டியிலும் நிறைய பிரயாணிகள் இருக்கின்றனர் என்ற எண்ணத்தால் 'பயம் வேண்டாம்..!' என, என்னை நானே ஆறுதல் செஞ்சுக்கிட்டேன் - 'அதோ, எதிரில் அழகாய் தோன்றும் ஓர் ஆடவன் - அவனுக்கெதிராய் அவனுடைய மனைவி. இப்படிப் பலர்.' ஆகவே இங்கிருப்பதிலும் நான் அதிகம் பயப்படாத நிலை இருந்தது. - இது, லண்டனைக் கடக்கும் வரை...! இங்கே பலர் இறங்கிட்டாங்க, பெட்டி ஏறக்குறைய காலி. கதவண்டை மட்டும் கொஞ்சம்

பேர் நின்னுக்கிட்டிருந்தாங்க. நான் அப்படியே இருக்கையில் தலையைத் தூக்கியபடி சாய்ந்து கண்களை மூடிக் கொண்டேன். நான் தூங்கிப் போயிட்டேன்னு அவங்க நினைச்சிருக்கணும்... ஆனா என் கண்கள் முழுவதுமா மூடலே. அப்போ, சட்டுனு, அந்த அழகாய் தோன்றிய ஆடவன், அவன் பையிலிருந்து என்னத்தையோ எடுத்து அதை திருமதி வாண்டே - மேயர் கையில கொடுத்தான்... அப்படி அவன் செஞ்ச போது கண்ணடித்தான்!

''அந்த ஒரே ஒரு கண்ணடிப்பு, என்னை நுனி முதல் அடி வரை எப்படி உறையச் செய்ததுனு எனக்கு விவரிக்கத் தெரியலே... அப்போ எனக்கு தோணின ஒரே ஒரு நினைப்பு - எப்படியாவது, எத்தனை வேகமா முடியுமோ அத்தனை வேகமா நழுவி, கூட்டம் நிறையா இருக்கிற கதவுப் பகுதிக்கு ஓடிடணும். சாதாரணமாகவும் அதிர்வற்றும் இருப்பவளைப் போலக் காட்டிக்கிட்டு எழுந்தேன். ஆனா, அவங்களுக்கு என்னவோ புரிஞ்சிருக்கு - எனக்குத் தெரியலே... ஆனா அப்படித்தான் நினைக்கிறேன் - ஆனா சடுதியில் திருமதி வாண்டே - மேயர் 'இப்பவே' அப்படியானார் - இதைக் கேட்ட நான் கத்த வாயெடுக்கும் போது எதையோ என் மூக்கிலும் வாயிலும் வெச்சுத் திணித்தார். அந்த கணத்திலேயே தெறிச்சு சிதறிடுச்சோ என்று நான் எண்ணுமளவுக்கு பின்னந்தலையில ஒரு பேரிடி விழுந்தது.''

இப்போது ஜானே நடுநடுங்கினாள். சர் ஜேம்ஸ் கனிவாகவும் இரக்கத்துடனும் என்னவோ முணுமுணுத்தார். ஒரே நிமிஷத்தில் சராசரியானாள், தொடர்ந்தாள்:

''என் நினைவு திரும்பும் வரை எத்தனை நேரம் ஆகியிருந்ததோ... எனக்குத் தெரியலே. ரொம்ப முடியாம வந்தது. கடும் வலி வலிச்சது. ஒரு அழுக்கான மெத்தையில் நான் கிடந்தேன். அங்கே ஒரு தடுப்பு ஸ்க்ரீன் இருந்தது. ஆனாலும், ரெண்டு பேர் பேசிக்கிட்டிருப்பதை நான் கேட்டேன். அதுல ஒண்ணு திருமதி வாண்டே மேயர். கவனிக்க முயற்சி செஞ்சேன் - ஆனா முதல்ல என்னால அதிகம் உள் வாங்கிக்க முடியலே. ஆனா புரிய ஆரம்பிச்சதும், மீண்ட மூச்சு மறுபடியும் அடைக்க ஆரம்பிச்சது - ஜஸ்ட், பிறுபிறுத்துப் போயிட்டேன். அப்பவே, அந்த நிமிஷமே, அங்கேயே, நான் கத்திடாம இருந்ததை நினைச்சா எனக்கு ஆச்சரியமாயிருக்கு.

''வழுவழு பாலிதீன் உறைக்குள்ளே ஆவணத்தாள்களை அவங்க பார்க்கலே. வெற்றுத் தாள்களை மட்டும் பார்த்துட்டு வெறியாயிருந்தாங்க. நான் ஒரு வேளை தாள்களை மாற்றியிருப்பேனா என்று அவங்களுக்குப் படலே - மாறாக, ஒரு வேளை அந்த டேன்வர்ஸே கூட வெறும் வெற்றுத் தாள்களைத் தான் சுமந்துக்கிட்டு வந்திருப்பாதானோ... உண்மையான ஆவணத்தாள்கள் வேறு வழியில வேறொருத்தன் மூலமா அனுப்பப்

பட்டிருக்குமோ என்றெல்லாம் கதறினாங்க. அந்த உண்மையைக் கண்டுபிடிக்க - - -'' கண்களை மூடிக் கொண்டாள் ஜானே. ''- - - *என்னை சித்ரவதை செய்ய முடிவெடுத்தாங்க.''*

''பயம்னா என்ன - அதாவது நிஜ பயம்... உயிர்ப் பிடுங்கும் பயம்... குடலைப் புரட்டிப் போடும் நிதர்சன பயம்னா என்னனு - எனக்கு அதுக்கு முன்னாடி தெரியவே தெரியாது. ஒரு தடவை ரெண்டு பேரும் என்னைப் பார்க்க வந்தாங்க. நான் கண்களை இறுக்கமா மூடிக்கிட்டு இன்னும் மயக்கமா இருப்பது போலவே காட்டிக்கிட்டேன். திரும்பிப் போயிட்டாங்க. பைத்தியக்காரத்தனமா சிந்திக்க ஆரம்பிச்சேன். நான் என்ன பண்ண முடியும்? அவங்க சொன்ன மாதிரியே சித்ரவதையைத் தொடங்கினா, என்னால அதை நெடு நேரம் தாங்க முடியாதுனு எனக்கே தெரியும்.

''திடுமென்று, ஏதோ ஒரு சக்தி, நினைவிழப்பு எனும் பதத்தினை என் மூளைக்குள்ளே போட்டது. இந்த சேதி என்னை ஈர்த்த ஒன்று. இதைப் பற்றி நிறையவே நான் படிச்சுமிருக்கேன். இது பற்றிய எல்லாத்தையும் நான் விரல் நுனியில் வெச்சிருந்தேன். சொதப்பிடாம இந்த ஏமாற்று வேலையை மட்டும் நான் நிறைவேற்றினா - தப்பிச்சுடலாம். இறைவனைப் பிரார்த்தித்து வேண்டினேன். நீண்ட உள் மூச்சு வாங்கி விட்டேன். பிறகு என் கண்களைத் திறந்த நான், பிதற்ற ஆரம்பிச்சேன் - *ஃபிரெஞ்சில்!*

ஸ்கிரீனை விலக்கிட்டு உடனடியா வந்துட்டா வாண்டே மேயர். என் மூச்சை அப்படியே நிறுத்தி விடும் அளவுக்கு. என்னருகே குனிந்த அவளுடைய முகம் நயவஞ்சகமா இருந்தாலும் - நான் அவளைப் பார்த்து மிகவும் சந்தேகமா முகத்தை வெச்சுக்கிட்டுப் புன்னகைத்தேன்... அப்புறம் ஃபிரெஞ்சிலேயே நான் எங்கேயிருக்கேன்'னு கேட்டேன்.

''இது அவளைக் குழப்பிச்சு - என்னாலப் பார்க்க முடிஞ்சுது! அவ பேசிக்கிட்டிருந்த ஆளைக் கூப்பிட்டா. முகத்தைத் திரைமறைவு நிழல்ல வெச்சுட்டு அவன் நின்னான். அவன் என்கிட்டே ஃபிரெஞ்சுல பேசினான். அவன் குரல் மிக சாதாரணமாகவும் சாந்தமாகவும் இருந்தாலும் கூட - ஏனோ தெரியலே - என்ன காரணமோ புரியலே - அவன் என்னை பயமுறுத்தினான் - இருந்தாலும் என் பாத்திரத்தை நான் செவ்வனே செஞ்சுக்கிட்டிருந்தேன். நான் எங்கே இருக்கேன்'னு மறுபடியும் கேட்ட நான், மேற்கொண்டு போக ஆரம்பிச்சேன். 'எனக்கு எதுவோ முக்கியமான ஒண்ணு தெரிஞ்சிருக்கு... ஆமாம், ஆமாம்... மிக முக்கியமான ஒண்ணைப் பற்றி எனக்குத் தெரியும்... யெஸ்... ஓஹ்...! போன நொடி வரை நினைவிலிருந்த அது இப்ப காணலியே... எங்கே... எங்கே'னு உணர்ச்சிபூர்வமா சரடு விட்டேன் அதிக அளவுக்கு குழம்பியிருப்பதைப் போல எப்படியெல்லாம் காட்டிக்க

முடியுமோ அப்படியெல்லாம் செஞ்சேன். அவன் என் பேர் என்னன்னு கேட்டான். அப்படி ஒண்ணும் எனக்குத் தெரியாதுனேன்! 'ஓஹ்... வேற எதுவுமே நினைவுக்கு வர மாட்டேங்குதே..!'

''சட்டென்று என் மணிக்கட்டைப் பிடித்தவன் அதை முடிந்த வரை திருகி முறுக்கி இம்சித்தான். அந்த வலி - ஆ! நான் கதறினேன். கத்தினேன். அவன் தொடர்ந்தான். கதறு கதறுனு கதறினேன் - ஃப்ரெஞ்சிலேயே. எத்தனை நேரம் இப்படியே கத்தியிருப்பேன்னு தெரியலே... அதிர்ஷ்டவசமா மயங்கிட்டேன். மயக்கத்துக்குள்ளே விழுவதற்கு முன்னாடி நான் அவன் பேசக் கேட்ட கடைசி வாக்கியம்: 'இந்தச் சின்னப் பொண்ணுக்குப் போய் ஞாபக சக்தி இழப்பு, அது இதெனல்லாம் தெரிஞ்சிருக்க நியாயமில்லே. ஆக - இவ நடிக்கலே.'

''மறுபடியும் நான் மீண்டபோது, திருமதி வாண்டே - மேயர், என்னிடம் தேனாகவும் பாகாவும் இருந்தார். அப்படியிருக்கும்படி அவளுக்குக் கட்டளைகள் வந்திருக்கும்னு நினைக்கிறேன். அவ என்கிட்டே ஃபிரெஞ்சில பேசினா - எனக்கு ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டு விட்டதாகவும் அதனால் தான் ரொம்ப முடியாம இருந்ததாகவும் சொன்னா. சீக்கிரம் எனக்குத் தேவலையாகணும்னும் சொன்னா. நான் வெறிக்க வெறிக்க முழிப்பதையே தொடர்ந்து செஞ்சுக்கிட்டிருந்தேன். ட்ரீட்மெண்ட் செய்தப்போ, டாக்டர் என் கையை முறுக்கிட்டதா மலங்க மலங்க முழிச்சுக்கிட்டே பரிதாபமா சொன்னேன். நான் இப்படி சொன்னதும் அவ கொஞ்சம் லகுவானா.`

''கொஞ்சங் கொஞ்சமா, அவ அறையை விட்டு விலகி மொத்தமா வெளியே இருக்கிற நிலைமையும் வந்தது. எனக்குள்ளே சந்தேகம் இருந்ததால நான் பேசாம அமைதியா மேலும் கொஞ்ச காலம் 'கிடந்தேன்'. முடிவுல, மெல்ல எழுந்த நான், அறையைப் பரிசோதிக்கும் இலக்கோட அறையை சுற்றி வந்தேன். ஒரு வேளை யாராவது மறைந்திருந்து கண்காணிச்சுக்கிட்டிருந்தாலும், நானிருந்த சூழ்நிலையில தட்டுத் தடுமாறி நடப்பதுதான் சாத்தியம்னு சந்தேகம் வராம இருக்க - குழப்பமா தடுமாறித் தடுமாறி நடந்தேன்! அது, அழுக்கும் பூஞ்சணமும் பிடித்திருந்த ஓர் அசுத்தமான அறை. ஜன்னல்கள் கிடையாது - இது ஆச்சரியமாயிருந்தது. கதவு பூட்டத்தான் பட்டிருக்கணும்னு நான் நினைச்சேன் - ஆனா அதைப் போய் சரி பார்க்கலே. போர் காலத்தைச் சித்தரிக்கும் சில நசிந்துப் போயிருந்த பழைய படச் சட்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.''

ஜானே சொல்லும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த இரு நேயர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து, ''ஆஹ்!'' என்றனர். ஜானே ஒப்புதலாய் தலையசைத்தான்.

''ஆமாம் - அது ஸோ-ஹோ வீடேதான் - திரு ஃபோர்டு சிறை வைக்கப்பட்டிருந்த அதே வீடு. அதே அறை. ஆனா, அப்போ, நான்

லண்டன்ல தான் இருக்கேன் என்பதே கூட எனக்குத் தெரியாது. ஒரே ஒரு விஷயம் மட்டும் என்னை படு மோசமா கவலைப்படுத்திக்கிட்டு இருந்தது. அங்கே, என் மேலங்கி, கோணல் மாணலா ஒரு நாற்காலியின் முதுகுல தொங்குவதைப் பார்த்தபோது தான் என் இதயம் சாதாரணமாச்சு. அந்த மேகஸின் சுருட்டப்பட்ட நிலையில் இன்னும் மேலங்கியின் பாக்கெட்டில் கிடந்தது!

''என்னை யாரும் மறைந்திருந்து வேவு பார்க்கலே என்பது நிச்சயமானாதான், மேற்கொண்டு என்னால இயங்க முடியும்! ஜாக்கிரதையா சுற்றுமுற்றுமிருந்த சுவரைப் பார்த்தேன். அதுல ஏதாவது ஒட்டுக் கேட்கிற மாதிரியோ, இல்லே ஒட்டுப் பார்க்கிற மாதிரியோ எந்தத் துளைகளும் இப்போ என் கண்களுக்குத் தெரியலே - இருந்தாலும், அப்படி ஏதாவது எங்கேயாவது இருக்கணும் என்பதுல மட்டும் நிச்சயமாயிருந்தேன். திடுதிப்புனு எழுந்து, அங்கேயிருந்த டேபிள் நுனியில ஏறி உட்கார்ந்துக்கிட்ட நான், என் முகம் முழுவதையும் ரெண்டு உள்ளங்கைகளுக்குள் புதைச்சுக் கிட்டு, ஊளையிடும் தினுசுல. 'என்னாச்சு எனக்கு...? ஒண்ணும் புரியலியே... என்னாச்சு உனக்கு..? நான் யார்...? நான் யார்...?'னு அழற மாதிரி செஞ்சேன். உடனடியா ஏதோ உடை சரசரக்கற ஓசை தீர்க்கமா எனக்குக் கேட்டது - தரையில் கால்கள் மெல்ல நகரும் ஓசையும் கூடவே! இவை எனக்குப் போதுமானதாக இருந்தன - நான் கண்காணிக்கப்படு கிறேன்!

''இதைக் கவனிச்சுட்டு கேள்விக்குறியா நான் திரும்பி அமர்ந்தேன். மறுப்பா தலையை அசைச்சுக்கிட்ட நான், தளம் மாறினேன். அதைப் பற்றி ஏதோ ஞாபகம் வந்துட்ட மாதிரி நான் உணரணும்... ஏதோ நடந்த அந்த அத்தனையும் அலை அலையா வேகமா எனக்குள் திரும்பி வர்ற மாதிரி... அப்புறம், பிறகு, உடனேயே... அந்த ஞாபகங்களைப் பிடிச்சு நான் கைவசம் ஆக்குவதற்கு முன்னாடியே... அவை மறுபடியும் பறந்து போயிடுச்சு என்பது மாதிரியும்...! இந்தத் தளத்துக்கு மாறினேன். இயங்கினேன். இதுக்கு நான் அவளோட உறவு முறை அப்படினா அவ. அவ எனக்கு அத்தையாம். ஆகவே இனிமே நான் அவளை 'ரீட்டா அத்தே'னு தான் கூப்பிடணும்'னா. நான் மரியாதையா அப்படியே செஞ்சேன். என் ஞாபகங்கள் சீக்கிரமே திரும்பிடும்னு சொல்லி நான் எதுக்கும் பயப்பட வேணாம்'னா அவ.

''அது ஒரு நடுநடுங்கும் இரவு - என் வாழ்க்கையில. அவளுக்காகக் காத்துக்கிட்டு நான் உட்கார்ந்திருந்தபோது என் திட்டங்களை நான் வகுத்திருந்தேன். ஆவணத்தாள்கள் இதுவரைக்கும் பாதுகாப்பா தானிருந்தன... ஆனா, அவை, இது போலவே எப்பவும் இருக்கும்னு நான் ஒரு குருட்டு நம்பிக்கையைப் பைத்தியக்காரத்தனமா வெச்சுக்கக்கூடாது.

இல்லையா...?! அந்த மேகஸினை அவங்க எப்போது வேணும்னாலும் தூக்கிக் கடாசிடலாம். மணி காலைல ரெண்டு இருக்கலாம்னு தோராயமா தெரியற வரைக்கும் உட்கார்ந்தபடி முழிச்சுக்கிட்டே காத்திருந்தேன். அப்போ எத்தனைக்கெத்தனை ஓசையே வராம எந்திரிக்க முடியுமோ அப்படி எழுந்து, இருட்டிலேயே இடப்பக்க சுவரைத் தடவிக் கிட்டு முன்னேறினேன். மிக மிக மிருதுவா - மார்குரெட் நகை நட்டோட மின்னும் படத்தை - அப்படியே ஆணியிலிருந்து எடுத்து இறக்கினேன். பிறகு என் கோட்டை நாடி துளாவிய நான் - அந்த மேகஸினையும், அதுக்குள்ளேயே நான் செருகி வெச்சிருந்த ஓரிரு தபால் உறைகளையும் வெளியே எடுத்துக்கிட்டேன். இப்போ மெது மெதுவா கிஞ்சித்தும் சர்ரக் ஓசையெழாம படத்தின் பின்னாலிருந்த ப்ரௌன் தாளை உறிச்சிடுத்தேன்... ஏற்கனவே சஞ்சிகையிலிருந்து பிய்த்தெடுத்து நான் வெச்சிருந்த அந்த விலைமதிப்பற்ற ஆவணப் பக்கங்களை உள்ளே போட்டேன்... உறிச்சிருந்த படத்தின் பின்பக்கத்து ப்ரௌன் தாளை அப்படியே மறுபடியும் மூடினேன்... கையிலிருந்த இரண்டு தபால் உறைகளின் மூடும் இதழ்களிலிருந்து எதேஷ்டமா 'கம்'மை சுரண்ட முடிஞ்சது... அதை அப்படியே ப்ரௌன் காகிதத்தின் ஓரங்களில் தடவி பழையபடியே ஒட்டினேன். பின்பக்கம் பிரிக்கப்பட்டு ஒட்டப்பட்டுள்ளது என்று யாரும் கண்டுபிடிக்கவே முடியாத அளவுக்கு செஞ்சேன். அதனிடத்திலேயே சமர்த்தா மாட்டினேன். மேகஸினை எடுத்த இடத்திலேயே வெச்சேன். இருட்டில தவழ்ந்து என் இடத்துக்குத் திரும்பினேன். நான் ஒளித்து வைத்துள்ள இடம் குறித்து எனக்கு திருப்தியே. அவங்களுடைய படங்களையே உடைச்சு உள்ளேயிருக்கா என்று, அவங்க இடத்துலேயே தேடும் அளவுக்கு நிச்சயம் போக மாட்டாங்க... என்ன சொல்றீங்க?! ஆக, கடைசியா, டேன்வர்ஸ் அவனுடன் கூட வெற்றுத் தாள்களைத் தான் கொண்டு வந்ததாகவும் நிஜ ஆவணம் யார் மூலமாகவோ வேற வழியில போயிருக்கு என்றும் முடிவுக்கு வந்து, என்னைத் தூக்கி வெளியே போட்டுடுவாங்க என்ற எதிர்பார்ப்பிலிருந்தேன்.

''சொல்லப் போனா, அவனுங்க, இப்படித்தான் முதல்ல முடிவு செஞ்சாங்க - ஆனா, அந்த முடிவு நான் நினைச்ச மாதிரி சாதகமா அமையாம எனக்கு ஒரு பெரும் ஆபத்தா அமைஞ்சது. எப்படியெல்லாம் என்னிடமிருந்து உண்மையைப் பிடுங்க முயற்சிக்கணுமோ அந்த அத்தனையையும் அவங்கப் பண்ணி விட்டதாகவும் - அதனாலேயே என்னை 'அப்படியே வெளியே விட்டு விடும்' பேச்சுக்கே இடமில்லை என்றும் அவனுங்க இறுதி செஞ்ச விஷயத்தை நான் பிறகு தெரிஞ்சுக்கிட்டேன். காரணம்: நான் ஆவணத்தை எங்கேயாவது மறைச்சு வெச்சிருக்கலாம் எனும் ஊகத்தினாலே என்னை

அவனுங்களுடனே வெச்சுப்பது - எப்படியும் எனக்கு ஞாபகம் திரும்பும்... அப்போ அதை எங்கே பதுக்கி வெச்சேன் என்ற ரகசியத்தை என்கிட்டேயிருந்தே பிடுங்கி விடுவது - இதுதான்! அந்தக் கூட்டத்துக்கே 'பாஸ்' போல இருந்தவனுடைய ஆலோசனை இது. வாரக் கணக்கா என்னைக் கண்காணிச்சுக்கிட்டே இருந்தானுங்க. சில சமயம் - பாவம் நடிக்கிறேன் என்பதை அணுகளவும் தெரியாத அவனுங்க - மணிக் கணக்கா கேள்விகள் கேட்டுத் துளைச்செடுப்பாங்க... ஆனாலும், எப்படியோ, நொடியளவு கூட என் போர்வையை விலக்கி நான் காட்டிடலே. ஓஹ்... இதுக்கு நான் பட்ட உளைச்சல்.. சொல்லி மாளாது!

''என்னை மறுபடியும் ஒரு முறை அயர்லாந்துக்கு அழைச்சுக்கிட்டுப் போனாங்க. பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் என்னைத் தீவிரமா கண்காணிச்சாங்க - ஒரு வேளை முதல் பிரயாணத்தின் போது எங்கேயாவது நான் பதுக்கி வெச்சுட்டு அந்த ஞாபகம் வந்து அதைத் தேடி ஓடறேனா'னு பார்க்க! திருமதி வாண்டே - மேயரும் அவளோட இருந்த இன்னொரு பெண்ணும் என்னை விட்டு இப்படி அப்படி விலகலே. நான் வாண்டே - மேயரின் உறவுக்காரப் பொண்ணுனும் *லூஸிடானியா* கப்பல்ல ஏற்பட்ட அதிர்ச்சியினால நினைவிழந்தவனும், என்னைப் பற்றிப் பேசிக்கிட்டாங்க. என்னோட அடையாளத்தை வெளியே காட்டிக்காம உதவி கேட்டு மன்றாட, எனக்கு சாதகமா ஒரு ஜீவன் கிடையாது. அப்படியே நான் யாரிடமாவது என் உண்மை நிலையைச் சொல்லிக் கெஞ்சியிருந்தேன்னு வையுங்க... திருமதி வாண்டே மேயரின் அழகென்ன, கவுரவமென்ன, செல்வமென்ன, செல்வாக்கு தான் என்ன.. ஆகவே, மூளை குழம்பினதன் ஒரு பகுதியா தான் நான் இப்படியெல்லாம் பிறதற்றுறேன்'னு கருதி, இந்த வாண்ட்டே - மேயர் என்னைப் பற்றி பரப்பியிருக்கும் அறிமுகத்தை முழுசா நம்பி, மறுபடியும் என்னைப் 'பாதுகாப்பா' எனது ஒரே உறவான அவகிட்டேயே தானே ஒப்படைச்சுட்டுப் போவாங்க! அப்படினா - ஓஹ்... நான் இத்தனை நாளா அவளை ஏமாத்தித்தான் வந்திருக்கேன் என்பது மட்டும் தெரிஞ்சுட்டா... ஓஹ்... வரிசையா எனக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கொடுமைகளை நினைச்சாலே கதி கலங்கிச்சு.''

அனைத்தும் தனக்கும் புரிவது போல் தலையசைத்து ஏற்றுக் கொண்டார், சர் ஜேம்ஸ். ''திருமதி வாண்டே - மேயர் நாடறிந்த ஒரு பிரபல நபர். அதன் பலத்தாலும் சமுதாயத்துல அவங்களுக்கு இருக்கிற கீர்த்தியின் காரணத்தாலும், உணர்ச்சிபூர்வமா நீ அவங்களுக்கு எதிராகப் பேசும் எதுவுமே அங்கீகாரம் பெற்றிருக்காது.''

''இதே... இதையே தான் நானும் நினைச்சேன். இந்தக் களேபரம், என்னை, போர்ன் மவுத்'ல இருக்கும் ஒரு காப்பகத்துக்கு அனுப்புவதுல போய் முடிஞ்சுது. இது, ஒரு போலி நடவடிக்கையா, இல்லே, உண்மையாகவே எனக்கு மருத்துவம் தர முயலுகிறார்களா அப்படினு, எனக்கு முதல்ல விளங்கவே இல்லை. அங்கே ஒரு நர்ஸ் தான் என்னைக் கவனிச்சுக்கிட்டா. நான் ஒரு ஸ்பெஷல் நோயாளி! அவ மிக கருணை யாகவும், தில்லுமுல்லற்ற ஒரு சாதாரணப் பெண்மணியாகவும் பழகினதால ஒரு கட்டத்துல அவளை நான் முழுக்க நம்ப ஆரம்பிச்சேன். இறைவன் கருணையால் நடந்த ஒரு நிகழ்ச்சி... நான் அவங்க வைத்த பொறிக்குள்ளே தவறி விழுவதிலிருந்து என்னைக் காப்பாற்றிச்சு. நானிருந்த அறைக் கதவு சற்று ஒருக்களிச்சிருந்தது. அவ அறைக்கு வெளியே யாருடனோ பேசிக்கிட்டிருப்பது கேட்டது. அவ, *அவனுங்கள்ல ஒருத்தி!* அவனுங்க, அந்த நிலைமையிலும் கூட, நான் பம்மாத்து வேலை தான் காட்டிக்கிட்டிருக் கேன்'னு நம்பினாங்க... இதை உறுதிப்படுத்தும் பொறுப்பில தான் அவ என்னிடம் நியமிக்கப்பட்டிருந்தா! அந்த நிமிஷத்துல நம்பிக்கை எனும் அத்தியாயமே என் வாழ்விலிருந்து பிய்த்தெறியப்பட்டது - நான் யாரையுமே நம்பப் போவது கிடையாது!

''என்னை நானே வசியம் செஞ்சுக்க ஆரம்பிச்சேன் - யெஸ். இதனால, கொஞ்ச நாட்கள்லேயே, நான் தான் நிஜ ஜானே என்பதை நானே ஏறத்தாழ மறந்துப் போயிருந்தேன். ஜானெட் வாண்டே மேயர் எனும் கதாபாத்திரத்தை மனசார நானே ஏற்றுக் கொண்டு மாறினதாலே... என் நரம்புகளும் மன இயக்கமும்... உண்மையாகவும் இருக்க முடியாம பொய்யான வசியப் பாத்திரத்தையும் தொடர்ச்சியா தாங்க முடியாம... ஓஹ்... ஆட்டம் போட்டன. நோயாளியானேன், நான். மாசக் கணக்கா படுக்கையிலேயே பிரமை பிடிச்சுக் கிடந்தேன். எதுவுமே எனக்குப் பெருசா படலே - உயிர் உட்பட - உடனடியா சாக தவிச்சேன். வருடங்கள் இதே நிலையில் உருண்டன.

''பிறகு திடீர்னு விஷயங்கள் மாற்றங் கொள்ளத் துவங்கின. திருமதி வாண்டே மேயர் லண்டனிலிருந்து வந்தாங்க. அவளும், கூட வந்த டாக்டரும் என்னைக் கேள்விகள் கேட்டாங்க. பல சிகிச்சைகள் மூலமா என்னைப் பரிசோதிச்சுப் பார்த்தாங்க. பாரீஸிலிருக்கும் ஒரு ஸ்பெஷலிஸ்ட் கிட்டே என்னை அனுப்பிப் பார்ப்பது வரை கூட உரையாடல் போச்சு. ஆனா அந்த நீண்ட தூரப் பிரயாண ஆபத்தைக் கையில எடுத்துக்க அவங்க விரும்பலே. வேற யாரோ சிலர் - நண்பர்கள் என்பது அவங்க நினைப்பு - அப்படி சிலர் என்னை எதிர்பார்த்துத் தேட ஆரம்பிச்சிருப்பது மாதிரி ஏதோ அவங்கப் பேசினதைக் கேட்டேன். அப்போ இன்னொரு விஷயமும்

எனக்குத் தெரிய வந்தது. என்னைக் கவனிச்சுக்கிட்டு, அந்த மனநல காப்பகத்திலிருந்த கில்லாடி நர்ஸ், நேரா கிளம்பி, லண்டன் ஸ்பெஷலிஸ்ட் கிட்டே போயிருக்கா! போய், தனக்கு பழைய நிகழ்வுகள் எல்லாம் மறந்தே போயிடுச்சுனு, அந்த ஸ்பெஷலிஸ்ட்டைப் பார்த்து ஆலோசனைக் கேட்டிருக்கா! அப்போ அவளுக்கு ஏதோ சில மருத்துவப் பரீட்சைகள் நடத்தப்பட்டிருக்கு - அந்தப் பரீட்சைகள், ஞாபக மறதினு இவ சொன்ன அத்தனையும் பொய்யான ஏமாத்து வேலைனு காட்டியிருக்கு - அந்த அத்தனை பரீட்சை முறைகளையும் கருத்தா கவனிச்சுக்கிட்டவ, அவற்றை அப்படியே கொண்டு வந்து என் மேல் பண்ணிப் பார்த்தா...! அந்தப் பரிசோதனைங்க எல்லாத்தையும், ஒருவேளை, இப்படிப்பட்ட தனித்துவம் வாய்ந்த வியாதியின் மேல் தன் வாழ்நாளையே அர்ப்பணிச்சு ஆய்வு செய்து வருஷக் கணக்கா வைத்தியம் பண்ணி பேர் போன அந்த ஸ்பெஷலிஸ்ட் மட்டும் என் மேல பண்ணிப் பார்த்திருந்தார்'னா... ஓஃப்... அவரை என்னால துளியும் ஏமாற்றியிருக்கவே முடியாது - என் வண்டவாளம் அத்தனையும் தண்டவாளம் ஏறியிருக்கும்...! ஆனா இந்த ஒப்பேறாத நர்ஸால உண்மையை சுலபமா கண்டுபிடிக்க முடியலே - அப்படிப் பார்த்துக்கிட்டேன் நான்! நானே, என்னை ஜானே ஃபின் என்று வருடக் கணக்கா மறந்திருந்த நிசர்சனம், அந்த அளவுக்குப் பரிசோதனைகளிலிருந்து தப்பிக்க உதவிச்சு.

''ஒரு ராத்திரிப் பொழுதுல, உடனடியாச் சொல்லப்பட்டு, வேக வேகமாக நான் லண்டனுக்கு நாடு கடத்தப்பட்டேன்! ஸோ-ஹோவிலிருக்கும் வீட்டுக்கு என்னை மறுபடியும் கூட்டிட்டுப் போனாங்க. அந்தக் காப்பகத்திலிருந்து வெளியான உடனேயே ஒரு வித்தியாசத்தை நான் உணர்ந்தேன். என்னுள்ளேயேப் போட்டு வெகு காலத்துக்கு முன்னாடி புதைக்கப்பட்டு மறக்கப்பட்டிருந்த ஒன்று, மெல்ல மெல்ல எழுந்திருப்பது போல!

''திரு தாமஸுக்குப் பணிவிடை பண்ணுவதற்காக என்னை அழைச்சுப் போயிருந்தாங்க - அப்போ இதுதான் அவர் பேர் என்பதெல்லாம் எனக்கு ஒரு மண்ணும் தெரியாது. எனக்கிருந்ததெல்லாம் - சந்தேகம் தான் - 'இதுவும் இன்னொரு பொறி!' ஆனா அவர் அத்தனை உண்மையானவரா நடந்துக் கொண்ட விதத்தாலே, ஒரேயடியா அவரை ஒரு விரோதினு என்னால ஒதுக்கிட முடியலே. ஆயினும், ஒட்டுக் கேட்கப்படும் காரணங்களால், மிக மிக ஜாக்கிரதையா வார்த்தைகளை அளந்துத் தான் நான் பேசினேன். சுவரின் உச்சியில சற்றே பெரிய ஒரு துளையிருக்கு!

''ஆனா அந்த ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் ஒரு சேதி கொண்டு வரப்பட்டது. இருந்த அத்தனை பேரும் கலவரமானானுங்க.

அவனுங்களுக்குத் தெரியாம, பேசினதைக் கேட்டேன். தாமஸைக் கொன்னுடனும் எனும் ஸ்திரமான வார்த்தைகள் வந்தன. அப்புறம் நடந்த எல்லாமும் உங்களுக்கே தெரியும்... அதனால நான் சொல்லத் தேவையில்லே. அந்தப் படத்தின் பின்னால் பதுக்கி வெச்ச இடத்திலிருந்து ஆவணத்தை வேக வேகமாக எடுத்து விட வசதியான நேரம் வாய்க்கும்னு தான் நான் நினைச்சேன்... ம்ம்... அதுக்குள்ளே நான் அகப்பட்டுட்டேன். உடனேயே அவர் தப்பிச்சு ஓடுவதா ஓர் அலறல் விட்டேன் - மார்குரெட்டிடம் திரும்பிப் போக விரும்புவதாக சத்தம் போட்டேன். அதே பெயரை மூணு முறை வெகு சத்தமா நான் கூவினேன். இதனால நான் திருமதி.வாண்டேமேயரைத் தான் குறிப்பிடறேன்னு மற்றவங்க நினைப்பாங்க என்பது எனக்குத் தெரியும்... ஆனா, இது, அந்தப் படத்தை நினைக்கச் சொல்லி திரு தாமஸ் ஃபோர்டைத் தூண்டி விடும் என்பது என் ஊகம். அதே படத்தைத் தான் அவர் முதல் நாள் கழற்றியிருந்தார் - இதுதான் அவரை நம்ப விடாம என்னை சந்தேகிக்க வெச்சுது.''

சற்று தயங்கினாள். ''அப்படினா'' என்று மெதுவாய் சொன்ன சர் ஜேம்ஸ், ''அந்த ஆவணத்தாள்கள் இன்னமும் அந்தப் படத்துக்குப் பின்னாலேயே தானிருக்கு?'' என்றார்.

''ஆமாம்'' - சொன்ன ஜானே, நீண்ட கதை அவளுக்குள் உண்டு பண்ணியிருந்த மன இறுக்கமெல்லாம் தளர்ந்துப் போக அப்படியே சோஃபாவில் சாய்ந்துக் கொண்டாள்.

சர் ஜேம்ஸ் இப்போது எழுந்துக் கொண்டார். மணிக்கட்டிலிருந்து கைக்கடியாரத்தைப் பார்த்தார். ''வா'' என்றார். ''நாம இப்பவே இந்த நொடியே போயாகணும்.''

''இந்த ராத்திரியிலா?'' - ஆச்சரியப்பட்டுப் போய் கேட்டாள் டூபென்ஸ்.

''நாளை என்பது காலங்கடந்த ஒன்றாகி விடும்'' - என்று ஆழ்ந்து சொன்னார் சர் ஜேம்ஸ் பீல். ''தவிர, இந்த ராத்திரியே போவதன் மூலமா, அந்தப் பெரும் மனிதனை - உலக மகா கிரிமினலைக் கையும் களவுமா சுற்றி வளைத்துப் பிடித்து விடும் வாய்ப்பிருக்கு.''

அங்கு மயான அமைதி உருவானது... சர் ஜேம்ஸ் தொடர்ந்தார்: ''நீங்க இங்கே வரை பின்தொடரப்பட்டிருக்கீங்க - இதுல துளி சந்தேகம் வேண்டாம். நாம வீட்டை விட்டுக் கிளம்பினா, மறுபடியும் பின் தொடரப்படுவோம். ஆனா பிடிக்கப்பட மாட்டோம்... ஏன்னா, *மிஸ்டர் ப்ரௌனுக்கு ஒருபடி முன்னாடி நாம போய்க்கிட்டே இருக்கணும்* என்பது தான் அவனது திட்டமே - அப்போ தான் அவனுக்கு அந்த ஆவணம் கிடைக்கும் - புரியுதா? ஆனா ஸோ-ஹோ வீடு இரவும் பகலும் போலீஸ் கண்காணிப்புல இருக்கு. பல கண்கள் அந்த வீட்டை மொய்த்துக் கொண்டிருக்கின்றன. கவனியுங்க... நாம

அந்த வீட்டுக்குள்ளே நுழையும் போது - மிஸ்டர் ப்ரௌன் கையைப் பிசைஞ்சுக்கிட்டுத் திரும்பிப் போக மாட்டான் - வேற வழி கிடையாது... ஆகவே துணிந்து இறங்குவான்.''

டூபென்ஸ் இந்த அத்தனையையும் ஒதுக்கினாள். சட்டென்று, சிந்திக்க அவகாசம் தராமல், பேச ஆரம்பித்து விட்டாள்: ''ஆனா உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயமும் இருக்கு - அதை... அதை... அதை நாங்க இன்னமும் உங்ககிட்டே சொல்லலே'' - இவளுடைய கண்கள் ஜானேவின் மீது தாட்சண்யப் பார்வை பார்த்தன.

''என்னது அது?'' - வக்கீல் கறாராய்க் கேட்டார். ''தயக்கம் கூடாது, மிஸ் டூபென்ஸ். நாம அங்கே போகும் போது எல்லா விஷயங்களிலும் ரொம்ப நிச்சயமா இருக்கணும்.''

ஆனால் டூபென்ஸ், திறக்கவே முடியாத அளவுக்கு, நாக்குகள் கட்டப்பட்டவளைப் போல ஆனாள். ''சொல்றது ரொம்பக் கஷ்டம் - அதாவது - இதோ பாருங்க - நான் தப்பா இருந்துட்டா - ஓஹ்... தெரியலே - ஆனா, உண்மையா இருந்துட்டா - ஓஹ்... அது படு பயங்கரமானதா இருக்கும்'' - சொல்லிவிட்டு விளங்காதிருந்த ஜானே மீது நோட்டப் பார்வை பார்த்தாள். ''என்னை விட்டுடுங்க'' என்றாள் இறுதியாய்.

''என் உதவியைத் தேடறீங்களா, ஆங்?'' - கேட்டார் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்.

''ஆமாம். ப்ளீஸ். உங்களுக்குத் தெரியும் அந்த ப்ரௌன் என்பவன் யார்னு - ம்... தெரியாது?''

''ஆமாம்'' என்றார் சர் ஜேம்ஸ், ஆழ்ந்து. ''கடைசியில் - *எனக்குத் தெரியும்.*''

''கடைசியிலா?'' - சந்தேகம் தோயக் கேட்டாள் டூபென்ஸ். ''ஓ.. ஆனா, நான் நினைச்சேன் - - -'', தயங்கினாள் இவள்.

''நீங்க நினைச்சதும் சரிதான், மிஸ் டூபென்ஸ். இந்தக் கண்டுபிடிப்பு குறித்துக் கொஞ்ச நாட்களாகவே எனக்குள்ளே நான் ஸ்திரமாயிருந்தேன். ஆமாம் -திருமதி வாண்டே - மேயர் மர்மமான முறையில் இறந்த அந்த இரவிலிருந்து.''

''ஆஹ்!'' - மூச்சடைத்தாள் டூபென்ஸ்.

''ஆனா, நாம, தர்க்க ரீதியான சாட்சிகள் இல்லாம... லாஜிக்கல் முடிவுகளை அடைய முடியாம... தவிச்சுக்கிட்டிருந்தோம். ரெண்டே ரெண்டு தீர்வுகள்தான் இருக்கு. க்ளோரல், அவங்களுடைய கைகளாலே அவங்களாகவே - தெரிஞ்சோ தெரியாமலோ - எடுத்துக்கிட்டிருக்கணும் - இப்படிப்பட்ட தியரியை தயவு தாட்சணியம் பார்க்காம நான் ஒதுக்கறேன். இல்லேனா, இன்னொண்ணு - - -''

''ம்?''

''இல்லேனா, க்ளோரல், நீ அவங்களுக்குக் கொடுத்த ப்ராண்டியிலே கலக்கப்பட்டிருக்கணும். மூணே மூணு பேர் தன் அந்த ப்ராண்டியைத் தொட்டது - ஒண்ணு நீ, மிஸ் டூபென்ஸ்... இன்னொண்ணு நான், சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்.. மேலும் ஒரு நபர் - *திரு ஜூலியஸ்!*''

உலுக்கப்பட்டவளாய் நிமிர்ந்து உட்கார்ந்தாள் ஜானே, பேசிக் கொண்டிருந்தவரைக் கவனித்துவிட்டு அகண்ட விழிகளோடு விழித்தாள்.

''இந்த ஊகம், சாத்திமே அற்ற ஒண்ணாத் தான் முதல்ல எனக்குத் தோணிச்சு. திரு ஜூலியஸ், அமெரிக்காவையே விலைக்கு வாங்கு மளவுக்கான பல மில்லியனுக்கு அதிபதியான ஒருத்தரோட மகன்... அவர் நாட்டுல மிகப் பிரபலமானவர்... *அவரும், மிஸ்டர் ப்ரௌனும் ஒருத்தரே* என்பது துளியும் சாத்தியமற்ற ஒன்றாகத் தான் தோன்றியது. ஆனா, தர்க்கரீதியான நிரூபணங்களின் கைகளிலிருந்து ஒருத்தரால அவ்வளவு சுலபமா தப்பிச்சுட முடியாது. இது தான் நிதர்சனம் என ஆகும் போது - நாம ஒப்புக்கிட்டுத் தான் ஆகணும். திருமதி வாண்டே - மேயரின் தெளிவா விளக்க முடியாத அந்தக் கலக்கம்... கலவரம்... அது, நினைவிருக்கட்டும். இன்னொரு நிரூபணம் - இன்னும் நிரூபணம் வேணும்னா!

''உனக்கு ஆரம்பத்திலேயே ஒரு ஹிண்ட் தரும் வாய்ப்பை நான் ஏற்படுத்தித் தந்தேன். மேன்செஸ்டரில் ஜூலியஸ் சொன்ன சில வார்த்தைகளினால், நீ அர்த்தத்தைக் குறிப்பா புரிஞ்சுக்கிட்டு, அந்த ஹிண்ட் படி நடக்க ஆரம்பித்து விட்டதா எனக்குப் புரிஞ்சுது. பிறகு, அசாத்தியமா இருப்பது சாத்தியமேனு நிரூபிக்கும் பாதையில நான் உழைக்க ஆரம்பிச்சேன். திரு தாமஸ் எனக்கு ஃபோன் பண்ணி, நான் ஏற்கெனவே எதைக் குறித்து சந்தேகப்பட்டுக்கிட்டிருந்தேனோ, அதையே சொன்னார் - ஜானேவுடைய போட்டோ ஜூலியஸின் கையிருப்பிலிருந்து வெளியே போகவேயில்லை எனும் உண்மை.....''

இதை, ஜானே தடுத்தாள். வெடுக்கென்று எழுந்துக் கொண்டு கோபமாய் கத்தினாள் : ''நீங்க என்ன சொல்ல வர்றீங்க? எதை ஆலோசிக்க முயற்சி பண்றீங்க? *மிஸ்டர் ப்ரௌன் - ஜூலியஸ்னா?* ஜூலியஸ் - என் சொந்த ரத்த பந்தம்?''

''அப்படிச் சொல்லவே வரலே, மிஸ் ஜானே, ஃபின்'' - யாரும் எதிர்பாராத விதமாக இப்படி சொன்னார் சர் ஜேம்ஸ். ''உங்க ரத்த பந்தம் - மிஸ்டர் ப்ரௌன் கிடையாது! *தன்னை மிஸ்டர் ஜூலியஸ் என்று அழைத்துக் கொண்டிருக்கும் ஆளு, உங்களுக்கு எவ்வகையான உறவுமுறையும் கிடையாது.*''

அத்தியாம் - 26

மிஸ்டர் ப்ரௌன்

சர் ஜேம்ஸின் வார்த்தைகள், வெடித்த வெடிகுண்டாய் வந்து விழுந்தன. இரண்டுப் பெண்களுமே சரிசமமாய் விளங்காப் புதிர்ப் போடப்பட்டனர். வக்கீல் தன்னுடைய மேஜை வரை போய், அங்கிருந்து ஒரு செய்தித்தாள் நறுக்கை எடுத்து வந்து, அதனை ஜானேவின் கைகளில் தந்தார். அப்படியே டூபென்ஸூம் அதனைப் படித்தாள். மிஸ்டர் கார்ட்டர் இருந்திருந்தால் அது என்னது என்பதைப் பார்க்காமலேயே புரிந்துக் கொண்டிருப்பார். நியூ யார்க் நகரத்தில் ஒரு மர்ம மனிதன் இறந்துக் கிடந்தாய் வந்திருந்த செய்தி அது.

''நான் டூபென்ஸ் கிட்டே சொல்லிக்கிட்டிருந்த மாதிரி...'' என்று உரையாடலைத் தொடரலானார் சர் ஜேம்ஸ்.: ''..... அசாத்தியத்தை சாத்தியம் என்று நிரூபிக்க வேண்டிய பாதையில் இயங்கத் துவங்கினேன். அப்போது ஒரு பெரிய தடைக்கல்லாய் முன்னாலிருந்தது, ஜூலியஸ் என்பது ஒரு கற்பனைப் பெயர் அல்ல என்பது தான். இந்தப் பத்திரிக்கையை நான் படிக்க நேர்ந்த போது என் சிக்கல் அவிழ்ந்தது. ஜூலியஸ், அவருடைய அத்தைப் பெண்ணுக்கு என்ன ஆகியிருக்கும் என்பதற்காக தனது தேடுதல் வேட்டையை ஆரம்பிச்சிருக்கார். மேற்குப் பகுதிகளுக்குப் போன அவர், தேடுதலுக்கு உதவும் வகையில், இவளுடைய புகைப்படத்தையும் இவளைப் பற்றிய சில தகவல்களையும் சேகரிச்சிருக்கார். நியூயார்க்கிலிருந்து அவர் கிளம்பிய போது குறி வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கார். அசுத்தமும் கிழிசல்களும் நிறைந்த ஆடையால் அலங்கரிக்கப்படும் அவரது உடலில், அடையாளம் காண்பதைத் தவிர்ப்பதற்காக முகம் மட்டும் சின்னா பின்னமாக்கப்படுகிறது. *மிஸ்டர் ப்ரௌன் - ஜூலியஸின் இடத்தில் அமர்கிறார்.* இங்கிலாந்துக்கு உடனடியா பறந்து வர்றார் அவர். உண்மையான ஜூலியஸின் அக்கம் பக்கத்தாரோ அல்லது நண்பர்களோ அவர் புறப்பட்டு வந்ததைப் பார்த்திராததாலே - பார்த்திருந்தா மட்டும் ஒண்ணும் ஆகி விடப் போவதில்லே! - இந்த ஆள் மாறாட்டம் மிக வசதியா முடிஞ்சுது. அந்தக் கணத்திலிருந்து - 'அவனை' வேட்டையாடி கண்டுபிடிச்சு சட்டத்துக்கு முன்

நிறுத்த சபதம் செஞ்சு இயங்கிக்கிட்டிருந்த கூட்டத்தோடு இவரும் ஒரு தவிர்க்க முடியாத ஆளா இணைஞ்சுக்கிறார். *மிஸ்டர் ப்ரௌனைத் தேடும் மிஸ்டர் ப்ரௌன்!* ஆஹ்...! ஆக, நாம போடும் திட்டத்தின் அனைத்து ரகசியங்களும் அவருக்கும் தெரியும் - எப்பவுமே! ஒரே ஒரு தடவை மட்டும் தான், அவர் முகத்திரைக் கிழிந்து விடும் அபாயம் வரை அவர் வந்தார். திருமதி வாண்டே-மேயருக்கு இவருடைய ரகசியங்கள் தெரியும். கிடைக்கவுள்ள மாபெரும் கொள்ளைக் கொள்ளையான பணயத் தொகையின் சல்லிக் காசு கூட, எக்காரணம் கொண்டும் அவங்களுக்குப் போகக் கூடாது என்பது இவருடைய திட்டத்தின் மிக முக்கியமான பகுதி. ஆனா, டூபென்ஸ் அதிர்ஷ்டவசமா அவளுடைய மனசை மாத்திக்கா இருந்திருந்தா... நாங்க வந்தபோது ஃப்ளாட்டிலே இல்லாம அவங்க ஏதோ ஒரு கண் காணாத தூர தேசத்துக்குப் பறந்திருப்பாங்க. முன்னால் விரித்துக்கிடந்த ஆபத்து அவரை முகத்தில் அறையுது. சந்தேகம் வராமல் தடுக்க, அவர் போர்த்தியிருந்த முகமூடி பாத்திரத்துக்குள்ளேயே வேற வழியில்லாமல் தஞ்சம் புகுந்துக் கொள்கிறார் அவர். அதுல ஏறக்குறைய அவர் ஜெயிச்சார்னே சொல்லிடலாம் - ஆனா முழுமையா - *இல்லே!*''

''இதையெல்லாம் என்னால நம்பவே முடியலே?'' - முணுமுணுத்தாள் ஜானே. '' அத்தனை அற்புதமான மனுஷனா அவர் காட்டிக்கிட்டார்.''

''ஏன்னா - உண்மையான ஜூலியஸ், அத்தனை அற்புதமான மனுஷன் தான். இந்த மிஸ்டர் ப்ரௌனோ சந்தேகத்துக்கிடமற்ற சூப்பர் நடிகர். ஆனா டூபென்ஸைக் கேளுங்க... இதே சந்தேகங்கள் அவளுக்கும் இருந்ததா இல்லையானு.....?''

வசனமற்று டூபென்ஸ் பக்கமாய் திரும்பினாள் ஜானே. அவள் ஒப்புதலாய் தலையசைத்துக் கொண்டிருந்தாள். ''ஆனா அதை அப்படியே நான் உன்கிட்டே சொல்ல விரும்பலே, ஜானே - அது நிச்சயம் உன்னைப் பாதிக்கும்னு எனக்குத்தெரியும். ஆனா, மேலும், அந்த என் ஊகம் சரி தானா என்பதிலும் எனக்கு சந்தேகங்கள் இருந்தன. இன்னும் எனக்கு ஒண்ணு புரியலே. அவர் தான் மிஸ்டர் ப்ரௌன் அப்படினா - எதுக்காக அவர் நம்மைக் காப்பாற்றி மீட்டிருக்கணும்....?''

''ஓ... நீங்க தப்பிக்க உதவி பண்ணினது அப்போ ஜூலியஸா?''

பரபரப்பாய் போன மாலை நேர நிகழ்வுகளை வரிசையாய் சர் ஜேம்ஸுக்கு சொன்ன டூபென்ஸ், ''அதனால தான் எனக்கு விளங்கலே - ஏன்?'' என முடித்தாள்.

''விளங்கலே? *எனக்கு* விளங்குது. இளைஞன் தாமஸுக்கும் விளங்கியிருக்கு - அவர் நடந்துக் கொண்ட விதத்திலிருந்து இது புரியுது.

கடைசி நம்பிக்கையின் காரணமாக - ஜானே ஃபின் தப்பிக்க விடப்படணும்! அதிலும், இந்த நடவடிக்கை ஒரு கண் துடைப்பு நாடகம் அப்படினு அவளுக்குத் துளியும் சந்தேகம் வராத அளவுக்கு நடந்தாகணும். பக்கத்திலேயே எங்கேயாவது மிஸ்டர் தாமஸ் இருக்கலாம் என்பது பற்றியெல்லாம் அவங்களுக்கு எவ்வித கவலையும் கிடையாது... எந்த நிமிடத்தில் வேணுமோ அந்த நிமிடத்தில் தாமஸை வெட்டி விட்டுட அவங்களுக்கு எல்லா வழிகளும் தெரியும். அதே மாதிரி தான் - நீ உள்ளேயிருப்பதும் அவங்களுக்குப் பெரிய இடையூறு கிடையாது. பிறகு, ஜூலியஸ் புயலென இடை புகுந்து உன்னை ஹீரோத்தனமா காப்பாற்றிக்கிட்டு வந்துடறார் - இதுவும் அந்தக் கூட்டத்தின் திட்டமே! புல்லட்டுகள் வருமாம் - ஆனா ஒருத்தரையும் துளைக்காதாம் - ஆஹ்ஹா! எல்லாம் முன் கூட்டியே தீட்டப்பட்டுள்ள சதித்திட்டங்கள்! உங்களோட வெளியேறிய பிறகு நடக்க வேண்டியது என்ன? அல்லது பிறகு என்ன நடந்திருக்கணும்? நீங்க நேரா ஸோ-ஹோ வீட்டுக்குப் போவீங்க - அங்கிருந்து ஆவணத்தை எடுத்து, தன்னுடைய ஜூலியஸ் கிட்டே இருந்தால் தான் அதுக்கு எப்பவுமே பாதுகாப்பு என்கிற நம்பிக்கையில மிஸ் ஃபின்னும் அதை அப்படியே பத்திரமா மிஸ்டர் ப்ரௌன் கையில கொடுத்திருப்பா. அப்புறம், உடனடியா, ஏதாவது ஒரு பெரும் விபத்து உங்க ரெண்டு பேருக்கும் நிகழ்ந்திருக்கும் என்பது என் ஊகம்! ஆனாலும் நான் கொஞ்சம் அசந்துட்டேன்னு தான் சொல்லணும். ஆனா ஒரே ஓர் ஆள் மட்டும் துளியும் அசரலே.''

''டாமி' - மிருதுவாய் சொன்னாள் டூபென்ஸ்.

''ஆமாம், வெளிப்படையா அவனுங்களை மடக்கும் வாய்ப்பு கிடைச்ச போது - படு ஸ்மார்ட்டா அவர் இயங்கியிருக்கார். இருந்த போதிலும், அவர் நிலைமை பற்றி என் மனசுல கிலி இருக்கத்தான் செய்யுது... யெஸ்...''

''ஏன்?''

''ஏன்னா, ஜூலியஸ் - மிஸ்டர் ப்ரௌன்'' - சர் ஜேம்ஸ் வறட்சியாய் சுட்டிக் காட்டினார். ''மிஸ்டர் ப்ரௌனைக் கட்டுக்குள் வைக்க, ஒரு துப்பாக்கியும் ஒரு நபரும் போதாது....''

டூபென்ஸ் கொஞ்சமாய் வெளிறிப் போனாள்.

''நாம என்னப் பண்ணலாம்?''

''நாம ஸோ - ஹோவிலிருக்கும் வீட்டுக்குப் போகும் வரை - நத்திங் - எதுவும் சொல்ல முடியாது. இன்னும் திரு. தாமஸ் கை ஓங்கியிருந்ததுனா... பயப்பட ஒண்ணும் இல்லே. அப்படியில்லேனா, நம் எதிரி - *ரகசிய எதிரி* - நம்மைத் தேடிக்கிட்டு ஓடி வருவார். ஆனா - நாம அவரை எதிர்கொள்ள

தயாரா இருப்போம்'' - மேஜை டிராயரிலிருந்து ஒரு நீளமான ரிவால்வரை எடுத்த ஜேம்ஸ், அதனைத்தனது பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

''இப்போ - நாம தயார் - நீ இல்லாம நாங்க மட்டும் போவது கூட நல்லதுனே எனக்குத் தோணுது, மிஸ்டூபென்ஸ்....'''

''எனக்கும் என்னவோ அதே தான் தோணுது!''

''கூடவே, ஜானே ∴பின்னும் இங்கேயே இருக்கட்டும்னு தோணுது. அவ அனுபவிச்ச அத்தனையினாலும் பாவம் தேய்ந்து துரும்பா போயிருக்கா. இங்கே தான் அவளுக்குப் பாதுகாப்பு.''

ஆனால் டூபென்ஸ் ஆச்சரியப்படும்படி மறுத்துத் தலையசைத்தாள் ஜானே. ''நோ. நானும் வரேன். அந்த ஆவணத்தாள்கள் என்னை நம்பித் தரப்பட்டவை. நம்பிக்கைத் துரோகத்துக்கு நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். இந்த பிஸினஸைக் கடைசி வரைக்கும் நான் சந்திப்பேன். இப்போ நான் எவ்வளவோ தேவலை.''

உடனடியாய் வரும்படி சர் ஜேம்ஸின் காருக்கு ஆணை பறந்தது. கொஞ்ச தூரம் தான் கார் பிரயாணமே இருந்தது. அது முழுவதும் டூபென்ஸின் இதயம் அப்படி ஒரு துடிப்பு துடித்தது. டாமி பற்றி அவ்வப்போது விளைந்து மறைந்த விடை தெரியா இருப்புக் கொள்ளாமைக்கு நடுவில், பூரிப்பையும் எக்காளத்தையும் அவளால் ஒத்திப் போட முடியவில்லை. இவர்கள் ஜெயிக்கப் போகிறார்கள்.

சதுக்கத்தின் கடைசி வரை கார் ஓடி நிற்க இறங்கிக்கொண்டார்கள். ஏனைய மற்றவர்களுடன் - சாதாரண உடையணிந்து அங்குப் பணியமர்த்தப் பட்டிருந்த ஒரு நபரை நாடிப் போனார் சர் ஜேம்ஸ். அவனோடு பேசினார். பிறகு அவர் திரும்பி வந்து பெண்களோடு மறுபடியும் இணைந்துக் கொண்டார்.

''இது வரை வீட்டுக்குள் ஒருவரும் செல்லவில்லை. பின்பக்கமும் கண்காணிக்கப்படுவதால், அவங்க நிச்சயப்படுத்தி சொல்றாங்க. நாம உள்ளே போன பிறகு யாராவது முந்திக்கிட்டு அதே போல உள்ளே நுழைய முயன்றா முதல் வேலையா அவங்க கைது செய்யப்படுவாங்க. நாம உள்ளே போலாமா?''

ஒரு போலீஸ்காரன் சாவியைக் கொடுத்தான். சர் ஜேம்ஸை அவர்கள் அத்தனை பேருக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தது. டூபென்ஸ் குறித்த அதிகாரபூர்வ செய்திகளும் கூட அவர்களுக்கும் வந்திருந்தது. இக்குழுவில் இருந்த மூன்றாவது நபர் தான் அவர்களுக்கு அடையாளம் தெரியாத புதியவர் - மூவரும் உள்ளே நுழைந்தனர். கதவினை முதுகுக்குப் பின்னால் இழுத்து சாத்தியபடி, ஆடிய படிக்கட்டுகளை மெல்லமாய் ஏறிக் கடந்தனர். ஏறியதும்,

தளத்தின் முனையிலேயே அந்த நைந்தத் திரைச்சீலை இருந்தது. அன்றொரு நாள் டாமி மறைந்திருந்தானே. .. அப்பகுதியை மறைத்தபடியிருந்தது அது. ஜானே, ஆனெட் என்ற கதாபாத்திரத்திலிருந்த போது சொன்ன அனுபவங்களில், இந்தப் பகுதி பற்றிய செய்திகளைச் சொல்லக் கேட்டிருக்கிறாள் டூபென்ஸ். அதனால் அத்திரைச் சீலையை ஒரு புது ஈடுபாட்டோடு பார்த்தாள் இவள். இப்போது கூட திரைச்சீலை சன்னமாய் அசைந்தபடித் தானிருக்கிறது என்று சத்தியம் செய்வாள் இவள் - யாரோ அதன் பின்னால் ஒளிந்துக் கொண்டு இருப்பது போல. இந்தக் கற்பனை அத்தனை வலிமையாக இருந்ததன் காரணமாக அப்படி ஒளிந்திருக்கும் நபரின் உருவத்தை நிழலாய் பார்ப்பது போலக்கூட நினைத்தாள் டூபென்ஸ்.... ஒரு வேளை - மிஸ்டர் ப்ரௌன் - ஜூலியஸ் - அங்கு காத்திருந்தால்...?!

அசாதாரணம் - வேறென்ன! இருந்தாலும், நடந்து, அதனை நெருங்கி, விலக்கி உள்ளே ஒருத்தரும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்துக் கொள்ள இவள் தவறவில்லை...!

இப்போது மூவரும் சிறை அறைக்குள் நுழைந்துக் கொண்டிருந்தனர். இதற்குள் ஒளிய ஓரிடம் கிடையாது என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு எண்ணிக் கொண்டாள் டூபென்ஸ். பிறகு உடனேயே எரிச்சலாய் தன்னைக் கண்டித்துக் கொள்ளவும் செய்தாள். முட்டாள் தனமான கற்பனைகளுக்கு இடம் கொடுத்து வளைந்துப் போகும் நேரமல்ல இது... உள்ளேயே புரையோடிப் போயிருக்கும் அந்த உணர்வு - அதாவது மிஸ்டர் ப்ரௌன் - இங்கேயே இந்த வீட்டுக்குள்ளேயே இருக்கிறார் எனும் உணர்வு செய்யும் வேலை இது - ஆனாலும், உஷ்ஷ்ஷ்,... வாவ்..... என்னது அது? என்னது? ரகசியமாய் நழுவி நெருங்கும் காலடி ஓசைகள் - படிக்கட்டுகளில் ! யாரோ இந்த வீட்டில் இருந்திருக்கிறார்கள்! நகக்கீறல் போல ஏதோ பிராண்டும் ஓசை கேட்கவில்லை...?!'ஒஹ்....! முட்டாள்தனம்...! நான் பைத்தியமாகி வருகிறேன்...!'

ஜானே, நேராக அந்த மார்குரெட் படம் நோக்கிப்போனாள். நடுங்காத கையோடு அதனை ஆணியிலிருந்து எடுத்தாள். தூசு அதன் மேல் படிந்துக் கிடந்தது. சிலந்தி வலையின் ஜவ்வு, அதற்கும் சுவருக்குமாய் இழுத்துக் கொண்டிருந்தது. சர் ஜேம்ஸ் பாக்கெட்டிலிருந்து ஒரு பேனா கத்தியை எடுத்துத் தந்து உதவ, அவள், படத்தின் பின் பக்கத்திலிருந்த ப்ரௌன் நிறத் தாளை அப்படியே உறித்து எடுத்தாள். மேகஸினின் விளம்பரப் பக்கங்கள் நழுவி விழுந்தன. அதன் மேல் நுனியைப் பிடித்துக் கொண்டு உள்ளே அதனோடு ஒட்டியிருந்த இரண்டு எழுதப்பட்ட ஆவணப்பக்கங்களைப் பிரித்து எடுத்தாள் ஜானே!

எந்த ஏமாற்று வேலையும் இந்த முறை கிடையாது! *உண்மையான நிஜத் தாள்கள்!*

''நமக்குக் கிடைச்சிடுச்சு...'' என்று ரகசிய சந்தோஷமாய் சொன்னாள் டூபென்ஸ். ''கடைசியாய்...!''

இந்த நொடியின் உணர்வை விளக்க வேண்டுமானால், 'மூச்சு முட்டிய....' என்று தான் சொல்ல வேண்டும்! சற்று முன் கேட்ட கீழல் சத்தங்கள்... படியேறும் கற்பனை பயங்கள்... இவையெல்லாம் மறந்துப் போக-நிலைத்தவை. பிரம்மாண்டமான வெற்றிக் களிப்பும் ஆச்சரியமும் தான்! ஒருவருக்கும் வேறெதுவும் கண்களுக்குள் புகவில்லை - ஜானே கைகளில் தாங்கி நின்ற பொக்கிஷத்தாள்களைத் தவிர.

சர் ஜேம்ஸ் அவ்விரு தாள்களையும் பெற்றுக் கொண்டு கவனமாய் ஆராய்ந்தார். ''ஆமாம்'' என்றார் சாந்தமாய். ''இது தான் அந்த தலை வேதனைப் பிடித்த நகல் ஆவணம்.''

''நாம ஜெயிச்சுட்டோம்'' என்றாள் டூபென்ஸ். நம்பகமற்றத் தன்மையும் சுத்தமாய் நம்பிக்கையே அற்ற தொனியும் அவளுடைய வெற்றிக் குரலில் தெறித்தன!

தன் கையிலிருந்த சிறு பைக்குள் அந்த ஆவணத்தாள்களை படித்து சர் ஜேம்ஸ் பத்திரமாக்கிக் கொள்ளும் போது, டூபென்ஸின் வார்த்தைகளையே எதிரொலிக்கச் செய்தார். பிறகு, அந்த அசுத்த அறையை ஒரு முறை நோட்டம் விட்டார்.

''ஓ.... உன்னுடைய அந்த இளம் நண்பன் இந்த அறையில் தானே அத்ததனை நாட்கள் போட்டு அடைக்கப்பட்டிருந்தான். ஆங்...?'' - அவர் கேட்டார். ''மனதை உடைத்துப் போடும் ஓர் அவலமான குகை தான் - நிச்சயமா. ஜன்னலே இல்லை. அத்தனை தடிமனான ஒரு கதவு... கவனிச்சீங்களா?! இங்கே என்ன தான் நடந்தாலும் அதுல ஒண்ணுமே வெளி உலகத்துக்குப் போகாது.''

டூபென்ஸ் நடுங்கி விட்டாள். அவருடைய வார்த்தைகள் விளங்காத ஓர் எச்சரிக்கை மணியை அவளுக்குள் அடித்தன. 'இந்த வீட்டுக்குள்ளேயே யாராவது ஒளிஞ்சிருந்தா இப்போ என்ன பண்ணுவது? சட்டுனு அந்த 'யாராவது' ஓடி வந்து கதவை இழுத்து மூடிட்டு, பொறிக்குள்ளே மாட்டின எலி போல மூணு பேரும் செத்துத் தொலையுங்கனு விட்டுட்டுப் போயிட்டா?' பிறகு தான் அவனுடைய எண்ணத்தில் உள்ள முழு முட்டாள் தனத்தை டூபென்ஸ் உணர்ந்தாள். வீடு முழுக்க போலீஸ் நிற்கின்றது. அவர்கள், இந்த மூணு பேரும் வெளியே வரா விட்டால், கதவை உடைத்து உள்ளே வந்து முழுக்கவும் தேடத்தான் போகிறார்கள்... ! இவளுடைய முட்டாள் தனத்தை

நினைத்தப்படி சின்னதாய் தனக்குத் தானே புன்முறுவிக் கொண்டு நிமிர்ந்தவள் - இவளையே வைத்த கண் எடுக்காமல் சர் ஜேம்ஸ் முறைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்துத் துணுக்குற்றாள். அவர் இவளைப் பார்த்து அழுத்தமான உள்ளர்த்தம் வைத்த ஓர் ஒப்புதல் தலையசைப்பைத் தந்தார்.

''ரொம்ப சரி, மிஸ் டூபென்ஸ். நீங்க ஆபத்தை மோப்பம் பிடிச்சிருக்கீங்க - மிகச் சரியா! அப்படியே நானும், ஏன், ஜானே ஃபின்னும்.''

''ஆமாம்'' என ஒப்புக் கொண்டாள் ஜானே, ''இது முட்டாள்தனமாப் படுது - ஆனா அப்படி நினைச்சு பயப்படாம இருக்க முடியலே.''

சர் ஜேம்ஸ், உள்ளர்த்தம் பொதிந்து, மறுபடியும், மெல்லமாய்... ஒப்புதலாய் தலையசைத்தார். ''நீங்க ரெண்டு பேரும் உணர்றீங்க... நாம எல்லாமே உணருகிறோம் - மிஸ்டர் ப்ரௌனின் இருப்பை ! ஆமாம் ....'' இப்போது டூபென்ஸ் சட்டென நகர முயல, ''ஆமாம்... மிஸ்டர் ப்ரௌன் இங்கேயே தானிருக்கான். *இங்கேயே...* ''என்றார்.

''இந்த வீட்டிலா?''

''இந்த அறையில....! இன்னுமா புரியலே....? *நான் தான் மிஸ்டர் ப்ரௌன்....*''

புத்தி பேதலித்து விட்டவர்களைப் போல எதுவும் விளங்காத பார்வையை இருவரும் பார்த்தனர். இரண்டு பெண்களின் முகங்களும், நடப்பதை நம்பவே முடியாத வெறும் வெற்றிடமாய் ஆகியிருந்தன. சர் ஜேம்ஸ் முகத்தின் ஒட்டு மொத்த குணாதிசயமே மாறியிருந்தது - குரூரமாய். இவர்களுக்கு முன்னால் இப்போது நின்றுக் கொண்டிருந்தது, முழுவதும் வேறுபட்ட ஒரு புது ஆள். மெல்லமாய், ஒரு கொடூர புன்னகையை வெளியிட்டார். ''உங்க ரெண்டு பேர்ல ஒருத்தர் கூட இந்த அறையை விட்டு உயிரோட வெளியே போகப் போவது கிடையாது! நீ இப்ப தான் நாம வெயிச்சுட்டதா சொன்னே. *நான் ஜெயிச்சுட்டேன்!* நகல் ஆவணம் - என்னுடையது.'' அவருடைய கொடூர புன்னகை இப்போது டூபென்ஸைப் பார்க்கும் போது மேலும் வளர்ந்தது. ''இனி எப்படி இருக்கப் போகுதுனு சொல்லட்டுமா? உடனேயோ அல்லது தாமதமாகவோ... போலீஸ் எல்லாத்தையும் உடைச்சுக்கிட்டு உள்ளே ஓடி வரும் - வந்து, மிஸ்டர் ப்ரௌனால் பலியான மூன்று பேரை - கவனிக்க, ரெண்டு கிடையாது மூணு... மூணு பேரைப் பார்ப்பாங்க - அதிர்ஷ்டவசமா அதுல ஒருத்தர் மட்டும் செத்திருக்க மாட்டார் - பெறும் காயம் தான் நேர்ந்திருக்கும் - அவர், நல்லா விலாவாரியான விவரணைகளோட நடந்ததை தாராளமா அள்ளி அள்ளி கொடுப்பார்! - ஆவணத்தாள்கள்? அவை, மிஸ்டர் ப்ரௌனில் கைகளில்! ஆக எவரும் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனின் பாக்கெட்டை வந்துத் துளாவும் வேலையைப் பண்ணவே மாட்டாங்க.''

அவர் ஜானே பக்கம் திரும்பினார். ''நீ - என்னை - அப்பட்டமா தந்திரத்தாலே ஜெயிச்சிருக்கே. அதுக்கு என் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். ஆனால் இனி ஒரு முறை நீ அப்படி பண்ண மாட்டே.''

இப்போது அவருக்குப் பின்னால் சன்னமான ஓர் ஓசை கேட்டது - ஆனால் அவரது வெற்றியின் திளைப்பில் மயங்கிக் கிடந்த சர் ஜேம்ஸ் அதை கவனிக்கவேயில்லை... திரும்பவுமில்லை.

தனது பாக்கெட்டுக்குள் கையை நுழைத்தார். ''தப்பிக்க முடியாத இக்கட்டில் இளஞ்சிங்கங்கள் லிமிடெட்'' - சொன்னவர், மெதுவாய், குறி வைத்து, அந்தத் துப்பாக்கியைத் தூக்கினார்.

அப்படி அவர் செய்துக் கொண்டிருக்கும் போது பின்புறத்திலிருந்து அழுத்தப்படும் ஓர் இரும்பு உலோகத்தால் தானும் மடக்கப்படுவதை அவர் உணர்ந்தார். இதை அவர் உணர்ந்து நிலையாவதற்கு முன், துரிதத்தில், அவர் கையிலிருந்த துப்பாக்கி, முறுக்கித் திருகிப் பறிக்கப்பட்டு விட, முளைத்து வந்த ஜூலியஸின் குரல் பேசியது: ''எவ்விதத் தப்பிப்பும் அற்று... எல்லா சாட்சிகளையும் நீங்களே முன் வைத்து... அகப்பட்டு விட்டீர்கள், மிஸ்டர் ப்ரௌன்...!''

ரத்தம் வக்கீலின் முகத்தில் மளமளவென்று கூடியது. ஆயினும், அவரை மடக்கிப் பிடித்து விட்ட இரண்டு சகாக்களை மாற்றி மாற்றிப் பார்த்த அவருடைய சுயக்கட்டுப்பாடு மகத்தானதாயிருந்ததது. டாமியை வெகு நேரம் பார்த்தார் அவர்.

''நீ'' என்றார் அவரது மூச்சுக்குள்ளேயே, ஒலியின்றி. ''நீ?! எனக்குத் தெரிஞ்சுருக்கணும்!''

இனி அவர் எவ்விதமான எதிர்ப்பும் காட்டுவதற்கு வழி கிடையாது என்பது இப்போது ஊர்ஜிதமானதும், அவரைப் பிடித்திருந்த பிடியின் இறுக்கங்கள் தளர்ந்தன. மின்னல் போல்... ம்ம், அதனினும் குறுகிய காலத்தில்.... பெரிய தோசைக் கல் போன்ற கனத்தில் விரல் முழுதும் மறைத்து மோதிரம் அணிந்திருந்த அவருடைய இடக்கை, அவர் உதடுகள் வரை எழும்பியது... ''நாய்களா! என்னையா - மிஸ்டர் ப்ரௌனையா - உலகின் தலையெழுத்தை நிர்ணயிப்பவனையா - பிடித்து விட முடியும்?'' - அந்த இடக்கை மோதிரம், இப்போது அவரது வாய்க்குள்ளேயே பாய்ந்திருந்தது.

பிறகு அவரது முகம் மாறியது. நரம்பு இழுப்பு ஏற்பட்டு வலிப்பு வந்தவனைப் போல ஒரு நீண்ட உலுக்கலோடு பெரும் மூட்டையாய் முன்னால் சாய்ந்தார். புளிப்பான பிராண்டி போன்ற பீச் பழத்தின் வாசம் அங்கு அறையை மளமளவென நிறைத்தது.

அத்தியாயம் - 27

இரவு நேர விருந்து

தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சில நண்பர்களுக்கு மட்டும் 30-ஆம் தேதி இரவு திரு ஜூலியஸ் அளித்த விருந்து. கேளிக்கை விருந்தளிக்கும் வட்டங்களில் வெகு நாட்கள் நினைவில் கொள்ளப்படும். ஒரு தனிமை அறையில் விருந்துபச்சாரம் நிகழ்ந்தது. ஜூலியஸ் ஆர்டர் செய்திருந்தவை அளவானதாயும் அதே சமயம் அட்டகாசமானவையாகவும் ஒரு சேர இருந்தன. நடப்புப் பருவகாலத்தில் கிடைக்க அரிதான ருசியான சமாச்சாரங்களும் விடுபட்டு விடாமல் சரிசமமாய் இடம் பெற்றிருந்தன புராதன ராஜாங்க வடிவமைப்பிலிருந்த பாட்டில்களில் திராட்சைப் பழச்சாற்றினை மிக அன்பான இன்முகத்தோடு சுமந்துக் கொண்டு வலம் வந்தனர் வெயிட்டர்கள். மலரலங்காரம், அது என்ன காலம் என்பதை விவரித்தது. மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை என்ற அகண்ட பருவக்கால நிலைகளில், பூமியின் பல்வேறு பகுதிகளில் காய்த்துக் குலுங்கும் சுவைமிகு கனிகளனைத்தும், ஒரே நேரத்தில் அபூர்வமாயும் அதிசயமாயும் அருகருகில் இருந்தன. அழைக்கப்பட்டிருந்த விருந்தாளிகள், பார்த்து தெரிந்தெடுக்கப்பட்டிருந்த ஒரு சின்ன பட்டியலாகும். இங்கிலாந்துக்கான அமெரிக்கத் தூதர் திரு கார்ட்டர், அவர் விரும்பி அழைத்து வரப் போவதாய் விருந்து அமைப்பாளர்களிடம் ஏற்கெனவே சொல்லியிருந்த திரு வில்லியம் ஃபோர்டு, டாக்டர் ஹால், அந்த இரண்டு இளைய சாகசக்காரர்களான செல்வி ப்ரூடன்ஸ் கவ்லி மேலும் திரு தாமஸ் ஃபோர்டு மற்றும், கடைசியாக குறிப்பிட்டாலும் மிக முக்கியமானவராக... மிக்க மரியாதையோடு கௌரவிக்க அழைக்கப்பட்டடிருந்த செல்வி ஜானே ஃபின்.

ஜானேவின் தோற்றம் அழகுத் ததும்பித் தெரிய வேண்டும் என்பதற்காக முயற்சிகள் எடுத்துக் கொண்டார் ஜூலியஸ். ஜானே இருந்த வீட்டிலேயே ஒரு பகுதியில் தற்போது வசித்துக் கொண்டிருந்த டூபென்ஸை, வாசற்கதவு

தட்டும் ஒலி வாயில் வரை இழுத்து வந்தது. வந்திருந்தது ஜூலியஸ். கையில் ஒரு காசோலையை வைத்திருந்தார் அவர்.

''சொல்லு, டூபென்ஸ்... ஒரு உதவியை நீ செய்துத் தர முடியுமா?'' என்றார். ''இந்த செக்... இதை எடுத்துக்கிட்டு, கேளிக்கை விருந்துல கௌரவிக்கப்படும் ஒரு நபரை எத்தனை நாகரீகமா அலங்கரிக்கணுமோ அப்படி செஞ்சு அவளை அழைத்து வா. நீங்க எல்லாரும் நான் அளிக்கும் விருந்துக்கு விரும்பி வறீங்க... சரி தானே? ஒரு தம்புடி செலவு பண்ணக் கூடாது. புரியுதா? ''

''நிச்சயமா'' - நாடகப்பாணியில் முன்னால் வளைந்து வணங்கி பவ்யமாய் சொன்னாள் டூபென்ஸ். ''நாம துளி விடாம பார்ட்டியைக் கொண்டாடுவோம். ஜானேவை நாகரீகமும் கவர்ச்சியும் ஒரு சேர, திருப்திகரமா அழகு செஞ்சுடறேன். நான் பார்த்தவர்களிலேயே, எதிரிலிருப்பவரை உடனடியாய் விரும்பத் தூண்டும் அற்புத வசீகரமானவள் - அவள்.''

''அதென்னவோ உண்மைதான்'' - தீவிர ஆர்வம் பொங்கித் ததும்ப ஒப்புக் கொண்டார் ஜூலியஸ்.

அவருடைய ததும்பும் பிரியம், கண நேரக் கண் சிமிட்டலை டூபென்ஸிடம் விளைவித்தது. ''ஏய் ஜூலியஸ்...'' என்று தயக்கமும் ஒரு தடையும் விளைய அழைத்த இவள், ''நான் - இன்னும் உங்களுக்கு என்னோட பதிலைத் தரலே'' என்றாள்.

''பதில்?'' - கேட்டது ஜூலியஸ். அவரது முகம் வெளிறியது.

''நீங்க - உங்களைக் கலியாணம் பண்ணிக் கொள்ளுமாறு - என்னைக் கேட்ட போது நிச்சயமில்லாது...'' என அதைரியமாகி தடுமாறினாள் டூபென்ஸ். கண்கள் தாழ்ந்து தரையில் நிலைகுத்திப் போயின. ''அதுக்கு நான் - 'நோ' என்று பதில் சொன்னா - அது உங்களுக்குத் தாங்காதுனு - ஆனா, மிஸ்டர் ஜூலியஸ், நான் அதைப் பற்றி - நல்லா யோசிச்சுட்டேன் - ''

''ஓ...அப்படியா?'' - சட்டென விளைந்த வியர்வைத் துளிகள் அவருடைய நெற்றி முழுவதும் நிறைந்தன.

டூபென்ஸ் அப்போது சாந்தமானாள். ''நீங்க ஒரு மகா மகா முட்டாள்!'' என்றாள். ''எது உங்களை அப்போ அப்படிக் கேட்கத் தூண்டியது, ம்? அப்போ உங்களுக்கு என் மேல தம்புடி ஈடுபாடு கூட இல்லாததை என்னால தீர்க்கமா பார்க்க முடிஞ்சுதே!''

''கிடையவே கிடையாது. இருந்தது - ஈடுபாடு இருந்தது - இன்னும் இருக்கு - அதிகபட்ச மதிப்பும் கண்ணியமும் மரியாதையும் - கூடவே வியப்பு ஆச்சரியம் பிரமிப்பு - இப்படிப்பட்ட கலவையினாலான ஒரு மனோநிலை யிலிருந்தேன்.''

''ஹூம்!'' என்றாள் டூபென்ஸ். ''அதெல்லாம் ஒரு வகையான மனோநிலை.அதே போலவே இன்னொரு மனோநிலை வந்தா அப்படியே காற்றோடு காற்றா காணாம போய்விடும் வகையைச் சேர்ந்த மனோநிலை...ஆங்? இல்லையா? ஸார்...?''

'' நீ என்ன சொல்றேனே எனக்கு விளங்கலே'' என்று இறுக்கமாய் சொன்னார் ஜூலியஸ்.

''அபத்தம்!'' - எதிர்த்தாள் டூபென்ஸ். சின்னதாய் சிரித்துவிட்டு கதவைப் படாரென்று அடித்து மூடியவள், தனக்கு இழைக்கப்பட்ட அதர்ம அநீதியை அழுத்தமாய் சொல்லி விட வேண்டும் என்பதற்காகவே, உடனேயே மூடிய கதவினைத் திறந்து, ''மனத்தளவில் - காதலிப்பதாய் ஆசை காட்டி, பிறகு அடித்து விரட்டப்பட்டதாய் தான் இதை நான் என் வாழ்நாள் பூரா நினைப்பேன்'' என்றாள். இவள் குரல் தழுதழுத்திருந்தது.

''என்னது அங்கே?'' என்று வந்த ஜானேவுடன் இணைந்துக் கொண்ட டூபென்ஸ், ''ஜூலியஸ்'' என்றாள்.

''ஓ.... அவருக்கு என்ன வேணுமாம்?''

''இப்போதைக்கு - நீ'' என்றாள்.

வந்து விழுந்த இந்த 'இப்போதைக்கு - நீ', ஜூலியஸூக்கு மிகப் பெரிய கசையடியாய் அமைந்தது.

டூபென்ஸ் தொடர்ந்தாள் : ''ஆமாம்... உண்மையாச் சொல்லப் போனா அவர் உன்னைத் தான் பார்க்க வந்திருக்கார்....! ஆனா, நான் உள்ளே விட மாட்டேன். அதுவும் நிச்சயமா இன்னிக்கு ராத்திரி வரைக்கும்! இன்று இரவு, நீ, நாட்டின் மகாராணி போன்ற அலங்காரத்தில், கமகமவென்று விருந்தில் வந்து இறங்கும் வரை! கிளம்பு! *நாம ஷாப்பிங் போறோம்!*''

பல பேர்களுக்கு, எதிர்ப்பார்ப்போடு, காத்திருந்து வந்த 29-ஆம் தேதி - ''உழைப்பாளர் கட்சி நாள்'' - ஏனைய நாட்களைப் போலவே கழிந்துப் போனது. பூங்காக்கள் சதுக்கங்கள் போன்ற பொது மக்கள் அநேகம் கூடும் பகுதிகளில் கூட்டங்கள் நடந்தன. ஒழுங்கற்று அங்குமிங்கும் சிதறிய பாணியில் நடந்த சில ஊர்வலங்கள், இலக்கின்றி தெருக்களில் அப்படியும் இப்படியுமாக அலைந்த சில கோஷங்கள், போன்றவையே மிஞ்சின. நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் தவிர்க்கயியலாதது என்று குறிப்பிட்டிருந்த செய்தித் தாள்களும், வன்முறை வெடித்து பயங்கரவாதம் துவங்கும் என்று தோரணம் கட்டியிருந்த சஞ்சிகைகளும் தோற்றுப் போய் விட்ட அவர்களுடைய தலைகளை மறைத்துக் கொள்ளும்படி ஆகியது. மிதவாதிகளும் அதன் மீது பற்றுக் கொண்ட சில சாமர்த்திய சந்தர்ப்பவாதி களும், ஏதோ அவர்கள் 'அமைதி திரும்ப வேண்டும்' என்று தொடர்ந்துப்

பேசி வந்ததாலேயே ஸ்டிரைக் தோல்வி கண்டு விட்டதாக நேரம் பார்த்து ஆதாயம் தேடினார்கள். ஞாயிற்றுக்கிழமை செய்தித்தாள்களில் பிரபல வக்கீல் சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனின் திடீர் மறைவு பற்றி சிறு கட்டுரை வெளியாகியிருந்தது. திங்கட்கிழமை செய்தித்தாள், அந்த மனிதனின் வாழ்க்கை மற்றும் பாராட்டும்படியான தொழில் வெற்றி ஆகியன பற்றி விளாவாரியாகப் பேசியிருந்தது. அவரது திடீர் மரணத்தின் சரியான காரணம் பொது மக்களுக்குத் தரப்படவில்லை. (வாய்க்குள், மோதிரத்தி லிருந்த ஸயனைட்டினைத் துரிதமாய் போட்டுக் கொண்டதால் மரணித்திருந்தார், அவர்.)

நிலைமையை முன்னரே அறிந்து டாமி மிகச் சரியாக அங்கு ஆஜராகியிருந்தான். அது முழுக்க முழுக்க தனிமனித வெற்றி! டாமி வெற்றி! 'பாஸ்' பிடுங்கியெறியப்பட்டதும்,அந்த அமைப்பே சுக்கு நூறாக சிதறிப் போனது. இங்கிலாந்தை விட்டு ஞாயிற்றுக்கிழமை விடிகாலையிலேயே நழுவி, காதும் காதும் வைத்தாற்போல் பதுங்கி ஒதுங்கி எப்படியோ ரஷ்யா போய் சேர்ந்திருந்தான், க்ரெமெனின். அதிர்ச்சியில் உறைந்த நிலையிலேயே அந்தக் கொலைக்காரக் கூட்டம் அஸ்ட்லே வளாகத்திலிருந்து தப்பித்து ஓடியிருக்கின்றது. அப்போது, அவசரத்தில், பல அவதூறான ஆவணங்களைக் கையோடு எடுத்துப் போகாமல் அவர்களுக்குப் பின்னால் அப்படியே அங்கேயே போட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள் அவர்கள். இவை, மேலும், திட்டம் எப்படி வடிவமைக்கப்பட்டது என்பதை அக்கு வேறாய் வர்ணிக்கும் ஒரு சிறு ப்ரௌன் டைரி (இது, இறந்து விட்ட சர் ஜேம்ஸின் பாக்கெட்டிலிருந்து பின்னர் கண்டெடுக்கப்பட்டது) ஆகியவற்றோடு, கடைசி நிமிடக் கூட்டத்தைக் கூட்டியது அரசாங்கம்...! உழைப்பாளி கட்சியின் தலைவர்கள், அவர்களது அமைப்பு ஒரு மிருகத்தின் வெறிக்கு எப்படி அம்சமாய் இரையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஓர் அதிர்வோடு உணர்ந்தனர். சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டு அரசாங்கத்தோடு இணக்கமான உழைப்பாளி கட்சி, கடும் எச்சரிக்கையோடு விடப்பட்டது. அமைதி தான் இறுதியில் வெல்ல வேண்டுமே தவிர, மீண்டும் ஒரு போரல்ல!

எத்தனை குறுகிய ஒரு காலகட்டத்தில்... ஒரு சில நிமிடங்கள் மட்டுமே பாக்கியிருந்த மிகக் குறுகிய அவகாசத்தில்...நாடு ஒரு பூகம்பப் புரட்சியிலிருந்து மீண்டிருப்பதை மந்திரி சபையும் நன்கு அறியும். நேற்று இரவு ஸோ-ஹோ வீட்டில் அரங்கேறிய விசித்திரமான காட்சி, இப்போது திரு கார்ட்டரின் மூளையில் கனன்றுக் கொண்டிருந்தது. அழுக்கும் அசுத்தமுமாகிய அந்த கிழிந்த அறைக்குள், அவருடைய வாழ்நாள்

நண்பனை - உயிரான அந்த நண்பனின் மாண்ட உடலை - தன் வாயாலேயே அகப்பட்டுக் கொண்டு குலைந்துப் போன ஆருயிர் நண்பனைக் கண்டார் - கார்ட்டர். இத்தனை அவலங்களுக்கும் காரணமான அந்த 'அதிர்ஷ்டக் கட்டை' ஆவணத்தாள்களைக் கிடந்த நண்பனின் மரக்கட்டை உடல் அணிந்திருந்த கோட் பையிலிருந்து எடுத்தார் திரு கார்ட்டர். அங்கேயே, அப்பொழுதே, கூடயிருந்த மீதி மூவரின் சாட்சியத்தோடு, .அது சாம்பலாக ஆக்கப்பட்டது. இங்கிலாந்து காப்பாற்றப்பட்டது.

இப்போது 30-ஆம் தேதி மாலையில், பெரும் நட்சத்திர ஓட்டலின் பிரத்யேகக் கேளிக்கை அறையில் தனது விருந்தாளிகளை அன்பாய் வரவேற்றுக் கொண்டிருக்கிறார், ஜூலியஸ்.

முதலில் வந்து சேர்ந்தது, திரு கார்ட்டர். அவருடன் கூட சடுதியில் கோபங்கொண்டு விடுபவரைப் போல முகம் அமைந்திருந்த ஒரு முதிய ஜென்டில்மேனும் வந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் தனது அடி வேர் வரைப் பிடுங்கி வீசப்பட்டவனைப் போல ஓடோடி வந்தான் டாமி.

''ஹா!'' என்று அவனைத் தலை முதல் கால் வரை மேலும் கீழும் தலையாட்டி அங்கீகரித்துப் பார்த்த அந்த வயதான ஜென்டில்மேன், ''நீ தான் என் சகோதரி மகனா?'' என்றார். ''அப்படி ஒண்ணும் பிரமாத மன்மதனா தெரியலே... ஆனா, பிரமாதமான வேலையைச் செஞ்சு முடிச்சிருக்கே! ம்... உன் அம்மா உன்னை இந்த அளவுக்கான நல்ல தர்ம சிந்தனைகளோட வளர்த்திருக்கணும்... அதான்!போடா...நடந்தவை நடந்தவைகளாகவே போகட்டும்... என்ன.. சரி தானே...! அதையெல்லாம் மறந்துடுவோம்! இனி நீ தான்டா படவா என் வாரிசு! ஓ கே' யா? எதிர்காலத்துல உனக்குனு சொத்துக்களை விட்டு வைக்க நான் ஆசைப்படறேன்... ஆமா!''

''ரொம்ப நன்றி, ஸார், நீங்க மிகக் கனிவானவர்.''

''நான் எக்கச்சக்கமா கேள்விப்பட்டுக்கிட்டே இருக்கும் அந்த இன்னொரு குட்டி எங்கே?''

டாமி, டூபென்ஸை அறிமுகப்படுத்தி வைத்தான்.

''ஹா!'', என்றார் வில்லியம் அவளைக் கண்களால் அளந்துக் கொண்டே. ''என் இள வயசுல இருந்தா மாதிரி இல்லேப்பா, இப்பல்லாம் பெண்கள்!''

''கிடையாது, அப்படியே தான் இருக்கோம்'' என்றாள் டூபென்ஸ். ''உடைகள் மாறலாம். ஆனா அவங்க உள்ளம் - *அப்படியே தான்.*''

''ஆமாம். நீ சரினு தான் படுது. அன்றைய பெண்கள், அப்படி - இன்றைய பெண்கள், இப்படி. ஆனா பெண், பெண் தானே!''

''மிகச் சரியா'' என்றாள் டூபென்ஸ். ''ஆனா, எனக்குள், நான், ஒரு பயங்கரமான பெண்!''

''நம்பறேம்மா!'' என்றார், ஹாஸ்யமாய் கண்ணடித்துக் கொண்டே, அவளுடைய காது மடலின் நுனியைச் செல்லமாய்க் கிள்ளியடி! பல பெண்கள் இவரைக் 'கிழப் பாதிரி' என்ற பட்டத்துடன் கேலி செய்து ஒதுக்கியே வைக்க, டூபென்ஸின் உடனடி அருகாமை, கிழவனை வியக்கத்தான் வைத்தது!

தொடர்ந்து, கூட்டத்தைக் கண்டாலே அஞ்சி நடுங்கும் கூச்ச சுபாவம் கொண்ட பயந்தாங்கொள்ளியாய் தோன்றிய பாதிரியார், தன் மகள் தன்னைத் தானே முன்னிலைப்படுத்தி கௌரவிக்குமளவுக்கு உயர்ந்து விட்டதைப் பெருமையாய்ப் பார்த்தபடி, முன் வந்தார். இருந்தாலும் இப்படிப்பட்ட ஓர் உயர் சமூகத்தில் விழுந்து பழைமைகளைத் தன் மகள் இழந்துவிட்டாளே என்ற துடிதுடிப்பு 'அந்தக் காலத்து மனுஷனான' அவரிடம் தெரிந்தது. ஆனால் டூபென்ஸ், இப்படி நினைத்தவரே பிரமித்து பாராட்டும்படி நடந்துக் கொண்டாள். கால் மேல் கால் போட்டுக் கொண்டு பந்தாவாய் அமர்வதையும், வம்பளந்துக் கொண்டு வெட்டியாய்ச் சுற்றுவதையும் தவிர்த்தாள். படு ஸ்திரமாய் புகை பிடிக்க மறுத்தாள்.

டாக்டர் ஹால் தொடர்ந்து அமர, அவருக்கு அடுத்து அமெரிக்கத் தூதர் இடம்பிடித்துக் கொண்டார்.

ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்த பிறகு,''லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்'' என்று அளவளாவலை ஏற்பாடு செய்திருக்கும் ஜூலியஸ் அழைத்து, அவர்கள் சுற்றி நின்றிருந்த டேபிளைச் சுட்டிக்காட்டியப்படி, ''அவரவர்கள் இருக்கையில் - அமரலாமே!'' என்றார். உடனேயே, ''ஆங்... ஆங்... டூபென்ஸ்... நீங்க மட்டும்....''

இவ்விருந்தில் கௌரவிக்கப்படுபவருக்காக நடுநாயகமாக போடப் பட்டிருந்த அலங்கார நாற்காலியைக் கைகளைக் காற்றாய் வீசி சந்தோஷமாய் கட்டிக்காட்டினார் ஜூலியஸ்.

''கிடையாது - அது ஜானேயின் இடம்! சித்திரவதைகள் நிறைந்திருந்த இத்தனை வருடங்களை, மனம் ஒடிஞ்சுப் போயிடாம அவ எப்படி தைரியமா தக்க வெச்சுக்கிட்டிருந்தானு நினைக்கும் போது, இன்றைய மரியாதைக்குரிய இவ்விருந்தின் மகாராணியாக ஜானே தான் ஆக்கப்படணும் என்பது நிதர்சனமா புரியும்'.

நன்றியுடனும் பார்வையை டூபென்ஸ் மீது வீசினார், ஜூலியஸ். ஜானே எழுந்து கூச்சமும் லஜ்ஜையும் சூழ ஒதுக்கப்பட்டிருந்த அலங்கார இருக்கை நோக்கி வந்தாள் பல வருடங்களுக்கு முன்னால் இருந்த அழகுப் புதுமை

தன்மை மீண்டும் தகதகக்க, அழகே அழகு செய்துக் கொண்டு காற்றுக்கு வலிக்காமல் நடந்துப் போவதாய் இருந்தது - காட்சி! டூபென்ஸ் அவளுடைய கடமையை மனமுவந்து செய்திருக்கிறாள்! பிரபலமான உடையழகு நிபுணரால் வடிவமைக்கப்பட்டிருந்த அந்த செல்வாக்கான கவுன், 'டைகர் லில்லி' என்று பெயரிடப்பட்டிருந்தது. முழுக்க முழுக்கத் தங்கத்தாலும் மணிகளாலும் வைரத்தாலும் அடுக்கடுக்காய் 'புஸ்ஸ்ஸ்' ஸென்று செய்யப்பட்டிருந்த கவுனின் மேல் நுனியிலிருந்து, பெண்ணின் வெண்ணிற சங்குத் தொண்டை ஒரு சலவைத் தூண் போல நீள, அவளுடைய அடர்த்தியான பொன்னிற குதித்தாடும் கேசம், ஈடு செய்ய முடியாத பின்னணியாய் இவையத்தனையையும் பல படிகள் உயர்த்தி வைத்து மிளிரச் செய்தது. இருக்கையில் அமர்ந்து நிமிர்ந்தவளின் கண்களெங்கும் - பெருமிதம்!

உடனடியாகவே இரவு நேர விருந்து களை கட்டியது. அதன் மையக்கட்டத்தில் அழைக்கப்பட்ட டாமி, நடுநாயகனாய் நிறுத்தப்பட்டு, முழுசாயும், நிறைவாயும் துளி விடாது விளக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டான்.

''இந்த விஷயம் பற்றிய உங்களுடைய எந்தக் கணிப்பும் கொஞ்சமும் வெளியே தெரியாம அத்தனை ரகசியமா இயங்கியிருக்கீங்க, நீங்க....?'' - குற்றஞ் சுமத்தினார் ஜூலியஸ்! ''நீங்க அர்ஜென்டினுக்குப் போகப் போவதா மேலோட்டமாத் தான் எனக்குத் தெரிவிச்சீங்க - ஆனால் அதுக்கு உங்களுக்கு மட்டுமே தெரிஞ்ச காரணம் ஏதோ ஒண்ணு இருந்திருக்கு....! நீங்களும் செல்வி டூபென்ஸும் சேர்ந்து என்னைப் போய் மிஸ்டர் ப்ரௌன் பாத்திரமா உருவகப்படுத்திப் பார்த்திருப்பதை நினைச்சா எனக்குப் பத்திக்கிட்டு வருது!''

இதற்கு, ''அது அவங்களுடைய ஒரிஜினல் ஊகம் கிடையாது'' என்று ஆழ்ந்து சொன்னார், மிஸ்டர் கார்ட்டர். ''அப்படி முடிவெடுக்கும்படியான சூழல்கள்'' என்று விட்டுத் தொடர்ந்தார். ''வெகு ஜாக்கிரதையா புகட்டப்பட்ட விஷம் - நியூ யார்க் செய்தித்தாள்ல வந்திருந்த ஒரு புகைப்படம் - இதெல்லாம் ஒண்ணு சேர்ந்து, உங்களை மட்டுமே பயங்கரமா வலைக்குள்ளே சிக்கும்படி பண்ணி, அவரை ஒரு சிலந்தி வலைப் பின்ன வெச்சிருக்கு.''

''நான் எப்பவுமே அந்த ஆளை விரும்பினது கிடையாது'' என்றார் ஜூலியஸ். ''அவரை முதன்முதலா நான் பார்த்தக் கணத்திலிருந்தே அவர் கிட்டே எதுவோ சரியில்லே என்று உணர்ந்தேன். அவர் தான் திருமதி வாண்டே - மேயரை அமைதியாக்க வெகு தகுதியானவர்னு நான் எப்பவுமே சந்தேகப்பட்டிருக்கேன். ஆனா அவரோட நாம பேசிக்கிட்டிருந்த அந்த

ஞாயிற்றுக்கிழமை, டாமியைக் கொன்று போட கட்டளைகள் வந்ததா பேச்சு அடிப்பட்ட போது, அவரே தான் அந்த 'பிக்-பாஸ்' எனும் முடிவை நோக்கி நான் மெல்ல மெல்ல நழுவ ஆரம்பிச்சேன்.''

''நான் அப்படி துளி கூட சந்தேகப்படவேயில்லை'' - அடித்துச் சொன்னாள் டூபென்ஸ்! ''நான் தான் எப்பவுமே டாமியை விட சாதுர்யம் அதிகம் உள்ளவள்'னு எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. - ஆனா இந்த விஷயத்துல டாமி என்னைவிட எக்கசக்கமா மார்க் வாங்கி ஜெயிச்சுட்டான்.'' ஜூலியஸ் ஒப்புக் கொண்டார்

''இந்த வழக்குல செம சரக்கு வெச்சிருக்கும் ஒரே ஆள் - டாமி தான். ஏதோ ஒரு செவிடன் போல சம்பந்தமே இல்லாத மாதிரி அங்கே வெறுமனே உட்கார்ந்திருப்பதற்கு பதிலா, டாமி அவருடைய முகத்தில் புரண்டு வரும் சிகப்பு நாணத்தைக் கொஞ்ச நேரம் தூரத் தூக்கிப் போட்டுட்டு, எல்லாத்தையும் நமக்கு சொல்லலாமே!''

''ஆமாம் ...! ஆமாம்....! ஆமாம்...! சொல்லணும்...! சொல்லணும்....!''

''இதுல சொல்றதுக்கு ஒண்ணுமேயில்லையே'' - வெட்கம் பிடுங்கித் தின்ன முழுக்கவும் அசௌகரியமானான் டாமி!''ஆனெட்'டுடைய புகைப்படத்தை நேரடியா நானே கண்டெடுத்து, அவ தான் ஜானே ஃபின் என்ற தெளிவு அப்போது மின்னல் போல எனக்குள் உண்டாகும் வரை, பசங்க விளையாட்டு மாதிரி என்னத்தையெல்லாமோ நான் பண்ணிக்கிட்டு ஒரு மாபெரும் களி மண் உருண்டையாத் தானிருந்தேன்...! பிறகு, அவ எப்படி 'மார்குரெட்' எனும் பெயரை திரும்பத் திரும்ப வெகு சத்தமா கத்தினா என்பது பளீர்னு என் ஞாபகத்துக்கு வந்தது - உடனேயே அந்தப் படங்களை நினைச்சேன் - அப்புறம் ... ஒகே ஒகே... எல்லாம் அப்படியே வளர்ந்தன. அந்த சமயத்துல தான், எந்தக் கட்டத்துல நான் ஒரு கழுதை போல சிந்திக்காம தப்பான திசையில் திரும்பியிருந்தேன்'னு உட்கார்ந்து தீவிரமா சிந்திச்சேன்.''

மறுபடியும் அமைதிக்குள் டாமி புகலிடம் தேடுவது போல தோன்றியதும், ''ம்.... தொடர்'' என்று ஊக்கமளித்தார், கார்ட்டர்!

''அந்த, திருமதி வாண்டே-மேயர் பற்றிய கதையை ஜூலியஸ் என்கிட்டே சொன்னதும் அது அதிக அளவுல என்னைப் பாதிச்சது. அதைக் கேட்டு முடிச்சதும், நான் புரிஞ்சுக்கிட்ட வரையில், ஒண்ணு மிஸ்டர் ஜூலியஸ் இல்லேனா சர் ஜேம்ஸ்... இவங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் தான் அந்த தூக்க மாத்திரை ட்ரிக்'கை நடத்தியிருக்கணும்னு எனக்கு தோணிச்சு. ஆனா இதுல யார்? - அது எனக்குத் தெரியலே. ஆனெட் - அதாவது ஜானே புகைப்படத்தை மேனஜ் டிராயர்ல பார்த்தபோது, அதை

யாரோ ஒரு மிஸ்டர் ப்ரௌன் எனும் இன்ஸ்பெக்டர் வந்து வாங்கிப் போயிட்டதா ஜூலியஸ் சொன்னது என் நினைவுக்குள் வர - உடனடியா அவரை நான் சந்தேகப்படும்படியா ஆச்சு. பிறகு அந்த நடப்பட்ட போலியான ஜானே ஃபின்னைக் கண்டுபிடிச்சதே சர் ஜேம்ஸ் தான் என்பது என் நினைவுக்கு வந்தது. இந்த நினைவுகளின் முடிவுல, இவரா அவரானு எவ்விதமான திடீர் தீர்வும் அப்போதைக்கு நான் எடுக்கலே. ஜூலியஸூக்கு, ஒரு வேளை அவர் தான் மிஸ்டர் ப்ரௌன் என்றால், பார்க்கட்டும்னு - நான் அர்ஜென்டனுக்குப் போறேன்னு ஒரு குறிப்பெழுதி வெச்சேன். கூடவே சர் ஜேம்ஸ் எனக்கு அந்தப் பகுதியில வேலை இருப்பதா தெரிவிச்ச கடிதத்தையும், வெச்சேன், அப்போ தான் நான் சொல்வதுல ஒரு நம்பகத்தன்மை இருக்கும், இல்லையா! பிறகு ஒரு கடிதத்தைத் திருமிகு கார்ட்டருக்கு எழுதிய நான், சர் ஜேம்ஸூக்கு போன் பண்ணினேன். அவருடைய நம்பிக்கை வட்டத்துக்குள் நான் எப்பவும் இருப்பது போன்ற ஓர் அனுகூலம் வேறு கிடையவே கிடையாது என்பதால் அத்தனையையும் வக்கீலிடம் சொன்னேன் - அந்த ஆவணத்தாள்கள் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் என்று நான் ஊகித்திருந்தேனோ, அதைத் தவிர! டூபென்ஸ் மற்றும் ஆனெட் ஆகிய இருவரும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடம் பற்றி அறிய அவர் உதவிய அபரிமிதமான உதவிகள் என்னை திக்குமுக்காடச் செய்து அவரை நம்பிக்கையாய் பார்க்கச் செய்தன - ஆனால் முழுக்க அல்ல! ரெண்டு ஜென்டில்மேன்களையும், நான், ஜாக்கிரதையா, திறந்த மனத்துடன் தான் அணுகிக்கிட்டிருந்தேன். அப்போ தான், டூபென்ஸிடமிருந்து எனக்குள்ளே ஏகமா சந்தேகங்களைக் கிளறின ஒரு குறிப்பு எனக்கு வருது - ஓஹ் ..இதுக்குப் பிறகு எனக்குத் தெரிஞ்சிடுச்சு!''

''அதான் எப்படி?''

பேச்சில் அடிப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் குறிப்பினைத் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து எடுத்த டாமி, அதனை, குழுமியிருந்த அனைவரும் பார்க்கும்படி ஒரு சுற்று அனுப்பிப் பெற்றான்.

''அது இவ கையெழுத்து தான், ஓ. கே. ஆனா இது அவ கிட்டேயிருந்து வரலே என்பது மட்டும் எனக்குத் தெளிவா தெரிஞ்சுது. விஷயம் கையெழுத்துல இல்லே... கையொப்பத்துல! இது டூபென்ஸ் கிட்டேயிருந்து வரலே என்பதை கையொப்பத்தைப் பார்த்த மாத்திரத்திலே நான் தெரிஞ்சுக்கிட்டேன். அவ என்னிக்குமே தன்னுடைய கையெழுத்தை நாம கூப்பிடற உச்சரிப்பிலேயே போட மாட்டா.. அதாவது 'Two - pens கிடையாது. அது Tuppence! இப்படி எழுதிப் பார்த்திராத எவரும், Two-

pense இல்லேனா Too pens இப்படி எதையாவது தான் இவ பேரை எழுதுவாங்களே தவிர, Tuppense'னு எழுதவே மாட்டாங்க. *இது ஜூலியஸுக்கு நல்லாவே தெரியும்.* - இவ ஜூலியஸுக்கு எழுதியிருந்த ஒரு குறிப்பை ஏற்கெனவே ஒரு முறை ஜூலியஸ் என்கிட்டே காட்டியிருக்கார். ஆனா - த க்ரேட், *சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனுக்குத் தெரியாது.* ஆக மிஸ்டர் ப்ரௌன் - ஜூலியஸ் கிடையாது: சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டன்! இதிலிருந்து பிறகு எல்லாமே சிரமமற்றப் பயணம் தான். நான் போற மாதிரி பண்ணினேனே தவிர, அதே வேகத்துல திரும்பி வந்தேன். திரு கார்ட்டர் கிட்டே வேகவேகமா ஆல்பர்ட்டை அனுப்பினேன். ஜூலியஸ் அடிச்சுப் பிடிச்சுக்கிட்டு கார்ல பறந்து திரும்பிய போது, தடுத்து நிறுத்தி அவரை மட்டும் கையகப்படுத்தினேன். காரணம்? இந்தப் பாதகச் செயல்ல இயங்கிக்கிட்டிருக்கும் போதே சர் ஜேம்ஸை நாம பிடிக்கலேனா, அவர் தான் மிஸ்டர் ப்ரௌன் என்று, அவருடைய பால்ய உயிர் தோழரான திரு கார்ட்டரை நம்ப வைப்பது சுத்தமா முடியவே முடியாதுனு நம்பினேன்....''

''நம்பியிருக்கவே மாட்டேன்'' - துக்கம் நெஞ்சையடைக்க சிறு புலம்பலாய் ஊர்ஜிதம் செய்தார் கார்ட்டர். ''அவன் - என் - உயிர் - *இப்பவும்.*''

''இதனாலேயே தான் நான் ரெண்டு பெண்களையும் சர் ஜேம்ஸ் கிட்டே அனுப்பினேன். உடனேயோ இல்லே கொஞ்சம் கழித்தோ - அவங்க நிச்சயமா ஸோ - ஹோ வீட்டுக்குப் போவாங்க என்பது என்னைப் பொறுத்த வரைக்கும் உறுதி. துப்பாக்கி முனையில ஜூலியஸை மிரட்டி சண்டைக்குள் இறங்கினேன் - அப்போ தான் இதை அப்படியே டூபென்ஸ் அவர்கிட்டே போய் சொல்வா - அவரும் எங்களைப் பற்றி கவலைக் கொள்ளாம செயல்படுவார்!அந்த இருட்டுல ரெண்டு பெண்களும் எங்க கண்களிலிருந்து மறைந்த கணமே, காற்றாய் லண்டனுக்குப் பறக்கச் சொல்லி ஜூலியஸுக்குக் கட்டளையிட்டேன். அந்தப் பிராயணத்தின் போது ஜூலியஸுக்கு முழு கதையையும் விவரிச்சேன். ரொம்ப நேரத்துக்கு முன் கூட்டியே நாங்க ரெண்டு பேரும் ஸோ-ஹோ வீட்டை அடைந்து, அங்கு வாசல்ல இருந்த திரு கார்ட்டரை அணுகினோம். அவர்கிட்டே ஏற்பாடுகள் ஆனதும், உள்ளே போனோம். முதல் தள நுழைவிலிருந்த பதுங்குமிடத்துக்குள் திரைச்சீலைக்குப் பின்னாடி பதுங்கிக்கிட்டோம்.''

''நான் அதை எட்டிப் பார்த்தேன்...!'' ஆச்சரியமாய் கேட்டாள் டூபென்ஸ்.

''பதுங்கியிருந்தோமில்லே....!'' என்றான் டாமி வெற்றிப் பெருமிதமாய்.

''ஓ, நோ! எல்லாரையும் ஏமாத்தியிருக்கேடா, நீ!''

''யாராவது அணுகிக் கேட்டா, உள்ளே ஒருத்தரும் போகலே என்று மட்டும் சொல்லும் ஒரே ஓர் அதிகாரம் தான் அங்கு காவல் காத்துக் கிடந்த போலீஸ்காரங்களுக்குத் தரப்பட்டிருந்தது.''

இப்போது டாமி, முழுவதுமாய் நின்றுப் போனான்.

சில கணங்கள் வெறும் அமைதி தான்.

''இருந்தாலும் கூட'' என்று திடுமென ஆரம்பித்த ஜூலியஸ். ''அந்த ஜானேவுடைய போட்டோ பற்றி நீங்க எல்லாமே ஒரு தப்பான முடிவுல இப்போ இருக்கீங்க. அது என்னிடமிருந்து எடுத்துப் போகப்பட்டது, உண்மை தான்... ஆனா அப்புறம் அதை நான் கண்டெடுத்தேன்.''

''எங்கேயிருந்து?'' - கத்தி விட்டாள் ரூபென்ஸ்.

''திருமதி வாண்டே-மேயரின் படுக்கையறைச் சுவற்றிலிருந்த சிறு பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து.''

''நீங்க எதையோ அங்கே கண்டுபிடிச்சீங்க எனும் அளவுக்கு எனக்குத் தெரியும்'' - குற்றம் கண்டுபிடிக்கும் தொனியில் சொன்னாள் இவள். ''சொல்லப்போனா, அந்த சம்பவம் தான் உங்க மேலே என் சந்தேகத்தை நிலை கொள்ள வெச்சுது. அப்பவே ஏன் நீங்க சொல்லியிருக்கக் கூடாது?''

''நானும் அப்போ வேறு ஒரு வகையான சந்தேகத்துல இருந்தேன்னு தான் சொல்லணும். அது ஏற்கெனவே ஒரு முறை என் கையை விட்டுப் போயிருக்கு. அதனால, அதை, ஒரு நல்ல போட்டோகிராபர் வெச்சு ஒரு டஸன் பிரதிகள் எடுக்கும் வரைக்கும், அது என்னிடம் தானிருக்குனு விளம்பரப்படுத்திக்க நான் விரும்பலே!''

''நாம ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விஷயத்தை மர்மமா உள்ளேயே போட்டு வெச்சிருந்திருக்கோம்' - சிந்தனையாய் குறிப்பிட்டாள் ரூபென்ஸ். ''ரகசிய உளவுத் துறை பணிகள்ல ஈடுபடும் போது நாம இப்படி ஆயிடுவோம் போல!''

தற்போது விளைந்த சிறு இடைவேளையின் போது, திரு கார்ட்டர், அவரிடமிருந்து, ஒரு சிறு அழுக்கேறிய ப்ரௌன் நிற கையேட்டினை வெளியிலெடுத்தார்.

''சர் ஜேம்ஸ் பீல் எட்ஜர்ட்டனை, இந்த மாபாதக தேச விரோத செயல்ல ஈடுபட்டிருக்கும் போதே கையும் களவுமா பிடிக்காவிட்டால், எத்தனை பேர் வந்து சாட்சி சொன்னாலும் நான் நம்பவே மாட்டேன் என்று... சற்று முன் தான் திரு தாமஸ் ஃபோர்டு சொன்னார். அது, அப்படித்தான். இந்தக் கையேட்டிலிருக்கும் நினைவுக் குறிப்புகளைப் படிக்கிற வரைக்கும் கூட, நான், நடந்திருக்கும் இந்த அதிசயகிக்கத்தக்க நிதர்சனங்களை ஜீரணிக்கும் அளவுக்கு நம்பவில்லை என்பது தான் உண்மை. ஸ்காட்லாண்டு யார்ட்

காவல்துறையின் ரகசிய ஆவணப்பகுதிக்கு இக்குறிப்பேடு மாற்றப்பட வுள்ளது. இது எப்போதும் பொது ஜனப்பார்வைக்கு வரவே வராது. சர் ஜேம்ஸ் வருடக்கணக்காய் சட்ட நுணுக்கங்களோடு கொண்டிருந்த மேதமை,அப்படி இது ஒரு பொதுச் சொத்தாக ஆகி விடுவதைத் தடுக்குது. ஆனா உங்களுக்கு-முழு உண்மையையும் இப்போது அறிந்துள்ள இவ்வழக்கோடு சம்பந்தப்பட்டுள்ள உங்களுக்கு - அந்த அசாதாரண மாபெரும் மனிதனின் உளவியல் ஆக்கத்தைச் வெளிச்சம் போட்டுக் காட்டும் சில பகுதிகளை மட்டும் இப்போது படித்துக் காட்ட விரும்புகிறேன்.''

அந்த நோட்டுப் புத்தகத்தைத் திறந்தார். அதன் மெல்லிய பக்கங்களைத் திருப்பலானார்.

''..... இந்தப் புத்தகத்தைப் போய் நான் என்னிடம் வைத்திருப்பது ஒரு முழு பைத்தியக்காரத்தனம். இது எனக்குத் தெரியும். இது எனக்கு எதிரான ஓர் ஆவண சாட்சி - டாக்குமெண்ட்டல எவிடென்ஸ்! ஆனால் அபாயங்களைத் துணிகரமாய் சந்திக்காமல் நான் ஓட்டுக்குள் ஒடுங்கிக் கொள்பவன் கிடையாது. நான் யார் என்கிற ஒரு சுய விளக்கம் அவசரமாய் தேவைப்படும் என்று கருதுகிறேன். எப்போது? ஆஹ்.... இந்தப் புத்தகத்தை என் பிணத்திலிருந்து மட்டும் தான் எடுக்க முடியும். அப்போது!

''..... என் இளம்பிராயத்திலிருந்தே, சமுதாயத்தால் பொதுவாய் ஆட்சேபிக்கப்படும் திறமைகள் என்னிடம் இருப்பதை நான் உணர்ந்தேன். என் சிந்திக்கும் திறமையும் மூளையின் வீச்சும் சராசரிக்கு அப்பாற்பட்டு வெகு உயரத்தில் மிளிர்ந்ததைக் கவனித்தேன். நான் ஜெயிக்கவே பிறந்தவன் என்பதைப் புரிந்துக் கொண்டேன். என் தோற்றம் ஒன்று தான், என்னுடைய இத்தகைய அத்தனை திறமைகளுக்கும் எதிரான ஒரே சத்ரு; நான் சாந்தமாயும் - பொறுப்பாய் கவனிக்கப்படதாவனாயும் - துளி கூட குறிப்பிட்டு விவரிக்க முடியாதவனாயும், இருந்தேன்....

''... நான் சிறுவனாயிருந்த போது ஒரு பிரபலமான கொலை வழக்கு பற்றியும் அதன் விசாரணைகள் பற்றியும் கேள்விப்பட்டேன். நியாயத்தை முன் வைத்து அவனைத் தப்புவிக்க வக்கீல் பட்ட பாட்டில் தெறித்த பேச்சுவன்மையும் சாதுர்யமும் என்னை ஆழமாய் ஆட்கொண்டன. என் திறமைகளை அத்துறைக்கு எடுத்துச் செல்லும் அபிலாஷையை முதன் முறையாக நான் என்னுள் அனுமதித்தேன்... பிறகு குற்றவாளிக் கூண்டிலேயே குற்றவாளியைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. படித்தேன். அங்கு கூண்டில் நிற்பவன் ஒரு

முட்டாள் - கற்பனைக்கு அப்பாற்பட்ட பொறுத்துக் கொள்ளவே முடியாத அறிவீலி! - சில சமயங்களில், இப்படிப்பட்டவர்களை, வக்கீலின் மேதமை வாய்ந்த வாக்குச் சாதுர்யங்கள் கூட மீட்க முடியாத அவல நிலைகளைப் பார்த்தேன் - இவர்களை எல்லையில்லாமல் இகழ்ந்து நிந்தித்துத் தூக்கிக் கடாசினேன். அப்போது தான், எனக்கு, குற்றவாளி எனும் ஸ்தானம் மிகக் குறைந்த ஒன்று என்று விளங்கியது. வீணாய் போனவர்கள்... வாழ்க்கையில் தோற்றவர்கள்... சமுதாயத்தின் அலைக்கழிப்பால் பலிகடானானவர்கள்... இவர்கள் தான் க்ரிமினல் எனும் குற்றவாளிகளாக ஆகிறார்கள் எனும் முடிவு புரிந்தது. ஆனால், நான் அப்படிப்பட்ட வகையா என்ன....?! ஆஹ்ஹா...! மூளையின் வீச்சினை அபரிமிதமாய் பெற்றவர்கள், அதனால் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய அசாதாரண வாய்ப்புகளை எப்படி கோட்டை விட்டு விடுகிறார்கள் என்பது ஆச்சரியமான ஒன்று.... ஆனால் நான் கோட்டை விடவில்லை... விளையாடினேன்....! ஆஹ்.... என்ன ஒரு படாடோபமான விஸ்தாரத்துறை.... எத்தனை எல்லையற்ற வகைவகையான சாத்தியக்கூறுகள்.... நினைக்கும் போதே, தீனியைக் கண்டு விட்ட என் மூளை துள்ளிக் குதித்து சுழன்றாடியது....

"... குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தரமான புத்தகங்கள் பல படித்தேன்... அவையத்தனையும் என் கருத்தினை ஊர்ஜிதம் செய்தன. என்னுடைய அதிகபட்ச அபிலாஷை நிறைவேறி விடுகின்றது என ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம்.... வக்கீலுக்குப் படித்து நான் இங்கிலாந்து நீதிமன்றத்தின் 'பார்' அங்கத்தினனாக ஆக்கப்படுகிறேன் - அப்படியே எனது வக்கீல் தொழிலின் உச்சபட்ச நிலையை அடைந்துவிடுகிறேன் - தலைமை நீதிபதி - அந்த பலத்தை வைத்துக் கொண்டு இங்கிலாந்து அரசியலுக்குள் பிரவேசித்து, மறுபடியும் ஒரு பேச்சுக்கு சொல்கிறேன், நாட்டின் பிரதம மந்திரி பதவிக்குக் கூட நான் பரிந்துரைக்கப்படுகிறேன் என்போம் - பிறகு? இதற்கு பிறகு என்ன? திகட்டிய நிலை! பூரணமாகி விட்ட ஸ்தானம்! ச்சே...இது தான் சக்தியா என்ன? கூடயிருக்கும் மந்திரிகள் தரும் தலைவலியைத் தாங்கிக் கொண்டு ... ஜனநாயக அமைப்பின் தலையாட்டி பொம்மையாய் கால் விலங்கினை நானே பூட்டிக் கொண்டு.,... நோ...நெவர், கிடையாது! நான் கனவு கண்ட சக்தி - *மகாசக்தி!*

"... *ஏகாதிபதி!* அந்த ஏகாதிபத்தியத்தின் ஒரே சர்வாதிகாரி! அந்த சர்வாதிகாரியின் ஒரே வார்த்தை மட்டுமே - நாட்டைக் கட்டுப்படுத்தும்! அத்தகைய சக்தி, சட்டத்துக்குப் புறம்பாய் வெளியே நின்றபடி

இயங்கினால் மட்டுமே கிட்டும். மனித சுபாவங்களின் பலஹீனத்தோடு முதலில் விளையாடிப் பார்த்து... முன்னனுபவம் அடைந்து... பிறகு தேசங்களின் பலஹீனங்களைக் கண்டறிந்து அவற்றுடன் விளையாடி.... அப்படியே ஒரு மாபெரும் சர்வாதிகார அமைப்பை நிறுவி, ஆட்டுவித்து... கடைசியாக அது முழு பலமாய் உருவானதும், இறுதியாய், நடைமுறையிலிருக்கும் சட்டங்களையும் - ஒழுங்குகளையும் ஓரத்தள்ளி விட்டு! ஓஹ்....இந்த நினைப்பே என்னை மதிமயங்கிக் கிறங்கடித்தது....

"... இதற்கு நான் இரட்டை வாழ்க்கை வாழ வேண்டியது மிக மிக அத்தியாவசியம் என்றுணர்ந்தேன். என்னைப் போன்ற பிரபலர்கள் நிச்சயமாய் சாதகமான பொது ஜன ஈர்ப்பை உருவாக்கிட முடியும். என் துறையில், இமயம் தொட்ட சாதனையாளனாக நான் எழுந்திருக்க வேண்டும்... இது தான் என் நிஜத்தை மறைக்க உதவும் சிறப்பான முகமூடியாக அமைய முடியும்... அது ஒன்று தான் பாதுகாப்பு - எப்போதும். கூடவே வக்கீல்களுக்கே உரிய சுபாவத்தை நான் பயிரிட்டுக் கொள்ள வேண்டும்... இது முக்கியம்... அவசியம்! பிரபலமாயிருந்த உயர் வக்கீல்களைப் போல நான் என்னை ஆக்கிக் கொள்ள முயன்றேன் - அவர்கள் செய்யும் அங்க அசைவுகளை ஆழ்ந்து கவனித்து, நான் கடைபிடித்து பயின்றேன்.... அவர்கள் இருந்தாலே அவ்விடத்தில் கதிர்வீச்சாய் அடிக்கும் குணாதிசய ஈர்ப்பு - ஒரு வகை காந்த ஈர்ப்பு; இவை இரண்டையும் நானும் நானிருக்கும் இடத்தைச் சுற்றி உற்பத்தி செய்து உலவவிட கற்றுக் கொண்டேன். .. நான் மட்டும் நடிப்புத் தொழிலைத் தேர்ந்தெடுத்திருந்தால், இந்நிமிடத்தில் உலகளாவிய அளவில் இருக்கும் மிகச் சிறந்த முதல் நடிகனாய் நான் தானிருப்பேன். வேடங்கள் தேவையில்லை. மணிக்கணக்கில் அரிதாரம் பூச வேண்டாம்... ஒட்டு தாடி மீசையெல்லாம் அனாவசியம்! 'வக்கீல்களின் சுபாவம் - அவர்தம் குணாதிசயம்', இதனை நான் கையுறைப் போல வெகு பொருத்தமாய் உடுத்திக் கொள்வேன்... உடுத்திக் கொண்டேனேயானால், நான் நானே தான்.. அடக்கமென்ன, சாதுத்தன்மையென்ன...! ஏனையவர்களைப் போன்ற ஒரு சராசரி மனிதனே! முகமுடிக்குள் இருப்பவனை நான் மிஸ்டர் ப்ரௌன் என்று கூப்பிட்டுக் கொண்டேன்... ஏன் தெரியுமா? அது ஒரு பொதுப் பெயர்..... பல நூறு பேர்,அதே பெயரில்....

".... முகமூடிப் போர்வை போர்த்திய குற்றத் தொழிலில் நான் வெற்றி பெற்றேன். அப்போர்வை போடாத வக்கீல் தொழிலில் இங்கிலாந்தின்

முதலாவதாக நின்றேன். நான், வெற்றி பெற்றே ஆக வேண்டும்! என்னைப் போன்ற ஒருமனிதன் தோல்வியெல்லாம் அடைவதில்லை....

''.... நீதிமன்றங்களில் குற்றவாளிகளைப் பொத்திப் பாதுகாத்துக் குற்றமற்றவர்களாக்க, நான் வாதிட்டேன்... தன் ஜாதியைச் சேர்ந்தவர்களை ஒருவன் கவனித்துத் தானே ஆக வேண்டும்....

''..... ஒரிரு முறை நான் பயந்துப் போயிருக்கிறேன்... முதல் தடவை இது நடந்தது இத்தாலியில். ஓர் அளவளாவல். டின்னர் - பேராசிரியர் - நல்ல மண்டை - அந்நியன். புத்திப் பேதலித்த... மூளை வளர்ச்சியற்ற.. மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டு இயக்கம் கொண்ட, போன்றவற்றில் பேசினார். அவர் சொன்னார்: ''இருக்கும் பல பேர், பைத்தியங்கள் தான்.... ஆனால் அவர்களில் ஒருவருக்கும் அது தெரிவதில்லை...'' இதைச் சொல்லும் போது எதற்காக என்னை அப்படி தொடர்ந்து பார்த்துக் கொண்டே பேசினார் என்று எனக்கு விளங்கவில்லை.... அவரது அப்பார்வையில் எதையோ படித்து விட்ட ரகசிய வெற்றி இருந்தது... அது எனக்குப் பிடிக்கவில்லை...

''.... போர், என்னை நிலைகுலையச் செய்தது....நம் எதிரிகளான ஜெர்மானியர்கள், திறமையானவர்கள். அவர்களது உளவுத்துறையும், பிரமாதமானது. இப்போதெல்லாம் அவர்களுடைய காக்கி போட்ட பசங்கள் தான் தெருவெங்கும். மண்டையில் மசாலா அற்ற பொடிப்பயலுகள். இளைய முட்டாள்கள். இருந்தும் எனக்கு விளங்கவில்லை.... வென்றது அவர்கள் தான்... இது என்னை வதைத்தது... குலைத்தது....

''... என் திட்டங்கள் செவ்வனே முன்னேறிக் கொண்டிருக்கின்றன... ஒரு பெண் மூக்கை நுழைத்திருக்கிறாள் - அவளுக்கு விவரணையாக ஏதாவது செய்யத் தெரியுமா என்றே எனக்கு சந்தேகமாக இருக்கின்றது... ஆனாலும் எஸ்தோன்ஸியாவை இழுத்து மூடிவிட்டு அவள் நுழைவை அறுப்பது தான் சிறப்பு....

''... எல்லாம் நகர்ந்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஞாபக மறதி கதை தான் வெறுக்கடிக்கின்றது.... அது பொய்யாயிருக்க முடியாது.... ஒருவராலும் என்னை ஏமாற்ற முடியாது....

''... 29 அது வெகு விரைவில் உள்ளது.''

இந்த இடத்தில் படிப்பதை திரு கார்ட்டர் நிறுத்தினர். ''அவர்கள் திட்டமிட்டிருந்த கோஷம், கலாட்டா இவை பற்றி நான் படிக்கப் போவதில்லை... ஆனா, இங்கே சின்னதா ரெண்டு குறிப்புகள். இவ்வழக்கின்

சொந்தக்காரர்களான உங்க மூணு பேரையும் உள்ளடக்கி இருக்கு... நடந்துள்ள சமாச்சாரங்களின் அடிப்படையில், அந்த மூன்றும் அவசியமானவை.

''..... அவளாகவே என்னை நாடி வரும்படி அந்தப் பெண்ணை நான் மாற்றி விட்டதில், என் மீது அவள் கொள்ளத்தக்க அத்தனை சந்தேகங்களிலிருந்தும் அவளை நான் திசை திருப்பி விட்டேன். ஆனாலும் அவளுக்கு பிறப்பிலேயே அதீத சாதுர்யம் வரமாகக் கொட்டிக்கிடக்கின்றது. இது ஆபத்தானதாக அமைந்துவிடலாம்... அவளை வழியிலிருந்து குறுக்கிடாம தூக்கிப் போடணும்... அந்த அமெரிக்கனோடு என்னால எதுவுமே செய்ய முடியாது. அவன் என்னை சந்தேகிக்கிறான். வெறுக்கிறான். போகட்டும்... ஆனா, அவனால தெரிஞ்சுக்க மட்டும் முடியாது! என் படை, கண்ணுக்கு அகப்படாத காற்று போல... சில சமயங்களில் நான் அந்தப் பொடிப் பயலைக் குறைத்து மதிப்பிட்டு விட்டோனோ என்று தோன்றுகிறது... அவன் புத்திசாலி கிடையாது தான்... ஆனால் நிரூபணங்களை அவன் கண்ணுல படாம குருடாக்கிறது - கஷ்டம்....''

திரு கார்ட்டர் கையேட்டினை மூடினார்.

''மாபெரும் மனிதன்'' என்றார். ''மகா புத்திசாலித்தனமா?....அல்லது மூளைத்திருகிய பைத்தியமா? - யார் சொல்வார்?''

அங்கே அமைதி குடி கொண்டது.

பிறகு திரு கார்ட்டர் எழுந்துக் கொண்டார். ''இது உங்களுக்கு நல்ல அடையாளத்தை சமுதாயத்தில் உண்டு பண்ணித் தரும். உங்களுடைய கூட்டு முயற்சி, அது அடைந்த மாபெரும் வெற்றியின் மூலமாகவே நிரூபணமாயிருக்கு.''

இப்படிச் சொல்லிவிட்டு ஜானே பக்கம் திரும்பிய அமெரிக்கத் தூதரக முதன்மை அதிகாரி கார்ட்டர், ''உனக்காகவும் நான் பேசணும்மா'' என்றார். ''இப்போ, மிஸ் ஜானேவை, அவங்க மிஸ் டூபென்ஸூக்கு மட்டும் சொல்லியுள்ள அவங்களுடைய கதையை, நாம எல்லோரும் கேட்கும்படி சொல்லும்படி கேட்டுக்கறேன். துணிகரப் பெண்! மிஸ் ஜானே ஃபின்! ஆஹ்...! நாட்டுப்பற்று மட்டுமல்ல... உலகப்பற்று செறிந்த அந்தப் பெண்ணுக்கு இரு நாடுகளின் சார்பாகவும் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் மற்றும் நன்றிகள்!''

அத்தியாயம் - 28

பிறகு

''எத்தனை துணிகரம், ஜானே?'' என்றார் ஜூலியஸ். அவர் வாங்கியிருந்த புது காரில் அத்தை மகள் ஜானே ஃபின்னுடன் சேர்ந்து ரிட்ஸ் ஓட்டலுக்கு அவர் திரும்பிக் கொண்டிருந்தார்.

''இளஞ்சிங்கங்கள் லிமிடெட்'டைத் தானே சொல்றீங்க?''

''கிடையாது. உன்னை! இந்த விபரீத விஷயத்தை வெற்றிகரமா நீ நடத்திக் கொடுத்திருக்கிற மாதிரி, உலகத்துல இன்னொரு பெண் செஞ்சிருக்க மாட்டா, நீ - ஜஸ்ட், ஒரு பிரமாதம்!''

இதற்கு ஜானே மறுத்துத் தலையசைத்தாள். ''எனக்குப் பிரமாதமா'லாம் ஒண்ணும் படலீங்க. இதயத்துல - நான் ரொம்ப அசதியை உணர்றேன். ஒழிச்சலா வருது.. பயமுறுத்தும் தனிமையா உணர்றேன்... ஒஹ்....!என் நாடு, என் வீடு, என் மக்கள்.... இதை அதிகமா விரும்பறேன். இவங்க கிட்டே போய் சேர்ந்துடணும் போல இருக்கு. இது ஒண்ணுக்காக ஏங்கறேன்!''

''நான் சொல்ல விரும்பிய ஒரு விஷயத்தைச் சொல்ல இது வழி பண்ணித் தருது! நீ நேரடியா தூதரகத்துல சேர்ந்துக்கலாம்னு திரு கார்ட்டர் மனைவி விருப்பப்பட்டதா, அவரே உன்கிட்டே சொன்னதை நான் கேட்டேன். ரொம்ப நல்ல சமாச்சாரம். ஆனா நான் வேற ஒரு திட்டம் வெச்சிருக்கேன். ஜானே - நீ என்னைக் கலியாணம் பண்ணிக்கக் கேட்டுக்கறேன்!பயந்துப் போய் உடனடியா 'நோ' சொல்லிடாதே. அப்படி ஓர் எண்ணம் உன் மனசுல இல்லேனா, நிச்சயமா உன்னால் சட்டுனு என்னை நேசிக்க முடியாது. ஒத்துக்கறேன். ஆனா, உன் போட்டோவுல எப்போ நான் என் கண்களைப் பதிச்சேனோ, அப்போதிலிருந்து உன்னை நான் காதலிச்சுக்கிட்டே இருக்கேன் - இப்போ உன்னை நேர்லேயே வேற பார்த்தாச்சா... பைத்தியமாயிருக்கேன்!நீ என்னைக் கலியாணம் பண்ணிக்கிட்டா, உன்னை நான் எந்த வற்புறுத்தலுக்குள்ளும் தள்ள மாட்டேன் - ஆமாம் - எத்தனை அவகாசம் வேணுமோ அத்தனையும் எடுத்துக்கோ - காத்திருக்கேன்,

அப்படியும் உன்னால என்னை ஒரு கணவன் அல்லது காதலன் ஸ்தானத்துல வெச்சுப் பார்க்கவே முடியாதுனு ஆயிட்டா... பாதகமில்லே.... உன்னை சுதந்திரமா அப்போ நான் பறக்க விட்டுடறேன். ஆனா, உன்னைக் கவனிச்சுக்கிற உரிமை - உன்னைப் போர்த்திப் பாதுகாத்துக் காப்பாத்தற உரிமை - அதை நான் வேண்டிக் கேட்டுக்கறேன்.''

''அதைத் தான் நான் எதிர்ப்பார்க்கிறேன்'' - அவள் மனப்பூர்வமாய் சொன்னாள். ''எனக்கு நல்லவனா இருக்கிற ஒருத்தன், எனக்கு வேணும். ஓஹ்.... நான் எத்தனை தனிமையா வெறுமையா உணர்றேன்'னு... உங்களுக்குப் புரியாது, ஜூலியஸ்.''

''எனக்குப் புரியுது ஜானே! அப்போ எல்லாமே அனுகூலமா முடிஞ்சுட்டதா நான் எடுத்துக்கறேன் - ஓ கே! சர்ச் பாதிரியாரைப் பார்த்து நாளை காலைக்கு ஒரு ஸ்பெஷல் நேரம் வாங்கிடறேன்.''

''ஓ, ஜூலியஸ்!''

''இனியும் உன்னை நாடு நாடா அலைய விட நான் விரும்பலே, ஜானே. இந்த விஷயத்துல மனசு ஒத்துப் போகும் போது மேற்கொண்டு தள்ளிப் போடுவதிலும் அர்த்தம் தெரியலே. மறுபடியும் சொல்றேன் - பயம் வேண்டாம் - உடனடியா என்னைக் காதலிச்சு ஒத்துழை'னு நான் சத்தியமா வற்புறுத்த மாட்டேன்.''

ஆனால், ஒரு கை அவரது கைக்குள் வழுக்கியபடி இப்போது நுழைந்தது. - ''இப்போ நான் உங்களைக் காதலிக்கறேன். ஜூலியஸ்'' என்றாள் ஜானே! ''இது ரெண்டாவது முறை. அப்போ கார்ல உங்கக் கன்னத்தை வழிச்சபடி குண்டு பறந்ததே... அப்போ உங்க மேலே காதல்ல விழுந்தேன் - முதல் முறையா!''

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு நிச்சயமற்று முணுமுணுத்தாள் ஜானே. ''எனக்கு லண்டன் நல்லா தெரியாது, ஜூலியஸ். ஆனா, ஸவ்வாய்'லிருந்து ரிட்ஸ் என்ன அத்தனை தூரமா?''

'' அது நீ எப்படி பாதையமைச்சுக்கிட்டு போறியோ, அதைப் பொறுத்தது'' என்றார் ஜூலியஸ், கேலித் திமிராய்!

''ஓ, ஜூலியஸ்... டிரைவர் என்ன நினைப்பான்?''

''இது, அவனுக்கு நான் கொடுக்கிற காசைப் பொறுத்தது! அந்தத் தொகையைக் கேட்டதிலிருந்து அவன் சுய சிந்தனையையே விட்டுட்டான், தெரியுமா...! புரியலியா ஜானே... ஸவ்வாய்'ல அத்தனை செலவழிச்சு நான் ஒரு கேளிக்கை விருந்துக்கு ஏற்பாடு பண்ணினதே, அதன் மூலமா உன்னிடம்

நெருக்கம் உருவாக்கிக்கிட்டு என்னோட அழைத்துப் போகத் தானே! தனியா சந்திச்சுப் பேசியெல்லாம் என்னால உன்னை வெல்ல முடியுமா என்பது சந்தேகமாவே இருந்தது! நீயும் டூபென்ஸூம் ஒட்டியே பிறந்த ரெட்டைப் பிறவிங்க மாதிரி எப்பதான் பிரிஞ்சிருந்தீங்க....! அப்படியே நீங்க ரெண்டு பேரும் இன்னும் ஒருசில நாட்கள் இருந்திருந்தீங்கன்'னா... அவ்ளோ தான்...நானும் மிஸ்டர் தாமஸூம் தலையைப் பிச்சுக்கிட்டு பைத்தியமாகி தெருத்தெருவா அலைஞ்சிருப்போம்!''

''ஓ! அவருமா?''

''மா'வா...?!அவரும் தான்...!''

''நினைச்சேன், நினைச்சேன்'' என்றாள் ஜானே, சிறு சிந்தனையோடு,

''ஏன்?''

''இத்தனையிருந்தும் அந்தக் கள்ளி ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லலியே...!''

''அவளைப் போலத்தானே நீயும் என்னை ஜெயிச்சிருக்கே.''

இதற்கு பதில் தராமல் மௌனமாய்ச் சிரித்தாள், ஜானே.

இதே சமயத்தில், சடுதியில் வந்து சேர வேண்டிய ரிட்ஸூக்கு ஜூலியஸ் போலவே ஊரையெல்லாம் சுற்றியபடி காலந் தாழ்த்திக் கொண்டு இளஞ்சிங்கங்கள் இரண்டும் முகத்தை நேராய் சாலையில் பதித்தபடி நெட்டைக் குத்தலாய் வேறு ஒரு டாக்ஸியில் அமர்ந்துக் கொண்டு, அவர்களிருவருடைய இயற்கையான கலகல கபாவத்தை இழந்துவிட்டு, இறுக்கமாய்.... கடுகடுவென்று திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஏதோ ஓர் அபாயகரமான கட்டுப்பாடு இருவருக்கும் இடையே நுழைந்து ஸ்திரமாகி விட்டதைப் போல இருந்தது. என்ன தான் அப்படி ஆயிற்று என்பது நிச்சயமாய் விளங்காமலே, இருவருக்குமிடையேயான லகுத்தன்மை முற்றிலும் மாறி இறுகி விட்டதைப் போலிருந்தது. நாக்கு கட்டப்பட்டு, எல்லாம் முடங்கிய வாதநோய் கண்டவனைப் போல ஆகியிருந்தனர். 'கிழ' விளையாட்டெல்லாம் அடங்கி விட்டிருந்தது.

இனி பேச என்ன என்ற நிலையிலிருந்தாள் டூபென்ஸ். டாமியும் அதே அளவு ஒடுங்கியிருந்தான். நேராய் பார்த்தபடியும், பக்கவாட்டில் ஒருவரை மற்றொருவர் பார்த்து விடக்கூடாது என்கிற மாதிரியும், இருவரும் அமர்ந்திருந்தனர். ஒரு வழியாய் டூபென்ஸ் தான் தப்பிப்பற்ற நிலையில் வாய் திறந்தாள்.

''நடந்ததெல்லாம் கோமாளித்தனம் மாதிரி, இல்லே?''

''இருக்கு,''

மற்றுமொரு மௌனம்!

''எனக்கு ஜூலியஸைப் பிடிச்சிருக்கு'' - கட்டுரை தலைப்புத் தந்தாள் டூபென்ஸ்.

டாமி உடனே உயிர்ப்புக்கு இழுத்து வரப்பட்டான். ''நீ அவரைக் கலியாணம் பண்ணிக்கப் போறதில்லே... கேட்குதா?'' என்றான் சர்வாதிகாரமாய். ''நான் அதை வன்மையா எதிர்க்கிறேன்.''

''ஓஹ்'' என்று இளக்காரமாய்ச் சொன்னாள் டூபென்ஸ்.

''படு ஸ்திரமா விளங்குதில்லே...?!''

''அவரும் என்னை ஒண்ணும் கலியாணம் பண்ணிக்கப் போவது கிடையாது - வெறும் கருணையின் அடிப்படையில தான் என்னைக் கேட்டார்.''

''அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது'' - கடுப்பேறிக் கொண்டேயிருக்க அதோடு பேசினான் டாமி.

''மூடுங்க... அப்படித்தான். அது தான் உண்மை. தலை கால் புரியாம ஜானே மேலே அவர் உயிரா அலைஞ்சுக்கிட்டிருந்தார்... தெரியுமில்லே? இப்போ அவ கிட்டே சம்மதம் வாங்கிக்கிட்டிருப்பார்... புரிஞ்சுக்குங்க.''

''அவருக்கு ஏற்றவ தான் ஜானே'' என்றான் டாமி, சற்றே தணிந்தபடி

''நீங்க சந்தித்தவங்கள்லேயே, அவ, ஓர் அற்புதம்னு உங்களுக்குத் தோணலே?''

''சத்தியம் பண்ணுவேன்.''

''கோடிக்கணக்கான விலை மதிப்பற்றவனு கூட ஒத்துப்பே போவிருக்கு?!'' - இவள் சந்தேகம் உள் வைத்துக் கேட்டாள்.

'நா..ன் - ஓ... - மூடு வாயை டூபென்ஸ்.''

''எனக்கு உன் மாமாவை ரொம்பவே பிடிச்சிருக்கு. டாமி'' - அவசரமாய் பேச்சை மாற்ற வழி செய்துக் கொண்டாள் டூபென்ஸ். ''ஏய், ஏய்.... நீ மேற்கொண்டு என்னடா பண்ணப் போறே? திரு கார்ட்டர் தருவதா ஒப்புக் கொண்டுள்ள அரசாங்க வேலையை ஒத்துக்கப் போறியா? இல்லே, ஜூலியஸோட அழைப்பை ஏற்று, அள்ளி அள்ளித் தரும் அவரோட அலுவலகத்துல போய்ச் சேர்ந்துடப் போறியா?''

''மாமாவின் தங்கமான குணம், என் பேர்ல சொத்தை எழுதித் தருமளவுக்கான முடிவிலிருந்தாலும் - என் பிரயாணத்தை, இப்போ நாலிருக்கிற படகுலேயே தொடரத்தான் விரும்பறேன். ஆங்.... உன்னைப் பொறுத்தவரை, நீ லண்டனிலேயே இருந்து விடுவது தான் உனக்கு வீட்டோட இருக்கிற மாதிரி நிம்மதி தரும் என்பது என் எண்ணம்.''

''நான் எங்கே பொருந்துவேன்'னு எனக்கு விளங்கலே''.

''எனக்கு விளங்குது.''

டூபென்ஸ் இவனைப் பக்கவாட்டில் நோட்டமிட்டாள். ''நல்ல பணமும் கிடைக்கப் போகுது'' - சிந்தனையோடு சொன்னாள் இவள்.

''என்ன பணம்?''

''நம்ம ஒவ்வொருத்தருக்கும் 'செக்' வரப் போகுது. திரு கார்ட்டர் என்கிட்டே சொன்னார்.''

''ம்கும் எவ்ளோனு நீ கேட்டியா?''

''ஆமாம்'' - சட்டென வெற்றி முழக்கமாய்க் குறிப்பிட்டாள் இவள். ''ஆனால் அதை நான் உனக்கு சொல்ல மாட்டேன்.''

''வேணாம் டூபென்ஸ்... நீ ரொம்ப என்னைக் கிளறிக்கிட்டிருக்கே... எல்லாத்துக்கும் ஓர் எல்லையிருக்கு.''

''ஏய், லூஸூ! இப்படிக் கிண்டி விடறதுலேயும் ஒரு த்ரில் இருக்கில்லே... என்ன சொல்றே? டாமி.... எதிர்காலத்துல இது போல நாம இன்னும் நிறைய சாகசங்கள் பண்ணணும்னு நான் பிரியப்படறேன்.''

''உன் தாகத்தைத் தணிக்கவே முடியாது, டூபென்ஸ். *போதும், போதும்.* ஆமாம்... இந்தக் கேஸ்ல, நான், ''போதும் போதும்'' என்னும் அளவுக்கு சாகசங்கள் அனுபவிச்சாச்சு... ஊஃப்..'நோ மோர்' ...!''

''நல்லது. ஒண்ணு தெரியுமா... ஷாப்பிங் கூட அப்படிப்பட்ட ஒரு சாகச வகை தான்'' - டூபென்ஸ் கனா காணும் விழிகளோடுச் சொன்னாள். ''பழங்கால சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட நாற்காலிகள், மேஜைகள் - ஈர்க்கும் வண்ணங்களினாலான தரை விரிப்புகள் - வழுவழுக்கும் சில்க் திரைச் சீலைகள் - பளபளக்கும் டைனிங் டேபிள் - மெத்தைகள் அமுக்கும், கமகமக்கும் திவான்! எப்படி, ஆங் - தகதக, வழுவழு, பளபள, கமகம! கவிதையில்லே!''

டாமியின் கன்ன எலும்புகளின் எழுச்சியில், அவன் கோப மலை ஏறிக் கொண்டிருப்பது விளங்கிற்று. ''நிறுத்துடீ'' என்றான்! ''இந்தப் பட்டியலெல்லாம் எதுக்கு இப்ப?''

''ஒரு வீட்டுக்கு - ஆனா, ஃபிளாட் தான் நல்லது என்பது என் அபிப்ராயம்.''

''யாரோட ஃபிளாட்?''

''இதைச் சொல்ல நான் தயக்கம் காட்டி தலை குனிவேன்'னு நினைக்கிறியா, என்ன?! ம்ம்.... அப்படியெல்லாம் துளியும் கிடையாது. பெருமையா சொல்வேன். *நம்முடையது!*''

''ஹேய், டார்லிங்'' - அலறியே விட்டான் டாமி - அவளுடைய கழுத்தைச் சுற்றிக் கரவளையமிட்டு! அதை இறுக்கி! ''உன் வாயாலேயே இதைக் கொண்டு வந்தே ஆகணும்னு நான் தீர்மானமா இருந்தேன், தெரியுமா!''

சிறு மௌனம் நிலவியது. ''நீயும், நானும்! ஆஹ்.... நினைக்கும் போதே எத்தனை கும்மாளம்! இது எத்தனை கூத்தா இருக்கப் போகுது தெரியுமா?'' என்று கண்ணகல, வியப்பு நிறைந்த ஆச்சரியத்தோடு சொன்னாள் இவள்!''ஏய் கிழவா! கலியாணம் என்பது - ஓர் அடைக்கலம்' கிறாங்க - இன்னொரு கூட்டம், கலியாணத்தை ஒண்டும் ஓர் அகதிகள் முகாம் போல'ங்குது - இன்னொரு கூட்டமோ, சொர்க்கத்துல நிச்சயிக்கப்படும் நந்தவனம் அப்படிங்குது - அது ஓர் உளப்பூர்வமான பந்தம் அப்படினு வேற, ஒரு பொதுக் கருத்து - இன்னும் பலப்பல. ஏய் ... நான் என்ன நினைக்கிறேன்னு உனக்குத் தெரியுமாடா?!''

''என்ன?''

''ஒரு விளையாட்டு!''

''ஆஹ்...! உன்னைப் போல ஒருத்தி கிடைச்சா - திகட்டவே திகட்டாத விளையாட்டும் கூட!''

(முடிந்தது)